# குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை

## தொகுதி - 5

## இலக்கியம்

SRI SAI

# குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை

15 தொகுதிகள்

6000 பக்கங்கள்

## தொகுதி 5

## இலக்கியம்

முதன்மைப் பதிப்பாசிரியர்

தவத்திரு பொன்னம்பல அடிகளார்

விற்பனை உரிமை :

மணிவாசகர் பதிப்பகம்

31, சிங்கர் தெரு, பாரிமுனை,

சென்னை-600108.

முதல் பதிப்பு : டிசம்பர், 2001
திருவள்ளுவர் ஆண்டு : 2032
உரிமை : திருவண்ணாமலை ஆதீனம்
மணிவாசகர் வெளியீட்டு எண் : 865

**விலை : ரூ. 75-00**

பதிப்பாசிரியர் குழு :

தமிழாகரர் தெ. முருகசாமி

நா. சுப்பிரமணியம்

குன்றக்குடி பெரியபெருமாள்

க. கதிரேசன்

மரு. பரமகுரு

செயலர் :

பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன்

கிடைக்குமிடம் :


**மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608 001.
31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.
9, சிவப்பிரகாசம் தெரு, தி.நகர், சென்னை - 600 017.
110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625 001.
15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641 001.
28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620 002.

தொலைபேசி :

| | | |
|---|---|---|
| சிதம்பரம் | : | 30069 |
| சென்னை | : | 5361039 |
| தி. நகர் | : | 4357832 |
| மதுரை | : | 622853 |
| கோயமுத்தூர் | : | 397155 |
| திருச்சி | : | 706450 |

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை 600 021.
தொலைபேசி : 5954528



தமிழ் மாமுனிவர்
தவத்திரு குன்றக்குடி அடிகளார்
1925 - 1995

தமிழ்மாமுனிவர் அருள்நெறித் தந்தை

# தவத்திரு குன்றக்குடி அடிகளார்

## வாழ்க்கைக் குறிப்புகள்

| ஆண்டு | நிகழ்வுகள் |
|---|---|
| 1925 | • தோற்றம்<br>• பூர்வாசிரமம் : தந்தையார் : திரு. சீனிவாசம் பிள்ளை<br>தாயார் : திருமதி. சொர்ணத்தாச்சி<br>• பிள்ளைத் திருநாமம் : அரங்கநாதன்<br>• தோற்றம் பெற்ற ஊர் : தஞ்சை மாவட்டம் திருவாளப்புத்தூர் அருகேயுள்ள நடுத்திட்டுக் கிராமம். |
| 1931 - 1936 | • சிதம்பரம் அண்ணாமலை நகரில் வாசம்.<br>• 'சொல்லின் செல்வர்' ரா.பி. சேதுப்பிள்ளை, நாவலர் நாட்டார், சுவாமி விபுலானந்தர் ஆகியோர் தொடர்பு. |
| 1937- 1942 | • தமையனார் திரு. கோபாலகிருஷ்ண பிள்ளை வீட்டில் கடியாபட்டியில் வாழ்தல்.<br>• பள்ளியிறுதித் தேர்வு எழுதுதல்.<br>• 1942 விடுதலைப் போராட்டத்தில் ஈடுபாடு.<br>• 'வினோபா பாவே படிப்பகம்' தொடங்கி நடத்துதல். |
| 1945 | • தருமபுரம் ஆதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம் கயிலைக் குருமணி அவர்களிடம் கந்தசாமித் தம்பிரான் என தீட்சாநாமத்துடன் தம்பிரானாதல்.<br>• தருமபுரம் தமிழ்க் கல்லூரியில் பயிலுதல். |
| 1947 - 1948 | • சீர்காழிக் கட்டளைத் தம்பிரான் - திருஞான சம்பந்தர் திருமடம் தூய்மைப் பணி; திருமுறை வகுப்பு, விழா நடத்துதல். |
| 1949 | • குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் இளவரசு பட்டம் ஏற்பு. திருநாமம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள். |
| 1951 | • காரைக்குடிக் கம்பன் விழாவில் 'புதரிடைமலர்' என்ற தலைப்பில், அறிஞர்களின் நெஞ்சம் கவர்ந்த சொற்பொழிவு. |
| 1952 | • குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் 45ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளல். |

- அருள்நெறித் திருக்கூட்டம் தோற்றம்.
- 'மணிமொழி' என்னும் பெயரில் இயக்கப் பத்திரிகை வெளியிடல்.

1953 • ஆதீனத்தின் அருளாட்சியிலுள்ள பிரான்மலைத் திருக்கோயில் சித்திரைத் திருவிழாவின்போது (சங்க கால வள்ளல் பாரி வாழ்ந்திருந்த மலையில்) வள்ளல் பாரி விழாத் தொடங்குதல்.
- பல்லக்கில் பட்டணப் பிரவேசம் வருதலைத் தவிர்த்தல்.
- இலங்கைப் பயணம் - இரண்டு வாரம் சுற்றுப் பயணம்.

1954 • இராசாசி தலைமையில் தேவகோட்டையில் அருள்நெறித் திருக்கூட்ட மாநாடு.
- திராவிடர் கழகத் தலைவர் பெரியார் சந்திப்பு.
- தாய்லாந்து, இந்தோசீனா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் (3 திங்கள்)

1955 • அருள்நெறித் திருப்பணி மன்றம் தொடங்குதல்.
- 'தமிழ்நாடு' நாளிதழ் தவத்திரு குன்றக்குடி அடிகளார் என்ற பெயரை அறிமுகப்படுத்துதல்.

1956 • அறிஞர் அண்ணா குன்றக்குடி திருமடத்திற்கு வருகை.
- ஆச்சார்ய வினோபா பாவே திருமடத்திற்கு வருகை.

1958 • குன்றக்குடியில் உயர்நிலைப்பள்ளி தொடங்குதல்.

1959 • ஆ. தெக்கூரில் பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடத்துதல்; பாரதப் பிரதமர் நேரு மாநாட்டிற்கு வருகை.

1960 • மத்திய அரசு சேமநலக் குழு உறுப்பினராதல்.

1962 • சீனப்போரின்போது தங்க உருத்திராட்ச மாலையைத் திருவொற்றியூர்க் கூட்டத்தில் ஏலம் விட்டு ரூ. 4000 தருதல்.
- மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயிலில் திருமுறைத் தமிழ் அருச்சனை தொடங்குதல்.

1965 • இந்தி எதிர்ப்புப் போராட்டம்; அரசு வழக்கு தொடர்தல்.

1966 • தமிழ்நாடு தெய்வீகப் பேரவைத் தோற்றம்.

1967 • திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம் தோற்றம்.
- திருக்கோயில் கருவறைக்குள் சீலமுடைய அனைவரும் சாதி வேறுபாடின்றி திருமுறை நெறிப்படி - போதொடு நீர் சுமந்தேத்தி வழிபாடு செய்வதெனத் திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம் தீர்மானம் நிறைவேற்றுதல்.

1968 • இரண்டாம் உலகத் தமிழ்மாநாடு - 'திருக்குறள் உரைக்கோவை' நிகழ்ச்சி தொடக்கவுரை நிகழ்த்தல்

- திருக்குறள் இந்திய நாட்டின் தேசிய நூலாக வேண்டுமென்று இம்மாநாட்டில் வலியுறுத்தல்.

1969
- இலங்கைப் பயணம். இரண்டு வாரங்கள், இலங்கை யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் திருக்கோயில் நுழைவுக்காக உண்ணா நோன்பிருத்தல்.
- கீழவெண்மணித் தீவைப்பு நடந்த இடத்தைப் பார்வையிட்டுப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறுதல்; புத்தாடை வழங்குதல்.
- பாபநாசம் பொதிகையடி திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி ஏற்பு;

1970
- கலைஞர் மு. கருணாநிதி பாரி விழாவிற்கு வருகை
- கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் விருப்பத்தின் வழி தமிழ்நாடு சட்டமன்ற மேலவை பொறுப்பேற்றல்

1971
- தமிழ்நாடு தெய்விகப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெறல்.

1972
- சட்டமன்ற மேலவையில் இந்து அறநிலையத் திருத்த மசோதா - சாதி வேறுபாடின்றி அனைவரையும் அர்ச்சகராக நியமனம் செய்தல் பற்றிப் பேசுதல்.
- தமிழ்நாடு சமாதானக் குழுத் தலைவராதல்.
- சோவியத் பயணம்; 22 நாள் சுற்றுப் பயணம்.
- பாபநாசம் பொதிகையடி திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி, திருவள்ளுவர் கலைக் கல்லூரியாக உருவாதல்.

1973
- சென்னை, மயிலாப்பூர் திருவள்ளுவர் திருக்கோயில் திருப்பணிக்குழுத் தலைவராக நியமனம்; வள்ளுவர் கோட்டம் திருப்பணித் தலைவராக நியமனம்.
- குன்றக்குடித் தருமைக் கயிலைக் குருமணி உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய இடத்தில் கட்டடம் கட்டித் திறத்தல்.
- திருக்குறள் பேரவைத் தோற்றம்.
- திருச்சியில் தமிழ்நாடு தெய்விகப் பேரவை இரண்டாவது மாநில மாநாடு நடத்துதல்.

1975
- "கோயிலைத் தழுவிய குடிகளும் குடிகளைத் தழுவிய கோயிலும்" என்ற முழக்கம் நாட்டளவில் வைக்கப்பெற்றது.
- குன்றக்குடி கிராமத்தைத் தன்னிறைவுக் கிராமமாக ஆக்கும் திட்டம் உருவானது.
- நாகர்கோவிலில் தமிழ்நாடு தெய்விகப் பேரவை மூன்றாவது மாநில மாநாடு நடைபெறல்.

- சென்னைப் பல்கலைக் கழகத்தில் சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு.
- மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஏ.பி.சி. வீரபாகு சைவசித்தாந்த அறக்கட்டளைச் சொற்பொழிவு.
- அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு.
- இராமநாதபுரம் இனக் கலவரம் - அமைதிப்பணி.

1982
- குமரி மாவட்டம் மண்டைக்காடு கலவரம் - அமைதிப் பணியாற்றல்.
- மண்டைக்காடு அமைதிப்பணி பற்றிச் சட்ட மன்றத்தில் முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். பாராட்டுதல்.
- திருவருட்பேரவை தொடங்குதல்.
- மலேசியா, கொரியா, ஹாங்காங், ஜப்பான், செஞ்சீனா முதலிய நாடுகளில் சுற்றுப்பயணம்.
- புளியங்குடி இனக்கலவரம் - அமைதிப்பணி.

1984
- பாரதத் தலைமை அமைச்சர் திருமதி. இந்திராகாந்தி அவர்கள் குன்றக்குடிக் கிராமத் திட்டக்குழுவின் பணிகளைப் பாராட்டல்.

1985
- நடுவணரசு திட்ட ஆணைக்குழுப் பிரதிநிதிகள் குன்றக்குடி வருகை; கிராம வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிட்டுப் பாராட்டுதல்.
- பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் வளர்ச்சிப் பணிக்குத் திட்டக்குழு அமைத்தல்.
- மணிவிழா


1986
- தமிழ்நாடு அரசின் முதல் திருவள்ளுவர் விருது பெறுதல்
- இந்திய அரசு திட்டக்குழு குன்றக்குடித் திட்டப் பணியைப் பாராட்டி "Kundrakudi Pattern" என்று அறிவித்தது.

1989
- இவர் எழுதிய 'ஆலயங்கள் சமுதாய மையங்கள்' என்னும் நூல் தமிழ்நாடு அரசின் முதற்பரிசு பெற்றது.
- அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் (D.Litt) பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

1991
- இந்திய அரசின் அறிவியல் செய்தி பரப்பும் தேசியக்குழு, தேசிய விருது வழங்கிச் சிறப்பித்தது.
- இலண்டன், அமெரிக்கா சுற்றுப்பயணம்.
- அரபு நாடுகள் பயணம்.

1993
- மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' விருது வழங்கிச் சிறப்பித்தது.

1995
- இறைநிலை யடைதல்.



# அடிகளாரின் இலக்கியப் பணிகள்

பதிப்புச்செம்மல் **ச. மெய்யப்பன்**
நிறுவனர் : **மெய்யப்பன் தமிழாய்வகம்**

தமிழ்மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழ்கூறு நல்லுலகில் சமய மறுமலர்ச்சிக்கு வழிகண்டவர். அடிகளார் பூர்வாசிரமத்தில் செட்டிநாட்டில் எங்கள் ஊராகிய இராமச்சந்திரபுரத்தில் உயர்நிலைக் கல்வி பயின்றார்கள். எங்கள் தந்தையார் குங்கிலியம் பழ. சண்முகனார் அவர்களும், அடிகளாரின் அண்ணன் அவர்களும் விநோபா பாவே வாசகசாலையைத் தொடங்கினர். அடிநாள் தொட்டு அடிகளாரை நான் நன்கறிவேன். அடிகளார் திருவண்ணாமலை ஆதீனத்தில் பொறுப்பேற்ற பின்னர் சிறந்த சொற்பொழிவாளராக விளங்கினார்கள். முதன்முதலில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் அடிகளார் அவர்களும் நாங்கள் நடத்திய தமிழர் திருநாள் திருக்குறள் விழாவில் ஒரே மேடையில் பேசினர். அப்பொழுது ஆத்திகமும் நாத்திகமும் ஒரே மேடையில்

சந்திக்கின்றன என்ற செய்தியை வியப்புடன் நாளிதழ்கள் வெளியிட்டன.

50, 60களில் அடிகளார் தமிழ்மேடைக்குத் தம் பேச்சால் புதிய வலிமை சேர்த்தார்கள். தமிழகம் முழுவதும் அடிக்கடி பயணம் செய்யும் நான் அடிகளாரின் நூற்றுக்கு மேற்பட்ட பொழிவுகளைச் செவிமடுக்கும் நல்வாய்ப்பைப் பெற்றேன். அடிகளார் நூல் பலவற்றைப் படிக்கும் பேறும் பெற்றேன். அப்பொழுதெல்லாம் அடிகளார் சிந்தனைகள் அனைத்தையும் ஒருசேரத் தொகுத்துப் பார்க்க வேண்டும் என்ற வேணவா என்னுள்ளத்தில் முகிழ்த்தது. அது இன்று கைகூடுகிறது.

தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழ்நாடு செய்த தவப்பயனால் 1925இல் தோன்றி 70 ஆண்டு காலம் தமிழகத்திற்குப் பல்வேறு பணிகள் வாயிலாகக் கடமை ஆற்றிய நாட்டுத் துறவியாவார்.

தவத்திரு அடிகளாரைப் புரட்சித்துறவி என்றும், மிகச் சிறந்த சொற்பொழிவாளர் என்றும் நாடு கருதும்.

அடிகளார் எழுத்துக்கள் அனைத்தையும் நூல்வரிசை யாகத் தொகுக்கும் போது ஒவ்வொரு தொகுதியிலும் 400 பக்கங்களுக்குக் குறையாமல் 15 தொகுதிகளாக மொத்தம் சற்றொப்ப 6000 பக்கங்கள் அளவில் விரிந்தன. தம் 50 ஆண்டுப் பொது வாழ்வில் அடிகளார் எழுதிய 60 நூல்களையும் பதிப்பாசிரியர் குழு 5 தலைப்புக்களில் வகைப்படுத்தியது. நூற்றொகுதி அனைத்தையும் ஒருசேர வைத்து நோக்கும்போது அடிகளார் மிகச் சிறந்த நூலாசிரியராகச் சிறப்பதை நாம் உணர்கிறோம்.

1999 டிசம்பர் திங்களில் முதல் தொகுதி முகிழ்த்தது. 2001 நவம்பரில் தொகுதிகளின் அச்சுப் பணி முடிந்தது. திருக்குறள் பற்றி மட்டும் அடிகளார் கட்டுரைகள் 4 தொகுதிகளாகச் சற்றொப்ப 1600 பக்க அளவில் விரிந்துள்ளது.

தருமபுரம் ஆதீனம், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க அடிகள் ஆகியோர் அளித்துள்ள அணிந்துரைகளில் அடிகளாரின் இறையுணர்வையும், பக்திவழி நாட்டுக்கு ஆற்றிய பங்களிப்பையும், சைவத்திற்கும், தமிழுக்கும் அடிகள் ஆற்றிய அளவிடற்கரிய பணிகளையும் போற்றியுள்ளனர்.

தமிழ்நாட்டின் மிகச் சிறந்த திறனாய்வாளர்களான சிலம்பொலி செல்லப்பா், வா.செ. குழந்தைசாமி, தமிழண்ணல், வை. இரத்தினசபாபதி, ஔவை நடராஜன், சிற்பி. பாலசுப்பிரமணியன், ச.வே. சுப்பிரமணியம், கு. சுந்தரமூர்த்தி முதலியோர் அடிகளார் நூல்வரிசையை ஆராய்ந்து, தேர்ந்து, தெளிந்து அடிகளாரின் சிந்தனை வளத்தையும், சமூக உணர்வினையும், பல்துறை அறிவினையும், மனித நேயத் தையும், தமிழாற்றலையும், அழுத்தமாக எடுத்துக் கூறும் பெற்றியினையும் தங்கள் அணிந்துரைகளில் சான்றுகளுடன் விளக்கி உள்ளனர்.

பொதுவாக 15 தொகுதிகளிலும் அடிகளாரின் ஆளுமை வெளிப்பட்டாலும், மூல இழையாகச் செல்வது தமிழ்ச் சமூகத்திற்குரிய விழுமங்கள், உன்னதங்கள், உயர்வுகள், சிறப்புக்களே. பழந்தமிழ் இலக்கியமாகிய பத்துப்பாட்டு, எட்டுத் தொகையில் தொடங்கி பாரதி பாடல்வரை தமிழரின் தனி அடையாளங்களின் வேர்களை அவை இனங்காட்டுவன. அயல் வழக்கினைத் தமிழ் வழக்கு வென்ற திறத்தினை அடிகளார் அழுத்தம் திருத்தமாக ஆவணமாக்கி விடுவார்.

சமயக் கட்டுரைகள் பொதிந்துள்ள இத்தொகுதிகள் வாழ்முதலாகிய இறைவனைப் பற்றிய அடிகளாரின் சிந்தனைப் பதிவுகளைக் கொண்டது. இந்தப்புலம் அடிகளாரின் ஆன்மா விரும்பும் விருப்பமான நிலம். அவர்கள் நாளும் பயணம் செய்யும் ஞானபூமி. ஆதலால் சமயம்பற்றி அடிகள் கொண்ட அனைத்துக் கருத்துக்க்ளின் கருவூலமாக இத்தொகுதிகள் திகழ்கின்றன. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது

போல, கோயிலைத் தழுவிய குடிகளும், குடிகளைத் தழுவிய கோயிலும் என்னும் கொள்கை உருவாக்கம் அடிகளாரின் தனிக்கொடை.

தமிழ் இலக்கியம் சமயம் சார்ந்த இலக்கியம். சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும் எனப் பகுத்தாலும் இலக்கிய நிலப்பரப்பில், பங்களிப்பில் சைவமும் தமிழும்தான் தனிச்சிறப்பு பெறுகிறது.

அடிகளார் சிவநெறியினைச் சிரத்திலும் சிந்தையிலும் வைத்துப் போற்றிக் கூறிய, எழுதிய கருத்துக்கள் சைவ சமயத்திற்குப் புத்துணர்வையும், புத்தொளியையும் நல்குவன. புரட்சித் துறவியாகிய அடிகளாரின் புதிய பார்வை திருமுறை களை மறுமைக்கு மட்டுமின்றி இம்மைக்கும் வழிகாட்டும் என நிறுவுவன. மனிதனை மேம்படுத்தும் எண்ணங்களை, சீரிய செவ்வறங்களைக் கூறுவன திருமுறைகள்.

அடிகளார் அப்பரடிகளிடம் கொண்ட அன்பு அளவிடற் கரியது. நாவுக்கரசர் காட்டிய நல்லறங்களை நாளும் சொல்லி மகிழ்பவர். எட்டாந் திருமுறை ஆகிய திருவாசகத்தை எண்ணி எண்ணி எப்போதும் இறும்பூது எய்துபவர். சேக்கிழார் இயற்றிய 12ஆம் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணத்தை நிகழ்கால சமூக வாழ்க்கையோடு இயைத்துக்காட்டி, சைவ சமயம் என்பது தமிழர் வாழ்க்கை நெறி என்பதை ஒல்லும் வகையெலாம் உணர்த்தியவர்.

கோயிற் பண்பாடு என்னும் கோட்பாட்டை விளக்குவதில் அடிகளார் முதல் வரிசையர். சைவ சமய, தோத்திர, சாத்திர சரித்திரக் கருத்துக்களில் ஆழங்கால் பட்டவர். பரந்துபட்ட தமிழ்நூற் பயிற்சியும் வாழ்வியல் அனுபவங்களும் இத் தொகுதிகளில் ஒளி வீசுகின்றன.

இறைவன், பிறவித்துன்பம், வினைக் கொள்கை, ஊழ் உண்மை, ஓதி உணர்தல், புலனடக்கம், மெய்ப்பொருளை

உணர்தல், விண்ணும் மண்ணும், வீட்டுலகம் முதலியன பற்றி அடிகளார் கூறிச் செல்லும் கருத்துக்கள் ஆழ்ந்த சிந்தனைகளின் வெளிப்பாடு.

அடிகளார் தெளிவுற அறிந்திடுதல், தெளிவுற மொழிந்திடுதல் என்ற இரு நிலையிலும் சிறப்பாக விளங்கியவர் என்பதனை இத்தொகுதிகள் பறைசாற்றுகின்றன. இலக்கியக் கட்டுரைகளாயினும் சரி, சமயக் கட்டுரைகளாயினும் சரி அடிகள் மனித குல மேம்பாடு ஒன்றிற்கே உயர்வளிப்பவர் என்பது விளங்கும்.

இந்நூல் வரிசையால் அடிகளாரிடம் தமிழ் முனிவர் திரு.வி.க.வின் சமுதாயப் பார்வையும், சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்களின் சமுதாய அரசியற் பார்வையும் இலங்கியதை அறியலாம். தமிழ் தேசியம் வேர்கொள்ள அடிகளார் ஆற்றிய பணி தமிழர் வரலாற்றில் பதிவு செய்யப் பெற்று விட்டது.

அருள் நெறித் திருக்கூட்டம், தெய்வீகப் பேரவை, திருக்குறட் பேரவை, திருவருட் பேரவை முதலிய அமைப்புக்களைத் தோற்றுவித்து, தமிழ் இனம், நாடு முன்னேறப் பல்லாற்றானும் பணிசெய்தவர்.

உலகின் பெரும் பகுதியினைப் பலமுறை வலம் வந்தவராதலால் இவர் தம் எழுத்தும் பேச்சும் சமூக உணர்வுடன் சிறந்து விளங்கின. பயணத்திற்குப் பயணம் இவரது அனுபவ அறிவு செழுமை பெற்றதை இந்நூல்வரிசை பரிணாம முறைப்படி உணர்த்துகிறது. சமுதாய உய்வுக்கு அடிகள் உரைத்த பொன்மொழிகளின் படிமுறை வளர்ச்சியை, வாழ்வியல் அறங்கள் பற்றிய அடிகளாரின் நோக்கும் போக்கும் மாற்றம் பெற்ற திறத்தினை இவ்வரிசை நூல்கள் உயிரோவியமாக்குகின்றன. தமிழகத் துறவிகள் வரலாற்றில் அடிகளாரைப் போல அனைத்துலகையும் வலம் வந்தவர் வேறு எவரும் இலர்.

பரிபாடலின் பக்திநெறி பற்றிப் பேசினாலும், பாரதியின் பக்திமைபற்றிப் பேசினாலும் பக்திநெறியில் அடிகளின் பார்வை புதியது. 'பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம், பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்' என்கிற கோட்பாட்டை, 'நாமார்க்கும் குடி அல்லோம்' என்னும் நாவுக்கரசரின் குரலை சுதந்திரக் குரலாக எடுத்துரைப்பார். விடுதலை வேள்விக்கு வித்திட்டவர் என வீறார்ந்த மரபை விளக்கிக் கூறுவார்.

கடவுட் பற்றும், கவிதைப் பற்றும், கட்சிசாரா நாட்டுப் பற்றும் அடிகளார் எழுத்துக்களில் எங்கும் பரக்கக் காணலாம்.

பாரதியாரை ப. ஜீவானந்தம் ஆரவாரமாக, உணர்ச்சி பொங்கச் சொல்லிக் கூத்தாடுவார், அடிகளாரோ ஆரவாரமின்றி ஆழ்ந்த அமைதியோடு அழகு தமிழில் ஆற்றொழுக்காக எடுத்துரைப்பார். இவர் எழுத்து நடை திரு.வி.கவைப் போல பேச்சு நடை தழுவியது. சிறிய தொடர்கள் சிந்தனையைத் தூண்டுபவை.

ஒட்டுமொத்தமாக எழுத்துக்கள் அனைத்தையும் ஒருசேரத் தொகுத்துப் பார்க்கிறபோது அடிகளாரின் அறிவாற்றலும், எழுத்தாற்றலும், தமிழாற்றலும் நம்மை வியப்படையச் செய்கின்றன. ஒரு நொடியும் வீணாக்காது தமிழினம் உய்ய அடிகள் ஆற்றிய அரும் பணிகளின் ஆழத்தையும், அகலத்தையும் விரிவையும் இந்நூல் வரிசைகள் விளக்குகின்றன. உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

# அணிந்துரை

முனைவர் **ஔவை நடராசன்**

**தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர்**

தமிழ்நெறிக் காவலராகவும், துறவு பூண்ட அடிகளாகவும் உலகெங்கும் உரையுலா நடத்தித் தமிழின மக்களின் உள்ளம் கவர்ந்த ஒருமாமணியாய்த் திகழ்ந்தவர் குன்றக்குடி அடிகளாரா வார். ஞானியாரடிகள், மறைமலையடிகள் ஆகிய இருவரும் கோட்பாட்டால் இணைந்ததொரு கோலத் திருமேனி யோடு குன்றக்குடி அடிகளார் தமிழினம், தமிழ்ச் சமயம், தமிழிலக்கியம், நடைமுறை அரசியல், பொருளியல், வாழ்வியல் கலந்த அனைத்துத் துறைகளிலும் வழங்கிய கருத்துரைகள், தமிழ் மரபுக்கு உரம் சேர்க்கும் தனிப்பெரும் களஞ்சியங்களாகும்.

குன்றக்குடி ஆதீனப் பொறுப்பேற்றதும், தமிழ்மேடைகளில் வந்துநின்ற அடிகள் ஆற்றிய உரைகள், புதுமையாகவும், அனைத்துச் சமயத்தார்க்கும் ஆர்வமூட்டும் கிளர்ச்சியுரை களாகவும் அமைந்தன. வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகில், அடிகளார் பங்குபெறாக் கல்லூரிகளோ, திருக்கோவில் அரங்குகளோ, பொதுமேடைகளோ அமைந்ததே இல்லை. அரசியல்வாணர்க்கு நடுவிலும் அறப்பெருஞ்சுடராகவும் திகழ்ந்து, மேலவை உறுப்பினராகவும் அடிகளார், அரசியலுக்கும் அணிசேர்த்தார்.

அருள்நெறித் திருக்கூட்டங்கள் நாடெங்கும் மலர்ந்தன. திருக்குறள் நெறிபரப்பும் ஆர்வத்தை எங்கும் பரப்பினார். கல்லூரி மாணவராக இருந்த எம்மனோரை ஒருங்கே திரட்டிப் பட்டிமன்றம், சிந்தனைமேடை, அறிவரங்கம் எனப் புதுப்புனைவு களைக் காட்டி, இலக்கிய மேடைகளுக்கு எழிலார்ந்த வளமும் வடிவும் ஊட்டினார். யான் மாணவனாக இருந்தபோது, பச்சையப்பர் கல்லூரித் தமிழ்ப்பேரவையில், 'இனமுழக்கம்' எனும் தலைப்பில் அடிகளார் ஆற்றிய உரை, இன்றும் நினைவில் ஒலித்தபடி உள்ளது. இடிமுழக்கத்திற்குப்பின் பெருமழை பெய்யும்; இனமுழக்கத்தால், தமிழ்உணர்வு பொங்கித் ததும்பும் என்று தமது உரையைத் தொடங்கிப் பல்லாயிரக் கணக்கான மாணவர்க்கிடையில் முழங்கினார். பறம்புமலைப் பாரிவிழாவில்

ஆரத் தழுவி, "மூத்த ஒளவைக்கு முடிசூட்டினேன் அன்று; இளைய ஒளவைக்கு முடிசூட்டி மகிழ்கிறேன் இன்று" எனக் கண்களில் நீர்துளிர்க்கச் சொல்லித் தந்தையினும் களிகூரத் தழுவினார். நெஞ்சு நெகிழும் உறவு நிலைகளை வளர்த்த பல நினைவுகள் என் நெஞ்சில் அலைகளாகப் புரள்கின்றன. தமிழ்ப்பல்கலைக் கழகத்துக்கு வந்து, என்னோடு உடன் உறைந்ததும், பல்கலைக்கழக இல்லுறைவோர் விரும்பிக்கேட்ட நிலையில், பல்கலை விநாயகர் திருக்கோவிலை என் துணைவியார் நிறுவியபோது, திருக்கோவில் அமைப்பின் தொடக்கம் முதல் குடமுழுக்கு நிறைவு வரையில் அடிகளார், "எங்கள் வீட்டுத் திருமகள் கட்டிய பல்கலை விநாயகர்" எனத் தஞ்சைக்கு வரும்போதெல்லாம் வணங்கிச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

'சங்கத் தமிழர் வாழ்வியல்' முதலாகக் 'கம்பன் கண்ட பொதுமைச் சமுதாயம்' ஈறாக, இலக்கிய நலம்பொலியும் எழிலார்ந்த பதினேழு கட்டுரைகளின் களஞ்சியமாக அடிகளார் தொகுதி வரிசையில் இஃது ஐந்தாம் மடலாக மலர்கிறது. சங்கத் தமிழ் இலக்கியங்களின் சால்பினைத் தம் நுண்மாண் நுழைபுலனால் விரித்து விளக்கும் கட்டுரைகளாகப் பலவும் சிலப்பதிகாரச் செந்நெறி, ஊழ்வினை பற்றிய விளக்கம், கம்பர் காட்டும் அரசியல் பாங்கு, நாட்டுநலம் பற்றிய கனவுகள் இவற்றைக் கொண்ட அருங்கலைப் பேழையாக இத்தொகுதி அமைந்துள்ளது. உரையாற்றும்போது தொடக்கம், பொருண்மை விளக்கம், தடைவிடை ஆய்வு, நலம் காண்டல், மீள்நோக்குச் செய்தல், முடிவு தெளிதல் எனத் தம் எழுத்துரைகளையும் பேச்சுரைகளையும் வரையறை செய்து வழங்கும் திறத்தை அடிகளாரின் தனிப்பாங்கு எனக் குறிப்பிடலாம். தெளிந்த இவ்வரிசைமுறை அனைத்துக் கட்டுரைகளிலும் அழகுபட அமைந்திருப்பதை ஆய்வாளர் பாராட்டவும் இளைஞர் அம்மரபைத் தொடரவும் கட்டுரைகள் வழிகோலுகின்றன.

புறநானூற்றுப் பாடல்களில் பொதிந்த பொருண்மை நலங்களை நடைமுறை வாழ்வுக்குப் பொருந்துமாறு விளக்கம் செய்யும் புலமைப் பெருமிதத்தை நூலின் பல பகுதிகளில் காணலாம்.

"ஒருநாடு இன்புற்று விளங்க, அந்நாட்டின் அகத்திணை வாழ்க்கைக்கும் புறத்திணை வாழ்க்கைக்கும் உரிமை பூண்ட

ஆடவர் நல்லவராய் அமைதல் வேண்டும். 'நல்லவர்' என்பது, ஓர் உயர்ந்த குறிப்புச்சொல். அறிவு, ஆற்றல், சீலம், பண்பாடு ஆகிய அனைத்தும் நிறைந்தவரையே நல்லவர் என்று கூறுவது சங்க இலக்கிய மரபு."

"நாடு, நாட்டு நலன்கள் அனைத்தும் அமைந்ததாக இருந்தால் என்ன? இல்லாது போனால் என்ன? மேடாக இருந்தால் என்ன? இவற்றாலெல்லாம் நாடு வளமாக அமைந்து விடுவதில்லை. நாட்டின் குறைகளை நீக்கி, நாள்தோறும் பாதுகாக்கும் திறமுடைய ஆடவர்கள் இருந்தால்தான் அந்த நாடு வளமுடையதாக இருக்கும்."

"அங்ஙனம் நாட்டில் நல்லவர்கள் வாழாது போனால், நாட்டின் இயற்கையையும் வாழ்வோர் அழித்துவிடுவர். நாடு, இயற்கையில் நல்வளங்கள் அமைந்து விளங்காது போனாலும், நல்லோர் தமது அறிவறிந்த ஆள்வினையின் மூலம் அந்நிலத்தின் குறைகள் அனைத்தையும் நீக்கி, நலன்கள் நிறைந்ததாக்கி விடுவர். இந்த அரிய கருத்தினை ஔவையார்,

**நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே!**

(புறம் - 157)

என்று கூறி விளக்குகிறார். இன்றும் இப்பாடல், நம்நாட்டு மக்களுக்குத் தக்க அறைகூவலாக விளங்குகிறது. கடல் கொந்தளிப்பினால், பாழ்; வெள்ளத்தினால், பாழ்; வறட்சியினால், பாழ் என்றெல்லாம் அவலப்படுகிறோம். ஏன்? நம்முடைய நாட்டை உயிரினும் மேலாக மதித்து, அதனை நாடோறும் வளங்குன்றா நிலையில் பேணிப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டால், இந்நாட்டினும் வளங்கொழிக்கும் நாடு வேறெது?"

"ஆதலால், ஒருநாட்டின் வளத்திற்கும் சிறப்பிற்கும் அந்நாட்டின் ஆடவரே பொறுப்பு என்பது சங்கத் தமிழர் வாழ்வியலின் முடிவு."

இவ்வாறு அடிகளார் விளக்கிச் சங்ககாலத் தமிழர் வாழ்வியல் கூறுகளாகிய ஒழுக்கநெறி, கலை, நாகரிகம், பண்பாடு, மெய்ந்நூற்

கொள்கை முதலிய கோட்பாடுகள் சங்க இலக்கியப் பாடல்களில் பொங்கிப் பொலிவதைத் தொடர்ந்து ஆங்காங்கே சுட்டிக்காட்டுகின்றார். அடிகளார், சங்கப்புலமையோடு, சைவசித்தாந்த நுணுக்கத்தையும் தெளிவாக அறிந்தவர்கள். ஐயத்தின் நீங்கித் தெளிந்த அளப்பருஞ்சீர்த்தியால், சிலப்பதிகாரத்தின் ஊழ்வலிமைபற்றி அடிகளார் வரைந்து காட்டும் திறம், உலகத்தில் யாதொரு பொருள், யாதோர் இயல்பாய்த் தோன்றினும், தோன்றிய அவ்வெளித் தோற்றத்தைக் கண்ட அளவில் அமைந்துவிடாது, அப்பொருளின் உள்நின்று இயக்கும் மெய்ப்பொருளைக் கண்டுணர்வதே உண்மைப் புலமையாகும் என்று சான்றோர் உரைக்கும் விளக்கத்தை வரையறையாகக் கொண்டு 'சிலம்புநெறி' என்னும் கட்டுரையை அடிகளார் உலகியலோடு ஆராய்ந்து ஊழ் வலிமையை விளக்குகிறார்.

''ஊழ், மற்றவரின் படைப்பும் அல்ல; கடவுளின் கொடையும் அல்ல; உலகியலின் ஒழுங்கமைதிகளுள் ஊழமைவும் ஒன்று."

"உலகியலில் இயற்கையில் வலிமையாக இருந்த புயல், பெருமழை, வெள்ளம் முதலியவற்றை மனிதன் இன்று வெற்றிபெற்று, ஆண்டு அனுபவிக்கிறான்,"

''இயற்கையோடு அவன் நிகழ்த்தும், நிகழ்த்திக் கொண்டிருக்கும் போராட்டத்தில் மனிதகுலம் வெற்றிகளையே பெற்று வருகிறது. ஒரோவழி, பெறும் தோல்விகள்கூட வெற்றியின் வாயில்களாக அமைந்தனவேயன்றி, முற்றான தோல்விகளல்ல,"

"அதுபோல ஊழியலின் ஒழுங்கமைவையும், மனிதன் வெற்றிகாண முடியும் என்பது ஒரு கொள்கை."

"ஊழியலின் ஒழுங்கமைவை வெற்றிபெறுதல் என்றால், ஒழுங்கமைவை எதிர்த்துப் போராடுவது அல்ல. ஊழின் ஒழுங்கமைவை எதிர்த்துப் போராடுவது என்றால், நியதிகளை எதிர்த்தல்ல."

"நியதிகளும் ஒழுங்கமைவுகளும் இல்லாது போனால், வாழ்க்கையில் ஓரமைவு இருக்காது; அமைதி இருக்காது; நல்லன நோக்கி நல்ல நினைந்து செயற்படுதல் இல்லாமல் போகும்,"

"ஆதலால், ஊழியல் என்ற இந்த ஒழுங்கமைவு நியதி, எதிர்ப்பதற்குரியதன்று; வரவேற்கத்தக்கது."

மேடையருவியாக்வும், மேன்மைத் துறவியாகவும் மிளிர்ந்து, நாற்பதாண்டுக்காலத் தமிழகத்தின் நாடிநரம்புகளை எல்லாம் செழுமைப்படுத்திச் சமயவுணர்வையும், சமுதாயச் செறிவையும் இரு சிறகுகளாகக் கொண்டு, தமிழ்ஞானப் பறவையாக விண்வெளியில் பறந்து மகிழவேண்டும் என நினைந்த தாயுள்ளம், அடிகளாரின் திருவுள்ளமாகும். எழுத்தாலும் பேச்சாலும் ஈடில்லாத் தொண்டாற்றி, எடுத்தும் மறுத்தும் தனது கருத்தை நிரல்பட தொடுத்துப் பேசும் தன்னார்வச் சிந்தனையை அனைவர் மாட்டும் வளரச் செய்த பட்டிமண்டபப் பாங்கறிந்து நடத்திய சான்றோராகவும் அடிகளார் திகழ்ந்தார்கள். தமிழகம் செய்த தனிப்பேறாகப் பொதுமைச் சுடராகவும், பொழிவரைத் திலகமாவும் நமக்கு பொன்னம்பலஅடிகளார் இன்று வாய்த்துள்ளார்கள். 'நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான்' என்ற நல்லுரை நாடெங்கும் ஒலிக்கின்றது. அடிகளார் பேசிய உரைகளையும், மடல்களையும் தொகுத்து வெளியிடும் பணி, அரிய இலக்கியப் பணியாகும். மேலோர் மிழற்றிய தமிழை இந்நாளில், நினைந்து போற்றுவது தமிழ் மக்களுக்கு மேலான கடனாகும்.

பேராசிரியப் பதிப்பாசிரியராகத் திகழும் பெருஞ்சிறப்பு, மணிவாசகர் பதிப்பக உரிமையாளர் 'செந்தமிழ்ச் செம்மல்' முனைவர் ச. மெய்யப்பனாருக்கே உரியது.

நமது தமிழுலகம் நையாமல் உய்தி பெறவேண்டும் என்னும் ஒரு பெருங்கருத்தோடு, தமிழ்வளர்ச்சிப் பணிகளைப் பல நிலைகளில் அவர் ஆற்றிவருவது பாராட்டுக்குரியது. செந்தமிழ் வடிவாய் வாழ்ந்த மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார் மகிழ்ந்து பாராட்டிய தகுதிப்பாடு, மெய்யப்பனார் புகழுக்கு அமைந்த பூணாரமாகும். மணிவாசகர் பதிப்பகத்தை மகிழ்ந்து போற்றுகிறேன்.

அடிகளார் வழங்கும் மணியுரைகளின் மடலமாக இந்நூல் மாட்சி பெறுகிறது. அடிகளார் புகழைப் போற்றும் இத்தமிழ் உலகம், இம்மல ரலங்கலை மகிழ்ந்தணியும் என்பதில் ஐயமில்லை.

சென்னை - 600 102
19.10.2001.
இ.V.2.

# முன்னுரை

## தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

குருமகா சந்நிதானம் அருள்நெறித் தந்தை தவத்திரு அடிகளார் பெருமானின் அற்புதப் படைப்பாக சங்க இலக்கியம் முதல் பாரதி - பட்டுக்கோட்டை வரை தொகுப்புநூல் மலர்கின்றது. தமிழர்கள் வாழ்க்கை வாழ்வதற்கே! "வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்!" என்பது அப்பர் பெருமான் வாக்கு! சங்க இலக்கியத்தின் வாழ்வியல் சிந்தனையை நம் குருமகா சந்நிதானம் தமக்கே உரிய பொதுமைப் பார்வையில், புதுமைப் பார்வையில் முற்போக்குச் சிந்தனையில் சமூகத்தினைச் சிந்திக்கச் செய்கின்றார்கள்.

உலகத்தில் இருவித வாழ்க்கை! இருவேறு உலகங்கள்! ஒருபுறத்தில் மகிழ்ச்சி! மறுபுறத்தில் துக்கம்! ஒருபுறத்தில் ஆனந்தம்! மறுபுறத்தில் அவலம்! இப்படி இருவேறு உலகங்களை ஒரு படைப்பாளி படைத்திருப்பானா? அப்படிப் படைத்திருந்தால் அவன் பண்பில்லாதவன் என்று ஆண்டவனை எதிர்த்து, சமூக நன்மைக்குக் குரல் கொடுத்ததுதான் தமிழனின் குரல். "எல்லாம் விதிவசம்! அனைத்தும் ஆண்டவன் படைப்பு! செல்வம், வறுமை, நோய், துன்பம் அனைத்தும் இறைவன் படைப்பே!" என்ற சிந்தனை மனித முயற்சியை முடமாக்கும். இந்த புறநானூற்றுப் பாடலுக்கு அடிகள் பெருமான் புதிய விளக்கம் தருகின்றார்கள். உலகம் இன்னாததா« இருக்கலாம். ஆனால், இன்னாமையை அப்படியே தாங்கிக்



தவத்திரு

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

கொள்ள வேண்டும் அல்லது தாங்கும் சக்தியற்ற கோழைகளாக இருப்பின் எல்லாவற்றையும் துறந்து எங்கேயாவது ஓடிவிட வேண்டும் என்ற கொள்கை தமிழ்வழக்கன்று! ஏன்? வாழும் நெறியும் அன்று துன்பம் இயற்கையாக இருக்கலாம். ஆனால், அவற்றை மாற்றுவதற்குரிய சக்தி நமக்கு உண்டு என்று நம்பாத மனித உலகம், வாழ்ந்தும் வாழாத உலகமே என்று கூறி, மனித முயற்சியை மேலும் முதன்மைப் படுத்துகின்றார்கள். "படைப்புக் கடவுள் மண்ணைப்படைத்தால் மனிதன் மாளிகைகள் படைக்க வேண்டும். கனிதரு சோலைகள் படைக்க வேண்டும். நான்முகன் படைத்த மண்ணில் உவரும் களரும் இருக்கலாம். ஆனால் மனிதன் படைத்த கனிதரு சோலைகளில் இனிய கனிகளே உண்டு! நான்முகன் கட்டலைப் படைத்தால் மனிதன் கலம் படைப்பான். தீமையை எதிர்த்து, துன்பத்தை எதிர்த்து, வறுமையை எதிர்த்து, அறியாமையை எதிர்த்துப் போராடப் பிறந்தவன். ஆனால் ஐயோ! அவன் இன்று பக்கத்தில் உள்ள மனிதனோடு போராடிக் கொண்டிருக்கின்றான். அவன், தேவையில்லாத சாதிகளை - வேலிகளைக் கற்பித்துக் கொண்டு உடன்பிறந்த சகோதரர்களோடு போராடிக் கொண்டிருக்கின்றான்" என்று மனித சமுதாயம் தவறான திசையில் செல்லுவதைச் சுட்டிக் காட்டித் திருத்த முயற்சி செய்கின்றார்கள். உலகத்தின் போக்கினைக் கூறி, நிறைவில் வணிக உலக வாழ்க்கையை அறிவுறுத்தித் திருந்தி வாழ முயற்சி செய்யுமாறு கூறுகின்றார்கள்.

"வறுமையை எதிர்த்துக் கழனியில் போராட வருபவர் எத்தனை பேர்? ஊர் எல்லாம் உண்ணக் கொடுத்தவன்தான்

உண்ண உணவின்றிப் போராடுகின்றான்! இது என்ன கொடுமை!" என்ற கூற்று சமூகத்திற்குச் சரியான சவுக்கடி! இதற்குத் தீர்வும் அருமையாகக் குறிப்பிடுகின்றார்கள். மனித உலகம் துன்பத்திலிருந்து விடுதலை பெற வேண்டுமானால், மரணத்திலிருந்து விடுதலை பெற வேண்டுமானால் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறவேண்டுமானால் மனிதர்கள் துன்பம் இயற்கையன்று என்ற அறிவின் தெளிவைப் பெற வேண்டும்!" என்ற கூற்று நிதரிசனமானது.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" - இந்தச் சிந்தனை இந்நாட்டிற்குத் தேவையான ஒன்று. ஊரின் முன்னேற்றத்திற்காகச் சுண்டுவிரலை அசைக்காதவர்கள் கூட எங்கள் ஊர் என்று வீறாப்புப் பேசுகிறார்கள். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற சிந்தனை உலகமுழுவதற்கும் தேவையான ஒன்றாகும். கம்பனின் இராமகாதையின் அரசியலைப் புதிய கண்ணோட்டத்தோடு ~ றுவது பெருமைக்குரியது. கம்பனின் இராமகாதையின் அரசுகள் நிலைபற்றிய விவாதம் அவசியமான ஒன்று. இராமனுக்கு முடிசூட்டுவிழா என்று கூறிய பொழுது அயோத்தி மக்கள் ஆனந்தக் கூத்தாடுகின்றார்கள். இராமனுக்கு வனவாசம் என்ற பொழுது மக்கள் அழுகின்றார்கள்; துன்பப் படுகின்றார்கள். சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரையை ஒத்திருந்தது இராமனின் திருமுகம் என்று கூறுகின்றார். இலங்கை அரசில்

**'களிக்கின்றார் அலால் கவல்கின்றார் இலர்'**

என்ற வரிகளில் மக்களின் நிலைமையைச் சுட்டுகின்றார். இலங்கை மக்கள் துன்பம், இன்பம் என்று உணரவும்

அறியாதவராய் மதிமயங்கிக் கிடக்கின்றனர் என்ற வரிகள் மிகவும் போற்றத்தக்கன.

'சிலம்பு நெறி'யில் பெண்களின் நிலைபற்றி அற்புதமாகக் கூறுவார்கள். கோவலனைத் தொலைத்த கண்ணகி கூறும் முதல் கேள்வி "பெண்டிரும் உண்டுகொல்" என்பது, இந்த ஊரில் பெண்கள் இருக்கின்றார்களா என்று கேட்கின்றாள்! என்ன கேள்வி இது? ஒரு ஊர், நகரம் என்றால் பெண்கள் இருக்க மாட்டார்களா? பிறகு ஏன் கண்ணகி அப்படிக் கேட்டாள்? நல்ல பெண்மணிகள் உள்ள நாட்டில் குற்றங்கள் குறையும்; கொலைகள் நிகழா, கள்வர் குறைவர், சிறைச்சாலைகள் மூடப்படும்! அன்று சோழநாட்டுப் பெண்கள் அணிகலன் தாங்கிகளாக இருந்தனர். சோழநாட்டு வீதியில் 1000 கழஞ்சு பொன்னிற்கு மாதவி, கூவி ஏலம்போட்டு விற்கப்படுகின்றாள். இக் கொடுமை அஞ்சாது தட்டிக் கேட்கப்பட வில்லை! எனவே, நல்ல பெண்கள் இருக்கும் நாட்டில் குற்றங்கள் குறையும். இந்தப் புதிய பார்வை போற்றுதற்குரியது.

மகாகவி பாரதிமுதல் பட்டுக்கோட்டை வரை அரிய திறனாய்வு, அற்புதமாக அமைந்துள்ளது. எனவே புதிய நோக்கில் சமூகச் சிந்தனையின் அடிப்படையில் சிறப்பாக விளங்க இக்கால இலக்கியங்களில் விரிவாகக் கூறுவது சிறப்புடையது. வாழும் மனித சமூகத்திற்கு ஒப்பற்ற வழிகாட்டியாக விளங்க, சமூகச் சிந்தனை மிக்க இலக்கியங் களைக் கூறுவது மிகுந்த பாராட்டைப் பெறுகின்றது. ஆசிரியர் திறனாய்வால் வியக்க வைக்கின்றது. எனவே, ஒப்பற்ற சமுதாய நோக்குடைய இலக்கியங்களை அருள்நெறித் தந்தையவர்கள் சிறந்த நடையில்

விளக்கியிருப்பது தமிழ்ச் சமூகத்திற்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

இந்நூலுக்கு அரியதொரு அணிந்துரை வழங்கியுள்ள முனைவர் ஔவை நடராசன் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி!

இந்நூல் ஆக்கத்திற்குப் பயன்படும் மணிவாசகர் பதிப்பக ச. மெய்யப்பன் அவர்களுக்கு நெஞ்சு நிறைந்த நன்றி. இந்த நூல் ஆக்கத்திற்குப் பாடுபட்ட ஆதீனக் கவிஞர். மரு. பரமகுரு, தமிழாகரர் தெ. முருகசாமி ஆகியோருக்கு நன்றிப் பெருக்கோடு கூடிய நல்வாழ்த்துக்கள்! தமிழ்ச் சமுதாயத்திற்கு ஒப்பற்ற வழிகாட்டியாக இந்நூல் விளங்கும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கின்றது. தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு இவ் ஆக்கம் மேலும் மெருகு ஊட்டும். சங்க கால இலக்கியம் முதல் இக்கால இலக்கியங்கள் வரை புதிய பார்வை, சமுதாயத்திற்கு மிகுந்த பயனைத் தருவதாகும். இந்நூல் வெளிவருவதற்கு உழைத்த அனைவருக்கும் பாராட்டுக்கள்; நல்வாழ்த்துக்கள்!.

# உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | சங்கத் தமிழர் வாழ்வியல் | ... | 17 |
| 2. | இனிய காண்க | ... | 48 |
| 3. | யாதும் ஊரே, யாவரும் கேளிர்! | ... | 55 |
| 4. | பிசிராந்தையார் பெருவாழ்வு | ... | 62 |
| 5. | நிலவுலகம் நிலத்திற்கு அடிப்படை | ... | 70 |
| 6. | வாழ்க்கை நெறி | ... | 78 |
| 7. | இனிய நெறி | ... | 81 |
| 8. | துணையின் இலக்கணம் | ... | 86 |
| 9. | செல்வத்தின் பயன் | ... | 89 |
| 10. | செல்வத்துப் பயன் | ... | 92 |
| 11. | கவிதை விளக்கம் | ... | 95 |
| 12. | சிலம்புநெறி | ... | 102 |
| 13. | சிலம்புவழிச் சிந்தனை | ... | 220 |
| 14. | இளங்கோவடிகள் எண்ணம் ஈடேறுமா? | ... | 222 |
| 15. | கம்பன் கண்ட ஆட்சியில் அரசியல்சமூகம் | ... | 225 |
| 16. | இராமனும் சீதையும் | ... | 324 |
| 17. | மெய்யறிவு | ... | 334 |
| 18. | கம்பன்கண்டபொதுமைச் சமுதாயம் | ... | 337 |
| 19. | புதுச்சேரி கம்பன் விழாத் தலைமை உரை | ... | 341 |
| 20. | தங்கத் தலைவி தருவார்! | ... | 358 |

1

# சங்கத் தமிழர் வாழ்வியல்

தமிழர் வாழ்வியலில் சங்க காலம் புகழ் பூத்த காலமாகும். சங்க காலத் தமிழர் சிந்தனையில், செயலில் சிறந்து விளங்கி வாழ்ந்தனர். சங்க காலத் தமிழர் கருத்து, வளம் செறிந்தது. இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூட்டுச் சிந்தனை, கருத்துப் பரிமாற்றம் ஆகியவற்றில் தமிழர் வளர்ந்திருந்தமை மகிழ்றற்குரிய செய்தி.

சங்க காலத் தமிழர், சங்கம் அமைத்து மொழியை வளர்த்தனர்; சிறந்த இலக்கியங்களைக் கண்டனர்; கடவுளையும் மன்னனையும் தமிழ் ஆய்வுக்குப் பயன் படுத்தினர்; அதனால் பண்பட்டனர். தமிழர்கள் வாழ்வாங்கு வாழும் நெறியில் ஆர்வலர்கள்.

"எப்படியும் வாழ்வது" என்பது தமிழர் கொள்கை யன்று. வாழும் நெறியில் வாழ்தலும் பயன்பட வாழ்தலும் தமிழர் குறிக்கோள், கோட்பாடு. தமிழர்கள் வாழ்க்கைக்கு இலக்கணம் கண்டவர்கள். தமிழரின் வாழ்க்கை வரிச் சட்டங்களை ஆட்சி படைக்கவில்லை; புலமைச் சான்றோர்களே படைத்தனர். தமிழர், வாழ்க்கையின் செம்மைகளை வாழும் பயிற்சியில் காண முற்பட்டனர்; அரசின் ஆணை வழியல்ல. தமிழர், வையத்து வாழ்க்கையை

விரும்பி ஏற்று மகிழ்ந்து வாழ்ந்தனர். தமிழர் வாழ்வியலில் காதல் இருந்தது; வீரம் விளங்கியது; அறம் இடம் பெற்றிருந்தது. சங்க காலத் தமிழர் எத்துறையிலும் எல்லை இகந்து செல்லாநெறி மேற்கொண்டொழுகினர்.

காதலிற் சிறந்து விளங்கிய தமிழர்கள் செருகளத்திலும் சிறந்தே விளங்கினர். செருகளத்தில் சிறந்து விளங்கிய வீரர்கள் காதற்களத்தில் தோல்விகளைத் தழுவத் தவறியதில்லை. சங்க காலத் தமிழர் வாழ்வியலில் தலைவன், தலைவி, சமுதாயம், ஊரவர், அரசு என உறுப்புக்கள் அனைத்தும் படிமுறையில் முழுமையுற வளர்ந்திருந்தன. சங்க காலத் தமிழர் வாழ்க்கை இன்றைக்கும் ஏற்புடையது.

ஆனால், நம்முடைய நல்லூழின்மையின் காரணமாக அயல் வழக்கின் தலையீடுகளால் தமிழர்கள் இன்று மொழியால் தமிழர்களாக வாழ்கின்றனரேயன்றி, தமிழியல் தழுவிய வாழ்க்கை வாழ்கின்றாரில்லை.

மனித வரலாறு முன்னோக்கிச் செல்வது என்றாலும், தமிழர்களைப் பொறுத்த வரையில் தடம் புரண்டு விட்டதால், திரும்பச் சென்று சங்க காலத் தமிழர் வாழ்க்கையை மீண்டும் தொடங்கினாலும் அது சிறப்புடையதாகவே அமையும். சங்க காலத் தமிழர் வாழ்வியலில் சிலவற்றைக் காண்போம்.

இன்று இந்தியத் துணைக் கண்டம் ஒரு நாடாக இல்லை; ஆங்கிலேயர் ஆட்சியின்போது இந்தியத் துணைக் கண்டம் முழுதும் ஒரு நாடாக விளங்கியது. ஆங்கிலேய ராட்சிக்கு முன்பு அசோகச் சக்கரவர்த்தி காலத்தில் இந்தியா முழுவதும் ஒரு நாடாக இருந்ததென்று சொல்வர். ஆயினும் அப்பொழுதும் தமிழ்நாடு அசோகர் ஆட்சிக்குக் கீழ் இருந்தது என்று வரலாற்றுக் குறிப்பில்லை.

ஆங்கிலேயர் ஆட்சியில்தான் இந்தியா ஒரு நாடாக உருப் பெற்றது என்பது வரலாற்று நூற் கருத்து. ஆயினும்,

சங்க காலத்தில் இந்தியா என்ற ஒரு நாடு வலிமை சான்ற ஆட்சி அமைப்பில், தோன்றாது போனாலும் உறவில், கருத்தில் உதவி செய்து கொள்வதில் இந்தியா ஒரு நாடாகிவிட்டது.

"தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா எல்லை
குன்றுமலை காடு நாடு
ஒன்றுபட்டு வழிமொழிய
கொடிது கடிந்து கோல் திருத்தி
படுவ துண்டு பகலாற்றி
இனிது ருண்ட சுடர் நேமி
முழுதாண்டோர் வழி காவல்"

(புறம்–17)

என்ற பாடல் குறுங்கோழியூர் கிழார் பாடியது. இப்பாடல் யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையைப் பாடியது.

இப்பாடலில் தென்குமரி என்று தென்எல்லை குறிப்பிடப் பெறுகிறது. அப்பொழுது குமரியாற்றெல்லையில் கடல் வரவில்லை. வடபெருங்கல் என்பது இமயம். கிழக்கும் மேற்கும் கடல் எல்லை. இப்பரந்த கண்டத்தில் இடையிலுள்ள குன்றுகளும் மலைகளும் காடுகளும் நாடுகளும் அவற்றிடையே வாழ்ந்த மக்களும் ஒருங்கிணைந்து அரசை ஏற்றுக் கொண்டனர். அரசும் திருந்திய அரசு. இக்கருத்தினை,

"தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா எல்லைத்
தொன்று மொழிந்து தொழில் கேட்ப"

(70–73)

என்று மதுரைக் காஞ்சியும் கூறும்.

இந்தியா, கடிதூர்ந்து செல்லும் ஊர்திகளில்லா அக்காலத்திலேயே ஒரு நாடு, ஓராட்சி என்ற அமைவினைப் பெற்றது, பெருமைப்படுதற்குரிய செய்தி.

ஒரு நாடு என்ற உணர்வு இருந்ததால் அன்று வடபுலத்தில் நடந்த பாரதப் போரில் பொருத வீரர்களுக்குச் சேரலாதன் என்ற அரசன் சோறு வழங்கினான். எப்படிச் சோறு வழங்கினான்? பாரதப் போரில் ஒரு பக்கம் சார்ந்து சோறு வழங்கவில்லை. நடுநிலைக் கொள்கையென்பது சங்க காலத் தமிழர் கண்ட கொள்கை.

கௌரவரும் பாண்டவரும் பொருது நின்றனர். அப்போரில் சேரப் பேரரசு நடுநிலைமை வகித்தது; இரண்டு தரப்பினரின் படைக்கும் சோறு வழங்கியது.

இன்றைய அரசியலில் மிகச் சிறந்த கொள்கைகளாக விளங்கும் "நடுநிலை", ஒரு நாட்டின் உள் விவகாரத்தில் தலையிடாமல் வேறுபாடு இன்றி உதவி செய்தல் ஆகிய கொள்கைகள் சங்க காலத் தமிழர் ஆட்சியியலில் இடம் பெற்றிருந்தன என்பது அறியத்தக்கது. இத்தகைய வரலாற்றுச் சாதனை செய்ததால் இச்சேரலாதனைப் "பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன்" என்று முடிநாகனார் பாராட்டுகின்றார்.

சங்க காலத் தமிழர் வாழ்வியலில் ஆட்சிமுறை சிறப்புற அமைந்திருந்தது. மன்பதை காக்கும் அரசாக விள்ங்கிய சங்க காலத் தமிழரசியல் அறிஞர்களால், அறங்கூறி வழி நடத்தக் கூடியதாகவும் முறை திரிந்துழி இடித்து உரைத்து நெறியில் நிறுத்தும் இயல்புடையதாகவும் அமைந்திருந்தமை உலக வரலாற்றில் காண முடியாத ஒன்று.

மிகச் சிறந்த பேரரசுகளாக விளங்கிய இங்கிலாந்து, ஃபிரான்சு ஆகிய நாடுகளில் ஆட்சியை எதிர்த்து மக்கள் புரட்சி செய்தனர்; அரசர்களைக் கொன்றனர். தமிழக வரலாற்றில் அத்தகைய வரலாறுகள் நிகழ்ந்ததில்லை. ஏன்?

அரசர்கள் நல்லவர்களாகவும், நல்லன கேட்பவர்களாகவும் செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தர்களாகவும் மக்கட்கு, உயிரென விளங்கி உற்றன செய்தும் உறாதன நீக்கியும் நல்லன செய்த கொற்றமுடையவராகவும் விளங்கியதால் அரசை எதிர்த்த கிளர்ச்சிகள் இல்லை.

ஒரோ வழி, சில அரசர்கள் நெறிமுறை பிறழ்ந்தபோது சங்க காலப் புலமைச் சான்றோர்கள் அரசுக்கு எடுத்துக் கூறினர்; அறங்கூறி ஆற்றுப்படுத்தினர்.

சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனை வெள்ளைக்குடி நாகனார், அறநெறியில் ஆற்றுப்படுத்துகின்றார். புலவரின் உரையில் அறம் இருக்கிறது; அரசியல் இருக்கிறது; தரமான கேலியும் இருக்கிறது.

அரசனிடம் நீதி வேண்டுவார்க்கு, மழை வேண்டி நிற்கும் உழவர்க்கு உரிய காலத்தில் பெய்யும் மழைபோல நீதி கிடைக்க வேண்டும். "நீதியைக் காலம் கடத்துவது நீதியை மறுப்பதற்கு ஒப்பானதே!" என்பர். நீதி உரிய காலத்தில் கிடைக்க வேண்டும் என்ற நெறியைச் சங்க காலம் பொன்னே போற் போற்றியிருக்கிறது.

அரசன், தன் கொற்றத்தின் அடையாளமாகிய வெண்கொற்றக் குடையின் கீழ் அமர்ந்திருக்கிறான். குடை வெயிலை மறைப்பதற்கல்ல என்று புலவர் நையாண்டி செய்கின்றார். பின் ஏன் குடை? "வருத்தமுற்ற குடியைத் தண்ணளி தந்து நிழல் போல் பேணுதலின் சின்னமே வெண்கொற்றக்குடை.

செருகளத்தில் வெற்றி பல பெற்றோம் என்று எண்ணி மகிழற்க! பொருநர் தந்த வெற்றி, நிலத்தை உழுது வேளாண்மை செய்து செந்நெல் குவித்த உழவர் தந்த கொடை; வெற்றி! மறவற்க!" என்று எடுத்தும் கூறும் அறவுரை.

அண்மைக் காலத்தில் நம்முடைய நாட்டைப் போர் வருத்திய போது, நம்முடைய நாட்டின் பிரதமராக விளங்கிய அமரர் சாஸ்திரியார் அவர்கள் 'ஜெய்கிஸான்' என்று சொன்னதை நினைவுக்குக் கொண்டு வருகிறது.

உழவர் உழுபயன் மிகுந்து விளங்க, வான் மழை பெய்ய வேண்டும்; பெய்தால் மட்டும் போதாது; பெய்யும் காலத்தில் பெய்ய வேண்டும். மழை பெய்யாது போனாலும், காலம் மாறி மழை பெய்தாலும் சங்க காலத் தமிழர், 'பாழாய்ப் போன வானம்' என்று வானத்தைப் பழிதூற்றார்.

மழை பெய்யாமைக்குக் காரணம் நெறிமுறை தவறிய மக்களும், அரசுமே என்பது சங்க காலத் தமிழர் கருத்து. மக்களும், அரசு வழியினராதலின் அரசையே மிகுதியும் பழி தூற்றுவர். ஆதலால் மக்கள் தூற்றாத அரசாக அமைய வேண்டும் என்று எடுத்துக் கூறினார்.

தனிப்பட்டோர் வாழ்க்கையிலும், பேரரசுகளின் வாழ்க்கையிலும்கூட மிகுதியும் கெடுதல் செய்வோர் கோள் சொல்வோரேயாம். கோள் சொல்பவர்கள் யாருக்கும் இனியராக இருக்க மாட்டார்கள்; அயலவர்கள் ஆகி விடுவார்கள்.

கோள் சொல்லுபவனை, நச்சுப்பாம்பு போன்றவன் என்றே உருவகம் செய்கிறது இலக்கிய உலகு. நச்சுப் பாம்பனைய அவனிடம் செவியைக் கடிக்கக் கொடுக்கும் ஒருவன், அக்கணமே இறந்தவனை ஒத்தவனாகிறான் என்பது இலக்கியக் கருத்து. இங்ஙனம் கோள் சொல்லிப் பிழைப்பவர்கள் தீயவர்கள். கோள் சொல்பவர்களை ஒழிக்க வேண்டுமானால் அவர்களைத் திருத்த முயல்வது பயன் தராது; திருத்தவும் முடியாது.

கோள் கேட்பவர்கள் தாம் திருந்த வேண்டும். கோளினைக் கேட்பவர்கள் இல்லாது போனால் கோள் சொல்பவர்கள் ஏது? குடும்பங்களும் நிறுவனங்களும்

அரசுகளும் நிலை தளர்ந்து கெடுவதற்கு, கோளினைக் கேட்கும் கெட்ட பழக்கமே காரணம். ஆனால், இன்றும் கோள் சொல்வோர் எண்ணிக்கை பெருகி வளர்ந்து வருகிறதே தவிரக் குறையவில்லை.

நாடு தழுவிய நிலையிலே கூட இன்று கோள் சொல்வோர் கொட்டமடித்து வாழ்கின்றனர். கோள் கேட்கும் நிலை உள்ள வரையில் நாட்டில் அச்சத்தை அகற்ற முடியாது; சிறு செயல் செய்யும் கயவரை ஒடுக்க முடியாது. ஆட்சியாளருக்குக் கோள்கேட்கும் பழக்கம் இருக்குமாயின் அது அவர்கட்கு தீங்கு; அவர்கள் ஆட்சியின் கீழிருக்கும் மக்களுக்கும் தீங்கு.

ஆட்சியாளர்கள் கோள்கேட்கக் கூடாது என்பதற் காகத்தான் "ஒற்றர்" அமைத்துக் கொள்ள உரிமை தந்தது சமுதாயம். கோள் சொல்பவன், சண்டைகளை வளர்ப்பவன்; கலகங்களைத் தூண்டுபவன். ஒற்றர் சொல்வது சண்டை களைத் தவிர்க்கும்; கலகத்தைத் தவிர்க்கும்.

எனவே வெள்ளைக்குடி நாகனார், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை அறமுரைத்து ஆற்றுப்படுத்துகிறார். கோள் சொல்பவன் வார்த்தையைக் கேட்காதே! ஏரைப் பாதுகாக்கும் குடியினரைப் பாதுகாப் பாயாக! அவ்வழி மற்ற குடியினரையும் பாதுகாப்பாயாக! என்பது கருத்து.

ஆதலால் நாடும் நாட்டில் வளமும் சிறக்க நல்லாட்சி அமைய வேண்டும்.

> "முறைவேண்டு பொழுதிற் பதனெளி யோர்ஈண்டு
> உறைவேண்டு பொழுதில் பெயல்பெற் றோரே,
> ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
> மாக விசும்பின் நடுவுநின் றாங்குக்"

"கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயின்மறைக் கொண்டன்றோ? அன்றே! வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ!
......................................................"

"மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்கும்இக் கண்அகல் ஞாலம்
அதுநன்கு அறிந்தனை யாயின் நீயும்"

"நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது
பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறந் தருகுவை யாயின்நின்
அடிபுறந் தரு வர் அடங்கா தோரே.

(புறம் 35–15–22; 27–34)

அரசு முறை அமைந்தவுடனேயே அரசுக்கு மக்கள் வரி கொடுப்பது கடமையாகிறது; அரசுக்கு மக்களிடம் வரி வாங்கிக் கொள்ளுதல் உரிமையாகிறது. இது தவிர்க்க முடியாத நியதி.

சங்கத் தமிழரின் ஆட்சியியலில் இந்த வரிக் கொள்கை தெளிவாக வரையறுக்கப் பெற்றுள்ளது. அரசன் வரி விதிப்பில் மட்டுமன்று, வரி வசூலிக்கும் முறையிலும் சிறந்த நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்ற கொள்கையும் வலியுறுத்தப் பெற்றுள்ளது.

பாண்டியன் அறிவுடை நம்பி என்ற பேரரசனைப் பிசிராந்தையார் என்ற பெரும் புலவர் நயம்பட எடுத்துக் கூறி வழி நடத்தும் பாட்டு, எண்ணுதலுக்குரியது.

ஒரு சிறிய நிலப்பரப்பில் விளைந்த நெல்கொண்டு, யானைக்குப் பல நாள்களுக்கு உணவு வழங்கி வளர்க்கலாம். எப்பொழுது? முறையாக நெல்லை விளைவித்து முறையாக

அறுவடை செய்து, முறையாகச் சோறாக்கி யானையைக் கட்டி உணவு கொடுத்தால்!

இங்ஙனம் செய்யத் தவறி யானையையே நெல் வயலுக்குள் புகுந்து தின்ன அனுமதித்தால் மிகப் பெரிய பரப்பளவுள்ள நிலமேயாயினும் யானைக்கும் போதாது. ஏன்? யானை உண்டதைவிட யானையின் கால்பட்டு அழிந்த உணவுப் பொருளே மிகுதி.

அதுபோல, அரசன் குடிகளை வருத்தாது வரியை நெறி முறையில் தண்டுவானானால் நாடும் பொருளாற் செழிக்கும்; அரசின் கருவூலமும் பொருளால் குவியும். அரசன் வரிகளை முறையாக வசூலிக்க வேண்டும். வரியை வரன்-முறையின்றி விதிக்கக் கூடாது. வரித் தண்டல்காரர்களை தத்தம் விருப்பம் போல செய்ய அனுமதித்தல் கூடாது.

அரசனின் அறிவு, வலிமையுடையதாக இருக்க வேண்டும். அரசன் தக்க சான்றோர்கள் சொல்வதையே கேட்கவேண்டும். அரசன் விரும்புவதனையே "ஆமாம்!" என்று ஆமோதித்து, அறமும் ஆக்கமும் எடுத்துக் கூறத் தவறுபவர்கள் அரசுக்குப் பகைவர்களிலும் கொடியர்.

மக்கள் நெஞ்சு நிறைந்த அன்போடு கொடுக்கும் வரியே, அரசை வாழ்விக்கும் வரி, அங்ஙனமின்றி முறையிகந்து பெறும் வரி அரசையும் கெடுக்கும்; உலகையும் கெடுக்கும் என்று அரசை ஆற்றுப்படுத்தும்பாட்டு இன்றைக்கும் வரி விதிப்பில், வரி வசூலிப்பதில் உள்ள இடர்ப்பாடுகளை நினைவூட்டுகிறது.

> காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
> மாநிறைவு இல்லதும் பன்னாட்கு ஆகும்
> நூறுசெறு வாயினுந் தமித்துப்புக்கு உணினே
> வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்
> அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
> கோடி யாத்து நாடுபெரிது நந்தும்

மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே. (புறம் 184)

என்று புறநானூறு பேசுகிறது.

நாடும் ஆட்சியும் செழித்து விளங்க, தண்ணீரே இன்றியமையாதது. 'நீரின்றி அமையாது உலகு' என்பது தமிழ் மறை. உடல், உயிர் தாங்கி வாழ்வோர்க்கெல்லாம் தண்ணீர் இன்றியமையாதது.

உடல்-உயிர் கூட்டு வாழ்க்கை இனிதே நிகழ உணவு தேவை. நீரும் நிலமும் குலந்திடின் உணவு ஆகும். அவ் வுணவை வழங்கியோர் உடலையும் உயிரையும் பிணைத்த வராவார். நிலப்பரப்பு அகன்றதாயினும் நீரும், உழவர் தம் முயற்சியும் ஒத்து இசையாத வழி அரசு தோற்கும்.

ஆதலால் வான்மழை பெய்துழி, அம்மழைத்தண்ணீரை ஏரிகளில் தேக்கிப் பாதுகாக்கும் அரசர்கள், செல்வம் முதலியவற்றைப் பிணைத்துக் கொண்டவர்களாவர். இவ் வுலகத்தில் அவர்கள் பெயர் நீங்காது நின்று நிலவும். நீர் நிலைகளை, ஏரிகளை அமைக்கத் தவறும் அரசர்கள் இந்நிலவுலகில் தம் பெயரை நிலை நிறுத்திக் கொள்ளாத வர்கள் ஆவர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, தண்ணீரை அணைகட்டித் தேக்கி, ஏரிகளில் தேக்கி வேளாண்மைக்குப் பயன்படுத்தும் சிறந்த வாழ்வியற் கருத்தைச் சங்கத் தமிழர் மேற்கொண்டிருந்தனர் என்பது எண்ணி எண்ணி இறும் பூதெய்தக் கூடிய செய்தி.

நீரின்றி அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே

*உண்டி முதற்றே உணவின் பிண்டம்*
*உணவெனப் படுவது நிலத்தொடு நீரே*
*நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு*
*உடம்பும் உயிரும் படைத்திசி னோரே*
*வித்தி வான்நோக்கும் புன்புலம் கண்ணகன்*
*வைப்பிற் றாயினும் நண்ணி ஆளும்*
*இறைவன் தாட்டு உதவாதே அதனால்*
*அடுபோர்ச் செழிய! இகழாது வல்லே*
*நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்*
*தட்டோ ரம்ம இவண்தட் டோரே*
*தள்ளா தோர் இவண தள்ளா தோரே.* புறம். 18–30

என்ற குடபுலவியனார் பாட்டு அறிக.

ஒரு நாடு சிறப்புற்று விளங்க, அந்நாட்டின் அகத்திணை வாழ்க்கைக்கும் புறத்திணை வாழ்க்கைக்கும் உரிமை பூண்ட ஆடவர் நல்லவராய் அமைதல் வேண்டும். "நல்லவர்" என்பது ஓர் உயர்ந்த குறிப்புச் சொல். அறிவு, ஆற்றல், சீலம், பண்பாடு ஆகிய அனைத்தும் நிறைந்தவரையே நல்லவர் என்று கூறுவது சங்க இலக்கிய மரபு.

நாடு, நாட்டு நலன்கள் அனைத்தும் அமைந்ததாக இருந்தால் என்ன? இல்லாது போனால் என்ன? மேடாக இருந்தால் என்ன? இவற்றாலெல்லாம் நாடு வளமாக அமைந்து விடுவதில்லை. நாட்டின் குறைகளை நீக்கி, நாள்தோறும் பாதுகாக்கும் திறமுடைய ஆடவர்கள் இருந்தால்தான் அந்த நாடு வளமுடையதாக இருக்கும்.

அங்ஙனம் நாட்டில் நல்லவர்கள் வாழாது போனால் நாட்டின் இயற்கையையும் வாழ்வோர் அழித்து விடுவர். நாடு, இயற்கையில் நல்வளங்கள் அமைந்து விளங்காது போனாலும், நல்லோர் தமது அறிவறிந்த ஆள்வினையின் மூலம் அந்நிலத்தின் குறைகள் அனைத்தையும் நீக்கி, நலன்கள் நிறைந்ததாக்கி விடுவர். இந்த அரிய கருத்தினை ஔவையார்,

*நாடா கொன்றோ காடா கொன்றோ*
*அவலா கொன்றோ மிசையா கொன்றோ*
*எவ்வழி நல்லவர் ஆடவர்*
*அவ்வழி நல்லை வாழிய நிலனே.* (புறம்–187)

என்று கூறி விளக்குகிறார். இன்றும் இப்பாடல் நம்நாட்டு மக்களுக்குத் தக்க அறைகூவலாக விளங்குகிறது. கடல் கொந்தளிப்பினால் பாழ்; வெள்ளத்தினால் பாழ்; வறட்சியினால் பாழ் என்றெல்லாம் அவலப்படுகிறோம். ஏன்? நம்முடைய நாட்டை உயிரினும் மேலாக மதித்து, அதனை நாடோறும் வளங்குன்றா நிலையில் பேணிப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டால் இந்நாட்டினும் வளங்கொழிக்கும் நாடு வேறு எது?

ஆதலால் ஒரு நாட்டின் வளத்திற்கும் சிறப்பிற்கும் அந்நாட்டின் ஆட்வரே பொறுப்பு என்பது சங்கத் தமிழர் வாழ்வியலின் முடிவு.

சமுதாயம் என்பது பலவுறுப்புக்களை உடையது; தகுதியின் பாற்பட்ட பல பிரிவுகளையுடையது. ஒவ்வோர் உறுப்பும் பிறிதோர் உறுப்புடன் ஒத்திசைந்து, ஒழுங்குற அமைந்து இயங்கும் பொழுதுதான் வாழ்க்கை சிறப்புடையதாக அமைகின்றது; இன்பம் பொதுள இனிது இயங்குகிறது. இங்ஙனம் சமுதாய அமைப்பு இயங்கும் பொழுது என்றும் இளையராக வாழும் இனிய பேறும் கிடைக்கிறது.

ஒன்றோடொன்று உடன்பாடில்லாத சமுதாய வாழ்க்கை முறை கவலையைத் தருகிறது; துன்பத்தைத் தருகிறது; இளமையில் முதுமையைத் தருகிறது; வாழ்க்கை சுவையற்றுப் போய்விடுகிறது என்று சங்கத் தமிழர் எண்ணினர். சங்கத் தமிழர் வாழ்வியல் சமுதாயத்தின் அனைத்து உறுப்புக்களுக்கும் இணைந்து இன்பம் மேவியதாக இருந்தது என்பது அறியற்பாலது.

சங்க காலத்துச் சான்றோருள் பிசிராந்தையாரும் ஒருவர். அவர், ஆண்டில் முதியராக இருந்தும் மூப்பின் அடையாளமாகிய நரையின்றி விளங்கினார். அச்சான்றோரை, ஆண்டு பலவாகியும் நரையில ஆவது எங்ஙனம்? என்று புலவர்கள் வினவினர். வினாவிற்கு விடையாகத் தமிழினத் தின் நல்வாழ்விற்கு உரியதொரு பாடல் பிறக்கிறது. அப் பாடல் சங்க காலத் தமிழர் வாழ்வியலின் வளம் பேசுகிறது.

வீடும் ஊரும் நாடும் சமுதாயத்தின் உறுப்புக்கள். இம்மூன்றினிடையிலும் சங்க காலத்தில் முரண்பாடுகள் இருந்ததில்லை; மாறுபாடுகள் இருந்ததில்லை. எல்லா வற்றிலும் உடன்பாட்டு நெறி. ஒத்திசைந்து செல்லும் நெறி. அம்மம்ம! அத்தகைய அரிய வாழ்க்கையை மீண்டும் தமிழகம் காணுமோ!

அங்ஙனம் காணின், நரைத்த - வெள்ளையான உரோமங்களை, மையால் கருப்பூட்டிக் காட்டும் போலி இளமையைப் புறக்கணிக்கலாம். தெங்கின் இளநீரில் தவிர, வேறு எங்கும் வழுக்கையைக் காணாமற் செய்யலாம். அது என்ன அப்படி அற்புதமான வாழ்க்கை!

மனிதனுக்குக் காற்றும், தண்ணீரும், உணவும் மட்டும் வாழ்க்கையன்று. களிப்பும் மகிழ்ச்சியும் சேர்ந்ததுதான் அவன் வாழ்க்கையின் உயிரூற்று. வீட்டில் நல்ல மனைவியும் மக்களும் உளர். மனைவியும் மக்களும் நல்லறிவினர். அவர் களால் இன்பமே ஒழிய யாதொரு துன்பமுமில்லை.

அடுத்து, வாழ்க்கையில் பங்கு பெறுவோர் ஏவல் செய்வோர். பல சமயங்களில் ஏவல் செய்வோர் கொடுக்கும் இடர்ப்பாடுகளால் ஏவல் செய்வோரின்றி நாமே செய்து கொள்ளக் கூடாதா? என்று எண்ணத் தோன்றும். பலகால் சொல்லினும் எடுத்துக் கூறினும் இடித்துக் கூறினும் கேட்டுச் செய்யும் ஏவலரைக் காண்பது அரிதாக இருக்கிறது.

ஆனால், சங்க காலத்து ஏவலர்கள் ஏவல் கொள்வார் கருதுவதையே கருதிச் செய்து முடிக்கும் இயல்பினராக விளங்கினர்.

அரசு, அதிகாரங்கள் உடையதாயினும் யாதொரு தீமையும் செய்ததில்லை; செய்யாது! அது மட்டுமன்று, அரசின் அதிகாரங்கள் காத்தற்கே பயன்பட்டன. ஆக்கத் திற்கும் காப்பதற்கும் பயன்படும் அதிகாரமே அதிகாரம்.

ஆதலால் அச்சமும் கவலையும் இன்றி உண்டுறங்கி வாழும் பேறு கிடைக்கிறது. என்னுடைய ஊர் நல்ல ஊர். என்னுடைய ஊரில் கல்லா மாக்கள் இல்லை. என்னுடைய ஊரில் பொறிகளை, மதம் பிடித்த களிற்றைப் போலத் தத்தம் போக்கில் அலைய விடுவாரில்லை.

நன்றாகப் பழுத்த கனிகள் போல அவர்கள் சால்பு நிறைந்த பொறிகளையுடையவர்கள். நற்குணங்களை யெல்லாம் தமக்கே உரிமையுடைய சான்றோர்கள் பலர் வாழ்கின்றனர். அவர்கள் கொள்கையுடையவர்கள், அடக்க முடையவர்கள். அவர்களைக் காண்பதிலும் அவர்கள் சொற்களைக் கேட்பதிலும் துன்பம் தொலைந்தது; இன்பம் பெருகி வளர்ந்தது. அதனால், ஆண்டுகள் பலவாகியும் நரையிலேன் என்று கூறும் பெருமிதத்தை என்னென்று கூறுவது?

சங்க காலச் சமுதாயம் அனைத்துமே முழுமையுற்றிருந்தது என்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டு. பிசிராந்தையார் பெற்ற பெருமிதத்தை இந்த நாட்டில் ஒவ்வொருவரும் பெற்றுக் கூறும் நாளே இந்த நாட்டின் பொன்னாளாகும்.

*யாண்டுபல வாக நரையில ஆகுதல்*
*யாங்கா கியர்என வினவுதி ராயின்*
*மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்*
*யான்கண் டனையர்என் இளையரும் வேந்தனும்*
*அல்லவை செய்யான் காக்கும்; அதன்தலை*

*ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்*
*சான்றோர் பலர்யான் வாழுமூரே.* (புறம்–191)

ஒரு சமுதாய அமைப்பில் நிகழும் நிகழ்வுகளையும், நிகழ்வுகளுக்குப் பின்னணியாக இருக்கின்ற இன்ப துன்பங்களையும் நாம் அணுகும் முறையிலேயே முரண்பாடுகள் நீங்கிச் சிறப்புறுகின்றன; துன்பம் நீங்கி இன்பம் தருகின்றன.

சங்க காலத்துச் சான்றோர்களுள் கணியன் பூங்குன்றனார் என்ற பெரும்புலவர் உலகு தழுவிய ஒட்பமுடையவர். சிற்றெல்லைகளைக் கடக்க வழி காட்டியவர். சிறு செயல்களைத் தவிர்க்கக் கற்றுக் கொடுத்தவர்.

இலக்கிய உலகிற்குக் கொடையெனக் கிடைத்த "யாதும் ஊரே! யாவரும் கேளிர்!" என்ற சொற்றொடர் கணியன் பூங்குன்றனார் தந்ததேயாம். ஆம்! ஊர், வாழ்க்கைக்கு இன்றியமையாதது தான்! ஆனால் "எனது ஊர்" "உனது ஊர்" என்ற வேறுபாடுகள் தோன்றின் வாழ்க்கை நரகமாகி விடுகிறது. அதனால் எல்லா ஊரையும் தம் ஊர் போலவே கருதி, நல்லன இயற்ற வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார்.

சமுதாய அமைப்பில் சுற்றத்தார் என்ற குருதிச் சார்புடைய உள்வட்டம் அமைதல் தவிர்க்க இயலாததே. ஆயினும் இந்த உள்வட்டம் சமுதாயம் என்ற பொதுமைக்கு இடையூறாக வளர்ந்து விடக்கூடாது.

ஆதலால் எல்லாரையுமே சுற்றத்தாரைப் போல ஒப்ப நோக்கவேண்டும் என்பது பழந்தமிழ்க் கொள்கை. இத்தகு உயர் தமிழ்க் கொள்கையை இழந்தமையினால், சாதிச் சழக்குகளுக்கு ஆளாகித் தமிழகம் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்றையத் தமிழகத்திற்கு உயிர் தருவது கணியன் பூங்குன்றனார் பாட்டேயாகும்.

வாழ்க்கையில் நல்லன வந்தமைதலும் உண்டு! தீயன வந்து தொல்லை தருதலும் உண்டு. நெறியழிந்தோர், தீமைக்கு மற்றவர்களையே காரணம் காட்டி, தம் தவறுகளை மூடிமறைத்துக் கொள்வர். யாரொருவருக்கும் ஒரு நன்மையை அல்லது தீமையை பிறிதொருவர் செய்துவிட முடியாது. எரிகின்ற இயல்புடைய பொருள் ஒன்றைத்தான் ஒருவர் எரிக்கமுடியும்.

அதுபோல நன்மையை ஏற்று ஒழுகும் இயல்புடை யோரே நன்மைக்குரியதாக அமையும் சூழல்களை ஆற்ற லோடு பயன்படுத்தி நன்மையைக் காண்பர்; படைப்பர்.

நொய்ம்மையுடையோர் நல்ல சூழல்களையும் கூட வலிந்து தீமையாக்கிக் கொள்வர். ஒருவர் பிறிதொருவருக்கு நன்மை செய்து விடுவதும் இல்லை. தீமை செய்து விடுவது மில்லை இஃதொரு சித்தாந்தம்.

ஆதலால், நன்மையைக் கண்டபொழுது மகிழ்தலும் அவசியமில்லாத ஒன்று. தீமையைக் கண்டபொழுது துவள்தலும் தகாத ஒன்று. மகிழ்தலும் நோதலும் வாழ்க்கைக்கு நல்லன செய்யா!

சாதல், புதுவதன்று! பிறப்பிலேயே சாவும் நிர்ணயிக்கப் பெற்றிருக்கிறது. இஃதொரு மாற்றமுடியாத நியதி. ஆதலால், இது மகிழ்ந்து வாழ்தலையும் ஒரு பொருட்டாக நினைக்கக் கூடாது. அதுபோலவே, வெறுப்பன வந்தபோதும் நொந்து கவலைப்படுதல் கூடாது.

ஆற்றுவெள்ளப் போக்கில் பட்டுகள் மிதந்து செல்லுகின்றன. அதுபோலச் சமுதாய முறை நிகழ்வுகளில் உயிரின் வாழ்க்கையும் மிதந்து செல்கிறது. ஒருவர் பெருமைக்கும் சிறுமைக்கும் அவர் காலத்தில் சமுதாய நிகழ்வுகளே காரணமாக அமைகின்றன.

அதனால், ஒருவரைப் பெரியோர் என்று அளவுக்கு விஞ்சிப் புகழ்தல் நெறியுமன்று; முறையுமன்று. அது போலவே

சிறியோரையும் இகழ்தல் கூடாது. சிறியோர், அவர்களாக வலியச் சிறியோராகவில்லை. அவர்களைச் சிறியோராக்கிய சமுதாய நிகழ்வுகள் நினைவில் கொள்ளத்தக்கன.

ஆதலால், பெரியோரை வியத்தலும் சிறியோரை இகழ்தலும் சரியான சமுதாய மரபல்ல என்ற சங்கத் தமிழர் வாழ்வியற் கொள்கை என்றைக்கும் பொருந்துவது!

*"யாதும் ஊரே! யாவரும் கேளிர்!*
*தீதும் நன்றும் பிறர்தர வாரா*
*நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன*
*சாதலும் புதுவது அன்றே! வாழ்தல்*
*இனிதென மகிழ்ந்தன்றும் இலமே! முனிவின்*
*இன்னாது என்றலும் இலமே! மின்னொடு*
*வானம் தண்துளி தலைஇ யானாது*
*கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று*
*நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்*
*முறைவழிப் படூஉம் என்பது திறவோர்*
*காட்சியில் தெளிந்தனம் ஆகலின் மாட்சியில்*
*பெரியோரை வியத்தலும் இலமே*
*சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!"*

(புறம்–192)

மனித உலகம் தோன்றிய நாள்தொட்டு சமுதாய அமைப்பில் இன்பமும் துன்பமும் கலந்தே சமுதாயத்தை அழைத்து வழி நடத்திக்கொண்டு வந்திருக்கின்றன. ஆனால் இரு வேறுபட்ட இன்ப துன்பச் சூழலை, சான்றோர்கள் தொடர்ந்து எதிர்த்துப் போராடிக் கொண்டே வந்திருக் கின்றனர். வெற்றி முழுதாகக் கிடைக்கவில்லை.

அதுமட்டுமன்று, இயற்கையில் அமைந்த திருமணம், மரணம் இவற்றோடு தொடர்புடைய இன்பதுன்பங்களைக் கூட சங்ககாலத் தமிழர் உடன்படாது எதிர்த்திருக்கின்றனர்.

அந்தச் சிந்தனையின் வளர்ச்சியே "மரணமிலாப் பெருவாழ்வை" எண்ணிப் பார்க்கும் அளவுக்கு வளர்ந்தது.

ஆனால், இந்தக் கருத்தில் இந்தச் சமுதாய முழுமையான வெற்றி பெறுவதற்கு மாறாக, இன்றைக்கு வீட்டுக்கு வீடு புன்மை நிறைந்த சாதிவேற்றுமைகளால், அழுக்காற்றின் வழிப்பட்ட பகையால், வளம், மறுமை என்ற வேறுபாடுகளால் வேறுபட்டுக் கிடந்து எய்த்து அலையும் அவலத்தை என்னென்பது!

அது மட்டுமா? இந்த இன்பதுன்ப வேறுபாடுகளுக்குப் படைத்தோனே காரணம் என்ற பைத்தியக்காரத்தனமான கொள்கை சங்க காலத்திலேயே தலைகாட்டியிருக்கிறது. ஆனால், பக்குடுக்கை நன்கணியார், இவ்வுலகத்தின் இன்ப துன்பங்களுக்குப் படைத்தோனே காரணம் என்று தட்டிக் கழிக்கும் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறார்.

இவ்வுலக நிகழ்வுகள் இன்னாதனவாக இருக்கலாம். ஆனால் அப்படியே இருக்க அனுமதிக்கக் கூடாது. அறிவார்ந்த ஆள் வினையால் இன்னாதனவாக இருக்கும் உலக நிகழ்வுகளை இனியனவாக அமைக்க வேண்டும் என்று கருதி, வாழ்வியலை வழி நடத்திய சங்கத் தமிழர் வாழ்வே வாழ்வு!

*ஓரில் நெய்தல் கறங்க ஓரில்*
*ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்*
*புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்*
*பைதல் உண்கண் பனிவார்பு உறைப்பப்*
*படைத்தோன் மன்றஅப் பண்பிலாளன்*
*இன்னா தம்ம இவ் வுலகம்*
*இனிய காண்க, இதன் இயல்புணர்ந்தோரே!* (புறம்–194)

ஓர் ஒப்பற்ற சமுதாய அமைப்பு, பொருளை ஈட்டுத லாலோ துய்த்தலாலோ மட்டும் அமைந்து விடுவதில்லை.

செல்வத்தின் பயன் விரிந்தது. பரந்தது! செல்வத்தின் பயனை மிகச் சுருக்கியுள்ள இந்தக் காலத்தில் சங்ககாலத் தமிழர் வாழ்வியலை எண்ணிப் பார்ப்பது பயன்தரும்.

செல்வத்தின் பயன் ஈதலேயாம்! மற்றவர் வருந்தும் பொழுது அவர்தம் வருத்தத்தை மாற்றாது ஒருவன் தன் செல்வத்தைத் துய்ப்பானானால் அச்செல்வமே அவனை விட்டுத் தப்பித்துப் போய்விடும். இதனைச்

"செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே"

என்று புறநானூறு விளக்கிக்கூறும்.

செல்வத்தைச் செல்வத்திற்காக ஈட்டுவதோ, செல்வத்தைத் தாம் மட்டுமே துய்த்து வாழ ஈட்டுவதோ பழந்தமிழர் மரபன்று. களவியலில் தலைவன் ஒருவன் கற்பியல் நாடி அமைத்துக் கொள்வதற்காகப் பொருள்தேடச் சென்றிருக்கிறான். குறித்த காலத்தில் தலைவன் வரவில்லை. தலைவி துன்புறுகிறாள். அருகிலிருக்கும் தோழி "தலைவன் வருவான், கவலற்க!" என்று ஆறுதல் கூறித் தேற்றுகிறாள். ஆனால், தோழியின் மொழியைத் தலைவி ஏற்று உடன்பட்டு ஆறுதல்பெற உடன்பட்டாளில்லை. ஏன்? தலைவி, தலைவனை முற்றாக அறிந்தவள்.

தலைவன் ஒரு கொடையாளி. தன்னை நாடி யார் வந்து கேட்டாலும் இல்லை என்று சொல்லாது வழங்கும் கொடைஞன் அவன். ஆதலால், அவன் பொருளீட்டச் சென்றது கற்பியல் நலம் கருதியன்று.

தம்மை நோக்கி "இல்லை" என்று இரந்து வருவோர்க்கு "இல்லை" என்று சொல்லும் நெஞ்சைப் பெறாதவனாதலால், தம்மை நாடி வருவோருக்குப் பொருள் ஈவதற்காகவேதான், அவன் பொருள் தேடச்சென்றிருக்கிறான். தலைவனுக்குத்

தலைவியிடமிருக்கும் காதலைவிட, பொருளின் மீதுள்ள காதல் பெரிது என்று, அகநானூற்றுத் தலைவி, தன் தோழிக்கு,

"இல்லோர்க்கு இல்லென்று இயைவது கரத்தல்
வல்லா நெஞ்சம் வலிப்ப நம்மினும்
பொருளே காதலர் காதல்"
(அகம்-53; 13-15)

என்று கூறுவதால் அறியலாம்.

ஆதலால், சங்ககாலத் தமிழர் வாழ்வியலில் பொருள் ஈட்டுதல் சமுதாய நோக்குடையது. சங்ககாலத் தமிழர் உயர்ந்த பொருளையீட்டி, மற்றவர்களுக்கு வழங்கி வாழ்வளிப்பர். எஞ்சியதிலேயே தம் வாழ்க்கையை இயற்றுவர்.

உயிரினத்தில் எருது உழைப்பிற்குப் பெயர்போனது. அதுபோலவே உழைப்பின் பயனாகிய செந்நெல்லையும், செங்கரும்பையும் மானிடசாதி அனுபவிக்கத் தந்துவிட்டு வைக்கோலையே தின்று உயிர் வாழ்வது. அதனாலன்றோ நமது சமய நெறியில் எருது போற்றுதற்குரியதாக ஏற்றம் பெற்றது.

சங்க காலத்து வழிபடும் தெய்வமாகிய சிவம் ஓங்கி உயர்த்த கொடி, ஏறும் ஊர்தி எருது. சிவனின் திருக்கோயில் முன்றிலில் வருவோர்க்கு "உழைப்பிற்கு, முன்நில், உழைப்பின் பயனைத் துய்ப்பதில் கடைசியாக நில்! கொடையிலும் ஆர்ப்பரிக்காதே! அடக்கத்துடன் இரு! இதுவே இறைநெறி! சமயநெறி!" என்று பாடம் கற்பிக்கும் நிலையில் படுத்தும் கிடக்கிறது.

இத்தகு வாழ்க்கை சங்க காலத் தமிழர் வாழ்வில் நிறைந்திருந்ததால்தான் கொலை, களவு முதலிய குற்றங்கள் குறைந்திருந்தன. சமுதாய வாழ்க்கையில் நம்பிக்கையும் நல்லெண்ணமும் மலிந்திருந்தன. இவ்வுயரிய கருத்தினை

வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தன் பாடும் இயல்பைக் கேளுங்கள்!

"நள்ளாதார் மிடல் சாய்த்த
வல்லாள! நின் மகிழிருக்கையே
உழுத நோன்பகடு அழிதின்றாங்கு
நல்லமிழ் தாகநீ நயந்துண்ணும் நறவே!" (புறம்–125)

இந்த வரிகள் சமுதாயச் சீரமைப்புக்குரிய மருந்தாகும்!

சங்க காலத் தமிழர் வாழ்வியல் காதற் சிறப்புடையது. சங்க காலத் தமிழர் வாழ்வியலில் பெண்ணைப் பெருமைப் படுத்தும் இயல்பு நிறைந்திருந்தது. ஒரு தலைவனின் வாழ்க்கையில் பங்குபெறும் பெண்ணுக்குத் "தலைவி" என்றே பெயர் அமைந்திருந்தது.

காதல் மனையற வாழ்க்கை சங்க காலச் சிறப்புகளுள் ஒன்று. பெண்ணைத் துறத்தல், வெறுத்தல், இழிவு படுத்துதல் ஆகிய இழி இயல்புகள் சங்க காலத்தில் இருந்ததில்லை.

அவர்கள் மனையற வாழ்க்கையிலேயே துறவும் துய்த்தலும் ஒன்றாகக் கலந்திருந்தன. ஒன்றுக்கொன்று துணையா யமைந்தன. மனையற வாழ்க்கையில் முகிழ்த்து மலர்வதே "சிறந்தது பயிற்றல்" எனப் பாராட்டப்பெறும் துறவு.

ஆதலால், சங்க கால வாழ்க்கையில் நெறிமுறை பிறழாத காதல் வாழ்க்கை இருந்தது. அன்றையக் காதல், எளிதில் தோன்றியதுமன்று; எளிதில் மாறியதுமன்று. சங்க காலத்தில் தலைவன், தலைவி தம்முள் காதலித்தே தேர்ந்தெடுத்துக் கொண்டனர். அந்தக் காதலை வீடும், நாடும் ஏற்றுக் கற்பியலாக்கிப் பெருமை கொண்டன.

ஆனால், இளம் வயதினரான தலைவனும் தலைவியும் கூட, காதலில் உணர்ச்சி வசப்படவில்லை என்பதுதான் சங்க காலத் தமிழர் காதலுக்குச் சிறப்பு. சிறந்த தெளிவில் தோன்றிய காதல் வளர்ந்து ஆழம்பட்டு எழுபிறப்பும்

தொடரக் கூடியதாக உரம் பெற்றது என்பதை எண்ணும் பொழுது அவர்களின் காதல் மாட்சியை எண்ணி வாழ்த்துதற்குச் சொற்கள் ஏது?

"களவும் கற்று மற" - என்றொரு பழமொழி தமிழகத்தில் வழங்கி வருகிறது. இப்பழமொழி சங்க காலத் தமிழரின் அகத்திணை வாழ்வியலின் களவு நெறியை அடிப்படையாகக் கொண்டு தோன்றியதேயாகும்.

அதாவது, தலைவனும், தலைவியும் தற்செயலாகக் காண்பர். நல்லூழ் கூட்டக் காதல் தோன்றும், உற்றாரும் ஊராரும் அறியாது தனியே சந்திப்பர். கலந்து பேசி மகிழ்வர். மற்றவர் அறியாது கூடுவதால் "களவியல்" என்றாயிற்று.

இங்ஙனம் களவியலில் சந்தித்துக் காதலை வளர்த்துக் கொண்ட தலைவன், கற்பியல் அமைக்க-திருமணம் செய்ய முனைவான். இதை நினைவூட்டும் வகையில் களவியலில் தலைவியைச் சந்தித்துக் காதலித்தல் தவறன்று. ஆனால், அது தொடரக் கூடாது என்ற குறிப்பில் பிறந்த பழமொழி இது.

களவியலில் யாருமின்றித் தனியே சந்திக்கும் தலைவனும் தலைவியும்கூட அவர்கள் உள்ளத்தால் அன்பினால் கலந்து பழகுவதன்றி மெய்யுறு புணர்ச்சி நிகழ்வதில்லை. இதனைக் கபிலரின் குறிஞ்சிப் பாட்டில் வரும் தோழி செவிலிக்கு எடுத்துக் கூறுகிறாள்.

"வேய்புரை மென்றோள் இன்துயில் என்றும் பெறான்"
(குறிஞ்சிப். 242)

என்று.

தலைவன் தலைவியிடத்திற் கொண்ட நட்பு மிகமிக உயர்ந்தது. அஃது ஆழ்கடலைவிட ஆழமானது. அதனால் அவன் மெய்யுறு புணர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டவனல்லன். வரம்பிகந்த இன்பத்தைத் துய்ப்பதற்குரிய செல்வம் இல்லாதவனுமல்லன்.

ஆயினும் அவன் நெறிமுறைகளுக்கு இசைந்த வாழ்வுடையவன். அவன் தலைவியைக் காதலித்தது, தான் இன்புறுதற்காகவல்ல. காதலியை இன்புறுத்தற்காகவேயாம். ஆதலால் மெய்யுறு புணர்ச்சி பெற இயலாமை அல்லது காலம் நீட்டித்தல் ஆகியன பற்றி அவன் கவலைப்படுவ தில்லை. இதனை,

"பெறாஅன் பெயரினும் முனிய லுறான்
இளமையில் இகந்தன்றும் இலனே"

(குறிஞ்சிப்பாட்டு 243–244)

என்ற குறிஞ்சிப் பாட்டால் அறியலாம்.

பழங்காலத்தில் உள்ளப் புணர்ச்சியில் மட்டுமே கூடி மகிழ்ந்து மெய்யுறு புணர்ச்சி வாய்க்காமலே இறந்த காதலர் களும் உண்டு.

அதனால்தான் களவியலில் உள்ளப் புணர்ச்சி மட்டுமே உண்டு என்பதை விளக்க அகத்திணை நூலாகிய குறுந்தொகையில், பாடிய பாட்டாலேயே பெயர் பெற்ற "செம்புலப் பெயல் நீரார்" பாடும் அகப்புணர்ச்சியின் மாட்சிமையைக் கேளுங்கள்!

"யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே" (குறுந்–40)

தலைவன் தலைவியாக தம்முள் பண்பு நலம் ஒத்தவர் களிடையில் காதல் தோன்றுவது தவறன்று. அஃது அறம் என்பது சங்க காலத் தமிழர் வாழ்வியலில் நிலை பெற்றிருந்தது. காதலித்தவர்களை மணம் செய்து கொள்ள முடியாமல் தொல்லைப்படுத்தும் இக்காலச் சமுதாயத்தினரைப் போலன்றி சங்க காலத்தில் காதலுக்கு வரவேற்பு இருந்தது.

அதனால் சமுதாய அமைப்பில் அன்பும் பண்பும் வளர்ந்திருந்தது. தலைவன்–தலைவியிடையே காதல் தோன்றி வளர்ந்தமைக்கு யாரும் காரணமல்ல; அஃதொரு இயற்கை நிகழ்வு. இக்காதலுக்கு யார் மீதும் குற்றம் சுமத்த வேண்டாம்; செய்ய வேண்டியது மணம் ஒன்றே என்று தலைவியின் தோழி செவிலிக்கு அறத்தை உணர்த்துகின்றாள்.

இளைய மகளிர் ஓடி விளையாடித் தொழிற்பட்டால் தான் அவர்களுடைய உள்ளமும் உடலும் உறுதி பெறும். அதனால் செவிலித்தாயாகிய நீ, தலைவியைத் தினைப்புனக் காவலுக்கும் அனுப்பி வைத்தனை. தலைவியும் நின்குறிப்பின் வழிதான் விளையாடினாள். அவளும் பெண்மை நலன்கள் அனைத்தும் பொருந்தியவள்; பண்பும் உடையவள். அதனால் அவள் மீதும் குற்றமில்லை. தோழியாகிய நான் தலைவியுடன் சென்றிருந்தேன்; என் குற்றம் என்னவென்றும் யானறியேன். யாதானும் இருப்பின் பொறுத்தருள்க.

தலைவியின் மனத்தைக் கவர்ந்த தலைமகனும் வேட்டைத் தொழிற்கு வந்தபொழுதே தலைவியை எதிர்ப்பட்டான். தலைவனும் தீயவனல்லன். ஆதலால், நம் அனைவரின் கருத்தின் வழியும் யாதொரு குற்றமும் செய்யவில்லை. நம் அனைவரின் கருத்தின்றியும் எதிர் பாராமல் நிகழ்ந்துவிட்டது.

நிகழ்ந்து விட்ட தலைவன் தலைவியின் உறவினைக் கற்பியலாக்குவதே அறம் என்று சொல்லும் இனிய பாங்கினை அறிக. இங்ஙனம் திருமணம் நிகழ்கிற வாய்ப்பை இன்றைய சமுதாயம் பெற்று விட்டால் "வரதட்சணை" என்கிற கொடுமையே இருக்காது.

> நின்குற்றம் இல்லை நிரைதொடியும் பண்புடையள்
> என்குற்றம் யானும் உணர்கலேன் – பொன்குன்று
> அருவி கொழிக்கும் அணிமலை நாடன்
> தெரியுங்கால் தீய திலன். (குறிஞ்சிப்பாட்டு – வெண்பா)

சங்ககாலத் தமிழர் வாழ்வியலில் பொருள் செய்யும் முயற்சி போற்றப் பெற்றது; பொருளை இழிவெனக் கருதும் கருத்து இருந்ததில்லை. ஆனால் பொருள் செய்யும் முயற்சியின் குறிக்கோள் உயர்ந்ததாக இருந்தது. வயது வந்த ஒவ்வொருவரும் தத்தம் முயற்சியில் பொருளீட்டியே வாழ வேண்டும் என்ற நடைமுறை இருந்திருக்கிறது. தந்தை பொருளிற்கூட மகன் வாழ்வதில்லை.

அதனால் தலைமகன் என்று பாராட்டப்படுவதின் உயர்நிலை வினை செய்தலாகவே இருந்தது. வினை என்பது இன்று குறிக்கும் பொருளில் பண்டு குறிக்கப் பெற்றதில்லை. வினை என்றால் தொழில் என்பதுதான் சங்க காலத் தமிழ் வழக்கு.

"வினையே ஆடவர்க்கு உயிரே!"

என்று குறுந்தொகை கூறுகிறது.

பொருள் செய்யும் முயற்சியை ஒப்புக்கு யாரும் செய்வ தில்லை. ஒரு முயற்சியை அச்சத்திற்காகவும் ஒப்புக்காகவும் மேற்கொண்டு செய்தால் அம்முயற்சி போதிய பயனைத் தராது. உள்ளம் ஒன்றிய உணர்வுடன் அம்முயற்சியில் - பொருள் செய்யும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று பாலைக் கலி கூறுகிறது.

"புலம்பில் உள்ளமொடு பொருள்வயிற் செலீஇய"

என்பது கலித்தொகை வரி.

சங்கத்தமிழர், பொருளை உழைப்பின் வழியிலேயே ஈட்ட நினைத்தனர். வேறு வழிகளில் பொருள் ஈட்டுதலை அறம் - அன்றெனக் கருதியது மட்டுமல்லாமல், குற்ற மென்றும் கருதினர். பிறர்க்குரிய பொருளை அல்லது பங்கைத் திருடும் மனப்போக்கு, சங்ககாலத் தமிழர் வாழ்வில்

இருந்ததில்லை. இதனை, மதுரைக் காஞ்சியில் மாங்குடி மருதனார் அழகுறக் கூறுகிறார்.

*"நன்றும் தீதும் கண்டு ஆய்ந்து அடக்கி*
*அன்பும் அறனும் ஒழியாது காத்துப்*
*பழிஒரீஇ உயர்ந்து பாய்புகழ் நிறைந்த*
*செம்மை சான்ற காவிதி மாக்களும்..."*

(மதுரைக் காஞ்சி 496 – 499)

என்றவாறு செந்நெறியில் பொருளீட்டி வாழ்ந்தது சங்கத் தமிழர் வாழ்வியலின் சிறப்பு.

நெடிய பயணத்திற்குப் பயன்படும் மகிழுந்துகளுக்குச் (Pleasure Car) சேமக்காற்றுருளை (Stepney) வைத்துக் கொள்வது இன்றுள்ள நடைமுறை. ஆனால், பொதியினைச் சுமந்து இழுக்கும் எருதுகளுக்குக் களைப்பு நீங்க ஓய்வு கொடுக்க மாற்று எருதுகளைக் கொண்டு செல்லும் பழக்கம் இன்று இல்லை.

ஆனால், பண்டைத் தமிழர் வாழ்வியலில் உயிரிரக்கம் மேம்பட்டிருந்தது. மயிலின் குளிர் நீக்கப் போர்வை ஈந்த உயிரிரக்கம் எங்கே? இன்று மந்தை மந்தையாக அடிகளத்திற்கு மாட்டை அழைத்துச் செல்லும் கொடுமை எங்கே? பற்றிப்படரக் கொழுகொம்பில்லாத முல்லைக் கொடிக்குத் தேர் ஈந்த இரக்கம் எங்கே? நாள்தோறும் காடுகளை வெட்டி அழித்து வரும் நமது புன்மதி எங்கே?

சங்க காலத்தில் எருது பூட்டிய வண்டியில் உப்பை ஏற்றிச் செல்கின்றனர். அந்த உப்பு வண்டியை இழுத்துச் செல்லும் காளைகளுக்கு ஓய்வு கொடுக்க வேறுகாளை களையும் அழைத்துச் செல்கின்றனர் என்பதை,

*"படலைக் கண்ணிப் பரேர் எறுழ்த் திணிதோள்*
*முடலை யாக்கை முழுவலி மாக்கள்*

*சிறுதுளைக் கொடுநுகம் நெறிபட நிரைத்த*
*பெருங்கயிற்று ஒழுகை மருங்கிற் காப்பச்*
*சில்பத உணவின் கொள்ளை சாற்றிப்*
*பல்எருத்து உமணர் பதிபோகு நெடுநெறி"*

(பெரும்பாண்: 60 – 65)

என்று பெரும்பாணாற்றுப் படை பேசுவதால் அறியலாம்.

சங்கத்தமிழர் வாழ்வியலில் முறையான அரசு அமைந் திருந்தது போலவே, அறங்கூறவையமும் அமைந்திருந்தது. இன்று, நீதி மன்றங்கள் என்றும், முறை மன்றங்கள் என்றும் அழைக்கப் பெறுவனதாம் பழங்காலத்து அறங்கூறவையம். ஆனால், இந்த நீதி மன்றங்களின் நடைமுறைக்கும் அறங் கூறவையத்தின் நடைமுறைக்கும் நிறைய வேறுபாடுண்டு.

இத்தகைய சிறந்த அறங்கூறவையங்களைப் பண்டைத் தமிழரசர்கள் நிறுவி, முறை வழங்கினர். அறங்கூறவையத்தில் அறவோராக, நடுவராக அமர்வோர் வழக்கிடுவோரின் உள்ளத்தின் ஐயத்தையும் அச்சத்தையும் அவ்வழித் தோன்றும் வருத்தத்தையும், இம்மூன்றிற்கும் காரணமாக அமைந்த பற்றுள்ளத்தையும் நீக்கும் தகுதியுடையவராக அமர்ந்து இருந்தனர்.

அவ் அறவோர், ஒருபால் கோடுதல் இல்லை. அவர்கள் துலாக்கோல் போல் அமர்ந்து அறத்தினையே மையமாகக் கொண்டு எல்லாருக்கும் விளங்க, ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில், வழக்கில் வென்றோர் மகிழ்தல் மட்டுமின்றி வழக்கில் தோற்றோரும் தம்முடைய தோற்பும் நீதியின் பாற்பட்டதே என்று ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் முறை வழங்கும் மாண்புடையதாகச் சங்ககாலத் தமிழகத்தில் அறங்கூறவையம் இருந்தது. இதனை, மாங்குடி மருதனாரின் மதுரைக் காஞ்சி,

*"அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்*
*செற்றமும் உவகையும் செய்யாது காத்து*
*ஞெமன் கோல் அன்ன செம்மைத் தாகிச்*
*சிறந்த கொள்கை அறங்கூற வையமும்"*

(மதுரைக் காஞ்சி; 489 – 492)

என்று கூறிப் பாராட்டுவதால் அறியலாம்.

சங்ககாலத் தமிழர் வாழ்வியலில் சமயப்பொறை இருந்தது. சமயச் சண்டைகள் இருந்ததில்லை. எல்லாச் சமயத்தினரும் வழிபடும் கடவுள் ஒன்றே என்ற விழுமிய கருத்துக் கால் கொண்டிருந்தது. பல்வேறு திருப்பெயர்களில் கடவுள் வழிபாடு இருந்தமையைச் சங்க காலம் உணர்த்தினாலும் "இந்தக் கடவுள்தான் உயர்ந்தது; அந்தக் கடவுள் தாழ்ந்தது" என்ற சண்டைகள் இருந்ததில்லை. குறிஞ்சிப் பாட்டில் கபிலர்,

*"பரவியும் தொழுதும் விரவுமலர் தூயும்*
*வேறுபல் உருவில் கடவுட் பேணி*

(குறிஞ்சிப்பாட்டு: 5 – 6)

என்று இயம்புகின்றார், பரிபாடல் ஆசிரியரும்,

*"ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும்*
*கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும்*
*அவ்வவை மேய வேறுவேறு பெயரோய்!*
*எவ்வயி னோயும் நீயே! நின் ஆர்வலர்*
*தொழுதகை அமைதியின் அமர்ந்தோயும் நீயே!*
*அவரவர் ஏவ லாளனும் நீயே!*
*அவரவர் செய்பொருட் கரணமும் நீயே!*

(பரிபாடல் 4: 67 - 72)

என்று கூறுவதாலும் அறியலாம். சங்ககாலத் தமிழர் வாழ்வியலின் இனிய சமயப் பொறை இன்றும் வேண்டற்

பாலது. சங்ககாலத் தமிழர் இறைவனை வழிபட்டனர். தாம் விரும்பியவற்றை அருளிச் செய்யுமாறு இரந்து வேண்டினர். எவற்றை வழங்குமாறு வேண்டினர்? பொருளினையா? பொன்னினையா? போகத்தினையா? இல்லை! இல்லை! ஏன்? இவை சங்ககாலத் தமிழர்க்கு வேண்டாதனவா? இவை வேண்டாத மானிடசாதி என்றும் இருந்ததில்லை. இனிமேலும் இருக்கப் போவதில்லை.

பின் ஏன் இவற்றை வேண்டவில்லை. இவை மூன்றும் மானிடர் தமது அறிவால், அறிவறிந்த ஆள்வினையால் படைத்துத் துய்க்க வேண்டியவை. தம் ஆற்றலுக்கு இசைந்த வற்றைத் தாம் ஆற்றாது இறைவனை வேண்டுதல் பிழை-குற்றம் என்ற நிலை, சங்க காலத் தமிழர் வாழ்வியலில் இருந்தது. அன்பினை இரந்து கேட்டனர்; அறத்தினை அருளுமாறு வேண்டினர்.

"......................யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல; நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருள் இணர்க் கடம்பின் ஒலிதாரோயே!

(பரிபாடல் 5 : 78–81)

என்னும் பரிபாடல் இதற்குச் சான்றாகும்.

சங்ககாலத் தமிழர் வாழ்வியல் நனி நாகரிகத்தில் சிறந்தது. எது நாகரிகம்? உடைகளின் எடுப்பா? முடிகளின் காடா? செந்நெற் கழனியில் சற்றும் தாழாது தலைநிமிர்ந்து ஆடும் பதர் நிறைந்த பயிரின் பகட்டா? சிறுசிறு செயல்களில் கொல் குறும்புகளில் பலர் கவனத்தை ஈர்ப்பதா? இவை இன்று கல்லா இளைஞரால் நாகரிகம் என்று கருதப் பெறும் பொய்ம்மைகளாகும்.

சமயச் சின்னங்களா? தோற்றங்களா? எவற்றை உடல் தாங்கி என்? உயிரல்லவோ தாங்கிச் சுமக்க வேண்டும்! உடல் தவமே உய்தி தருமா? உயிர்த்தவம் சிறிதுமில்லா இன்று, நாகரிகம் என்பது தோலைக்கூடத் தொட்டுப் பார்த்த தில்லை!

நாகரிகம் என்பது ஊன் கலந்து, உயிர் கலந்து உணர்வில் செழித்துக் காட்டுவது! சீலத்தில் வெளிப்படுவது! நற்றிணை, நாகரிகம் இது என்று எடுத்துக் காட்டுகிறது. நண்பன் ஒருவன் தம் கண் முன்னால் நஞ்சினைக் கலந்து உண்ணக் கொடுத்தாலும் உண்பர் நாகரிகமுடையவர். நஞ்சினை உண்பதோடன்றி நஞ்செனி நினையாது அமைதி பெறுவர். நஞ்சினைக் கொடுத்தோர்மீது பகை பாராட்ட மாட்டார். மேலும், அன்பினோடு மேவிப் பழகுவர்; நட்புக் கொள்வர். இத்தகைய வாழ்க்கையே நனி நாகரிக வாழ்க்கை.

> "முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
> நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்" (நற்றிணை 355 : 6–7)

என்று நற்றிணை சிறப்பித்துக் கூறும். இத்தகைய சங்கத் தமிழர் வாழ்வியலின் நாகரிகம் இன்றைய மானிட சாதியில் நிலவும் பகைப் புயலுக்கு மருந்து.

சங்க காலத் தமிழர் வாழ்வியல் மிகமிகச் சிறந்தது. சங்க காலத் தமிழர் வாழ்வியலில் பாடறிந்து ஒழுகும் பண்பாடிருந்தது. தன் கிளை செறாமல் பேணி வளர்க்கும் அன்பிருந்தது; பேதைமையைக் கண்டும், நோற்கும் அறிவிருந்தது; தூய காதல் சிறந்திருந்தது. அது வீரத்தின் விளை நிலமாக இருந்தது.

சங்க காலத் தமிழர் கொடை மடம் பட்டுப் புகழ் பெற்று விளங்கினர்; பொருள் போற்றினர்; இன்பம் துய்த்தனர்! அறநெறி கண்டனர்; இறைநெறி போற்றினர்.

இத்தகு சிறந்த சங்க காலத் தமிழர் வாழ்வியலைச் சிந்தை குளிர, செவி குளிர டாக்டர் போப்பையர் தமது நாலடியார் மொழி பெயர்ப்பில் போற்றிப் புகழ்கிறார்.

"தமிழ் மக்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்னும் ஊக்கமுள்ளவர்கள்; நன்னெறி பற்றி ஒழுக வேண்டுமென்ற விருப்பமுள்ளவர்கள்; தன்னலமற்ற உண்மையான அன்புள்ளவர்கள்; உயர்ந்த நோக்க முள்ளவர்கள் என்று போப்பையர் வியந்து பாராட்டிய அனைத்துப் புகழும் சங்க காலத் தமிழர்க்கே உண்டு.

**2**

# இனிய காண்க!

படைப்புக் கடவுள் நான்முகன் என்பது நல்லோர் நம்பிக்கை. ஆனால் உலகியலறிந்தோர் தத்துவ ஞானம் உணர்ந்தோர் நான்முகனால் இந்த உலகம் படைக்கப்பெற்ற தென்பதை ஒத்துக் கொள்வதில்லை. உலகு இயற்கை. இயற்கையாய இவ்வுலகம் இயங்கும் அச்சு, கடவுள்! உயிர்கள் படைக்கப் பெற்றன அல்ல. அவை நிலையானவை. தோற்றமும் மறைவும் உயிர்க்கு இல்லை; உயிரியக்கத்திற்கு இறைவன் தலைமை தாங்குகின்றான். வழி நடத்திச் செல்கிறான். அவன் தலைவன். உயிர்கள் அவன் வழிச் செல்வன. எங்ஙனமாயினும் அறிவிற் சிறந்த தத்துவ ஞானிகள் உலகு படைக்கப் பெற்றதல்ல என்று ஓர்ந்து உணர்ந்துள்ளனர். அவன் இந்த உலகத்தின் படைப்பாளன் நான்முகன் என்பதை ஏற்பதில்லை. இந்தக் கருத்து இன்று நேற்று தோன்றியதல்ல; வழி வழி தோன்றி வளர்ந்து வரும் கருத்து.

ஒரோ வழி பழங்காலத் தமிழன் நான்முகன் உலகத்தைப் படைத்தான் என்று ஏற்றுக் கொண்டாலும் அவனுடைய படைப்பில் புதுமையில்லை; பொதுமை யில்லை; நயத்தக்க நாகரிகமில்லை; பண்பாடில்லை. எனவே,

நான்முகனின் முறை பிறழ்ந்த படைப்பைப் பார்த்தாலே அவன் பண்பில்லாதவன் என்று தெரிகிறது என்று, நான்முகனை இடித்துக் கூறிய சான்றோனும் உண்டு. அது மட்டுமா? அந்தப் பண்பிலாளனாகிய நான்முகன் படைப்பு இன்னாதது. ஏ மனிதனே! நான்முகன் படைத்த படைப்பை மாற்று! அதுவே தலைவிதி என்று நம்பாதே! அதை அழித்து எழுது! இனியன காண முயற்சி செய்! என்று பழங்காலத் தமிழ்ப் புலவன் "பக்குடுக்கை நன்கணியார்" எழுச்சியுடன் மனித உலகத்தை இன்னாதன அழித்து இனியன காண்க! என்று ஆணையிடுகின்றான்! ஆற்றுப் படுத்துகின்றான்.

ஒரு வீட்டில் நெய்தற்பறை கேட்கிறது. நெய்தற் பறை இறந்த வீட்டில் கொட்டுவது. மரணம் அல்லது இறப்பு இயற்கையானது; தவிர்க்க முடியாதது என்ற நம்பிக்கையே மக்கட் சமுதாயத்தில் காலூன்றி நிற்கிறது.

திருவள்ளுவரும் கூட நேற்றிருந்தவர் இன்றில்லை என்ற பெருமை உலகிற்கு உண்டு என்ற கருத்தில் 'நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை பிறங்கிற்று உலகு' என்றார். இளங்கோவடிகளும் 'வையகத்தில் வரையறுத்த வாழ்நாள் யாரறிவார்?' என்றார். நற்றமிழ்த் திருஞானசம்பந்தரும் 'சா நாளும் வாழ்நாளும் யாரறிவார் நன்னெஞ்சே! என்றார்.

சீத்தலைச் சாத்தனாரும் 'பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்" என்றார். ஆனால் பக்குடுக்கையார் நெய்தற் பறை ஓசையைக் கேட்டு நெஞ்சு குமுறுகின்றார். ஏன் மரணம்? மரணத்தை எதிர்த்து மாற்ற முடியாதா? மாற்ற முடியும்! மாற்ற வேண்டும். ஒருவர் வீட்டில் சாப்பறையும் பிறிதொரு வீட்டில் மணப்பறையும் என்பது இயற்கைக்குமாறு என்பதே கவிஞனின் கருத்து. பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு மரணத்தை வெல்ல வேண்டும் என்று கூறியும் இன்னமும் மனித உலகம் செத்துக் கொண்டிருக்கிறது. ஒரு மனையில் நெய்தற்பறையும், பிறிதொரு மனையில் மணப் பறையும்

கேட்கிறது. வெளிப்பார்வையில் இந்தப் பறை முழக்கத்தின் வேறுபாடுகள் நம்மில் யாருடைய கவனத்தையும் கவர்வதில்லை. அய்யோ பாவம் ஒரோ வழி நம்முடைய கவனத்திற்கு வந்தாலும் அய்யோ பாவம்! ஆண்டவன் விட்ட வழி என்று அனுதாப வார்த்தைகளோடு முடிந்துவிடும். இது அறிவுக் கண்ணைத் திறப்பதில்லை. மரணமிலாப் பெருவாழ்வை அடைய முடியும் என்ற நம்பிக்கையைத் தருவதில்லை. அளவுக்கு மிஞ்சிய சகிப்புத் தன்மை துன்பத்தை, மரணத்தை எதிர்த்துப் பயனில்லை என்ற மூடக் கொள்கை காரணமாக வாழ்க்கையில் அறியாமை, ஆள்வினையின்மை, நொந்து நொந்து அணு அணுவாகச் சாதல் ஆகிய துன்பங்கள் வந்து சூழ்ந்தன. காலப் போக்கில் மனிதன் இயற்கையை எதிர்த்துப் போராடுவதற்குப் பதில் இயற்கைக்கு அடிமைப்பட்டுவிட்டான். ஒரு வீட்டில் மகிழ்ச்சியும், ஒரு வீட்டில் துன்பமும் என்ற வேறுபட்ட காட்சிகளை பக்குடுக்கையார் இயற்கையன்று என்கிறார். இந்த வேறுபாட்டைப் படைப்பித்தவன் ஒருவன் இருப் பானானால் அவன் பண்பில்லாதவன் என்று சாடுகின்றார்.

எல்லோர் வீடுகளிலும் இன்பம். எல்லோருக்கும் வாழ்க்கை என்ற சமநிலைப் பண்ணின் சுருதி, புறநானூற்றுக் காலத்திலேயே கூடிவிட்டது. ஆம்! சுருதிக்கு இசைந்து பாடுகின்ற மனிதனைத்தான் காணோம். ஆரூரர் வாழ்க்கை யிலும் பார்க்கின்றோம். ஆரூரர் அவிநாசிக்குச் செல்கின்றார். ஒரு வீட்டில் மகிழ்ச்சி வெள்ளம்! ஒரு வீட்டில் அழுகுரல். ஆரூரரின் அருளுள்ளம் அழுகுரல் கேட்கும் வீட்டை நோக்கி நடைபோடுகின்றது. ஆம்! அவர் நற்றமிழ் நாவலூரர்! தமிழ்ப் பண்பு அன்பின் வழிப்பட்டது. தமிழன் என்றும் வாழ்வாருக்கு மாரடிக்க மாட்டான். அவன் வாழ வேண்டிய வர்கள் பக்கம். இதுவே சிறந்த சமயத் தத்துவமுங்கூட, அவிநாசியில் மகனை இழந்த பெற்றோரின் அழுகை மாற்றப் படுகிறது.

உலகம் இன்னாததாக இருக்கலாம். ஆனால் அந்த இன்னாமையை அப்படியே தாங்கிக் கொள்ள வேண்டும் அல்லது தாங்கும் சக்தியற்ற கோழைகளாக இருப்பின் எல்லாவற்றையும் துறந்து எங்கேயாவது ஓடிவிடவேண்டும் என்ற கொள்கை தமிழ் வழக்கன்று. ஏன்? வாழும் நெறியு மன்று. துன்பம் இயற்கையாக இருக்கலாம். ஆனால் அவற்றை மாற்றுவதற்குரிய சக்தி நமக்கு உண்டு என்று நம்பாத மனித உலகம் வாழ்ந்தும் வாழாத உலகமே!

மனிதனின் தோற்றம் அவன் ஒரு மையொற்றுத் தாளைப் போல வாழ்ந்து முடிப்பதற்காக அல்ல. அவனிடத்தில் இயல்பாக ஒரு போர்க் குணம் உண்டு. அவனுடைய படைப்பின் நோக்கமே அவன் போராட வேண்டும் என்பதுதான். அவன், ஓயாது போராடித் தொடர்ந்து நான்முகனோடு படைக்குமாற்றலில் போட்டிபோட வேண்டுமென்பதுதான். அவன் மண்ணைப் படைத்தால் மனிதன் மாளிகைகள் படைக்க வேண்டும்; கனிதரு சோலைகள் படைக்க வேண்டும். நான்முகன், படைத்த மண்ணில் உவரும், களரும் இருக்கலாம்.

ஆனால், மனிதன் படைத்த கனிதரு சோலைகளில் இனிய கனிகளே உண்டு. அவன் கடலைப் படைத்தால், இவன் கலம் படைப்பான். ஆக இவன் தீமையை எதிர்த்துத் துன்பத்தை எதிர்த்து வறுமையை எதிர்த்து, அறியாமையை எதிர்த்துப் போராடப் பிறந்தவனே. ஆனால் அய்யகோ! அவன் இன்று பக்கத்திலுள்ள மனிதனோடு போராடிக் கொண்டிருக்கிறான். அவன் தேவையில்லாத சாதிகளை, வேலிகளை, எல்லைகளைக் கற்பித்துக் கொண்டு, உடன் பிறந்த சகோதரர்களோடு போராடிக் கொண்டிருக்கிறான். மனிதனின் போர் முனை திசை திரும்பி விட்டது. அதன் காரணமாக உலகம் ஈட்டும் செல்வத்தில் பெரும்பகுதி படைப் பெருக்கத்திற்குப் பயன்படுகிறது. நாலு பேர் கூடினால் நாற்பது போலீஸ்காரர் தேவைப்படுகின்றனர்.

எங்கே நாகரிகம்! நாள்தோறும் வளர்ந்து வரும் சிறைச் சாலைகளின் எண்ணிக்கை என்ன? பூட்டுக்கள் விற்பனைப் பெருக்கத்தின் உண்மை என்ன? சட்டத்தின் மேல் சட்டம் இயற்றிக் குவிக்கப்படுகின்றன. வழக்கறிஞர்கள் நாள்தோறும் எண்ணிக்கையில் பெருகி வருகின்றனர். இவையெல்லாம் எதன் அடையாளம்? உலகத்தில் இன்னமும் கணிசமாக மனித குலம் வயிறார உண்ண வழியில்லை, உடலார ஒண்டிப் படுக்க ஒரு குடிசையில்லை. ஆயினும் போர் ஓய்ந்ததா? என்ன! இன்றைய மனிதன் போராட வேண்டாத இடத்தில் போராடிக் கொண்டிருக்கிறான். பட்டி தொட்டி களில் கூடக் கட்சி சண்டை, கட்சிக் கொடிக் கம்பங்களின் சண்டைகள்! குத்து வெட்டு! கொலைச் செய்திகள்! மனிதன் எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறான். அவனுடைய போர்க்குணம் அதிகாரத்தைப் பற்றியதாகிவிட்டது.

வறுமையை எதிர்த்துக் கழனியில் போராட வருபவர் எத்தனை பேர்? "உற்பத்தித் திறனில் முடுக்கி விடப்பட்ட போர்க்குணம் இருக்குமானால் இன்று உலகம் பெற்றிருக்கும் செல்வத்தைப் போல பல மடங்கு செல்வம் பெருகும். ஆனால் மனிதனின் வியாபாரப் புத்தி செல்வ உற்பத்தி பெருகுமானால் விலை வீழுமே என்று அஞ்சுகிறது. மனிதனைத் திசை திருப்புகிறது. செயற்கைப் பஞ்சத்தை உருவாக்குகிறது. பொருளை உற்பத்தி செய்பவனிடம் இருக்க வேண்டிய விலை நிர்ணய உரிமையை வியாபார உலகம் பறித்துக் கொள்கிறது. ஊரெல்லாம் உண்ண உணவு கொடுத்தவன், தான் உண்ண உணவின்றிப் போராடு கின்றான். இது என்ன கொடுமை! நம்முடைய போர்க்குணம் மனிதனைப் பற்றியதாக இருக்கின்றவரை, மொழிகளை, சமயங்களை, அரசியலைப் பற்றியதாக இருக்கிறவரை மனித உலகம் வறுமையிலிருந்து மீளாது. அடிமைத் தனத்திலிருந்து மீளாது. அவர்களை நோதல், அழுதல், சாதல் ஆகிய எந்தக் கேட்டிலிருந்தும் யாராலும், இறைவனாலும்கூடக் காப்பாற்ற

முடியாது. அதனால் உலகத்தில் துன்பம் நிலையானதாகி விட்டது. மனிதனும் துன்பம் இயற்கையானது, துன்பத்தை மாற்ற முடியாது என்ற பைத்தியக்காரத்தனமான முடிவுக்கு வந்துவிட்டான். இது வாழும் நெறியன்று.

மனித உலகம் துன்பத்திலிருந்து விடுதலை பெற வேண்டுமானால், மரணத்திலிருந்து விடுதலை பெற வேண்டு மானால், அடிமைத்தனத்திலிருந்து பரிபூரணமாக விடுதலை பெற வேண்டுமானால், மனிதர்கள் துன்பம் இயற்கையன்று என்ற அறிவின் தெளிவைப் பெறவேண்டும். மனித உலகத்தின் கொடிய பகை அறியாமை. அறியாமையைக் கருவியாகக் கொண்டு ஆதிக்கக்காரர்களால் படைக்கப் பெற்ற வேற்றுமைகளை, எல்லைக் கோடுகளை மனிதன் நிலையானதெனப் பற்றிக் கொண்டுவிட்டான். அந்த எல்லைக் கோடுகளை, வேற்றுமைகளைப் பாதுகாப்பதி லேயே இன்றைய சக்தி முழுவதையும் செலவழிக்கின்றான்.

உலகத்தை ஒன்றுபடுத்தத் தோன்றிய சமய நெறிகளில் கூட அனுபவம் குறைந்து ஆர்ப்பாட்டம் பெருகிவிட்டது. "இவர் தேவர் அவர் தேவர்" என்று இரண்டாட்டுகின்ற தொழில் ரீதியான புரோகிதர்கள் பல்கிப் பெருகிவிட்டனர். அதனால் மனிதன் எப்படியோ போராடிக் கொண்டி ருக்கிறான். அவனுடைய போர்க்குணம் ஓய்ந்தபாடில்லை. போர் முனை மாறுபட்டிருப்பதே துன்பத்திற்குக் காரணம். ஆதலால் நாம் பக்குடுக்கையார் எடுத்துக்காட்டும் வழியில் போராட்டத்தைத் தொடங்கவேண்டும். துன்பம் இயற்கை யென்று நம்பக் கூடாது. அப்படியே துன்பம் இயற்கையாக இருந்தாலும் நாம், அதனை மாற்ற வேண்டும் என்ற நோன்பை மேற்கொள்ள வேண்டும். அன்றுதான் உலகின் வறுமை நீங்கும், வளம் கொழிக்கும், ஒருலகம் தோன்றும். "இன்னாதம்ம இவ்வுலகம் இனிய காண்க" என்ற ஆணையை மறவாதீர்! ஓர்ந்து உணர்க. உணர்ந்து செயற்படுக!

*ஓரில் நெய்தல் கறங்க ஓரில்*
*ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்*
*புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்*
*பைதல் உண்கண் பனிவார் புறைப்பப்*
*படைத்தோன் மன்ற அப் பண்பி லாளன்*
*இன்னா தம்ம இவ் வுலகம்*
*இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே!* (புறம்–194)

*பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்*
*கருமமே கட்டளைக் கல்.* (குறள்–505)

3

# யாதும் ஊரே! யாவரும் கேளிர்!

பழந்தமிழர் ஒருலகம் கண்டு வாழ்ந்தனர். அவர் களுடைய பரந்த மனப்பான்மை உலகறிந்த ஒன்று. கொடுத்துப் புகழ்பெற்ற கொடைவள்ளல் பாரி வாழ்ந்த பறம்பு நாட்டில் கணியன் பூங்குன்றன் என்ற சான்றோன் ஒருவன் தோன்றினன். கணியன் பூங்குன்றன் கனியமுதத் தமிழில் வல்ல கவிஞன். அழுத்த மனத்தினன், கணியன் பூங்குன்றன் தந்த கனியமுது, காலத்தை வென்று நிற்கும் கவிதை.

இன்று, அறிவியல் வளர்ந்திருக்கிறது. வளர்ந்த அறிவியல், நாடுகளை இணைத்திருக்கின்றது. ஆயினும் எனது நாடு உனது நாடு என்ற வேற்றுமைப் பேச்சுக்கள், எல்லைத் தகராறுகள் ஒழிந்தா போயிற்று? இல்லையே! நாளுக்கு நாள் வளர்ந்து வரும் அரசியல் அருளியலை ஆட்படுத்தித் தாம் மேம்பட்டு நாட்டுக்கும் நாட்டுக்குமிடையில், ஊருக்கும் ஊருக்குமிடையில், தெருவுக்கும் தெருவுக்குமிடையில் சமூகங்களுக்கிடையில், சமயங்களுக்கிடையில் வேலிகளைக் குறுக்குச் சுவர்களை எழுப்பிய வண்ணம் இருந்து கொண்டி ருக்கிறது! அய்யகோ! இந்த அவல நிலைமை பகையைப் பெருக்கிப் பசியைத் தோற்றுவித்திருக்கிறது. கவலையைத்

தோற்றுவித்துக் கண்ணியத்தை மறைத்திருக்கிறது. எங்கும் சிறை மயம். கணியன் பூங்குன்றன் காட்டுகின்ற வாழ்க்கை முறையினை மேற்கொண்டால் இந்த அவல நிலைமை மாறும். அம்மம்மா! எத்தனை பேருக்கு ஊர்ப் பாசம். ஊருக்காக – ஊரின் முன்னேற்றத்திற்காக சுண்டு விரலை அசைக்காதவர்கள்கூட எங்கள் ஊர் என்று வீறாப்புப் பேசுகிறார்கள். அரசுப் பணி மனையில் அலுவல் செய்கிற வர்களிடத்தில் ஊர்ப்பற்று எவ்வளவு வளர்ந்திருக்கிறது என்பதை உத்தியோக மாறுதல்கள் வரும்பொழுது கண்கூடாகக் காணலாம். கணியன் பூங்குன்றனார் "யாதுமூரே!" என்று வாழ வேண்டுமென்கிறார். யாதுமூரே! என்ற பெருநெறி பிடித்து ஒழுகின் பகை ஒடுங்கும்; போர் ஒழியும்.

யாதும் ஊரே! என்று கொண்டால் மட்டும் போதாது. பலர் பல நாடுகளில் குடியேறி வாழ்கின்றனர். யாதும் ஊரே! என்னும் அடிப்படையில் அல்ல. வாழ்க்கையின் நிர்ப்பந்தங் களே அடிப்படை. பல ஊர்களில் குடியேறி வாழ்பவர்கள் பலர் அந்த ஊரில் யாரோடும் உறவு கொள்ளாது தனித்தே வாழ்வர். அதனால், அது பிழைப்புக் கருதிய குடியேற்றமே தவிர, உறவு, பண்பாடு அடிப்படையில் தோன்றிய குடியேற்ற மல்ல. மனித குலத்தைச் சார்ந்தவர்கள் அனைவரையும் இனம், மொழி, சமயம், சாதி, அரசியல் வேறுபாடின்றி நேசிக்க வேண்டும். அன்பு கலந்து ஒன்றாகப் பழக வேண்டும். இன்றைய மனித வாழ்க்கை அசுரத் தன்மையுடையதாக உருவம் பெற்றிருக்கிறது. இன்று பலர் பழகுவதும் கூடப் பண்பாட்டிற்காக அல்ல. காரிய மயக்கு. வாழ்க்கையே வணிக மயமாகிவிட்டது. கணியன் பூங்குன்றன் காட்டும் பாதை 'யாவரும் கேளிர்!' என்பதாகும். மனித குலம் தமக்குள் காட்டிக்கொள்ளும் அன்பு வெள்ளத்தில், அரசியல் ஆணவ ஆதிக்கக்காரர்கள், வேறுபாட்டைப் பெரிதுபடுத்திய மத போதகர்கள் கட்டியுள்ள பிரிவினைக் கோட்டைகள் இடித்துத்தள்ளப் பெற வேண்டும். அன்றே உண்மையான மனித குலம் தோன்றும்.

மனிதன் இயல்பில் கூடி வாழப் பிறந்தவன். ஆனால், பிரிந்தே வாழ்கின்றான். மேலும் மேலும் பிரிந்துகொண்டே செல்கின்றான். ஏன்? அறிந்தோ அறியாமலோ, தெரிந்தோ தெரியாமலோ மனிதன் தன்னலமே நாடும் பொல்லாத குணத்திற்கு அடிமையாகிவிட்டான். அவனுக்குத் தன் உடைமை, தன் செல்வம், தனது மகிழ்ச்சி ஆகிய உன்மத்தங்கள் மேம்பட்டுவிட்டன. இவைகளுக்கு எதிராக யார் இருந்தாலும் வெறுக்கிறான். வெறுப்பை நியாயப்படுத்த 'ஊர்' என்ற மகுடம் சூட்டுகின்றான். அல்லது சாதி, மொழி, இனப் பாகுபாடுகளைத் தோற்றுவித்து அதன் சந்து பொந்துகளில் "தீமையைத் தந்தவர் இவர்; நன்மையைத் தந்தவர் அவர்" என்று கூறிப் பிரிவினையை வளர்ப்பதோடு மட்டுமின்றி, மனித குலத்தின் கேளிர்ப் பண்பைக் கெடுப்ப தோடன்றித் தீமையை எதிர்த்துப் போராடும் சக்தியையும் இழக்கின்றான். ஒருவர் பிறிதொருவருக்குத் தீமை செய்ய முடியாது. அதுபோலவே நன்மையையும் செய்ய முடியாது.

நன்றும் தீதும் அவரவர் வாழ்வின் வழி விளையும் விளைவுகளே! ஒரோ வழி பிறர் செய்வது போலத் தோன்றினாலும் பிறருக்குத் தீமையாயிருந்தனவற்றைக் காயும் தீமையாகவும், நன்மையாக இருக்குமாயின் தாம் மகிழ்ந்த நன்மையின் கைம்மாறாகவும் செய்யப் பெற்றதேயாம், எங்ஙனம் கதிரவனைச் சுற்றி ஞாலம் சுற்றுகிறதோ அது போலவே, அவரவர் செயல்களைச் சுற்றியே அவரவர் வாழ்வு வட்டமிடுகின்றது. இந்த அடிப்படைத் தத்துவத்தை நாம் புரிந்து கொண்டாலேயே இவர் நமக்குத் தீமை செய்தவர் என்று வெறுத்து ஒதுக்காமல் நட்புப் பூணும் பழக்கம் கால் கொள்ளும். இவர் நமக்கு நன்மை செய்தவ ரென்று புகழ்ந்து பேசி அஃ்.வழியில் தீமை தோன்ற வாய்ப்பு இருக்காது. இந்தப் பண்பாட்டு நிலை உருவாகின்ற பொழுதே மனித குலம் வெறுப்பினின்றும் விலகும்; ஆள்வினையில் ஈடுபடும்; அன்பிற் பிணைந்து வாழும்.

கி.V.5.

தீதைக் கண்டபொழுது நோதல் தீமையின் விளைவன்று. தீமையைச் சந்திக்கும் மனப் போக்கே அடிப்படை. தீமையையும் நோதலின்றி, நடுக்கமின்றி, ஏற்று அனுபவித்து மாற்றும் மனிதனே நேரிய முயற்சியுடையவன்; பண்பாளன். ஆக நோதலும் தணிதலும் கூட நன்மை தீமைகளின் விளைவல்ல. அவை சாரும் மனிதனின் இயல்பே. சிலர் நன்மை தீமைகளின் வழி உணர்ச்சிவசப்படுவர். ஆடி அலமருவர். பின் உணர்ச்சிப் பெருக்கிற்கு நியாயம் காட்டுவர். இவையெல்லாம் சாமார்த்தியமாக இருக்கலாம். ஆனால் வாழும் இயல்பன்று. நோதலும் தணிதலும் மனிதன் பெற்ற அடிப்படைப் பண்புகளின் வழிப்பட்டதேயாகும். இந்தப் பண்பாட்டில் ஊறி வாழ்பவர்கள் மத்தியில் 'யாவரும் கேளிர்' என்ற பண்பு விளங்கித் தோன்றும்.

இன்று மனிதனை வருத்தும் மிகப் பெரிய பயம் சாதலேயாகும். அணு அணுவாக வறுமையால், பிணியால் நாள்தோறும் அழிந்து கொண்டிருந்தாலும் அவன் உயிர் வாழ்க்கையின் மீது வைத்துள்ள காதல்! அம்மம்மா. அது அளப்பில்! 'சாதல்' வாழ்க்கையின் முடிவன்று; சாதலும் பிறத்தலும் சுழற்சியில் வருவது. இன்றுள்ள ஒவ்வொரு மனிதனும் இதற்குமுன் எத்தனை தடவை செத்தானோ? இனி எத்தனை தடவை சாவானோ. இப்படிப் பழகிப் போன சாதலைப் புதியது போலக் கருதி அஞ்சுவது ஏன் என்பது புரியாத புதிர். சாதல் புதுமையன்று என்ற நம்பிக்கைத் தோன்றினால் உயிர் வாழ்க்கையின் மேலுள்ள காதலால் கொலைகள் நிகழாது; அச்சமும் அடிமைத் தனமும் தோன்றாது. சாவையே சந்திக்கத் தயாராக இருப்பவர்கள் கோழைகளாகச் செத்துக் கொண்டிருப்பவர்களைவிட ஆயிரம் மடங்கு நல்லவர்கள். அது போலவே வாழ்தலை இனிது என்று நம்பி மகிழ்ந்து மயக்க முறுதலும் இல்லை. வாழ்க்கையில் வெறுப்புத்தோன்றிய இடத்து 'இது தீயது' என்று எண்ணி வெறுத்தலும் கூடாது. ஏன்? "நன்றும் தீதும்

பிறர் தர வாரா" மனித வாழ்க்கைச் செல்வம் வழி அவரவர் ஊழின் வழியேயாம்.

ஊழ் என்பது என்ன? பலர் கருதுவது போல அது கடவுளின் ஆணையா? எல்லோருக்கும் நடுவாக, நீதியாக, பொதுவில் நிற்கும் பரம்பொருள் ஒருவர்க்கு நன்மையும் பிறிதொருவர்க்குத் தீமையும், ஒருவர்க்குச் செல்வத்தையும் பிறிதொருவர்க்கு வறுமையையும், ஒருவர்க்குத் தளராத தளபதி பதவியையும் பிறிதொருவர்க்கு தளர்ந்து சாரும் கோழைத்தனத்தையும் கொடுப்பானா என்ன? அப்படி அவன் கொடுப்பானானால், அவனுடைய நடுநிலைத் தன்மை என்னாவது? பொதுமை இயல்பு என்னாவது? கடவுளுக்கும் ஊழுக்கும் நேரிடையாகச் சம்பந்தமில்லை. ஊழ் என்பது அவரவர் சிந்தனையும் செயலுமேயாகும். நேற்றையத் தீய சிந்தனை-நேற்றையத் தீய செயல் இன்றையத் தீயூழாக உருப்பெற்று அவற்றை உடையாரை வழி நடத்துகிறது அல்லது இழுத்துச் செல்கிறது. அதுவே தீயூழ்.

அதுபோலவே நேற்றைய நற்சிந்தனை, நேற்றைய நற்செயல் இன்றைக்கு நல்லூழாக உருக் கொள்கிறது. அவற்றை உடையாரை அது வழி நடத்துகிறது அல்லது இழுத்துச் செல்கிறது. ஆக, ஊழ் நல்ல வண்ணம் அமைய வேண்டுமானால் ஊழ் தோன்றுதற்குரிய அடிப்படைப் புலனாகிய சிந்தனையைத் திருத்துக. அவ்வழி நல்லுணர்வை நாடி வளர்த்துக் கொள்க. நல்லனவே எண்ணி, நல்லனவே செய்திடுக. நல்லூழ் தோன்றும். நன்றுடையானும் நாடித் துணை நிற்பன்.

பெரியோரை வியத்தல் கூடாது. அது எப்படி? பெரியோரை மதித்தல் என்பது வேறு. பாராட்டுதல் என்பது வேறு. போற்றுதல் என்பது வேறு. இவை வியத்தல் ஆகா. வியத்தல் என்பது இயல்பில்லாத ஒன்றைக் கண்டபொழுது காணப் பெறும் ஆச்சரியம். அதற்கே வியப்பு என்று பெயர்.

பெரியோரிடத்தில் காணப் பெறும் பெருமைக்குரிய இயல்புகள் இயற்கையிலும் இயற்கை. அந்தப் பெருந்தன்மை பிறப்பின் வழிப்பட்டது. அது செயற்கையன்று; எதிர்பாராதது மன்று. ஆதலால், பெரியோரை வியத்தல் கூடாது. பெரியோரை ஒரோ வழி வியந்தாலும் தவறில்லை. ஆனால், சிறியோரை இகழ்தல் ஒருக்காலும் கூடாது. சிறியோரை இகழ்தலால் அவர்கள் ஒரு பொழுதும் திருந்த மாட்டார்கள். இகழ்தலுக்கு மாறாகப் பைய அரவணைத்து எடுத்துத் திருத்திக்கொணர்தல் வேண்டும். ஒரு சிலர் சிறியோர் ஆனது அவர்கள் வேண்டுமென்றே ஆனதல்ல. அதுவும் ஊழின் வழி. ஊழ், சூழலின் வழி. எனவே, யாரை நொந்து என்ன பயன்? இதுவே கணியன் பூங்குன்றனார் தந்த கனிமொழி.

பெரியோரை வியந்து பாராட்டாது சிறியோரை இகழாது வாழின் பொதுமை நிலை மலரும். வெறுப்புற்ற பொழுது இன்னாது என்று வாளா இருத்தல் புலன்களை நெறி முறை பிறழச் செய்யும். இனியன, இன்னாதன என்று நினைந்து மகிழ்தலும் காய்தலும் பொறி புலன்கள் வயப்பட்ட வாழ்க்கை. ஆங்கே ஆன்மா இல்லை. அறிவு இல்லை. உணர்வு இல்லை.

பொறி, புலன்களை ஆண்டு, எங்கு ஆன்மா தலை தூக்குகிறதோ ஆங்கு இன்பம் தோன்றும். அந்த இடத்தில்தான் சாதல் பற்றிய அச்சம் அகலும். ஆன்மா தன்னை அறியும் தவநிலை தோன்றுகிறது. அந்த மோன நிலையில்தான் ஆன்மா தன்னையே நோக்கி அறிகிறது. நன்றும் தீதும் பிறரால் வருவன அல்ல; தானே படைத்துக் கொண்டவை என்று உணர்கிறது. இந்தப் பேருணர்வு முழுமையாகும்பொழுது யாதும் ஊரே! யாவரும் கேளிர்! என்ற பொதுமை வாழ்க்கை-அருளியல் வாழ்க்கை நமக்குக் கிடைக்கும். இதோ கணியன் பூங்குன்றனார் பாட்டு.

*யாதும் ஊரே யாவரும் கேளிர்*
*தீதும் நன்றும் பிறர்தர வாரா*
*நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன*
*சாதலும் புதுவது அன்றே வாழ்தல்*
*இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்*
*வானந் தண்டுளி தலைஇ யானாது*
*கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று*
*நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்*
*முறைவழிப் படூஉம் என்பது திறவோர்*
*காட்சியில் தெளிந்தனம் ஆகலின் மாட்சியில்*
*பெரியோரை வியத்தலும் இலமே*
*சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே:*

(புறம்–192)

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்"*

# 4

# பிசிராந்தையார் பெருவாழ்வு

சங்க காலக் கவிஞருள் நட்பிற்கு இலக்கணமாக விளங்கியவர் பிசிராந்தையார். பிசிராந்தையார் பழுத்த புலவர்: பண்பாளர்: நல்ல கவிஞர்: நன்னெறி உணர்த்திய சீலர்; புரவலரால் கவிதை பாடிப் போற்றப் பெறும் புகழினைப் பெற்றவர். கோப்பெருஞ் சோழன் பிசிராந்தை யாரின் பெருகிய நட்பினை ஆரத் துய்த்தவர்.

நட்பு என்பது எளிய சொல். ஆனால் அது அருமைப் பாடு நிறைந்த தவம். இருவர் அன்பினராதல் எளிதன்று. வாழ்க்கையில் அருமந்த நட்பினராக ஒருவர் கிடைத்தாலும் உலகை வென்று வாழலாம். நன்னட்புப் பெற்றார் துன்புறுதல் இல்லை. பிசிராந்தையார் நட்பையே தவமெனக் கொண்டு உயிரை ஓம்பினார். சாதாரணமான உலகியலில் நட்பு என்ற பெயரில் உடலோம்பும் வாழ்க்கையே நடைபெறும். உடலுக் குரியன வழங்க இயலாதபோழ்து நட்பு திரியும்; மாறுபடும். ஆனால் பிசிராந்தையார் என்ற பெருந்தகையின் நட்பு உயிரோம்பும் நட்பு. அதனால்தானே "செல்வக் காலை நிற்பினும், அல்லற்காலை நீற்றிலன்-மன்னே" என்று கோப் பெருஞ் சோழன் கூறுகின்றான்.

பிசிராந்தையார் காலத்தை வென்று நிற்கும் கருத்து அமுதத்தினைத் தந்தவர். வானவர் அமிழ்தம் மரணமிலா வாழ்வளிக்கும் மருந்தென்பர் புராணிகர். அஃது உண்மையோ, பொய்யோ நாமறியோம். ஆனால் பைந்தமிழ்ப் புலவர் பிசிராந்தையார் நரையின்றி, மூப்பின்றி வாழத் தந்துள்ள கருத்து அமிழ்தம் அனையது. காலத்தை வென்று வாழும் வகை காட்டுவது.

பிசிராந்தையார் உயிரை ஓம்பி வாழ்ந்தவர். அதனால் அவர் வாழ்க்கை நட்பிற் பொருந்தியிருந்தது. நட்பிற்கு உறுப்பாகிய கெழுதகைமை தழைத்திருந்தது. ஆரா அன்பினில் அவர் உயிர் தோய்ந்திருந்ததால், அவருடலில் ஓடிய செங்குருதித் துளிகளெல்லாம் அன்பின் மயமாகவே உருமாறியிருந்தன. நிறைந்த அன்புடையோர் என்றும் இளையராயிருப்பர். அவர்களை முதுமை தீண்டாது. நரையும் திரையும் நாடி வந்து பற்றா. பிசிராந்தையார் ஆண்டு பலவாகியும் இளமை குன்றாதிருந்தார்.

நரையின்றி வாழ்ந்த பிசிராந்தையாரைக் கண்டு வியப்புற்றோர் புலவரை வினாவுகின்றனர். ஆம்! முதுமையின் அடையாளமாகிய நரையை விரும்பி ஏற்போர் யார்? நரைத்த வெண்மயிரைக் கருமைச் சாயம் பூசி ஒப்பனை காட்டி உலகில் திரிவோர் எத்தனை பேர்? செய்தித் தாள்களைப் புரட்டினால் "நரையா? கவலைப்படாதீர்கள்!" என்ற விளம்பரங்களைப் படிக்கின்றோம். கேட்கின்ற உங்களில் பலருக்கும் கூட நரையின்றி வாழ விருப்பம்தானே! இதோ நரையின்றி வாழப் பிசிராந்தையார் வழி கூறுகிறார் கேளுங்கள்!

காதல் வாழ்க்கை அன்பின் வழிப்பட்டது. காதல் வாழ்க்கை இன்பந் தருவது. ஆனால் பலர் நினைப்பது போல எளிதன்று. ஒருவன் ஒருத்திக்கு உண்மையான கணவனாக அமைவதும், ஒருத்தி ஒருவனுக்கு உண்மையான

மனைவியாக அமைவதும் அருமையிலும் அருமை. கணவனாக நிறைவேற்றும் வாழ்க்கையிலும், மனைவியாக நிறைவேற்றும் வாழ்க்கையிலும் ஏராளமான உடற் கடமைகள்-உயிர்க் கடமைகள் அமைந்துள்ளன. அந்தக் கடமைகள் அனைத்தையும் இனிதே நிறைவேற்றுவதற்கு நிறைந்த குணங்கள் வேண்டும். நல்ல மனைவியைப் பெறாத கணவன், வாழ்க்கையில் இன்பத்தையும் பெறுதல் இயலாது. அமைதியையும் பெறுதல் இயலாது.

அதனாலன்றோ, பிற்காலக் கவிஞர் "சற்றேனும் ஏறுக்கு மாறாயிருப்பாளே யாமாகிற் கூறாமல் சந்நியாசம் கொள்" என்று பாடினார். திருவள்ளுவரும் வாழ்க்கைக்கு வாய்க்கும், மனைவி நலம் செய்பவளாக இருக்க வேண்டும் என்ற குறிப்பில், வாழ்க்கைத் துணை நலம் என்றே ஓர் அதிகாரம் அமைத்தார். வாழ்க்கைத் துணை நலம்! அவர், மனைவிக்குத் தந்த பெயர் வாழ்க்கைத் துணை! அவள்மூலம் பெறுவது நலம்!

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்றது வள்ளுவம். ஒரு சிறந்த மனைவி தன்னை, தன்னுடைய உடலை, உயிரை, உயிரினும் சிறந்த கற்பு நலத்தைத் தானே பாதுகாத்துக் கொள்கிறாள். ஆம்! ஒரு மனைவி தன்னைக் காப்பாற்றிக் கொண்டாலே தற்கொண் டானைப் பேண முடியும். தற்கொண்டானைப் பேணுதல் வள்ளுவர் கூறும் நுட்பமான வழக்கு. "தன்னைக் கொண்ட கணவனை, உணவு முதலியவற்றால் பேணுதல்" என்று பரிமேலழகர் கூறினாரேனும், அதுவே வள்ளுவத்தின் நிறைவான கருத்தன்று. கணவனின் உடல் நலத்தைப் பேணுதல் மனைவியின் சாதாரணக் கடமைகளில் ஒன்று. அதனினும் சிறந்த கடமை உயிர் நலம் காத்தல். கணவனின் கற்பு நலம் காத்தல்.

ஒரு மனைவி தனது கணவனின் வருவாய்க்குத் தக்க வாழ்க்கை நடத்தாது போனால் கணவன் கடன்படுவான். அவ்வழி பலரால் இகழப்படுவான். அதன் காரணமாக விலங்கியல் உணர்வுடையோர் கள்வராகவும், மனித உணர்வில் ஊசலாடிக் கொண்டிருப்போர் இரவலராகவும், உருமாற்றம் பெறுவர். ஆதலின் கணவனின் புகழ் காக்க விரும்பும் மனைவி வளத்தக்க வாழ்க்கையுடைய்வளாக அமைய வேண்டும்.

பால் உணர்வும், அவ்வழிப்பட்ட இன்ப விழைவும், நுட்பமான வாழ்வியற் கலைப்பாடு. இக் கலைப்பாடு நிறைந்த அருமைப்பாட்டுடன் கணவனை நிறை நல இன்பத்தில் பிணைத்து வைக்கத் தெரியாதவர்கள் சிறந்த மனைவியராதல் அரிது. அதன் காரணமாக வாழ்க்கையில் ஏமாற்றமுற்ற கணவன் பரத்தையர் வழி போகத் தலைப்படுவான். இதனால் வாழ்க்கை சொர்க்கமாவதற்குப் பதில் நரகமாகி விடும். ஒருவனுக்கு மனைவியே மாட்சிமையைத் தருபவள்.

கணவனுக்கு மாட்சிமை மட்டுமின்றி அவனைத் தெய்வமாக்கி, வீடும் தர வல்லவள் மனைவியேயாம். இதனை வள்ளுவம்,

> "பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்பு
> புத்தேளிர் வாழும் உலகு"

என்று பேசும், பிசிராந்தையாருக்கு வாய்த்த மனைவி மாட்சிமை மிக்குடையாள், அது மட்டுமா? மாட்சிமைமிக்க ஒரு மனைவி கிடைத்து, ஒரு கணவன் குடும்பம் நடத்துவானானால் ஆங்கு நன்மக்கள் தோன்றுவர். மக்கட்பேறு உலக இயற்கை. ஆனால் நன் மக்கட்பேறு சிறப்பியல் வழிப்பட்டதேயாகும். பெற்றோர் என்ற பெயரைத் தாங்குதல் எளிதன்று. ஆனால் பெற்றோர் என்ற தகுதியைப் பண்பாட்டினைக் காப்பது சிறப்புடைய கடமையாகும். பெற்றோர் தவறிழைப்பின் பல தலைமுறைகளின் வரலாறு

கெடும். ஆதலால் மக்கட்பேறு பெரிதன்று. நன்மக்கட் பேறே மனைமாட்சியின் நன்கலமாகும்.

பிசிராந்தையாரும், அவர்தம் வாழ்க்கைத் துணைவியும் ஒருவரையொருவர் விஞ்சிய பண்பினர். அவர்தம் வாழ்க்கையின் பயனாகத் தோன்றிய மக்கள் நல்லவராயிருப்பதற்குத் தடையென்ன?

பழங்காலத்தில் ஏவல் செய்பவர் தரங்குறைந்த சொற்களால் "வேலைக்காரன்" "கூலிக்காரன்" என்று அழைக்கப் பெற்றதில்லை. "இளையர்" என்ற இனிய வழக்கு இருந்திருக்கிறது. ஏவல் கொள்வது, ஏவல் செய்வது என்ற முறை அனுபவத்தின் வழி வந்ததேயாகும். ஏவல் கொள்வோர் ஆண்டில் அனுபவத்தில் மூத்தவராகவும், ஏவல் செய்வோர் அவர் வழி இயங்குபவராகவும் இருத்தல் வேண்டும் என்பதே மரபு. ஏவல் செய்வோர் ஏவல் கொள்வோரின் அனைத்து நலன்களுக்கும் அரணாக விளங்க வேண்டும். அத்தகைய ஏவல் செய்வோர் கிடைத்தாலே ஏவல் கொள்வோர் வாழ்க்கை இன்பமானதாகவும், பாதுகாப்புடையதாகவும் அமையும். அங்ஙனம் கிடைப்பதற்கு வாய்ப்பில்லையாயின் ஏவல் செய்வோர் இன்றியே வாழ்தல் இன்பந்தரும்.

ஏவல் செய்வோர், ஏவல் கொள்வோர் கருதும் இயல்பிலேயே, கருதும் இயல்பினில் சிறந்து விளங்க வேண்டும். ஏவல் செய்வோர், ஏவல் கொள்வோரிடையே அடிப்படை நோக்கங்களில் முரண்பாடுகள் இருத்தல் கூடாது. ஏவல் கொள்வோர் நினைப்பனவே ஏவல் செய்வோர் நினைந்து, ஏவல் கொள்வோர் நலனையே நாடி ஏவல் செய்வார், வாழ்க்கையை அமுதமாக்கும் மருந்தனையர். பிசிராந்தையாருக்கு வாய்த்த இளையோர் அத்தகையோர்.

வீட்டிற்கு அணிகலன் செய்யும் மனைவி, நல்லாள் ஆயினள். மக்கள் நல்லவராயினர். இளையர் இனியவராயினர். இவர்களால் வீடு விழுமிய நலன்கள் சிறந்ததாக அமைந்தது. நல்வாழ்க்கைக்கு இதுபோதாது. நாடும் நன்றாக இருக்க வேண்டும்.

நாட்டின் நடைமுறை அரசைச் சார்ந்தது. நாட்டில் நல்லன நடந்தாலும் சரி, தீயன நடந்தாலும் சரி, அதற்கு அரசே பொறுப்பேற்க வேண்டும். அரசு மறுக்கப் பெறாத – மறுக்க முடியாத அதிகாரத்தின் சின்னம். அந்த அரசு தன் அதிகாரத்தை நாட்டுமக்களை நல்ல முறையில் வாழ்விக்கப் பயன்படுத்த வேண்டும். அரசு நல்லனவே செய்யவேண்டும் அல்லன செய்யக் கூடாது.

பிசிராந்தையார் கண்ட அரசு, அல்லன செய்யாத அரசு, நல்லனவே செய்த அரசு. அதுமட்டுமா! உயிர்களைக் காத்த அரசு. பிசிராந்தையாருக்கு நாட்டிலும் கவலையில்லை வீட்டிலும் கவலையில்லை. நாடும் வீடும் நல்லவாறு அமைந்துவிட்டால் போதுமா? நாட்டுக்கும் வீட்டுக்கும் இடையில் ஒரு பொல்லாத உலகம் இருக்கிறதே! அந்த உலகமும் செப்பமாக இருந்தால்தானே நிறைநல்வாழ்வு கிடைக்கும். அந்தப் பொல்லாத உலகம் எது? அதன் பெயர்தான் ஊர் என்பது.

ஊர் என்பது ஊரினைச் சார்ந்த ஊராரைக் குறிக்கும். ஊரிலுள்ள தோட்டங்களுக்கு வேலியுண்டு. ஆனால் ஊராரின் வாய் வம்பளப்புக்கு வேலியில்லை. அவர்கள் நான்குபேர் கூடினால் எதையும் பேசுவர்; இல்லாததை உருவாக்கி விடுவர்; இருப்பதை மறைத்துவிடுவர். அம்மம்மா! ஊரார் என்ற இந்தப் பொல்லாத சமூகத்திற்கு அஞ்சி வீண் பெருமைக்காக – ஊர் மெச்சுவதற்காக வீட்டுச் சடங்கு களைக் கடன்பட்டுச் செய்து ஏழையரானோர் எத்தனை பேர்? ஏன்? ஊராரின் கொட்டம் அதிகமானதற்கு

அடையாளமாக "உடம்பிற்காக இல்லாது போனாலும் ஊருக்காகவாவது வேண்டாமா?" என்ற பழமொழியே தோன்றிவிட்டது. நான்குபேர் என்ன நினைப்பார்கள் என்ற கவலை எத்தனை மனிதரை அரித்து அழித்து இருக்கிறது. எத்தனை தூய காதலர்களை அலர் தூற்றி அயர்வுக்கும் கவலைக்கும் ஆளாக்கி அழித்திருக்கிறது. தற்கொலையைத் தழுவிக் கொண்டவர்கள் எத்தனைபேர்? ஒரு நல்ல ஊர் - சமூகம் அமைவது அவ்வளவு எளிதன்று.

ஊர் என்றால் நாலுமறிந்த நல்ல பெரிய மனிதர்கள் நாலுபேராவது இருக்க வேண்டும். அப்பொழுதுதான் உயிர் வாழ்க்கை உவப்புடையதாக அமையும். ஊரிலுள்ளோரில் பலர் கல்வியறிவில் சிறந்தவர்களாக விளங்க வேண்டும். புலனழுக்கற்ற அந்தணாளர்களாக விளங்க வேண்டும். அவர்கள் தன் முனைப்பு அற்றவர்களாகவும் அடக்கமும் பணிவும் உடையவர்களாகவும் அமையவேண்டும். அத்தகைய ஊர் நன்நடை நல்கும் ஊர். ஒழுக்கத்திற்கு உருக்கொடுக்கும் ஊர். பிசிராந்தையார் வாழ்ந்த ஊர் அத்தகைய நல்ல ஊர். ஆதலால் ஆண்டு பலவாக நரையின்றி வாழ்ந்தேன் என்று பெருமிதத்துடன் கூறுகின்றார் பிசிராந்தையார்.

மருத்துவ உலகில் "பஞ்ச கல்பம்" என்று, ஒன்று கூறுவர். இந்தப் பஞ்ச கல்ப மருந்தை உண்பவர் நெடிது வாழ்வது என்பது நம்பிக்கை; அதுவும் ஆராய்ச்சிக்குரியது. ஆயினும் பிசிராந்தையார் தந்துள "பஞ்ச கல்பம்" கிடைத்திடின் காலத்தை வென்று வாழலாம். என்றும் இளைஞராக வாழலாம். இது முக்காலும் உண்மை.

பிசிராந்தையார் தந்துள பஞ்ச கல்பத்தை மீண்டும் ஒரு தடவை சிந்தனை செய்யுங்கள். மனைவியும் மக்களும் மாட்சிமைமிக்க குணங்களுடையவர்களாகத் திகழவேண்டும். நாம் கருதுவதையே கருதிச் செயலில் துணை நிற்கும் ஏவல்

செய்வோர் வேண்டும். அரசு நல்லது அல்லாதன செய்யாததாக அமையவேண்டும். ஊரில் சான்றோர் பலர் வாழ வேண்டும். பிசிராந்தையார் குறிப்பிடும் பஞ்சகல்பம் உடலுக்கும் பாதுகாப்புத் தருவது. உயிருக்கும் பாதுகாப்புத் தருவது. பிசிராந்தையார் காட்டியுள்ளது போன்ற வீடுகளை, நாட்டு அரசை, ஊரைக்காண முயற்சி செய்வோமாக!

*"யாண்டுபல வாகநரையில வாகுதல்*
*யாங்காகிய ரென வினவுதி ராயின்*
*மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்*
*யான் கண்டனையர் என் இளையரும்; வேந்தனும்*
*அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை*
*ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச்*
*சான்றோர் பலர்யான் வாழும் ஊரே*

(புறம்–191)

# 5

# நில்வுலகம் நிலைத்தற்கு அடிப்படை

புறநானூறு புறத்துறைபற்றித் தோன்றிய இலக்கியம். ஆனாலும் ஆங்கு அகநிலைபற்றிய அறநெறிச் சார்புடைய அறவுரைகள் இல்லாமலில்லை. புறநானூற்றில் சமூக நெறிவழி முறைகள் வலியுறுத்தப்படுகின்றன. கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதிக்குப் புரவலனாகவும், புலவனாகவும் விளங்கிய பெருமைஉண்டு, மன்னன் இளம்பெருவழுதி உலகியலின் நடைமுறை "மன்னர் முடியில் இல்லை; படையில் இல்லை; பண்பாட்டில்தான் நிற்கிறது" என்று கூறிய பாடல் உலக இலக்கியங்களிலே சிரஞ்சீவித் தன்மை வாய்ந்தது ஆகும்.

இந்நிலவுலகம் இருந்தது; இருந்துகொண்டிருக்கிறது. இனிமேலும் இருக்கும்; இந்நிலவுலகத்தின் நிலையான தன்மைக்கும் அதன் வளர்ச்சிக்கும் என்றும் இடையீடு இல்லை. இருக்கவும் முடியாது. நிலவுலகத்தின் உயிர் வாழ்க்கை ஆற்றொழுக்கனையது. இங்ஙனம் இடையறாது உலகியல் இயங்கிக்கொண்டிருப்பதற்கு அடிப்படை எது? ஆதாரம் எது?

இந்த நிலவுலகம், பல வல்லரசுகளைக் கண்டதுண்டு. ஆனால் அந்த வல்லரசுகளும் கூட நிலவுலகத்தைப் போல

நிலையாக அமையவில்லை; வீழ்ந்துபட்டன. வரலாற்றுப் புத்தகத்தில் சில பக்கங்களை அடைத்துக் கொண்ட பெருமைதான் வல்லரசுகளுக்கு உண்டு. இந்த நிலவுலகத்தை எடுத்துக் கவிழ்த்து விடுவதைப் போன்று நிகழ்ந்த கொடிய போர்கள் எத்தனை? எத்தனை? நிலவுலகத்தின் அணியென விளங்கும் ஆறுகளைச் செந்நீரால் கலக்கிய போர்கள் நிகழ்ந்ததுண்டு. ஆனாலும் நிலவுலகம் தனது நிலையான இயல்பை இழந்துவிடவில்லை. அழிந்துவிடவும் இல்லை. ஆறுகளோடு போட்டி போட்ட செங்குருதி ஆறுகள் சில நாட்களே ஓடின. ஆனால் வளமூட்டும் பேராறுகள் ஓடிக் கொண்டேயிருக்கின்றன.

ஆக அரசுகளால் நிலவுலகம் வாழவில்லை. காவியங்களால்தான் நிலவுலகம் வாழ்கிறதா? இல்லை! இல்லை!! கடவுளால்தான் நிலவுலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறதா? இல்லை. இல்லை! கடவுள் தன்மையால் உலகம் வாழ்ந்தது; வாழ்ந்து கொண்டிருக்கிறது. இனிமேலும் வாழும், கடவுள் தன்மை! அப்படியென்றால் என்ன? சமயக் கோலங்களா? பக்தி உணர்ச்சியா? இல்லை. இல்லை! இவை கடவுள் தன்மையைப் பெறும் சாதனங்களே தவிர இவையே கடவுள் தன்மை ஆகா. அங்ஙனமாயின் கடவுள் தன்மை என்பதுதான் என்ன?

உயிர்க்குலம் கூடி உண்டு மகிழ்ந்து வாழவேண்டும். கூட்டு வாழ்க்கை கோபுரம் போல உயர்வைத் தரும். தனிமை வாழ்க்கை அசுர வாழ்க்கை, அருளியலுக்கு முற்றும் புறம்பானது. அதனாலன்றோ "பகுத்து உண்க" என்று வள்ளுவம் ஆணையிட்டது. தாயுமானாரும் "காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்" என்றார். பிறர் பசிக்க ஒருவர் உண்ணும் வாழ்க்கை நாகரிகமற்ற வாழ்க்கை; இத்தகைய தீய பழக்கம் உடையவரிடம் அன்பு மலராது. அறநெறியும் கால் கொள்ளாது. அருளியலும் சாராது; இத்தகையோர் கோடி அருச்சனை செய்தாலும் அவர்களுக்கும் கடவுளுக்கும்

சம்பந்தமில்லை. புண்ணிய மூர்த்தியாகிய இறைவன் இவர்களைப் "பொக்கு" எனப் புறத்தே ஒதுக்கித் தள்ளுவன். வையகம் உண்ண உண்ணுதலே அருளியல் வாழ்க்கை. கடவுள் தன்மை.

வெறுப்பு, ஒரு நற்பண்பல்ல, தீய பண்பு; விருப்பும் வெறுப்பும் ஆட்சி செய்யும் மனத்தில் தன்னலமே ஆட்சி செய்யும். ஆங்கு, அன்பு ஊற்றுக்கண் அடைபடும். அதன் காரணமாகச் சிந்தனையிலும், செயலிலும் அறமல்லாதன தோன்றும். யாரோடும் வெறுப்புக் கொள்ளுதல் கூடாது. அதனால் தீயவர்களையும் வெறுக்கக் கூடாதா? என்ற வினா எழலாம். தீயவர்களையும் கூட வெறுத்து ஒதுக்குவதால் அவர்கள் மாறப் போவதில்லை. மாறவும் முடியாது.

ஒருவரிடத்தில் தீமை என்பதும் அவராக எடுத்துக் கொண்டது அல்ல. தீமை என்று கருதி அறிந்துகொண்ட பிறகு எடுத்துக்கொண்டது அல்ல. பிறப்பின் சார்பும், சூழ்நிலையும் அதற்குக் காரணங்கள். ஆதலால் தீயோரை வெறுத்துப் பயனில்லை. தீமையை வெறுக்க வேண்டும். தீமையை வெறுத்து, அத்தீமையினின்றும் அதில் சிக்கியவர் களைப் பாதுகாக்க வேண்டுமென்றால் தீயன கொண்டு ஒழுகுவாரிடம் நமக்குக் கங்கு கரையற்ற அன்பும், பாசமும் பரிவும் வேண்டும். தீமையைக் கூட நேரடியாக வெறுத்துப் பயனில்லை. தீமை ஒருவகைக் காரியமே!

தீமை தோன்றுதற்குரிய காரணங்கள் பொருந்தாச் சமூகப் பழக்க வழக்கங்களேயாகும். உத்தரவாதமில்லாத வாழ்க்கை முறையும், சமூக நியாயங்களினின்றும் மாறுபட்ட நீதிநெறிக் கோட்பாடுகளாலும், சமூக சமநிலைக் கொள்கை முரண்பாட்டினாலும் வெறுப்புத் தோன்றுகிறது. இக் காரணங்களை மாற்றினால் தீமை தானே குறையும். அதனால் யாரோடும் வெறுப்புக் கொள்ளாது, ஒத்தார்,

மிக்கார், தாழ்ந்தார் என்ற வேறுபாடின்றி வெறுக்காது அன்பு காட்டிப் பழகுதல் கடவுள் தன்மை.

உயிர்க் குணமே ஓயாது தொழிற்படுவது. உயிர்ப்பு என்பது உண்ணல் உறங்கலால் மட்டும் புலப்படுவதன்று. உயிர்ப்பின் உண்மையான அடையாளம் அறிவறிந்த ஆள் வினையில் ஓயாது ஈடுபடுதல். துன்பம் அச்சத்திற்குரியது தான். ஆனால் அஞ்சுவது பேதைமை. துன்பத்திற்கு அஞ்சாமல் துன்பத்திற்குரிய காரணங்களைக் கண்டு அஞ்சுதல் அறிஞர் தொழில்.

துன்பம் சோர்வைத் தரும். சுறுசுறுப்பைக் கெடுக்கும். தாழாது உயற்றும் உயரிய முயற்சிக்கு இடையூறு செய்யும். கவலையைத் தந்து கடு நரகத்தில் ஆழ்த்தும்; அழச் செய்து அழிக்கும், இவை கடவுள் தன்மைக்கு மாறானவை. கோழைகளும், அடிமைகளும், சோம்பேறிகளும், அஞ்சி அழுபவர்களும் ஆண்டவன் சந்நிதியைக் கெடுக்கும் பாவிகள்! இவர்கள் சைத்தானின் பூசாரிகள்; பாதுகாவலர்கள். "அஞ்ச வருவது யாதொன்றுமில்லை. அஞ்சுவதும் இல்லை" என்று அஞ்சாமல் அயராமல் ஆள்வினையில் ஆர்வலராகி ஓயாது முயற்சியில் ஈடுபடும் பண்பே கடவுள் தன்மை!

பிறரிடத்து அச்சத்தைத் தோற்றுவிக்கும் வாழ்க்கை நன்றன்று. கொடிய விலங்குகளைக் கண்டே உயிர் வர்க்கம் அஞ்சலாம். அஃது இயற்கை. ஆனால் அந்தக் கொடிய விலங்குகளைக் கூடப் பிடித்துப் பழக்கப்படுத்தினால் அவை அச்சம் தருவதில்லை. மாறாக மகிழ்ச்சியும் தருகின்றன. ஆனால், ஆறறிவு படைத்த மனித உலகம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகப் பகுத்தறிவைப் பெற்றிருந்தும், வேதங்கள் பலவற்றைப் பெற்று ஓதியிருந்தும், நிலவுலகத்தின் பரப்பில் குறிப்பிடத்தக்க அதிக அளவு பரப்பைக் கோயில்களுக்கு ஆக்கியும் என்ன பக்குவப்பட்டிருக்கிறது? மனிதன்

இன்னமும் பதப்படுத்தப் பெறாத கச்சாப் பொருளாகவே இருக்கிறான்.

மனிதனுடைய மிரட்டல் ஓய்ந்ததா? உருட்டல் ஒடுங்கிற்றா? அரட்டல் அடங்கிற்றா! ஒன்றும் இல்லை. தன்னைக் கண்டு பிறர் அஞ்சுவதையே பெருமையென்று கருதுகின்ற ஒரு போலி நாகரிகம் உருவெடுத்து வளர்ந்துள்ளது. இது சராசரி மனித வாழ்க்கைக்குக் கூட முரணானது. பிறர் கண்டு அஞ்சத் தகுந்தவைகளுக்குத் தாமும் அஞ்சி, அவற்றினின்றும் விடுதலை பெறுதலே கடவுள் தன்மையைச் சார்ந்த வாழ்க்கை.

நக்கீரர் "பலர் புகழ் ஞாயிறு" என்பார். பெரும்பாலும் இலக்கிய உலகத்தில் புகழுக்குரியது ஞாயிறே என்று பாராட்டப் பெறுகிறது. அடுத்து இறைவன் "பொருள் சேர் புகழ்" என்று பாராட்டப் பெறுகின்றான். புகழ் மிக மிக உயர்ந்தது. அது எளிதில் கிடைப்பதன்று. இன்று உலகியற் பொருட்களுக்குப் "போலி" உண்டாகியிருப்பதைப் போலவே, புகழிலும் போலி உண்டாகி வளர்ந்து வருகின்றது. ஏன்? இன்று புகழ் ஒரு விளம்பரப் பொருளாகிவிட்டது.

புகழ் செய்திப் பத்திரிகையில் பெயர் வருவதா? இல்லை! இல்லை!! "மாப்பிள்ளை விநாயகர் சுருட்டுப்" பெயரும்தான் பத்திரிகையில் வருகிறது. குற்றக் கூண்டில் நின்று கடுந்தண்டனை பெற்றவன் பெயருந்தான் பத்திரிகை களில் வருகிறது. இவையெல்லாம் புகழாமோ?

இன்றைய சமுதாய அமைப்பில் வலிமையற்றோர், வலிமையுடையோரைச் சார்ந்து வாழ்தல் தவிர்க்க முடியாத தாகிவிட்டது. இங்ஙனம் சார்ந்து வாழ்பவர்கள் தாம் சார்ந்திருப்பவர்களைப் புகழ்ந்து கூறிடும் வார்த்தைகள்... அம்மம்ம! ஆயிரம்! ஆயிரம்!! எல்லாம் உங்களால்தான். நீங்கள் இல்லாவிட்டால் எங்கள் கதி என்னாவது? உங்கள் காலத்தில்தான் இவையெல்லாம் நடக்கின்றன. கர்ண

னாவது? பாரியாவது? இன்று உங்கள் கொடையைப் பார்த்தால் அவர்கள் வெட்கிப் போவார்கள்!" என்றெல்லாம் துதி செய்து, முகஸ்துதியையே மூலதனமாக்குவார்கள். முகஸ்துதியில் மயங்கிச் சில காசுகளை வாரிக் கொடுத்துப் புகழ்ச்சியைப் பெறுதலும் புகழாமோ?

மலரினின்றும் மணம் முகிழ்ப்பதைப் போல ஒருவனுடைய வாழ்க்கையினின்று புகழ் முகிழ்க்க வேண்டும். உண்மையான புகழினைப் பெறுதலே வாழ்க்கையின் நோக்கம். அதனாலன்றோ திருவள்ளுவர் 'புகழ்' என்ற ஒரு தனி அதிகாரம் ஓதினார். புகழ் எளிதில் கிடைப்பதன்று. எளிதில் கிடைப்பதும் புகழன்று. அது அப்பட்டமான முகஸ்துதி: வியாபாரம்: வேசித்தனம். இத்தகைய புகழால் வையகம் வளராது; வாழாது.

புகழ் தன்னல மறுப்பில் பிறர் நல வேட்கையில் தோன்றுவது. உயிரையும் வெறுத்த உயர் அறநெறி வாழ்க்கையில் புகழ் தோன்றும். அத்தகைய புகழுக்கு உயிரையும் பணயம் வைத்து வாழ்தலே கடவுள் தன்மை யுடைய வாழ்க்கை!

பழிக்கப்படுவது பழி; புகழுக்கு எதிரானது பழி; பழி சைத்தானின் கோட்டை! பேய்களின் கூடாரம்! சராசரி மனிதனால் கூட பழியில் சிக்கி வாழும் வாழ்க்கை வெறுக்கத் தக்கது. ஆனால் இன்று புகழாவது? பழியாவது? எப்படியாவது வாழ்ந்தால் சரி என்ற தவறான கொள்கை மேலோங்கி வருகின்றது.

உயிரைத் தாங்க வழங்கிய உடல், உயிரை நலிய வைக்கும் பொதி சதையைச் சுமந்து கொண்டு, வீணில் உண்டு, பழியைச் சுமந்து செத்துக் கொண்டிருக்கும் வேடிக்கை மனிதர் பலரைக் காண்கின்றோம். அவர்கள் தற்செயலாக மனிதராகப் பிறந்துவிட்டனர். அவர்களுக்கு எல்லாம் வாணிகமே! ஆனால் உயர் புகழை விரும்புபவர்கள்

மறந்தும் தம்மைப் பழி தீண்டாதவாறு தம்மைப் பாதுகாத்துக் கொள்வர்.

உலகமே அவர்களுக்குக் கிடைப்பதாக இருந்தாலும் கடவுள் தன்மையுடைய புகழை விரும்பாமல் பழியை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளார்கள். பழியுடன் வரும் எதனையும் ஏற்கார். இதுவே கடவுள் தன்மை!

உண்மையான புகழ் அயர்வினை அகற்றும்; ஆள் வினையைத் தரும். உலகியலை ஓயாது தொழிற்படுத்த உறுதுணை செய்யும். வாழும் உலகிற்கு அயர்வு முதற்பகை. அயர்ச்சி அறிவைக் கெடுக்கும்; ஆர்வத்தைச் சிதைக்கும்; உழைப்புத் திறனை உருக்குலையச் செய்யும். ஒழுக்கத்தைக் கெடுக்கும். மயக்கத்தைத் தரும். முடிவாக இம்மையில் கொடுந் துன்பத்தையும், மறுமையில் நரகத்தினையும் தரும்.

அயர்வினைச் சார்ந்தோரை ஆயிரம் கடவுள் வந்தாலும் காப்பாற்ற முடியாது. அறிவறிந்த ஆள்வினை யுடையார் அயர்ச்சி உறுதலிலார். அவர்களைத் தோல்வி களோ, துன்பங்களோ, இகழ்ச்சியோ, அயர்வினை அடைந்திடும்படி செய்ய முடியாது. பெற்ற தோல்விகளைப் படிப்பினையாக்கி, வெற்றிப் படியாக்கி ஓயாது பயணம் செய்வர். இங்ஙனம் வாழ்பவர்தாம், உண்மையான கடவுளின் பக்தர்கள். நில உலகத்தின் இயக்கத்திற்கு உயிர்ப்பாக விளங்குபவர்கள்: இதுவே, அயர்விலா வாழ்க்கையின் கடவுள் தன்மையின் சாரம். அதனாலன்றோ **"என் கடன் பணி செய்து கிடப்பதே"** என்ற சிறந்த கோட்பாடு தோன்றலாயிற்று. அயர்விலா வாழ்க்கை அறனைத் தழுவிய அருளியல் வாழ்க்கை! அதுவே கடவுள் தன்மை!

தனியே உண்ணாதவராக, வெறுப்பிலராக, சோர்வில ராக பிறர் அஞ்சுவது அஞ்சுபவராக உயிரைக் கொடுத்தும் புகழ் வேட்பவராக, பழியைச் சுமக்காதவராக அயர்விலாதவராக விளங்கி வாழ்தலே, வாழ்வாங்கு வாழ்தல். இத்தகு இனிய சிறந்த பண்புகள் இருப்பினும் போதாது.

அவர்கள் ஓயாது முழு முயற்சியில் ஈடுபடவேண்டும். முயற்சி யென்பது வான்மழையை நிகர்த்தது. முயற்சி உடையாரையே முன்னவன் வாழ்விக்கின்றான். முயற்சியுடைய வாழ்க்கை ஒரு தவம். அதுவும் தனக்கென முயலாது பிறருக்கென முயலும் பண்பு சாலச் சிறந்தது.

இன்றைய மனிதனோ தனக்கெனவே முயல்கின்றான். தனக்கு ஆதாயம் இல்லாததை அவன் செய்ய விரும்புவ தில்லை. அதனாலேயே உலகத்தில் துன்பம் வளர்ந்து வருகின்றது. தனக்கென வாழாது பிறருக்கென முயலுதலே உயரிய கடவுள் தன்மை! "குறியொன்றும் இல்லாத கூத்து" என்று இறைவன் ஞானக் கூத்தைக் குறிப்பிடுவர். வாழ்வித்து வாழ்தலும், மகிழ்வித்து மகிழ்தலுமே தவம். இத்தகைய சிறந்த தவம் செய்வோர் சிலராவது உலகில் தொடர்ந்து வாழ்ந்து வருவதால்தான் இந்த உலகம் இருந்தது; இருந்து கொண்டி ருக்கிறது. இனிமேலும் இருக்கும்.

நிலையான உலகியல் இன்பமுற அமைந்து விளங்க நாம் அனைவரும் இந்த இயல்புகளைப் பெற்று உலகியலுக்கு ஓயாது இயக்கத்தைத் தருவோமாக! வையகத்தை வாழ்வித்து வாழ்வோமாக!

*உண்டாலம்ம இவ் வுலகம் இந்திரர்*
*அமிழ்தம் இயைவது ஆயினும் இனிதெனத்*
*தமியர் உண்டலும் இலரே! முனிவிலர்*
*துஞ்சலு மிலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்*
*புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்*
*உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்*
*அன்ன மாட்சி அனைய ராகித்*
*தமக்கென முயலா, நோன்றாட்*
*பிறர்க்கென முயலுநர் உண்மை யானே!*

*குணநலம் சான்றோர் நலனே பிறநலம்*
*எந்நலத்து உள்ளதூஉம் அன்று.* குறள்

# 6

# வாழ்க்கை நெறி

புகழ்! – அதுவே மனித வாழ்வின் இலக்கு. புகழ்பட வாழாத வாழ்க்கை, புழுவனைய வாழ்க்கை. ஆனால், எது புகழ்? வழிவழியாக வரும் குடும்பத்தின் சார்பாக வருவது புகழா? வழிவழி பெற்ற வளத்தின் துணைகொண்டு பெறுவது புகழா? இச்சைபேசி இரைப்பை நிறைப்போர் பிழைப்பு கருதி முகமனாகக் கூறுவது புகழா? இல்லை! இல்லை! தன்னுடைய முயற்சியால் செய்த சோதனைகள் மூலம் பெறுவதே புகழ்! மறக்கும் இயல்புடைய மனித சமுதாயத்தில் அம் மக்கள் மறக்கமுடியாமல் நினைவுகூறத்தக்க வாழும் வகையதே புகழ். மனிதகுல வரலாறு என்ற பேராற்று வெள்ளத்தால் மூடி மறைக்கப்பெறாமல் அல்லது இழுத்தெறியப் பெறாமல் அந்த வெள்ளத்தில் எதிர் நீச்சல் செய்து காலகாலத்திற்குக் காலூன்றி நிற்க வல்லாரே உண்மையில் புகழ் பெற்றோர் ஆவர்.

ஒத்த கொள்கையுடையோர் புகழ்தல் இயற்கை. உடனுறைந்து வாழ்கின்றவர்கள் புகழ்தலும் தவிர்க்க முடியாதது. அன்பால், பரிவால், பாசத்தால் பிணைக்கப் பட்டவர்கள் புகழ்தல் இயற்கை. அன்பினால் பிணைக்கப் பட்டவர்களின் கண்ணுக்குக் குற்றங்கள் தெரியா.

குணங்களே தெரியும். ஆதலால், அன்பில் ஆர்வார் புகழ்தல் புகழேயானாலும் நூற்றுக்கு நூறு புகழாகாது. உண்மையான புகழ், பகைவரால் புகழப் படுவதேயாகும். ஆனால், இன்று வளர்ந்து வந்துள்ள சமுதாய மனப்போக்கில் பகைவரால் புகழப்பெறுதல் எளிதெனத் தோன்றவில்லை. ஒருவருக் கொருவர் பகைவராயிருப்பதிலும்கூட நெறி உண்டு; முறை உண்டு. நெறி தவறிய பகை உணர்ச்சி பண்பாடு ஆகாது. அதுமட்டுமல்ல, அதற்குப் பகை என்றும் பெயரில்லை. கயமை என்றே சொல்லவேண்டும். உண்மையான பகை, இலட்சியங்களின் பாற்பட்டதாக இருக்கும்; அவரவர் தம் இலட்சியத்தை அடைவதில் போட்டி இருக்கும். அவ் வழிபட்ட பகையே பகை. அந்தப் பகைமை உயர்வில் போட்டி போடுமே தவிர, இகழ்ச்சியில் போட்டி போடாது. அந்தப் பகைமை களத்தில் சந்திக்குமே தவிர அங்கு மறைவான சூதுக்கு இடமில்லை. விவாதம் இருக்குமே தவிர வசை இருக்காது. அப்படிப்பட்ட பகைவர் ‘கண்ணின்று கண்ணறச் சொல்வர். ஆனால் ‘முன் இன்று பின்’னோக்கும் சொல்லைச் சொல்லமாட்டார்கள். ஒருவருடைய உரிமைக்கும், உடைமைக்கும், கல்விக்கும், புகழுக்கும் நெறிவழிப்பட்ட பகை இடையூறு செய்யாது. இன்றோ, பகை இலக்கணத்திற்குரிய பகைமை எங்கும் இல்லை. கயமைத்தனமே களிநடம் புரிகிறது. சிறுமை, குற்றமே தூற்றிவிடும் என்பதைப் போல், அத்தகையோர் குற்றமே தூற்றுகிறார்கள்; குணங்களைப் பார்க்க மறுக்கிறார்கள்; பாராட்ட மறுக்கிறார்கள். எப்படியும் கேடு செய்ய வேண்டுமென்றே நினைக்கிறார்கள். கயமைத் தனத்தால் காரியக்கேடு செய்கிறார்கள். இந்த யுகத்தில் விழுமிய புகழ் பெறுதல் அரிது. ஏனெனில், நெஞ்சுகலந்த நட்புடையோரும் நாட்டில் கிடைப்பதில்லை. நெறி வழிப்பட்ட பகைவரும் இல்லை. ஆதலால், எங்கும் நிகழ்வது முருகன் படலமே. மேடையெல்லாம் நாறுவது தூற்றுதலே. தாள்கள் எல்லாம் தாங்கிவருவது தரங்குறைந்த

எழுத்துக்களே! என் செய்வது? புறநானூறு காட்டும் பொதுநெறி பரவினால் இந்த அவலம் அகலும்.

கோவூர்க்கிழார், கிள்ளிவளவனைப் பாராட்டுகின்றார். கிள்ளிவளவன் சோழப் பேரரசன் வெற்றிவாகை சூடியவன்; களத்தில் பகைவரைச் சந்தித்தவன். ஆயினும் அவனுடைய ஆண்மை, பகைவராலும் புகழ்ந்து கூறப்பெற்றது. ஒருவழிப் பட்ட பொருட்கள் உரைகல்லாக முடியாது. மாறுபட்ட பொருள்களே உரைகல்லாக முடியும். அதுபோல் கிள்ளிவளவன் புகழைக் கோவூர்க்கிழார் புகழ்ந்ததைவிட கிள்ளிவளவனுடைய பகைவர்கள் புகழ்ந்திருக்கிறார்கள். கிள்ளிவளவன் ஆண்மையும் நிறைநல் ஆண்மை. அவன்றன் பகைவரும் பாடறிந்து ஒழுகும் பண்பினர். இதனைக் கோவூர்க்கிழார் "பகைவர் புகழ்ந்த ஆண்மை" என்று பாராட்டுகின்றார். இன்று நாட்டிடை வாழும் கயமை வீழ்க! நற்பகை வளர்க! பகைவர் புகழும் ஆண்மை வளர்க!

நின்னோர் அன்னோர் பிறரிவண் இன்மையின்
மன்னெயில் முகவைக்கு வந்திசின் பெரும
பகைவர் புகழ்ந்த ஆண்மை நகைவர்க்குத்
தாவின்றி உதவும் பண்பின் பேயொடு
கணநரி திரிதரும் ஆங்கண் நிணன் அருந்து
செஞ்செவி எருவை குழீஇ
அஞ்சுவரு கிடக்கைய களங்கிழ வோயே.

– புறம் 373

# 7

# இனிய நெறி

வாழ்க்கை மிக நுட்பமானது. உயிர் வாழ்க்கையில் தனிமை எங்கும் இல்லை; எப்பொழுதும் இல்லை. உயிர் வாழ்க்கை என்பது இயல்பில் கூட்டு வாழ்க்கையே. ஓர் உயிர் இன்னோருயிரோடு சார்ந்து, இணைந்து, பிணைந்து வாழு தலைத் தவிர வேறு வழியில்லை. சார்ந்து வாழ்தல் என்பது பொதுத் தன்மையது. இணைந்து வாழ்தல் என்பது சார்ந்து வாழ்தலினும் வளர்ந்தது; சிறப்புடையது. இணைந்து வாழ்தலினும் சிறந்தது; பிணைந்து வாழ்தல் ஓருயிர் பிறிதொரு உயிரோடு பிணைந்து வாழும் வாழ்க்கையே பெருமைக்குரியது. சார்ந்து வாழ்தல் என்பது பொதுவான உறவினர்களை – சுற்றத்தைக் குறிக்கும். இணைந்து வாழ்தல் என்பது, குருதித் தொடர்புடைய சுற்றத்தைக் குறிக்கும். பிணைந்து வாழ்தல் என்பது நட்பு, காதல் வாழ்க்கையைக் குறிக்கும். இணைந்தும் பிணைந்தும் வாழ்தல் அருமைப் பாடுடைய கலை. ஏன்? உயிர்க்குரிய பேறுகளில் அதுவும் ஒன்று. நட்பில்லாத வாழ்க்கை, நாகரிகம் இல்லாத வாழ்க்கை. தோழமை இல்லாத வாழ்க்கை. தொல்லுலகில் துன்பம் தரும் வாழ்க்கை. கடவுள், உயிர்களைப் பதப்படுத்திப் படிமுறையில் வளர்க்கவே இத்தகைய இணை வாழ்வியல் முறையை

வகுத்துத் தந்தருளினன். தன்னை நோக்கிக் கவலைப்படுதல் ஆண்மையை அழிக்கும்; வாழ்க்கையை நரகமாக்கும். தம்மைச் சார்ந்தாரை நோக்கிக் கவலைப்படுதல் அறிவைத் தூண்டி வளர்க்கும். ஆற்றலைப் பெருக்கும்; ஆள்வினையை வளர்க்கும்; வாழ்க்கையைச் சொர்க்கமாக்கும். வாழ்க்கையில் இந்த நுண்ணிய கலைத்திறன் இன்று நம்மில் பலருக்கு இல்லை. இன்று அவரவர்கள் அவரவர்களுக்காகவே கவலைப்படுகிறார்கள்; அழுது சாகிறார்கள். இணைந்தும் பிணைந்தும் வாழும் வாழ்க்கையில் குற்றங்களே இல்லை. அஃது எப்படி? குற்றங்களே இல்லாத வாழ்க்கையா இருக்க முடியும்? குற்றங்கள் உண்டு. குற்றங்கள் இல்லாத மானிட வாழ்க்கை இல்லை. ஆனால், இணைப்பிலும் பிணைப்பிலும் ஏற்பட்டுள்ள அன்பின் பெருக்கம் குற்றங்களைக் காண முடியாமல் மறைத்து விடுகிறது. குணங்களே தெரிகின்றன. இந்த 'ரசவாதம்' நடவாது போனால், அன்பு பூரணத்துவம் அடையவில்லையென்பது பொருள். இணைப்பும் பிணைப்பும் நிறை நலமுடையதாக வளரவில்லை என்பதே கருத்து.

சிறந்த தலைமகனாவதற்குரிய இலக்கணங்களைக் குறமகள் இளவெயினி எடுத்துக் கூறுகின்றார். அதில் தலையாய பண்பு, தனக்குச் சிறந்தோர் - தன்னிடத்தில் நட்புக்கிழமை கொண்டோர் தனக்குப் பிழைகள் செய் தாலும், தானறியச் செய்தாலும் அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்பதாகும். குறமகள் இளவெயினி மிகச் சதுரப்பாட்டுடன் இந்தப் பாடலை அருளிச் செய்துள்ளார்.

'தமர்' என்பதற்குத் 'தம்மில்' பிரிவில்லாதவர் என்பது பொருள். எண்ணம், உணர்வு, உறவு, உடைமை, இன்ப துன்பந் துய்ப்பு வாழ்க்கையின் நோக்கம் ஆகிய அனைத் திலும், வேறெனக் கருதாது ஒன்றுபட்டு உழல்வோர் தமரர்வர். இன்றைய சமுதாய அமைப்பில் இத்தகைய

தமரைக் காண்பது அரிது. இல்லையென்றே கூறலாம். இன்று 'தமர்' என்று கூறப்படுபவரெல்லாம் பெரும்பாலும் உடல் தொடர்புடையவரேயாம். அவர்களுடைய நாட்டமெல்லாம் தன்னலமே! ஒன்றுதலல்ல! கண்டவரும் கேட்டவரும் தமராகார். உடம்பிடை உயிரன்ன ஒன்றித்து உடனிற்போரே தமர். அத்தகைய தமர், தனக்குப் பிழை செய்யின் அப்பிழையைப் பொறுத்தாற்ற வேண்டும். எப்பிழையைப் பொறுத்தாற்றல் வேண்டும்? இருவர் கூட்டில் இயங்கும் பணிகளில் தோன்றும் பிழையையா? கடமைகளில் தோன்றும் கவனக்குறைவையா? இல்லை! கடமைகளில் தோன்றும் பிழைகள் மன்னிக்க முடியாதன. ஆதலால், "தற்றப்பின்" என்றார் ஆசிரியர். தன்னை நோக்கி மரியாதை மரபில் செய்யும் பிழை. இருவர் ஒன்றாகிப் பழகித் தமர் தகுதியை அடைந்தாலே தீங்குதரும் பிழை தோன்றாது. ஒரோவழித் தோன்றினாலும் அஃது அற்பமாகிவிடும். ஒரோவழித் தன்னுடைய சிறப்புக்கு எதிரான பிழை செய்தாலும் அதைப் பொறுத்தாற்ற வேண்டும். தன்னை நோக்கிச் செய்யும் பிழையைப் பொறுக்க வேண்டுமென்று ஆசிரியர் கூறுகிறாரே தவிரக் கடமைகளின் பாற்பட்ட பிழையைப் பொறுக்கும்படி ஆசிரியர் சொல்லவில்லை. தமர் செய்யும் கடமைகளின் பாற்பட்ட பிழை தண்டனைக் குரியதல்ல; திருத்தத்திற்குரியது. ஆகத் தம்மைச் சார்ந்து நட்புறப் பயின்று தமரானோர் தனக்கு யாதேனும் பிழை செய்தாலும் அதனைத் தாங்கிக் கொள்ளாது - பொறுத்தாற்றாது ஒறுத்தல் அல்லது வெறுத்தொதுக்கல் சிறந்த தலைமைக்கு ஆகாது. குற்றங்காணப் புகின் குற்றங்கள் குறையா. குற்றங்கள் பெருகி வளரும். கடுகனைய குற்றமும் மலைபோலத் தெரியும். நிறை தெரியாது. இந்தச் சூழல் உருவாகுமானால் நஞ்சொடு கலந்த பாலைப்போல நட்புக் கெடும். தமர் தன்மை வளராது. ஆதலால், பழகியோரிடத்தில் பிழை காணற்க! தற்சார்புடைய பிழையைத்தான் 'காணற்க'

'ஒறுத்தற்க' என்கிறார். ஆனால், கடமை தொடர்பான பிழைகளைக் காண்க. ஏன்? தண்டனை வழங்கவா? இல்லை! திருத்தி வளர்க்கவே.

நல்குரவு, வறுமை, மிடிமை ஆகியன தரித்திரத்தின் படி முறைகளைக் காட்டும் சொற்கள். ஒரு பொருட் சொற்கள் என்று சொன்னாலும் சொல்லலாம். ஆனால், அது சிறப்பன்று. மீண்டும் மனிதன் ஒரு சமூகப் பிராணி என்பதை நினைவு கூர்க. வாடிய பயிர், பயிரை வளர்ப்பவனின் பொறுப்பின்மையை - திறமையின்மையைப் பறை சாற்றும். கிராமத்தின் ஏரிகளுக்குத் தண்ணீரை அள்ளி வந்து சேர்க்கும் வாரிகள் தூர்ந்திருப்பது அங்கு வாழும் மனிதர்க்குக் கேவலத்தைக் கொடுக்கும். குச்சி போன்ற உடம்பு, பரட்டைத் தலை, சளி சிந்தும் மூக்கு, களையற்ற முகம் - குழந்தையின் இந்த அவல நிலை அக் குழந்தையின் தாயினுடைய மானத்தை வாங்குவனவாம். கோப்பில் தாள்கள் பல்கிப் பெருகி வளர்ந்து விட்டன. கோப்பில் உள்ள தாள்கள் அழுக்கேறி ஒளி மங்கிவிட்டன. கோப்பில் உள்ள தாள்களின் ஓரங்கள் மடங்கிக் கிழிந்துவிட்டன. கோப்பின் இந்தக் காட்சி, கோப்புக்குரிய எழுத்தரின் மானத்தை வாங்குவதாகும். கோயிலில் இங்கு மங்கும் குப்பைகள்; ஒட்டடைத் தோரணங்கள்; மண்ணில் வளர வேண்டிய செடிகள் மதில்களில் வளர்கின்றன. இவை அந்தத் திருக்கோயிலின் நிர்வாகி மானத்தை வாங்குவன. கருவறையில் நாற்றம். மூர்த்தியின் மீது கசடேறிய எண்ணெயின் மெழுக்கு - பாலாடை. திருவருட் பொலிவு இல்லை. இஃது அந்தத் திருமேனி அருச்சகரின் மானத்தை வாங்குவது. இவை போலப் பழங்காலத்தில் நம்முடைய முன்னோர், மற்றவர் களுடைய வறுமைக்கு நாணினர். இன்று நம்மில் சிலர் கருதுவதைப்போல அவரவர்கள் வறுமைக்கு அவரவர்களே காரணம் என்றும் அல்லது அவரவர்களுடைய தலைவிதி காரணமென்றும் கருதியதில்லை. மற்றவர்களுடைய

வறுமைக்குத் தான் நாணி, அந்த வறுமையை மாற்ற முயல்வது தகுதியுடைய தலைமைக்கு இலக்கணம். இதனை இளவெயினி, 'பிறர் கையறவு தான் நாணுதலும்' என்று கூறுகின்றார். உயர்ந்த சமூக வாழ்க்கையில், மற்றவர் ஏழையாக இருப்பது ஏழையாக இருப்பவர்க்குக் கேவல மில்லை. அவர்களை ஏழைகளாக வைத்துப் பார்த்துக் கொண்டு வாழுகிறவர்களுக்குத்தான் கேவலம். மனிதன் வாழப் பிறந்தவன் மட்டுமல்ல. மனிதன் வாழுதல், உடலைச் சார்ந்த நிழல் போன்றது. அவன் வாழ்விக்கவே பிறந்தான். அவனுடைய வாழ்விக்கும் கடமை, உடலனையது. இன்று நம்மில் பலர் உடலை மறந்து விட்டு நிழலை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றனர். ஆதலால், வாழ்வாங்கு வாழ்பவரைக் காண முடியவில்லை. தகுதியுடைய தலைமையையும் காண முடியவில்லை. குறமகள் இளவெயினி கூறிய இனிய நெறி, வையகத்தின் வாழ்க்கை நெறியாக வேண்டும். அன்றே தலைமைப் பண்பு சிறக்கும். தரணி வாழும்.

நமக்குச் சிறந்தார் நம்முடன் பழகுபவர். பிழை செய்யின் பொறுத்தாற்றும் பண்பைப் பெற்றிடுவோமாக. நம்மைச் சுற்றிலும் வாழ்வோரின் வறுமையை எண்ணி நாணி நாளும் உழைத்து வறுமையற்ற வளமான சமுதாயம் அமைக்க உழைத்திடுவோமாக.

> "தமர்தற் றப்பி னதுநோன் றல்லும்
> பிறர்கை யறவு தான்நா தகுமே
> ......................தகுமே."

– புறம் 157

# 8

# துணையின் இலக்கணம்

மனித சமுதாயம் ஒரு சந்தை. சந்தையில் பலர் வாழ்கின்றனர் - வாழ்வார்கள். இந்த மானிடச்சந்தையில் வாழ்வோர் தமக்குள் ஒருவருக்கு ஒருவர் துணை நிற்றல் இயற்கையின் நியதி - தவிர்க்க முடியாதது. துணை - உதவி மனித உலகத்தைக் கட்டிக் காப்பாற்றும் பேரறமாகும். துணை நிற்றல் ஒரு தூய பண்பு; அறப்பண்பு; இனிமை தழுவிய பண்பு. உதவி செய்தல் என்ற விழுமிய அறத்திற்கு இணையாக வேறு எந்த ஓர் அறத்தையும் எடுத்துக் கூற முடியாது. ஈதலினும் உதவுதல் உயர்ந்த பண்பு. உதவுதல், உதவி பெறுவோரை வளர்த்து வாழ்விக்கும் பண்பாகும். துணை - உதவி எப்பொழுதும் பேரறமாகி விடாது. இன்றைய உலகியல் வழக்கில் நிகழும் துணை - உதவி ஆகியவற்றில் அறத்தின் சுவட்டையே காணோம். காரணம், இன்று துணை நிற்றல் வணிக அடிப்படையிலேயே நிகழ்கின்றது. இவருக்கு இந்த வகையில் துணை நின்றால் அவர் நமக்கு எந்த வகையில் துணையாயிருக்கக்கூடும் என்ற ஆராய்ச்சி யில்லாமல் யாரும் யாருக்கும் துணை நிற்க முன் வருவதில்லை. அது மட்டுமா? வலியோர் வலியோருக்கே துணை போகின்றனர். இதில் என்ன பயன்? இயற்கையின்

நோக்கம், நியதியின் திறம், அறத்தின் குறிக்கோள் நிறைவேறுகிறதா? வலியர், வலியரைச் சார்ந்து துணை போனால் ஆதிக்க உணர்வு கால் கொள்ளும் - சர்வாதிகாரம் தோன்றும். முகத்துதி படலங்கள் விரியும்; மனித சாதியின் வாழ்க்கை நரகமாகி விடும். மாறாக வலியில்லாதாருக்கு வலியுடையாரின் வலிமைக்குப் பொருள் தெரியும் - பயன்படும். வலியில்லாதாரும் வளர்வார்கள். இதுவே வாழ்வியல் நெறி; சமுதாய நெறி; சிலர் உறவினர் பலரைப் பெற்றிருப்பது எப்படி? அன்பின் அடிப்படையிலா? இல்லை - அவர்களுடைய வளம் நோக்கிப் பலர் உறவினராவர். உறவினர் பலர் பலராகப் பெற்றிருக்கும் சீமான்களுக்கு உறவினராதல் அறமாகாதது மட்டுமல்ல - பயனும் அற்றது. "தனி ஒருவனாக" யாரும் உறவினர் இன்றி, உறவினர் கூட்டத்தைப் பெறாத - நஞ்சை புஞ்சைகளைப் பெறாத - சாதாரண மனிதருக்கு உறவினராதலே சீலத்தில் சிறந்த வாழ்க்கை.

மாங்குடி கிழார் தமிழாராய்ந்த அறிஞர். புறநானூற்று உலகத்துச் செந்நாப்புலவர். அவர் எழினியாதனை வாழ்த்திப் பாடுகின்றார் - எழினியாதன் வழங்கி வாழ்வதில் சிறந்தவன். ஆனாலும் அவன் துணை நின்றது யாருக்கு? உருவத்தால் மனிதராயினும் உள்ளமின்மையால் வலிமையற்று நடைப் பிணமாகி நலிவோருக்கு அவன் வலிமையாகி நின்று வலிமை தந்து வாழ்வளித்தான். ஒருவர் வாழ்க்கையில் இடறி வீழும்போது, வீழும்படி பார்த்திருப்பதும் வீழ்ந்ததை விமர்சனம் செய்வதும் பண்பல்ல. இடறி வீழும் தறுவாயில் எடுத்து நிறுத்த முயல்வதும், அறியாமை கண்ட போது, அறிவு கொளுத்துதலும் நலியும் போது வலிமை தந்து வாழ்வளித் தலும் சிறப்புடை மரபில் வந்தோரின் இயல்பு. எழினியாதன் கேளிர் பலர் உடையோருக்குக் கேளாக விளங்க முடிய வில்லை. கேளிர் இல்லாதிருந்த தனியருக்கே கேளாகி வாழ்வளிக்க விரும்பினன். இதனை மாங்குடி கிழார்,

*உள்ளிலோர்க்கு வலியாகுவன்*
*கேளிலோர்க்குக் கேளாகுவன்"* – புறம் 396

*என்று கூறுகின்றார்.*

*வாழ்வோருக்கு மாரடிப்பது சங்ககால வாழ்க்கை மரபன்று. வாழவேண்டியவர்கள் பக்கம் நிற்பதே பழந்தமிழர் மரபு.*

# 9

# செல்வத்தின் பயன்

மனிதகுலம் உயிர்ப்போடு உலாவி வாழ அடிப்படைத் தேவை உணவும் உடையுமே! அடுக்கிய செல்வம் ஆயிரம் பெற்றவனுக்கும் அவனுடைய இன்றியமையாத் தேவை - உணவுக்கு அரிசி நாழி; உடை இரண்டு. இந்த இரண்டை விஞ்சித் துய்த்தலும் அரிது. அதாவது நானாழி உண்பதும் அரிது. நாலிரண்டு எட்டு உடை உடுத்தலும் அரிது.

புதுமை உலகில் உடைகளின் உருவம் மாறி யிருக்கின்றன. ஆனால் அளவில் மாறுதலில்லை. பழங்காலத்தில் இடையிற் கட்டிய ஆடை அளவுக்கே, மேல் ஆடை போட்டிருந்தனர். ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தாலும், அடுக்கிய செல்வங்கள் கோடி பெற்றிருந்தாலும் ஒருவன் துய்க்கும் துய்ப்பின் அளவு கூடுதல் இல்லை. ஆதலால், துய்ப்பிற்கு எல்லையை இயற்கை வரையறை செய்துவிட்டது. அப்படியிருக்கச் செல்வத்தை இவறிக் கூட்டிச் சேர்ப்பதில் பயன் யாது.

இயற்கையின் எல்லையைக் கடந்து துய்ப்பின், அந்தத் துய்ப்பு இன்பந்தராது. துன்பமே தரும்; துய்ப்பனவும் தப்பும். மிகுதி உண்ணின் உறுபலன் பிணியே! பிணி துய்ப்பிற்கு ஊறு

செய்யும்; உண்ணும் வேட்கையைத் தரும். ஆனால் உண்ண இடந்தராது.

ஓரிடத்தில் எல்லை கடந்த துய்ப்பு இருப்பின் அது பிறிதோரிடத்தில் இயற்கையமைத்த துய்ப்புமின்றிப் பலர் வருந்த வழிவகுக்கும். வருந்துவோர் வாளா இரார். துய்ப்பினை இழந்து துயருறுவோர் துய்ப்போருக்குத் தொல்லை தருவர். ஆதலால் நியதி வழிப்பட்ட துய்ப்புக் கூடத் தடுமாறும்.

செல்வத்தின் பயன் துய்ப்பல்ல. ஒரே பால்வகைக்குள் காதல் தோன்றுதலில்லை. பால் வேறுபட்ட இடத்தில் தான் காதல் அரும்புகிறது; கனிந்த அன்பு கால் கொள்கிறது; ஆங்குத் துய்ப்பித்துத் துய்த்தலே இயல்பான ஒழுக்கமாக அமைந்து விடுகிறது. அவரவர்களே வலிய திட்டமிட்டுத் துய்த்தல் துய்ப்பன்று; அஃதோர் அசுர உணர்ச்சி! அது மனித உலகத்திற்குப் பகை. ஒருவர் துய்ப்பிக்கத் துய்த்தலே ஒழுக்க வழிப்பட்ட துய்ப்பு. இத்தகைய துய்ப்பே நியதி; நீதி! இத்தகைய தூய துய்ப்பே உயிர்க் குலத்திற்கு வாழ்வளிக்கும். வையகத்தையே வானகமாக மாற்றும்.

பிறர் வாழ்வில் தன்வாழ்வை இணைத்துக்கொண்டு பிறரை வாழ்விப்பதன் மூலம் வாழும் இயற்கையொழுக்கம், இன்றும் நற்சாதி விலங்குகளிடமும், நற்சாதித் தாவர இனங்களிடமும் இருக்கிறது. அவை மனிதனைத் துய்ப்பிக்கின்றன. மனிதன் அவைகளை ஊட்டுவிக்கின்றான். ஆனால், மனிதனோ தன்னுடைய துய்ப்புக்குத் தானே பட்டியல் தயாரிக்கிறான்; தேடித் துய்க்கிறான்; மற்றவர்களிடத்திலிருந்து ஒதுங்கித் தன்னைத் தானே பூட்டிச் சிறைப்படுத்திக் கொள்கிறான். மற்றவர்களுக்கு எது பிடிக்கும் என்பது அவனுக்குத் தெரியாது. தெரிந்து கொள்ளும் முயற்சியும் அவனுக்குப் பிடிக்காது. இது வாழ்க்கை முறையன்று.

செல்வத்தின் பயன் ஈதல்! இது எவ்வளவு உயர்ந்த தத்துவம்! இந்தத் தத்துவம் சமுதாயத்தில் வாழ்க்கை நெறியாக மலர்ந்திருக்குமானால் சமுதாயத்தில் இவ்வளவு

மேடு பள்ளங்கள் இருக்காது. மனிதர்களுக்கிடையில் பகையும் வளர்ந்திருக்காது. பகையின்மையால் களவு - காவற் பணிகள் தலையெடுத்திருக்கா. இன்றோ, செல்வம் செல்வத்தைச் சம்பாதிக்கப் பயன்படுகிறது. இஃது ஒரு கொடுமை! செல்வம் மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தப் பயன்படுத்தப் பெறுகிறது. ஏன்? நாடாளும் அரசிலிருந்து ஆண்டவன் சந்நிதானம் வரை இந்தப் பண்பிழந்த செல்வத்திற்கு அமோக மரியாதை! இது வையகத்தின் இயல்பான நடைமுறையன்று. நெறிமுறை பிறழ்ந்த நடைமுறையே!

இதனைச் சங்கத்துச் சான்றோர் நக்கீரனார் நயம்பட எடுத்துக் காட்டுகின்றார். உலகம் முழுவதும் ஆண்டா லென்ன? அவனுக்கும் இயற்கை விதித்த உணவு நாழி தானே! மானம் மறைக்கும் உடையும் இரண்டுதானே! அப்படியிருக்க ஏன் துய்ப்பில் அதிக ஆசை? அளவுக்கு விஞ்சிய துய்ப்பு இன்பத்தைத் தருவதற்குப் பதில் கழிபிணியைத் தந்து இயற்கையமைத்த துய்ப்பினையும் தப்பச் செய்யும். இயற்கையின் தேவையான துய்ப்பின்றிப் பலர் துயருறத் தாமே துய்க்க நினைத்தல் இயற்கைக்கு இசைந்த வாழ்க்கையன்று. இந்த முறையில் ஒன்றைத் துய்க்க நினைத்தாலும் அவ்வழி பல தப்பும். இதுவே நக்கீரனார் தந்த நல்லுரை:

தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பது நாழி உடுப்பவை யிரண்டே
பிறவு மெல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே.

— புறநானூறு

# 10

## செல்வத்துப் பயன்

*தெண்கடல் வளாகம் பொதுமையின்றி*
*வெண்குடை நிழ்ற்றிய ஒருமை யோர்க்கும்*
*நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்*
*கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்*
*உண்பது நாழி உடுப்பவை இரண்டே*
*பிறவு மெல்லாம் ஓரொக்கும் மே*
*செல்வத்துப் பயனே ஈதல்*
*துய்ப்பேம் எனினே தப்புந பலவே*

— புறம் 180

நக்கீரனார் நற்றமிழ்க் கவிஞர்; தமிழ்ச் சங்கத்துத் தலைமைப் புலவர். நக்கீரனார் பெற்றிருந்த பெருமைகள் பலப்பல. ஆயினும் அவர்தம் சிந்தனை தூய்மையானது. அதனாலன்றோ கண்ணுதற் பெருமான் கவிதையிலும் குற்றங்காணும் துணிவு தோன்றியது. குற்றமற்றவனே குற்றம் காண்பதற்குத் தகுதியுடையவன். இன்றோ குற்றமுடையோன் தன் குற்றங்களை மறைப்பதற்கே பிறர் மீது குற்றம் காண்கிறான். பழி தூற்றுகின்றான். அதனால் எது குற்றம்? என்பதே இன்று முடிவு செய்ய முடியாத ஒன்றாக இருக்கிறது. இஃது இன்றைய உலகியல் போக்கு. அதுமட்டுமன்று

இருக்கும் இடம் பெரிதாக இருந்தால் இன்று குற்றம் மறைந்து விடுகிறது. இஃதொரு விபரீதமான உலகம்.

நக்கீரனார் காலத்தில் சிறுமையைத் தூற்றுதல், சிறுமையுள் சிறுமையாகக் கருதப் பெற்றது. திருத்தும் முயற்சியின்றித் தூற்ற முயற்சி செய்வது பகைவழிப்பட்டது. நோக்கம் சிறுமை நீங்க வேண்டுமென்பதன்று. தனது பகைவன் அழிக்கப்பெற வேண்டுமென்பதே. நக்கீரனார் குற்றத்தைக் குற்றத்திற்காகவே கண்டவர். குற்றமுடைய கவிதையைச் செய்தவன் கண்ணுதற் பெருமானாகவே இருந்தும் துணிவுடன் 'குற்றம் குற்றமே' என்று சாதித்தவர். ஆம், அவருக்குக் கண்ணுதற் பெருமானிடத்தில் ஆகவேண்டியது ஒன்றுமில்லை. புலன்களை வென்று விளங்கிய புண்ணியப் புலவனாக இருந்ததால் கண்ணுதற் பெருமானையும் எதிர்த்து வழக்காடும் ஆற்றல் கிடைத்தது. அவர்தம் வாழ்க்கை எளிய வாழ்க்கை.

உலகம் முழுவதையும் ஒரே குடைக்கீழ் வைத்து ஆளும் உரிமை பெற்றவனுக்கும் மிகச் சாதாரணமான ஒரு மனிதனுக்கும் துய்க்கும் வாழ்க்கை ஒரே வகையானதே. அதாவது உண்பது நாழி அரிசிச் சோறு; உடுப்பன இரண்டு துணி. இந்த வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் இல்லை: ஆயினும் இந்த அறிவினைப் பெறாதவர் பலர். மேலும் மேலும் செல்வத்தை இவறிக்கூட்டிச் சேர்க்கின்றனர். அங்ஙனம் சேர்ப்பது ஏன்? என்று நக்கீரர் கேட்கின்றார். திருவள்ளுவரும், கோடி தொகுக்கலாம். ஆனால் துய்த்தலரிது என்றார். பிறர் உழைப்பில் செல்வத்தைச் சேர்த்தல் பாவம். சேர்த்த செல்வத்தைத் தாமே துய்த்தல் கொடிய பாவச் செயலாகும்.

இன்றோ மனிதனின் தேவைகள் சிறகடித்துப் பறந்து வளர்ந்து கொண்டிருக்கின்றன. அம்மம்ம! பழங்காலத்தில் "கூழுக்கு உப்பு இல்லை என்பாரும் பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பாரும்" என்று வறுமைக்கு எல்லைக்கோடு கட்டினார். ஜீவா, சற்று வளர்ந்து 'காலுக்குச் செருப்பில்லை'

என்று வறுமைக்கு எல்லை கட்டினார். ஆனால் இன்றைய தேவை எல்லை பெருகி வளர்ந்திருப்பதால் வறுமையின் வடிவங்கள் மாற்றப் பெற்றுள்ளன. “படம் பார்க்கக் கையில் பணம் இல்லை; காருக்குப் பெட்ரோல் இல்லை” என்றெல்லாம் வறுமையின் எல்லைக்கோடுகள் உருமாறி வளர்ந்துள்ளன. இந்த வளர்ச்சி நேரியதன்று.

துய்க்கும் வேட்கை மீதூர மீதூர மனிதனின் தன்னலம் விரிவடையும். தன்னல எல்லை விரிவடைவதன் மூலம் பிறருடைய துய்ப்பு நலன்கள் ஆக்கிரமிக்கப்படும். அதன் காரணமாக அழுக்காறு வளர்ந்து பகை கால்கொண்டு செல்வத்தைப் பறிப்போர் தோன்றுவர். தேடிய செல்வத்தைத் துய்த்து மகிழ்தலைவிட மற்றவர்க்கு வழங்கித் துய்ப்பித்து மகிழுதல் பேரறம். துய்த்தலே நாகரிக வழிப்பட்டது. எந்த ஒன்றையும் தானே துய்ப்பது நாகரிகமன்று. அத்துய்ப்பும் நஞ்சாக மாறும். பிறர் அன்பின் நெறி நின்று துய்ப்பிக்கத் துய்த்தலே இன்ப அன்பினை வளர்க்கும்; துய்த்தலும் அமுதாகும். அதனாலன்றோ இயற்கை, வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் ஊட்டுவோரையும் உண்பிப் போரையும் ஒன்றாகச் சேர்க்கிறது. நக்கீரனார், “அளவின்றி ஆசைப்பட்டுக் கோடி சேர்த்தாலும் உண்பது நாழிதானே; ஏன்? ஊரையழித்து உலையில் போடவேண்டும்” என்று கேட்கிறார். அதுமட்டுமின்றி வாழ்க்கையின் தேவை உண்பது நாழியாக - உடுப்பது இரண்டாக நெறிமுறைப்படுத்தப் பெறுமாயின் ஆடம்பரம் குறையும். ஓரிடத்து ஆடம்பரமாகச் செலவழிக்கப் பெறுவது பிறிதோரிடத்தின் உணவேயாகும் என்று எண்ணினால் வாண வேடிக்கை காட்ட மனம் வருமா?” என்றும் அறிவுறுத்துகிறார். ஏன்? தான் துய்த்தலுக் காகச் செல்வமல்ல, ஈதலுக்காகவே செல்வம் என்று தேற்றேகாரம் கொடுத்துக் கூறும் பொன்னுரை இன்றைய சமுதாய வாழ்க்கையில் பொருள் பொதிந்தது. ‘செல்வத்துப் பயனே ஈதல்; துய்ப்பேன் எனினே தப்புந பலவே!” என்ற வாக்கு நம் வாழ்க்கையில் அமைவதாக!

# 11

## கவிதை விளக்கம்

உழைக்கும் சக்தி படைத்த ஆடவர்களின் முயற்சியினைப் பொறுத்தே நாட்டுவளம் அமைகிறது. ஆடவர் உலகம் அயராத, ஆர்வம் நிறைந்த முயற்சியினை மேற்கொண்டு பெரும்பொருள் ஈட்ட வேண்டும். "வினையே ஆடவர்க்கு உயிரே" என்பது தமிழ் இலக்கிய மரபு. இங்ஙனம் அறத்தாற்றில் பெரும் பொருள் ஈட்டுவது, தானே துய்ப்பதற்காக அல்ல. "செல்வத்தின் பயனே ஈதல்" என்று புறநானூறு பேசுகிறது. ஏன்? பொருள் ஈட்டுகிற முயற்சியில் ஈடுபடுகிறதே மற்றவர்களுக்குக் கொடுத்து மகிழ்வதற்குத்தான் என்ற கருத்து தமிழ் இலக்கியங்களில் பரக்கக் காணப்படுகிறது. இக்கருத்தை கீழ்க்கண்ட அகநானூற்றுப் பாடலின் அடிகள் தெளிவாக விளக்குகின்றன. தலைவன் திருமணச் சிலவிற்குரிய பொருளீட்டுதல் குறித்துப் பிரிந்து செல்லுகின்றான். அவன் திரும்பி வருவதாக குறித்துச் சென்ற காலத்தில் வரவில்லை. அது குறித்து தலைவி இரங்குகின்றாள். தோழி தேற்றுகிறாள். தேறுதல் உரை சொன்ன தோழிக்குத் தலைவி பதில் கூறுகிறாள், "அறியாய் வாழிதோழி" என்று தொடங்குகின்ற கவிதையின் ஈற்றடிகள் நினைவு கூரத்தக்கன.

*"இல்லோர்க்கு இல்லென்று இயைவது கரத்தல்*
*வல்லா நெஞ்சம் வலிப்ப நம்மினும்*
*பொருளே காதலர் காதல்"*

அதாவது என்னாளும் வறியார்க்கு இல்லை என்று கூறி இயைவதைச் செய்யாது, கரத்தல் மாட்டாது - நெஞ்சம் வற்புறுத்தலின் நம் காதலர், காதலித்தது, நம்மினும் காட்டில் பொருளேயாகும் என்பதாகும். இல்லை என்று சொல்லியே பழக்கம் இல்லாத நெஞ்சம் என்று இங்கு குறிப்பிடுவது தமிழ்ப் பெருங்குடியில், வழி வழியாக வளர்ந்திருக்கின்ற ஈகைப்பண்பைக் குறிக்கின்றது. அது மட்டுமின்றி "இயல்வது கரவேல்" என்ற பழமொழிக்கு ஒரு புதிய ஆழமான கருத்தை இப்பாடல் தருகிறது. வழக்கில் பெரும்பாலும் இயல்வது என்ற சொல்லுக்குப் பொருளுடைமை மாத்திரமே குறித்துப் பேசப்பட்டு வருகிறது. ஆனால் அது முற்றிய பூரண கருத்தல்ல. பொருளில்லாது இருக்க, முயன்று தேடும் வலிவுடையராய் இருந்தும், இரவலர்க்குப் பொருள் இல்லை என்று கூறுவதும் இயைவது கரத்தலே ஆகும். இங்ஙனம் கொடுத்துக் கொடுத்துப் பழகுகிறவர்களுக்கு வாங்குகிற வர்கள் வராது போனால் அந்நிலையைக் கொடுந்துன்ப மாகவே கருதுவார்கள். இக்கருத்தைக் குறுந்தொகைக் கவிதை ஒன்று அழகாக விளக்குகிறது. தலைவன் பொருள் வயிற்பிரிய நினைக்கின்றான். அப்பிரிவினையை முன் கூட்டியே தலைவி யிடம் உணர்த்துகின்றான். அது போது தலைவன் நீ தனியே இருந்து வருந்தும்படி நின்னைப் பிரிந்து நெடுங்காலம் இருக்கமாட்டேன். அப்படி இருப்பேனாயின் இரப்போர் வருதலில்லாத வறிய நாட்கள் பலவுளதாகுக என்று கூறுகின்றான்.

இக்கருத்தை விளக்குகின்ற பாடல் கீழ்வருமாறு:

*"மெல்லியல் அரிவை நின் நல்லகம் புலம்ப*
*நிற்றுறந்து அமைகுவனாயின் எற்றுறந்து*

*இரவலர் வாரா வைகல்*
*பலவாகுக யான் செலவுறு தகவே"*

மிகச்சிறிய பாடலில் உயர்ந்த அறத்துறைக் கருத்தை விளக்கும் இக்கவிதையின் சுவை படித்துப் படித்து இன்புறத் தக்கது.

தமிழகத்தில் புலமை சான்ற தமிழ்ப் பெரியோர்கள் புரவலர்களிடம் சென்று பரிசிலும் கொடையும் பெறுவது வழக்கம். அப்படி வாங்கும் போது வாங்குகிறவர்கள் என்பதற்காகத் தன்னுடைய தகுதி குறையாமலே, தன் மதிப்புடன் வாங்குகிற மரபே இருந்து வந்திருக்கிறது. யாராவது பரிசில் கொடுக்க காலத்தை நீட்டித்தால் கூட புலவர்கள் பொறுத்துக் கொள்வதில்லை. வல்வில் ஓரியை கழைதின் யானையார் பாடிய பாடல் ஒன்றில் மேற்சொன்ன கருத்து பெறப்படுகிறது. பாடல் அழகாகவும், அமைதி யாகவும், அதே காலத்தில் பொருட்செறிவோடும், பண்பியல் அடிப்படையில் இடித்துரைக்கும் துறையிலும் சிறந்தமைந்து இருக்கிறது. கவிதையைக் காண்போம்.

*"ஈயென இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர்*
*ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று;*
*கொள் எனக்கொடுத்தல் உயர்ந்தன்று ; அதன் எதிர்*
*கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று;*
*தெண்ணீர்ப் பரப்பின் இழிழ்திரைப் பெருங்கடல்*
*உண்ணீர் ஆகுப நீர் வேட்டோரே;*
*ஆவும் மாவும் சென்று உணக் கலங்கிச்*
*சேறோடு பட்ட சிறுமைத் தாயினும்*
*உண்ணீர் மருங்கின் அதர் பலவாகும்;*
*புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை*
*உள்ளிச் சென்றோர் பழியலர்; அதனால்*
*புலவேன் வாழியர் ஓரி விசும்பில்*

*கருவி வானம் போல,*
*வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னை"*

கவிதை படித்து படித்து இன்புறத்தக்கது. இழிந்தோன் நிலையில் நின்று கொடு கொடு எனக் கேட்டல் இழிந்தது. அங்ஙனம் ஒருவன் கேட்க ஈயேன் என்று சொல்லி மறுத்தல் அங்ஙனம் கேட்டலினும் இழிவுடையதாகும். ஒருவன் தன்னுடைய நிலைகூறி தனக்கு எது தேவையென சொல்லிக் கேட்குமுன்னே அவனது தேவையை அவனது முக பாவத்தால் உணர்ந்து அவனுக்குத் தேவையானவற்றை வலிந்து கொள்க எனக்கொடுப்பது உயர்ந்தது. அங்ஙனம் அவன் கொடுக்க, அது வேண்டாம் என்று மறுத்துச் சொல்வது அக்கொடையிலும் மிக உயர்ந்தது. அலைகடல் ஆழத்திலும் அகலத்திலும் பெரிதாயினும் தண்ணீரை விரும்புவோர் கடல்நீரை குடிப்பதில்லை. அளவில் சிறியதாக விலங்கினங்கள் நீரை உண்ணச்சென்று உண்ணுதலின் மூலம் கலக்கிய சேறு கலந்த நீரை உடையதாயினும் உண்ணும் நீரையுடைய சிறிய குளத்தை நோக்கித்தான் பலர் செல்வர். அங்ஙனம் செல்வதனால் அக்குளத்திற்குச் செல்லும் வழிகளும் பலவாகும்.

புலவர் பரிசில் வாங்குதற் பொருட்டுச் சென்று பரிசில் பெறாது திரும்புவோராயின் பரிசில் தராதாரை இழித்துப் பேசும் வழக்குடையோர் அல்லர். பரிசில் பெறாமைக்குக் காரணமாகக் காலத்தையும் பறவை பறக்கும் சகுனங் களையுமே குறை கூறுவர். அதுபோல நீ என்னிடத்தில் எப்படி நடந்து கொண்டாயானாலும் உன்னை நான் வெறுக்கமாட்டேன், நீ வாழ்க! மழைபோல யாவர்க்கும் எப்பொருளையும் வரையாது வழங்கும் நீ வாழ்க! என்பதே கவிதையின் பொருள். இக் கவிதையின் மூலம் கீழ்க்கண்ட சிறந்த கருத்துக்கள் வலியுறுத்தப் பெறுகின்றன.

1. இரந்து வாழும் நிலையில் யாசிப்பது இழிவு.

2. அங்ஙனம் வறியோர் யாசிக்கின்றபொழுது யாசிக்கப் படுகிறவர்கள் இல்லை எனச் சொல்லுதல் அதனினும் இழிவு.

3. தன்னுடைய துன்பத்தை வந்து கூறி கேட்பதற்கு முன்னமே குறிப்பறிந்து கொடுப்பது மிக உயர்ந்த கொடை.

4. அங்ஙனம் குறிப்பறிந்து கொடுக்கின்ற பொழுது அதனைக் கொள்ளேன் என மறுத்தல் அதனினும் உயர்ந்தது.

5. கடல் பரந்த நீர்ப்பரப்பையுடையதாயினும் அது பருகுவதற்குத் தகுதியில்லாமல் உப்புநீராக இருப்பதால் தண்ணீர் விரும்பும் மக்கள் அதனை நாடிச் செல்வதில்லை. அது போலவே பெரும் செல்வராயினும் பிறருக்குக் கொடுத்து வழங்காத, ஈதல் பண்பில்லாதவன் நெஞ்சம் உடையார் மாட்டு மக்கள் செல்வதில்லை.

6. அளவிலும் நீர்ப்பரப்பிலும் சிறியதாகி, சேறு கலந்த நீரை உடையதாயினும் பருகுதற்குரிய நீரையுடைய தகுதி குளத்திற்கு இருத்தலின் மக்கள் அதனை நாடிச் செல்வர். அதனால் அச்சிறியநீர் நிலைக்குக்கூட செல்கின்ற வழிகள் பலவாகும்.

7. தான் விரும்பிய ஒன்றைக் கொடுக்காதவரைப் பழித்தல் சால்புடைய பழக்கமன்று. அதற்குப் பதிலாகத் தம்முடைய காலத்தையும் மற்றையவற்றையும் நொந்து கொள்வதே முறையாகும்.

8. வழங்காத வரையும் வாழ்க என வாழ்த்துகின்ற பேருள்ளம் வேண்டும். என்று இக்கவிதைகளின் அறக் கருத்துக்களை வகுத்துப் பிரித்து படிக்கின்றபொழுது எவ்வளவு அருமையான கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றன என்று விளங்கும். மழை பொழிகிறது. மழை பொழிந்து ஓய்ந்தபோதுகூட மரங்களின் அடியில், இலைகளிலிருந்தும், கிளைகளிலிருந்தும் நீர்த்துளிகள் விழுவது ஓய்வதில்லை. அங்ஙனம் மழை ஓய்ந்தும் நீர்த்துளிகள் ஓயாது விட்டு விட்டு விழுந்து கொண்டிருப்பதனால் புள்ளும்

மாக்களும் வேதனைப்படுகின்றன. இக்காட்சி சாதாரண மாக நாம் எல்லோரும் பார்க்கின்ற காட்சி. ஆனால் நாம் சாதாரணமாகவே பார்க்கின்றோம். அவற்றினூடே நமது கருத்துப்பதிந்து சிந்திப்பதில்லை. இதே காட்சியைச் சித்தாந்த சிவநெறிச் செல்வராகிய மாதவச் சிவஞான முனிவர் பார்க்கிறார். இக்காட்சியைத் தம்முடைய கவிதையில் வைத்து ஒரு அழகான நுணுக்கமான சமயக்கருத்தை விளக்கு கின்றார். அதாவது ஆன்மாக்கள் இயற்கையிலேயே மலத்தொடர்புடையன, சாதனைகளினால், வழிபாட்டால் ஆன்மா மெய்யுணர்வில் தலைப்பட்ட பிறகும் பழைய மலவாசனை தாக்கும். இதனை "இவ்வான் மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்புதின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்குமாகலின்" என்ற சிவஞான போதக் கருத்தால் அறியலாம். கசப்பு நிறைந்த வேம்பைத் தின்று பழகிய புழுவை இனிப்புடைய கரும்பினிடையே விட்டால் கரும்பைத் துய்க்காது பழக்கத்தின் வழி அது வேம்பையே தின்ன அவாவும் என்பதாகும். அதுபோல மெய்யுணர்வு தலைப்பட்ட கண்ணும் பழக்கத்தின் வழி மலவாசனைத் தாக்கும் என்ற கருத்தை மேற் சொல்லிய உவமையின் மூலம் விளக்கு கின்றார். ஆழமான நுட்பக்கருத்து கவிதையைக் கேளுங்கள்.

"போதம் மேலாகப் பண்டே புல்லிய மலநோய் தீர்ந்தும்
வாதனை தாக்கு மாபோல்; மழைப்பெயப் மாறித் தீர்ந்து
காதல் செய்து உறையும் புள்ளும் மாக்களும் கவன்று
நெஞ்சம்
நோதக மரங்கள் எல்லாம் நுன்துளி துவற்றும்மாதோ"

இத்தகைய கவிதைகள் சாவாப் புகழ் படைத்தவை யாகும்.

உலகோர் எல்லோரும் ஓடி உழைக்கின்றார்கள், உரிமை முரசு கொட்டுகின்றார்கள், எதற்காக? பொருளுக்காக,

பொன்னுக்காக, வேலிக் கணக்கில் நிலங்களுக்காக. இதை கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை பார்க்கிறார். பார்த்து வியப்போடு கேட்கிறார். இங்ஙனம் ஓடிஓடிச் சேர்க்கும் வீடும், விளைநிலமும், தோப்பும் மாடும் நமக்கு நிலையானவைதானா? இவை எப்பொழுதும் எங்கும் தொடர்ந்து வருமா? அவை இருந்த இடத்திலேயே இருப்பவை தானே. உடம்பு எங்கே கிடைக்குமோ அங்கேயே கிடக்கும் இந்த உடமையெல்லாம். அதுபோல அல்லாமல் என்றும் எப்பொழுதும் தொடர்ந்து வருகின்ற துணைவன் அல்லவா முருகன்? அவனைக் கூப்பிடவேண்டாமா? அவனைத் தேடி சுகமடைய வேண்டாமா? என்று அழகு சொட்டும் தமிழில் கவிஞர் கேட்கின்றார். கவிதையின் அமைப்பு அற்புதம். ஆழமோ சொல்லும் தரத்தன்று. உணர்த்தும் கருத்தோ மிகச்சிறந்தது. கவிதையைக் கேளுங்கள்.

*"முத்தைய்யா : வேலா! முருகா! என ஓதும்*
*சொத்தையே தேடிச் சுகமடைவீர். நித்தம் இவ்*
*வீடும் களமும் விளைநிலமும் தோப்புகளும்*
*மாடும் சதமாகுமா?"*

என்று கேட்கிறார். எவ்வளவு அழகான உபதேசம், எல்லோரும் முருகா முருகா என்று சொல்லி பாடிப்பரவி அவன் திருவடிகளையே சொத்தாகச் சேர்ப்போமாக.

# 12

# சிலம்பு நெறி

## வெற்றிக்கு வழி

*வாழ்க்கை மலர்ப் பாதையன்று. வாழ்க்கை கரடு முரடான மேடு பள்ளங்களையுடையது. அது மட்டுமா? மனித உருவில் கொடிய விலங்கினங்கள் மறைந்து வாழ்ந்து தீமைகள் செய்யும். இத்தகு மனித வாழ்க்கை அமைப்பில், வெற்றி பெறுதல் எளிதன்று. பகையை வரவேற்றுச் சந்திக்கும் மன உறுதி வேண்டும்; வெற்றி பெற வேண்டும்.*

*பகையைக் கண்டு அஞ்சவேண்டியதில்லை. பகைவன் ஒருவகையில் நமக்குத் தற்காப்பு உணர்வைக் கூடத் தருகிறான். பகைவனைக் கூடப் பாராட்டக் கற்றுக் கொள்ள வேண்டும்.*

*"நாசம் வந்து உற்ற போதும்*
*நல்லதோர் பகையைப் பெற்றேன்!"* (கும்ப. வதை. 31)

*என்று இராவணன் கூறுவதாகக் கம்பன் கூறுவான். பகைவனைப் போற்றும் பண்பு, வரலாற்றில் இடம் பெற்ற மாபெரும் தலைவர்களுக்கு இருந்தது.*

ஆனால் இன்று நண்பர் யார்? வேண்டியவர் யார்? உறவினர் யார்? தெரிந்தவர் யார்? பகைவர் யார்? என்றெல்லாம் எளிதில் இனம் கண்டுகொள்ள முடிவதில்லை.

இன்று மனித உறவுகளின் அருமைப் பாட்டை உணர்ந்து பழகுவோர் அருகிவிட்டனர். எங்கும் இலட்சிய அடிப்படையிலான உறவு இல்லை! தோய்ந்த அன்பும் இல்லை! எல்லாம் இலாப நோக்கு!

சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சி செய்பவர்களைவிட, இலாப நோக்குடைய சந்தர்ப்ப வாதிகளைவிட, பகைவர்கள் ஆயிரம் மடங்கு நல்லவர்கள்!

பகைவர் யார்? அதற்கும் இலக்கணம் உண்டு. நல்ல பகைவர்கள் வெளிப்படையாக எதிர்த்து நிற்பார்களே தவிர, சூது செய்ய மாட்டார்கள்! துரோகமும் செய்ய மாட்டார்கள்! எந்தக் காரணத்தை முன்னிட்டும் மறைந்தும் மறைத்தும் ஒழுக மாட்டார்கள். இன்று இத்தகு நலம் செறிந்த பகைவர்களைக் காண இயலவில்லை.

இன்று மலிந்து வருவது “சின்னப்புத்தி”. இந்த சின்னப் புத்தியுடையவர்கள் ஒருவரை ஒருவர் அழித்துக்கொள்ளவே முயற்சி செய்வர். இவர்களிடம் திறந்த மனமும் இல்லை! திறந்த வாழ்க்கையும் இல்லை! சூது நிறைந்தவர்களாக இருப்பர். நேரில் நண்பராக நடிப்பர்; உறவினராக மேவிப் பழகுவர்! எல்லாம் நாடகமேயாம்!

சின்னப் புத்தியுடையோர் இடர் உற்றுழி இடறி விடுவர். வீழ்ந்த இடத்தில் குழி பறிப்பர்! இவர்களிடத்தில் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். பகைவர்களைவிடக் கூட இந்த வங்கு மனம் கொண்ட நாய்கள் தொல்லை தர முயலும். ஆதலால் வாழ்க்கையில் வெற்றிகளைப் பெற அல்லது பொருளைப் பொருதொழிய நட்போ, பகையோ

முற்றாகக் காரணங்களாகா! வாழ்கின்றவனுடைய மன உறுதிதான் காரணமாக முடியும்.

புதை மணலில், சகதியில் அகப்பட்டுக் கொண்ட உரம் மிக்க காளைகள் படுக்கா! தலையைக் குனிந்து மூச்சை அடக்கி, காலை மடக்கி எழும். அந்த முயற்சியைப் பார்த்தாவது மனிதன் தன் முயற்சியைப் பற்றிக் கற்றுக் கொள்ளவேண்டும்.

ஏதாவதொன்றைச் செய்து கொண்டிருப்பவர்கள் எல்லாரும் முயற்சி உடையார் என்று ஏற்றுக் கொள்ளப் பெற மாட்டார்கள். வேலைகள் குறித்த வேளைகளில் குறித்த பயன் கூடும் வண்ணம் செய்து முடிக்கப் பெறுதல் வேண்டும்.

இன்று, கடமைகளைக் காலத்தில் செய்பவர்களைக் காண்பதரிது. அது மட்டுமா? எந்த ஒரு பணியையும் கடமையாகச் செய்து வெற்றி காணாமல் இடையறவுபட்டு அல்லலுறுவோர் பலர். ஒரு சிறு இடர்ப்பாட்டைக்கூடத் தாங்க முடியாமல் துன்புறுவோர் எப்படி வாழ்க்கையில் வெற்றிகளைக் குவிக்க முடியும்?

அறிவியல் முறைப்படி இடர்ப்பாடுகளும் துன்பங் களும், வாழும் உயிர்ப்புள்ள மனிதனைத் தூண்டித் தொழிற் படுத்தி வளர்க்கும்.

சோழன் கரிகாலன் வடபுலம் நோக்கிப் படை யெடுத்துச் செல்கிறான். வடபுலத்து நிலங்கள் எல்லாம் அவன் வெற்றியை ஏற்றுக் கொண்டன. தமிழ்ப் பேரரசு கால்கொள்கிறது. இந்தியாவுக்கு அப்பாலும் செல்ல ஆவல்! ஊக்கம்! ஆனால், இமயமலை குறுக்கே நிற்கிறது! இமயமலை உச்சியில் தமிழ்ப்பேரரசின் சின்னம் பொறிக்கப் பெறு கின்றது!

கரிகாலன் எதிர்பாராது சோழ அரசுக் கட்டிலில் ஏறியவன்! ஆயினும், சோழன் கரிகாலன் வீரத்தால் தமிழரசு பேரரசு ஆயிற்று; இமயத்தின் உச்சிவரை பரவிற்று. எழுச்சித்

தன்மையுடைய வீரம் கூடப் பல சமயங்களில் மண்ணாள்வோருக்கு வந்துவிடுவது உண்டு. ஆனால் கரிகாலன் குடிமக்கள் நலன் நாடும் பேரரசாகவும் விளங்கினான்! கல்லணைக்கட்டி நீர்ப்பாசன வசதிகளை முறைப்படுத்தினான்.

வாழ்க்கையில் தோல்விகளைத் தரக்கூடிய ஆற்றல் பகைக்கு இல்லை; இருக்க முடியாது. அசைவில்லாத - நடுக்கம் இல்லாத - சோர்வில்லாத ஊக்கம் இருந்தால் வாழ்க்கையில் வெற்றிகளைக் குவிக்கலாம் என்பதைச் சிலப்பதிகாரத்தால் உணரலாம்!

..................

"இருநில மருங்கில் பொருநரைப் பெறாஅச்
செருவெங் காதலின் திருமாவளவன்

..................

அசைவில் ஊக்கத்து நசைபிறக் கொழியப்
பகைவிலக் கியதுஇப் பயங்கெழு மலையென
இமையவர் உறையும் சிமையப் பிடர்த்தலைக்
கொடுவரி ஒற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு"

(சிலப். 5: 89-98)

என்னும் சிலப்பதிகார வரிகள் எண்ணத்தக்கது.

## அறிந்தவர் கடமை

வாய் படைத்தோரெல்லாம் பேசுகின்றனர். பொருள்களைச் சமைத்துச் சுவைத்து உண்ணக் கற்றுக் கொண்ட சமுதாயம், உணர்வுகளைச் சமைத்துக் கொண்டு இனிய சொற்களைக் கூறக் கற்றுக் கொண்டபாடில்லை.

பேசுவதெல்லாம் பேச்சா? சொல்லுவதெல்லாம் சொல்லா? "வறுமை என்றது செல்வத்தில் மட்டுமல்ல; சொற்களிலும் கூட உண்டு" என்பார் இளங்கோவடிகள். "வறுமொழியாளர்" என்று குறிப்பிடும் சிலம்பு.

வறுமை நிறைந்த சொற்களைப் பேசுபவர்கள் "வறுமொழியாளர்." இதனையே திருக்குறள் பயனற்ற சொல் என்று கூறுகிறது. பயனற்ற சொற்களைக் கூறுபவர்களைப் 'பதடி' என்று வள்ளுவம் திட்டுகிறது.

சொற் குற்றத்தில் தீயது புறங்கூறல். அதாவது ஒருவரைப் பற்றி அவர் இல்லாத இடத்தில் கூறுதல். அதுமட்டுமா? கண் எதிரில் முகமன்; புகழ்ச்சி! புறத்தே பழிதூற்றல்! இந்தக் குற்றம் மலிந்து வருகிறது. "புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்கிறவர்கள், அறத்திற்காக என்று கூறுவார்களாம். அங்ஙனம் கூறுவது பொய்! நம்பாதே!" என்று எச்சரிக்கை செய்கிறார் திருவள்ளுவர்.

அடுத்துவரும் சொற்குற்றம் மிகக் கொடிது! அதாவது கோள் சொல்லுதல். அம்மம்ம! காலத்திற்குரிய கடமைகள் இல்லாத சோம்பேறிகளின் தொழில், கோள் சொல்லுதல்; பகை வளர்த்தல். இன்று கோள் சொல்லிப் பிழைத்துத் திரிபவர்கள் எண்ணிக்கையும் மலிந்துவிட்டது.

அடுத்தது, சொற்குற்றம். தான் நினைப்பவையெல்லாம் நடந்தவை போலப் பேசுதல். இவர்கள் மற்றவர்களைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். இவர்கள் பரப்பும் தீமை இருக்கிறதே அது, ஒருவரைத் தற்கொலை செய்து கொள்கிற அளவுக்குக் கொண்டு போய் விட்டுவிடும். "ஊரார் தத்தம் மனத்தன பேச எஞ்ஞான்று கொல் சாவதுவே" என்பது திருவாசகம். தத்தம் மனத்தன பேசுவோர் மிகவும் மோசமானவர்கள்.

சமுதாய உறவுகள் வளரவும், பாதுகாக்கப் பெறவுமே நெறிமுறைகள். சாலை வழிச்சென்றால் ஊரையடையலாம் என்பதைப் போல, உறவுகளுக்குரிய நெறிமுறைகளை அறிந்து உணர்ந்து ஒழுகினால் உறவுகள் வளரும்; பயன்தரும்; உறுதி யானதாக அமையும்.

நெறிமுறைகள் பிறழப் பெறுவதால்தான் உறவுகள் நீடிப்பதில்லை; நிலைத்து நிற்பதில்லை; நண்பர்கள் பகைவர்களாகின்றனர்; உடன் பிறந்தவர்கள் கொலை யாளிகள் ஆகின்றனர். இவையெல்லாம் இயற்கையல்ல; தவிர்க்க முடியாதனவுமல்ல.

எல்லாவற்றிற்கும் நெறி முறைகள் உண்டு. நமக்கு எவையெல்லாம் நன்மையாக இருக்கின்றனவோ அவையெல்லாம் மற்றவர்களும் அடைய வேண்டும் என்று எண்ணவேண்டும். உறவுகள் ஒத்துழைப்பும் உதவியும் கொடுத்துப் பெறுவனவே தவிரத் தாமாக வருவன அல்ல.

உலகின் எல்லாத் துறைகளிலும் 'ஒரு தலைக் காமம்' கொடிதே! மற்றவர்கள் மனம் வருந்த எதையும் கூறுதல், செய்தல் தீது; நெறியன்று, ஆயினும் உலகியலில் இந் நெறி நிற்போர் சிலரே.

ஆதலால், அறிந்தோரே சமுதாயப் பொறுப்புடையராக நடந்து கொள்ளுதல் வேண்டும். அறிந்தோராக இருப்பவர்களே சமுதாயத்தை அழைத்துச் செல்ல வேண்டியவர்கள். அவர்களிடம் சமுதாயம் கூடுதலாக எதிர்பார்க்கிறது. அறியாதவர்கள் பலர்; அறிந்தவர்கள் சிலர். அறியாதவர்கள் நெறியில் நீங்கியவர்கள்.

நெறியில் நீங்கியவர்களிடம் நல்லன எதிர்பார்க்க இயலாது; முடியாது. ஆதலால் நெறியில் நீங்கியவர்கள் வருந்தத்தக்கன கூறினார்களேனும், "அவர்கள் கூறவில்லை; அவர்கள் அறியாமையின் காரணமாக கூறுகின்றனர்" என்று அறிவுடையார் கருதி அதனைத் தாங்கிக் கொள்ள வேண்டும்.

கவுந்தியடிகள் மாதவத்தர்; நோன்பினால் உயர்ந்தவர்; இரக்கம் பெரிதும் உடையவர். கவுந்தியடிகள் கோவலனிடம் காட்டிய பரிவை, எவரிடம் யார் எதிர்பார்க்க முடியும்? ஆயினும், கோவலன் – கண்ணகி பற்றிச் சிறியோர் கூறிய தீய

சொற்களை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை! சபித்துவிடுகிறார்!

மாதவத்தராகிய கவுந்தியடிகளுக்கு, மனைத்தவத் தாளாகிய கண்ணகி நெறியுணர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டது. கவுந்தியடிகள் பிறழ்ந்தது கோவலன் – கண்ணகி மீதுள்ள பரிவினாலேயே! இயல்பாகச் சினம் கொள்பவ ரல்லர், இன்றைய சமுதாய வாழ்க்கையில்,

*நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்*
*அறியாமை என்று அறிதல் வேண்டும்*

(சிலப்: 10: 237–238)

என்ற கண்ணகியின் அறிவுரை முற்றாகக் கொள்ளத்தக்க அறிவுரையாகும்.

## திரிந்த கோலும் திரிந்த நிலமும்

அரசியல் ஓர் அறம்; அரசியல் முறைகள் மனித குலத்துக்கு மறைமொழி போலப் பேணத் தக்கன. அரசியல் நிலத்திற்கு நீர் போல; உடலுக்கு உயிர் போல; பெண்ணிற்குக் கற்புப் போல மனித குலத்திற்கு இன்றியமையாதது. சிறந்த ஆட்சி தனிமனித ஆவல்களுக்கு, ஆர்வங்களுக்கு எதிராக அமையாது. ஆனால் அந்த ஆவல்கள், ஆர்வங்கள் நெறிமுறைப்படி அடையத்தக்கன என்று நெறிப்படுத்தும் – முறைப்படுத்தும்.

சிறந்த ஆட்சி முறை, தனிமனிதனுக்குச் சமுதாய உணர்வுகளையும் உறவுகளையும் வளர்த்துத் தரும். சமுதாய மோதல்களைத் தூண்டாது; வளர்க்காது. சிறந்த ஆட்சி நிலவும் நாட்டில் உள்ள மக்கள், அரசின் உறுப்புக்களாகத் தங்களை எண்ணுவர்; அரசை ஏமாற்ற மாட்டார்கள். அரசும் மக்களை வஞ்சிக்காது; ஏமாற்றாது.

அரசியல் அறம் முறைப்படி நிகழுமாயின் நாட்டில் வளம் பெருகும்; வறுமை இருக்காது; அமைதி நிலவும்;

கலகங்கள் நடைபெறா; உழைப்பு உயர்தவம் என்று போற்றப் பெறும்; உற்பத்தி பெருகும். வல்லோராயினும் வரையறைக்கு உட்படுத்தப்படுவர்; மெலியோர் நலியார்; எங்கும் இன்பம் தழுவிய ஆக்க வழியிலான சமூக உறவுகள் நிலவும் கால்கொள்ளும்.

அரசு, மனித குலத்தின் அனைத்துச் சக்திகளையும் பயன்படுத்தி வளர்க்கும்; வழிப்படுத்தும். அரசின் கடமை, தவறுகள் குற்றங்கள் நிகழாத-செய்வதற்குரிய அவசியம் ஏற்படாத சமுதாயத்தைக் காண்பதேயாம். அரசு, சமுதாயத்தை வளர்க்கும் சாதனமேயாம். அதற்குத் தண்டனை வழங்கும் அதிகாரம் உண்டு. ஆயினும், அது கடைசி ஆயுதம்தான்! இத்தகைய நல்லரசை மனிதகுலம், அரசியல் சிந்தனைக் காலத்திலிருந்து பெற்றதா? இல்லவே இல்லை!

ஆட்சி செய்தல் பொறுப்புள்ள பணி. இந்தப் பணியைச் செய்வதற்கு ஒரு மனிதச் சிந்தனை போதுமானதன்று. ஏன்? ஒரு நிகழ்வை அணுகும் முறையிலும் அளந்தறியும் வகையிலும் ஒரு மனிதர் தவறுதல் கூடும். அதனால், முன்னாளில் அரசர்கள், அமைச்சர்களுடன், ஐம்பெருங்குழுவுடன், எண்பேராயத்துடன் கலந்துபேசி முடிவெடுத்துச் செயற்படுதல் என்ற முறை இருந்தது.

காலப்போக்கில் கலந்தறியும் இயல்பு இல்லாமல் போயிற்று. ஒரோவழி யிருந்தாலும் கலந்தறியும் பணிக்குத் துணையாகாதவர்கள் சார்புகள் உடையவர்களானார்கள். அதனால் கலந்தறிதல் போதிய பயன்தரவில்லை.

அரசு முறையில் "ஒருமனிதமுறை" மேவியதால் மனிதகுலம் பயனடையவில்லை என்ற மனக்குறையில் பலர் கூடி ஆட்சி செய்யும் மக்களாட்சி முறையைக் கண்டனர். ஆயினும் இன்றுவரை செழிப்பான - முறையான மக்களாட்சியைக்காண இயலவில்லை. மக்களாட்சி

வடிவமைப்பில் "தனி மனிதரே" ஆட்சி செய்யும் இயல்பு இன்றைய மக்களாட்சி முறையில் அமைந்திருக்கிறது. ஆட்சி முறையில் தவறுகள் பெருகுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதே தவிர, குறைய வழி காணப் பெறவில்லை.

ஆட்சியைவிட, கட்சிகள் பெரிதாகி விட்டன. இன்று நாட்டில் வளர்க்கப் பெறுவது கட்சிப் பற்றே தவிர, நாட்டுப் பற்றல்ல! இவ்வாறு முறை பிறழ்ந்தபோதெல்லாம் அரசு நெறிமுறை திறம்பியுள்ளது. அரசு கெட்டுப்போய் வலிமை குன்றிப் பழிப்புக்கு ஆளாகி வரலாற்றுக்கு அடிமையாகி அழிந்திருக்கிறது. அரசியல் மரபில் வந்த அருளாளர் இளங்கோவடிகள், இந்நிலை கண்டு இரங்குகின்றார்.

ஆட்சி இயற்றும் அரசியல் தலைவன், அரசியல் முறை தெரிந்த, நல்லாட்சி தவிர வேறெதையும் நாடாத நல்லோருடன் கலந்து செய்யாததால் எங்கும் முறை பிறழ்ச்சி!

உழைப்பவர் வருந்துவர்; உறிஞ்சும் உலுத்தர்கள் வாழ்வர்; உழைப்புக்கு உரிய ஊதியம் கிடைக்காததால் உழைப்பாளர் வருந்துவர்; உற்பத்தி குறையும்; வறுமை வளரும்; ஆறலை கள்வர் தோன்றுவர்; களவும் கலகமும் வளர்ந்து அமைதிச் சூழ்நிலையைக் கெடுக்கும்; அரசியல் என்பது இல்லாததுபோல நாடு காட்சி தரும்.

அரசியல் முறை பிறழ்ந்த நாட்டில் அவலம் பெருகும்; அந்த நாடு, பாலை நிலம் போல விளங்கும்; நிலத்தின் வகையில் பாலை நிலம் கிடையாது; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நிலம் நான்கு வகையினதே.

இயற்கையின் தலைமைக் கோள் ஞாயிறு தம் நிலை கெடுதலால், வளம் கொழிக்கும் குறிஞ்சிநிலம் வளம் குன்றுகிறது. முல்லை நிலம் முழுதும் கெடுகிறது. வளம் மிக்க தம் இயல்பைக் குறிஞ்சியும் முல்லையும் இழந்து விடுகின்றன. காதலுக்கும் களிப்புக்கும் உரியதாயிருந்த இந் நிலங்கள் மக்களுக்குத் துன்பம் தரும் பாலை நிலமாகி விடுகின்றன.

சிறந்த அரசியல் முறை இல்லாத நாட்டில் இன்பம் இல்லை; அமைதி இல்லை; பாதுகாப்பு இல்லை. இத்தகு இழிநிலை வயப்பட அரசைப் பெற்றுள்ள நாடு, பாலைவனம் போன்றது. இதனை இளங்கோவடிகள் எடுத்துக் கூறுவதறிக.

"கோத்தொழி லாளரொடு கொற்றவன் கோடி
வேத்தியல் இழந்த வியனிலம் போல
வேனலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
தானலந் திருகத் தன்மையிற் குன்றி
முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்."

(சிலம்பு 11:60–66)

என்பது சிலப்பதிகாரம்.

## திருந்த மாட்டார்களா?

மக்கள், உருவத்தால் மக்கள் அல்லர். "உறுப்பொத்தல் மக்கள் ஒப்பன்று" என்று திருக்குறள் கூறும். ஏன்? "மக்களே போல்வர் கயவர்" என்றும் திருக்குறள் மக்கட் பண்பில்லா தாரை ஏசுகிறது. மக்கட் பண்பில்லாதவர்கள், சிந்திக்கும் பழக்கம் இல்லாதவர்கள்; சிந்திக்க மறுப்பவர்கள்; அறிவில்லா தவர்கள்.

ஆயினும் தங்களது அறியாமையையே அறிவு என்று நம்பி ஆட்டம் போடுபவர்கள், ஆணவத்தின் உருவங்களாகத் தலைதடுமாறி நடப்பவர்கள்.

இவர்களின் செவிகள் கேட்கும் திறன் உடையவை யல்ல. இவர்களின் செவிகள் தோட்கப் படாத செவிகள்! இவர்கள் பிறப்பால் மக்கள்! அறிவால், உணர்வால், ஒழுக்கத்தால் விலங்குகள்! இத்தகு மக்களை இழிவு உபசார நிலையில் நெடிய ஒலியோடு 'மாக்கள்' என்று அழைத்தல் தமிழிலக்கிய மரபு.

மக்களாகப் பிறந்தோர், இயற்கை வழங்கிய அறிவு வாயில்களைப் பயன்படுத்தி, மக்களுக்குரிய தகுதியினைப் பெறுதல் வேண்டும். வாழ்க்கையின் இலட்சியமே மக்களை அறிவு நலமுடையவராக்குதலும், பண்பு நலமுடையோ ராக்குதலுமே. இவ்விரண்டு குறிக்கோளும் இன்று அடையத் தக்க வழியில், மக்களுடைய வாழ்க்கையின் நடைமுறை இல்லை.

வாழ்க்கைக்குப் பொறிகளும் புலன்களும் துய்ப்பனவும் கிடைத்தது எதற்கு? உண்டு, கூடிக் களித்து மகிழ மட்டுமா? இல்லை; உய்யும் நெறியில் செல்லத்தான்! ஆற்றல் மிக்க அறிவு வாயில்கள், இன்று பயனற்றுக் காமக் களியாட்டங் களுக்கும் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகிய தீமைகளை வளர்ப்பதற்குமே பயன்படுகின்றன.

இன்று எங்கும் குடும்பம், சுற்றம், சமூகம், நாடு என்ற பாங்கு வளரவில்லை. வாழ்க்கையின் தனி உறுப்புகளாகிய காதல், நட்பு ஆகிய துறைகளும் செழிப்பாக இல்லை. இப்பொழுது ஒரே இலட்சியம் “பிழைத்துவிடு! எப்படி யாயினும் பிழைத்துவிடு” என்பதுதான்!

அரசு அமைப்புக்கள், முதிர்ச்சியும், உயர் இலட்சியமும் உடையவர்களால் இயக்கப் பெறாமையால் தேர்தல் போராகவே அமைந்துவிடுகிறது; ஒழுக்கச் சிதைவுகளும் வளர்ந்து வருகின்றன. ஆனால், இயல்பில் ஒழுக்கத் தவறில்லாத – ஆனால் சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட ஒழுக்கத் தவறுகள் தண்டனைக்கு உள்ளாகின்றன.

ஏன் இந்த அவலம்? அதுவும் புகழ்பூத்த வரலாறு படைத்த தமிழ்நாட்டுக்கு! பாண்டிமாதேவியின் கற்புநலம் இந்த நாட்டின் தனிச்சிறப்பல்லவா? நாள்தோறும் வரும் செய்திகள் இன்று ‘கற்பு’ என்பது கேலிக்குரிய பொருளாகி விட்டது, என்றே பறைசாற்றுகின்றன.

ஒரு காலத்தில் தேர்க்காலில் மைந்தனை இட்டு நீதி வழங்கியது அரசு. ஆனால் இன்று யாரையும் விசாரிக்கக் கூட இயலாமல் ஊர்க்காவல் நிலையத்தில் முற்றுகை! அரசியல் தலையீடுகள்; தப்பித் தவறி ஊர்க்காவல் நிலையத்தில் அகப்பட்டுக் கொண்டுவிட்டால் அங்கு விசாரணை இல்லை! சித்திரவதை! மனச்சாட்சியுடைய வர்கள் 'காயம்பூ'வும் 'இராச'னும் காவலர்களால் அடித்துக் கொல்லப்பட்டதை மறக்க இயலுமா? இந்த நாட்டில் நீதி நூல்களுக்குப் பஞ்சமா? இதிகாச புராணங்களுக்குத்தான் பஞ்சமா? மேடைகளுக்குத்தான் பஞ்சமா? அல்லது உபதேசங்களுக்குத்தான் பஞ்சமா?

உலகிலேயே இந்தியாவில்தான் புராணங்கள் அதிகம்; உபதேசியார்கள் அதிகம்! ஆனால் நிலைமை என்ன? மதிப் புணர்ச்சியுடன் போற்றப்பட வேண்டிய பல்கலைக்கழகங்கள் கூடப் போராட்டக் களங்களாகத்தான் மாறி உள்ளன. போராட்டத்திற்குரிய நியாயங்கள் உண்டா? இல்லையா? என்பதல்ல கேள்வி.

உரிமைகளை அடைய அணுகும் முறைகளைப் பற்றித்தான் நமது கவலை! போராடுபவர்கள் மீது மட்டும் குறையில்லை. ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்களும் போராடினால்தான் பணிகிறார்களே தவிர, நியாயங்களைக் காலத்தில் ஆராய்ந்தறிய முன்வருவதில்லை.

இம் மனப்போக்கு, அநியாயங்களைத் தூபமிட்டு வளர்க்கிறது. இந்தக் குறைகளையெல்லாம் மனம் வைத்தால் எளிதில் தீர்க்கலாம்; தீர்த்துக் கொள்ளமுடியும். . ஆயினும் மனம் வரவில்லை. ஏன்? மக்கள் உணர்ச்சியைவிட, மாக்கள் உணர்ச்சியே மேலிட்டிருக்கிறது. சராசரி மனிதனிடத்தி லிருந்து மிகப் பெரிய இடம் வரையில் ஒரே நிலைதான்!

தீண்டாமை குற்றம். தீண்டாதார் என்று ஒதுக்குதல் கூடாது. சாதி வேற்றுமை தீது. சாதி வேற்றுமைகளை அறவே

விலக்க வேண்டும். "எல்லாரும் ஓர் குலம்" என்ற கருத்து சங்க காலத்திலிருந்து இலக்கியங்களில் ஒரே மாதிரியாக உரத்த குரலில் அறிவுறுத்தப்பட்டு வருகிறது. யாராவது கேட்டார் களா? பின்பற்றினார்களா? படித்ததில் என்ன குறைவா? உரைகள் எழுதி அச்சிட வில்லையா? பட்டி மன்றங்களில் பேசி மகிழவில்லையா?

ஆனால், நடைமுறை என்ன? "யாதும் ஊரே யாவரும் கேளிர்!" என்பது என்னாயிற்று? தெருச் சண்டைகள்தானே வளர்ந்தன! குருதிக் கலப்புடையவர்கள் கூட, சுற்றத்தாராக இல்லையே! அண்ணன் - தம்பி சண்டை, கணவன் - மனைவி சண்டை மலிந்து வருகின்றனவே! "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்! என்பது என்னாயிற்று?

திருமுறைகளைப் போற்றிப் பூசனை செய்யும் இடங்களிலெல்லாம் சாதிவெறி முடைநாற்றம் வீசுகிறது! இன்றும் தனித்தனிப் பந்தியே போடுகின்றனர்! அது மட்டுமா? திருமந்திரத்திற்குப் புது உரை கூறுகின்றனர். சிவனை வழிபடும் உயர்ந்தோர் ஒருகுலமாம். இது சிறப்பு விதியாம். பொதுவிதியல்லவாம்! இது அந்தச் சாதி வெறியாளர்கள் கற்பிக்கும் அனுபவ உரை. "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்" என்பது என்னாயிற்று?

"பிறக்கும் வகையினால் ஒத்தன" என்று உரை எழுதி, உரையைக் கெடுத்ததுதான் மிச்சம்! "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே!" என்பது என்னாயிற்று? இந்தப் பாடலைப் பாராயணம் செய்வோர், "தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த பெண்கள், சட்டை போட்டதால் மழை பெய்யவில்லை" என்று கூறும் அளவுக்கு அப்பரடிகளின் கொள்கை வெற்றி முழக்கம் செய்கிறது!

இவர்கள் படித்தால் என்ன? பாராயணம் செய்தால் என்ன? கற்றால் என்ன? கேட்டால் என்ன? திருந்த

மாட்டார்கள்! மக்களாக இருந்தால் அல்லவா திருந்த? தலையெழுத்தில் கால் நீட்டியாகிவிட்டது. கால் அதிக மானால் விலங்குகள் என்றுதானே பொருள்! விலங்குகள் என்ன பாவம் செய்தன, இவர்களோடு ஒப்பிட்டுக் கூற? உவமித்துக் கூற? விலங்குகளுக்குத் தோற்றம் போலவே வாழ்க்கை முறை! ஏமாற்றங்கள் இல்லை!

மாக்கள் நிலை அப்படியல்லவே. அவர்கள் துன்பப் படும்பொழுது மட்டுமே மயங்குவர்; அழுவர். இவர்களைத் திருத்த கரும்பைப் பயன்படுத்தும் வழியே பயனுடைய தாகுமா? வேறு வழியில்லையா?

"மறத்துறை நீங்குமின் வல்வினை யூட்டுமென்று
அறத்துறை மாக்கள் திறத்தில் சாற்றி
நாக்கடிப் பாக வாய்ப்பறை யறையினும்
யாப்பறை மாக்கள் இயல்பிற் கொள்ளார்
தீதுடை வெவ்வினை உருத்த காலைப்
பேதைமை கந்தாப் பெரும்பே துறுவர்"

(சிலம்பு ஊர்காண் 27–32)

என்னும் சிலப்பதிகார அடிகள் எண்ணத் தக்கன.

## பெண்டிரும் உண்டு கொல்!

கொலையுண்ட கோவலன் பிணத்தை, கொலையுண்ட இடத்தில் கண்ட கண்ணகி, பாண்டியனின் அவைக்களத்தை நோக்கி, நடக்கிறாள் நீதி கேட்க! ஊர் முழுதும் நீதி கேட்டு நடக்கிறாள்! அப்பொழுது முதன் முதலாக, கண்ணகி, "பெண்டிரும் உண்டு கொல்! பெண்டிரும் உண்டு கொல்!" என்று அறை கூவி அழைத்துக் கேட்கிறாள்!

ஏன்? பெண்டிர் இருந்திருந்தால் கோவலன் கொல்லப்பட்டிருக்கமாட்டானா? ஒரு நாடு, ஒரு நகரம் என்றிருந்தால் பெண்கள் இல்லாமலா இருப்பார்கள்? கணவனை இழந்த துன்பத்தின் அனுபவத்தை உணரும்

நிலையில் "பெண்டிர் இல்லையா?" என்று கேட்டாள் என்பர். இது பொருந்தாது. பெண்டிர் என்பது பொதுப் பெயர். இது என்ன கேள்வி?

பெண் என்பவள் பேணத்தக்கவள் என்பது மட்டுமல்ல. அவள் மற்றவர்களையும் பேணுபவள் என்பதும் பொருள். அதனால்தானே பெற்றவளாக இல்லாத பெண்ணையும் "தாய்" என்று அழைக்கும் மரபு, மக்கள் மன்றத்தில் வழக்கில் இருந்து வருகிறது. பெண் எல்லா உயிர்களையும் பேணிக் காக்கும் இயல்பினள்.

அதனாலன்றோ ஐங்குறுநூறு அம்மையைப் பங்கிலுடைய ஐயன் திருவடிகளில் உலகம் முகிழ்த்தது என்று வாழ்த்துகிறது. அம்மையோடு அப்பன் உடனுறைதலாலே உலகு இயங்குகிறது; உயிர்கள் இன்புற்று வாழ்கின்றன என்று திருவாசகம் கூறும்.

பெண்ணின் நல்லாளொடு பொருந்தியவனாகப் பிரான் இருப்பதனாலேயே பெருமானுக்கு அருளிச் செயல் இருக்கிறது என்று திருமுறைகள் பறை சாற்றுகின்றன. பெண்மை என்பது மகவெனப் பல்லுயிரையும் ஒக்க நோக்கும் பேரருள் திறத்தது. அதனாலன்றோ கடவுளின் கருணையைத் தாயன்பு போன்றது என்று உவமித்துக் கூறினர்.

உண்மையான பெண்டிர் - பெண்மைக்குரிய நலமனைத்தும் அமைந்த பெண்டிர் வாழும் ஊரில் நியாயங்கள் நிலவும்; நீதி நிலைத்து நிற்கும். அங்கு யாருக்கும் துன்பம் வராது. இது தமிழ்க் கொள்கை.

கோவலன் கொலையுண்ட நிகழ்ச்சியின் மூலம் மதுரையில் அருள் நலம் காக்கும் பெண்டிர் இல்லையோ என்ற முடிவுக்கு, கண்ணகி வருகிறாள்! மதுரையில் பெண்கள் இல்லாமல் இல்லை! இருந்தனர். ஆனாலும் திண்மையும் திறனும் மிக்க பெண்டிர் இல்லை.

பெண்கள் தம் நிலை இழந்துவிட்டனர்; போகப் பொருளாக மட்டுமே இருக்கும் நிலைக்குத் தாழ்த்தப்பட்டு விட்டனர்; இந்த இழிநிலைக்குச் சோழநாடு தள்ளப்பட்ட தனால்தானே நடுச்சந்தியில் மாதவி ஏலம் கூவி விற்கப்படுகிறாள்!

கோவலன், மாதவியிடத்திலேயே தங்கிவிட்டதை இடித்துக்கூறி, இல்லத்திற்கு அழைத்துவரும் பெண்கள் யாரையுமே காணோம்! கோவலனின் தாயும்கூட அப்படித் தான்! ஐயோ பாவம்! இரங்கத்தக்க நிலை! கண்ணகியின் தோழிகூட, கண்ணகியைக் காமவேள் கோட்டம் தொழ அழைக்கிறாளே தவிர, கோவலனை அழைத்து வரும் வாய்ப்பில்லை! இந்த அளவுக்குப் பெண்ணுலகு தரம் தாழ்த்தப்பட்டுவிட்டது.

மதுரையில் மட்டும் என்ன? பாண்டியன் அவைக் களம்! அத்தாணி மண்டபம்! பாண்டியன் அரசு இருக்கையில் அமர்ந்திருக்கிறான்! ஆடல் மகள் ஆடுகிறாள்! அரசன், ஆடலில் ஒன்றிக் கலந்து அனுபவிக்கிறான்! அரசிருக்கையில் உடனிருந்த பாண்டிமாதேவிக்குத் தாங்க முடியவில்லை! ஆனால் என்ன செய்கிறாள்? ஆடலை நிறுத்த அவளால் இயலவில்லை; இயலாத நிலை! அரசியானாலும் பெண்தானே!

ஆதலால், பாண்டிமா தேவிக்குத் தலைவலி வருகிறது! இல்லை! தலைவலி வந்திருப்பதாகச் சொல்லிப் பிரிகிறாள்! அந்தப் புரத்திற்குச் செல்கிறாள்! இதுதான் பாண்டியநாட்டு நிலை! இத்தகு பெண்டிர், பெண்டிர் அல்லர். போகப் பதுமைகள்! அணிகலன்களின் சுமை தாங்கிகள்! அவ்வளவு தான்!

இதனால்தான் கண்ணகி; "பெண்டிரும் உண்டு கொல்! பெண்டிரும் உண்டு கொல்!" என்று கேட்கிறாள்! அது

மட்டுமா? நல்ல பெண்டிர் முரட்டுத்தனத்திற்கு - வன் கண்மைக்கு மாற்று மருந்து!

தலைவனின் வாழ்க்கைத் துணையாய் அமைந்து அவனுடைய முரட்டுத் தனங்களையெல்லாம் அன்பியலால் மாற்றியமைத்து அவனைத் தெய்வமாக்குபவள் பெண்! அத்தகைய பெண்டிர் மதுரையில் இருந்திருந்தால் கோவலன் கொல்லப்பட்டிருக்க மாட்டான் என்பது கண்ணகியின் துணிபு.

ஆம், உண்மைதான்! பெண், சமுதாயத்தில் பாதி! பெண், வாழ்க்கையில் பாதியல்லள். பெண், வாழ்க்கை முழுதும் தாயாக, உடன் பிறந்தவளாக, மனைவியாக, தோழியாகத் தொடர்ந்து வருகிறாள்! திருவள்ளுவர் காட்டும் பெண், வாழ்க்கைக்குத் துணை நாடுபவள் அல்லள்; துணையாய் அமைபவள்; துணை நலமாக அமைந்து ஆக்கம் தருபவள்.

பெண்டிர்குலம் தரமானதாக அமைந்தால் தனி உடைமைத் தீமைகள் வளரா; கூட்டுக் குடும்பங்கள் நிலவும்; நாட்டில் களவு நிகழாது; கொலை நிகழாது.

பெண்டிர் குலம் ஆக்கத்தினைத் தரும் குலம்! இன்ப அமைதி காக்கும் குலம்! இன்றும் நமது நாடு துன்பங்களால் அலைக்கழிக்கப்படுகிறது. பெண்டிர் இல்லையா? இருக்கின்றனர். இப்பொழுது அவர்கள் தமிழ்ப் பெண்களாக இல்லை. தனி உடைமைப்பற்று, குடும்பப்பாசம் (அன்பு விலக்கல்ல) ஆகிய நச்சுக் குணங்களை எய்தியுள்ளனர். இன்றைய பெண்டிர்களில் பலருக்குப் பொதுமைக் குணம் இல்லை. நாடே வீடு ஆனால்கூட அவர்கள் மனநிறைவு பெறாத நிலை! இந்த நிலை மாற வேண்டும்.

படித்த பெண்கள் இன்று மிகுந்துள்ளனர். இவர்கள் திண்மையுடையவர்களாக விளங்கிப் பெண்மைக்குச் சிறப்புச்

சேர்க்க வேண்டும். பெண்களை விளம்பரப் பொருளாகக் கொச்சைப் படுத்துவதைக் கண்டு கொதித்து எழவேண்டும்.

பெண் பெருமைக்கு உரியவள்; பேணத் தக்கவள்; போற்றத் தக்கவள் என்ற மனப்போக்கு சமுதாயத்தில் உண்டாக வேண்டும். வாழ்வியலில், பெண்ணின் பெருமைக்கு எதிராக உள்ள சமுதாய விதிகளில் மாற்றம் காண வேண்டும்.

சராசரியாக வளர்ந்தவர்கள் கூட, கடைப்பிடிக்க முடியாத விதிகள், ஒழுக்க நெறிகள் வற்புறுத்தப் பெறுவதால், ஒழுக்கக் கேடுகளே தோன்றுகின்றன. பெண்ணியலுக்கு ஏற்ப நிலவும் பழந்தமிழ் நெறி, புத்துயிர் பெறவேண்டும்.

இப் பெண்டிர் குலம் நாட்டின் நாகரிகத்திற்கு அரண் செய்யவேண்டும். நாட்டில் மலிந்துள்ள தீமைகளைக் களைய, அவர்கள் அன்பின் ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும்.

பெண்டிர்கள் வாழும் திருநாடாக, பாரதம் மலர்தல் வேண்டும்! "பெண்டிரும் உண்டுகொல்!" என்ற கண்ணகியின் கேள்விக்கு விடை கண்டாக வேண்டும்.

## "சான்றோரும் உண்டு கொல்?"

கோவலன் கொல்லப்பட்டான்; கள்வன் என்று பழி சுமத்திக் கொல்லப்பட்டான். யாரால் கோவலன் கொல்லப் பட்டான்? நாடோடிகளால் அல்ல. நாடாளும் அரசனால் கொல்லப்பட்டான்!

கண்ணகி ஆற்றாது அலமந்து அழுகிறாள்! ஏன்? கணவனை இழந்த துன்பத்திற்காக அல்ல! கணவனை இழந்த துன்பம் கண்ணகியின் எழுச்சிக்குக் காரணமாய் அமைந்தது. அவ்வளவுதான்! பின் கண்ணகியின் வெகுளலுக்கு யாது காரணம்?

கோவலனைக் கொன்ற அரசு, பாதுகாப்புத் தர வேண்டிய நாடாளும் அரசு; நாட்டில் கள்வர்கள்

தோன்றாமல் காக்க வேண்டிய கொற்றம். ஆனால், அரண்மனையிலேயே திருடர்கள்! திருடு! இதற்கு வாழ வேண்டியவர்களை - வாழ வந்தவர்களைக் கொலைப் பலி கொள்வது, என்ன நீதி?

கள்வர்கள் - கொலையாளிகள் நாடாள்பவர்களாக விபத்துக்களால் இடம்பிடித்துக்கொண்டு, மற்றவர்களைக் கள்வர் என்று பழி சுமத்துவது நியாயமா? நீதியா? கொலைகாரர்கள், நல்லவர்களைக் கொலை செய்வதுதான் கொற்றமா? இத்தகைய முறைகேடான கொற்றம் எங்கு அமையும்? எப்படி அமையும்?

நாட்டில் சான்றோர்கள் யார்? பெருமைக்குரிய பெரியவர்கள் யார்? இது இன்று புரியாத புதிர்! ஒருவர் உணவைச் சுருக்குகிறார்! வாய் பேசா மௌனியாக இருக்கிறார்! காதலின்பத்தை நாடாமலே புலனடக்கத்துடன் வாழ்கிறார்! இவையெல்லாம் சிறப்புத்தான்! ஆயினும் இவ் வியல்புகள் அருமையானவையா?

எத்தனையோ பேர் இந்த நாட்டில் ஒருவேளை உணவு, உண்ணுகிறார்கள்; ஊமைகளாகவே பிறந்து வாழ்வோர் பலர்! பெண் யானைகள் கூடப் பிரிக்கப்பெற்று நாட்டில் வளர்க்கும்போது பிரமசரியம்தான் காக்கின்றன. அதனால், பெருமைக்குரியன ஆகிவிடுமா? கண்கண்ட தெய்வங்களாகி விடுமா? இவையெல்லாம் உடலால் செய்யும் தவம்! பழக்கத்தால் வரும் இயல்புகள்!

நன்றாக உண்பதோ, களித்துப் பேசி மகிழ்ந்து வாழ்வதோ, காதலின்பத்தில் திளைத்து வாழ்வதோ பெருமைக்குரியன அல்ல - சான்றாண்மைக்குரியன அல்ல என்றால் நமது சமயங்களும் இலக்கியங்களும் புராணங்களும் கூறும் வாழ்க்கை முறைகள் என்ன, பொய்யா?

யாரையாவது புகழவேண்டுமாயின் வாயில் வந்தபடி யெல்லாம் புகழ்ந்து விடக்கூடாது. எதற்கும் நெறிமுறை

தேவை. இந்த நூற்றாண்டில் பெருமையும் புகழும் கற்பிதத்திற் குரியன, இயல்பானவையல்ல, உழைத்துப் பெறக்கூடியன அல்ல என்பது படிப்பினை! எனினும் இது தவறு.

சான்றாண்மையுடையவர்கள் பெருமைக்குரிய குணங் களை உடையவர்கள் மட்டுமல்லர்; அக்குணங்களை வாழ்க்கையிற் செயற்படுத்துபவர்கள். இவர்கள் பொய்மை நிந்திப்பதுடன் நிற்கமாட்டார்கள்; உண்மையைச் சாதித்தும் நிற்பார்கள்.

இவர்கள் மனத்தில் உயிர்க்குலத்தினுடைய வேற்றுமை களை வளர்க்கும் வெறுப்புணர்ச்சி இருக்காது. ஒருமை யுணர்வு ஊற்றத்துடன் வெளிப்படும்.

உயிர்க் குலத்தை அழிக்கும் இனப்பகையான மொழி வேற்றுமை, சமய வேற்றுமை முதலியவற்றைச் சான்றோர் எனப்படுபவர், உளமார வெறுப்பர். கடைகோடி மனிதரின் உரிமைக்கும் வழக்காடிப் பாதுகாப்பர்; வாழ்வளிப்பர்.

நாடாளும் கொற்றமேயானாலும் அஞ்சாது, தவறு கண்ட போது எடுத்துக் கூறுவர்; இடித்துக் கூறுவர்; திருத்தமுறும் வகையில் போராடுவர். இவர்களே சான்றோர். இத்தகு சான்றோர்கள் உள்ள நாட்டில் நல்ல அரசு அமையும். மக்கள் உரிமைகள் பாதுகாப்பாக அமையும்.

கோவலன் முறை கேடாகக் கொல்லப்பட்டதால் அரசு நல்ல அரசல்ல! அதனால் அந்த நாட்டில் சான்றோர்கள் இல்லை என்ற முடிவுக்கு வருகிறாள் கண்ணகி! அதனால், "சான்றோரும் உண்டு கொல்!" என்று கேட்கிறாள்!

அன்று கண்ணகியின் வினாவிற்கு விடை கிடைக்க வில்லை. அதே வினாவை இன்றும் பலர் கேட்கின்றனர்! விடைதான் கிடைத்த பாடில்லை! என்றுதான் கிடைக்குமோ...?

கு.V.9.

## தெய்வமும் உண்டு கொல்!

"தெய்வம்" என்பது நியதிகளின் மறு பெயர். நீதியின் வடிவம் தெய்வம்! எந்த நாட்டில் தெய்வ நம்பிக்கை இருக்கிறதோ அந்த நாட்டில் மனித உரிமைகள் மதிக்கப் பெறும்; இயற்கை நியதிகள் பாராட்டப் பெறும்; நீதி நெறிகள் பாராட்டப் பெறும்.

"வல்லாண்மை வாழும்" என்ற நியதி உண்மையே யானாலும், தமிழிலக்கிய உலகு இந்நியதிக்குத் தரும் பொருள் வேறு. வல்லாண்மை என்பது எளியனவற்றை அழித்து வென்று வாழ்தலன்று.

இவ்வகைப் போராட்டங்கள் மனித குலத்துக்குத் தனியுடைமை உணர்வு வந்த காலந்தொட்டுத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஆயினும் மனித குலம் அடைந்த பயன் இழப்புகள்தான்! ஆனால், தமிழிலக்கிய உலகம் "வல்லாண்மை" என்பதற்கு, கொள்ளும் பொருள் வேறு.

இயற்கையின் ஐம்பூதங்களாகிய நிலம், நீர், தீ, வளி, வெளி ஆகியனவற்றால் ஏற்படும் பாதிப்புக்களைத் தாங்கி, உயிர்த் தொகுதிகளுக்கிடையிலுள்ள நச்சுயிர்களினின்றும் தப்பி, ஆற்றல் மிக்க உழைப்பால், நுகர்வன படைத்து உள்ளவாறு நுகர்ந்து இன்பந் துய்த்து வாழும் வாழ்க்கையே வல்லாண்மையின் வெற்றி. ஆனால், நடைமுறையில் கொள்ளும் பொருள் வேறு.

வாழும் உயிர்களிடையில் நுகர்பொருள் தேவைக்கு அதிகமாக இல்லை; பற்றாக்குறை நிலைதான். அதனால் உயிர்களிடையில் ஆங்காரமான போராட்டங்கள். இப் போராட்டத்தில் வல்லாண்மை பெறாதனவற்றை அழித்து வல்லாண்மை வாழ்கிறது! இந்தச் சூழ்நிலையில் தான் 'தெய்வம்' என்ற சிந்தனை அரும்புகிறது.

தெய்வம் என்பது சங்க காலத்தில் கடவுளைக் குறித்திருக்கிறது. "மணங்கமழ் தெய்வத்திள நலம்" என்பது திருமுருகாற்றுப்படை. பின்னால் 'சிறு தெய்வம்' என்றால் கிராம தேவதை என்று பொருள் கொண்டனர். ஆனால் 'சிறு' என்ற அடைச்சொல் சேர்த்தால்தான்! மேலும், ஊழுக்கும் தெய்வம் என்று பெயர் உண்டு.

ஆனால் ஊழ், தெய்வமாகாது. ஊழின் பயனைச் சேர்ப்பிக்கும் நியதியாகத் தெய்வம் விளங்குவதால் ஊழைத் தெய்வம் என்றும் அழைத்தனர் போலும்!

தெய்வம் என்பது உயர்ந்தது; வேண்டுதல் வேண்டாமை இல்லாதது; உலகியலின் உயிர்ப்பாக இருந்து அதனை இயக்குவது. உலகியலில் மனித ஆற்றலுக்கு அப்பாற் பட்ட ஒழுங்குகளுக்கு - முறை பிறழாத நிகழ்ச்சிகளுக்குக் காரணம் தெய்வம் - கடவுளேயாம்.

தெய்வத்தை 'நீதி' என்று திருவாசகம் போற்றும். தெய்வம், வலியாரிடமிருந்து மெலியாரைக் காப்பாற்றுவது; நீதியை நிலை நிறுத்துவது. தெய்வம் பிரார்த்தனைகளால் - பூசனைகளால் மட்டும் அமைதி கொள்வதன்று. தெய்வம் நீதித் தன்மையுடைய ஒப்புரவு வாழ்க்கையையே விரும்பு கிறது; வாழ்த்துகிறது.

நீதித் தன்மை பிறழ்ந்த உயிரினங்களைத் தெய்வம் ஒறுக்கும். இதுதான் சமய இயல். ஆனால், காலப்போக்கில் கடவுள்-தெய்வம் லஞ்ச லாவண்யத்திற்குட் பட்டதென்றும், தெய்வமே பலி கேட்கிறது என்றும் கூறி, தெய்வ நம்பிக்கையை, கேலிக் கூத்தாக்கி விட்டனர்.

இன்று, கடவுளைப் பற்றி அதிகமாகப் பேசுகிறவா களில் மிகுதியானவர்கள், மனித குலத்தின் பொதுநலம் சார்ந்த இன்ப வாழ்வினுக்குப் பகைவராகத்தான் உள்ளனர்.

இன்றைய நமது சமய உலகம் கடவுளை நினைக்கிறது; மனிதனை மறந்துவிடுகிறது. கடவுளுக்காக எதையும் செய்யத்

தயாராக இருக்கிறது. ஆனால் தம்மைச்சுற்றி வாழும் மனிதருக்கு எதையும் செய்ய விரும்புவதில்லை. இது தெய்வ நம்பிக்கை ஆகாது; கடவுள் வழிபாடு ஆகாது.

தெய்வ நம்பிக்கை உடையவர்கள் மற்றவர்களின் உரிமைகளை மதிப்பார்கள்; உலகம் உண்ண உண்பார்கள்; உலகம் உடுத்த உடுப்பார்கள். தெய்வம் இருப்பதை நம்புகிற வர்கள், மற்றவர்களை வாழ்வித்து வாழ்வார்கள்.

தெய்வ நம்பிக்கை உள்ள நாட்டில் தீண்டாமை இருக்காது. பகை வளர்க்கும் வேற்றுமைகள் இரா. எல்லாரும் கூடித் தொழில் செய்வர்; ஒப்புரவு நெறியில் வாழ்ந் தின்புறுவர்; இதுதான் சொர்க்கம்.

சந்து பொந்துகளில் சாதிகள் வாழ்கின்றன! குல கோத்திரச் சண்டைகளின் பேரிரைச்சல் கேட்கிறது! சோம்பித் திரியும் மதியிலிகள் எங்கும்! தெருவுக்குத் தெரு வறுமொழியாளர்கள்! வம்பரத்தர்கள்! ஒருவரை ஒருவர் அடுதல், தொலைத்தல் ஆகிய இழி செயல்கள்! வறுமை, ஏழ்மையின் கோர தாண்டவங்கள்! இங்ஙனம் விளங்குவது ஒரு நாடாகாது; அதுவும் தெய்வம் இருக்கும் நாடாகாது.

பூம்புகாரில் செல்வக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த கோவலன் நாட்டின் சூழ்நிலையால் பாதிக்கப் பெற்றவனாகி, வாழ்வதற்காக மதுரைக்கு வருகின்றான். "வாழ்தல் வேண்டி ஊழ்வினை துறப்பச் சூழ்கழல் மன்னா நின்னகர்ப்புகுந்த" என்பது கண்ணகியின் வாய்மொழி.

வாழ்கிறவர்களை வாழ்விப்பதுதான் நல்ல அரசு. ஒருவருடைய வாழ்வுரிமையைப் பறிக்க யாருக்கும் உரிமையில்லை. ஆனால், கோவலன் உயிர், பாண்டியப் பேரரசால் பறிக்கப் பெற்றது. கோவலன் கொலையால் ஆற்றொணாத் துயரத்தைக் கண்ணகி அடைந்தாள் என்பது உண்மை.

ஆயினும் கண்ணகியை மிகுதியும் வருத்திய துன்பம் கோவலன் கொலையுண்டதன்று. கோவலனைக் கொலை செய்ய சொல்லப்பட்ட காரணத்தில் தான்! அதாவது 'கள்வன்' என்ற குற்றச்சாட்டின் மீது கொல்லப் பெற்றதுதான்!

கள்வர்கள், மற்றவர்களைக் கள்வராக்கிக் கொள்ளும் முறை அன்றும் இருந்திருக்கிறது; இன்றும் இருக்கிறது. இது நெறிமுறை பிறழ்ந்த நிலை. களவு, பொய்ம்மை, ஆராயாமை, அறியாமை, கொலை ஆகிய பல குற்றங்கள் கோவலன் கொலையின் மூலம் தெரிய வருகின்றன.

இத்தகு குற்றங்கள் தெய்வ நம்பிக்கையுடையவர் களிடத்தில் இருப்பதற்கில்லை; தெய்வம் உள்ள இடத்தில் இருக்காது; பழிசுமந்த கொலைகள் இருத்தற்கில்லை. இது இளங்கோவடிகள் நம்பிக்கை! கண்ணகியின் நம்பிக்கை! ஆனால், மதுரையின் நடப்பு முரண்பாடாக இருந்தது.

ஆதலால் "தெய்வமும் உண்டு கொல்" என்று கேட்கிறாள் கண்ணகி. இன்றும் "தெய்வமும் உண்டு கொல்!" என்று கேட்கத்தான் செய்கின்றனர் பலர். "தெய்வம் கோயிலில் இருக்கிறது" என்று கூறுகின்றனர்! தெய்வத்தை ஒருமையில் காண்மின்! வாழ்விக்கும் பேரறத்தில் காட்டு மின்! இதுவே கண்ணகியின் வினாவிற்கு விடை!

## நன்றே செய்க! இன்றே செய்க!

உயிர் வாழ்க்கை என்பது, குறிக்கோளுடையது. உயிர் கண்டறிவதில்லை; ஆனால் கேட்டறியும், உயிரின் தரமும் தகுதியுமே உலகியலின் வரலாறாக வளர்கிறது.

உயிர், நல்லியல்புடையது. ஆனால் சார்பினால் உயிரின் நல்லியல்பு திரிகிறது. உயிர் தம்மியல்பில் திரியாமல் தம்நிலையில் நன்னிலையைப் பாதுகாக்க அறம் செய்து கொண்டிருக்க வேண்டும். அறம் என்பது மனத்தூய்மை.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற"

என்று திருக்குறள் கூறும்.

நாளும் வாழும் வாழ்க்கையில் உயிர் மனத்தூய்மை இழத்தலும், இழுக்குறுதலும் தவிர்க்க முடியாதது. புவியீர்ப்பு ஆற்றல் தன்பால் பொருள்களை ஈர்ப்பது போல, உயிரைக் கீழ் நோக்கிய இயல்புகளில் இழுக்கும் ஆற்றல், பொருந்தா உலகியலுக்கும் உண்டு. அதனால் மனத்தூய்மை கேடுறும். ஆதலால் நாள்தோறும் நாம் மனத்தூய்மை பெறுதல் வாழ்தலுக்குரிய கடமைகளுள் ஒன்று.

தூய்மை எளிதில் வராது. மனத்தூய்மை பெறுதற்குரிய வாயில்களை நாடி அவற்றைச் செய்தல் வேண்டும். மனத் தூய்மை பெறுதலுக்குரிய சிறந்த வாயில் மற்றவர்களிடத்தில் அன்பு காட்டுதல்; அவர்கள் வாழ்வதற்குரியன செய்தல்; அவர்கள் மகிழ்தலுக்குரியன செய்தல். அவற்றையும் நன்றி, பாராட்டு, புகழ் முதலியன பெறும் வேட்கையின்றிச் செய்தல்; பயன் பெறுவார் இகழ்ந்து வெறுத்தாலும் பொறுத்துக் கொண்டு செய்தல் அறம்.

புகழை விரும்பிச் செய்யும் செயல்கள் மனத் தூய்மையைத் தரா. ஏன்? புகழ் விருப்பம் போதையை விடக் கொடியது. மேலும் மேலும் பெற விரும்பும்படி காமுறுத்துவது புகழ்.

அதனால் காலப் போக்கில் அறத்தின் நோக்கம் மாறி, செய்வன அறமாக இல்லாமல் போகும். செய்யப்படுவோர் பயன்படுதலுக்குரியர் என்று, புகழ்வோருக்கு வரையறை யின்றிச் செய்யும் மனப்பாங்கே தோன்றும். அப்போது புகழ்வோரே பயன்பெறுவர். வறியோர்-உரியோர் பயன் பெற மாட்டார்கள்.

தூய்மை, துறவு, தொண்டு இவைதாம் உலகத்தில் அழுக்காற்றின் வழியில் சிக்கிப் போட்டிகளுக்கு ஆளாகாதவை.

மற்ற உலகியல் பேறுகள் அனைத்தும் மற்றவர்களிடத்தில் அழுக்காற்றைத் தோற்றுவிப்பன; போட்டி உணர்வைத் தருவன. அதனால், புகழ்பெறுதலும் பாதுகாத்தலும் அரிது. அதுமட்டுமன்று, ஒருவர் புகழ், மற்றவர்களிடத்தில் அழுக்காற்றை உண்டாக்கும்.

அழுக்காறுடையவர்கள், புகழுடையோரை இகழ்வர், இகழ்ச்சியைத் தாங்கமுடியாமல் பொறுமையிழந்து பொருத வேண்டிவரும். அவ்வழி பகையும் போரும் மூளும்.

புகழ் கருதிச் செய்யும் எவையும் அறமாகா. வணிக நோக்கோடு செய்யப்பெறும் எச்செயலும் அறமாகாது. ஏன்? இலாபம் என்ற குறிக்கோளும் வெறியூட்டும் தன்மையது. இலாபம் மேலும் மேலும் கூட வேண்டும் என்றே இலாப நோக்குடையவர் விரும்புவர். இத்தகு இலாபவெறியரின் துண்டுதலால்தானே, உணவுப் பொருள்களில் கூட கலப்படம் செய்கின்றனர்; கைநிறைய ஊதியம் பெற்றாலும் கையூட்டின் மீது நாட்டம் கொண்டுள்ளனர். ஆதலால் இலாப நோக்கும் மனத்தூய்மைக்குத் துணை செய்யாது.

ஆதலால், தொண்டு மனப்பான்மையுடன் செய்யப் பெறும் அறச் செயல்கள், மனத்தூய்மைக்கு வாயிலாக அமையும். இத்தகு அறத்தை – நற்செயல்களை, ஒவ்வொரு வினாடியும் சிந்தனையால், செயலால் உயிர்க் குலத்தினிடத்தில் அன்பு காட்டி, அந்த உயிரினம் வாழ்தலுக்கு உரியவாறு செய்து கொண்டிருக்க வேண்டும்.

அறம் செய்தலுக்குரிய காலம் என்று ஒன்று இல்லை. நாள்தோறும் வீடுகள் கூட்டிச் சுத்தம் செய்யப் பெறுதல் வேண்டும். அங்ஙனம் கூட்டப் பெறாத வீட்டில் கூட்டித் தூய்மை செய்ய இயலாவண்ணம் சில நாட்களில் அழுக்குகள் வந்தடையும். அவ்வழி, நச்சுயிர்களும் வந்து வாழத் தொடங்கும். அதுபோல அன்றாடம் மனத்தூய்மை செய்து கொள்ளுதல் வேண்டும்.

ஒரு நாள் அன்பு காட்ட மறந்தால் மறுநாள் அன்பு தலைப்படாது. பகை தோன்றிய உடனேயே அன்பினால் பகையை மாற்றிக் கொள்ளத் தவறினால் மறுநாள் அந்தப் பகை வன்பகையாக உருமாற்றம் பெற்றுப் படிப்படியாக வஞ்சினமாகி, கொலையளவு இழுத்துச் சென்று விடும்.

பகை கண்ட போதே பண்பாட்டு மருத்துவத்தைச் செய்துவிடல் வேண்டும். அப்பொழுதுதான் தீமைகள் மனத்தில் கூடாரமடித்துத் தங்கா. ஆதலால் நாழிகை தோறும் நாள்தோறும் மனத்தூய்மை பேணும் அறம் செய்தல் வேண்டும். மேலும் நாளை செய்யலாம் என்றால் 'நாளை' என்னும் நாள் யார் கையில் இருக்கிறது? இஃது இயற்கையில் தெரியாத ஒரு புதிராகவே இருந்து வருகிறது. அதனால் இறப்பு உணர்ச்சி மேலிட்டு அழுது மடிவதா? கூடாது.

வாழ்வதற்கே பிறந்த நல்லுயிர்கள் மரணத்தில் அழிந்து போகக் கூடாது. மரணத்தைக் காட்டிப் பயமுறுத்துவதற்காக நிலையாமையை எடுத்துக் கூறுவதில்லை. மரணத்தைக் கண்டு அஞ்சிச் சாகிறவர்கள் கோழைகள்; வாழத் தெரியாதவர்கள்.

பின் ஏன் மரணத்தைப் பற்றிய எண்ணம்? கல்வி, ஞானம், தொண்டு, அறம் ஆகியவற்றிற்கு, ஒவ்வொரு விநாடியும் கடைசி விநாடியே என்று கருதிச் செய்து வாழ்தல் நல்ல மரபு.

கல்வியை இன்றே கற்க வேண்டும். நல்ல நூல்களை நாடிக் கற்க வேண்டும். பெறுதற்கரிய ஞானத்தை இன்றே, இப்பொழுதே பெறவேண்டும். தொண்டு இப்பொழுதே செய்க. சிந்தித்தால் வாய்ப்பு இழக்கவும் நேரிடலாம். இந்த உயர் நோக்கத்தோடு சொல்லப் பெற்ற நிலையாமைக் கருத்து, எதிர்காலத்துச் சிந்தனையே இல்லாமல் செய்துவிட்டது ஒரு பெரிய குறை.

நிலையாமை உணர்வு அறம் செய்தற்குத் தூண்டு கோலேயன்றி, எதிர்காலச் சிந்தனைகளை, திட்டங்களை இழப்பதற்கன்று. இத்தகு உயரிய கருத்தினைச் செங்குட்டுவனிடம் மாடல மறையோன் கூறுவதாக சிலப்பதிகாரம் உணர்த்துகின்றது.

*"நாளைச் செய்குவம் அறமெனின் இன்றே*
*கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்*
*இதுவென வரைந்து வாழுநா ளுணர்ந்தோர்*
*முதுநீர் உலகில் முழுவதுமில்லை."*

(சிலம்பு. நடுகல். 179–182)

## ஊழ் என்பது என்ன?

இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் இயற்ற, வெளிப்படையான காரணங்கள் மூன்றைக் குறிக்கின்றார்.

*"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்*
*உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்*
*ஊழ்வினை உருத்து ஊட்டும் என்பதூஉம்"*

காரணங்களாகும். இம்மூன்றனுள் வாழ்வியலுக்கு முதலாக அமைந்து மிகுந்த விவாதத்திற்கும் உரியதாகிறது ஊழ்.

ஊழ் என்பது என்ன? உயிர் நிலையானது; தோற்றம், அழிவு இல்லாதது. அறியத்தக்கது; செயல்கள் செய்யும் இயற்கையினது. உயிர், பிறத்தல் – இறத்தல் என்ற சொற்கள், உடல் மாற்றங்களைக் குறிக்குமே தவிர, உயிரைக் குறிப்பனவாகா.

உயிர்க்கு, கண்ணால் காணப்பெறும் பருவுடலன்றி நுண்ணுடல் ஒன்று உண்டு. உடலியக்கத்தை இயக்குவிக்கும் மனம், புத்தி, சித்தம் ஆகிய அறிகருவிகள் நுண்ணுடலைச் சார்ந்தவை. உயிரின் மனம், புத்தி, சித்தங்களில் நிகழும்

எண்ணங்கள், முடிவுகள், ஆர்வங்கள், உடலை இயக்கிச் செயற்படுத்தும்.

“வினை” என்ற தமிழ்ச்சொல் மத முத்திரை பெற்ற பின், ஒரு சிறு பொருளைக் குறிப்பதாக, பெருவழக்கில் வந்துவிட்டது. பெருவழக்காயினும் தவறு, தவறுதான்! தவறு கூடச் சொல்லில் இல்லை. அச்சொல்லை, கேட்புழிப் பொருள் கொள்ளும் பாங்கிலேயே தவறு ஏற்படுகிறது.

‘வினை’ என்பது செயலைக் குறிக்கும். தமிழிலக்கணத்தில் “வினைச்சொல்” செயற்பாட்டினைக் குறிக்கும் சொல் என்பது எண்ணத்தக்கது. ஆதலால் வினை என்பது ஒருவர் மனம், புத்தி, சிந்தனை, புலன், பொறிகளால் இயங்கிச் செய்யும் செயல்களைக் குறிக்கும். அச்செயல்களின் பயன் துய்ப்புக்கு வரும்பொழுது வினைப்பயன் என்றாகிறது.

ஒவ்வொருவரும் அவரவர் உழைப்பின் பயனை அடைய விரும்புவதே உலகியற்கை. ஒருவர் உழைப்பை மற்றவர் எடுத்துக் கொள்வதைச் “சுரண்டல்” என்று கண்டிக்கின்றோம். ஆனால், ஒருவர் தீமையைச் செய்தால் அதன் பயனை அனுபவிப்பதற்கு விரும்புவதில்லை. இது ஏன்?

நல்லதாயின் மகிழ்வு; இன்பமாயின் இதயக்களிப்பு பெறுவர். துன்பமாயின் ஏன் வெறுப்பு? அத்துன்பமும் வேறு யாரும் தந்ததில்லையே! அவரவர் படைத்துக் கொள்வது தானே! இதனைத் திருக்குறள்,

> “நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
> அல்லற் படுவ தெவன்?

என்று கேட்கும். உயிரின் இயற்கை உயிர்த்தல்; செயற்படுதல்; வளர்தல்; உய்தல். உயிரின் இயக்கங்கள் செயற்பாடுகள் பலதுறையின, பலவகையின. ஒருவர் ஒரே நேரத்தில் எட்டு முதல் பத்து வரையிலான செயல்களில் ஒன்றோடொன்று

முரண்பாடின்றிச் செயற்படலாம். சில சமயங்களில் ஒன்றுக் கொன்று முரண்பாடும் இருக்கும்.

ஒரே பணியில் புலன்களும் பொறிகளும் தம்தம் நிலையில் இயங்கித் தொழிற்பட்டு அப்பணியைத் தம்தம் நிலையில் வளர்த்துச் செழுமைப்படுத்துகின்றன. இங்ஙனம் செய்யப்பெறும் செயல்கள் தரமுடையனவாக அமையும்; பயனுடையனவாகவும் அமையும். ஒன்றோடொன்று தொடர்பில்லாத பணிகளிலும் ஈடுபடலாம். இப்பணிகள் பயன் தருவனவாக அமைவது அருமை.

ஒன்றுக்கொன்று மாறுபட்டு முரண்பட்ட நிலையிலும் பணிகள் நிகழ்வது உண்டு. இப்பணிகள் பயனும் தரா. எதிர்மறையான துன்பத்தையும் தரும். சிந்தையில் தீய எண்ணங்களும் செயலில் நல்லவையும் காட்டி நடிப்பவர்கள் மிகுதி. இத்தகையோர் செய்யும் செயல்கள் நற்பயனைத் தராதது மட்டுமின்றித் துன்பத்தையே அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தரும். எச்செயலுக்கும், தாவிப் படர்ந்து விரிவடையும் இயல்புண்டு.

ஆதலால், ஒருவரின் தீமை அவரளவில் நின்று விடுவதில்லை. அத்தீமை விரைவில் படர்ந்து சமுதாயத்தில் தீமையைப் பரப்பும்; வளர்க்கும். அப்போது சமுதாயமே தீமை மயமாகி விடுகிறது. அத்தீமையை எதிர்க்கும் ஆற்றலின்மையாலோ, பலவீனங்கள் காரணமாகவோ, தீமையிடத்தும் ‘நடுவுநிலை’ என்ற நிலையை மேற்கொண்ட தாலோ ஆசைகள் காரணமாக சிந்திக்கும் திறனின்றி, தீமைக்கு உடன்பட்டு போவதாலோ பலர் தீமையை அனுபவிக்க வேண்டியிருக்கிறது; சமூகமே கெட்டுவிடுகிறது; அல்லது ‘கெட்டது’ என்று பெயர் பெறுகிறது.

ஒரு வஞ்சிப்பத்தன் செய்த தீமை ஒரு பேரரசையே கெடுத்துவிட்டதே! எவ்வளவோ திறமுள்ள அரசாய் இருந்தும் நெறிமுறைப்படுத்தும் சூழல்கள் வலிமையாக

இருந்தும் வஞ்சிப்பத்தனே வெற்றி பெற்றான்! ஏன்? எண்ணிப்பார்க்க வேண்டாமா? எண்ணிப் பார்ப்போமாக!

ஆதலால், அவரவர் தம் எண்ணங்கள், சிந்தனைகள், செயல்கள் பயனைத் தரக்கூடியன; பயனைத்தரும். இங்ஙனம் அவரவர் செயல்களின் பயனைத் துய்க்கும் வழியில் அமைத்து நடத்தும் இயக்கமே ஊழ் எனப்படுவது. “ஊழ்” - ஊழ்த்தல். அதாவது உயிரினிடத்துள்ள செயற்பாடுகளின் பயன்பாடுகள் பரிணமித்து வெளிப்படுதல் என்று பொருள் கொள்ளலாம்.

ஒவ்வொருவரின் நேற்றைய பழக்கம் இன்று முன் வந்து நிற்கிறது. பழக்கம் மிகமிகக் கொடிது. பழக்கம் என்ற தளையிலிருந்து தப்பிக்க வேண்டும் என்றால் பகுத்தறிவு நன்றாக வேலை செய்ய வேண்டும்.

தன்னிடத்தில் தானே காட்டும் சலுகைகள் தாட்சண்யங்கள் தவிர்க்கப்படுதல் வேண்டும். ஒருவன் ஒவ்வொரு நாளும் வாழ்க்கையைத் தொடங்கும் பொழுது பகுத்தறிவு கொண்டு தனது நேற்றைய வாழ்க்கையை ஆய்வு செய்து திருத்திக் கொண்டு வளர்த்துக் கொள்ளும் எண்ணத்தைப் பெற வேண்டும். இந்த அடிப்படையில் தோன்றிய பிரார்த்தனை இயக்கம், இன்று திசை மாறிச் செயற்படுகிறது. ஏன்?

உயிர்கள், பழக்க வாசனைகளின் வழியிலேயே போகின்றன. ஆதலால் நேற்றைய, நேற்றைக்குமுன் நாளைய, உயிர் வாழ்க்கையின் தொடக்க காலம் தொட்டு வாழ்ந்த வாழ்க்கையின் பயன்கள் இன்றைய வாழ்க்கையின் பழக்க வழக்கங்களின் வாயிலாக நம்முடைய அனுபவத்திற்கு வருகின்றன. இஃதொரு தவிர்க்க இயலாத, தவிர்க்கக் கூடாத நியதி; முறைமை.

உயிரின் நுண்ணுடம்பிலுள்ள மனம், புத்தி, சித்தம் இவற்றின் இயக்கங்களே. தொழிற்பாடுகளே புலன்களில்

உணர்வாகி, பொறிகள் வாயிலாகத் தொழிற்படுகின்றன. இவற்றில் அக உறுப்புகளின் தொழிற்பாடுகள் நமக்கு எதிரில் தெரியவருவதில்லை. ஆனால், வாழ்க்கையில் அக உறுப்புகளின் செயற்பாடே பயன் தருகின்றன.

## ஊழ் என்பது என்ன?

வாழ்க்கை வினையினால் ஆயது; வினைக்காளாவது; வினைக்கே உரியது. "வினையே ஆடவர்க்கு உயிரே" என்பது இலக்கியம். செயல்கள்-செயல்களுக்கு உந்து சக்தியாக அமைந்து காரணமாக இருக்கும் நோக்கம் ஆகியன, ஊழ் அமையும் களங்கள். ஊழிற்குச் செயல்கள் காரணமாக அமைவது முதன்மையான காரணமாகா.

செயல்களுக்குரிய நோக்கமே ஊழின் களம். சிந்தனையும் நோக்கமும் செயலும் மாறுபடா. ஒரே நிலையி லிருப்பதுதான் இயற்கை; எளிய முயற்சிகளின் வழிப்பட்டது. ஒன்றுக்கொன்று மாறுபட்டுச் செயற்படுவது கடினமானது; செயற்கையானது. ஆனால், மனித உலகிலோ இக் கடினமான சிந்தனை, செயல் மாறுபட்ட நிலையில் வாழ்வோரே மிகுதி.

பழகுவோர் பலர். பயன் விளைவிப்பது எது? பயன் படுவது எது? உலகியலில் உடனடியான பயன்களை - தற்காலிகமான பயன்களை, சிந்தனை மாறுபட்ட செயல்கள் தரும். ஆனால், நல்லனவாகவும் நெடியனவாகவும் உள்ள பயன்களைத்தரா. நெடிய பயனை, நிலையான பயனை, இன்புறு நலன்களைத் தருவது சிந்தனையின் உள்ள நோக்கமேயாகும்.

சிந்தனை வேறு, சொல்வேறாக நண்பர்கள் போலப் பழகின், அந்நட்பில் உயிர்ப்பு இருக்காது. உள்ளூற பகை வளர்ந்து கொண்டிருக்கும். என்றாவது ஒருநாள் பொருது கொள்வர்; அழிவர். அதுபோலவே ஒரு பணியில், சிந்தனை

ஒருமித்த நிலையில் ஈடுபட்டால் அப்பணி சிறக்கும்; பயன்களைக் குவிக்கும்; புகழைத் தரும்.

ஆதலால், பயன் தருவன சித்தத்தின் நிகழ்வனவாகிய சிந்தனையும், புத்தியின் நிகழ்வும், மனத்தின் இயக்கமுமே யாம். உயிரின் நுண்ணுடம்பின் அறி கருவிகளின் நிகழ்வுக்குரிய பதிவுகள் உள்ளடங்கிக் கிடந்து அப்பதிவுகள் செயற்பாடுகளாக உருப் பெருவதற்குரிய காலம் வரும் பொழுது, புலன்கள், பொறிகளின் வாயிலாகச் செயற் பாட்டுக்கும், பயனுக்கும் வருவது ஊழ். இஃது ஒரு தவிர்க்க முடியாத இயற்கை விதி; நியதி; அறத்தின் செயற்பாடு.

ஊழ் மற்றவரின் படைப்பும் அல்ல; கடவுளின் கொடையும் அல்ல. உலகியலின் ஒழுங்கு அமைதிகளுள் ஊழ் அமைவும் ஒன்று.

உலகியலில் இயற்கையில் வலிமையாக இருந்த புயல், பெரு மழை, வெள்ளம் முதலியவற்றை மனிதன் இன்று, வெற்றி பெற்று, ஆண்டு அனுபவிக்கிறான்.

இயற்கையோடு அவன் நிகழ்த்தும், நிகழ்த்திக் கொண் டிருக்கும் போராட்டத்தில் மனித குலம் வெற்றிகளையே பெற்று வருகிறது. ஒரோவழி, பெறும் தோல்விகள் கூட வெற்றியின் வாயில்களாக அமைந்தனவேயன்றி, முற்றான தோல்விகள் அல்ல.

அது போல ஊழியலின் ஒழுங்கமைவையும், மனிதன் வெற்றி காண முடியும் என்பது ஒரு கொள்கை.

ஊழியலின் ஒழுங்கமைவை வெற்றி பெறுதல் என்றால் ஒழுங்கமைவை எதிர்த்துப் போராடுவது அல்ல. ஊழின் ஒழுங்கமைவை எதிர்த்துப் போராடுவது என்றால், நியதிகளை எதிர்த்து அல்ல.

நியதிகளும் ஒழுங்கமைவுகளும் இல்லாது போனால் வாழ்க்கையில், ஓர் அமைவு இருக்காது; அமைதி இருக்காது;

நல்லன நோக்கி நல்ல நினைந்து செயற்படுதல் இல்லாமல் போகும்.

ஆதலால், ஊழியல் என்ற இந்த ஒழுங்கமைவு – நியதி எதிர்ப்பதற்குரியதன்று; வரவேற்கத்தக்கது. ஏன்? இயற்கையில், இப்படி ஒரு நியதி இல்லாது போனாலும் நாமாகவாவது படைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இந்த ஊழியல் விதி நடைமுறையில் இருக்கும் பொழுதே மனிதகுலம் நன்னெறியில் ஈடுபட்டு நல்லன செய்வதில் நாட்டம் காட்டுவது இல்லை. மக்கள் அன்றாடப் பிழைப்பாளர்களாக உள்ளொன்றும் புறமொன்றும் உடையவர்களாக வாழ்கின்றனர்.

நேற்றைய வாழ்வின் விளைவாக இன்றைய வாழ்க்கைக்கு வரும் ஊழின் பயனை எதிர்த்துப் போராடலாம் என்பது கொள்கை.

எப்படி? நெடுந் தொலைவானாலும் விரைந்து செல்லும் ஊர்திகள் வழி, நெடுந்தொலைவுப் பயணம் எளிமையாக்கப் பெற்றுள்ளது; இன்புறுதலுக்குரியதாகவும் ஆக்கப் பெற்றுள்ளது. நோய், துன்பம் தருவதுதான்! நோயின் கடுமையை மருந்துகள் மூலம் தணிப்பதுடனன்றி, தீர்வும் காணப் பெறுகிறது.

புயல், பெருவெள்ளம் போன்றவைகளைத் தடுத்து நிறுத்தமுடியவில்லை; தடுத்து நிறுத்தவும் இயலாது. ஆயினும் அவை உருவாகி வரும் நிலைமைகளை அறிந்து அவற்றின் அழிவுகளிலிருந்து தற்காத்துக் கொள்ளும் முயற்சியில் வெற்றி பெற்றுவரும் விஞ்ஞான உலகத்தை நாம் மறுக்க முடியாதல்லவா? மனித இயலும் ஒரு விஞ்ஞானம் தானே!

நேற்றைய வாழ்க்கையின் பயனாகிய ஊழ், இன்றைய வாழ்க்கையின் தொடக்கமாகும். ஊழ், சித்தம், புத்தி, மனம் வழியாகப் பரிணமித்து எண்ணங்களாக வந்து மனிதனின் செயலூக்கியாக இடம் பெறும்.

மனம், இயல்பாக யாதானும் ஒன்றைப் பற்றிக் கொண்டேயிருக்கும் இயல்பினது. அங்ஙனம் மனம் பற்றும் பற்றின் வாயிலையே, எண்ணமும் ஏற்றுக் கொண்டு இயங்கக் கூடும். இங்ஙனம் செயற்படும் பொழுது பற்றிய பொருளின் அமைப்பிலேயே செயற்படாது. பற்றப் பெற்றது மிகச் சிறந்ததாயினும் ஊழ் கறைப்படுத்த இயலும். கறைப்படுத்தக் கூடும்.

சாதாரணமாக நல்லோருடன் பழகும் வாய்ப்புக் கிடைத்து அவருடன் பழகினாலும் அந்நன்மையை எடுத்துக் கொள்ளாமல், அந்நன்மையையும், தீமையாக்கிக் கொள்வது போலச் செல்லுழிச் செல்லும் மனம் தொழிற்படும்.

அதாவது நல்லோருடனும் கூட, முழுமையாக, ஈடுபாட்டுடன் உளம் ஒன்றிப் பழகாமல் இருப்பது. ஏதோ ஒரு காரியத்தை அடையும் நோக்கத்தில் - பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்தில் புகுவது.

பயன்படுதல் வாழ்க்கையின் நியதி; வாழ்க்கையில் தவிர்க்க முடியாத தேவை. ஆனால் பயன்படுத்திக் கொள்ளுதலைவிட பயன்படும் நிலையில் அமைதலே நன்று. பயன்படுத்திக் கொள்ளுதலில் செயற்கையும் உண்டு. இது ஊதிப்பழுக்க வைத்த பழம் போன்றது. பயன்படுதல் என்பது இயற்கையில் கனிந்த பழம் போன்றது.

நெறிவழிப்பட்ட முறையில் தனிமனித வாழ்வியலும் சமுதாய இயலும் அமைந்து இயங்கும்பொழுது பயன்கள் தாமே விளையும். ஆங்கு, தருவாரும் பெறுவாரும் இல்லை.

ஆதலால், நல்லோரைப் பயன்படுத்திக் கொள்ளல் பேறு. பயன்படுதல் நிலையில் ஊழின் அமைவு நல்லூழாக அமையும். அப் பயன்பாட்டுக்கு ஏற்ப திரும்பப் பயன்பெற்று விட்டால் நல்லூழாக அமையாது.

## ஊழையும் வெற்றி பெறலாம்!

ஊழின் பயனை எதிர்த்துப் போராடுதல் என்றால் என்ன? நல்லூழாயின் இன்புறு நலன்கள் எய்தும். வாழ்க்கை இன்பமாயினும், அதனை மருந்து எனக் கருதியே துய்த்தல் வேண்டும். உடற் பிணிக்குரிய மருந்தில் இனிப்பு, சுவை யுடையதாயினும் அளவுக்கு மேல் தின்னல் தீது பயக்கும்.

ஆதலால், உலகில் யாரும் இனிப்பை அதிகமாகத் தின்றதும் இல்லை. அதுபோலத்தான் இன்பங்களும் கூட. இன்பத்தில் அளவு கடந்த மகிழ்வெய்தி, பற்றுள்ளத்துடன் துய்த்தல் கூடாது. அங்ஙனம் துய்த்தால் அது-அதாவது நல்லூழின் துய்ப்பு, தீயூழாக மாறி, பயன் விளைவித்தற்குரிய வாயில்கள் அமையும். அதோடு ஒன்றை இன்பமென மூழ்கி, மயங்கித், தருக்கித் துய்க்கும்காலை அத் துய்ப்பு முறை, மற்றவர்களிடத்தில், அழுக்காற்றையும் அவாக்களையும் தோற்றுவித்துப் பொருதலை உண்டாக்கும்.

இன்பத் துய்ப்பை, பற்றற்ற நிலையில் காய்தலும் களித்தலுமின்றிக் கடமையுணர்வோடு துய்க்க வேண்டும். இங்ஙனம் துய்க்கும் பொழுது, அனுபவிக்கும் ஊழ், பின் தொடர்ச்சியின்றிக் கரைகிறது. எதிர் விளைவுகளை உண்டாக்காமலும், அமைகிறது. இது, நல்லூழை வெற்றி கொள்ளும் முறை.

தீயூழ், துன்பத்தைத் தரும். துன்பம் கண்ட பொழுதும் கலக்கமுறாமல் அத்துன்பத்தை நடுக்கமற்ற நெஞ்சுடன் அனுபவிக்க வேண்டும். சாதலைவிட, சாதலைப் பற்றிய எண்ணம் துன்பமானது; துன்பத்தை விளைவிப்பது என்பது ஒரு கருத்து. ஆதலால் துன்பத்தை, கவலையாக்காமல் அழிவுக்குரிய வாயிலாக ஆக்கிக் கொள்ளாமல் தற்காத்துக் கொள்ள வேண்டுமானால், துன்பத்தை அறைகூவல் என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.

துன்பத்தை அனுபவிக்க மனம் எடுத்துக் கொள்ளும் நிலையில் துன்பத்தின் வேகம் தவிர்க்கப்படுகிறது. அதுமட்டு மல்ல. துன்பத்தை அனுபவிக்கும் உணர்வு நிலையில் துன்பத்தின் வேகம் தணிகிறது; விவேகம் பிறக்கிறது. அதனால் தீயூழும் வெற்றிகளாக்கப்படுகிறது.

ஆதலால் தீயூழை, தீயூழ் துன்பம் தருவதற்குரிய வாயில்களைப் பகுத்தறிவுடன் ஆராய்ந்து செயல்களை மேற்கொண்டு தீயூழையும் நாம் வெற்றிபெற வேண்டும். இதுவே வாழ்க்கையின் நியதி.

குறிக்கோளை உண்டாக்கிக் கொண்டு அக் குறிக்கோளை அடைவதே, வாழ்க்கையின் இலட்சியம். குறிக்கோள் என்று எடுத்துக் கொண்டால் ஆர்வம் நிறைந்த ஆவேசமான முயற்சிகள் தோன்றும். இம்முயற்சிகளுக்கு மலையை நகர்த்தும் பேராற்றல் உண்டு. அதனால், ஊழின் விளைவு வரத்தான் செய்யும். இது தவிர்க்க முடியாத நியதி.

ஆனாலும் ஊழின் விளைவை ஊழின் தாக்குதலை நம்முடைய முயற்சிகள் வழி, தணிக்கலாம். மிகப் பெரிய பாதிப்புக்கள் ஏற்படாதபடி பாதுகாக்க முடியும். கொடிய கோடையின் வெப்பத்தை ஒரு சாதாரண குடை தடுக்க வில்லையா? சுடு மணலை, காலில் அணிந்து கொள்ளும் செருப்பு, தடுத்துப் பாதுகாக்க வில்லையா?

இலட்சிய வேகத்தில் இடையில் சந்திக்கும் தடைகள் தூள் தூளாவதில்லையா? அதுபோலத்தான் இதுவும். ஆதலால், ஊழ் உண்டு. அது மற்றவர் படைப்பு அல்ல. அவரவர்களுடைய சொந்தப் படைப்பே.

ஒருவர் செய்த செயல்களின் விளைவே ஊழ். அவரவர் விளைவுகளின் பயனை அவரவர் அனுபவிக்க வேண்டுமென்பது ஒரு நியதி; ஒரு ஒழுங்கு. அதாவது உலகில் உயிரியலில் உள்ள ஓர் ஒழுங்கு: முறைபிறழா நிகழ்ச்சி "Order

and constancy" அவ்வளவே. "அவரவர் வினை வழி அவரவர் வந்தனர்" என்பது ஞான அனுபூதி வாக்கு.

வாழ்க்கை என்ற களத்தில் குதிக்கும் பொழுதே சென்ற கால வாழ்க்கையின் பயன் – சுமை இருக்கத்தான் செய்கிறது. அதே போழ்து சிந்திக்கும் திறனும் அறிவும் உயிர்க்கு இயல்பாக அமைந்திருக்கிறது. இப் புத்தியால் சாக்கைத் தூக்கினாலும், தண்ணீரில் நனைத்துத் தூக்காமல் எளிதில் தூக்குவது போல் உயிர்கள் பயனைத் துய்க்கலாம்.

ஆதலால் ஊழால் அதனுடைய விளைவால் எதிர் விளைவால் பாதிப்புக்கு ஆளாகாமல் தற்காத்துக் கொள்ள முடியும். இதுதான் தமிழ் நெறி; வாழ்வியல் நெறியும்கூட! இந்த ஊழை இலக்கியங்கள் சமய நூல்கள் எப்படி விளக்குகின்றன?

தமிழிலக்கியங்களில் தொன்மையானது புறநானூறு. புறநானூற்றிலேயே ஊழியற் கொள்கை வலியுறுத்தப் படுகிறது. கணியன் பூங்குன்றன் என்ற பெரும் புலவர்,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே மின்னொடு
வானம் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" (புறம். 192)

என்று பாடியுள்ளார். இந்தப் பாடல் அருமையிலும் அருமை யுடையது; சிந்தனைக்குரியது; வாழ்வுக்குரியது.

ஊழின் விளைபுலம், பற்றேயாம். இது எனது ஊர்; நான் பிறந்த ஊர்; வாழும் ஊர் என்றெல்லாம் உலகப் பொதுமை நோக்கின்றிக் கருதும்பொழுது, பற்றுணர்வு கால் கொள்ளுகிறது. பற்றுக்கள் ஆசைகளைத் தோற்றுவிக்கும் இயல்பின. ஆசைகள் உயிர்க்கு இன்பம் செய்வனபோல் காட்டித் துன்பம் செய்வனவேயாம்.

ஆசைப்பட்ட ஒன்றை அடையாத வழி உயிர்படும் அல்லல் எழுதிக் காட்ட இயலாதது. உடலுணர்ச்சிகளைத் தூண்டிவிடும் போதைப் பொருள்களின் வழிப்பட்டோர் படும் அவதிகளைக் காண்கிறோமே! ஆதலால், எப் பற்றும் தீயதேயாம். ஓர் ஊரில் வாழ்பவர்கள் அந்த ஊரின் மீது பற்றுக்கொண்டு அந்த ஊரை வளர்த்துப் பாதுகாத்தல் கடமையன்றோ! இக் கடமையை எப்படிப் புறக்கணிக்க முடியும்.

இக் கடமையை, புறக்கணித்தால் ஊர்கள் வாழும் இயல்பினை இழந்து பாலைவனங்களாகி விடாதா? ஆம்! நூற்றுக்கு நூறு உண்மை! பற்று என்பது உறவுகளைத் தவிர்ப்பது; கடமைகளைத் தவிர்ப்பது; எதுவுமே இல்லாமல் சூன்யமாக்குவது என்பதல்ல.

கடமைகளின் தொகுதியே வாழ்க்கை. அன்பு, ஆசைகளின் வெளிப்பாடே வாழ்க்கை. பற்று என்பது, "மற்றவர்க்குக் கூடாது; வேறு யாருக்கும் இல்லை; எனக்கே உரியது" என்ற அடிப்படையில் முகிழ்ப்பது. அதுமட்டுமல்ல பற்றுக் காட்டப் பெறும் பொருள் கூட அதற்கு முக்கியமல்ல. அதில் உள்ள துய்ப்பு உரிமங்களை முதன்மைப் படுத்துதல் பற்று.

## ஊழின் இயல்பு

பற்றுக்கள்-ஆசைகள் ஊழின் வினைபுலன்களாகும். பற்றுக்களை விடுதலே ஊழை வெற்றி பெறும் வழியாகும். பற்றை விடுதல் என்பது நுட்பமான தத்துவம். செல்வத்தை விரும்புதல், ஈட்டுதல், தொகுத்தல், துய்த்தல் ஆகியன பற்று ஆகா.

ஆனால் செல்வத்தை ஈட்டும்பொழுது மற்றவர் களுக்குத் துன்பம் தந்து ஈட்டுதல் பற்று ஆகும். செல்வத்தின் பயன்களாகிய ஈதல், துய்த்தல் ஆகியன இன்றிச் செல்வத்தைச் செல்வத்திற்காகவே ஈட்டிப் பாதுகாத்தல் பற்று ஆகும். இத்தகைய பற்று ஊழாக மாறும்.

ஒருத்தியை மணந்து, காதல் வாழ்க்கை வாழ்தல் பற்றாகாது. ஆனால், காதல் வாழ்க்கையின் இலக்கணமாகிய இன்புறுத்தலின் வழி இன்புறுதல் என்ற நெறி பிறழின் ஊழ் விளையும்.

பணி செய்தல், தொண்டு செய்தல் பற்றன்று. ஆனால் பணிகளை, தொண்டுகளை, புகழ் கருதியும், நன்றியினை எதிர்பார்த்தும், கைம்மாறுகளை எதிர்பார்த்தும் செய்தால் பற்று ஆகும்; ஊழ்விளையும். பணிகளைப் பணிகளுக்காகவே மற்றவர்களுக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காகவே செய்தால் ஊழன்று.

அதாவது செய்யும் காரியங்களின் நோக்கம் தற்சார் புடையதாக மட்டுமே விளங்குவதும், வெறித் தன்மையுடன் துய்க்கும் இன்ப துன்ப உணர்வுகளும் ஊழாக விளையும். இன்பத்தை ஈடுபாட்டுடன் ஆவலுடன் துய்த்தால் ஊழ் விளையும்.

தவிர்க்க முடியாதன போலவும், கடமைப்பாட்டுணர் வுடனும், இன்பங்களைத் துய்த்தல், தவறன்று; ஊழாகாது.

துன்பத்தையும் அங்ஙனமே கவலையின்றியும், நொந்து கொள்ளாமலும் துய்த்தால் ஊழ் தோன்றாது.

எல்லா ஊர்களையும் தமது ஊர்களாகவும் எல்லாரையும் சுற்றத்தாராகவும் கருதவேண்டும்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற வரி அமரர் அறிஞர் அண்ணாவுக்கும் பிடித்தமான வரி. இது பரந்த-விரிந்த, உலகியல் ஒருமைக்கொள்கையையும் மனித குலம், ஒருகுலம் என்ற உயர் கொள்கையையும் உணர்த்துகிறது.

எல்லாரும் சுற்றத்தினர். ஆதலால் ஒருவருக்கொருவர் நன்மை செய்து கொள்வர்; ஆனால் தீமை செய்து கொள்ள மாட்டார்; நன்மை செய்து கொள்ளலாம்; செய்து கொள்ள வேண்டும்.

ஆயினும், ஒருவர், ஒருவருக்கு நன்மை செய்யும் பொழுது, நன்மையைச் செய்பவர்கள் உயர்ந்தவர்களாகவும், நன்மையைப் பெற்றவர்கள் தாழ்ந்தவர்களாகவும் கருத இடம் ஏற்படலாம். அது மட்டுமின்றி, நன்மையின் அடிப்படையில் விருப்பங்களும், தீமையின் அடிப்படையில் வெறுப்புக்களும் தோன்ற இடமுண்டு.

ஆதலால், ஒருவர் நன்மை செய்தாலும் அந்த நன்மை செய்பவர் செய்தே தீரவேண்டிய கடப்பாடும், நன்மை பெறுபவருக்கு நன்மை பெறுதலுக்குரிய உரிமையும் ஊழின் வழி அமைந்தன என்று கருதுவதின் மூலம் விருப்பு வெறுப்புகளைத் தவிர்க்கலாம்; புதிய ஊழ் தோன்றுதலையும் தவிர்க்கலாம். அதுமட்டுமா?

வாழ்க்கையில் சந்திக்கும் இன்பங்களையும், துன்பங்களையும் கண்டு வெறியுணர்வின்றித் தணிந்த உணர்வுடன் அல்லது நொந்து கொள்ளும் உணர்வுடன் துய்க்கும் இயல்பும் எளிதில் வருவதன்று. அதுவும் ஊழின் வழிப்பட்டதேயாம்.

"சாதலும் புதுவதன்று". இங்கு உயிர் நிலையானது; என்றும் இருப்பது. உயிர்க்குச் சாதலும் பிறத்தலும் இல்லை என்னும் தமிழர் கொள்கையை நினைவிற் கொள்ள வேண்டும். ஆனால், உயிர் எடுத்துக் கொள்ளும் உடம்புகள் முதுமையடைவதால் அந்த உடலைக் களைந்து புது உடல் எடுத்தலைத்தான் சாதல்-பிறத்தலென்று தமிழ் கூறும்.

ஆதலால், சாதல் பழக்கப்பட்டுப் போன ஒன்று; கவலைப்படுவதற்கில்லை. ஆதலால், இன்பமென்று மகிழ்வுக் கூத்தடித்தற்கில்லை. இன்னாதன என்று கருதிப் புலம்பு வதற்கும் ஒன்றும் இல்லை.

ஆற்றுவெள்ளம் ஓடும் திசையில் படகு செல்லுதல் போல, உயிர்கள், ஊழின் நெறியில் செல்லும் தகையன என்பது கொள்கை. இக்கொள்கையை அப்படியே ஏற்பதற் கில்லை. ஏற்கவும் இயலாது. ஏன்?

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை மனித உலகத் திற்குத் தேவையான மூன்று உயர்க்குறிக்கோள்களை உணர்த்தும் நோக்கத்துடன் இயற்றியுள்ளார். அம் மூன்று நோக்கங்கள்,

> **"அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற் றாவதூஉம்**
> **உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்**
> **ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்என் பதூஉம்."**

என்பனவாகும்.

இவ்வுயிர்க் குறிக்கோள்கள், வாழும் மனிதக் குலத்திற்கு இன்றியமையாதன. மனிதகுலம் வாழும் நாடு, நல்ல வண்ணம் அமையவேண்டும். அதாவது நல்ல அரசியல் வேண்டும். நல்ல வலிமை சான்ற அறநெறிச் சார்புடைய - முறை வழங்கக் கூடிய சிறந்த அரசு அமையாத நாட்டில் இனிய வாழ்க்கை அமையாது; அமைதி கிடைக்காது. ஆதலால், வாழ்க்கைக்கு மிகுதியும் உறுதுணையாக

இருக்கக்கூடிய நல்ல அரசை முதற் குறிக்கோளாகக் கொண்டார்.

நாடு எவ்வளவு சிறப்புற்றிருந்தாலும் வீடு சிறப்பாக அமையாது போனால் மானிட வாழ்க்கை சிறப்பெய்த முடியாது. நல்ல தலைமுறைகள் தோன்றா. நாடு சிறப்புற நல்லரசு தேவை. வீடு சிறப்புற நல்ல மனைவி தேவை.

தெளிவாகச் சொன்னால் நாட்டிற்கே வலிமை சேர்ப்பது நல்ல மனைவிதானே! எப்படி? நாட்டிற்கு மன்னவன் ஆனாலும் அவனுக்கும் மனைவி உண்டு. அவள் நல்லவளாக இல்லாது போனால் நாட்டுப்பணி முட்டுப்படும். ஆக வீட்டிற்கும் நாட்டிற்கும் மட்டுமல்லாது எதிர்கால வரலாற்றுக்கும் விழுப்பம் சேர்க்கும் நல்ல மனைவியை உயர்ந்தோர் போற்றுதல் இயற்கை.

இளங்கோவடிகள் உயர்ந்தோரில் உயர்ந்தவர். எனவே பத்தினிப் பெண்டிரைப் பாராட்டுதலை இரண்டாவது குறிக் கோளாகக் கொண்டார். நாட்டை ஆளும் அரசனாயினும், வீட்டையாளும் மனைவியாயினும் அவர்தம் ஊழ், அவர்களை வழி நடத்துகின்றது.

ஆதலால், நாட்டில் வாழ்வோரும், வீட்டில் வாழ்வோரும் ஊழின்பால் கவனத்துடன் இருக்க வேண்டும். நல்லூழாக அமையும்படி அரிய முயற்சிகளை மேற்கொண்டு அமைத்துக் கொள்ளவேண்டும். அங்ஙனம் நல்லூழாக அமைத்துக் கொள்ளத்தவறின், அல்லல்பட வேண்டிவரும். முன் முயற்சி மேற்கொள்ளாது பின் இரங்குவதில் என்ன பயன் என்று மனித குலத்தை எச்சரித்து வழி நடத்த, குறிக்கோளைக் கொள்கின்றார்.

"ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" என்பது இளங்கோவடிகள் வாக்கு.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான் முந்துறும்."

என்றார் திருவள்ளுவர்.

அதனால் ஊழ்வலிமை பயனைத் தந்தே தீரும் என்பது பெறப்படுகிறது. இளங்கோவடிகள் இக்கருத்தினை விளக்கு கின்ற களம் எது? ஊழ்வினையின் ஆற்றலை முதன்முதலில் இளங்கோவடிகள் எடுத்துக் காட்டும் இடம் "கானல்வரி" யாகும்.

கோவலன், கானல்வரியில் உருவகம் அமைத்துப் பாடுகின்றான். தற்செயலாக அந்த உருவகம் கலைச் சார்புடையதாக அமைகின்றது. ஏன்? கானல்வரி பாடும் இடம் கடற்கரை. பாடும் காலம் இந்திரவிழா நிகழும் காலம்; முழு நிலா நாள்! அருகில் அவனை வாழ்விக்கும் மாதவி இருக்கிறாள். ஏன்? மாதவி மனம் மகிழத்தான் கோவலன் பாடவே தொடங்கினான்.

## கோவலன் ஊழ்

கோவலன் பாடலைக் கேட்ட மாதவி, யாழை மீட்டிப் பாடத் தொடங்குகிறாள். மாதவி கோவலனின் உருவகத்தோடு போட்டி போடுகிறாள். ஆம்! அஃதொரு கலைப் போட்டிதான்!

கலைஞர்களுக்குக் கலைத்துறையில் தாழ்ந்து போகும் எண்ணம் வருவதில்லை. எனவே, மாதவியும் பாடுகிறாள்! மாதவியின் கற்பனை எந்தக் களத்திற் பிறக்கிறது? மாதவியின் கற்பனைக்கும் அவள் ஊழே காரணம். மாதவியின் சென்ற காலப் பழக்கம் என்ன? மாதவி வழிவழி கணிகையர்குல மரபினள். ஆயினும், ஒருநெறி நின்று, வாழ ஒருப்படுகிறாள். ஒருநெறி நின்று வாழ, அவளைக் கோவலன் பிரியாதிருக்க வேண்டும். கோவலன் தன்னைப் பிரிந்து விடுவானோ என்ற அச்சத்திலேயே மாதவி கோவலனை மிகவும் கவனத்துடனும் பரிவுடனும் தன்பால் ஈர்த்து வைத்திருக்கிறாள்.

"ஊடற் கோலமோ டிருந்தோ னுவப்பப்
பத்துத் துவரினும் ஐந்து விரையினும்

முப்பத் திருவகை ஓமாலி கையினும்
ஊறின நன்னீ ருரைத்தநெய் வாசம்
நாறிருங் கூந்தல் நலம்பெற ஆட்டிப்
புகையிற் புலர்த்திய பூமென் கூந்தலை
வகைதொறு மான்மதக் கொழுஞ்சே றூட்டி
அலத்தக மூட்டிய அஞ்செஞ் சீறடி
நலத்தகு மெல்விரல் நல்லணி செறீஇப்
பரியக நூபுரம் பாடகம் சதங்கை
அரியகம் காலுக்கு அமைவுற அணிந்து
குறங்கு செறிதிரள் குறங்கினிற் செறித்துப்
பிறங்கிய முத்தரை முப்பத் திருகாழ்
நிறங்கிளர் பூந்துகில் நீர்மையின் உடீஇக்
காமர் கண்டிகை தன்னொடு பின்னிய
தூமணித் தோள்வளை தோளுக் கணிந்து
மத்தக மணியொடு வயிரங் கட்டிய
சித்திரச் சூடகம் செம்பொற் கை வளை
பரியகம் வால்வளை பவழப் பல்வளை
அரிமயிர் முன்கைக்கு அமைவுற அணிந்து
வாளைப் பகுவாய் வணக்குறு மோதிரம்
கேழ்கிளர் செங்கேழ் கிளர்மணி மோதிரம்
வாங்குவில் வயிரத்து மரகதத் தாள்செறி
காந்தள் மெல்விரல் கரப்ப அணிந்து
சங்கிலி நுண்தொடர் பூண்ஞாண் புனைவினை
அங்கழுத் தகவயின் ஆரமோ டணிந்து
கயிற்கடை யொழுகிய காமர் தூமணி
செயத்தகு கோவையிற் சிறுபுற மறைத்தாங்கு
இந்திர நீலத் திடையிடை திரண்ட
சந்திர பாணி தகைபெறு கடிப்பிணை
அங்கா தகவயின் அழகுற அணிந்து
தெய்வ உத்தியொடு செழுநீர் வலம்புரி

*தொய்யகம் புல்லகம் தொடர்ந்த தலைக்கணி*
*மையீ ரோதிக்கு மாண்புற அணிந்து*
*கூடலும் ஊடலும் கோவலற் களித்துப்*
*பாடமை சேர்க்கைப் பள்ளியுள் இருந்தோள்"*

(கடலாடு காதை – 75–110)

*என்ற அடிகளால் அறியலாம்.*

இந்த அச்சம் மாதவிக்கு இயல்பான வழிவழிப் பழக்கத்தாலும் வந்தது. இந்த அச்சத்தின் விளைவாகிய ஊழ் துய்ப்பாகிறது. ஒரு பெண்ணின் கற்புத்திறத்திற்கு அவளுடைய கணவனே காரணம். "கணவனாகிய ஆடவன் முறைபிறழ்ந்தால் பெண்ணின் முறைபிறழ்வுக்குக் காவல் ஏது?" என்று கோவலனுக்கு உணர்த்தும் நோக்கத்தோடு பாடுகிறாள். மாதவி கற்பனையும் கோவலன் கற்பனையைச் சார்ந்தே, சோழப் பேரரசைச் சுற்றி வட்டமிடுகிறது.

கோவலன் காவிரிக்குச் சிறப்புத்தந்து அது புலவாதிருக் கிறது என்று பாடினான். மாதவி, காவிரியின் புலவாத் தன்மைக்கும் நிறை நலத்திற்கும் சோழனின் செங்கோலே காரணம் என்று சிறப்பித்துத் தொடர்ச்சியாகக் கோவலனின் உணர்வுகளைப் புரிந்து கொண்டவள் போலவும், அவன் பிரியாத பெரு நெறியில் நிற்க வேண்டும் என்ற பொருள் படவும் பாடுகிறாள்.

*'மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூவாடை அது*
*போர்த்துக்*
*கருங்கயற் கண் விழித் தொல்கி நடந்தாய் வாழி காவேரி*
*கருங்கயற் கண் விரித் தொல்கி நடந்த வெல்லாம் நின்*
*கணவன்*
*திருந்து செங்கோல் வளையாமை யறிந்தேன் வாழி*
*காவேரி!* (கானல்வரி–25)

*நன்னித்திலத்தின் பூண ணிந்து நலஞ்சார் பவளக்*
*கலையுடுத்துச்*
*செந்நெற் பழனக் கழனிதொறும் திரையுலாவு கடற்சேர்ப்ப*
*புன்னைப் பொதும்பர் மகரத்தின் கொடியோன் எய்த*
*புதுப்புண்கள்*
*என்னைக் காணா வகை மறைத்தால் அன்னை காணின்*
*என் செய்கோ (கானல்வரி–37)*

என்பன சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

கோவலன், ஊழினை அடக்குதற்குரிய வலிமையின்றி, பழக்கவழக்கங்களால் நொய்மைப் பட்டிருந்ததால், மாதவி யின் பாடல், அவனை எளிதில் தாக்கியது; பாதிப்புக் குள்ளாக்கியது; ஊழின் வழி அவன் உந்திச் செலுத்தப் பட்டான். ஊழின் ஆற்றலைத் தடுத்து நிறுத்தும் தறுகண் அவனிடத்தில் அப்போது இல்லை.

மாதவியின் கற்பனையில் ஐயம் கொள்கிறான். இந்த ஐயத்திற்குரிய பழைய ஊழ், கோவலனுக்கு உண்டு. ஓர் அரங்கில் மாதவி ஆடுகிறாள். பலர் அவளுடைய ஆடல் திறனைக் கண்டு மகிழ்கின்றனர்.

ஆனால் கோவலன் மட்டும் கலையை மறந்தான். மற்றவர்கள் மகிழ்வது பற்றியும் அவன் அழுக்காறு கொண்டான்; மாதவியின்பால் ஐயம் கொண்டான். இந்த ஐயம் முற்றிக் கானல் வரியில் வெளிப்படுகிறது.

கோவலன் தனிமகனாக வாழும் பொழுது நல்லூழை வளர்த்துக் கொண்டானில்லை. மாதவியுடன் கூடி வாழும் பொற்காலத்திலும்கூட அவன் நல்லூழைத் தேடி வளர்த்துக் கொண்டானில்லை. தான் வளர்த்துக் கொண்ட ஊழைச் சிந்தித்து மறு ஆய்வு செய்து மாற்றிக் கொள்ளும் பழக்கங்களும் உடையவனாக இல்லை. ஆதலால், ஊழின் வழியே செல்கிறான்.

கோவலன் மாதவியிடத்தில் விடுதல் அறியா விருப்பினனாகத் தங்கினான். அந்த விருப்பத்தையும்கூட ஊழ் வெற்றி கொண்டுவிட்டது. இந்த இடத்தில் கோவலன் வீழ்ச்சியைத் தடுக்கக் கூடிய நல்லியல்புகள் கோவல னிடத்தில் இல்லாமற் போனதே குறை.

ஒருவர் வாழ்க்கை, தோல்வியைச் சந்திக்காமலிருக்க வேண்டுமானால், அவர், நாள்தோறும் சிந்தித்துத் தம்முடைய தீய பழக்கங்களைத் தவிர்த்துக் கொள்பவராகவும், நல்ல பழக்கங்களை வளர்த்துக் கொள்பவராகவும் இருக்க வேண்டும்.

நிகழ்ச்சிப் போக்கின் வழியில் செல்லாமல், நினைந்து செயல்படுபவராக இருக்க வேண்டும். நிகழ்வுகளும் சூழ்நிலைகளும் அவரைப் பாதிக்கக் கூடாது. இவைகள் எப்படியிருப்பினும், இவைகளுக்கு அப்பாலும், நின்று சிந்தித்துச் செயல்படுவோராக அவர் வாழ்ந்தால் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும். இத்தகையோர் வாழ்க்கையில், ஊழ் தோற்கும். அவர்கள் வெல்வர்.

இத்தகைய ஆற்றலும் நல்லியல்பும் கோவலனுக்கு இல்லை. அவன் உணர்ச்சி வசப்பட்டவன். நிகழ்வுகளின் வழி உணர்ச்சிகளால் உந்தப்பட்டு, அரிய காரியங்களைக்கூட செய்திருக்கிறான். ஆயினும், அந்த உணர்ச்சி அவனிடம் நிலையாக இருந்ததில்லை.

எடுத்துக்காட்டு, ஒன்று: கோவலன், கணவனைப் பிரிந்து வாழ்ந்த ஒரு பெண்ணுக்குப் பொருள் கொடுத்து, கணவனைச் சேர்ந்து அவள் வாழுமாறு, வழி நடத்தினான். கணவனைப் பிரிந்து வாழும் ஒரு பெண்ணின் துயரம், அவனுக்குத் தெரியத்தான் செய்தது.

ஆனால் அதே கோவலனுக்கு, தன்னைப் பிரிந்து வருந்தும் கண்ணகியின் துயரம் தெரியாதது ஏன்? இது தான் அவன் நிலைத்த உணர்ச்சி இல்லாதவன் என்பதற்கு

எடுத்துக்காட்டு. கோவலனிடம் அருமையாகத் தென்பட்ட சிறந்த பண்பாடுகள் நிலைத்திருந்தால், அவன் சான்றோ னாகியிருப்பான்.

ஆதலால், மாதவியின் கானல் வரிப்பாடல் கோவலனை முறை பிறழ உணரச் செய்தது. மாதவியோ பெண். மேவிச் செல்லும் இயல்பைப் பெறாதவள். முடிவு, கோவலன் பிரிந்து விடுகிறான். கோவலன் மாதவியை விட்டுப் பிரியும் இடத்தில் இளங்கோவடிகள் ஊழைக் காரணம் காட்டுகிறார்.

ஆம்! கண்ணுக்குப் புலனாகக் கூடிய எந்தக் காரணமும், மாதவியைக் கோவலன் பிரியக் காரணமாக இல்லை; செவிக்குப் புலனாகும் காரணமும் இல்லை. கோவலனும் மாதவியும் தேர்ந்த வாழ்க்கை வாழ்ந்தவர்கள்; விடுதலறியா விருப்புடன் வாழ்ந்தவர்கள்; ஒருநாள் அல்ல. பல நாட்கள் வாழ்ந்தவர்கள்.

திடீரென ஒரு நிகழ்ச்சி. அதுவும் நன்னிகழ்ச்சி, நற்கற்பனை, சிறந்த உருவகம். இவற்றை முறை பிறழ உணர்ந்து, கோவலன் பிரிகிறான் என்றால், ஊழைத்தவிர, வேறு என்ன காரணம் காட்ட முடியும்? அதுவும் இளங்கோவடிகளுக்கு, கோவலன் மாதவியை விட்டுப் பிரிவதில் உடன்பாடில்லை. எங்கெங்கோ சுற்றித் திரிந்த கோவலனை மாதவி ஒருமைப்படுத்தி வைத்திருந்தாள்.

திடீரென அந்த முயற்சிகள் தகர்க்கப்பட்டவுடன், இளங்கோவடிகள் காரணங்களைத் தேடிப்பார்க்கிறார். யாதும் அவருக்குத் தெரியவில்லை. உடனே ஊழின் மீது வைத்துப் பாடுகிறார், **“யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ்வினை வந்து உருத்தது ஆகலின்”** என்று! இங்கு ஊழ் என்று வலியுறுத்தப்படுவதை, இந்தப் பிறப்பிலேயே உள்ள சென்ற காலப் பழக்க வழக்கங்கள் என்பதை உய்த்து

உணர்ந்தால், பழக்கங்கள் தவிரப் பழகும் இயல்பிருந்தால், ஊழை வெற்றி காணலாம் என்ற உண்மை புலப்படும்.

கோவலன், ஊழின் வலியால் உந்திச் செலுத்தப் படுவதாக இளங்கோவடிகள் கூறும் இரண்டாவது இடம் கனாத் திறம் உரைத்த காதை. கோவலன், மாதவியைப் பிரிந்தவுடன் மாலைப் பொழுதில் கண்ணகியைக் காண வருகிறான். கண்ணகியைக் காணும் தருணத்தில் கோவலன் தன்னுடைய சென்ற கால நடத்தைகளை எண்ணி வருந்தி, அதனால் தன்னை வறுமை வந்தடைந்தது என்று நாணுகிறான். இதனைக் கோவலன்,

> "சலம்புணர் கொள்கை சலதியொ டாடிக்
> குலந்தரு வான்பொருட் குன்றந் தொலைந்த
> இலம்பாடு நாணுத் தருமெனக்கு" (சிலம்–கனா 69–71)

என்று கூறுவதனால் அறியலாம். கோவலன் சொன்னதை ஆராய்ந்தால் இரண்டு செய்திகள் ஆய்வுக்கு உரியனவாம்.

ஒன்று, குலம்தரு வான் பொருள். அதாவது பரம்பரைச் சொத்து. கோவலன் தோன்றி, அரிய முயற்சிகளில் ஈடுபட்டு உழைத்துப் பொருள்களை ஈட்டியிருப்பானாகில், அவன் அந்தச் செல்வத்தின் அருமையை அறிந்து செலவழித் திருப்பான். அந்த வாய்ப்பு அவனுக்கில்லை.

உழைப்பையும், முயற்சியையும் சுவைத்து வாழும் தகுதி மிகுதியுடைய ஒழுக்க நெறி வாழ்க்கை, கோவலனுக்கு இல்லாமற் போய்விட்டது. அதனால் அவனுக்குச் செலவழிக்கத் தெரிந்ததே தவிர, ஈட்ட வேண்டும் என்ற உணர்வில்லை. கோவலனின் செல்வம் செலவழித்ததால் மட்டுமே அழிந்தது என்று கருத முடியாது. செல்வம் நுகர்தல் வழி, செலவழித்தலுக்குரியது தானே! அதனால் செல்வம் அழியும் என்று கூறுதல் பொருளியல் கொள்கையன்று. செல்வம் தொடர்ந்து ஈட்டப்படாது போனால்தான் அழியும்.

கோவலனின் செல்வம், செலவின் வாயில்களைப் பெற்றிருந்ததைப் போல, வருவாய், வாயில்களைப் பெற வில்லை. முன்னோர் அமைத்திருந்த வாயில்களும், இயல்பாய் அமைந்திருந்த வாயில்களும் தொடர்ந்து பேணாமையால் தளர்ந்து போயின. கோவலன் விடுதல் அறியா விருப்பினனாக மாதவியிடத்திலேயே தங்கி விட்டான். அவன் செல்வம் தேடும் முயற்சியில் ஈடுபட வில்லை.

ஆயினும், வழிவழியாக வந்ததும், கோவலன் நுய்த்து மகிழ்ந்ததுமாகிய குலப் பெருமை மட்டும், அவனுடைய நெஞ்சை உறுத்துகிறது. அயர்விலா ஆள்வினையுடையவனாக இருந்திருப்பின், அவன் புகாரில் இருந்தபடியே கூட இழந்த செல்வத்தை ஈட்ட முடியும்.

ஆயினும், அன்று இருந்த சூழ்நிலையில் அவனுடைய செல்வம் செய்யும் முயற்சி, அவனுடைய பழைய தகுதிகளுக்கு இசைந்ததாக இருக்க முடியாது. தம் வழிவழி நிலையிலிருந்து தாழ்ந்துதான், அவன் செல்வத்தைச் செய்ய வேண்டிய நிலை ஏற்படும். பல்லாண்டுகள் பழகிய அந்தப் பெருமை உணர்ச்சி, அவனிடத்தில் ஊழாகத் தங்கி, உறுத்தி வழி நடத்துகிறது.

கோவலன், தன் நிலை கண்டு வருந்துவதோடு மட்டும் நிறுத்திக் கொண்டு, பெருமை சிறுமைகளைப் பற்றி கவலைப்படாமல், வாழும் உள்ளம் பெற்றிருப்பானானால் அவன் புகாரிலிருந்தே பொருளீட்டியிருக்க முடியும்.

கோவலனுக்கு அந்த ஊழ் இல்லை. அதாவது கெட்ட காலத்திலும், வாழும் காலத்திலும், ஒரே மாதிரியான உணர்வினைப் பெறும் இயல்பு அவனிடத்தில் இல்லாமல் ஊழின் ஆற்றலை வலிமைப்படுத்தியது.

அது மட்டுமல்ல, ஒரு தனி மனிதனுடைய பழக்க வழக்கங்கள், அவன் வாழும் சமுதாயத்தினுடைய, மனப் போக்குகளுக்கு ஏற்றவாறு பெரும்பாலும் அமையும். இதனைச் 'சமூக ஊழ்' என்று கூறினும் கூறலாம்.

கோவலன் காலத்தில் வாழ்ந்த சமுதாய மனப் போக்குகள், கோவலன் வீழ்ச்சியை விரைவு படுத்துவன வாகவே அமைந்திருந்தன. அதாவது கோவலன் வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்தக்கூடிய ஆற்றல், சமுதாயத்தினிடத்திலும் இல்லை. கோவலன் நெறி முறை பிறழ்விற்குச் சமுதாயத்தின் நடைமுறையே துணையாகவும் அமைந்தது.

கோவலன் வறுமையுற்றுத் துன்பப்படும் காலத்து, அன்றிருந்த சமுதாயம் அவனைத் தேற்றும் குறிப்புடைய தல்ல. இழித்துப் பழித்துக் கூறுவதோடு மட்டுமின்றி, அயலான் போலக் கருதும் மனப்போக்கும் சமுதாயத் தினிடத்தில் இருந்தது. ஆக, இத்தகு தீய சமுதாய ஊழ் கோவலனைப் புகாரில் வாழ அனுமதிக்க வில்லை.

ஆதலால், கோவலன் இழந்த பொருளை ஈட்டும் ஆவல், மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் விருப்பம் ஆகி, பல்லாண்டு பழக்கப்பட்ட உணர்வுகள் தூண்ட, மதுரைக்குச் செல்ல நினைக்கின்றான்.

மதுரை, அயல்நாட்டு நகரம். அவனை அறியாதவர் பலர் அங்குண்டு. அவனுடைய சென்ற கால வாழ்க்கை யையும், நிகழ்காலத் தாழ்ச்சியையும் எடுத்துக் கூறித் தூற்றுபவர்கள் யாரும், அங்கு இருக்க மாட்டார்கள். நேற்று மதித்தவர்கள் இன்று செல்வமின்மையின் காரணமாக, அலட்சியப்படுத்தும் கொடிய துன்பம் அங்கு இருக்காது.

இருந்த செல்வத்தை, உடனிருந்து அனுபவித்தவர்கள், தொடர்ந்து வர மாட்டார்கள். அதனால் சிக்கனமாக வாழ முடியும். புகாரை விட்டு மதுரைக்குச் சென்றுவிட்டால் மாதவியைக் கூட அவனால் முயன்று மறந்து விட முடியும். இத்தகைய எண்ண அலைகளால், கோவலன் உந்தப் பட்டிருக்கக் கூடும்.

இந்தச் சிந்தனைகள் அனைத்தையும் கூர்ந்து நோக்கினால், கோவலனுடைய பழக்க வழக்கங்கள் வழித்

தொடர்பானவையே என்பது புலப்படும். ஆதலால் கோவலன் பூம்புகாரை விட்டு மதுரை செல்லத் துணிந்தான். தன்னுடைய பழக்கங்களை மாற்றிக் கொள்ளத் துணிவில்லாமல், எங்கேயாவது, யாருக்கும் தெரியாமல் பொருளை ஈட்டி, வாழ்க்கையை நடத்தினால் சரி என்ற முடிவுக்கு வந்துவிடுகிறான். அதனால், கோவலனின் தனித் திறன்கள் செய்லபடாமையால்தான் இங்கேயும் ஊழ் வெற்றி பெறுகிறது.

கோவலன் சிலம்பினை விற்றுச் சிறு தொழில் செய்து வாழ்க்கையை நடத்தலாம் என்ற எண்ணத்துடன் மதுரைக்கு வருகிறான். ஆயர் குலத்துப் பெருமக்கள் வாழும் ஆயர்பாடியில் தங்குகிறான். அவனுடைய சென்ற காலத் த்வறுகளை நினைத்து வருந்துகின்றான். ஆனாலும், கண்ணகி அவனைத் தேற்றுகிறாள்.

மதுரை மாநகருக்குள் சிலம்பினை விற்கும் பொருட்டுச் செல்கிறான். கோவலன், நாடு விட்டு நாடு வந்திருந்தாலும் அவனுடைய குடும்பத்தின் பழைய பெருமையை நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

கோவலன் சிலம்பை விற்கப் புறப்படும்பொழுது கண்ணகியைப் பிரிகின்ற துயரம், பெருமை இழந்து வறுமை நிலையில் சிலம்பு விற்கச் செல்லும் வருத்தம் ஆகியன நெஞ்சை உறுத்த உலகத்தார்க்கு ஒத்துவராத நடையோடு மதுரைக்குள் செல்கிறான். மதுரைக்குள் சென்றவன், வாணிகர் தெருக்களுக்குச் சென்று வெளிப்படையாக விற்றிருக்கலாம். அங்ஙனம் அவன் முயற்சி செய்யவில்லை.

அவனுடைய பழைய பெருமை உணர்வுகளும் இன்றைய அவனுடைய இழிநிலையும் அவன் எண்ணத்தில் அலை மோதின. அதன் காரணமாக அவன் தயங்கித் தயங்கி நடக்கிறான். அது மட்டுமா? சிலம்பினை, பொற் கொல்லனிடம் விற்கும் முயற்சியில் கோவலன்

அணுகவில்லை. விலை மதிப்புக் கூறும்படிதான் கேட்கிறான். இதனால் தன்னுடைய பொருளின் விலை மதிப்புக் கூட அறியாமல் அவன் வாழ்ந்திருக்கிறான் என்று தெரிகிறது.

பரம்பரைச் செல்வத்தினால் வந்த தீமை இதுதான். முயன்று ஈட்டாத பொருளுக்கு யாரும் தகுந்த மதிப்பினைத் தரமாட்டார்கள். இஃது இயற்கை. இந்த இயற்கைக்கு, கோவலன் விதி விலக்கல்ல.

ஆக, உழைத்துப் பொருளீட்டாத பழைய வாழ்க்கை முறை, பரம்பரைச் செல்வத்தை மேலும் பெருக்க-வளர்க்க முடியாமல், அழித்த, இழிவு ஆகிய சென்ற காலப் பழக்க வழக்கங்கள், ஊழாக உருப்பெற்றுக் கோவலனைப் பிடர் பிடித்து உந்திச் செலுத்துகின்றன. வலியச் சென்று பொறி வாயில் அகப்படும் விலங்கு போலப் பொற்கொல்லனிடம் சிக்குகிறான்.

பொற்கொல்லன், வெற்றிகரமாகத் தனது பணியை முடித்து, நாடாள்வோனின் காவலருடன், கோவலனிடம் வருகிறான்; கோவலனைக் கள்வன் என்று காவலரிடம் காட்டுகிறான். காவலர்கள், கோவலன் கள்வனாக இருக்க மாட்டான் என்று விவாதிக்கின்றனர்.

ஆனால், கோவலன் ஆழ்ந்த மௌனம் சாதிக்கிறான். தன் கையிலிருப்பது தன்னுடைய சிலம்புதான் என்று கூடச் சொல்லாமல் இருக்கிறான். ஏன்? இருக்க வேண்டிய இடத்திலே இருக்காமல் இழிந்து வீழ்ந்த தற்கொலை மனப்பான்மையிலிருந்து கோவலன் மீண்டானில்லை.

ஆதலால், ஆழ்ந்த மௌனம் சாதிக்கிறான். கோவலனின் ஊழ், தன்னுடைய நினைப்பை நிறைவேற்று தற்குரிய பிறிதொரு ஊழைக் கருவியாகக் கொண்டு காரியங்களை இயற்றுகிறது. சென்ற கால நிகழ்ச்சிகளை நினைத்து வருந்துதலைத் தவிர்த்து, புதிய ஆள்வினை யாற்றலைப் பெறும் நோக்கம் வந்திருக்குமானால், பொற்

கொல்லனை எதிர்த்துப் போராடியிருப்பான்; ஐயப்படும் காவலருக்கு எடுத்துக் கூறியிருப்பான். ஏன் நாடாளும் அரசன் அவைக்கும் சென்று எடுத்துக் கூறவும் முடியும்.

கோவலனின் வாழ்க்கை அந்தத் திசையில் செல்ல வில்லை. சென்ற காலத் தவறுகளால் விளைந்த ஊழிற் குள்ளேயே அமிழ்ந்து விடுகிறான். அவனுக்கு ஊழினை எதிர்த்து நிற்கும் ஆற்றலில்லை. எழுந்து நடக்கும் ஆற்ற லில்லாத சிங்கத்தைச் சுண்டெலிகள் கூட, எதிர்த்து வெற்றி கொள்ள முடியும் அல்லவா?

வாழ்கின்ற பொழுது சீராக, சிறப்பாக வாழ்தல் நன்றே. அறிந்தோ அறியாமலோ தவறுகள் நிகழ்ந்து விடுமாயின், இழப்புகள் ஏற்பட்டு விடுமாயின், அதனை நினைத்துக் கவலைப்பட்டு என்ன பயன்? கறையான், மரத்தை அரித்து அழிக்கும். கவலை, மனத்தை அரித்து அழிக்கும்.

தவறுகளை உணர்ந்து தவறுகள் நீங்கிய சிறப்புடைய வாழ்க்கை வாழ, அங்ஙனம் வாழ்தலுக்குரிய களங்களை அமைக்க அடலேறுபோல, அயர்விலாத முயற்சிகளை மேற்கொள்ளும் வாழ்க்கையே, வாழ்க்கை; அது அறிவறிந்த ஆள்வினையுடைய வாழ்க்கை; ஊழையும் உப்பக்கம் காணும் வாழ்க்கை: வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை.

இந்த வாழும் நெறியைக் கோவலன் கடைப்பிடிக்க வில்லை. அதன் காரணமாகவே, அவனைச் சராசரிப் பொற்கொல்லன் கூட, வெற்றி கொள்ள முடிந்தது. கோவலனின், ஆள்வினையிழந்த வாழ்க்கையின் தீயூழ் மன்னவனின் தீயூழோடு கூட்டுச் சேர முடிந்தது. முடிவு, கோவலன் கொல்லப்படுதலாகும்.

அவன், சென்ற கால ஊழின் காரணமாக கொல்லப்பட்டான் என்று கூறுவதில் தவறில்லை. ஆயினும், அந்த ஊழினை வெற்றி காணும் ஆசூழ்ப் படைக்கக் கோவலன் முயன்றிருப்பானாகில் அவன் வெற்றி

பெற்றிருப்பான்; வாழ்ந்திருப்பான்; பாண்டியனுக்கும் பெருமை சேர்த்திருப்பான்; நாட்டின் தீய சக்தியாகிய பொற்கொல்லன் ஒதுக்கப்பட்டிருப்பான்.

நல்லன சிந்தித்து, ஆற்றலோடு செயல்பட வேண்டிய வர்கள், அங்ஙனம் வாழத் தவறுவதன் மூலம், தீய சக்தியை வளர்த்து விடுகிறார்கள் என்பது வரலாற்றுக் கருத்தாகிறது.

## பாண்டியனின் ஊழ்

பாண்டியப் பேரரசு, அரசியல் நெறிமுறை பிறழாத பேரரசு; முறை செய்து காப்பாற்றும் அரசு, செய்தியறிந்து கொள்ள, தவறுதலாகக் கதவைத் தட்டி கணவன் மனைவியிடையே ஐயப்பாடு தோன்ற காரணமாக இருந்ததற்காக, தனது கையையே வெட்டிக் கொண்ட பொற்கைப் பாண்டியனின் வழிவழி வந்த அரசு. பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கொற்றமும் அறநெறிக் கொற்றமேயாகும்.

இளங்கோவடிகள், புறஞ்சேரியிறுத்த காதையில் பாண்டிய மன்னனின், செங்கோன்மைச் சிறப்பையும் உலகு தழுவிய புகழுடைய பேரரசாக விளங்கியதையும் விளக்கிக் கூறி வாழ்த்துகிறார்.

கரடிகள், கொடிய பாம்புகள் வாழும் புற்றினை அகழா. புலிகள் மான்களோடு மாறுபடாது விளையாடும் இயல்பின. முதலையும், தெய்வமும், இடிகளும் கூட யாருக்கும் துன்பம் செய்வதில்லை என்று பாராட்டுகிறார்.

*"கோள்வ லுளியமும் கொடும்புற் றகழா;*
*வாள்வரி வேங்கையும் மான்கண மறலா;*
*அரவும் சூரும் இரை தேர் முதலையும்*
*உருமும் சார்ந்தவர்க்கு உறுகண் செய்யா*
*செங்கோல் தென்னவர் காக்கும் நாடு என*
*எங்கணும் போகிய இசையோ பெரிதே!"*

(புறஞ் சேரியிறுத்த காதை, 5–10)

இத்தகு சிறந்த நாட்டின் அரசன் நெடுஞ்செழியன். அவன் அரசுக் கட்டிலில் ஏறின காலம் தொட்டு, அறம் ஒன்றினையே அறிந்தவன்; நல்லனவே கேட்டுப் பழகியவன்; முறை செய்தே பழக்கப்பட்டவன். இப்பழக்கமாகிய ஊழ் அவனுடைய ஊனில், உயிரில் உணர்வாகக் கலந்து விட்டது.

அவன், இப்பழக்கத்தின் காரணமாக, நன்றல்லாதன நடக்கக் கூடும் என்ற சிந்தனையே இல்லாமல் போய் விட்டான். நாள்தோறும் நாடி முறை செய்தல் மன்னன் கடமை என்பதைப் பழக்கத்தால் மறந்துப் போயினான்.

உழுத சால் வழிச் செல்வது போல அவரவர் பழக்கங்களின் வழியாக மனம் செல்வது இயல்பாகிவிட்டது. சமுதாயச் சூழலில், நேற்றைய நன்மை இன்றைய தீமை யாவதும், இன்றைய தீமை நாளை நன்மையாவதும் நடைபெறக் கூடியது என்பதை அவன் அறிந்தானில்லை.

இந்தச் சூழ்நிலையில், அத்தாணி மண்டபத்தில் நடந்த ஆடலை அனுபவித்த வகையில், அரசியின் ஊடல் வேறு தோன்றிவிட்டது. பாண்டியன், அரசப் பெருங் குடும்பத்தைச் சேர்ந்தவனானாலும் ஒழுக்க நெறியில் சிறந்திருந்தவன். காதல் மனைவியின் ஊடலைப் பொறாதவனாக ஊடல் தீர்க்கும் வேட்கையினால், கோப்பெருந்தேவியிடம் விரைந்து செல்கிறான்.

தவறு செய்யாத தன்னைத் தவறாக நினைத்துக் கொண்டு அரசி ஊடியிருக்கிறாளே என்ற கவலை அவனை வருத்தியிருக்கிறது. அதனால் ஊடல் தீர்க்கும் வேட்கை அவனுக்கு மிகுந்திருக்கிறது.

நற்பழக்கங்களால் செழித்த அவனுடைய நல்லூழ் எதிர்பாராத தீமைக் குறுக்கீடுகளால், அலைப்புறுகிறது; அதனால் உறுதி பிறழ்கிறது.

இத்தருணத்தில், பொற்கொல்லன் அந்தப்புர வாயிற் படியில் அரசனைச் சந்திக்கிறான். காணாமற் போன

அரசியின் சிலம்பை, கண்டுபிடித்து விட்டதாகச் சொல்கிறான்.

காணாமற்போன சிலம்பு கைவசம் வந்தால், அரசியின் ஊடலைத் தீர்ப்பது எளிது என்று அரசன் கருதுகிறான். அதனால்,

'தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கைய தாகிற்
கொன்று, அச்சிலம்பு கொணர்க ஈங்கு"

என்று ஆணையிடுகிறான். தவறு செய்யாத நிலையில் அரசி தவறெனக் கொண்டமையாலும், காதல் மிகுதியினாலும், நிலைமாறி அரசனின் வாய் உமிழ்நீர்வற்றி, "கொன்று அச்சிலம்பு கொணர்க" என்று கூறிச் சொற்சோர்வுபட்டு விட்டான். சொற்சோர்வு பொருட் சோர்வாக மாறி, கோவலன் கொலைக்குக் காரணமாயிற்று. பாண்டியன் செங்கோல் வளைந்தது.

பாண்டியனின் செங்கோலை வளைத்த வினையை "வல்வினை" என்று இளங்கோவடிகள் கூறுகிறார் ஏன்? பாண்டியன், சிறந்த அரசன். நெறிமுறை பிறழாதவன். அவனுடைய செங்கோலையே வளைத்த வினையாதலால் "வல்வினை" என்றார்.

காலந் தாழ்த்தியேயானாலும் பாண்டியன் நெடுஞ் செழியன் தன்னிலை எய்தினன். அயரா ஆள்வினையோடு, நீதியில் தோய்ந்த நெஞ்சத்தோடு, தனது செங்கோலை வளையவிடாமல், உயிரையே ஆணியாகக் கொடுத்துச் செங்கோலை நிமிர்த்தி, உலகத்திற்கே காட்டினான்.

நெடுஞ்செழியன் செங்கோலை வல்வினை வளைத்த வேகத்தைவிட, பாண்டியன் நெடுஞ்செழியனின் ஆள்வினை அதனை நிமிர்த்ததே, அதுதான், காப்பியத்தில் இறவாப் புகழ்பெற்றுள்ளது. ஊழ்வினையை, ஆள்வினையால்

மாற்றலாம். மாற்றமுடியும் என்பதற்குப் பாண்டியன் நெடுஞ்செழியனே சான்றாவான்.

"வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது"

(காட்சிக் காதை – 98–99)

என்பது எண்ணத்தக்கது.

## கண்ணகியின் கற்பு

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைச் செய்த நோக்கங்களுள் ஒன்று, "உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்" என்பது. பெண்ணுக்குப் புகழ், கற்பு. புகழ் மிக்க, கற்புடைய பெண்ணை, உலக மக்கள் பாராட்டுவர். அமரர்கள் போற்றுவர்.

கற்பு என்பது என்ன? இதற்குப் பலர் பலவாறு பொருள் கொண்டுள்ளனர். கொன்றை வேந்தன் ஆசிரியர், "கற்பெனப்படுவது சொல் திறம்பாமை" என்று கூறியுள்ளார். அதாவது, கணவன் சொல்லுக்கு எதிராகச் சொல்லா திருத்தல், என்று கூறுவர். இக்கருத்து சிறந்த மனையற வாழ்க்கைக்கு ஏற்புடையதாக இருக்க முடியாது.

கணவன் சொல்வது தவறாக இருக்குமானால், பெண் அந்தத் தவற்றுக்கு உடந்தையாக இருந்து கணவனுக்குக் கேடு சூழ்வதை எப்படிக் கற்பு என்று ஏற்றுக் கொள்ள முடியும்.

கணவனுக்கும், தனக்கும், இருவரும் சார்ந்த குடும்பத்திற்கும், குடும்பத்திற்குக் களமாக இருக்கும் சமுதாயத்திற்கும், நலம் பயக்கின்றவாறு வாழ்வதும், கணவனின் வாழ்க்கையை அந்த வாழ்க்கையில் நிலை நிறுத்துதலும் தான், உண்மையில் சிறந்த பெண்ணின் கடமை.

கற்பு என்பது. ஒழுக்கத்தின் மறு பெயரே. பெண்ணின் ஒழுக்கத்தை சிறப்பித்துச் சொல்லும் பொழுது, கற்பு என்று குறிப்பிடுவது இலக்கிய வழக்கில் வந்திருக்கிறது.

எந்த வாழ்க்கைக்கும், அன்பே அடித்தளம். அன்பில்லாத எந்த உறவும் பயனற்றது. அதிலும் ஒருவனும் ஒருத்தியுமாகக் கூடிய நெடிய நாட்கள் வாழ வேண்டுமானால், அவர்களுடைய அன்பு ஆழமானதாக, அகலமானதாக, உறுதியானதாக இருக்க வேண்டும்.

மென்மையான அன்பு, உறுதிப்பாட்டில் கல்போல விளங்க வேண்டும். கற்பு என்ற சொல்லின் பகுதி 'கல்' என்பதாக இருக்க வேண்டும் போலத் தெரிகிறது. இங்கு, 'கல்' என்பது உறுதியின் பாற்பட்டது.

கற்பு என்ற சொல் இன்று கருதுவதைப் போலக் குறிப்பிட்ட உடலொழுக்கத்தை மட்டும் குறிப்பிடுவதன்று; விரிந்த பொருளுடையது.

தூய அன்பு, கணவனுக்காகத் தியாகம் செய்தல், வாழ்க்கையில் அனைத்துத் துறையிலும் கணவனுக்குத் தோழமையாதல், துணை நிற்றல் ஆகிய அனைத்தும் சேர்ந்த ஒழுக்க நெறிக்கே, கற்பு என்று பெயர்.

காலப்போக்கில், பெண் அடிமைத்தனம் வந்த பிறகு பெண்ணின் உடலைச் சார்ந்ததே கற்பு என்று சிறிய எல்லை வகுத்துவிட்டனர். உயர்ந்த கற்புடைய பெண்ணின் இலக்கணம் கணவனை வாழ்வித்து வாழ்தல், உயர்த்தி உயர்தல், உடலும் உயிரும் என வாழ்க்கையில் ஒன்றாகி விடுதல். இந்த இலக்கணங்கள் கண்ணகியிடத்தில் பொருந்தி யிருந்த நிலையினைக் காண்போம்.

கண்ணகி, கோவலனாகிய தலைமகனுக்கு முற்றும் ஈடு கொடுக்கும் தலைமகளே யாவாள். கோவலனின் உயிரும், உணர்வும் மகிழ்ந்து இன்புறத்தக்க அளவிற்கு அவள் இன்பப்

பெட்டமாக இருந்தாள் என்பதை இளங்கோவடிகள், கோவலன் வாயிலாக.

*"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!*
*காசறு விரையே! கரும்பே! தேனே!*
*அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!*
*பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!*
*மலையிடைப் பிறவா மணியே என்கோ*
*அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ!*
*யாழிடைப் பிறவா இசையே என்கோ!*
*தாழிருங் கூந்தல் தையாள்! நின்னை."*

(மனையறம். 73–80)

என்று, பாராட்டி மகிழ்கிறார்! இதிலிருந்தே கண்ணகியின் சிறப்பை உணரமுடிகிறது.

அப்படியானால், ஏன் கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்தான்? என்ற வினாத் தோன்றும். பலர் அவரவர், சிந்தனைப் போக்கிற்குத் தகுந்தவாறு விடை சொல்கின்றனர்.

"கண்ணகியிடம் மாதவிக்கிருந்த கவர்ச்சியில்லை; கோவலன் கலைஞன்: கண்ணகியிடம் கலையுணர்வு இல்லை; கலை இல்லை" என்றெல்லாம் சொல்கின்றனர். இவையனைத்தும் பொய். கோவலன் இயல்பிலேயே மகளிர் ஒழுக்கத்தில் முறை பிறழ்ந்தவன். அவனுடைய மகளிர் ஒழுக்கம் பற்றி இளங்கோவடிகள்,

*"குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு*
*திரிதரு மரபிற் கோவலன் போல*
*இளிவாய் வண்டினொ டின்னிள வேனிலொடு*
*மலய மாருதந் திரிதரும்"*

(இந்திர விழவூரெடுத்த காதை 200–203)

என்று தென்றலுக்கு உவமையாகக் கோவலனை எடுத்துக் காட்டுவதால் அறியலாம்.

இங்ஙனம், கோவலன் விளங்கியதற்குக் காரணம் அவன் மட்டுமல்லன். அவன் காலத்திய சமுதாய அமைப்பும் காரணமாகும். கோவலன் காலத்தில் சொத்துடைமை தோன்றி வளர்ந்துவிட்டது. சொத்துடைமை தோன்றி வளர்வதற்கு முன்பு, காதல் வாழ்க்கையில் சுதந்தரமிருந்தது.

சொத்துடைமை தோன்றிய பிறகு, சொத்தைப் பாதுகாப்பதற்காகக் காதல் வாழ்க்கையில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அப்பொழுது தான், பலரை மணந்து வாழ்ந்த தலைமகன், ஒருத்தியை மட்டும் மணந்து வாழும் நியதிக்கு உட்படுத்தப்படுகிறான். காரணம் சொத்து சிதறிப் போகாமல் குவிந்த முறையில் இருக்க வேண்டும் என்பதாகும்.

ஆனால், பால் உணர்ச்சி வழிப்பட்ட வாழ்க்கையில், தலைமகன் ஒருத்தியொடு கூடி வாழ்வதன் மூலம் மன நிறைவு பெற இயலாது போய்விட்டது. இந்தச் சூழ்நிலையில் பரத்தையர் வாழ்க்கைமுறை ஏற்பட்டது. இந்தக் கால கட்டத்திற்குப் பிறகுதான், பரத்தமை என்ற ஒழுக்கக்கேடு கால் கொண்டது.

இந்தப் பரத்தமையும்கூட, சங்க காலத்தில் ஒருத்திக்கு ஒருவன் என்ற முறையிலேயே முறைப்படுத்தப்பட்டிருந்தது. பின்பு, காலப்போக்கிலே தான், பரத்தமை வாணிக நிலைக்குத் தள்ளப்பட்டுச் சீரழிவுக்குள்ளாகியது.

ஆதலால் இயல்பான வளர்ச்சிப் போக்கும், அவனது வளர்ச்சிப் போக்கை, உந்திச் செலுத்திய அவன் காலத்திய, சமுதாய நிலையும் கோவலனை, கண்ணகியை விட்டுப் பிரித்தன. கண்ணகியிடம் எந்தக் குறையும் இல்லை.

தமிழ் நாகரிகம், பெண்ணைப் பெருமைப்படுத்துகிறது. பெண்ணுக்கு உரிமைகள் அனைத்தும் உண்டு. சிறந்த நாகரிக

சமுதாய அமைப்பு, உரிமைகளைக் கடமைகள் வழி அனுபவிக்கவே தூண்டும். உரிமைகள் முனைப்பினைத் தரா; பணிவினைத் தரும்; நெஞ்சுநிறை அன்பினைத் தரும்; தொண்டு மனப்பான்மையினை நல்கும்; அவ்வழி தன்னலமறுப்புத் தோன்றும்; பிறர் நலம் விழையும் பெருந்தகைமை விளையும்.

இத்தகு பண்புகளைப் பழந்தமிழகத்துப் பெண்கள் பெற்றிருந்தார்கள். அவர்கள் பெறாத உரிமையில்லை. ஆயினும் கணவன் வாழ்விலேயே நாட்டம் காட்டினர். கணவனை வாழ்வித்து வாழ்வதிலேயே இன்புற்றனர்.

பொதுவாக ஒன்று அல்லது ஒருவர் பெற்றுள்ள அழகு நலம், செல்வம், ஆகியன அது அல்லது அவர் துய்ப்பதற்கல்ல. அவரவர் அழகை - நலத்தை அவரவர் துய்த்தல் அரிது. மலரின் மணத்தை மலரே நுகர்தல் இயலாத ஒன்று. தென்றலின் குளிர் நலத்தினைத் தென்றலே துய்த்தல் இல்லை. இயலாததும் கூட.

அதுபோலக் காதலனின் அழகு நலன்களைக் காதலியும், காதலியின் அழகு நலன்களைக் காதலனும், மாறித் துய்த்தலே இயற்கையின் நியதி. ஒருவனே துய்க்கத் தன்னை அவனிடம் ஒப்படைத்துத் தன்னல மறுப்புணர் வுடன் வாழ்தல் கற்பு. இக் கற்புநெறி இருபாலுக்கும் பொதுவே.

அதனால், தமிழகத்துப் பெண்கள் கணவன் மகிழ்தலுக்கே அழகு உடையவராக விளங்க விரும்புவர். கணவன் துய்த்து மகிழும் காலங்களுக்கு ஏற்றாற் போலவே ஒப்பனை செய்து கொள்வர். அதனாலன்றோ காரைக்கால் அம்மையார், தம் கணவன் தம் அழகு நலத்தினைத் துய்த்து மகிழ மறுத்தபோது துறந்தார்; பேய் வடிவம் கொண்டார்.

கண்ணகி வழி வழிச் சிறந்த குலத்தில் தோன்றிய குலமகள். மகளிர்க்குரிய இயல்பான குண நலன்கள்

அனைத்தும் நிறைந்தவள். அதனாலன்றோ கோவலன் கண்ணகியைவிட்டுப் பிரிந்து மாதவியிடம் சென்றபோது 'வடு நீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்து" என்று இளங்கோவடிகள் கண்ணகியைப் பெருமைப்படுத்துகின்றார்.

'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்'

என்று தமிழ்மறை காட்டும். பெண்ணுக்கு இலக்கணமாக வாழ்ந்தவள் கண்ணகி. ஒரு பெண்ணின் கற்பைக் கணவன்காக்க முடியாது. கற்பு என்பது உடல் சார்பான ஒழுக்கம் மட்டுமன்று. பொதுவாக, ஒரு பெண் தன் அழகு நலத்தினைப் பிறர் அதாவது பரத்தமைக் குணமுடைய ஆடவர் காண, கண்டு மகிழ வாய்ப்பளிக்கக் கூடாது.

அதுமட்டுமன்று. தானும் தன் தலைவனைத் தவிர வேறு ஆடவர் நலனை உள்ளத்தில் நினைத்துக் காமுற்றுப் பாராட்டுதல் கூடாது.

அதனாலன்றோ கற்புடைய மகளிர் "பிறர் நெஞ்சு புகார்" என்று சிறப்பித்துக் கூறுகிறது மணிமேகலை.

ஆதலால், கற்பு என்பது உடல் சார்பு உடையது மட்டுமன்று. உடல் சார்பான கற்பைக் கணவனின் காவல் காப்பாற்றித் தரும். சிந்தனையில், உணர்வில் கெட்டபிறகு உடல் காப்பாற்றப்பட்டு என்ன பயன்? அதனால் தான் தமிழ் மறை 'தற்காத்து' என்று கூறுகிறது.

தற்காத்தலிலேயே தன் கணவனுக்கு எதிரிடையான எந்தக் குணக் கேடுகளையும் தான் பெறாது ஒழுகுதலும் அடங்கும்; பெருமை, புகழ் ஆகியனவும்கூட அடங்கும். இது, கணவனுக்கும் பொருந்தும்.

கண்ணகி தற்காத்துக் கொண்டு வாழ்ந்த பெண்ணிற் சிறந்த பெருந்தகையள். கோவலன் நிலா முற்றத்தில் கண்ணகியுடன் கூடி வாழ்ந்த காலத்தில்தான், கண்ணகி

ஒப்பனை செய்து கொண்டாள். கோவலன் பிரிந்து போன பிறகு கண்ணகி, அழகை வெறுத்தாள்; அணிகலன்களை வெறுத்தாள்; துயரினையும் அடைந்தாள்.

ஆனாலும், கணவன் நலம் கருதித் துயரினை மறந்து ஒழுகினாள். மங்கல நாணைத் தவிரப் பிற அணிகளை அணியாது நீக்கினாள். கண்ணகியின் அழகிய கண்கள் கோவலனைப் பிரிந்தமையினால் கருங் கண்களாக மாறிவிட்டன.

அறம் உண்டு. ஆனால் எந்த அறமும், கூட்டு முறையிலேயே செய்யப்படும். மனை அறத்திற்கென்று சில அறங்கள் உள்ளன. இதில் சில அறங்கள் தலைவியும் தலைவனும் சேர்ந்து செய்யும் அமைப்பு உடையன. ஒருவர் இன்றி ஒருவர் செய்தல் இல்லை.

அந்தணர்களைப் பேணுதல், அறநெறி நிற்போரை வாழ்வித்தல்; விருந்தினரை உபசரித்தல் ஆகியன மனை யறத்தில் தலைவி செய்யக்கூடிய அறங்களாகும். கண்ணகி இந்த அறங்களைக் கோவலன் பிரிந்திருந்தாலும் செய்ய வசதி உண்டு. ஆனால் கண்ணகி செய்யவில்லை.

ஏன்? கணவன் இல்லாதபோது மனைவி அறம் செய்தல் கற்பு நெறியன்று. இது மட்டுமா? கண்ணகி கற்புக்காக, கோவலனின் புகழைக் காப்பதற்காக உள்ளத்தின் துன்பத்தினை மறந்து கோவலனின் பெற்றோரிடமும், அவர் தம் வீட்டுக்கு வரும் சான்றோரிடமும் செயற்கையாகப் புன்முறுவல் பூக்கின்றாள்.

ஏன்? கோவலனை விவாதப் பொருளாக்கிச் சீரழியச் செய்யக்கூடாது என்ற கற்பு நெறிதான் காரணம்.

கண்ணகி கோவலனைப் பிரிந்து வாழ்ந்த நிலையிலும் தம் கற்பினையும் காத்துக் கொண்டாள். கோவலனுக்குரிய எந்த நலன்களையும் இழக்காமலும் பேணிப் பாதுகாத்து வந்தாள். அதுபோலவே கோவலனின் பெருமையையும்

புகழையும் கெடுக்கும் எந்தச் செயலிலிருந்தும் தன்னை விலக்கி, காத்துக் கொண்டாள். இதுவே பெண்ணின் கற்பு-பெருமை, கண்ணகி போற்றத்தக்கவள்.

கண்ணகி கோவலனுக்கு ஏற்ற மனைவி என்ற தகுதி மிகுதியும் உடையவளாக இருந்தாள் என்பதனைத் தேவந்தியும் உணர்த்துகிறாள். கோவலன், கண்ணகியைப் பிரிந்ததற்குக் காரணம் கண்ணகியல்லள்.

கோவலன் கண்ணகியை வெறுத்து ஒதுக்கவில்லை என்பதைக் "கணவற்குக் கைத்தாயுமல்லை" என்று தேவந்தி கூறி விளக்குகிறாள். இங்ஙனம் இருக்க, கண்ணகியிடம் கலை இல்லை, கவர்ச்சியில்லை, அதனால் கோவலன் பிரிந்தான் என்றெல்லாம் கருதுவது மரபன்று.

தேவந்தி, கோவலன் கண்ணகியைப் பிரிந்ததற்கு ஊழையே காரணமாகக் காட்டுகிறாள். அதாவது, மகளிர் கணவன் பொருட்டு நோற்கும் நோன்பினை முறையாகச் செய்யாமையால் விளைந்த தீயூழ் என்று சொல்கிறாள்.

ஆனால், இளங்கோவடிகள் தேவந்தியின் வாயிலாகத் தான் இங்கு ஊழை நினைவூட்டுகிறார். இங்கு ஊழின் விளைநிலமாகிய சமுதாய அமைப்பு, சீராக இன்மையே கோவலன் பிரிவுக்குக் காரணம்.

சமுதாய அமைப்பின் சீரின்மையை அரசு திருத்தி நெறிப்படுத்தலாம். ஆனால் புகாரிலிருந்த சோழப் பேரரசு அதைச் செய்யத் தவறிவிட்டது அல்லது தனி ஒருவர், தன் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கிற சமுதாய அமைப்பை, எதிர்த்துப் போராடலாம். அந்தத் தகுதியும் கோவலனுக்கு இல்லாமல் போய்விட்டது.

காரணம், கோலவன் பரத்தை வழி ஒழுகின தோடன்றி, நெறிமுறை சார்ந்து வாழாது நகரில் சுற்றித் திரியும் இளைஞர்களுடன் கூட்டுச் சேர்ந்துவிட்டான். வறுமொழி பேசியும், நெடிய நகை நகைத்தும், வறிதே வாழும்

கூட்டு, கோவலனைச் சிந்திக்க விடாமலேயே தடுத்துவிட்டது. ஆதலால் இளங்கோவடிகள் இங்கே ஊழை, எடுத்துக் காட்டவில்லை.

தேவந்தி, கோவலனைக் கண்ணகி திரும்ப அடைவதற்கு உரியவழியும் காட்டுகிறாள். சோமகுண்டம், சூரியகுண்டம் ஆகியவற்றில் மூழ்கிக் காம வேளை வணங்கினால் கோவலனைத் திரும்ப அடையலாம் என்று கூறுகிறாள். பல நாட்கள் கணவனைப் பிரிந்து வருந்தும் கண்ணகிக்கு இந்த வழிகாட்டுதல் ஆறுதல் தரும்; இன்பம் அளிக்கும் என்று தேவந்தி எண்ணினாள். ஆனால், கண்ணகி இதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஒரே வார்த்தையில் நறுக்குத் தெரித்தாற் போல் "பீடன்று" என்று கூறி மறுத்துவிட்டாள். இந்த இடத்தில் தேவந்தியின் ஆலோசனையை ஒரே வார்த்தையில் கண்ணகி மறுத்துப் பேசுவானேன்?

ஒரு துன்பத்தில் வருந்துவார்க்குப் பலர் எளிதில் ஆலோசனைகள் கூற வருவர். அந்த ஆலோசனைகள் பெரும்பாலும் தன்மதிப்பை இழக்கக் கூடியதாகவும் நெறிமுறைகளைக் கடந்ததாகவுமே இருக்கும். ஆயினும், தன்னல நயப்பு, தேவை என்ற அடிப்படையை வைத்துக் காது கொடுக்கத் தொடங்கிய நிலையிலிருந்து முற்றாக மாறிவிடுவர்.

இராமகாதையில் வரும் கூனி, கைகேயியின் மனத்தை மாற்றியதை நினைவு கூர்க.

இதன் தொடர்பாகத் தொடர்ந்து தேவந்தியிடம் பேசுவதால், தன் மனம் நெறிகளைக் கடக்கும் வாய்ப்பு ஏற்படும். அந்த வாய்ப்பைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் ஒரே சொல்லில் "பீடன்று" என்று கூறி மறுத்து விடுகிறாள்.

காதல், கற்பு என்பன இன்பத்திற்கும் களிப்பிற்கும் மட்டுமே உரியவை அல்ல. தன்னல மறுப்பிற்கும், தம்மைச்

சார்ந்தாரைக் காத்தற்கும் காதலும் கற்பும் பயன்படும் பொழுதுதான் அறம் ஆகிறது; இறைமை ஆகிறது.

அதனால், தமிழ்ப் பெண்டிர் தத்தம் கணவனின் தவறுகளை நெஞ்சத்தாலும் நினைத்துப் பார்க்க மாட்டார்கள் என்று ஐங்குறுநூறு எடுத்துக் காட்டும். கண்ணகி பெண்ணிற் பெருந்தக்காள். கண்ணகி தன் கணவனின் தவற்றைக் காமவேளிடம் சொல்ல எங்ஙனம் ஒருப்படுவாள்? அதனாலேயே "பீடன்று" என்று மறுக்கிறாள்.

அதுமட்டுமன்று. மாதவியிடம் தங்கியிருப்பது கோவலனுக்கு விருப்பமாயின் அவனது விருப்பத்திற்குக் குறுக்கே நிற்பானேன் என்று கருதி, கோவலன் மகிழ்வுக்கு முதன்மை கொடுக்கும் கண்ணகியின் திறமும் புலப்படுகிறது.

இதனைக் கொலைக்களக் காதையிலும் கண்ணகி புலப்படுத்துகிறாள். கொலைக்களக் காதையில் கோவலன் தன்னிலை நினைந்து வருந்திக் கூறுகிறான்; தன் குறைகளைப் பாராட்டாது, கண்ணகி தன்னுடன் மதுரைக்கு வந்தமையைப் பாராட்டுகிறான்.

அப்போது கண்ணகி "போற்றா ஒழுக்கம் புரிந்தீர், யாவதும் மாற்றா உள்ள வாழ்க்கையேன் ஆதலின் ஏற்றெழுந்தனன்யான்" என்று கூறுகிறாள். இங்குப் "போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என்று கண்ணகி கூறியது முறையன்று; இடித்துக் கூறியது போலத்தான் என்று சிலர் கூறுவர். இது தவறு.

இங்கு 'போற்றா ஒழுக்கம் புரிந்தீர்' என்பது போற்றுதலுக்குரிய ஒழுக்கத்தை மேற்கொள்ளவில்லை என்றுதான் பொருளே தவிர, அது இழி நிலைக் கருத்தைத் தராது

அதோடு, கண்ணகி பெரிய இடத்துப் பெண், கோவலனுடைய நடைமுறையைச் சமூகம் ஏற்றுக் கொள்ளாமையை அறிந்திருக்கிறாள்; உணர்ந்திருக்கிறாள். சமூகத்தின் நினைப்பு, கோவலனுக்கு எதிராக இருக்கிறது

கு.V.12.

என்பதைக் கண்ணகி அறிந்திருந்தாலும் அவள், கோவலன் தன் கணவன் என்ற அடிப்படையில் காதலையும் கடமையாக்கிக் கோவலன் வார்த்தையை மறுக்காத-மறுக்க நினைக்காத ஒழுகலாறுடையேன் என்று, தன் நிலையைக் கோவலனுக்குத் தெரிவித்துத் தன்பால் கோவலனுக்கிருந்த ஐயத்தையும் அச்சத்தையும் நீக்குதற் பொருட்டே கூறுகிறாள்.

இந்நோக்கம் கண்ணகிக்கு ஆழமாக இருந்தது என்பதை, புகாரில் மாதவியை விட்டுப்பிரிந்த கோவலன், கண்ணகியை நோக்கி வந்தபொழுது கண்ணகி கோவல னுக்குத் தன்னம்பிக்கையும் நலமும் மகிழ்வும் தரும் வகையில் "நலங்கேழ் முறுவல் நகை முகம் காட்டி" வரவேற்கிறாள் என்று இளங்கோவடிகள் கூறுவதால் அறிக.

அதுபோது கோவலன் தன் வளமார்ந்த செல்வங்கள் அனைத்தையும் இழந்துவந்துள்ள கீழ்மை நிலையை நினைந்து வருந்தி கண்ணகியிடம் கூறுகிறான். கண்ணகியோ கோவலன் பொருளை இழந்து வருந்தும் செய்தி பற்றி, அலட்டிக் கொள்ளவில்லை.

பொருளிழப்புத் தொடர்பாக யாதொரு வார்த்தையும் சொன்னாளில்லை. ஏன்? பொருளிழப்புச் செய்திகளையும் தொடர்ந்து விவாதித்தால் வருந்தும் சூழ்நிலைகள் மேலும் உருவாகலாம் என்பது கண்ணகிக்குத் தெரியும்.

அத்தகைய வருத்தத்தைக் கோவலனுக்குக் கொடுக்கக் கண்ணகி தயாராக இல்லை. இதற்கு மாறாக அவன் பொருள் தேவையின் காரணமாக தாமே கோவலன் மீதுள்ள காதல் மிகுதியால் மேலும் பொருள் வழங்கும் நோக்கத்தோடு "சிலம்புள கொணம்" என்கிறாள்.

இங்கேயும் கண்ணகியின் மாண்பு உயர்ந்து காணப் படுகிறது. "சிலம்பு உள" என்று சொன்னதின் மூலம் சிலம்புகள் மட்டுமே எஞ்சியுள்ளன என்ற குறிப்பையும்

உணர்த்துகிறாள். இங்ஙனம் உணர்த்த வேண்டிய அவசியம் என்ன?

மீண்டும் தொடர்ச்சியாகப் பெறுதற்கு, பொருள் யாதொன்றுமில்லை என்ற குறிப்பை உணர்த்துவதன் மூலம் அவனைப் பொருள் செயல் வழியில் நெறிப்படுத்தலாமா என்று எண்ணியே "சிலம்புள கொணம்" என்று கூறுகிறாள்.

கோவலனை, மதுரைக்குச் சென்று வாணிகம் செய்து பொருளீட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் ஆற்றுப் படுத்தியது "சிலம்புள கொணம்" என்ற கண்ணகியின் சொல்லே என்று கூறலாம். ஆதலால் கண்ணகியின் வாழ்வும் இலட்சியமும் கோவலனைச் சார்ந்து இயங்கியது எனலாம்.

## சொற்காத்த கண்ணகி

கற்புடைப் பெண்ணின் அடுத்த கடைமை "தகைசான்ற சொற்காத்தல்" என்பதாகும். அதாவது கணவனின் புகழை, பெருமையைப் பாதுகாத்தல், பிறரால் மகிழ்ந்து சொல்லப்படுவது புகழ். ஆதலால், புகழைச் "சொல்" என்று வள்ளுவம் கூறுகிறது.

காதல் வாழ்க்கையில், மன வேற்றுமைகள் ஏற்படு வதற்கு வாய்ப்புகள் உண்டு. ஊடல் முற்றி வளர்ந்து புலவியாகலாம். ஆயினும் எந்தச் சூழ்நிலையிலும், கணவனின் புகழுக்கு, ஊறு ஏற்படாமல் காப்பவளே கற்புடைய பெண்.

அது போலவே கணவன் மொழிந்த வாக்கு, சூளுரை ஆகியவைகளை நிறைவேற்றி, அவன் மொழிந்த சொல்லை நிறுத்தத் தக்கவாறு, கற்புடைய மனைவி தோழமையாக விளங்கித் துணை செய்ய வேண்டும். தன்னயப்பால் கணவனின் கொடைக்கு இடையூறாக விளங்கக்கூடாது. இன்ப நயப்புணர்வால் கணவனைக் கடமைகள் மீது செல்லவிடாமல் தடுத்தல் கூடாது.

மேலும் கணவன் மீது அயலார்-பகைவர், தகாத பழியைக் கூறினாலும், அப்பழியிலிருந்தும், கணவனை மீட்க வேண்டும். இங்ஙனம், எல்லா வகையாலும் கணவனின் புகழை, பெருமையைக் காப்பவளே கற்புடைய பெண்.

கண்ணகி, கோவலனின் பிரிவின்வழித் துன்பத்தை, கோவலன் மாதவியால் சார்ந்து வாழ்ந்ததை, யாரிடமும் எடுத்துக் கூறவில்லை. கடவுளிடமும் கூட எடுத்துக் கூறி,, வழிபட மறுத்துவிட்ட மாண்பினை, முன்னர்ப் பார்த்தோம்.

கண்ணகியால், கோவலனுக்கு எந்தப் பழியும் வரவில்லை. ஆனால் மதுரை மாநகரில் கோவலனுக்குப் பழி வந்துவிட்டது. கோவலனுக்குக் 'கள்வன்' என்ற பழிச் சொல்லை மதுரையில் கொடுத்துவிட்டனர். பாண்டிய அரசும் கோவலன் மீது பழிகாரர் கொடுத்த பழியை நம்பி; கோவலனுக்குத் தவறிழைத்து விட்டது.

கோவலனுக்கு ஏற்பட்ட மரணத்தைவிட, கண்ணகியை வருத்தியது கோவலன் மீது சுமத்தப்பட்ட பழியேயாம். கோவலன் கள்வன் என்று சொல்லப் பெற்றுக் கொல்லப்பட்டான் என்ற செய்தியைக் கேட்டவுடன் கண்ணகிக்குக் கோவலன் மீது எள்ளளவும் ஐயம் ஏற்படாதது கண்ணகியின் கற்புக்குச் சிறப்பு.

கோவலனும், கண்ணகியும் சில ஆண்டுகளே வாழ்ந்தனர். இடையில் கோவலன் கண்ணகியைப் பிரிந்து வாழ்ந்திருக்கிறான். கண்ணகியைப் பிரிந்து வாழ்ந்த காலத்தில், கோவலனின் ஒழுக்க நலன்கள் என்ன ஆயின? என்ற ஆய்வுக்குக் கூட, கண்ணகி தயாராக இல்லை. ஏன்? நம்பிக்கை நிறைந்த நல் வாழ்க்கையில், கண்ணகி நாட்டம் கொண்டாள்.

கண்ணகி, கோவலனின் குறைகளையும் நிறைகளையும் தேர்ந்து தெளிந்தவள். ஆதலால், 'கள்வன்', என்று கோவலன்

பழி சுமத்தப்பட்டபோது பாண்டிய அரசுதான் தவறு செய்துவிட்டது என்று ஐயத்திற்கு இடமின்றித் துணிகிறாள்.

இத்தகைய சால்பு, பழகிய பலரிடத்தில் காண்பது அரிது. அவர்கள், இயல்பில் குற்றம் காண்பவர்கள். எனவே, "இல்லாமலா இருக்கும் அல்லது இருக்குமோ?" என்று ஐயப்படுவார்கள். கண்ணகிக்கு ஐயத்தின் அடிச் சுவடேயில்லாத நம்பிக்கை கோவலனிடத்தில்!

கோவலன், தன்னைப் பிரிந்து துன்புறுத்தினானா யினும், அவள் அத்துன்பத்தைத் தாங்கி, தவம் செய்தாளே தவிர, கோவலனுக்கு இம்மியும் நெஞ்சத்தாலும் தவறிழைக்க வில்லை. தான் தவறிழைக்காததோடு மற்றவர் தவறிழைத்த பொழுது, தான் அத் தவற்றைத் தாங்கமுடியாது சினந்து எழுகின்றாள்.

பூம்புகாரில், ஆழ்கடலின் அமைதி போலிருந்த கண்ணகி, மதுரை நகரில் சினந்து எழுகிறாள்; எரிமலை யெனக் குமுறுகிறாள். பூம்புகாரில் கோவலன் மாதவி ஆகியோர் தனக்கிழைத்த தீமையைத் தாங்கிக் கொண்டாள். ஆனால், மதுரையில் தன் கணவன் கோவலனுக்கு இழைத்த தவற்றை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

கண்ணகியின் தன்னல மறுப்பும் கோவலனுக்காகவே வாழ்ந்த தியாக உணர்வும் இதனால் புலப்படுகின்றன. கோவலன் கொல்லப்பட்ட செய்தி கிடைத்தவுடன் அவள் நெஞ்சத்தில் குமுறல் எழுந்தது கொலையால் அல்ல; பழி தூற்றலாலேயாம். இதனை,

**"மன்பதை அலர் தூற்ற மன்னவன் தவறிழைப்ப**
**அன்பனை இழந்தேன் யான் அவலங் கொண்டழிவதோ"**

(துன்பமாலை—36—37)

என்று கூறுகிறாள். ஒரு நாட்டு அரசு தவறு செய்து விட்டது என்று நம்புகிறாள். ஆனால், தன் கணவன் தவறு

செய்யவில்லை என்று திடமான நம்பிக்கை நெஞ்சளவில் மட்டும் கொள்ளாமல், தன் கணவனின் மீது சுமத்தப்பட்ட பழியைத் துடைக்க, அரசை எதிர்த்துப் போராடும் அளவுக்குக் கண்ணகி துணிந்து விட்டாள்.

பாண்டிய அரசிடம் வழக்குரைக்கச் சென்றதே கணவனை மீட்க அல்ல; கணவனின் புகழை மீட்கத்தான்! கோவலன் கள்வன் அல்லன் என்று உலகறியச் செய்து அவன் புகழைக் காப்பாற்றிய கண்ணகியின் கற்பு தெய்வக் கற்பு, மறக் கற்பு, அரசியலையே மாற்றியமைத்த ஆளுமையுடைய கற்பு.

## கணவன் புகழ் காத்த கண்ணகி

கண்ணகி வள்ளுவம் காட்டிய வாழ்க்கைத் துணை நலத்திற்கு இலக்கியமாகத் திகழ்ந்தவள். பொறுமையின் மறுபதிப்பாகப் பூம்புகாரில் வாழ்ந்த கண்ணகிக்கு மதுரையில் இவ்வளவு ஆற்றாமை ஏன்? வெகுளி ஏன்? இங்குதான் கண்ணகியின் சால்பு ஒளி பெற்று விளங்குகிறது.

ஒட்டு மொத்தமாக வெகுளல்தான் தீது. வெகுள வேண்டிய இடங்களில் வெகுளாமல் இருப்பவர்கள் அநியாயக்காரர்கள்; கொத்தடிமைகள்; கோழைகள்; வாழ்க்கையின் பொருள் புரியாத புல்லறிவாளர்கள்.

வாழ்க்கையில், சொற்காத்தல் என்பது ஒரு சிறந்த பண்பாடு. சொல்லப்படுவன எல்லாம் சொல்லல்ல. பொதுப் படையாக இருந்தாலும் சிறப்பாக சொல் என்பது புகழையே குறிக்கும்.

பிறரால் மகிழ்ந்து சொல்லப்படுவது புகழ். அதனால்தான், திருவள்ளுவர் "சான்றோர் எனக் கேட்ட தாய்" என்றார். இதையே பெண்ணின் பெருஞ் சிறப்பிற்குத் "தகை சான்ற சொற் காத்தல்" என்பதும் ஒரு கடமை என்றும் கூறுகிறார்.

மானிட வாழ்க்கையில் காதல்-நட்பு ஆகிய இரு உறுப்புக்கள் மனிதனின் வாழ்க்கையை உயர்த்தும் தோழமை உறுப்புக்களாகும். இந்தப் பொறுப்புகளை ஏற்றுக் கொள் வோர், தொடர்புடையோர் நலனைப் பாதுகாப்பர்.

கண்ணகி கோவலனுக்குக் காதற் கடமை பூண்டவள். கோவலனின் வாழ்க்கை தன்னுடைய தவறுக்கு ஏற்றதாக இல்லையானாலும் அவன் புகழைப் பாதுகாக்கும் உணர்வோடு பூம்புகாரில் பொறுமையாக இருந்தாள். பூம்புகாரில் பாதுகாத்த கணவரின் பெரும் புகழைப் பாதுகாப்பதற்கே மதுரைக்கு வந்ததையும் கண்ணகி நினைவு கூர்கிறாள்.

ஆதலால், தனது இளமையை இழந்தும் வாழ்க்கை நலன்களை இழந்தும் காப்பாற்றிய கணவனின் புகழ் மதுரையில் மாசுறுவதை அவளால் தாங்கமுடியவில்லை. கோவலனின் இழப்பில் கண்ணகிக்கு இருந்த ஆற்றாமையை விட - கோவலன் மீது சுமத்தப் பெற்ற பழியில்தான் அவளுக்கு இருந்த ஆற்றாமை-ஆத்திரம் அதிகம்.

கோவலன் கொல்லப்பட்டான் என்ற செய்தி கேட்டவுடனேயே, கண்ணகி துன்பத்தின் எல்லைக்குச் சென்று விடுகிறாள். கோவலன் கள்வன், அதனால் அவன் கொல்லப்பட்டான் என்ற செய்தி அவளை அனலாக்கி விட்டது. அவளுக்குத் தன் கணவன் கள்வன் அல்லன் என்னும் தெளிவிருக்கிறது.

அது மட்டுமா? தனது காற்சிலம்பை விலை கொடுக்காமல் அடைவதற்காக, கோவலன் மீது பழி சுமத்தி விட்டார்கள் என்று துணிகிறாள். இத்தகு தெளிவு கண்ணகிக்கு எப்படித் தோன்றியது?. ஆராய்ந்து பிறந்த தெளிவல்ல, கடப்பாட்டின் வழிப்பிறந்த தெளிவு.

காதலில், நட்பில், பழகியவர்களை ஐயப்படுதல் ஆராய்தல் மூலம் நட்பு கெடும்; காதல் கெடும். ஆயினும்

தன்னுடைய தெளிவான கருத்தை வலியுறுத்தாமல் கணவனின் வாயிலாகவே தான் கள்வன் அல்லன் என்று கேட்டறிய விரும்புகிறாள்; துடிக்கிறாள்.

தனது கணவன், கள்வன் என்று உலகம் பழி தூற்றும்படியாக மன்னவன் செய்த தவற்றை நினைத்து நினைத்து, அவள் வெம்புகிறாள். அது சீற்றமாக உருவெடுக்கிறது. கணவனை இழந்த நிலையிலும் கணவனைக் காணவேண்டும். திரும்ப அடையவேண்டும் என்றெல்லாம் ஆவல் கொள்ளாமல் "அவன் தீதறு நல்லுரை" கேட்க விரும்புகிறாள்.

தீதறு நல்லுரை யாது, கோவலன், கள்வன் அல்லன் என்பதுதான். இந்த நல்லுரையைக் கேட்கவே அவள் மதுரைப் பெண்டிரை நாடுகிறாள். பதில் இல்லை. மதுரைச் சான்றோரை நாடுகிறாள்; பதில் இல்லை. மனித உலக வரலாற்றிலேயே நீதிக்குச் சார்ந்து பேசி வழக்காடும் பழக்கம் இவர்களுக்கு இல்லாமல் போய் விட்டது.

கடைசியாகத் தன் கணவனைக் கள்வன் என்று பழிசுமத்திக் கொன்ற அரசனையே நாடுகிறாள். நீதி கேட்கிறாள். தேர்ந்து தெளியும்படி கேட்டுக்கொள்கிறாள். அரசனோ, தேர்ந்து தெளிய உடன்பட்டான் இல்லை.

தேர்ந்து தெளிந்து சொல்வதாக, உரியன செய்வதாகப் பாண்டியன் சொல்லியிருந்தாலும் கண்ணகியின் சீற்றம் தணிந்திருக்கும். ஆனால், பாண்டியன் "கள்வனைக் கோறல் கடுங்கோலன்று' என்று தம் நிலைமையையே சாதிக்கிறான். அதனால்தான், கண்ணகிக்கு ஆற்றொணாத் துயரம் தோன்றி வழக்கைத் தொடுக்கிறாள்.

அப்பொழுதும் அந்தச் சூழ்நிலையிலும் கண்ணகிக்கு ஆத்திரத்தில் பாண்டியன் மீது பழி சுமத்தும் எண்ணம் இல்லை. அறிவார்ந்த நிலையில் வழக்கை வைக்கிறாள். தன்

கணவன் கள்வன் அல்லன் என்று பாண்டியன் உணரும்படி செய்கிறாள்.

தன் கணவன் கோவலன் மீது கள்வன் என்று பழி சுமத்திய பாண்டிய பேரரசன் வாய் மொழியினாலேயே கோவலன் கள்வன் அல்லன் என்ற முடிவைப் பெற்று உலகத்திற்குத் தந்து கோவலனுடைய புகழைக் காப்பாற்றினாள். இன்றும் காப்பாற்றுகிறாள்.

அன்று கண்ணகி பாண்டிய அரசோடு போராடிக் கோவலன் புகழைக் காப்பாற்றத் தவறியிருந்தாளானால் இன்று கோவலன் நினைப்பதற்குக்கூட தகுதியுடையவனாக இருந்திருக்க மாட்டான்.

வரலாற்று ஏடுகளும் காப்பியங்களும் பழிசுமத்த கோவலனையே காட்டும். கோவலன் வழி வணிகர் குலமும் சோழ நாடும் கூட பழி சுமக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். கண்ணகி, இவ்வகையில் செய்த பணிக்கு ஈடாக உலகத்தில் வேறெதுவுமில்லை.

## மதுரையை எரிக்கலாமா?

கண்ணகி, பாண்டியன் அரசவைக் களத்தில் முறையாக வழக்குரைத்து வெற்றி பெறுகிறாள். நீதியினை நிலைநாட்டுகிறாள். கோவலன் புகழைக் காப்பாற்றுகிறாள்; ஆயினும் கண்ணகியின் ஆற்றாமை நீங்கவில்லை; துயர் தணியவில்லை. கண்ணகியின் வெகுளி பொங்கியெழுந்து செயற்படுகிறது. ஆயினும் நெறிமுறை கடந்துவிடவில்லை. கண்ணகி, மதுரையை அழிப்பேன் என்று உறுதி பூணுகிறாள். மதுரையை அழிப்பானேன்?

கோவலன் கள்வனல்லன் என்பது உறுதியாகிவிட்டது. கோவலன் உயிரை முறை கேடாக எடுத்துக்கொண்ட பாண்டிய அரசன் உயிரைக் கொண்டாகிவிட்டது. கணவனை இழந்த கண்ணகி பட்ட துயரைப்

பாண்டிமாதேவி அடைந்து விட்டாள்! இவ்வளவு நடந்த பிறகு ஏன் கண்ணகிக்குச் சினம் அடங்கவில்லை? மதுரையை அழிப்பதற்கு என்ன நியாயமிருக்கிறது.

மனித வாழ்வில் குறைகள், குற்றங்கள் என இருப்பதும் உண்டு. இவற்றில் குறைகள் மன்னிக்கத்தக்கன; மறக்கத் தக்கன. குறைகள் என்பவை வாழ்வியலோடு சம்பந்தப் பட்டவை. அப்பட்டமான தன்னலச் சார்புடைய ஒழுகலாறுகளால், சமூகத்துக்குப் பெரிய தீங்குகள் விளைந்து விடுவதில்லை.

கோவலன் மாதவியின்பாற் சென்றொழுகியது குறை. ஆதலால் கண்ணகி பொறுத்திருந்தாள். ஆனால் பாண்டியன் நெடுஞ்செழியன் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒருவனைக் கொன்றது குற்றம். இத்தகைய குற்றம் தனி மனிதனிடத்தில் கூட பெரிய தீமை தரும். அது பலர் உயிரை எளிதில் கொல்லக் கூடிய அரசாணையுடைய அரசனிடத்தில் இருக்குமாயின் நாட்டு மக்களின் கதி என்னாவது?

அதனால்தான் கண்ணகிக்குப் பாண்டியனின் குற்றத்தைத் தாங்கிப் பொறுத்துக் கொள்ள முடியாத சினம் ஏற்பட்டது. அப்படியானால் பாண்டியன் நெடுஞ்செழியன் உயிரைத்தான் கொண்டாயிற்றே! மீண்டும் மதுரையின் மீது, ஏன் சினம்?

இளங்கோவடிகள் முடியைத் துறந்து மக்களை நாடி மக்களுள் ஒருவராகி, கண்ணகியின் காற்சிலம்பை முதலாகக் கொண்டு காப்பியம் செய்தவர். ஆதலால் காப்பியப் போக்கிலும் அரசியலில் மக்களுக்குரிய பங்கை வற்புறுத்த எண்ணுகிறார்.

நாட்டு மக்கள் நல்ல அரசை விரும்ப வேண்டும். நாட்டை ஆள்வோர் கள்ளுக் கடைகளைத் திறந்தாலென்ன? மூடினால் என்ன? கடன் வாங்கினால் என்ன? கொடுத்தால்

என்ன? "கமிஷன்" வந்தால் என்ன? போனால் என்ன? என்று ஏனோதானோ என்று நினைக்கக் கூடாது.

நாட்டு மக்கள், நல்லவர்களாக இல்லாதுபோனால் அந்த நாட்டில் நல்லாட்சி அமையாது; அமையமுடியாது. எனவே, ஓர் அரசின் சிறப்புக்கு அந்த நாட்டு மக்களின் நடத்தையும் காரணம் என்று கண்ணகி வாயிலாக இளங்கோவடிகள் உணர்த்துகின்றார். அதனால், பாண்டியன் செய்த தவறு திடீரென்று விளைந்ததன்று என்று கண்ணகி ஓர்கிறாள்.

ஒரு மனிதனிடத்தில் குற்றம் திடீரென்று தோன்றி விடாது. அதற்கொரு வரலாறு இருக்கும். அந்தக் குற்றத்தை வளர்த்தவர்கள் இருப்பார்கள் என்பதே உண்மை. பாண்டியன் தன் அமைச்சர்களிடத்தில் கலந்து ஆராயாமல் "கொன்று அச்சிலம்பைக் கொணர்க!..." என்றது தன்னிச்சை யான வாக்கு.

தன்னிச்சையான மனப்போக்குக் கொள்ளுதல், தன்னிச்சையாகச் செயற்படுதல் சமுதாய வாழ்வில் பெரிய குற்றம். மானுட சமுதாய அமைப்பில் தன்னிச்சையாய்ச் செயற்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்ற இயற்கை நியதியே இருக்கிறது. பிறர் சொல்வதைக் கேட்டு அறிந்து, தெளிந்து செயற்பட வேண்டும் என்பதற்காக இரண்டு செவிகள் வழங்கப் பெற்றிருக்கின்றன. ஆனால் கேட்பாரைத் தான் காணோம்.

அமைச்சர்களாக இருந்தோரும், ஊர்காவலர்களாக இருந்தோரும் அரசன் தங்களுடன் சூழ்ந்து ஆராயாமல், பொற்கொல்லன் சொற்கேட்டு அவ்வழிச் செயற்பட்டு விட்டானே என்று துணுக்குற்றாரில்லை. அங்ஙனம், துணுக்குறாததற்குக் காரணம் இந்நிகழ்வுக்கு முன்பும் மன்னன் அப்படித்தான் செய்திருப்பான் என்று நம்ப இடமிருக்கிறது.

அமைச்சர்களும் மற்றவர்களும் நமக்கு ஏன் பெரிய இடத்துப் பொல்லாப்பு என்று வாளா இருந்து வயிறு வளர்த்திருப்பர் போலும். ஆதலால் ஒரு நாட்டுச் சமுதாய அமைப்பு கெட்டுப் போனால் ஒழிய அரசு தவறு செய்ய முடியாது.

தவறு செய்வதற்கு நேரிடையாக நெடுஞ்செழியன் காரணமாக இருந்தாலும் அவனை இவ்வகைக் குற்ற நெறியில் செலுத்திய அந்த நகரத்து மக்களும் பொறுப்பாவர். ஆதலால்தான் கண்ணகி குற்றமுடைய ஓர் அரசு தோன்றி வளரக் காரணமாக இருந்த மதுரையை அழிப்பேன் என்று உறுதி பூணுகிறாள்.

ஆயினும், கண்மூடித்தனமாகவும் அவளுடைய சினம் செல்லவில்லை. வாழ்ந்தாலும் செயலற்றவர்களாக பொதுமைக்குப் பொறுப்பேற்காது ஒதுங்கி வாழ்பவர்களாகச் சிலர் இருக்கத்தான் செய்வர். அவர்களையெல்லாம் தப்பித்துக் கொள்ள விடுகிறாள்; தீத்திறத்தார் மட்டுமே அழியுமாறு அழிக்கின்றாள்.

தீத்திறத்தாரை அழிப்பது பாவமா? கழனியில் களை பிடுங்குவது தவறா? ஆதலால் கண்ணகி மதுரைக்கு எரியூட்டியது அரசியல் நீதி! சமுதாய நீதி! அறத்தின் ஆட்சி! கொற்றம் செய்த கொடுமையிலிருந்து குடி மக்கள், நல்லாட்சியை அமைத்த வரலாறு!

## உரைசால் பத்தினி

இளங்கோவடிகள் தமது காப்பியத்தை மூன்று குறிக்கோள்களோடு தொடங்குகின்றார். அவற்றுள் ஒன்று "உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல்" என்பதாகும். ஒருவரைப் பண்பறிந்து போற்றும் பண்பு எல்லாருக்கும் வந்து விடுவதில்லை.

சமுதாயத்தில் இழி மனப்பான்மையுடையவர்கள் நல்லதன் தன்மை அறிய மாட்டார்கள். அதனால் நன்மையைப் பாராட்டும் மனப்பாங்கு அவர்களுக்கு இருக்காது. ஏன்? அவர்களுடைய அறியாமையின் காரண மாகத் தீமையை நன்மையென்று போற்றினாலும் போற்றுவர். போற்றும் பண்பு என்பது உயர் பண்பு. நன்மையை – நன்மையின் திறத்தை அறிந்து போற்றுவதென்பது அறிஞர்க்கு அழகு.

ஒரு பெண் பத்தினிப் பெண்ணாக வாழ்க்கையில் உயர்தல் எளிதன்று. அஃதொரு கடுமையான சோதனை. நல்ல கணவன் வாய்ப்பின் அம்முயற்சி வெற்றி பெறலாம். நற்றிறமில்லாதவனாக வாய்த்து விடின் ஒரு பெண்ணின் கற்புக் கடமைகள் கூடுகின்றன. கடமைகளும் பொறுப்புக் களும் கூடும்பொழுது சோதனைகளும் மிகத்தான் செய்யும்.

கற்பு என்பது ஒழுக்கம் மட்டுமன்று. அது கடமைச் சார்புடையதுமாகும். ஆனால் இந்த நூற்றாண்டு அறிவியலறி ஞர்கள் "ஒருவர் தம் பொறுப்புக்களை, கடமைகளை முறையாகச் செய்தல் ஒழுக்கத்தின் அடையாளம்" என்று வரையறுத்துக் கூறுகின்றனர்.

ஆனால் இன்னமும் நம்முடைய நாட்டில் ஒழுக்கம் என்ற சொல்லைக் கடமையோடு பொருத்திப் பார்க்கிற மனப் பாங்கு வளரவில்லை.

வள்ளுவம் வகுத்துக் காட்டிய பெண்மையின் பெருஞ் சிறப்பு.

> "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்பதாகும்.

இப்பண்புகள் அப்படியே கண்ணகியிடம் பொருந்தி அமைந்திருந்தன. ஆயினும் தற்கொண்டாற் பேணுதல் என்ற

துறையில் கண்ணகியால் முழுமையாக வெற்றி பெற முடியவில்லை. அஃது அவள் குறையன்று. கண்ணகி காலத்தில் சமுதாய அமைப்பு சீர் கெட்டிருந்தது.

பரத்தமை ஒழுக்கம் தலைமகனுக்குரிய ஒழுகலாறு போல ஏற்றுக் கொள்ளப்பெற்ற தீயூழ்க் காலம். கண்ணகியால் என்ன செய்ய இயலும்? அந்தச் சூழ்நிலையையும் அவள் எதிர்த்துப் போராடுவதென்றால் கோவலனின் விருப்ப உணர்வுகள் கெட்டுப் போகுமோ என்ற உணர்வில் தன்னல மறுப்பிலும், கோவலனின் நலம் பேணுதலிலும் இருந்த முனைப்பு அவ்வகையில் அவளைப் போராடத் தூண்ட வில்லை.

அந்த நல்லொழுக்கம் தற்சார்புடையதாக அமைந்து விட்ட குறையே அது. ஆதலால், கண்ணகியை உயர்ந்தோர் பாராட்டுகின்றனர். இதனைக் காப்பியம் முழுதும் காணலாம்.

கவுந்தியடிகள் ஒரு துறவி. அதிலும் சமணத்துறவி. சமணத் துறவியருக்குப் பெண்மை இசைவிலாத ஒன்று. ஆயினும் கவுந்தியடிகள் கண்ணகியை மனங்குளிரப் பாராட்டுகிறார். ஏன்? தெய்வம் என்றே பாராட்டுகிறார்.

அருக தேவனையன்றி மற்றவரை வாழ்த்தாத கவுந்தி யடிகளின் வாயினால் கண்ணகி தெய்வம் என்று போற்றப் பெறுதல் எளிதில் கிடைக்கத் தக்கதா? அல்லது கவுந்தி யடிகளுக்குத்தான் இங்ஙனம் போற்றிப் பாராட்ட எளிதில் பாத்திரங்கள் கிடைக்குமா?

> "கற்புக் கடம்பூண்டஇத் தெய்வ மல்லது
> பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்"

என்று பாராட்டுகிறார் கவுந்தியடிகள்.

அடுத்து, மதுரை நகரத்தெய்வம் "பெருந்தகைப் பெண்ணோ!" என்று அழைக்கிறது. 'பெருந்தகை' என்ற சொல் வள்ளுவத்தில் மாட்சிமை பெற்றது.

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்"

என்பது திருக்குறள்.

"பெருந்தகை" என்பது, தான் துன்பத்தை ஏற்றுக் கொண்டு மற்றவர்க்கு வாழ்வளித்தல் என்ற பண்பாடு ஆகும். கண்ணகி பூம்புகாரிலும் சரி, மதுரையிலும் சரி, துன்பத்தைத் தழுவியவள்; கோவலனை வாழ்வித்தவள். சிறந்த பெண் என்பதைப் 'பெண்ணின் பெருந்தக்க' என்று திருக்குறள் பாராட்டும். மதுரை நகரத் தெய்வமும் கண்ணகியைப் 'பெருந்தகைப் பெண்' என்று பாராட்டுகிறது.

அடுத்து, வஞ்சிக்காண்டத்தில் - குன்றக்குரவையில் கண்ணகி தெய்வமெனப் போற்றப் பெறுகிறாள். மலை வாழ் குறவர், தங்கள் குலத்தில் கண்ணகி போன்றதொரு தெய்வம் இல்லையென்று போற்றுகின்றனர்.

"இவள் போலும் நங்குலத்தோர்
இருந்தெய்வம் இல்லை"

என்பது காண்க.

இளங்கோவடிகள், மண்ணக மாதர்க்கு அணியென விளங்கிய கண்ணகி, விண்ணக மாதர்க்கு விருந்தாக அமையும் அருட் காட்சியை நெஞ்சு குளிர எடுத்தோது கின்றார்.

"தெய்வந்த தொழாஅள் கொழுநற் றொழுவளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால்–தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணகமா தர்க்கு விருந்து"

என்பது, இளங்கோவடிகள் வாக்கு.

கண்ணகி தவத்தால், நோன்பால் தெய்வமாயினாள். அவள் மட்டுமா? அவளை மனையாட்டியாகப் பெற்ற கோவலனும் விண்ணிழி விமானத்தில் விண்ணகம் செல்கிறான்.

கண்ணகி, முடியுடை அரசர்களால் தொழுதேத்தும் பெருமை பெறுகிறாள். சேரன் செங்குட்டுவன் இமயத்துக் கல்லில் கண்ணகிக்குச் சிலையெடுத்து கங்கை நீராட்டி, வஞ்சித் தலை நகரில் கோயிலில் எழுந்தருளச் செய்கிறான்.

முடியுடை அரசர்கள் பலர் சூழ்ந்து போற்றுகின்றனர்; கற்புக் கடம் பூண்ட கண்ணகி தேவியிடம் நாடாளும் செங்கோன்மை தவறாதிருக்க வரம் வேண்டுகின்றனர். கண்ணகி பலராலும் போற்றப் பெறும் பத்தினித் தெய்வமாகிய வரலாறு. வாழ்க்கையில் பிறந்தது; வாழ்க்கைக்குத் துணை செய்வது.

## மாதவி

சிலம்பில் கண்ணகிக்கு அடுத்த நிலையில் சிறப்பாகப் பேசப் பெறும் பாத்திரம் மாதவி. மாதவி விவாதத்திற்குரிய பாத்திரமாக விளங்கினாலும் அவள், விளங்கு புகழ் படைத்த பாத்திரமேயாம்.

மாதவி, அழகுத் திருவினள்; ஆடற் கலையில் சிறந்தவள்; பாடற்கலையில் தேர்ந்தவள். மாதவி முத் திறத்திலும் சிறந்தவள் என்று கூறுகிறார் இளங்கோவடிகள். முத்திறமாவது மேற்சொன்ன ஆடலும், பாடலும், அழகும் என்பனவாகும்.

வானவர் மகளிராகிய ஊர்வசி, ரம்பை ஆகியோர் அழகிலும் ஆடல் திறத்திலும் உயர்ந்தவர்கள் என்று கூறுதல் புராண மரபு. மாதவி, முன்னைப் பிறப்பில் ஊர்வசியாக வாழ்ந்தவள், என்ற நம்பிக்கையையும் ஆசிரியர் இளங்கோ வடிகள் நமக்குத் தருகின்றார்.

வானவர் மகளாக விளங்கிய ஊர்வசி, மாதவியாகப் பிறந்தாள், பேரழகியாக விளங்கினாள் என்பதில் வரலாற்றுச் சிறப்பு என்ன இருக்கிறது? மண்ணக மகளிர், வான மகளிரை வென்று விளங்கியவர் என்று கூறுதல்தான் மண்ணக மகளிர்க்குச் சிறப்பாகும்.

சமணசமயச் சார்பில் சிந்திப்பவர்கள் ஊழ்ச்சிறப்பை உணர்த்துவதற்காக எந்த ஒரு நிகழ்ச்சியையும் முற்பிறப்போடு கொண்டு இணைப்பது ஒரு மரபு. நம்மைப் பொருத்த வரையில் மாதவி மண்ணக மகள்தான்.

ஆனாலும் வானகமகளிரை வென்று விளங்கும் அழகு பெற்றுப் பொலிந்தாள். ஆடற்கலையில் சிறந்து விளங்கினாள். மாதவிக்குப் பிறப்பில் ஒரு குறையுமில்லை "பெருந்தோள் மடந்தை!" யாக விளங்கினாள்.

மாதவி, யாழ் மீட்டும் கலை கற்றுத் தேறினாள்; பாடற்கலை பயின்றாள்; ஏழாண்டுகள் ஆடலும் பாடலும் இடைவிடாது பயின்று தேர்ச்சி பெற்றாள். மாதவி அரங்கேற்றத்துக் குரியவளாகி விட்டாள்.

சோழப் பேரரசின் அரங்கில் மாதவி தனது ஆடற் கலையை அரங்கேற்றம் செய்தாள். சோழப் பேரரசன் மாதவியின் ஆடற்கலைத் திறமும் நுட்பமும் கண்டு மகிழ்வெய்தி 'தலைக்கோல்' தந்து சிறப்பித்தான். மாதவி சோழ நாட்டின் ஆடற்கலையரசியானாள். கலை உலகத் தெய்வமானாள்.

மாதவி 'தலைக்கோலி'யானாள். தலைக்கோல் சிறப்புப் பெற்ற மாதவி ஆயிரத்தெண் கழங்சு பசும்பொன் ஒரு நாள் பரிசாகப் பெற்றாள். மாதவி, பிறப்பிற் குன்றாப் பெருந் திருவினளாயினும் சார்பு யாரை விட்டது?

மாதவியை - கலைக்குரிய தெய்வத்தை நாட்டு மரபிற்கேற்ப ஒருவனுக்கு உரிமையாக்க அவள் சுற்றம்

முயன்றது. ஆயிரத்தெண் கழஞ்சு பொன் அளித்து மாலையை வாங்கி மாதவியை அடையலாம் என்று கூறப்பட்டாள்.

கோவலன் மாலையை வாங்கினான்; மாதவியின் மனையில் புகுந்தான்; மாதவியை அடைந்து இன்புற்று மயங்கி அமைந்தான்; மாதவியைப் பிரியா இயல்பினனாகப் பெருவிருப்புடையவனாகக் கோவலன் விளங்கினான்; மாதவியின்பால் உள்ள ஈடுபாட்டினால் கண்ணகியை மறந்தான்; மனையறத்தை மறந்தான்; மாதவியின் வீட்டிலேயே வாழ்பவனாயினான்.

மாதவி கோவலனின் மனம் மகிழ்ந்து அமைவதற்கு ஏற்றவாறு கோவலனைக் காதலனாகக் கொண்டு அவனை வாழ்வித்தாள். காதல் வாழ்க்கை சிறப்புற அமைதற்கேற்ற வாறு கோவலனுக்குக் கலவியும் புலவியும் ஒருங்கேயளித்து இன்புறுத்தினாள். மாதவி இத்துறையில் கோவலனுக்கு விருந்தாக அமைந்தாள்.

## கோவலனைப் பேணி வளர்த்த மாதவி

தலைமகனுக்கு வாய்க்கும் வாழ்க்கைத் துணை நலம் சிறப்புற அமையின் அத்தலைமகன் குறைகளினின்றும் விடுதலை பெறுவான்.

ஒரு கல்லை அருச்சகர் உபாசித்து அருச்சிப்பதன் மூலம் கடவுளாக்குவதைப் போல, ஒரு பெண் தன்னுடைய கணவன் எவ்வளவு குற்றங்குறைகளுடையவனாக இருந் தாலும், அவள் மட்டும் சிறந்த அன்பும் செயல்திறனும் உடையவளாக இருப்பின், தன் கணவனைச் சிறப்புடைய தலைமகனாக விளக்கமுறச் செய்ய முடியும்.

காதல் வாழ்க்கையென்பது களிப்புக்குரியது மட்டு மன்று; ஆக்கத்தின் வழிப்பட்டது; கடமைகளின் வழிப் பட்டது.

மாதவி, கோவலனுக்கு வாய்த்த நல் துணைவி. கோவலன் மாதவியைச் சாரும்பொழுது குற்றங்கள் உடையவனாக இருந்தான். தென்றல் பல மலர்களை நுகர்ந்து வருவதைப் போல் கோவலன் சுற்றித் திரிந்தான் என்று இளங்கோவடிகள் கூறுவார்.

மாதவியை அடைதற்குரிய மாலையைக் கோவலன் வாங்கிய இடமே நகர நம்பியர் திரிதரும் தெருவாகும். யாதொரு குறிக்கோளுமின்றிக் காரணமின்றி நகரைச் சுற்றித் திரிகின்றவர்கள் திரியும் தெரு அது. அத்தகு நகர நம்பியருள் கோவலனும் இருந்தான். அது மட்டுமா?

உணவுக்கு உழைக்காமல் ஊரார் உழைப்பில் உண்டு கொழுத்துத் திரியும் இத்தகு நகர நம்பியர்கள் கூடிக் கூடிப் பயனற்ற சொற்களைப் பேசிப் பொழுது போக்குவர்; பேச்சினூடே, தாங்களாகவே நெடிய சிரிப்புச்சிரித்துக் கொள்வர்; பரத்தமை கொண்டொழுகுவர். இதனை இளங்கோவடிகள்,

"வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்
பொச்சாப் புண்டு பொருளுரை யாளர்
நச்சுக்கொன் றேற்கும் நன்னெறி யுண்டோ"

(கொலைக்களக்காதை 63–66)

என்று கோவலன் வாயிலாகவே கூற வைக்கிறார்.

ஓர் இளைஞன், நல்ல தலைமகனாக வளர்ந்து முன்னேற வேண்டுமாயின், உழைத்து உண்பவனாக இருக்க வேண்டும். உழைப்பில் ஆர்வம் காட்டி மகிழும் மனப்போக்கு வேண்டும். பயனற்ற சொற்களைப் பேசக்கூடாது. குறை, கோள், பொய் முதலிய தீச் சொற்களைப் போலவே பயனற்ற சொற்களும் தீமையானவை.

சிரித்தல் என்பது உதட்டில் வழியக்கூடிய ஒன்று. நல்லோர் சிரிப்பில் ஒலி இருக்கும். ஆனால் அந்தச் சிரிப்பொலி தோன்றி உடன் மறையும். ஓரகத்திருந்து ஒழுகி வாழ்வர்.

பிறப்பால் இத்தகைய தலைமகனாகக் கோவலன் வளர்தற்குரிய வாய்ப்பிருந்தும் நல்லூழின்மையால் அவன் நகரம் திரிதரு நம்பியர் குழாத்துள் சிக்கிக் கொண்டான். ஆனால் அவனோ, முன்னோர்களோ புரிந்த நல்வினைப் பயன்களின் காரணம் போலும் மாதவியைச் சென்றடைகின்றான்.

மாதவியைச் சென்று சேர்ந்த கோவலன் பரத்தமை ஒழுக்கத்திலிருந்து முற்றாக விடுதலைபெற மாதவியின் காதலொழுக்கம் துணை செய்திருக்கிறது.

கோவலன் பரத்தமை ஒழுக்கத்திலிருந்து விடுபட்டு விட்டான் என்று இளங்கோவடிகள் சொன்னாரில்லை. காரணம், அஃது அவனுடைய தற்சார்பான முயற்சியன்று. ஆனால், 'கோவலனைப் பிரிந்து அவருக்கு ஆளாகாத மாதவி' என்று இளங்கோவடிகள் மாதவியைச் சிறப்பித்துக் கூறுவார்.

> "காதற் கொழுநனைப் பிரிந்து அலர் எய்தா
> மாதக் கொடுங்குழை மாதவி.........

(இந்திரவிழவூரெடுத்த காதை. 189–190)

என்று கூறுவதன் மூலம் மாதவியின் கற்பின் திறமும்; கோவலனை மாதவி நன்னெறியில் நிறுத்திய திறமும் பெறப்படுகிறது.

அது மட்டுமன்று, கோவலன் பெருவணிகக் குடும்பத்தில் தோன்றியவன். அவன் தன்னைப் பிரிந்து மீண்டும் பரத்தமை வழியில் போய்விடக்கூடாது என்று கோவலனைக் காப்பாற்றும் உணர்வில் மாதவி சிறந்து விளங்கினாள். மாதவிக்குத் தன்னை மிக அழகுற ஒப்பனை செய்து

கொள்ளுவதில் இயல்பாக விருப்பமில்லையானாலும். கோவலன் மகிழ வேண்டும் என்பதற்காகவே அவள் ஒப்பனை செய்துகொண்டாள்.

கோவலன் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனுடைய செல்வத்திற்கேற்ப, அவன் வள்ளமையுடையவ னாகவும் புகழுடையவனாகவும் விளங்காது போனால் மாதவியின் கூட்டினால்தான் இந்தத் தவறுகள் வந்தன. கோவலன் வள்ளன்மை இழந்தான், புகழை இழந்தான் என்று ஊரவர் பேசாதிருக்க, கோவலன் விரும்பியவாறெல்லாம் அறம் செய்து ஒழுக மாதவி துணை நின்றாள்.

மாதவியிடத்தில் கோவலன் வாழ்ந்த காலத்தில் வீரச் செயல்களைச் செய்திருக்கின்றான்; அறச் செயல்களைச் செய்திருக்கின்றான்.

கோவலனும் மாதவியும் பூம்புகாரில் தங்கள் அருமை மகள் மணிமேகலைக்குப் பெயர் சூட்டு விழா எடுத்தனர். விழாவில் கோவலனிடம் தானம் பெறுவதற்காக ஒரு பார்ப்பனன் வந்தான். சோழப் பேரரசின் பட்டத்து யானை மதம் பிடித்துப் பாகனின் கட்டுக்காவலை மீறி ஓடி வந்தது.

இடையில் சிக்கிய முதிய பார்ப்பனனை, யானை தன் தும்பிக்கையில் எடுத்துவிட்டது. கோவலன் பார்த்து விட்டான். விரைந்து யானையின் தும்பிக்கையில் பாய்ந்து அந்த முதிய பார்ப்பனனை விடுதலை செய்தான். யானையின் கொட்டத்தை அடக்கி அதன்மீது ஏறி அமர்ந்து செலுத்தினான்.

ஒன்றைக் காப்பாற்றும் பொழுது பிறிதொன்றுக்கு இழப்பு வந்தால் அது வீரமன்று. அறமுமன்று. இங்கு முதிய பார்ப்பனனும் உயிர் பிழைத்தான். யானைக்கும் யாதொரு கேடுமில்லை. கோவலனும் யாதொரு இடையூறுமின்றி யானையை வெற்றி வீரனாகச் செலுத்தினான்.

இதனை இளங்கோவடிகள், "கடக்களிறு அடக்கிய கருணை மறவ!" என்று மாடலன் வாயிலாக வாழ்த்து கின்றார்.

கோவலன் சான்றோனாக விளங்கி வாழ்ந்த காலமும் மாதவியிடத்தில் வாழ்ந்த காலமேயாம். இளங்கோவடிகள் "கடன் அறிமாந்தர்" என்று ஒரு புதியமானிட சாதியை அறிமுகப்படுத்துகின்றார். கடனறி மாந்தர் யார்? பிறர்க்குப் பணி செய்து கிடப்பதே தன் கடன் என்று உணர்ந்தவர்கள் கடனறிமாந்தராவர்.

இன்றைக்கு, கடமையென்பதற்கு இந்தப் பொருள் கொள்ளப்படுவதில்லை. அது மட்டுமல்ல, பிறருடைய தீவினையைத் தீர்ப்பதனால்தான் ஒருவர்க்குப் புண்ணியம் உருவாகிறது, கிடைக்கிறது என்றும் இளங்கோவடிகள் கூறுகின்றார்.

இன்றுள்ள மனப்போக்கு, "தீவினையுடையோரின் தீவினையை மாற்றுதல் கூடாது; அவர் துன்புறுதல் வேண்டும்; அதுவே இயற்கையின் நியதி" என்பதாகும். இது, அறநெறியன்று.

கோவலன், கண்ணகியை பிரிந்து கண்ணகிக்குத் துயர் கொடுத்தாலும் மற்றவர்களின் துன்பத்தை உணர்ந்திருந்தான். கீரிப்பிள்ளையைக் கொன்ற பார்ப்பனியின் பாபத்தைப் பெரும் பொருள் கொடுத்துக் கழிக்கிறான். அது மட்டுமா? பார்ப்பனனைப் பிரிந்து வருந்திய பார்ப்பனிக்கு, அவனையும் அழைத்து வந்து சேர்த்து வைத்துப் பெரும் பொருள் வழங்கி வாழச் செய்கிறான்.

இதனை இளங்கோவடிகள் "நல்வழிப்படுத்த செல்லாச் செல்வ" என்று மாடலன் வழியாக வாழ்த்துகின்றார்.

சமூகத்தில் எந்தக் காலத்திலும் தூர்த்தர்கள் வாழ்வர் போலும்.! இவர்களுக்குக் கால எல்லை இல்லையோ? திருத்தமுற்ற முழுச்சமுதாயம் காண்பது அரிதோ?

ஒரு பத்தினிப் பெண்மீது, அவளது கணவனுக்கு ஐயமுண்டாகும் வண்ணம் சாட்சியமளித்தல் எவ்வளவு தீமை? அதுவும் அறியாத ஒன்றினை அறிந்தது போல் சாட்சியம் கூறல் பொல்லாத தீமை. இத்தகு தீமையைச் செய்தோரை உயிருடன் நிலத்தில் அறைந்து உண்ணும் பூதம் ஒன்று பூம்புகாரில் இருந்ததாம்.

இங்ஙனம் பொய்க்கரி சொன்னான் ஒருவனைப் பூதம் நிலத்திலறைந்து உண்ணப் பாசக் கயிற்றைப் போட்டிருந்தது. அத்தூர்த்தனின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. அவனை ஈன்ற தாய் கலங்குகிறாள்.

இச் சூழ்நிலையில் கோவலன் பூதத்தினை அணுகி, தூர்த்தனை விட்டுவிடுமாறும் அத்தூர்த்தன் உயிர்க்குப் பதில் தன்னுயிர் கொள்ளுமாறும் வேண்டுகிறான். பூதமோ, அதற்கு உடன்படவில்லை.

பாவியின் உயிரை விட்டுவிட்டு நல்லுயிர் கொள்ளும் தீவினையைத்தாம் செய்யத் தயாராக இல்லை என்று பூதம் மறுக்கிறது. கோவலன் வேறு வழியின்றித் தூர்த்தனின் சுற்றத்தார்க்குப் பெரும் பொருள் வழங்கி துன்பத்தை மறந்து வாழச் செய்கின்றான்.

இதனை இளங்கோவடிகள் "பசிப்பிணியறுத்துப் பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்" என்று மாடலன் மூலம் வாழ்த்துகின்றார்.

ஆதலால், மாதவியால் கோவலன் வாழ்க்கை அழியவில்லை; வளர்ந்தது. ஆனால், கண்ணகியால் கோவலன் செல்லாமைக்குக் காரணம் மாதவியின் செப்பம் சான்ற மனையற வாழ்க்கையின் பண்பேயாகும்.

எந்த வழியிலும் கோவலனைப் பிரிந்தால் தன்னைப் பரத்தமையாக்கத் தன் சுற்றத்தார் முயல்வர் என்று எண்ணிய மாதவி, கோவலன் எந்தவொரு குறையாலும் தன்னைப்

பிரியாமல் பேணிப் பாதுகாத்து வந்தாள். இது அவளுடைய வாழ்க்கைத்திறம்.

பெரும்பொருள் குறைந்ததற்குக் காரணம், மாதவிபால் சென்று தங்கிய கோவலன் பொருள் ஈட்டத்தைக் கவனிக்கவில்லை; வணிகத்தைக் கவனிக்கவில்லை. பொருட் செல்வம் நாள்தோறும் பேணி வளர்த்துத் தொகுத்தால்தான் உளதாகும். மாதவிபால் வாழ்ந்த கோவலன் இந்தப் பொருள் செயலை மறந்தான்.

உரியவர் கண்காணிக்காத செல்வம் அழிவது இயற்கை. அதுவும் வணிகக் குடும்பத்தின் செல்வம் எளிதில் குறையும். கோவலன் குடும்பச் செல்வம் நிலப்பிரபுத்துவ முறையில் அமைந்த செல்வமல்ல; வணிகச் செல்வம். அஃது ஈட்ட ஈட்டத்தான் வருமே தவிரத் தம்மியல்பாக வருவதல்ல.

எப்படிப் பொருள் குறைந்தது? பொருள் ஈட்டும் பணியில் கோவலன் ஈடுபடவில்லை. ஆயினும் வளமான வாழ்க்கை வாழ்கிறாள்; மற்றவர்களுக்கும் வழங்குகிறான்.

கோவலன் மனநிறைவு கருதி மாதவியும் இதில் தலையிடவில்லை. இந்த வகையில்தான் கோவலனின் பொருள் அழிந்திருக்க வேண்டும் என்று உய்த்துணர வேண்டியிருக்கிறது.

இங்ஙனம் விழிப்பாகவும் சிறப்பாகவும் வாழ்ந்த மாதவிக்கும் அடிச்சறுக்கல் ஏற்பட்டு விடுகிறது.

பூம்புகாரில் இந்திரப் பெருவிழா. அனைவரும் கூடிக் கடலாடிக் களித்து மகிழும் விழா. கோவலனும் மாதவியும் கடலாடச் சென்று ஆடிக் களித்து மகிழ்ந்து அமர்ந்திருக்கும் பொழுது, மாதவி, கோவலன் கையில் யாழினைக் கொடுத்து மீட்டிப்பாடச் சொல்கிறாள். கோவலனும் மாதவி மனம் மகிழ யாழினை இசைத்துப் பாடுகிறான். கோவலன் பாடிய பாடலில் யாதும் உள் நோக்கம் இல்லை. ஆயினும்; கோவலன் பாடிய,

*திங்கள் மாலை வெண்குடையான்*
*சென்னி செங்கோ லதுவோச்சிக்*
*கங்கை தன்னைப் புணர்ந்தாலும்*
*புலவாய் வாழி காவேரி*
*கங்கை தன்னைப் புணர்ந்தாலும்*
*புலவா தொழிதல் கயற்கண்ணாய்*
*மங்கை மாதர் பெருங்கற்பென்(று)*
*அறிந்தேன் வாழி காவேரி!*

*சேரல் மட அன்னம்! சேரல் நடை ஒவ்வாய்*
*சேரல் மட அன்னம்! சேரல் நடை ஒவ்வாய்!*
*ஊர் திரைநீர் வேலி உழக்கித் திரிவாள்பின்*
*சேரல் மட அன்னம்! சேரல் நடை ஒவ்வாய்!*

முதலிய பாடல்கள் மாதவியிடம் ஊடல் தோன்றுவதற்குக் காரணமாயின. மாதவி, கோவலன் அயற்பெண் ஒருத்தியிடம் கொண்ட காதற் குறிப்பில் பாடுகிறான் என்ற எண்ணத்தில் உள்ளம் ஊடினாள்.

மாதவி தன் ஊடலை முகக்குறிப்பில், ஒதுங்கி நிற்றல் முதலிய வழிகளில் புலப்படுத்தியிருந்தால் கோவலன் மாதவியின் ஊடற்குறிப்பை உணர்ந்திருப்பான். மாதவியின் ஊடலையும் மாற்ற முயற்சி செய்திருப்பான்.

ஆனால், மாதவி தன் ஊடலை வெளிப்படையாக உணர்த்தாது கோவலனைப் போலவே குறிப்புப் பொருள் வைத்துப் பாடினாள்.

*"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப*
*மணிப்பூ ஆடை யதுபோர்த்துக்*
*கருங்க யற்கண் விழித்தொல்கி*
*நடந்தாய் வாழி காவேரி*
*கருங்க யற்கண் விழித்தொல்கி*
*நடந்த வெல்லாம் நின்கணவன்*

*திருந்து செங்கோல் வளையாமை*
*அறிந்தேன் வாழி காவேரி!*

என்று பாடினாள். இப்பாடலில் மாதவி, காவிரியின் கற்புக்குச் சோழனின் செங்கோலே காரணம் என்று பாடுகிறாள். இதில் யாதொரு தவறுமில்லை. இங்ஙனம் கூறுவதன் மூலம் மனைவியின் கற்புக்குக் கணவன் காவலனாக அமைய வேண்டும் என்பது பெறப்படுகிறது. இஃதொரு சிறந்த கருத்து. இந்த அளவோடு நின்றிருந்தால் மாதவியிடம் தவறு காண முடியாது.

ஆனால் உணர்ச்சி வேகம் எல்லை கடந்து போகிறது. கோவலன் நங்கை ஒருத்தியின் காதலில் சிக்கித் தவித்தேன் என்று பாடியதைப் போலவே மாதவியும் தான் ஒரு நெய்தல் தலைவனின் காதல் வழிப்பட்டதாகப் பாடுகிறாள்.

*“அடையல் குருகே அடையல் எங்கானல்*
*அடையல் குருகே அடையல் எங்கானல்*
*உடைதிரைநீர் சேர்ப்பதற்கு உறுநோய் உரையாய்*
*அடையல் குருகே அடையல் எங்கானல்”*

என்று பாடுகிறாள்.

மாதவி இந்த உத்தியைக் கையாண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. கோவலன் போக்கில், தான் கண்ட குற்றத்தைக் கடிந்து சொல்லியிருந்தாலும் ஏற்றிருப்பான்; மனம் மாறுபடான். கோவலனின் நடைமுறையில் மாதவிக்கு இருந்த ஐயமும் அச்சமும் நீங்கினபாடில்லை. அதனால் கடிந்து கூறவும் தயக்கம்.

ஆனால் தனது உணர்வை வெளிப்படுத்த தேர்ந்தெடுத்த செயல்முறை எளிதில் ஏற்றுக்கொள்ள முடியாததாகி விடுகிறது. தலைவன் தலைவியிடையே ஒத்த உரிமைகள் உண்டானாலும் தலைமகன் சோரம்போதல் போல தலை

ம்கள் சோரம்போக எந்த மரபும் ஒத்துக் கொள்வதே இல்லை. குறிப்பாகத் தமிழ் நாகரிகம் ஏற்றுக் கொள்வதேயில்லை.

இந்தச் சூழ்நிலையில் மாதவியின் போக்கு கோவலனுக்கு அதிர்ச்சி தந்தது. அதுவும் கோவலன் தன் செல்வத்தை இழந்த சூழ்நிலையது. செல்வம் இழந்த நிலையில் ஏற்கெனவே கோவலனுக்கு ஒரு தற்கொலை மனப்பான்மை தோன்றிவிட்டது.

தன்னிடம் செல்வம் இல்லையென்ற காரணத்தால் தான் மாதவி தன்னை மறந்து வேறொருவனை நாடுகிறாள் என்ற முடிவுக்குக் கோவலன் வந்துவிட்டான். இது மாதவி எண்ணிப் பார்க்காத ஒன்று! உணர்ச்சி வேகத்தில் நடந்துவிட்ட ஒன்று.

பிரிவு தோன்றிவிடுகிறது. கோவலன் ஆத்திரத்துடன் பிரிந்து விடுகிறான். ஆனால் கோவலன் நினைந்து பிரிவதற்குரிய அளவுக்கு மாதவி தவறு செய்பவள் அல்லள். அவள் வேறொருவனை நாடுவதாக இருந்தால் வசந்தமாலை போன்றவர்கள் குலவொழுக்கமாகிய பரத்தமையை நாடும்படித் தூண்டிய காலத்திலேயே செய்திருக்கலாம்.

மாதவி கற்புடைய பெண்ணாகக் கோவலனிடத்தில் தங்கி வாழவேண்டும். அவ்வழி பரத்தமைக் குலமரபை மாற்ற வேண்டும் என்ற திண்ணிய உறுதி கொண்டிருந்தாள்.

அதனால்தான் கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்த பொழுது ஊழினைக் காரணமாகக் காட்டவே இளங்கோவடிகள், மாதவியைவிட்டு கோவலன் பிரிகிற பொழுது "ஊழ்வினை வந்து உருத்ததாகலின்" என்று கூறுகிறார்.

அதனால், குற்றமிலராக இருந்தாலும் போதாது. குற்றங்கள் செய்யாதிருந்தால் மட்டும் போதாது. உணர்ச்சி வேகத்துக்கு ஆட்பட்டு என்ன பேசுகிறோம் என்று தெரியாமலே பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.

ஆதலால் கோவலன் மாதவியைப் பிரிந்ததற்கு மாதவி முற்றாகக் காரணமல்லள். ஆனாலும் சூழ்நிலை அவளை ஒரு காரணமாக்குகிறது.

இந்தச் சிறு களத்திலிருந்து மாதவி விரைந்து மீள முயற்சி செய்கிறாள். அம் முயற்சிகளைத் தொடர்வதை பார்ப்போம்.

## மாதவியின் முயற்சி

கோவலனது வாழ்க்கையின் வலிமை, வலிமையின்மை, நல்லுணர்வுக்குறை ஆகியன மாதவி அறிந்திருந்ததே! ஆயினும் கலை, கவிதைப் போட்டிகளின் சூழ்நிலைகளில் மாதவி சோர்ந்துவிட்டாள். சோர்வின் விளைவாக கோவலன் பாடிய உத்தியைப் போலவே மாதவியும் பாடத் தொடங்கினாள்.

ஆனால், விளைவுகள் மோசமாகப் போயின. மாதவி இந்த விளைவுகளை எதிர்பார்க்கவில்லை. கோவலன் பிரிவு, அதிலும் வேனிற் காலத்தில் அவனது பிரிவு மாதவியை வருத்தியிருக்கிறது. கோவலனின் பிரிவுத் துன்பத்தால் மாதவி உயிரிழக்கும் சூழ்நிலை இல்லாது போவதற்குக் காரணம்

*"மாலை வாரா ராயினும்*
*காலை காண்குவம் என"*

மாதவிக்கு ஒரு நம்பிக்கை யிருந்ததேயாம். அந்த நம்பிக்கையே அவளை உயிர் வாழச் செய்தது.

நம்பிக்கை மட்டும் இருந்து பயன் என்ன? நம்பிக்கையை நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சி வேண்டாமா? இடை நிகழ்வுகளால் நம்பிக்கை தளர்ந்து போகாமல் பாதுகாக்க வேண்டாமா? இவ்விரண்டு முயற்சிகளிலும் மாதவி ஈடுபடுகிறாள்.

கோவலனை, அழகாலும், மணத்தாலும், உணர்வாலும் ஈர்த்து வயப்படுத்தும் கடிதம் எழுதுகிறாள். கடிதத்தின் தரம் நோக்கி இளங்கோவடிகள் அதனைத் "திருமுகம்" என்று சிறப்பிக்கிறார்.

திருமுகத்திற்குரிய செய்திகளை மாதவி, எளிதில் எழுதிவிடவில்லை. என்ன எழுதுவது என்பதைப் பல தடவை தனக்குத்தானே பேசித் தெளிந்த உணர்வில் எழுதினாள். அந்தத் திருமுகம் எத்தகைய குற்றமும் குறையும் இல்லாதிருந்ததால் "மழலை" என்று இளங்கோவடிகள் சிறப்பிக்கின்றார்.

மழலைச்சொல் என்பது உள் நோக்கமில்லாதது; தூய்மையானது; இளங்கோவடிகளின் "மழலையின் விரித்துரை எழுதி" என்ற வரி மாதவியின் தூய்மையைப் புலப்படுத்துகிறது.

திருமுகத்தில் உலக வாழ்க்கையின் இயற்கையையும் நோக்கத்தையும் எடுத்துக் கூறுகிறாள். உயிர்கள் நிலை யானவை; உலகில் பிறந்து துய்ப்பன துய்த்து மகிழ்ந்து நிறைவெய்துதற்குரியன. இதில் காதல் வாழ்க்கை சிறப் புடையது.

உயிர்களுக்குக் காதலுணர்வு தோன்றி வளர்ந்து முறையாகத் துய்த்து மகிழும் விருப்பங்களை உருவாக்க அன்னை உமையம்மை, இன்ப உணர்வைத் தோற்றுவிக்கும் கரும்பைத் தன் கரத்தில் ஏந்தியிருக்கிறாள்.

அதுபோலவே அன்னை உமையம்மையின் நோக்கத்தை நிறைவேற்றும் வேனிற்காலத் தலைவன் காமவேளும் கரும்பு வில்லைக் கொண்டிருக்கிறான். காமவேளின் கடமை உயிரினங்கள் தமக்குரிய துணையைத் தேர்ந்தெடுத்துப் புணர்ந்து மகிழத் துணையாயிருப்பது.

கூடி வாழ்ந்த காதலர் யாதானும் ஒருவகையில் சிறு பொழுது பிரியினும் வேனில் தலைவன் வருத்துவான்;

உயிரைப் பிரிப்பான். ஆதலால் அருமைக்குரிய தலைவன் பெருமானே! இதனை அறிந்து அருள்செய்க! என்ற வகையில் திருமுகத்தை எழுதி வசந்தமாலையின் வழி கொடுத்தனுப்பினாள்.

மாதவியைப் பிரிந்த கோவலன் இன்னமும் வீட்டுக்குச் செல்லவில்லை. கடைவீதி மருங்கிலேயே சுற்றிக் கொண்டிருந்தான். அங்குக் கோவலனைக் கண்டு வசந்தமாலை திருமுகத்தைக் கொடுக்கிறாள்.

கோவலன் நிலை எதிர்மாறாக இருந்தது. கோவலன் மாதவியின் திருமுகத்துக்கிசைந்து வர உடன்படாததோடு, மாறாக மாதவியைக் கடுஞ் சொற்களால் ஏசித் தீர்க்கிறான். முன்னர்க்கூடி வாழ்ந்த காலத்தில் மாதவி ஊடல் தவிர்த்துக் கூடுதற்குத் துணையாக இருந்த நிகழ்ச்சியைக் கூட நடிப்பு என்று கூறுகிறான். திருமுகத்தை ஏற்றுக்கொள்ளவே மறுக்கிறான்.

இதனால் மாதவியின்பால் குறை இல்லை என்பது தெளிவு எனினும் கோவலனிடத்திலிருந்த தணியாக் காதலால் மாதவி மீண்டும் முயற்சி செய்கிறாள்.

## மாதவியின் மாண்பு

மாதவி கோவலனின் துனியை மாற்ற முடியாமையை நினைந்து வருந்துகிறாள். ஆனாலும் முயற்சியைக் கைவிடவில்லை. மீண்டும் கோசிகன் என்ற ஓர் அந்தணாளனை அணுகி, கோவலனுக்குத் திருமுகம் எழுதிக் கொடுத்து அனுப்புகிறாள். இத்திருமுகத்தின் வாயிலாக மாதவியின் வளர்ந்த நிலையை அறியமுடிகிறது.

காதலர் இருவரிடையில் புலவியோ, துனியோ ஏற்பட்டு அதுமாறாது நீட்டித்தால் இருவரில் ஒருவர் தம் நிலையை வற்புறுத்தாது மற்றவர் நிலையைச் சார்ந்து ஒழுகுதல் கடமை; நாகரிகம். இப்படி ஒழுகத் தலைப்படின்

பிரிவு பகையாக மாறி வளராமல் தவிர்க்கப்படும். காலப் போக்கில் உறவும் தோன்றும்; வளரும்.

மாதவியிடத்தில் இந்தப் போக்கு கால்கொண்டு விட்டது. இரண்டாவது திருமுகத்தில் காதலி, காதலனுக்கு எழுதுவது போன்ற சொற்றொடர்களே அமையவில்லை. ஒரு ஞானாசிரியர்க்கு ஒரு மாணாக்கன் எழுதுவது போல, கோவலனுக்கு மாதவி எழுதிய திருமுகம் அமைந்திருந்தது.

மாதவி, கோவலனுக்கு எழுதிய திருமுகத்தை அப்படியே தன் பெற்றோருக்குக் காட்டுமாறு பணித்தான். காதலனைப் பிரிந்து பிரிவுத் துன்பத்தால் வருந்தும் ஒரு காதலி, தன் காதலனுக்கு எழுதிய திருமுகம் மற்றவர்களும் அதிலும் சிறப்பாக பெற்றோர்களும் படிக்கத்தக்கதாக அமைந்ததெனில் மாதவி எவ்வளவு செழிப்பாக வளர்ந்திருக் கிறாள் என்பதை அறியமுடிகிறது.

மாதவியின் திருமுகம் இதோ:

"அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக் கொளல் வேண்டும்
குரவர்பணி யன்றியும் குலப்பிறப் பாட்டியோடு
இரவிடைக் கழிதற்கு என் பிழைப்பறியாது
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி"

(புறஞ்சேரியிறுத்த காதை 87-92)

கோவலனை 'அடிகள்' என்று விளித்து எழுதுகிறாள்; தன்னை அடியவளாக்கிக் கொண்டு வணக்கத்தைப் புலப் படுத்துகிறாள். மாதவி தன் இரண்டாவது திருமுகத்தை தேர்ந்து தெளிந்து எழுதுகிறாள்.

அதுமட்டுமன்று, கோவலனின் மன நிலையைப் போற்றிப் பாதுகாக்குமாறும் ஆற்றுப்படுத்துகிறாள். ஆயினும்

அடக்கத்தின் காரணமாகத் தன் கடிதத்தின் சொல், தேர்ந்து தெளியாத சொல்-புன் சொல் என்று குறிப்பிடுகிறாள்.

“தாங்கள் பெற்றோர்குரிய பணிகளைச் செய்யாமல் குலத்திற் பிறந்து சிறந்த கண்ணகியோடு எல்லாருக்கும் வாழ்வளிக்கும் பூம்புகாரை விட்டு இரவில் யாரும் அறியாது சென்றது ஏன்?

அஃது அடியவளாகிய நான் செய்த குற்றத்தினாலா? நான் செய்த குற்றமாக இருப்பின் பெண் பேதைமையால் செய்திருப்பாள் என்று கருதிப் பொருட்படுத்தாது விட்டிருக் கலாம். அல்லது ஒறுத்துத் திருத்தி இருக்கலாம். கோவ லனாகிய நீவிர் குற்றமற்ற காட்சியையுடையவர். நும் புகழுக்கு யாதொரு குற்றமும் வராது பாதுகாத்துக் கொள்க!” என்று திருமுகத்தை முடிக்கிறாள்.

இத்திருமுகத்தில் மாதவிக்குக் குடும்பப் பாசமும் நாட்டுப் பற்றும் வளர்ந்திருப்பதையும் பார்க்கிறோம். தான் இன்புறுவதை விட கோவலனின் புகழ் சிறப்புற அமைய வேண்டுமென்ற விருப்பம் மட்டுமே இருந்த தென்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

ஒரே ஒரு இடத்தில் தனது நிலையை எண்ணி வருந்துகிற சொற்றோடர் விழுகிறது. ஆனால், வெளிப்படை யாக இல்லை. உய்த்து உணர வேண்டிய ஒன்று.

அதாவது “குலப் பிறப்பாட்டியோடு இரவிடைக் கழிதற்கு என் பிழைப்பு அறியாது கையறு நெஞ்சம்” என்ற சொற்றொடரில் கண்ணகி குலப்பிறப்பாட்டியாக இருந்ததால் கோவலன் அழைத்துச் சென்றிருக்கிறான்; தன்னை அழைத்துச் செல்லாததற்குக் காரணம். தான் குலப்பிறப் பாட்டியாக இல்லாதுதான் என்றுணர்கிறாள் போலும்!

ஆனால் இத் திருமுகம் வாயிலாக மாதவி, கோவலனை மாசின்றிக் காப்பாற்ற வேண்டும் என்ற கொள்கை

யுடையவளாக விளங்குகின்றாள். இது மாதவிக்குள்ள பெருமை.

கோவலனும் மாதவி தீது இலள் என்று உணர்கிறான். மாதவியின் திருமுகத்தைத் தன் பெற்றோரிடம் காட்டுமாறு கோசிகன் வாயிலாகக் கொடுத்தனுப்புகிறான்.

இங்ஙனம் வளர்ந்த மாதவி, துறவு நிலைக்குரிய உளப்பாங்கினை அடைந்தாள். தான்மட்டுமல்ல. தன் அருமந்த செல்வி மணிமேகலையையும் கூட இளமைப் பருவத்திலேயே பௌத்தத் துறவியாக்குகிறாள். ஏன்? சமூகத்தில் தனக்கு-கணிகையர் குலத்துக்கு இருந்த இழி நிலையை எண்ணி ஏங்குகிறாள்.

தூய்மையையும் காதல் மனைவிக்குரிய கடைப் பிடியையும் மேற்கொண்டொழுகினாலும், எளிதில் தன்னை நீங்கி கோவலனை நினைந்து வருந்தாது போனாலும், இதற்குக் காரணமாயமைந்த சமுதாய நியதிகள் மாதவியை வருத்தியிருக்கிறது.

அதன் காரணமாக அவளுக்கு ஏற்பட்ட துயரம் மிகுதி, கோவலன் கொலையுண்ட செய்தி, மாதவியை மரணத்துக்கு ஆளாக்கவில்லை., அதனால் அவள் கற்பு மூன்றாந் தரத்தது என்பர் அறியாப் பேதையர் சிலர்.

கணவன் இறந்தவுடன் இறப்பது மட்டுந்தானா கற்பின் கடமை? அப்படியானால் கண்ணகி கூடத்தான் உடனே சாகவில்லை.

கற்பு என்பது கணவனை, கணவனின் புகழை, கணவனின் குறிக்கோளைக் காப்பாற்றுவதிலும் அமைந்து கிடக்கிறது.

பாண்டிமாதேவி, பாண்டியன் இறந்தவுடன் உயிர் நீத்தாள், ஆம்! பாண்டியன், பாண்டிமாதேவிக்கென்று யாதொரு கடமையும் விட்டுச் செல்லவில்லை. அதனால் பாண்டிமாதேவி உடன் உயிர் துறந்தாள்.

தி.V. 14.

கோவலன் இறந்தவுடன் கண்ணகி இறக்கவில்லை! ஏன்? வாழ்ந்துவிட வேண்டுமென்ற ஆசையா? இல்லை. கோவலன், தன் மீது 'கள்வன்' என்று சுமத்தப்பட்ட பழியை மாற்ற வேண்டிய கடமையை விட்டுச் சென்றிருக்கிறான். அப்பணியைக் கண்ணகி இனிதே செய்து முடித்தாள்.

கோவலன், அவன் மகளாகிய மணிமேகலையைக் காப்பாற்றும் பொறுப்பை மாதவியிடம் விட்டுச் சென்றிருக் கிறான். அதனால் மாதவி உயிர் துறக்க முடியவில்லை. மாதவி, மணிமேகலையை வளர்த்துப் பெளத்தத் துறவியாக்குகிறாள்.

ஏன்! மணிமேகலை கணிகை வாழ்க்கை மேற் கொண்டால் கோவலன் புகழுக்கு இழுக்கு நேரும் என்று எண்ணித்தான்!

இங்ஙனம் பல்லாற்றாலும் சிறந்து விளங்கிய மாதவி பெண்ணில் பெருந்தக்காளாவாள்.

## சேரன் செங்குட்டுவன்

சிலம்பு, தமிழ்த் தேசியக் காப்பியம்! சிலம்பு, தமிழகம் தழீஇய இலக்கியம்; பழந்தமிழகத்தின் மூன்று அரசுகளையும் போற்றிய இலக்கியம். சோழ, பாண்டிய, சேரநாடுகளைப் பற்றுக் கோடாகக் கொண்டு வளர்ந்த இலக்கியங்கள் பலபல.

தமிழ்நாடு சோழர், பாண்டியர், சேரர் ஆகிய மூவேந்தர்களாலும் ஆளப்பெற்று வந்தது. இந்த மூவேந்தர்களுள் சோழப் பேரரசர்கள் திருக்கோயில்கள் கட்டுதல், இசை, நடனம் முதலிய கலைகளை வளர்த்தல், நிலவளம், நீர்வளம் முதலியன பேணுதலில் அதிக ஆர்வம் காட்டினர். அணை கட்டித் தண்ணீர் தேக்கும் நீர்ப்பாசன நிர்வாக மேலாண்மையைத் தமிழ்நாட்டு வரலாற்றில் அறிமுகப்படுத்தியது சோழப்பேரரசே!

அதுபோலவே நில அளவையையும் அறிமுகப் படுத்தியது. மக்களாட்சி முறையைக் குடவோலை மூலம் நடைமுறைப்படுத்திய பெருமை சோழப் பேரரசுக்கு உண்டு.

தமிழரசுகளில் ஊராண்மை சிறந்து விளங்கியது. இன்று மக்களாட்சி நடைபெறும் காலத்தில் கூடப் பழைய ஊராண்மை இல்லை. கட்சிகள் பலவாகி, கட்சிகளில் குழுக்கள் பலவாகி வலிமை வாய்ந்த ஊராண்மையைச் சிதைத்துவிட்டனர். ஊராட்சி மன்றங்கள் சட்டப்படி இருந்தாலும் கூட நாடு பாதி, காடு பாதி என்பதைப் போல் ஊராட்சி மன்றங்களை இயங்காமல் முடக்கி வைப்பதுதான் அரசின் பணியாக இருந்து வருகிறது. ஊராண்மை இருந்தால்தான் கிராமங்கள் வளரும்; அரசின் பணி எளிதாகும்.

பாண்டியப் பேரரசர்கள் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்ததில் புகழ் பெற்றனர். சங்க இலக்கியங்களில் பல பாடல்கள் பாண்டிய நாட்டையே களமாகக் கொண்டு தோன்றியவை.

பாண்டிய அரசர்களில் பலர் கவிஞர்களாக இருந்திருக்கிறார்கள். பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், பாண்டியன் அறிவுடை நம்பி ஆகியோர் கவிஞர்களாக விளங்கிய பாண்டியர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

சேர அரசு செந்தமிழ் அரசு, வீர வ்ரலாறு படைத்த அரசு. நல்ல சைவப் பற்றுடைய அரசு. அதே போழ்து சமய சமரசம் நிலவிய அரசு, வஞ்சி நகரத்தில் பல்வகைச் சமய நெறிகளும் இயங்கின. அதனாலேயே இளங்கோவடி களிடத்தில் சமண சமயத்தின் தாக்கம் இருந்தது.

சிலப்பதிகாரம் தமிழினத்தின் தேசியக் காப்பியம்; தமிழகம் தழீஇய காப்பியம்; முத்தமிழ்க் காப்பியம், சிலம்பை

இயற்றியவர் இளங்கோவடிகள், சேர அரச மரபினர் தமிழக வரலாற்றில் தொன்மையான மரபினர். பாரதப் போர்க் காலத்திலேயே சேரர் குலம் புகழுடன் விளங்கியது.

இன்றைய அரசியலில் நடுநிலைக் கொள்கை பேசப் பெறுகிறது. பாரதப் போர் நடந்தபோது கௌரவர்கள் - பாண்டவர்கள் ஆகிய இரண்டு அணியினருக்கும் உணவு வழங்கிய பெருமை சேர அரசருக்கு உண்டு. இந்த நடுநிலைக் கொள்கையை, "பெருஞ்சோறு பயந்த திருந்து வேல் தடக்கை" என்று சிலம்பும்

*"வான வரம்பனை நீயோ பெரும*
*அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ*
*நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை*
*ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்*
*பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!"*

(புறம்–2)

என்று புறநானூறும் பாராட்டுகின்றன. சேர அரசர்களைப் பற்றிய இலக்கியங்கள் சங்க காலத்திலேயே தோன்றிவிட்டன. இவற்றுள் பதிற்றுப்பத்து குறிப்பிடத்தக்கது.

இங்ஙனம் வளர்ந்து வந்த சேரர் மரபில் நெடுஞ் சேரலாதனின் அருமை மக்களாகச் செங்குட்டுவனும் இளங்கோவும் தோன்றினர். செங்குட்டுவன் அரசுப் பணி ஏற்க வாய்ப்பாக இளங்கோ துறவியாகிறார். இளங்கோ புவியரசாகாமல் கவியரசாகிச் சிலப்பதிகாரத்தை இயற்றி யருளினார்.

செங்குட்டுவன் செஞ்சடை வானவன் அருளில் தோன்றியவன் என்று சிலம்பு பேசுகிறது. முடியுடை மூவேந்தருள்களும் சேர அரசு விழுப்பம் உடையது; பாடும் புகழுடையது. நீதி வழுவாத் தன்மையுடையது. சேர மரபினர்

அரசு அறந்தழீஇய அரசு; போர் முனையிலும் வீரம் விளை விக்கும் கொற்றமுடைய அரசு.

சேரர் பண்பு பாடப் பண்ணும் தமிழும் காத்திருந்தன. இங்ஙனம் புகழ் பூத்த சேர அரசர்களின் தலைநகர் வஞ்சி நகரமாகப் பெரும்பாலும் இருந்தது. ஒரு சில காலத்தில் கருவூர், வெஞ்சாமாக்கூடல் ஆகியன தலைநகரங்களாக இருந்திருக்கின்றன. சிலம்புக்குரிய வரலாறு நிகழ்ந்த போது தலைநகரமாக இருந்தது வஞ்சி நகரமே. வஞ்சி நகரம் என்பது திருவஞ்சைக் களமா? திருவனந்தபுரமா? என்பது ஆராய் தலுக்குரியது.

இயற்கை வளம் செறிந்தது சேர நாடு. குறிஞ்சி, நெய்தல், முல்லை, மருதம் ஆகிய நான்கு வகை நிலங்களும் சேர நாட்டில் உண்டு, சேர நாடு புலவர் பாடும் புகழ்பெற்றது.

பதிற்றுப்பத்து சேரர்களுக்கே உரிய இலக்கியம். பத்துப் பாட்டுகள் ஒரு தொகுதி. இப்படி பத்துத் தொகுதி. ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு சேரனைப் பற்றியது. இதில் ஐந்தாம் பத்து செங்குட்டுவனுக்குரியது. செங்குட்டுவனுக்குரிய பத்தினை இயற்றியவர் பரணர். இந்தப் பத்து செங்குட்டுவனை "கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவன்" என்று அழைக்கிறது. பரணர் செங்குட்டுவனின் வீரத்தினையும் கொடைச் சிறப்பினையும் விரிவாக எடுத்துப் பேசுகிறார்.

சேரர் குலத்தில்தான் சேரமான் பெருமான் நாயனார் - கழறிற்றறிவார் தோன்றினார். கழறிற்றறிவார் சிவநெறி நின்றொழுகியவர். நம்பியாரூரருக்குத் தோழராகச் சிவ பெருமான் மூலம் ஆகியவர். இத்தகு புகழ் பெற்ற சேரர் குலத் தோன்றல்தான் செங்குட்டுவன். செங்குட்டுவனுக்கு முடிசூட்டிக் கொள்ளும் வாய்ப்பினை நல்க, இளங்கோ துறவியானார்; கவியரசானார்.

சேரன் செங்குட்டுவன் மனைவி சோழர் குலத்தில் தோன்றிய பெண். இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி

சேரன் செங்குட்டுவனின் மைத்துனன். பெருநற்கிள்ளி காலத்தில் சோழ நாடு பிரிந்து ஒன்பது பேர் ஆட்சிக்குட் பட்டது.

சோழ நாட்டை ஒரே நேரத்தில் சோழ மரபினைச் சேர்ந்த ஒன்பது பேர் ஆண்டனர். ஒன்பதின்மரும் இளவரசர்கள்; ஒத்த தன்மையினர். இதன் காரணமாகச் சோழர் குலத் தலைவன் பெருநற்கிள்ளியின் ஆணைக்கு ஒன்பது இளவரசர்களும் கட்டுப்பட மறுத்தனர். பகைமை கொண்டனர். இந்தச் சோழர் ஒன்பதின்மரையும் போரில் வென்று தமது மைத்துனனிடம் சோழப் பேரரசின் கொற்றத்தைத் தந்து ஒரு நிலைப்படச் செய்த பெருமை சேரன் செங்குட்டுவனுக்கு உண்டு.

சேரன் செங்குட்டுவன் ஒரு சமயம் மலைவளம் காணப் புறப்பட்டான். பேரியாற்றங் கரையில் தனது மனைவி இளங்கோ வேண்மாதேவி மற்றும் அரசுத்துறை அலுவலர்களுடன் பாடி வீடு அமைத்துத் தங்கியிருந்தான். அதுபோது வடபுலத்திலிருந்து தவமுனிவர்கள் சிலர் வந்து செங்குட்டுவனைச் சந்திக்கின்றனர்.

தவமுனிவர்கள் செங்குட்டுவனை வாழ்த்திவிட்டு வரலாற்றுத் திருப்பத்திற்குரிய செய்தியைத் தெரிவிக் கின்றனர். "மன்னர் மன்ன! தமிழ் நாட்டரசர்கள் வடபுலம் வெற்றி கொண்டபோதும், வட பனி மலையில்–இமயத்தில் சின்னங்கள் பொறித்தபோதும் எம்மைப் போல வலிமை யுடைய அரசர் இல்லைபோலும்" என்று வடநாட்டு அரசர்கள் கூறிய செய்தியை உரைக்கின்றனர் செங்குட்டு வனிடம்.

இத்தருணத்தில் சாத்தனாரும் அந்த அவைக்கு வருகிறார். சாத்தனார் கண்ணகி வரலாற்றில் நிகழ்ந்தன அனைத்தையும் முறைப்படுத்திக் கூறுகிறார். பாண்டிய அரசன் இறந்த செய்தி கேட்டபொழுதும் செங்குட்டுவன் மகிழ்ந்தானல்லன்; வருத்தமுறுகின்றான். இந்தச் சூழ்

நிலையில் தான் அரசாளும் பொறுப்பு இன்பச் சார்புடைய தல்ல, துன்பம் மிகுதியுடையது என்று கூறுகின்றான்.

நாட்டில் மழை வளம் குறைந்தாலும் சரி, உயிர்கள் வருத்தமுற்றாலும் சரி செங்கோல் செலுத்துவது துன்பமேயாம். போற்றத் தக்கதல்ல என்பது செங்குட்டுவன் கருத்து.

பாண்டிய நாட்டில் நடந்த நிகழ்வுகள் பற்றி–பாண்டிய அரசனைப் பற்றி செங்குட்டுவனிடம் இகழ்வுக் குறிப்பு யாதொன்றும் தோன்றவில்லை. மாறாகப் பாண்டியன் நெடுஞ்செழியனை நினைத்து அரசுப் பொறுப்பின் கண் உள்ள துன்பத்தையே நினைவு கூர்கிறான். இதனால் செங்குட்டுவன் பிறர் இகழ்ச்சியைக் கண்டு மகிழாத பெருந்தகை என்பதும் புலப்படுகிறது.

இன்றைய நிலை தலைகீழ்த் தடுமாற்றம். இன்று அரச பதவிகள், பணம் பண்ணும் பதவிகளாகப் போயின. அதுமட்டுமா? ஆரவாரமான சுகந்தழுவிய வாழ்க்கையும் கிடைக்கிறது. இன்று நடப்பவை அரசுகள் அல்ல, பெரிய வியாபாரக் கடைகள். அவ்வளவுதான்.

செங்குட்டுவன், தாபதர்கள் வாயிலாக ஆரிய அரசர்கள் தமிழ் நாட்டரசர்களை இழித்துக் கூறியதைக் கேட்டுப்பொருமினான்; ஆரிய அரசர்கள் கொட்டத்தினை அடக்க வேண்டும் என்று உறுதி பூண்கின்றான்; வஞ்சினம் மேற்கொள்கின்றான்.

அதுபோது அந்த அவையிலிருந்த ஆசன் எழுந்து, “சேரர்குல மன்ன! இமய வரம்ப! நின்னை இகழ்ந்தன ரல்லர்” என்று கூறினான். ஆயினும் செங்குட்டுவனின் சினம் தணியவில்லை. “எம்மை இகழ்ந்தால் என்ன? மற்ற தமிழ் அரசுகளைப் பழித்தால் என்ன? தமிழ் நாட்டவர் ஒரு மரபினர்” என்று இனமான உணர்வுடன் கூறுகிறான்.

தமிழருக்குத் தேவை தன்மான உணர்ச்சி. தன்மான உணர்ச்சி இருந்தால் மட்டும் போதாது. இனமான

உணர்ச்சியும் தேவை. அதாவது தமிழர் என்ற உணர்வில் விருப்பம். தமிழர், தமிழரைப் பகைக்காது வாழ்தல். தமிழருக்கு இடையூறு வரும்பொழுது ஒன்று திரண்டு பாதுகாத்தல், இந்த இனமானம் தமிழருக்கு என்றும் இருந்ததில்லை. நம் தலைமுறையில் தலைவர் பெரியார் தமிழரிடையில் இனமானத்தை வளர்க்க உழைத்தார். அறிஞர் அண்ணா அவர்கள் இனமானத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாவார்.

செங்குட்டுவன், தமிழ் அரசர்களைப் பழித்ததைத் தன்னைப் பழித்ததாகவே கருதினான். இந்த நிலையில் செங்குட்டுவன் தன்னை மூவருள் ஒருவனாக எண்ணிக் கொள்கின்றான். வடவரை நோக்கிப் படையெடுக்கிறான். படையெடுத்தல் ஆரிய அரசர்களை வெல்லுவதற்காக மட்டுமல்ல. பத்தினித் தெய்வம் கண்ணகிக்குச் சிலை எழுப்ப இமயத்தில் கல் எடுத்து வரவே படையெடுக்க எண்ணு கிறான்.

சூளுரைத்துப் படையெடுப்பும் தொடங்கிற்று. வடபுலத்து ஆரிய அரசர்களை வென்று வாகை சூடினான். ஆரிய அரசர்கள் போரில் புறமுதுகிட்டோடினர். அவர்களை – கனக விசயர்களைப் பிடித்து அவர்கள் தலைமீது இமயக் கல்லையும் கங்கையையும் ஏற்றிக் கொண்டு வருகிறான்.

ஆயினும் செங்குட்டுவன் வடபுலத்துப் போரில் வெற்றி பெற்ற பிறகு பிடித்த கைதிகளைச் சோழப் பேரரசுக்கும், பாண்டிய பேரரசுக்கும் கொண்டு போய் காட்ட ஏற்பாடு செய்கிறான். சோழ, பாண்டிய அரசர்கள், தம்முடைய வெற்றியைத் தமிழன் வெற்றி, தங்களுடைய வெற்றி என்று எண்ணுவர் என நம்பிக் கைதிகளைக் கொண்டுபோய்க் காட்டச் சொன்னான். அதன் எதிர் விளைவுகளைச் செங்குட்டுவன் உணர்ந்தானில்லை.

கைதிகளைப் பார்த்த சோழ, பாண்டிய அரசர்கள் போரில் உயிர் பிழைத்து ஓடுபவர்களைச் சிறைப்பிடித்தல்

வீரமன்று என்று கூறி விடுகின்றனர். இன்று வரையில் தமிழகம்-தமிழர் நலம் காக்கும் பெருந்தகையாளர்களைக் கண்டதில்லை. இன மானம் என்பது கடுகளவு கூட இல்லை.

இமயக் கல் கொண்டு கண்ணகிக்கு-பத்தினித் தெய்வத்திற்குச் சிலை அமைக்கிறான் செங்குட்டுவன். கங்கை நீரினைத் தெளித்து வழிபாட்டுக்குரிய திருமேனியாக்கு கிறான். கண்ணகி பத்தினிக் கோயிலில் நாள்தோறும் வேள்வி முதலியன நிகழ்த்தினான்.

நாள்தோறும் வழிபாடு நடக்க தேவந்தி மூலம் ஏற்பாடு செய்தான். கண்ணகி திருக்கோயிலை வலம் வந்து வணங்கினான். அப்போது செங்குட்டுவனுடன் ஆரிய அரசரும், குடகக் கொங்கரும், மாளவ வேந்தரும், இலங்கைக் கயவாகுவும் உடனிருந்து வணங்கினர். கண்ணகிக்குத் திருக்கோயில் எடுத்தமையால் தமிழ் நாட்டில் பத்தினி வழிபாடு தொடங்கப் பெற்றது; வளர்ந்து வருகிறது.

செங்குட்டுவன் கண்ணகி கோட்டம் அமைத்துக் கடவுண்மங்கலம் செய்தபோது சிறைப்பட்ட ஆரிய அரசரை விடுதலை செய்து அரசு விருந்தினர் தகுதியில் உபசரணை செய்து பத்தினி வழிபாடு நிறைவெய்தியவுடன் அவரவர் நகருக்குச் செல்லுமாறு ஏற்பாடு செய்தான். இச்செயல் செங்குட்டுவனின் பெருந்தகைமைக்கு எடுத்துக்காட்டு.

சேரன் செங்குட்டுவன் சிறந்த அரசன்; வீரன். மனையறம் காத்தவன்; இனமானம் பேணியவன். மற்றத் தமிழரசர்களிடம் மதிப்புணர்வு காட்டியவன்; போற்றியவன்.

## சிலம்பு விளைத்த புதுமை

சிலம்பு, தமிழ் இலக்கிய உலகில் பூத்த மலர்களில் மணம் மிக்கது. தூய தமிழ்; தெளிந்த நடை; குறிக்கோள் உள்ள படைப்பிலக்கியம்; முத்தமிழ்க் காப்பியம்; தமிழகம் தழீஇய இலக்கியம்; சமூக நலம் பொதுளும் காப்பியம்.

அரசியல் நெறியும் அறநெறியும் உணர்த்தும் காப்பியம்; தமிழர்தம் ஆற்றலை வடபுலம் உணருமாறு செய்த காப்பியம்; உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாய் அமைந்த படைப்பு; நீதிக்காக அரசை எதிர்த்துப் போராடும் உரிமை வழங்கிய காப்பியம். சிலம்பில் மரபுகளைக் கடந்த புதுமைகள் பல உண்டு. சிலம்பு செய்த புரட்சி போற்றத் தக்கது.

இலக்கியத்தைத் தொடங்கும்பொழுது கடவுளை வாழ்த்தித் தொடங்குதல் மரபு. ஆனால் சிலம்பு திங்கள், ஞாயிறு, மாமழை, பூம்புகார் ஆகியவற்றைப் போற்றித் தொடங்கப் பெறுகிறது. இஃதொரு புதிய நெறி.

*திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்*
*கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்*
*வங்கண் உலகளித்த லான்*
*ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்*
*காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு*
*மேரு வலந்திரித லான்*
*மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்*
*நாமநீர் வேலி யுலகிற்கு அவன் அளிபோல்*
*மேல்நின்று தான்சுரத்த லான்*

*பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்*
*வீங்கு நீர் வேலி யுலகிற் கவன்குலத்தோடு*
*ஓங்கிப் பரந்தொழுக லான்*

இளங்கோவடிகள் பாடிய இப்பாடல்கள் சோழனின் புகழை, சோழனின் வெற்றியைப் புகழ்ந்து பாடுவதாக அமைந்திருப்பது எண்ணுதலுக்குரியது.

மக்கட் சமுதாய வரலாற்றில் அரசுகள் தோன்றியவுடன் வணிகர் சமுதாயம் தோன்றி வளர்கிறது. அரசுகளை விடக்

கூடவும் வணிகர்கள் கூடுதல் செல்வ ஆதாரங்களைப் பெற்று விளங்கினர் என்பது வரலாற்றுண்மை.

இன்றும்கூட மக்கட் சமுதாய வாழ்க்கையின் உயிர் நாடியாக விளங்கும் உழவர்களைவிட, வணிகர்களிடம் செல்வம் கூடுதலாகத்தான் குவிந்திருக்கிறது. வணிகர்களே அரசை இயக்குகின்றனர்; நடத்துகின்றனர்.

இதுபோல் பண்டைக் காலத்திலும் சோழப் பேரர சிற்குச் செல்வம் வேண்டும்போது கொடுத்து உதவும் தகுதியில் வாழ்ந்த குடும்பம் கோவலனின் குடும்பம். 'அரசுவிழை திரு' என்பது இளங்கோவடிகள் வாக்கு. சமுதாய வளர்ச்சியில் வணிகர் சமுதாயத்தின் வளர்ச்சியை நினை வூட்டியவர் இளங்கோவடிகள்! இலக்கியத்தில் அரசு, வணிகர் என்ற சமுதாயப் படிமுறை வரலாற்றை உணர்த் தியது சிறப்பு.

வாழ்க்கைக்குச் செல்வம் தேவை. ஆயினும் செல்வம் மிகினும் குறையினும் துன்பம் செய்யும். சோழப் பேரரசு - பூம்புகார் நகரம் செல்வத்தில் செழித்தது. அதனால் ஒழுக்கம் பாழ்பட்டது. முற்றவெளியில் மகளிரை விலைகூறும் அளவுக்குச் சோழ நாட்டின் சூழல் கெட்டுவிட்டது. மாதவி ஆயிரம் கழஞ்சு பொன் கூறி விற்கப்படுகிறாள். கோவலன் வீழ்ச்சிக்குக் காரணம் பூம்புகாரில் நிலவிய சமுதாய அமைப்பே என்று சிலம்பு உணர்த்துவது புதிய மரபு; புதிய நெறி.

ஊழில் நம்பிக்கை உடைய இளங்கோவடிகள் கோவலனின் வீழ்ச்சிக்கு ஊழைக் காரணமாகக் காட்டாது கோவலன் வாழ்ந்த சூழ்நிலையால் ஒழுக்கம் பாதித்துக் கெட்டுப் போனான் என்று கூறுவதன்மூலம் இலக்கிய உலகில் சூழலைப் பற்றிய சிந்தனையை அறிமுகப்படுத்தியது புதுமை. கோவலனின் வீழ்ச்சிக்கு காரணமாயமைந்தது சூழல். இதனை,

"வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்
பொச்சாப் புண்டு பொருளுரை யாளர்
நச்சுக் கொன்றேற்கு நன்னெறி யுண்டோ"

என்று கோவலன் கூறுவதன் மூலம் அறியலாம்.

மாதவி, பரத்தையர் குலத்தில் பிறந்த பெண். ஆனால், சமுதாயத்திலேயே பரத்தைமையை அடியோடு அகற்றத் தவம் செய்த முதற்பெண். பரத்தைமைத் தொழிலிலேயே ஈடுபடுவது மரபு என்றெல்லாம் சித்திராபதி முதலியோர் வற்புறுத்தியும் மாதவி பரத்தையாக வாழாமல் பத்தினியாக வாழ்ந்து வெற்றி பெற்றது சிலம்பு விளைவித்த புதுமை.

மாதவி, கோவலனைக் கணவனாகக் கொண்டே வாழ்கிறாள். கோவலன் பரத்தைமை ஒழுக்கமுடையவன். ஆயினும், மாதவி பரத்தையல்லள். பிறப்பின் ஒழுக்கத்தை மாற்றிப் புதுமை செய்தாள் மாதவி. தமிழ் நாட்டில் பரத்தைமையை அகற்றும் முயற்சியைத் தொடங்கியது சிலம்பு விளைவித்த புதுமை.

கோவலன் மதுரைக்கு வருகிறான். புதிய வாழ்க்கையைத் தொடங்க சிலம்பை விற்க நினைக்கிறான். சிலம்பை விற்கப் பாண்டிய நாட்டுத் தலைநகரின் கடைவீதிக்குச் செல்கிறான். கோவலனிடம் உள்ள சிலம்பு, கடைவீதியில் விற்கக்கூடியது அல்ல; சாதாரண மக்கள் வாங்கக் கூடிய சிலம்பும் அல்ல. பாண்டிய அரசன் வாங்கவேண்டும் அல்லது மிகப்பெரிய வணிகர்கள் வாங்க வேண்டும். இத்தகு விலை உயர்ந்த சிலம்பை விலை கூற, மதுரை நகர வீதிகளில் மறுகி மறுகி நடக்கிறான்.

கோவலன் தனது வீழ்ச்சியை நினைத்து-மதுரை நகரில் சிலம்பை விலை கூறி வாழ நேரிட்டதே என்று வெட்கப்பட்டு மறைவாக விலை கூறி விற்க நினைத்து மறுகுகிறான். தன் நிலைக்கு இரங்குகிறான்; வெட்கப்படுகிறான். நாடறிந்த

வணிகக் குடும்பத்தைச் சேர்ந்தவன். குடும்பப் புகழ் போய்விடக் கூடாதே என்பது கோவலனின் கவலை.

தன்னை உணரும் திறன் படைத்த சராசரி மனிதனின் உள்ள இயல்பு இது. உளவியல் பாத்திரப் படைப்பில் சிந்தனை செய்து திருத்திக் கொள்ளும் பாத்திரமாக கோவலனைப் படைத்தது இலக்கிய உலகில் சிலம்பே. ஆதலால் கோவலன் இலக்கிய உலகில் வாழ்கிறான்.

கோவலன் தன்னிலை தாழ்ந்தமையை எண்ணி வெட்கிப் போனதாலேயே கொலைக் களத்தில் தான் கள்வனல்ல என்று கூறாமல், மறுக்காமல், வாதாடாமல், திகைப்புண்டு மௌனம் சாதிக்கிறான். ஆங்குப் பேச நேரின் குடும்பம், சோழப் பேரரசு முதலியவற்றை எடுத்துக் கூற வேண்டிவரும். அது மரபல்ல; புகழும் தராது என்று எண்ணியே மௌனம் சாதிக்கிறான். குல மரபு காக்கப் பழியைச் சுமந்து கொலைக்குக் கோவலன் உடன்பட்டது கோவலனின் உயிர் மானமாக இருந்தது என்று உணர்த்துவது புதுமை.

கோவலன் கள்வன் என்று பழி சுமத்தப்பட்டுக் கொல்லப்பட்டுவிட்டான் என்ற செய்தி கண்ணகிக்குக் கிடைக்கிறது. கண்ணகி உணர்ச்சி வசப்படாமல் அறிவை இழக்காமல் நடந்து கொண்டமுறை இலக்கிய உலகத்திற்கோர் புதுமை.

கண்ணகி ஆற்றொணாத் துயரத்திற்காளானாலும் அழுது புலம்பியவாறு உட்கார்ந்து விடவில்லை. கண்ணகியின் அவல நிலையிலும் அறிவு தலைப்படுகிறது; போர்க்குணம் தலைப்படுகிறது. செய்ய வேண்டுவனவற்றைச் செய்கிறாள்; செய்யத் தலைப்படுகிறாள். சிலம்பில் வழக்குரை காதை அற்புதமான படைப்பு.

கண்ணகி நடந்தனவற்றை பாதிக்கப் பெற்ற கோவலனிடம் கேட்டறிய முதலில் விரும்புகிறாள்; நேரே கொலைக்

களத்திற்குச் செல்கிறாள். இங்கு இளங்கோவடிகள், இயற்கை இகந்த நிலையில் கோவலனின் வெட்டுண்ட தலை கண்ணகியுடன் பேசுவதாக காட்சி அமைத்திருக்கிறார். இந்தக் காட்சி அவசியமானது.

நேரிடையான வாக்கு மூலம் - சாட்சி இல்லாமல் எப்படி வழக்கை நடத்த இயலும்? ஆட்சிமுறைச் சட்டங்களுக்கு இசைய இலக்கியம் அமைந்துள்ளமை சிலம்பில் உள்ள புதுமை. கண்ணகி, கோவலனிடம் நடந்தவையனைத்தும் கேட்டுணர்ந்த நிலையில் பாண்டியன் தவறு செய்துவிட்டான் என்று உணர்கிறாள். உடன் பாண்டியனிடம் வழக்குரைக்கப் புறப்படுகிறாள்.

ஒரு அரசு தனிப்பட்டதல்ல. சமுதாயம் தழீஇயது தானே அரசு. சமுதாயத்தில் உள்ளவர்கள் பிழைகள் செய்யின் அரசு கெடும். எனவே கண்ணகி பாண்டிய நாட்டின் சமுதாயத்தை ஆய்வு செய்கிறாள். "பத்தினிப் பெண்டிரும் உண்டுகொல்" என்று வினவுகிறாள்.

எங்கு பத்தினிப் பெண்டிர் உண்டோ அங்குக் காமுகன் இருத்தல் இல்லை. காமுகன் இல்லாத சமுதாயம் தரமுடையது. அச் சமுதாயத்தில் தவறுகள் நிகழா.

அடுத்துத் "தெய்வமும் உண்டு கொல்?" என்று கேட்கிறாள். தெய்வச் சிந்தனை உடைய சமுதாயம் தெய்வ நம்பிக்கை காரணமாக நல்லவர்களை உடையதாக அமையும். அதன் காரணமாகத் தவறுகள் செய்ய அஞ்சுவர்.

அடுத்துச் "சான்றோரும் உண்டு கொல்?" என்று வினவுகிறாள். ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் வாழும் ஊரில் உள்ள மக்கள் சான்றோர் நெறிப்படுத்துதலின் காரணமாக நன்னெறி நின்றொழுகுவர். கோவலன் கொலை நடந்த மதுரையில் இவர்களில் யாருமில்லை. அதன் காரணமாகவே கோவலன் முறை கேடாகக் கொல்லப்பட்டான் என்று துணிகின்றாள்.

ஒரு தவற்றுக்கு வழக்காட இத்தனை பேருடைய உடன்பாடும் தேவை. இது மரபு. எடுத்தேன்! கவிழ்த்தேன்! என்று பேசாமல் இங்ஙனம் முறைப்படி சிந்தித்துப் பேச வைத்தது ஒரு புதுமை.

இவை மட்டுமா? கண்ணகி அடுத்துத் தன் கணவன் கள்வனா? இல்லையா? என்று ஆய்வு செய்கிறாள். காய் கதிர்ச் செல்வனை நோக்கிக் கேட்கிறாள்; 'காய் கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்?' என்று! கதிரவனின் ஒளிக்கற்றை நுழையாத இடமில்லை.

ஆதலால், காய்கதிர்ச் செல்வனே! உனது ஒளிக் கற்றைகள் சென்ற இடங்களில் என் கணவன் கோவலன் கள்வனாக இருந்ததைக் கண்டிருக்கிறாயோ சொல்! சொல்! என்று கேட்கிறாள். கொலைக் களத்தில் வேறு சாட்சி இல்லை! ஆதலால், காய்கதிர்ச் செல்வனே சாட்சியாக வேண்டிய கட்டாயம்.

பாண்டியனின் அவை! கண்ணகி வழக்குரைக்கிறாள்! இந்த நூற்றாண்டில் வழக்கு எப்படி உரைக்க வேண்டுமோ அந்த மரபுப்படி வழக்குரைக்கின்றாள்! கண்ணகி முதலில் தான் பிறந்து வளர்ந்த சொந்தச் சோழநாட்டரசின் நீதிச் சார்பினை, தனது குடும்பத்தின் மாண்புகளைக் கூறி அறிமுகப்படுத்திக் கொள்கிறாள்.

அடுத்து நேரிடையாகப் பேசுகிறாள். "பாண்டியனே! என் காற் சிலம்பு மாணிக்கப் பரல்களையுடையது" என்கிறாள்! பாண்டியன் தம்முடைய சிலம்பு, முத்தினை உடையது என்று பதில் சொல்கிறான். பாண்டியன் அந்த சிலம்பைக் கொண்டுவரச் செய்கிறான். கண்ணகி சிலம்பை வாங்கி வீசி உடைக்கிறாள். மாணிக்கப் பரல்கள் சிதறுகின்றன. நேரிடை நிரூபணம்! இதுவே சட்டங்கள் வழி வழக்காடு முறை! இந்த முறை சிலம்பில் விவரிக்கப்படுவது புதுமை.

*"தேரா மன்னா செப்புவ துடையேன்*
*எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்*
*புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்*
*வாயிற் கடைமணி நடுநா நடுங்க*
*ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத் தான்தன்*
*அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்*
*பெரும் பெயர்ப் புகார் என் பதியே! அவ்வூர்*
*ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி*
*மாசாத்து வாணிகன் மகனை யாகி*
*வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்*
*சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்திங்கு*
*என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பாற்*
*கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி*
*கண்ணகி யென்பதென் பெயரே!" எனப்*
*"பெண்ணணங்கே!*

*கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று*
*வெள்வேற் கொற்றங் காண்" என, ஒள்ளிழை*
*"நற்றிறம் படராக் கொற்கை வேந்தே*
*என் காற் பொற்சிலம்பு மணியுடைய அரியே" எனத்*
*"தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி*
*யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே*
*தரு" கெனத் தந்து தான்முன் வைப்பக்*
*"கண்ணகி அணிமணிக் காற்சிலம் புடைப்ப*
*மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே!"*

(வழக்குரை காதை 50–72)

*என்பது வழக்குரை காதைப் பகுதி! நேரிடையான நிரூபணத்தின் மூலம் கோவலன் குற்றவாளியல்ல என்பது நிரூபணமாகிவிட்டது!*

"தேரா மன்னன்" என்பது வழக்கு! "யானோ அரசன்?" என்பது பாண்டியன் தனக்குத்தானே எழுதிய தீர்ப்பு! "யானோ?" -என்ற ஐய வினாவில் அரசனல்லன் என்பது பாண்டியனின் தீர்ப்பு முடிவு! அடுத்து "யானே கள்வன்!" என்றான் "என் கணவன் கள்வனா" என்பது வழக்கு.

கண்ணகி கணவன் கள்வனல்லன் என்று கூறாமல் "யானே கள்வன்" என்று கூறியதன் மூலம் கோவலன் கள்வனல்லன் என்ற தீர்ப்புக் கிடைக்கிறது. கோவலனின் சிலம்பு பாண்டியன் வசம் இருந்தது-ஓரிரவு! அடுத்து கோவலனின் உயிரை முறைகேடாகப் பறித்தது - இரண்டாவது களவு! அதனால் பாண்டியன் ஐயத்திற் கிடமின்றித் தன்னயப்பின்றித் தற்சலுகையின்றி "யானே கள்வன்" என்று தீர்ப்பினை அறிவிக்கின்றான்.

அரசனின் முறைகேடான செயலால் கோவலனின் உயிர் பறிக்கப்பட்டது. உயிர்க்கு உயிர்தான் தண்டனை! பாண்டியன் தீர்ப்புச் சொன்னதோடின்றிக் "கெடுக என் ஆயுள்"- என்று தண்டனையும் விதித்துக் கொள்கிறான்.

பாண்டியனின் உயிர், அரச நீதியில் தங்கி இருந்தமை யால் நீதி பிழைத்ததறிந்த நிலையில் உயிர் தானே பிரிந்தது! உலக வரலாற்றிலேயே இத்தகைய அரசியல் இருந்ததில்லை! இருக்கப் போவதும் இல்லை! இது சிலம்பு விளைத்த புதுமை!

பத்தினிப் பெண்டிரைத் தொழும் மரபு சிலம்பு விளைத்த புதுமை. பத்தினிப் பெண் கற்பின் திண்மையால், ஆற்றலால் தன் சிலம்புக்குச் செங்கோலின் அதிகாரத்தையே மாற்ற முடியும் என்ற நம்பிக்கை சிலம்பு விளைவித்த புதுமை. நாடாளும் அரசர்கள் பத்தினித் தெய்வத்தை நீதித் தெய்வமெனப் போற்றினர். இது புதிய மரபு; முற்றாகப் புதுமை.

கு.V.15.

*சிலம்பு இலக்கிய யாப்பில் புதுமையாயிற்று. சிலம்பு, பரத்தைமையை ஒழித்த புதுமைப் படைப்பு! சிலம்பு, குடிமக்களை-குடிமகள் காற்சிலம்பைப் பாடு பொருளாக்கியது புதுமை!*

*சிலம்பு, குடிமக்கள் அரசை எதிர்த்து வழக்காடும் உரிமையைத் தந்த புதுமை உடையது. அரச நீதியை உயிராகக் கொண்ட அரசர்களை அறிமுகப்படுத்திய புதுமையைச் செய்தது.*

*சிலம்பு தமிழ்த் தேசியத்தைக் கண்டது. இது பொதுவில் விளைந்த புதுமை.*

13

# சிலம்புவழிச் சிந்தனை

தமிழ்த்தாய் பெற்றுள்ள மிகச் சிறந்த காப்பியங்களுள் சிலப்பதிகாரமும் ஒன்று. சிலப்பதிகாரம் செஞ்சொற் காப்பியம். பாரதி கூறியதுபோல, 'நெஞ்சையள்ளும் காப்பியம்! தமிழ்ச் சுவையாலும், கருத்துச் செறிவாலும், உணர்ச்சியூட்டும் வகையாலும் சிறந்து விளங்குகிறது. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள் தமிழ் மரபினர்—தண்ணருள் மிக்கவர்—முதற்பெரும் கவிஞர். அவர் தமிழினத்திற்கென்று திட்டமிட்டுச் செய்த காப்பியம் சிலப்பதிகாரம். இளங்கோவடிகள் காலத்தில், தமிழக அரசு மூன்று பேரரசுகளாகப் பிரிந்தும் பிணங்கியும் இருந்ததைக் கண்டார். சேர சோழ பாண்டிய நாடெனத் திகழ்ந்த இம்மூன்று நாடுகளையும் ஒருங்கிணைக்க விரும்பினார். நிலப்பரப்பால் ஒருங்கிணைக்கும் முயற்சியைவிட, கருத்துவழி இணைப்பு உரியபயனைத் தரும் என்று நம்பினார். ஆதலால் மூன்று நாடுகளையும் இணைத்த காப்பியத்தைச் செய்ய அவர் முன்வந்தார். அக்காப்பியத்தின் வழி மக்கள் மன்றத்தில் பிரிவினைகளைக் கடந்த ஒருமைப் பாட்டுணர்வைத் தோற்றுவித்து வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டார். ஆதலால், சோழ நாட்டுக் குடிமகளாகிய கண்ணகியைப்

பாண்டிய நாட்டில் பயிலவைத்துச் சேரநாட்டில் தெய்வ மாக்கினார். தமிழகத்தின் மூன்று நாடுகளையும் தழுவிய காப்பியமாகத் திகழ்வது சிலப்பதிகாரம் ஒன்றேயாம்.

மூன்று நாடுகளைத் தழுவிய காப்பியம் மட்டுமன்று. அது முத்தமிழ்க் காப்பியமாகவும் திகழ்கிறது. உலகில் வேறு எந்த மொழியும் இயல் இசை கூத்தென முப்பிரிவுகளைக் கொண்டு—அமைந்து விளங்கவில்லை. ஒரு துறைக் காப்பியமாக அமைபவை சமுதாயத்தின் பல்வேறு துறையினரும் அனுபவித்தற்குரியனவாக அமைவதில்லை. இயற்றமிழைப் புலமைமிக்க சான்றோர்களே அனுபவிக்க முடியும். இசைத்தமிழை இயற்றமிழ்ப் புலமை குறைந்தோரும் அனுபவிக்கலாம். கூத்தை மிகச் சாதாரண மக்களும் அனுபவிக்கலாம். சமுதாயத்தில் உள்ள இந்த மூவகைத் துறையினர்க்கும் பயன்படும் வண்ணம் அமைந்துள்ள ஒரே காப்பியம் சிலப்பதிகாரம்.

தனிமனித வாழ்க்கையிலும்கூட அறிவு, உணர்வு, செயல், படிவ வளர்ச்சி தேவை. இயற்றமிழ் அறிவு வளர்ச்சிக்கும், இசைத்தமிழ் உணர்வுப் பெருக்கத்திற்கும், கூத்துத்தமிழ் செயற் பாட்டிற்கும் துணை செய்யும்.

வாழ்க்கையின் உறுதிப் பொருள் மூன்று என்று அற நூல் கூறும். அவை, அறம் பொருள் இன்பம் என்பனவாம். இம் மூன்று உறுதிப் பொருள்களையும் எடுத்துக் காட்டும் வகையில் சிலப்பதிகாரம் அமைந்திருக்கிறது. சிலம்புப் படைப்பின் நோக்கமே அறநெறியின்பாற்பட்டது என்று அடிகள் கூறுகின்றார். கோவலன் வீழ்ச்சிக்குக் காரணமாகப் பொருள் அமைந்திருக்கிறது. ஐந்திணையின்பம், சிலம்பின் பெண் பாத்திரங்கள் அனைவரிடத்தும் அமையப் பெற்றுள்ளது. பேரின்பக் குறிப்பைப் பதிகத்தில் குறிப்பிடுகின்றார்.

தமிழகத்தின் தனிச் சமயமாகிய சிவநெறியில் இளங்கோவடிகளுக்கு நிறைய ஈடுபாடுண்டு. அவரைச் சிவநெறிச் சார்ந்தவர் என்றாலும் மிகையாகாது. சிவநெறியின் அடிப்படை உண்மை முப்பொருள் அமைப்புடையது. அஃதாவது இறை, உயிர், தளை என்பனவாகும். கோவலனை உயிர்நிலையில் வைத்து ஆராய்ந்தால் அவன் தளையால் தாங்கொணாத் துயருற்றதும் பின்னர் தன்னுடைய பத்தினிப் பெண்டின் கற்புவழியாகக் கடவுளின் கருணைக்கு ஆளானதும் முப்பொருண்மையை விளக்குவனவாக அமைந்துள்ளன.

இளங்கோவடிகள் காலத்தில் தமிழகத்தில் பல்வேறு சமய நெறிகள் பரவி இருந்தன. அந்தச் சமயநெறிகளைப் பற்றியும் வழிபடு தெய்வங்கள் பற்றியும் இளங்கோவடிகள் தம்முடைய காவியத்தில் சிறப்பித்துப் பேசியுள்ளார். எனினும், தமிழக வரலாற்றில் மிகுதியும் சிறப்புடைய சமயங்களாகிய சைவம், வைணவம், சமணம் ஆகிய சமய நெறிகளை விரித்தும் பெருமைப்படுத்தியும் பேசியிருப்பதின் மூலம் சிலம்பு முச்சமய நூலாகத் திகழ்கிறது என்று கருதுவதில் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது.

சமுதாய அமைப்பில் தனிமனிதன், சமுதாயம், அரசு ஆகிய முறைவைப்பு வளர்ந்து பன்னூறாண்டுகளாயிற்று. இந்த முறைவைப்பு மூன்றையும் தழுவிய காப்பியமாகச் சிலப்பதிகாரம் அமைந்திருக்கிறது. கண்ணகி குடிமகள் என்ற பாத்திரமாக விளங்குகின்றாள்—முந்நாட்டு மக்களின் வாழ்வியல், பிறப்பியல்புகள் வரலாற்றோடு இணைத்துப் பேசப் பெறுகின்றன. அடுத்து, மூன்றுநாட்டு அரசர்களும் அரசுகளாகப் பேசப்பெறுகின்றனர். இங்ஙனம், நாடு முதல் மக்கள் வாழ்வு ஈறாகப் பல்வேறு அமைப்புக்களையும் தழுவித் தோன்றிய காப்பியமாகச் சிலப்பதிகாரம் சிறந்து விளங்குகிறது.

# 14

# இளங்கோவடிகள் எண்ணம் ஈடேறுமா?

இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம். சிலப்பதிகாரம் தோன்றுவதற்குச் சிலம்பு ஒரு கருவியே! சாதனமே! ஆனால் சிலப்பதிகாரம் எழுதப் படுவதற்குச் சிலம்பு மட்டுமே காரணம் அல்ல! அல்லது சிலப்பதிகாரம் பதிகம் கூறும்,

"அரைசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாவதூ உம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூ உம்"

மட்டும் காரணங்கள் அல்ல. வேறு சில காரணங்களும் உண்டு. சில காரணங்கள் சிலம்பின் அடிகளிலே புலப்படு கின்றன. ஒரு சில காரணங்கள் உய்த்தறியக் கூடிய காரணங்களாகும்.

இளங்கோவடிகள் சேர அரச மரபில் தோன்றியவர். அன்றைய தமிழகத்தினுடைய அரசியல் சூழல்கள் அடிகள் அறிந்தவையே. அதாவது, தமிழ்நாடு பல பகுதிகளாகப் பிரிந்து கிடந்தது. தமிழரசர்கள் தம்முள் போரிட்டுக் கொண்டு நாட்டை அழித்து வந்தனர். இந்தச் சூழ்நிலையில்

இளங்கோவடிகள் தமிழகத்தை ஒன்றுபடுத்த எண்ணி யிருத்தல் வேண்டும். தமிழின ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் நோக்கத்துடனேயே சிலப்பதிகாரத்தை இயற்றினார் இளங்கோவடிகள். அதனால், மூன்று நாடுகளையும் தழுவிய ஒரு காப்பியத்தை இயற்றினார் என்று எண்ணுவது முறையே.

தமிழ் நாட்டில் மூன்று பேரரசுகளையும் இணைத்துச் செய்யப்பெற்ற காப்பியம் சிலப்பதிகாரம். சோழ நாட்டுப் பூம்புகாரில் தொடங்கி, பாண்டிய நாட்டு மதுரையைக் கடந்து, சேர நாட்டு வஞ்சி நகரில் காப்பியம் நிறைவு பெறுகிறது. இந்த மூன்று நாடுகளையும் உள்ளடக்கிய பரப்பளவில் வளர்ந்த தமிழ் மரபுகளை இளங்கோவடிகள் விளக்கியுள்ளார்.

வஞ்சிக் காண்டத்தில் தமிழ் இன மானம் பேசப்படுகிறது. செங்குட்டுவன் அரசவை மண்டபத்தில் வீற்றிருந்தபோது கூறிய வார்த்தைகளை செங்குட்டுவன் கேட்டு

"இமையத் தாபதர் எம்க்கீங்கு உணர்த்திய
அமையா வாழ்க்கை அரைசர் வாய்மொழி
நம்பால் ஒழிகுவதாயின் ஆங்கு அஃது
எம்போல் வேந்தர்க்கு இகழ்ச்சியும் தருஉம்"

என்று சினங் கொள்கின்றான். வடபுலம் நோக்கிப் படையெடுக்க எண்ணுகின்றான்.

'வடதிசை மருங்கின் மன்னர் முடித்தலைக்
கடவுள் எழுதவோர் கற்கொண்டு அல்லது
வறிது மீளும் என் வாய்வாள் ஆகின்
செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகையரசு நடுக்காது பயங்கெழு வைப்பிற்
குடி நடுக் குறூஉம் கோல னரசு"

(வஞ்சிக் கால்கோள்

என்று சூளுரைக்கிறான். உடன் அவைக்களத்திலிருந்த புரோகிதன் செங்குட்டுவனை நோக்கி, "வடபுலத்து மன்னர்கள் நின்கொற்றத்தைப் பழித்திலர். மற்ற பாண்டிய சோழ அரசர்களையே" என்று கூறுகின்றான்.

> "ஆர்புனை தெரியலும் அலர்தார் வேம்பும்
> சீர்கெழு மணிமுடிக்கு அணிந்தோ ரல்லால்
> அஞ்சினர்க்கு அளிக்கும் சுடுபோர் அண்ணல்! நின்
> வஞ்சினத் தெதிரும் மன்னரும் உளரோ?
> இமைய வரம்ப நின் இகழ்ந்தோர் ரல்லர்
> அமைய நின் சினமென ஆசான் கூற."

(வஞ்சிக் கால்கோள் 19–24)

எனும் அடிகளைக் காண்க. செங்குட்டுவன் இந்த நிலையில் நல்ல தமிழனாக தமிழின மானம் காக்கும் தலைமகனாக விளங்குகின்றான். ஆதலால், மற்றவர் இகழ் கேட்கப் பொறுத்தானில்லை. நாங்கள் எல்லோரும் தமிழர்கள் தமிழர்க்கு வந்த பழி எனக்கும் வந்த பழியேயாம் என்று நினைக்கின்றான். தமிழருள் ஒருவனாக மூவேந்தருள் ஒருவனாக விளங்கிய செங்குட்டுவன் வடபுலம் நோக்கிப் படை நடத்துகிறான். தமிழினத்தின் மானம் காக்க! வடபுலத்து மன்னர்களான கனக விசயர்களை வெற்றி கொள்கின்றான். அவர் தம் தலையில் இமயத்தின் கல்லை ஏற்றி அக்கல் கங்கையில் நீராட்டப் பெற்றுத் தமிழகத்திற்குக் கொண்டு வரப்படுகிறது கண்ணகிக்குச் சிலை எடுக்க! வடபுலத்து மன்னர்கள் கனக விசயர் தலையில் சுமந்து வந்த கல் வந்து சேர்ந்துவிட்டது. பின் செங்குட்டுவன் தமிழர் பெற்ற வெற்றியை மற்ற சோழ பாண்டிய அரசர்களும் கண்டு, கேட்டு மகிழட்டும் என்று எண்ணி போர்க் கைதிகளை அவர்களுக்குக் காட்டிவர அனுப்பினான். ஆனால் அவர்கள் சோழ பாண்டிய அரசர்கள் அதை வேறு வகையாக எடுத்துக் கொண்டு விட்டார்கள். அதாவது, சேர

மன்னன் செங்குட்டுவன் தனது பெருமிதத்தை அவர்கள் முன் கட்டுவதன் மூலம் தங்களை அலட்சியப்படுத்துவதாக எண்ணிவிட்டனர். காப்பியத்தின் நோக்கம் தமிழின ஒருமைப்பாடு-அடையாநிலை உருவாகிறது. செங்குட்டுவன்,

"ஏனை மன்னர் இருவரும் கூறிய
நீன்மொழி எல்லாம் நீலன் கூறத்
தாமரைச் செங்கண் தழல்நிறம் கொள்ள"

(நடுகற் 108–110)

நேரிடுகிறது.

ஆதலால், இளங்கோவடிகள் எண்ணிய ஒருமைப்பாடு கை கூடவில்லை. தமிழின ஒருமைப்பாடு என்றும் இருந்ததில்லை. சங்க காலத்தில் இரு அரசர்கள் இணைந்திருந்ததைக் காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார்,

"ஒருவீர் ஒருவீர்க் காற்றுதி ரிருவீரும்
உடனிலை திரிய ராயின் இமிழ்திரைப்
பௌவ முடித்த விப் பயங்கெழு மாநிலம்
கையகப் படுவது பொய்யா காதே"

(புறம் 58 : 20–23)

என்று பாடினார்.

மேலும் தமிழர் கூடி வாழும் ஒருமை நிலையை அயலவர் புகுந்து பிரித்து விட முயல்வர் என்றும் கூறுகிறார்.

"நல்ல போலவும் நயவ போலவும்
தொல்லோர் சென்ற நெறிய போலவும்
காதல் நெஞ்சினும் மிடைபுகற் கலமரும்
ஏதின் மாக்கள் பொதுமொழி கொள்ளாது
இன்றே போல்க நும் புணர்ச்சி" (புறம் 58 : 24–28)

என்பதறிக.

இந்த நிலை இன்று வரை தொடர்ந்து வருகிறது. அறிஞர் அண்ணா மட்டும் இன நலம் காப்பதில், இன மானம் போற்றுவதில் ஓரளவு வெற்றி பெற்றார். அறிஞர் அண்ணா தம்மை முற்றிலும் வெறுத்த தலைவர் பெரியாரைத் தலைவராகவே கடைசி வரையில் மதித்தார்; போற்றினார். அதுபோலவே பெருந்தலைவர் காமராசரை 'பொற்காப்பு' என்று போற்றினார். அறிஞர் அண்ணா தமிழரில் யாரையும் பகைத்துக் கொண்டதில்லை; வெறுத்தது இல்லை; பழி தூற்றியதுமில்லை.

ஒரு இனம் வளர்ந்து நிலை பெற வேண்டுமாயின் இன உணர்வும், இன மானமும் தேவை. இன ஒருமையுள்ள இனத்தின் மொழி வளரும்; வாழும் தமிழினத்திற்கு இல்லாத இன மான உணர்வும், இன நலம் காக்கும் முயற்சியும் இன ஒருமைப்பாடும் என்று தோன்றும்? இளங்கோவடிகள் எண்ணம் என்று ஈடேறும்?

**15**

# கம்பன் கண்ட ஆட்சியில் அரசியல் சமூகம்

## அரசியல்

### முன்னுரை

இந்தியா, வரலாற்றுப் பழைமைமிக்க ஒரு பெரியநாடு. பல பேரரசுகளைக் கண்ட நாடு. அரசியல் ஞானிகளைத் தந்த நாடு. வடக்கே கௌடில்யரும் தெற்கே திருவள்ளுவரும் சிறந்து விளங்கிய நாடு. பழங்காலத்திலேயே தொழிலிலும் வாணிகத்திலும் சிறந்து விளங்கிய நாடு. ஆயினும் இந்தியா மெள்ளத் தன் ஆற்றலை இழந்து அடிமைப்படும் நிலைக்கு வந்தது; ஏன்? பெரும்பகுதி உள்நாட்டுச் சண்டைகள் காரணம். நுகர்பொருள் அதிகமாகிச் சண்டை சச்சரவுகள் ஆயின. அடுத்தடுத்து யுத்தங்கள் நடந்தன; அவற்றுள் மூன்று படையெடுப்புக்கள் குறிப்பிடத்தக்கவை. ஜீலம் நதிக்கரையின் பேரரசுகளுக்கும் மகா அலெக்சாந்தருக்கும் நடந்த யுத்தத்தில் இந்தியா தன் ஆத்மாவை இழந்தது. அடுத்து முகம்மது கோரிக்கும் பிரிதிவிராஜனுக்கும் நடந்த யுத்தத்தில் இந்தியாவின் அரசியல் போய்விட்டது. அடுத்து ராபர்ட்

கிளைவ் நடத்திய பிளாசி யுத்தத்தில் இந்தியாவின் பொருளாதாரம் போய்விட்டது. இங்ஙனம் இந்தியா தனது மகத்தான பெருமையை இழந்து மங்கி வந்தது; அடிமைப் பட்டது. திரும்பவும் எழுந்து நின்று போராடி 1947-ல் சுதந்திர உயிர் பெற்று நிமிர்ந்து நிற்கிறது.

இந்தியா இன்று சுதந்திர நாடு. இந்தியாவில் நடைபெறுவது சுதந்திரக் குடியரசு; மக்களாட்சி. மக்களாட்சி நடைபெறும் நாட்டில் மக்களுக்கு அரசியல் அறிவு வேண்டும்; அரசியல் ஞானம் வேண்டும்; பொருளாதார அறிவு வேண்டும்; சமூக விஞ்ஞானம் தெரிந்திருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக ஒற்றுமையுடன் கூடி வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். மக்களாட்சி முறை வெற்றிக்கு மக்கள்தான் பொறுப்பு. ஆதலால், நமது நாட்டு இலக்கியங்கள் அரசியலை மையமாகக் கொண்டு ஊடும் பாவுமாகத் தோன்றின. நமது நாட்டு மக்களிடையில் அரசியல், சமூக, பொருளாதார அறிவு வளர வேண்டும் என்ற அடிப்படையில் 'கம்பனின் அரசுகள்' என்ற தலைப்பு எடுத்துக் கொள்ளப் பெற்றது. ஆயினும் அரசியல், சமுதாயம், பொருளியல் ஆகிய இன்றையச் செய்திகளும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ளன.

இன்று நமது நாட்டில் வசதியும் வாய்ப்புமுடையோர் அரசியலில் ஆர்வம் காட்டுவதில்லை. அது மட்டுமல்ல; அரசியலை அலட்சியப்படுத்துகின்றனர். அவர்கள் ஆட்சி யினர்க்குக் கப்பம் கட்டிக் காரியங்களை முடித்துக் கொள்ள எண்ணுகின்றனரேயன்றி அரசியலில் ஈடுபடுவதில்லை. இவர்கள் வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிப்பது கூட இல்லை. நடுத்தர வர்க்கத்தினர் நுகர்வுச் சந்தையை விரிவாக்கியதன் மூலம் சுக வாழ்வில் நாட்டம் செலுத்து கின்றனர். அறிஞர்கள் நிலை, அரசியலைப் பொறுத்த வரையில், அஞ்ஞாத வாசமே! சிந்தித்தும் பலர் வாக்களிப்ப தில்லை. இந்த நிலையில் இந்தியா சிறந்த அரசியலை

ஆட்சியியலைப் படிப்படியாக இழந்து வருவதை உணர முடிகிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள பண வீக்கம், விலைவாசி ஏற்றம், வேலையில்லாத் திண்டாட்டம், பாதுகாப்பின்மை, உத்தரவாதமின்மை ஆகியவற்றால் தனி மனிதனுடைய சுதந்திரம் மறைமுகமாக வில்லங்கப்படுதல் நாட்டுக்கு நல்லதல்ல. நாட்டு மக்களிடத்தில் அரசியல் விழிப்புணர்வு வேண்டும். கம்பனின் இராம காதையில் வரும் பாத்திரங்கள் பலவும் அரசியல் நெறி பேசுவதை உய்த்துணர்க. கம்பனின் அரசியல் பேச்சு, நம்மனோரை அரசியலில் ஈடுபடுத்து மானால் அது பேச்சுக்கு வெற்றி. **ஏவி. எம். அறக்கட்டளைக்கு** வெற்றி! இனி, பொதுவாக அரசியலுக்கும், அடுத்துக் கம்பனின் அரசியலுக்கும் போகலாம்.

## அரசியலின் தோற்றம்

மனித குலம் தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. மனிதகுல வரலாறு ஒரு தொடர் வரலாறு. தொடக்கத்தில் மனித குலம் அரசியலில், ஆட்சியியலில் பரிபூரண சுயேச்சையுடன் வாழ்ந்திருந்தது. அப்போது சொத்துரிமை இல்லை; பணப்புழக்கம் இல்லை; பண்டப் புழக்கம் மட்டும்தான். அதுவும் தேவைக்குத்தான்! அந்தக் கால வாழ்வியல் முறையை ஆதிகாலப் பொது வுடைமைச் சமுதாயம் என்று கூறுவர். அந்தக் காலத்தில், பழக்கங்கள் வழக்கங்களாகி மரபுகளாக இடம் பெற்று, மக்கள் இயற்கையாகவே ஒழுங்கும் ஒழுக்கமும் உடையவர் களாக வளர்ந்தனர்; வாழ்ந்தனர்; வாழ்வித்தனர். தேவைக்கே பொருள். பொருள், மனிதனின் கருவியாக இருந்தது. வரலாற்றுப் போக்கில், மெள்ள மெள்ளப் பொருள் தேவைக்காக மட்டும் அல்லாமல் கௌரவம், அந்தஸ்து, ஆதிக்கம், பிற்காலப் பாதுகாப்பு என்ற நிலைகள் தோன்றின. இந்தப் பொய்ம்மையின் அடிப்படையில் அல்லது அவசியமற்ற காரணங்களின் அடிப்படையில், மக்கள்

*தலைவன் தோன்றுகின்றான். காலப்போக்கில் மக்கள் தலைவன் வேந்தனாகின்றான்; அரசியல் தோன்றியது; சட்டங்கள் இயற்றப்பட்டன; சிறைக்கூடங்கள் தோன்றின; படைகள் தோன்றின; போர்கள் தோன்றின; பெருகின. இவ்வளவு தீமைகளும் மனிதனின் ஒழுங்கு, ஒழுக்கம் கெட்டுப் போனமையால் விளைந்த விளைவுகள். இதற்கு மூல காரணம் தனிச் சொத்துடைமை தோன்றியதோடு, காவல் என்ற பெயரில் வேலிகள் இடப் பெற்றதாகும். வீடுகளுக் கிடையே சுவர்கள் தோன்றின. பின் சொத்துடையவர்கள் எல்லாரும் கூடித் தங்களுடைய சொத்துக்களைக் காப்பாற்றிக் கொள்ள, புயபலமுள்ள தலைவனைத் தேர்வு செய்தனர். இங்ஙனம் தலைவனிடம் தொடங்கிய அரசியல், ஏகாதிபத்தியமாக இன்று உருக்கொண்டு பூதாகாரமாக வளர்ந்துள்ளது. இங்ஙனம் வளர்ந்த ஆட்சிமுறை, முடியாட்சி என்றும் குடியாட்சி என்றும் இருவகையாகப் பிரிந்தன. நமது நாடு மக்களாட்சி முறை தழுவிய நாடு.*

## கம்பனின் இராமகாதை

*கம்பன் காலம் தந்த கவிஞன். கம்பனின் இராமகாதை காலத்தின் கட்டாயமாகத் தோன்றியது. கம்பனின் கவிதை, கம்பன் வகுத்துக் காட்டிய 'சான்றோர் கவிதை'க்கு ஓர் எடுத்துக்காட்டு. மனிதரில் சிறந்தோர் சான்றோர். சான்றோர் யார் மாட்டும் எவ்வுயிர் மாட்டும் சம பார்வையுடைய வர்கள். கம்பனின் இராமகாதையில் அவனுடைய பொருள் நோக்கு எளிதில் விளங்குகின்றது. என்றுமுள இனிய தமிழில் இராமகாதையைப் பாடி இசை கொண்டு புகழ்மிக்க கவிச் சக்கரவர்த்தியாகக் கம்பன் விளங்குகின்றான். கம்பனின் இராமகாதையில் ஏற்றம் பெற்றோர் உண்டு. ஆனால், முற்றாக இகழப்பட்டோர் யாரும் இல்லை என்று துணிந்து கூறலாம். அந்தப் பாத்திரங்களை நடுவுநிலையுடன் குறை களையும் நிறைகளையும் மதிப்பீடு செய்து, தமது காவியத்தில்*

இடம்பெறச் செய்துள்ள அருமை உணரத்தக்கது. ஆதலால், சான்றோர் கவிதைக்குக் கம்பனின் இராமகாதையே எடுத்துக்காட்டு.

கம்பனின் இராமகாதை முழுதும் வாழ்வியலைச் சார்ந்த அறிவியல் பொதுளுகிறது. கம்பனின் இராமகாதை ஓர் அரசியல் சாத்திரம். கம்பனின் இராமகாதை ஒரு நெடிய காதை. நீதிகளின் ஊற்று; அறநெறிகளை நாடு முழுதும் எடுத்துச் சென்ற இலக்கியப் பேராறு; உயிர்ப்புள்ள இலக்கியம். கம்பன் கடவுளைப் பாடியது உண்மை. அது போலவே விண்ணையும் பாடியது உண்மை. ஆனால் கம்பன் மண்ணை – பூமியை மறக்கவில்லை. மண்ணிற் பிறந்து வாழும் மானுடத்தையும் பாடி இருக்கிறான். மானுடம் வெற்றி பெற வேண்டும் என்பது அவனது கொள்ளை ஆசை! மாந்தரில் பலவகை. பலவகை மாந்தரையும் பாடியிருக் கிறான். மாந்தரின் குறை – நிறைகளை உணர்ந்தவன் கம்பன். ஆயினும் மாந்தரின் குறைகளைக் கண்டு புழுதி தூற்ற வில்லை. குறைகளை நீக்கவே முயற்சி செய்திருக்கிறான். குறைகளிடையே நிலவிய நிறைகளையும் கண்டு காட்டக் கம்பன் தவறவில்லை. கம்பனின் இராமகாதையில் ஒரு சமுதாயத்தைக் காண முடிகிறது. இல்லை, பல்வேறு நாடுகள், பல்வேறு சமுதாய அமைப்புக்களைக் காணமுடிகிறது. கம்பன் இராமகாதையை இயற்றியது 800 ஆண்டுகளுக்கு முன் ஆயினும், சமுதாய இயக்கத்தில் கம்பன் பல திருப்பு மையங்களைக் காப்பியத்தில் அறிமுகப்படுத்தியுள்ளான். கம்பன் காலம் முடியாட்சிக் காலம். ஆயினும் மக்களாட்சி அறிமுகம் ஆகிறது.

இந்திய கலாசாரத்தில் – தமிழர் சமுதாய வாழ்க்கையில் 'ஊழ்' (கர்மாவின் பலன்) மிகவும் முக்கியமான இடத்தை வகித்து வந்திருக்கிறது; இன்றுவரை வகித்து வருகிறது. 'ஊழிற் பெருவலி யாவுள?' என்று திருக்குறள் கூறுகிறது. ஆனால், தமிழக வரலாற்றில் 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்றும்,

"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்றும் கூறி, ஊழையும் வெற்றி பெறமுடியும் என்ற நம்பிக்கையைத் திருவள்ளுவர் தந்தார். ஆயினும் ஊழ் பற்றிய சிந்தனையில் பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை. ஊழை மையமாகக் கொண்டு - 'ஊழ்வினை உருத்து வந்தூட்டும்' என்ற கோட்பாட்டையே மையமாகக் கொண்டு இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றினார். ஆனால் சமய ஆசிரியராகிய திருஞானசம்பந்தர், உய்யுமாறு தேடிச் செய்யும் வினை செய்யாது 'அவ்வினைக்கு இவ்வினை' என்று சொல்லித் திரிவாரை மறுக்கிறார்.

"அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லும்
அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான் கழல் போற்றுதும்
நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம்"

என்பது திருஞானசம்பந்தர் வாக்கு.

ஊழ் என்பது தான் என்ன? ஆன்மாவின் பழக்கங்கள், வழக்கங்களே! பிறப்புதோறும் ஆன்மாவிடத்தில் புலன்களில் முகிழ்ப்பதே ஊழ். எனவே, பழக்கங்களையும் வழக்கங்களையும் மனிதன் சிந்தித்து அறிவார்ந்த முயற்சியில் ஈடுபட்டானானால் ஊழை வெற்றி பெறமுடியும். ஊழின் ஓய்வு ஒழிவு இல்லாத தாக்குதலிலிருந்து தப்ப, துன்பங்கள் துயரங்கள் ஆகியவற்றால் கலங்காத துணிவுடன் கூடிய முயற்சி தேவை. ஒவ்வொரு நாளும் முந்தைய வினையைவிட எந்த வகையிலும் குறையாத கூடுதல் முயற்சி தேவை. அப்பொழுதுதான் ஊழை வெற்றி பெற இயலும். ஆதலால் இலக்குவன்,

*"உதிக்கும் உலையுள் உறுதீ என ஊதை பொங்க*
*கொதிக்கும் மனம் எங்ஙனம் ஆற்றுவென்? தோள்*
*இழைத்தாள்*
*மதிக்கும் மதி ஆய், முதல் வானவர்க்கும் வலிஇது ஆம்*
*விதிக்கும் விதி ஆகும் என் வில் தொழில் காண்டி"*

(கம்பன்–1735)

என்றான்.

"விதிக்கு விதியாகும் என் வில் தொழில்" என்று இலக்குவன் கூறுவது நூற்றுக்கு நூறு உண்மை. இலக்கு வனால் முடியும். ஆனால், இராமனுடைய செந்தண்மை இலக்குவனைச் செயற்படத் தடுத்தமையினாலேயே இலக்குவனால் விதிக்கு விதி செய்ய இயலவில்லை. இன்று நம்முடைய நாட்டில் ஏராளமான மக்கள் ஏழைகளாக இருப்பதற்குக் காரணம் விதியின்பால் உள்ள நம்பிக்கையே. தாம் முயன்றாலும் முன்னேற முடியாது என்று முயற்சியின்றி வாழ்கின்றனர். திருவருட் சிந்தனையுடன் இடையறாது அறிவறிந்த ஆள்வினையில் ஈடுபட்டால் ஊழினை வென்று நமது நாட்டை வளமுடைய நாடாக ஆக்கமுடியும். இது உறுதி.

ஆதலால் நாம் அன்றாட வாழ்க்கையில் பழக்கங்களை ஏற்றுக்கொள்ளும் பொழுது, நன்றாக ஆலோசனை செய்து எடுத்துக் கொள்ள வேண்டும். பழக்கங்கள் சில கால எல்லையில் வழக்கங்களாக மாறும். ஒரு பழக்கம் வழக்கமாக மாறிய பிறகு அந்த வழக்கத்திலிருந்து விடுபடுவதும் கடினம். ஆதலால், பழக்கம், வழக்கமாகும் முன் தீர ஆய்வு செய்து பொருந்தா வழக்கமாக இருப்பதைத் தவிர்த்துவிட்டால், ஊழ் உருவாக்கம் பெறுதலைத் தவிர்த்துவிடலாம். கம்பனின் காலம் ஊழ்–விதியின் ஆட்சிக்காலம். ஆயினும், 'விதிக்கு விதியை' அறிமுகம் செய்கிறான்.

கு.V.16.

அறியாமல் செய்யும் தவறுகள் கம்பனின் இராம காதையில் மன்னிக்கப்படுகின்றன. கம்பனின் காலம் நிலப் பிரபுத்துவ காலம். ஆனாலும் "உடையாரும் இல்லை; இல்லாரும் இல்லை" என்ற பொதுமை நலச் சமுதாயம் அறிமுகப்படுத்தப்படுகிறது. கம்பனின் இராமகாதையில் ஐந்து நாடுகளின் அரசுகள் அறிமுகப்படுத்தப் பெற்றுள்ளன. இவற்றுள் இரண்டு பேரரசுகள்; மூன்று சிற்றரசுகள், பேரரசுகளில் ஒன்று அயோத்தி. மற்றொன்று இலங்கை. சிற்றரசுகளில் மிதிலை அரசு ஒன்று; கங்கைக்கரை அரசு ஒன்று; கிட்கிந்தை அரசு ஒன்று. இந்த ஐந்து அரசுகளில் கிட்கிந்தை அரசைத் தவிர, மற்ற நாட்டு அரசுகளில் குழப்பங்கள் இல்லை. மிதிலை (ஜனகர்) அரசு கதைப் போக்கிற்காக அமைந்த அரசு. விரிவான செய்திகள் கிடைக்கவில்லை.

## அரசுகளின் நிலை

மனித சமுதாயத்தில் அரசுகளின் தோற்றமே மகிழ்ச்சியைத் தரக்கூடியதல்ல. நல்லதைக் கருவாகத் தாங்கி அரசுகள் தோன்றவில்லை. நிலப் பிரபுத்துவமும் - தனி உடைமையும், உழைப்பும் - கூலியும் என்ற சமுதாய நெறி முறை தோன்றிய பிறகு, உடைமைக்காரர்கள் தங்களுக்குப் பாதுகாப்பாக அரசைத் தோற்றுவித்து, அதிகாரங்களை வழங்கினர். அரசுகள் தோன்றிய காலத்திலிருந்து இன்று வரை - மக்களாட்சியிலும் கூட - அரசுகள் உடைமை வர்க்கத்தைப் பாதுகாப்பதாகவே இயங்கி வருகின்றன. பின், காலப் போக்கில் அரசே ஓர் அசுர அமைப்பாகிவிட்டது. அரசுக்கு நிலம்; கஜானா; படை என்றெல்லாம் அமைந்து விட்டன. ஏன்? அரசுகளே ஒரு காரணமும் இல்லாமல் மக்கள் விரோத அமைப்பாக மாறின; இயங்கின; இயங்கிக் கொண்டிருக்கின்றன. உலகில் பெரும்பான்மையான அரசுகள் கொடுங்கோல் அரசுகளாக விளங்கின. உலக

வரலாற்றின் ஏடுகளில் போர்ச்செய்திகளே நிரம்பியுள்ளன என்பதே இதற்குச் சான்று. காலப் போக்கில் முடியாட்சி களை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். இந்தக் கிளர்ச்சியில் பல அரசர்கள் முடியிழந்தனர்; கொல்லப்பட்டனர். சில அரசுகள் விழித்துக் கொண்டு, மக்களாட்சி முறையைத் தழுவிய ஆட்சியை நடத்தித் தப்பித்துக் கொண்டன. இதற்கு இங்கிலாந்து சிறந்த எடுத்துக் காட்டு. ஆயினும் வரலாற்றுப் போக்கில் நல்லரசுகள் சில அமைந்திருந்தன என்பதை மறக்க இயலாது; மறக்கக் கூடாது. குறிப்பாக இந்தியாவிலும், அதிலும் தமிழகத்திலும் தென் கிழக்கு ஆசியாவிலும் சீனாவிலும் பண்டு நல்ல அரசுகள் இருந்துள்ளன. குறிப்பாகத் தமிழ்நாட்டு அரசுகளில் பல அரசுகள் மக்கள் நல அரசுகளாகவே திகழ்ந்தன. அதனா லேயே அரசை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்த வரலாறு தமிழக வரலாற்றில் இல்லை. மக்கள் சமுதாயத்திற்கு அரசு இன்றியமையாதது. அரசுக்கு மக்கள் தேவை. ஆதலால், இலக்கியங்கள், குறிப்பாக இந்திய இலக்கியங்கள் அரசியலை மையமாகக் கொண்டே தோன்றி விளங்குகின்றன. கம்பனின் இராமகாதை ஓர் இலக்கியம் மட்டுமல்ல, அரசியல் நெறி விளக்கும் அரசியல் நூலாகவும் விளங்குகின்றது. கம்பனின் இராமகாதையில் இரண்டு பேரரசுகளும் மூன்று சிற்றரசுகளும் பேசப்படுகின்றன என்பது அறிந்ததே. இந்த அரசுகளின் அமைப்பு, செயல்முறை ஆகியனவற்றை ஆய்வு செய்வது ‘எல்லாரும் இந்நாட்டு மன்னர்’ என்று உரிமை கொண்டாடும் இக்காலத்திற்கு மிகவும் உதவியாக இருக்கும் என்ற நம்பிக்கையில் இந்தப் பேச்சு அமைகிறது.

## அயோத்திச் சிறப்பு

கோசல நாட்டு அரசு பேரரசு; அதன் தலைநகரம் அயோத்தி. இன்றும் அயோத்தி பழைய வரலாற்றுச் சின்னமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. நாகரிகத்தில்

வளர்ந்த மக்கள்; இயல், இசைப் பயன் துய்த்து மகிழ்த்து வாழ்வர், கேள்வி ஞானம் வளரும் நாட்டு மக்கள், ஆழ்ந்து அகன்ற பல்துறை அறிவுடையோராக விளங்குவர். அயோத்தி நாட்டு மக்கள் செவியிற் சுவையுணரும் கேள்வியை 'மருந்தினும் இனியது என்று மாந்துவார்' எனக் கம்பன் சொல்லும் அருமை நோக்குக. திருவள்ளுவரும் கூடக் கேள்வியைச் 'செவிச் செல்வம்' என்றார். கம்பன் பிணி அகற்றும் மருந்தினும் இனியது என்று கூறுவது உற்றறிதலுக்குரியது. அறியாமைக்குக் கேள்வி ஞானத்தைப் போல் பிறிதொரு மருந்தில்லை.

'வெண்மை இல்லை; பல் கேள்வி மேவலால்' என்று கூறுவதையும் ஒப்பு நோக்குக. விருந்தினரை ஓம்பலும், விழாக்கள் நிகழ்த்தலும், நல்ல நாட்டின் நிகழ்வுகள், அடையாளங்கள்.

*"பொருந்திய மகளி ரோடு*
*வதுவையில் பொருந்து வாரும்*
*பருந்தொடு நிழல் சென் றன்ன*
*இயல்இசைப் பயன்துய்ப் பாரும்*
*மருந்தினும் இனிய கேள்வி*
*செவியுற மாந்து வாரும்*
*விருந்தினர் முகங்கண் டன்ன*
*விழாவணி விரும்பு வாரும்"* (கம்பன் – 46)

என்று பாடுகிறான் கம்பன்.

நமது நாட்டில் பெண்களுக்குக் கல்வி தருதல் என்பது இன்று ஒரு பெரிய பிரச்சினை. நமது நாட்டில் பெண்களில் படித்தவர்கள் 24.8% பேர். பெண்களில் இந்த அளவுக்குப் படித்தவர்கள் உருவானதற்குக் காரணம் பெண்கள் முன்னேற்ற இயக்கம், பாரதியின் பாடல்கள் ஆகியனவாம். பழந்தமிழகத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை இருந்தது; ஆட்சியுரிமையும்கூட இருந்தது. இதற்கு மதுரை

மீனாட்சியம்மன் கோயில் சான்று. சமுதாய நடைமுறைகளே திருக்கோயில்களிலும் அமைகின்றன என்பதை நினைவிற் கொள்க. நமது சுதந்திரக் குடியரசின் அரசியல் சட்டத்தில் பெண்களுக்கெனக் கல்விக்கும் சொத்துடைமைக்கும் விதிகள் இயற்றப்பட்டுள்ளன. ஆயினும் 10 விழுக்காட்டுப் பெண் களுக்குக் கூட இந்தியாவில் சொத்துரிமை இல்லை. ஆனால், அயோத்தியில் பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கினர் என்று கம்பனின் காவியம் கூறுகிறது. இது பற்றிப் பாடும் பாடலில் கம்பன், ஒரு வாழ்வியல் தத்துவத்தை - உண்மையைக் கூறுகின்றான். பிறர் வருத்தத்தை மாற்ற, செல்வம், கருவி, அறிவு உடையோரே பிறர் வருந்தும் வருத்தம் அறிவர். மனிதம் போற்றும் அறிவில்லாதவர்களிடம் செல்வம் இருந்தாலும் பிறர் துன்பம் மாற்றார். இவ்விரண்டில் செல்வம் இல்லாது போனாலும் அறிவு இருந்தால், முயன்று மற்றவர் துன்பத்தை மாற்றுவர். பிறருடைய வருத்தத்தை மாற்றும் முயற்சியினையே 'நோன்பு' என்று தமிழ் நெறி கூறுகிறது. 'தமக்கென முயலா நோன்றாள்' என்பது புறநானூறு. பிறிதின் நோய் - பிறர் வருத்தம் பொறா மனம் அறிவுடையோருக்கே உண்டு என்ற கொள்கை கம்பனுடையது. கோசல நாட்டுப் பெண்கள் வருந்தி வந்தவர்க்கு ஈதலிலும், விருந்து ஓம்புதலிலுமே ஈடுபட் டுள்ளனர். கோசல நாட்டில் ஏற்றுமதி - இறக்குமதி பெருகி வளர்ந்திருந்தன. வளம் கொழிக்கும் நிலம், கோசல நாட்டு மக்கள் ஒழுக்கம் சிறந்த குல மரபினர் என்றெல்லாம் புகழ்கின்றான் கம்பன்.

ஒழுக்கம் சிறந்த மக்களைப் பெற்றுள்ள நாடே வளரும் நாடு. இதனால் ஆட்சிச் செலவு குறையும். குலம், குடி என்ற சொற்கள் தமிழ் இலக்கியங்களில் பரவலாகப் பேசப்படு கின்றன. குலம் வேறு, சாதி வேறு, சமூக அமைவுக்கும் குடும்ப அமைவுக்கும் இடையில் அமைந்து விளங்குவது குலம் என்பது. இது வழிவழியாகச் சிறந்து விளங்கி வரும்

தலைமுறையைக் குறிக்கும். குலத்திற்குத் திருக்குறள் மிகவும் ஏற்றம் தருகிறது. கம்பனும் 'குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்' என்று விளக்குகின்றான். ஒழுங்குகள், ஒழுக்கங்களாக உருப் பெறுகின்றன. "நல்ல ஒழுங்குகள் தான் எல்லா விஷயங்களுக்கும் அடிப்படை" என்றார் எட்வர்டு பர்க்.

ஒருவன், தான் பிறந்து வளரும் குடும்பம், குலம், ஊர், அந்நாட்டு அரசின் நடைமுறை இவைகளுக்கேற்பவே உருவாகின்றான்; உருவாக்கப்படுகின்றான். 'ஒழுக்கத்திற்குப் பிறப்பின் சார்பு காரணம் என்பதைச் சேக்கிழார்,

"பிறப்பின் சார்பால் குற்றமே குணமா வாழ்வான்"

(பெரிய புராணம், கண்ணப்பர்–8)

என்று பாடுவார். ஒழுங்கு என்பது கட்டுப்பாட்டுடன் வாழ்தல். சுதந்தரம் இல்லாத கட்டுப்பாடு அடிமைத் தனத்தைத் தோற்றுவிக்கும். கட்டுப்பாடு இல்லாத சுதந்தரம் அராஜகத்தைத் தோற்றுவிக்கும். ஆதலால், கட்டுப்பாடு தேவை. கட்டுப்பாட்டின் அடிப்படையிலேயே கடலும் பாலைவனமும் உருவாகின்றன. 'நல்நடை நல்குதல் வேந்தர்க்குக் கடனே!' என்றது புறநானூறு. இன்றைய அரசுகள் மக்களை இரவலர்களாகவும் பேராசைக்காரர் களாகவும் ஏமாற்றுபவர்களாகவும் குடிகாரர்களாகவும் ஆக்க முனைகின்றன. கடவுள் தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்.

கம்பன் காட்டும் கோசல நாட்டில்.

"வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்
திண்மை இல்லை ஓர் செறுநர் இன்மையால்
உண்மை இல்லை பொய் யுரைஇ லாமையால்
வெண்மை இல்லை, பல் கேள்வி மேவலால்"

(கம்பன் – 84)

'ஆக கோசல நாட்டில் வறுமைத் துன்பமும் இல்லை, பகைவரால் வரும் துன்பமும் இல்லை என்றால் அயோத்திப் பேரரசு, ஒரு நல்ல பேரரசாக அமைந்து விளங்கியது என்பது புலப்படுகிறது.

கோசல நாடு பேரரசாக விளங்கியது என்பதைக் கம்பன் 'மன்னவர் தருதிறை அளக்கும் மண்டபம்' பற்றிக் கூறுவதன் மூலம் உய்த்துணர முடிகிறது. ' அயோத்தியில் கள்வரும் இல்லை; காவல் செய்வாரும் இல்லை. கொள்வாரும் இல்லை; ஆதலால் கொடுப்பார்களும் இல்லை.

கள்வர், காவலர் இவர்களுள் யார் முதலில் தோன்றினர்? நடைமுறையில் கள்வர் தோன்றின பிறகே காவலர் தோன்றுகின்றனர் என்று சொல்லப்படுகிறது. ஆனால், மனித குலத்தின் பரிணாம வளர்ச்சியை உற்று நோக்கினால் காவலுக்குப் பின்தான் கள்வர் வருகின்றனர். ஆம்! பிறருடைய செல்வத்தையெல்லாம் அழக்கொண்டு இவறிக் கூட்டிப் பிறர் வாட, வருந்தப் பூட்டி வைத்து அழகு பார்க்கும், சுரண்டும் வர்க்கத்தைச் சேர்ந்த செல்வர்கள் - செல்வத்தைக் காப்பவர்கள். 'செல்வத்தின் பயனே ஈதல்' என்ற நெறி போற்றாமையினால் காவற்காரராகின்றனர். இந்தச் சூழ்நிலையில்தான் கள்வர்கள் தோன்றுகின்றனர். ஆனால் கோசல நாடு குறைவற வளர்ந்த நாடாக விளங்கிற்று.

கோசல நாட்டின் பேரரசர் அன்பில் தாய்; நலம் பயப்பதில் தவம்; விண்ணில் உய்த்துச் செலுத்தும் சேய்; நோய்க்கு மருந்து; அறிவு என்று கம்பன் பேரரசின் புகழ் பாடுவதைக் காப்பியத்தில் படித்து அனுபவிக்க முடிகிறது.

## மக்களுக்காகவே மன்னன்

மக்களை உடம்பாகவும் மன்னனை உயிராகவும் கண்டு பாடியது புறநானூறு. 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'

என்பது புறநானூறு. ஆனால், கம்பன் குடிமக்களை உயிராகவும் அயோத்தியில் இருந்த பேரரசன் தசரதனை - மன்னனை - உடம்பாகவும் கூறுவதை அறிந்து அனுபவிக்க வேண்டும். உயிர்தான் முக்கியமானது. உயிருக்குக் கருவிதான் உடம்பு. 'உயிர் எலாம் உறைவதோர் உடம்புமாயினான்' என்றான் கம்பன். அதாவது, மக்களுக்காகவே அரசு, மன்னன் எல்லாம். இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளில் அரசனைக் கடவுளாகவும் அரசனது ஆணையைக் கடவுளின் ஆணையாகவும் போற்றப்பட்டிருப்பதை நோக்கும்பொழுது, கம்பன் கண்ட அரசு, மக்கள் அரசாக விளங்குவதைக் காண மகிழ்வு மேலிடுகிறது. ஆனால், இன்றோ மக்கள் சட்ட ரீதியாக உரிமை பெற்றிருந்தாலும், அரசின் நடைமுறையில் குடிமக்களாகக் கூட நடத்தப்படவில்லை. அரசின் உடைமை யாக - வாக்களிக்கும் எந்திரங்களாக மதிக்கப்படுகின்றனர், நடத்தப்படுகின்றனர் என்ற வேதனையை வெளிப் படுத்தாமல் இருக்க இயலவில்லை.

## இராமனின் எளிமை

இன்று ஆள்வோருக்கு அச்சம் மிகுதி. காவலர்கள் புடைசூழவே உலா வருகின்றனர். குண்டுகள் துளைக்காத கார்கள், மேடைகள் இன்றைய ஆள்வோருடைய தேவையாகி விட்டன. கோசல நாட்டில் அப்படியில்லை.

இராமனுக்குப் பகைவர் என்று யாரும் இல்லை. சீதையைக் கவர்ந்து சென்ற இராவணனிடம் பகை கொண்டானில்லை. இராவணனை அழிக்க நினைத்தா னில்லை. தூதுவர்கள் மூலம் சீதையை விட்டுவிட்டு உயிர் பிழைத்துப் போகும்படி சொல்லியனுப்பியதை நினைவிற் கொள்க. செருகளத்தில் கூட இராமன், 'இன்று போய் நாளை வா!' என்று கூறும் அறநெஞ்சினன் என்பதைப் புரிந்து கொண்டால், இராவணன் அழிவு இராமனால் ஏற்பட்டது என்பதைவிட, வீரத்தின் பேரால் பொய்மையான

மானத்திற்கு அஞ்சி, இராவணன் கடைசிவரையில் போரிட்டு அழிந்தான் என்பதுதான் உண்மை.

இராமன் இளவரசன். விளையாடி விட்டு அரண் மனைக்குத் திரும்பும்பொழுது தேரூர்ந்து வருகின்றான். தேரோடும் வீதியின் இருமருங்கிலும் தன்னைக் காண கூடியிருக்கும் மக்களைக் கண்டவுடன் தேரிலிருந்து இறங்கி மக்களை நோக்கி நடந்து வந்து அணுகுகின்றான். மக்களிடம், 'என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? துன்பத் தொடக்கில் லாமல் வாழ்கின்றீர்களா? உங்களுடைய மனை வளமாக அமைந்திருக்கின்றதா? உங்களுடைய பிள்ளைகள் அறிவில் சிறந்து விளங்குகின்றார்களா? வலிமையுடையோராக வாழ்கின்றார்களா?' என்றெல்லாம் கேட்டறியும் பாங்கினை நோக்கின், கோசல நாட்டுப் பேரரசு, மக்கள் நல அரசாகவே விளங்கியது என்பது மட்டுமல்ல இன்றைய மக்களாட்சி முறை அரசுகளைவிடக் கூடச் சிறந்து விளங்கியமையை உய்த்துணர முடிகிறது.

> எதிர்வரும் அவர்களை எமையுடை இறைவன்
> முதிர்தரு கருணையின் முகமலர் ஒளிர
> 'எது வினை? இடர் இலை? இனிது நும் மனையும்?
> மதிதரு குமரரும் வலியர்கொல்?' எனவே! (கம்பன்–311)

என்ற பாடல் இங்கே நினைந்து நினைந்து நோக்கத்தக்கது.

அயோத்திப் பேரரசு நடுவுநிலை பிறழ்ந்ததாக வரலாறு இல்லை. நல்ல அமைச்சர்கள். பேரரசனைச் சூழ்ந்து நன்னெறியில் அரசை உய்த்துச் செலுத்தினார்கள்.

## நடுநிலை பிறழாத அரசு

அயோத்திப் பேரரசு வீரமும் வளமும் திருவும் பெற்று விளங்கினாலும் அதற்கு யாரோடும் பகை கொள்ளும் பழக்கமும் இல்லை; வழக்கமும் இல்லை.

*யாரொடும் பகை கொள்ளலன் என்ற பின்*
*போர் ஒடுங்கும்; புகழ் ஒடுங் காது; தன்*
*தார் ஒடுங்கல் செல் லாது; அது தந்தபின்*
*வேரொடும் கெடல் வேண்டல் உண் டாகுமோ?*

(கம்பன்–1419)

*என்பதறிக. இங்ஙனம் அயோத்திப் பேரரசு பலவகையில் சிறந்து விளங்கினாலும் குற்றங்களே இல்லாத அரசாகவும் அது இல்லை என்பதையும் நாமறிதல் வேண்டும். கோசல நாட்டு மக்கள் அரசியலில் ஏற்படும் நல்ல மாற்றங்களை வரவேற்றனர் என்றும் தீயனவற்றைக் கண்டு அழவும் செய்தனர் என்றும் தெரிய வருகிறது. இராமன் முடிசூடிக் கொள்ளும் விழாவை நினைத்து மக்கள் மகிழ்ந்தனர். எதிர் பாராத நிலையில் இராமன் முடிசூடாமல் காடு செல்ல இருப்பதறிந்து அழுதனர். அதாவது உடலும் உயிரும் போல அரசியலில் மக்கள் பங்கேற்றமை பாராட்டுதலுக்குரிய செய்தி. பேரரசனுக்கு நல்ல அமைச்சர்கள் இருந்ததாகக் கம்பன் பாடுகின்றான். இராமனுக்கு முடிசூட்டும் விஷயத்தில் அமைச்சர்கள் கலந்து ஆலோசிக்கப் பெற்றனர். தசரதன், கோசல நாட்டைச் சேர்ந்த பல சிற்றரசர்கள் கூட்டமும் கூட்டி அவர்களுடைய இசைவும் பெற்றான். எனினும் ஒரு நாட்டின் முடிசூட்டு விழா அக்குடும்பத்தில் பிறந்த ஒருவனாகிய பரதன் இல்லாமலேயே ஏற்பாடு செய்யப்படுவது ' எந்த நியாயத்தைச் சேர்ந்தது? அது மட்டுமல்ல. கடைசியாக நாட்டை ஆள்வது யார்?' என்பது கைகேயியின் அந்தப்புரத்தில் முடிவு செய்யப்படுகிறது. இது விடை காணமுடியாத வினாவாக இன்றும் விளங்குகிறது.*

## கைகேயி மனம் திரிந்தது ஏன்?

*அரசியல், அழுக்காற்றுக்கும் காமத்துக்கும் பலியாகிறது. அது போலவே, ஆட்சிபுரியும் அதிகாரம்*

உடையவர்களிடத்திலேயே செல்வம் இருக்கும் - மற்றவர்களுக்கு ஒன்றும் இல்லை என்ற கருத்தும் அறிவுலகுக்கு, நீதி சார்ந்த உலகத்திற்கு ஏற்புடையதாக இல்லை. இராமனுக்கு முடி சூட்டுவதில் கைகேயிக்கு மறுப்பில்லாதது மட்டுமல்ல, விருப்பமும் கூட இருந்தது.

மனித குலத்திற்குத் தீமை செய்யும் தீயொழுக்கங்களில் அழுக்காறே தலைமை ஏற்கிறது. 'அழுக்காறு என ஒரு பாவி' என்று திருக்குறள் திட்டுகிறது. அழுக்காறு, பொறாமை இவை ஒரு பொருள் குறிக்கும் இரு சொற்கள். அழுக்காறு என்னும் உணர்ச்சி நல்ல மனிதனைக் கூட நச்சரவமாக மாற்றிவிடும்; புனிதமானவையும் கூட அழுக்காற்றின் வசப்பட்டால் அழிந்துவிடும். இதற்குக் கைகேயி ஓர் எடுத்துக்காட்டு.

கைகேயி மிகவும் நல்லவள்; உயர்ந்த பண்பினள். ஆயினும் கூனி, கைகேயியின் நெஞ்சத்தில் ஏற்றிய அழுக்காறு, பகை உணர்ச்சி கூட உடனடியாகப் பலன் தரவில்லை - பலன் தராததுமட்டுமின்றி, கூனியின் மீது கைகேயி சினம் கொண்டு பேசிக் கூனியை ஒதுக்க முயற்சி செய்கிறாள். ஆனால், வஞ்சினம் கொண்ட கூனி பழிவாங்கும் எண்ணத்துடன் அவமானத்தையும் பொருட்படுத்தாமல் நின்று, கைகேயியின் மனத்தைத் திரிபுறச் செய்ய முயற்சி செய்கிறாள். கைகேயி, கூனியின் பேச்சுக்குச் செவி கொடுக்காமல் விலகியிருந்தால் கைகேயி காப்பாற்றப் பட்டிருப்பாள். ஆயினும் இராமகாதை நீள வேண்டுமே! அதனால், கைகேயி தொடர்ந்து கூனியின் பேச்சைக் கேட்கிறாள். மெள்ள மெள்ள, நீண்ட போராட்டத்திற்குப் பிறகு, கைகேயியின் தூய சிந்தையும் திரிந்தது. முதலில் கூனியிடம் கைகேயி, 'இராமனைப் பயந்த எற்கு இடர் உண்டோ?' என்று வினவுகின்றாள். இடர் இல்லை என்பது கைகேயியின் துணிபு; முடிவு. இராமனை, தான் ஈன்றெடுத்த மகன் என்றே உரிமை கொண்டாடிய பால்மனம் உடைய கைகேயியின் உள்ளத்தில் சொட்டுச் சொட்டாக நஞ்சைக்

கலக்கிறாள் கூனி. பின் மனம் திரிந்த கைகேயி இப்போது பரதனை 'என் மகன்' என்று கூறுவதுடன், 'தன் மகன்' பரதன் ஆட்சியைப் பெறக் கூனியிடமே ஆலோசனை கேட்கிறாள். திரிந்த சிந்தையளாகிய கைகேயி, தசரதனிடம் வரம் கேட்டபொழுது, பரதனை 'என் செல்வன்' என்றும், இராமனைச் 'சீதை கேள்வன்' என்றும் குறிப்பிடுவதை ஓர்க. 'இராமனைப் பயந்த எற்கு' என்று உரிமையுடன் பேசிய கைகேயி, அழுக்காற்றின் வழிப்பட்டு இராமனைச் 'சீதை கேள்வன்' என்று குறிப்பிடுவது, மூலம் படிமுறையில் மனந்திரிந்த போக்கினை அறிவது நல்லது.

கூனியின் சூழ்ச்சி தொடக்கத்தில் பலிக்கவில்லை. கடைசியில் கைகேயியின் மனம் மாறுகிறது. கைகேயியின் மன மாற்றத்துக்குக் கூனியின் திறமை காரணமல்ல; அயோத்தியில் இருந்த நிலவரம்-சமூக அமைப்பே காரணம் என்று தெரியவருகிறது. இன்ப துன்ப உணர்வுகளுக்குத் தந்தி சேவகன் காரணம் ஆகான். தந்தியின் செய்தியே காரணமாக அமையும். கோசல நாட்டில் சமூக உத்தரவாதம் இல்லை. அதிகாரம், செல்வம் எல்லாம் பதவியில் உள்ளோரையும் சார்ந்தோரையுமே சென்றடைந்தன - மற்றவர்களுக்கு வாய்ப்பில்லை என்ற நிலவரத்தைக் கூனி கருவியாக்கிக் கொள்கிறாள். 'இராமனுக்கு முடி சூட்டிவிட்டால் அதன்வழி சொத்துக்களும் அதிகாரங்களும் கோசலைக்குப் போய்ச் சேர்ந்துவிடும். உன் மகன் பரதனுக்கு ஒன்று தேவையானால் நீ, கோசலை இடத்தில் கேட்டுத்தான் பெற வேண்டும். கேகய நாட்டு இளவரசியாகவும், தசரதச் சக்கரவர்த்தி மனைவி யாகவும் திகழும் நீ, உனக்கொன்று தேவையானால் கோசலையைக் கேட்டுத்தான் பெறவேண்டும்' என்று கூறுகிறாள். தற்சார்பும், பாதுகாப்பும், உத்தரவாதமும் இல்லாத வாழ்க்கையை எண்ணிப் பார்த்த கைகேயி எதிர் காலத்தை நினைவிற் கொண்டு மனம் மாறுகிறாள்.

*புரியும் தன்மகன் அரசு எனின் பூதலம் எல்லாம்*
*விரியும் சிந்தனைக் கோசலைக்கு உடைமை ஆம்;*
*என்றால்*
*பரியும் நின்குலப் புதல்வற்கும் நினக்கும் இப்பார் மேல்*
*உரியது என், அவள் உதவிய ஒரு பொருள் அல்லால்!*
(கம்பன் – 1477)

*சிந்தை என்செயத் திகைத்தனை? இனி, சில நாளில்*
*தம்தம் இன்மையும் எளிமையும், நிற்கொண்டு தவிர்க்க*
*உந்தை, உன்ஐ, உன்கிளைஞர், மற்று உன்குலத்து*
*உள்ளோர்*
*வந்து காண்பது உன் மாற்றவன் செல்வமோ? மதியாய்!*
(கம்பன்–1479)

என்னும் பாடல்களை எண்ணுக. ஆக, கம்பன் ‘உடையாரும் இல்லை; இல்லாரும் இல்லை’ என்று கூறியது; கோசல நாட்டின் அமைப்பை அல்ல; கம்பன் காண விரும்பிய இலட்சிய நாடு இது. மேலும், ‘கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லை’ என்றும் அல்லவா பாடுகிறான். ஆனால், இராமன் அயோத்தியை விட்டுப் புறப்படும் பொழுது பார்ப்பனன் ஒருவன் இரந்து வருகிற செய்தியைக் கம்பன் பாடுகின்றான்.

*பரித்த செல்வம் ஒழியப் படரும் நாள்*
*அருத்தி வேதியற்கு ஆன்குலம் ஈந்து, அவன்*
*கருத்தின் ஆசைக் கரை இன்மை கண்டு, இறை*
*சிரித்த செய்கை நினைந்து, அழும் செய்கையாள்*
(கம்பன் – 5094)

என்ற பாடல் கவனத்திற்குரியது.

இதனால் கம்பன் ஒரு சிறந்த பொதுமை நலம் கெழுமிய நாட்டை இலட்சியமாகக் கொண்டிருந்தான் என்பது உணரத்தக்கது. இன்னமும் கம்பனின் இலட்சியம்

நிறைவேறவில்லை. கம்பனின் ஆர்வலர்கள்-மனிதநேயம் உடையவர்கள் - கம்பனின் இலட்சியத்தை நிறைவேற்ற முன்வர வேண்டும்.

## நிறையும் குறையும்

கம்பன் கோசல நாட்டில், பெண்கள் மதிக்கும் சமூக அமைப்பு இருந்ததாகப் பாடுகிறான். ஆனால் மீட்சிப் படலத்தில் சீதையை இராமன் கண்டபடி திட்டுகிறான்.

*“ஊண் தறம் உவந்தனை ஒழுக்கம்; பாழ்பட*
*மாண்டிலை; முறை திறம்பு அரக்கன் மாநகர்*
*ஆண்டு உறைந்து அடங்கினை; அச்சம் தீர்ந்து, இவண்*
*மீண்டது என் நினைவு? என்ன விரும்பும் என்பதோ?”*

(கம்பன் - 10013)

*“யாது யான் இயம்புவது? உணர்வை ஈடு அறச்*
*சேதியா நின்றது உன் ஒழுக்கச் செய்தியால்*
*சாதியால்; அன்று எனின் தக்கது ஓர் நெறி*
*போதியால் என்றனன் - புலவர் புந்தியான்.”*

(கம்பன் - 10091)

என்றெல்லாம் இராமன் திட்டுகின்றான். இதில் என்ன நியாயம் இருக்கிறது? அறிஞர்களில் சிலர் சமாதானம் கூறுகின்றனர். நாடாளும் அரசனாக இருந்தால் சொல்லினால் சுடும் உரிமை உண்டா? நெருப்பினால் சுட்டதை வேண்டுமானால் நியாயப்படுத்தலாம். நாவினால் சுட்டதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள இயலாது. இதனால் பெண்களைப் பெருமைப்படுத்தும் ஒழுக்கம் அயோத்தியில் இருந்ததா என்பதே கேள்விக் குறியாகி விட்டது.

ஆக, அயோத்திப் பேரரசு நிறைகளும் குறைகளும் உள்ள அரசாகவே விளங்கியுள்ளது என்று அறிகின்றோம்.

கோசல நாட்டில் நிலவிய பேரரசின் குறைபாடு களினாலேயே இராமகாதை நீளுகிறது. கூனியின் துன்பம் மாற்றப்படாமை; தயரதனின் வரம், இராமனுடைய முடிசூட்டு விழாவில் பரதனைப் புறக்கணித்தது ஆகியனவே இராமன் முடியிழந்தமைக்குக் காரணம். காட்டுக்குச் சென்றதற்குக் காரணம் கூனி; கருவி கைகேயி.

கோசல நாட்டு அரசில் குறைகள் காணப்படினும் கோசல நாட்டு அரசு அறம் சார்ந்த அரசு என்பதை மறுக்க முடியாது. கம்பன் தன்னுடைய இலட்சிய நாடாகக் கோசல நாட்டைத்தான் பாடுகின்றான். கம்பனுக்குத் தன்னுடைய இலட்சிய அரசை அமைக்கும் ஆற்றல் அயோத்திப் பேரரசுக்கே உண்டு என்ற நம்பிக்கை போலும். ஆதலால், அயோத்திப் பேரரசில் கம்பன் அரசியலை முறையாகப் பாடுகின்றான். பாத்திரங்கள் பலவற்றையும் - அரசியல் சிந்தனையாளர்களையும் - அரசியல் பேசுபவர்களையும் படைத்துக் காட்டுகின்றான். கம்பனின் அரசியலறிவு அயோத்தியா காண்டத்தில் பூரணமாக வெளிப்படுகிறது. அயோத்தி அரசில் கம்பன் அரசியல் கோட்பாடுகளையும் வலியுறுத்துகிறான். கம்பன் தன் இராமகாதையில் ஒரு நல்ல ஆட்சியமைந்த நாட்டை உருவகம் செய்து காட்டுகிறான்.

## மிதிலை அரசு

அடுத்துக் காணப்படும் அரசு மிதிலை அரசு. மிதிலை அரசைப் பற்றி விரிவான செய்திகள் இல்லை. மிதிலை அரசு புகழ்மிக்க அரசு. மிதிலை அரசன் சனகன் இராமகாதையில் பேசப்படுகிறான். சனகனை 'ராஜரிஷி' என்று கூறுகிறார்கள் சிறந்த அறிஞர்கள். சனகன் வரலாற்றிலும் புகழ்பெற்றவன். சனகனின் தலைநகரம் மிதிலை. செல்வச் செழிப்பின் காரணமாக மிதிலையில் தெருக்களில் ஆடவரும் மகளிரும் வெறுத்துப்போட்ட பொன்னணிகள் குவிந்து கிடந்தன. மிதிலை நகரத்து இளைஞர்கள் வெஞ்சினமே உருவு

கொண்டனையர். ஆயினும் வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் நெஞ்சினையும் பெற்றிருந்தனர். அகழியும் அரணும் ஓங்கி உயர்ந்த மாடங்களும் அமைந்தது மிதிலை என்று கூறுவதால், மிதிலை செல்வ வளத்தில் சிறந்திருந்தது என்பது புலனாகிறது.

## கங்கைக்கரை அரசு

இராமன், தந்தையின் ஆணைப்படி முடி துறந்து வனத்தில் பயணம் செய்யத் தொடங்கினான். இராமன் பயண வழியில் கங்கைக் கரையை அடைகின்றான். கங்கைக் கரையின் வடகரையில் இரவு தங்குகின்றான். உடன் சீதையும் இலக்குமணனும் உள்ளனர். கங்கைக் கரையில் வேடுவகுல அரசு ஒன்று அமைந்திருந்தது. அதன் தலைவன் குகன். ஆயிரம் படகுகளுக்கு உரிமை உடையவன். ஆழ நீர்க் கங்கை போல் நெடிய உருவினன்; நெடுந்தானை உடையவன்; முரட்டு வடிவினன்; சினம் இல்லாத போதும் அவன் நெருப்பைப் போன்ற கண்ணினன்; கையில் வில்லும் இடையில் வாளும் கொண்டவன். 'குகன்' என்றும் 'கங்கை நாவாய்க்கு இறை' என்றும் கம்பன் இவனைக் குறிப்பிடுகின்றான்.

இவன் இராமனைக் காணும் விருப்பினனாய்த் தேனும், மீனும் திருத்தி எடுத்துக் கொண்டான். இராமனைக் காண நெடுந்தானை சூழச் சென்றான். குகனுடைய சுற்றம் உடன் வந்தது. இராமன் இருக்கும் இடத்தை அண்மித்த வுடன் நெடுந்தானையையும் சுற்றத்தினையும் உடன் வராத வாறு நிற்கப் பணித்தான். அதுமட்டுமல்ல, தன்னிடமிருந்த வில்லையும், வாளையும் ஒதுக்கிவிட்டுத் தனிமையில்-தனி மனிதனாகக் கருவிகள் சுமக்காத உடலையும் இராமன்பால் கொண்ட அன்பு நெஞ்சத்தினையும் சுமந்துகொண்டு, இராமன் இருக்கும் இடத்திற்குச் செல்கின்றான் குகன். போர்க் குகன், ஆயிரம் நாவாய்க்குரிய தலைவன். ஆயினும்

அடக்கம், எளிமை, பத்திமைப் பண்பு மிகுந்தவன். இராமனைக் கண்ணினால் நோக்கிக் கனிந்தனன்; மண்ணுறப் பணிந்து வணங்கினான். கையினால் வாய் புதைந்து நின்றான். இராமனை, தன் உயிர் தந்து காப்பேன் என்று உறுதி கூறினான்; ஆனால் இராமன் 'நீ இந்த உலகை முழுவதும் உடையாய்' என்று சொல்லி 'நான் என்றும் உனக்கு உரிமை யுடையேன்' என்று ஆறுதல் கூறினான். ஆக, குகன் நெடுந்தானையுடைய அரசனாக இருந்தும் அவனுடைய எளிமையை நோக்கும்போது, அமைதி தழுவிய அரசு கங்கைக்கரை அரசு என்று தெரியவருகிறது.

"புரவலன் போலும் தோற்றம் உறழ் கொள
இரவன் மாக்களின் பணி மொழி பயிற்றி'

என்ற சங்கப் பாடலுக்கு இலக்கணமாகக் குகன் அமைந்திருந்தான்.

போர்க் குகனின் படகுத் துணைகொண்டு இராமன் கங்கையைக் கடக்கின்றான். குகனை 'யாதினும் இனிய நண்ப' என்று நட்புரிமை கொண்டாடுகின்றான். இராமன் செல்லும் இடத்தில் தனது உயிர்மேவ, குகன் தங்கினான்.

அசோகவனத்தில் சிறையிருந்த சீதை, பழைய நிகழ்வு களை நினைவு கூர்கிறாள். அந்தப் பழைய நிகழ்வுகளில் சீதையின் மனத்தில் பசுமையாக நின்றது. இராமன் குகனை 'யாதினும் இனிய நண்ப' என்று அழைத்துப் பாராட்டியது ஆகும். சீதை, இராமன் குகனைத் தோழமையாகக் கொண்ட நிகழ்ச்சியை,

ஆழ நீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு. 'எம்பி நின் தம்பி. நீ
தோழன்; மங்கை கொழுந்தி' எனச் சொன்ன
வாழி நண்பினை உன்னி, மயங்குவாள் (கம்பன்–5091)

என்று நினைந்து பார்க்கிறாள்.

இ.V.17.

மனித வாழ்க்கையில் பெறும் பேறுகளில் சிறந்தது நட்பு. 'செயற்கரிய யாவுள நட்பினது போல்' என்று வள்ளுவம் கூறும். நட்பு, பழக்கத்தாலேயே வளரும்; பழக்கத்தாலேயே நிலைபெறும். ஆனால், குகன் போன்ற உத்தமர்களுக்கு நன்மை அடிப்படையில் நட்புத் தோன்று கிறது. எல்லாம் வல்ல கடவுளே, நம்பியாரூரருடன் தோழமை யுறவு கொண்டதை ஓர்க. நட்பில்லா வாழ்க்கை சுவையற்ற தாகவும் இறுதிக் காலத்தில் பயனற்றதாகவும் போய்விடும். காட்டிற்கு வந்த இராமன், தோழமைத் தம்பியர் உறவுகளைத் திசைதோறும் வளர்த்துக் கொண்டு வலிமை பெற்றான்; அமைதி பெற்றான்; ஆறுதல் பெற்றான். குகனுக்கும் இராமனுக்கும் இடையில் வளர்ந்த நட்பு வழிப்பட்ட அன்பு இருதய சுத்தமானது; அர்ப்பணிப்புத் தன்மையுடையது. அவர்களுடைய நட்பு எல்லையற்றது-இன்றும் நட்புக்கு எடுத்துக்காட்டு குகன்தான் — இன்றுவரை வேறோர் உதாரணம் — சான்று கிடைக்கவில்லை.

## கிட்கிந்தை அரசு

அடுத்து, இராமன் அடைந்த நாடு கிட்கிந்தை. இஃது ஒரு அரசு: வானர அரசு. வானர அரசு என்றாலும் ஒரு அரசுக்குரிய அமைப்பு. மந்திரி சபை முதலியன அமைந் திருந்ததாகக் கம்பன் கூறுகின்றான். சுக்கிரீவன் இரண்டு தடவை மந்திரி சபையைக் கூட்டி ஆலோசனை செய்ததாக இராமகாதை கூறுகிறது. முதல் மந்திரி சபைக் கூட்டம் இராம - இலக்குமணர்களைச் சந்திப்பது குறித்து நடந்தது. இக்கூட்டத்தில் இராம - இலக்குமணர்களைச் சந்திக்கும்படி சுக்கிரீவன் கேட்டுக் கொள்ளப்படுகிறான். இந்த மந்திரி சபை, சுக்கிரீவன் வாலியால் முடி பறிக்கப்பெற்று மலைக் குகைகளில் வாழ்ந்த போது கூடியது என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

இலக்குவன் கிட்கிந்தைக்கு வந்த பொழுது, கிட்கிந்தை அரசிடம் வலிமை வாய்ந்த வானரப்படை இருந்தமையை இராமன் முன் அணிவகுத்து நிரூபணம் செய்கின்றான் சுக்கிரீவன். இராமனும் இலக்குமணனும் வானர சேனையின் அளவையும் ஆற்றலையும் கண்டு பிரமிக்கின்றனர் அல்லது அதிசயிக்கின்றனர்.

கம்பனின் படைப்பில் சுக்கிரீவன் நல்ல பாத்திரம், மிகவும் உத்தமமான பாத்திரம். வாலிக்கும் மாயாவி என்ற அவுணன் ஒருவனுக்கும் போர் மூண்டது. போரிட்டுக் கொண்டே மலையின் குகையில் நுழைந்தனர். பல காலம் வாலி திரும்பவில்லை. வாலியொடு பொருந்திய அவுணனும் வரவில்லை. சுக்கிரீவன், வாலி அந்தப் போரில் மாண்டிருப் பானோ என்று ஐயப்பட்டான். 'நான் குகைக்குள் சென்று அண்ணனைத் தேடுவேன். அவன் இறந்து விட்டிருந்தால் மாயாவியைத் தேடிச் சென்று அழிப்பேன். அஃது இயலாவிடின் உயிர் விடுவேன்' என்று குகைக்குள் செல்ல முயன்றான். ஆனால் மற்றவர்கள் அவனுக்குச் சமாதானம் கூறித் தடுத்து அரசாட்சியை ஏற்கச் செய்தனர். வாலியை மாயாவி கொன்றிருந்தால் அவன் குகை வாசல் வழி மேலேறி வருவான் என்று பயந்து மலைகளைக் கொண்டு குகை வாசலை அடைத்து வைத்தனர். எனவே, வாலி வரக் கூடாது என்றோ, வாலியின் ஆட்சியைத் தான் கவர்ந்து கொள்ள வேண்டும் என்றோ சுக்கிரீவன் எண்ணவில்லை. எதிர்பாராமல் வாலி மீண்டும் வந்தபோது, சுக்கிரீவன் ஆட்சி செய்வதைக் கண்டு சினம் கொண்டான்; சுக்கிரீவனை, அடித்து விரட்டினான். சுக்கிரீவன் மனைவி உருமையைக் கவர்ந்து கொண்டான். எதிர்பாராமல் நடந்த சம்பவங் களைத் தேர்ந்து தெளிதல் வாலியிடத்தில் இல்லாதது ஒரு குறையே. குற்றமற்ற சுக்கிரீவன் துன்பத்திற்கு ஆளானான். பின் இராமனால் மீட்சி ஏற்பட்டது.

கிட்கிந்தையில் சமுதாய அமைப்பு இருந்ததா? குரங்கினமானாலும் கம்பன் மானுடம் போலவே அமைத்துப் பாடுகிறான்.

கிட்கிந்தா நாட்டில் சொல்லின் செல்வனாகிய அனுமன், சாம்பவான், அங்கதன் முதலிய சிறந்த பாத்திரங்களையும் அந்தப் பாத்திரங்களின் இயல்புகளையும் திறன்களையும் அறிந்து அனுபவிக்க முடிகிறது. ஆதலால், கிட்கிந்தையில் சமுதாய அமைப்பும் உயர்ந்து விளங்கியது என்று நம்பலாம்.

## இராமன் கூறிய அரசியல் நெறி

கிட்கிந்தை அரசு எவ்வளவுதான் வலிமையுடையதாக இருந்தாலும் ஆங்கு உள்நாட்டுச் சண்டை நிலவியது; பதவிச் சண்டை நடந்தது. வாலி, சுக்கிரீவனிடமிருந்த அரசையும், சுக்கிரீவன் மனைவி அருமருந்தன்ன உருமையையும் கூடக் கவர்ந்து கொண்டான். பின் இராமனின் உதவியால் அனுமனின் வழிகாட்டுதலுக்கிசைய, வாலியைக் கொன்று சுக்கிரீவனுக்கு இராமன் முடி சூட்டுகிறான். முடி சூட்டியதோடன்றி ஒரு நல்ல அரசியல் அறிவுரையையும் வழங்குகின்றான்.

***'வாய்மைசால் அறிவின் வாய்த்த மந்திர மாந்தரோடும்***
***தீமைதீர் ஒழுக்கின் வந்த திறத்தொழில் மறவரோடும்***
***தூய்மைசால் புணர்ச்சி பேணி, துகளறு தொழிலை ஆகி***
***சேய்மையோடு அணிமை இன்றி தேவரின் தெரிய நிற்றி.'***

(கம்பர் – 4122)

வாய்மையோடு பொருந்திய அறிவுரை தரும் அமைச்சர் பெருமக்களோடும், தீமை ஒன்றும் செய்யாத மறவரோடும் தூய்மையான உறவைப் பேணி வளர்த்துக் கொள்க என்கிறான் இராமன். அறிவு, கூர்மையாகும் பொழுது பொய்யும் தீமையும் நிகழ்தல் உண்டு. ஆதலால்

'வாய்மையொடு பொருந்திய அறிவு' என்றான் போலும்! அமைச்சர்களுடனும் மற்றவர்களுடனும் நல்ல உறவு பேணுதல் வேண்டும். அவர்களை விட்டு அகலவும் கூடாது. அதிகமாக அணுகவும் கூடாது என்பது அரசியல் நெறிமுறை.

பகைமை ஒரு தீய பண்பு. மனிதகுலம் தோன்றிய நாள் தொடங்கிப் பகை இருந்து கொண்டிருக்கிறது; வளர்ந்து கொண்டு வருகிறது. ஏன் பகைமை? சண்டை? பொருள் காரணமாகப் பகைமை வரும். பொதுவுடைமை வந்தால் பகைமை நீங்குமா? நீங்காது என்பது பொதுவுடைமை நாடுகள் தந்துள்ள படிப்பினை. அழுக்காறு அகன்றால் பகைமை வராது தவிர்க்கலாம். பழங்காலத்தில் மூன்றின் அடிப்படையில் பகைமை தோன்றியது. அவை முறையே பொன், பெண், மண் அல்லது மண், அதிகாரம், பெண் என்றும் கூறலாம். இன்று இவற்றுடன் பதவியும் புகழும் சேர்ந்து கொண்டிருக்கின்றன. பகைமைக்கு மூலகாரணம் அழுக்காறேயாம். இவ்வுலகில் எந்தக் காலத்திலும் பகைமை, பகைமையால் தணிந்ததாக வரலாறில்லை. பகைமை அன்பினாலேயே தணியும். இதுவே அறநெறி. பகைமை தீ என்றால், அத்தீயைத் தணிக்கும் தண்ணீர் நட்பு.

> பகை உடைய சிந்தையார்க்கும்
>     பயன்உறு பண்பின் தீரா
> நகையுடை முகத்தை ஆகி
>     இன் உரை நல்கு (கம்பன் – 4123)

என்று இராமன் சுக்கிரீவனுக்கு அரசியல் நெறி உணர்த்தினான்.

'தீயன சிந்தித்தல் ஆகாது. பகையே யாயினும் நீ திரும்ப இனியனவே கூறு. சிறியர் என்று கருதித் தீமை செய்யாதே, துன்புறுத்தாதே' என்று கூறிய இராமன், தன் வாழ்க்கையையே முன்னுதாரணமாக எடுத்துக் கூறுகிறான். 'நான் நெறிமுறை பிறழ்ந்து கூனிக்கு ஒரு தீமை செய்ததால்,

இன்று நாடு விட்டுக் காடு வந்து, அரசை இழந்து, மனைவியை இழந்து அல்லலுறுவதைச் சான்றாக எடுத்துக் கொள்' என்று இராமன் கூறும் அறிவுரையை உன்னுக.

'சிறியர் என்று இகழ்ந்து நோவு
செய்வன செய்யல்; மற்று, இந்
நெறி இகழ்ந்து யான் ஓர் தீமை
இழைத்தலால் உணர்ச்சி நீண்டு
குறியது ஆம் மேனி ஆய
கூனியால் குவவுத் தோளாய்
வெறியன எய்தி, நொய்தின்
வெந்துயர்க் கடலின் வீழ்ந்தேன்" (கம்பன் – 4126)

என்பான் இராமன்.

கூனிக்கு, நான் இழைத்த தீமையால் கூனியின் பகைமை உணர்ச்சி நீண்டது. ஆயினும் காலம் வந்துழி அந்தச் சாதாரணக் கூனியும் கூடப் பகை முடித்துக் கொள்ள முடிந்தது. அதனாலேயே நான் நாடு இழந்தேன்; காடு வந்தேன்; மனைவியை இழந்தேன்!" என்று இராமன் கூறுவதால், கூனிக்கு இழைத்த தீமை அவன் நெஞ்சத்தை உறுத்திக் கொண்டிருந்தது என்பது தெரிகிறது. ஆனால், அந்த உறுத்தல் ஏன் செயலாக்கம் பெறவில்லை. காரணம் அவள் சிறியள் என்ற எண்ணம் தானே! இன்று நமது நாட்டு அரசியலில் – ஆட்சியில் – அல்லற்படுவோர் சிறியோர்தாம் என்பதை எவரேனும் மறுக்க இயலுமா? ஏன் நமது அன்றாட வாழ்விலும் கூடப் பெரியோர் பெரும்பிழை செய்தாலும் பார்த்தும் பாராமல் இருக்கிறோம். சிறியோர் ஒரு சின்னத் தவற்றைச் செய்தாலும் சினந்து வீழ்கின்றோம். இது தவறு என்று சுக்கிரீவனுக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் இராமன் வாயிலாகக் கம்பன் அறிவுறுத்துகின்றான்.

காமம் கொடிது. நாடாள்வோர் பெண் வழிச் சேறல் ஆகாது என்றார் திருவள்ளுவர். இங்கு இராமனும் 'மங்கையர்

பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரணம்' (அரசியற்படலம்-12) என்று கூறுகிறான். இதற்கு வாலியும் தயரதனும் சான்றாவர் என்பது உணர்க. நமது தலைமுறையில்கூட இத்தகு நிகழ்வுகள் உண்டு. பரபரப்பான உலகம் ஆதலால் நினைவில் தங்கவில்லை. மக்கள் மறந்து போயினர். 'தாய் ஒக்கும் அன்பில்' என்று முன்கூறிய கம்பன் இங்கு இராமன் வாயிலாகத் தம்மைத் தாங்கி நிற்பாரைத் தாங்குதல் வேண்டும் அதாவது யாதொரு துன்பமும் வராது பாதுகாத்தல் வேண்டும் என்று அறிவுரை கூறுகின்றான். நாடாள்வோருக்கு அறமே உயிர்; உறுதி; ஆக்கம்; பயன். அறம் கெடுமாயின் நாடாள்வோர் வாழ்நாள் கெடும். அவர்களுக்கு அறமே கூற்று. கோவலனைக் கொன்ற பாண்டியன் நெடுஞ்செழியன் வரலாற்றை நினைவிற் கொள்க.

ஆக, கிட்கிந்தை அரசில் அரசின் வடிவம் இருந்தது. வலிமை இருந்தது; படை வலிமை இருந்தது; ஆயினும் உட் சண்டைகள் இருந்தன; அறம் மெலிந்து இருந்தது. இதற்குக் காரணமாகிய வாலியின் வதைக்குப்பின் கிட்கிந்தை அரசு நிமிர்ந்து நிற்கிறது. கிட்கிந்தை நாட்டுக்கு அரசன் சுக்கிரீவன். ஆனாலும் அந்நாட்டு அரசு நிலைபெற்று உயர அனுமனும் அங்கதனுமே கருவிகள் என்பது காவியம் உணர்த்தும் உண்மை.

## இலங்கை அரசு

கடைசியாக நாம் காண இருப்பது இலங்கைப் பேரரசு. இலங்கைப் பேரரசு சிறந்த முறையில் இயங்கியது என்று கருதுவோரும் உண்டு. 'இல்லை, இல்லை! இலங்கை அரசு அரக்கத் தன்மையுடையது' என்று கூறுவோரும் உண்டு. எது எப்படியாயினும் இலங்கை அரசு, பேரரசு; வலிமை வாய்ந்த அரசு. இலங்கை அரசின் தலைநகர் அமைப்பை இராமனே கண்டு வியப்புற்றான் என்று கம்பன் பாடுவது, இலங்கையில் இருந்த அரசு பேரரசு என்பதை உறுதி செய்கிறது.

அயோத்தியில் மக்கள் வாழ்ந்ததைப் போலவே இலங்கையிலும் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர் என்பதை,

*'களிக்கின்றார் அல்லால் கவல் கின்றார்*
*ஒருவரைக் காணேன்!'* (கம்பன் - 4864)

என்று கம்பன் அனுமன் வாயிலாகக் கூறுவதை ஓர்க. இராவணனின் இலங்கை நகர அமைப்பு மாட மாளிகைகள், அகழிகள், அரண்கள் ஆகியன இலங்கைப் பேரரசு வன்மையில் அமைந்த ஒரு பேரரசு என்பதை உணர்த்துகின்றன. அதுமட்டுமல்ல; இராவணனது வலிமை, தேவர்களை எல்லாம் ஏவல் கொண்டு விளங்கிய பேரரசு என்பது இராமகாதை வாயிலாக அறியக் கிடக்கும் செய்தி.

## இராவணன் செயல்முறைகள்

இங்ஙனம் சிறந்து விளங்கிய பேரரசுக்குக் கூற்றாக வந்தாள் சூர்ப்பணகை. சூர்ப்பணகை இராமனை நெறிமுறை தவறி விரும்பி, மூக்கறுபட்டாள். மூக்கறுபட்ட வேதனையால் தனது மூக்கை அறுத்த இராமனைப் பழி வாங்கத் திட்டமிடுகிறாள். இராவணன் அவையில் அழுகிறாள். சூர்ப்பணகையின் நாடகத்திற்கு முதலில் இராவணன் உடன்படவில்லை. 'நீ என்ன செய்தனை?' என்றே இராவணன் கேட்கிறான். சூர்ப்பணகை சீதையைப்பற்றி வருணித்த செய்திகள் தொடக்கத்தில் இராவணனைக் கவர்ச்சிக்கவில்லை. கரைப்பார் கரைத்தால் கல்லும் மெள்ள மெள்ளக் கரையுமல்லவா? இராவணன் மனம் திரிந்தது. சீதையைக் கவர்ந்து வரத் திட்டமிட்டு மாரீசனை மாயமானாக அனுப்பி, தான் சந்நியாசி வேடத்தில் சென்று, சீதையைத் தனிமைபடச் செய்து எடுத்து வருகிறான். சீதை இருந்த பர்ணசாலையுடன் - ஒரு யோசனை பரப்பளவு உள்ள மண்ணுடன் - எடுத்து வருகிறான். சீதையைக் கைபடாமல்

மண்ணோடு எடுத்து வந்ததாகக் கூறுவது கவிச்சக்கரவர்த்தி கம்பனின் உத்தி. இராவணன் எளிதில் நெறிமுறை பிறழாதவன் என்று கம்பன் உணர்த்த ஆசைப் பட்டதின் விளைவு இந்த உத்தி! சீதையைக் கவர்ந்த இராவணன் தனது அரண்மனையிலோ அந்தப்புரத்திலோ அவளைத் தனிமைப் படுத்தி வைக்காமல், திறந்த வெளியில் அசோகவனத்தில் - பல மகளிர் சூழக் காவலில் வைத்தது இராவணனுடைய நடையைப் பற்றிய ஆய்வுக்குரிய செய்தி.

## சீதை உணர்த்திய அரசியல் நெறி

சீதையை இராவணன் வேண்டுகின்றான். அப்போது சீதை இராவணனுக்கு ஒரு அரசியல் நடைமுறையை உணர்த்துகின்றாள். ஆட்சியாளர்களை - அரசை - விமர்சனம் செய்பவர்களும் அரசின் தவறுகளைக் கடிந்து கண்டனம் செய்பவர்களும் இல்லாது போனால் அந்த அரசு அழியும் என்பது திருக்குறள் கருத்து.

'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானும் கெடும்'

என்பது திருக்குறள்.

சீதை இராவணனை நோக்கி,

"கடிக்கும் வல் அரவும் கேட்கும்
மந்திரம்; களிக்கின் றோயை
'அடுக்கும், ஈ(து) அடாது' என்று ஆன்ற
ஏதுவோடு அறிவு காட்டி
இடிக்குநர் இல்லை; உள்ளா;
எண்ணியது எண்ணி உன்னை
முடிக்குநர்; என்ற போது
முடிவு அன்றி முடிவது உண்டோ" (கம்பன்–5204)

என்று சீதை, இராவணனுக்கு அரசியல் நெறிமுறையை உணர்த்தியதை ஓர்க, உணர்க.

## தம்பியர் தகவுரை

இராவணனின் உரிமைச் சுற்றத்தினர் இராவணனின் செயலை அறமாகாது, தகாது என்றே கூறினார்கள். தூதுவனாக வந்த அனுமனை இராவணன் கொல்ல முயன்றபோது வீடணன் தலையிட்டுத் தடுத்து நிறுத்தி அறிவுரை கூறுகின்றான்.

*'அந்தணன், உலகம் மூன்றும்*
*ஆதியின் அறத்தின் ஆற்றல்*
*தந்தவன், அன்புக்கு ஆன்ற*
*தவநெறி உணர்ந்து, தக்கோய்!*
*இந்திரன் கருமம் ஆற்றும்*
*இறைவன் நீ; "இயம்பு தூது*
*வந்தனென்" என்ற பின்னும்*
*கோறியோ, மறைகள் வல்லாய்!'* (கம்பன்–5918)

என்பது வீடணன் அறிவுரை.

இலங்கைக்கு அனுமன் வந்து போனபின், இராவணன் தனது மந்திரிசபையைக் கூட்டி ஆலோசனை செய்கின்றான். மந்திரிசபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட கும்பகருணன் இராவணன் செய்கையை மறுக்கின்றான்; கண்டிக்கின்றான்.

*ஆசு இல் பர தாரம்அவை அம் சிறை அடைப் பேம்*
*மாசு இல் புகழ் காதலுறுவேம்; வளமை கூரப்*
*பேசுவது மானம்; இடை பேணுவது காமம்;*
*கூசுவது மானுடரை; நன்று, நம் கொற்றம்!*

(கம்பன் – 6122)

இப்பாடலில் கும்பகருணன் 'குற்றமற்ற பிறருடைய மனைவியைச் சிறையில் வைப்பது நல்லரசுக்குரிய நடை

முறையன்று, காமமும் மானமும் ஓரிடத்தில் இருத்தல் இயலாது, என்றெல்லாம் கடிந்து கூறுகின்றான். ஆதலால், திருக்குறள் அரசியலில் கூறுவதுபோல, மடவார் கற்புக்கு அரசு காவலாக விளங்கவேண்டும். அங்ஙனம் இன்றி ஆள்வோரே மற்றவர் மனைவியைச் சிறையில் வைப்பாராயின் அவ்வரசு எங்ஙனம் நல்லரசாக விளங்க முடியும்? என்பது கும்பகருணன் வினா.

வீடணன் இராவணனை எங்ஙனம் மதித்தான், உறவு கொண்டான் என்பதை,

> "எந்தை நீ; யாயும் நீ; எம்முன் நீ; தவ
> வந்தனைத் தெய்வம் நீ; மற்றும் முற்றும் நீ;
> இந்திரப் பெரும் பதம் இழக்கின் றாய்!" என
> நொந்தனென் ஆதலின் நுவல்வது ஆயினேன்.

(கம்பன்–6143)

என்ற பாடலால் அறியலாம். இவ்வளவு பெருமதிப்பை வீடணன் இராவணனிடம் கொண்டிருந்தாலும் இராவணன் சீதையைக் கவர்ந்த செய்கையைக் கண்டிக்கத் தவறவில்லை. அதுமட்டுமன்று, இராவணனையே துறந்து விடுகின்றான். கும்பகருணன் செஞ்சோற்றுக் கடன் அடிப்படையில் பொருகளத்தில் போரிட்டு உயிரிழக்கிறான்.

## இந்திரசித்து அறிவுரை

இராவணனை அவனுடைய மகன் இந்திரசித்துவும் இடித்துக் கூறுகின்றான். ஆனால், இராவணன்தான் திருந்த வில்லை. இராவணனுடைய உரிமைச் சுற்றத்தினராகிய கும்பகருணன், இந்திரசித்து ஆகியோர் இராவணன் சீதையைச் சிறைப்படுத்தியிருப்பது தவறு மட்டுமன்று, அறநெறி பிறழ்ந்த பாவமும் ஆகும் என்று உணர்ந்திருந்தனர், இராவணனுக்கும் உணர்த்தினர். ஆனால், இராவணன் திருந்தியபாடில்லை. இவர்களுக்கு உறவா? அறமா?

கடமையா? என்ற போராட்டம். கடைசியில் உறவு நலமே வெற்றி பெற்றது. உறவுக்காகப் போராடி இராவணனுக்காகச் செருகளத்தில் மரணத்தைத் தழுவ அனைவரும் ஆயத்தமாயினர். இராவணன் சுத்த வீரன். ஆதலால், அடைக்கலம் புக நாணப்படுகிறான். இராமனின் பகையை "நல்ல பகை" என்று பாராட்டுகின்றான்.

'என்னையே நோக்கியான் இந் நெடும்பகை தேடிக் கொண்டேன்' என்கிறான்; தனித்து நின்று போராடுகின்றான்.

இராவணன் மரணம் உறுதியான பிறகும் கூட, அவன் நெறிமுறை பிறழ்ந்த காமத்தின் வழி செல்லாமல் செருகளத்தில் போரிட்டு மாயவே விரும்பினான். இறுதிநாள் செருகளத்துக்குச் செல்லும்போது, 'இன்று போர் முடியும். போரின் முடிவில் இராமனின் மனைவி சீதை வயிற்றில் அடித்துக்கொண்டு அழுவாள் அல்லது என் மனைவி மண்டோதரி வயிற்றில் அடித்துக்கொண்டு அழுவாள்' என்று கூறிவிட்டுப் போர்க்களத்திற்குப் புறப்படுகின்றான்.

**"மன்றல் அம் குழல் சனகிதன் மலர்க் கையான் வயிறு**
**கொன்று, அலந்தலைக் கொடு, நெடுந் துயரிடைக் குளித்தல்;**
**அன்று இது என்றிடின், மயன் மகள் அத்தொழில் உறுதல்;**
**இன்று, இரண்டின் ஒன்று ஆகுவென், தலைப்படின்' என்றான்.**

(கம்பன்–9667)

இறுதிக் காலத்தில் இராமனின் மனைவி சீதை என்பதை இராவணன் உறுதிப் படுத்துகின்றான். இராவணன் சீதையை வலிய அணுகாததற்குக் காரணம், விரும்பாத ஒரு பெண்ணை இராவணன் தீண்டுவானாகில் அவனுடைய தலை வெடிக்கும் என்ற சாபம் உண்டு என்று திரிசடை வாயிலாகக் கூறப்படுகிறது. மரணம் உறுதியான நிலையில், காமவெறியனாக இராவணன் இருப்பின், சாபத்தைப்

பற்றியா யோசித்திருப்பான்? அது அன்று. இராவணன் முற்றிலும் கெட்டவன் அல்லன். சராசரி மனிதனுக்குள்ள பலவீனம் இருந்தது உண்மையாயினும், அரசியல் நெறி பிறழ்ந்து சீதையைத் துன்புறுத்தவோ கட்டாயப்படுத்தவோ இராவணன் விரும்பவில்லை என்பதே உண்மை. ஆக, ஒரு பெரிய இலங்கைப் பேரரசு ஒரு சிறு தீப்பொறியால் அழிந்தது. பிறர் மனை நயந்த தீமையால் வன்மை பொருந்திய பேரரசு அழிந்தது. இலங்கைப் பேரரசு வன்மை சார்ந்த பேரரசு, வன்மையில் முடிந்த பேரரசு. அயோத்திப் பேரரசு அறம் சார்ந்த பேரரசு. அது வெற்றி பெற்றது அறநெறியாலேயே!

கம்பனின் இராமகாதை பல்வேறு அரசுகளை நமக்கு அறிமுகப்படுத்தியது. அவற்றில் இலங்கைப் பேரரசு திருந்தாமல், வல்லாண்மை மீதிருந்த நம்பிக்கையால் அழிந்தது. கிட்கிந்தை அரசு திருந்தி வரலாற்றிலும் காவியத்திலும் இடம் பிடித்துக் கொண்டது. கங்கைக் கரையரசும், மிதிலை அரசும் விவாதங்களைக் கடந்த அரசுகளாக விளங்கின. அயோத்திப் பேரரசு, குறைகளும் நிறைகளும் உடைய பேரரசாக விளங்கி, எந்தச் சூழ்நிலையிலும் அறம் சார்ந்த நெறிமுறைகளையே பின்பற்றியதால் வெற்றி பெற்றது. நம்முடைய காலத்திலும் கம்பன் அடிச்சுவட்டில் அறஞ் சார்ந்த அரசு காண்போமாக.

## சமூகம்

அரசியல், சமுதாயம், பொருளாதாரம், இவை மூன்றும் ஒன்றிற்கு ஒன்று காரணமாக அமைவன. ஒன்று பிறிதொன்றுக்கு அரணாக அமைவது. ஆதலால் கோசல நாட்டில் சமுதாய அமைப்பு எப்படி இருந்தது, எனச் சிந்திக்கலாம்.

பொதுவாக மனித குலத்தில் சமுதாயம் உருவாவது எளிதன்று. ஆதி பொதுவுடைமைக் காலத்தில் பகைமை

அதிகம் இருந்ததில்லை. ஆனால், சமுதாய அமைப்பு உருவாகி இருந்தது என்று நம்ப இயலவில்லை. நம்முடைய புராணங்களைப் படித்தாலே தெரிகிறது - சமுதாய அமைப்புத் தோன்றவில்லை என்பது. தேவர்களுக்குள்ளேயே சண்டை, தேவர்களுக்கும் அசுரர்களுக்குமிடையில் சண்டை, கடவுள்களுக்கிடையில் சண்டை நடந்ததாகக் கூடப் புராணங்கள் கூறும். கிரேக்க ஞானி சாக்ரட்டீஸ் 'நமது பிள்ளைகளுக்குக் கடவுள் போட்ட சண்டைகளைக் கற்றுக் கொடுக்கக் கூடாது' என்றான். ஆம்! இந்தச் சமுதாய அமைப்பில் மனிதர்கள் ஒன்றாகச் சேராமல் நாடு, மொழி, மதம், இனம், சாதி முதலியவற்றின் பெயரால் பிரிந்து பிரிந்து தம்முள் பொருதுச் சீரழிந்து போயினர்.

அலைகடலில் தண்ணீர் வெள்ளம், பல கோடிக் கணக்கான திவலைகளையுடையது. அந்தக் கோடிக் கணக்கான நீர்த் திவலைகள் ஒன்றாக இருக்கும் வரையில் கடலுக்குக் கடலின் வடிவம், தண்மை, முத்து ஈனும் பண்பு உண்டு. ஆனால், அக்கடலிலிருந்து ஒரு துளித் தண்ணீர் பிரிந்து கரையில் வீழ்ந்தால் அந்தத் துளிக்கு என்ன நேரிடும்? ஒரு சில நொடிகளுக்குள்ளாகவே கதிரவன் ஒளியில் காய்ந்து மறைந்து போகும். அதுபோல மனிதன் பலருடன் கூடிச் சமுதாயத்தின் ஒரு பகுதியாகப் பிரிக்கப்பட முடியாமல் - பிரியாமல் - வாழ்ந்தால் சமுதாயம் அமையும்; சமுதாயம் உருவாகும். மனிதக் கூட்டம் சமுதாயமாகாது. இலட்சிய அடிப்படையும் உறவும் இன்றிக் கூட்டமாகக் கூடும் மனிதக் கூட்டம்! அவ்வளவு தான். கூட்டம் வேறு, கூடி வாழ்தல் வேறு. கூடி வாழ்தலே சமுதாயம்.

இப்படிக் கூடி வாழும் பண்புடைய மக்களையே பாவேந்தன் பாரதிதாசன்.

"பாரடா உனது மானிடப் பரப்பைப்
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்

*'என்குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய*
*மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்!*
*அறிவை விரிவுசெய்; அகண்ட மாக்கு!*
*விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!*
*அணைந்து கொள்! உன்னைச் சங்கம மாக்கு*
*மானிட சமுத்திரம் நானென்று கூவு!"*

என்றும்,

*"இமயச் சாரலில் ஒருவன் இருமினால்*
*குமரியி லிருந்து மருந்துகொண்டு ஓடினான்"*

என்றும் கூறினான்.

ஒரு சிறந்த சமுதாய அமைப்பின் ஒழுகலாறு எப்படி அமையும் என்று இவற்றின் மூலம் காட்டியுள்ளான். ஒரு சிறந்த சமுதாய அமைப்பு நமது உடலின் பொறிகள், புலன்களைப் போல ஒத்துழைக்கும். இத்தகைய சமுதாய அமைப்பு இன்னும் இந்தியாவில் பூரணமாக உருவாகவில்லை. எல்லோரும் இந்தியராகும் நாளே இந்திய சமுதாயம் உருவாகும் நாள். கோசல நாட்டில் முழுமையான - பூரணமான சமுதாயம் உருவாகவில்லை என்றாலும் ஒரு நல்ல சமுதாய அமைப்புக்குரிய அமைவுகள் இருந்தன, சில துரதிர்ஷ்டங்களைத் தவிர!

## கோசல நாட்டுச் சமூகம்

ஆறுகள் ஊருக்கு வளம் சேர்ப்பன; அழகூட்டுவன. கோசல நாட்டை சரயு நதி அழகு செய்கிறது; வளமூட்டி வாழ்விக்கிறது. சரயு நதியை வருணிக்க வந்த கம்பன் கோசல நாட்டு மக்களைக் காட்டிச் சரயு நதியை அறிமுகப்படுத்துகின்றான்.

*ஆசலம் புரி ஐம்பொறி வாளியும்,*
*காசு அலம்பு முலையவர் கண் எனும்*

*பூசல் அம்பும், நெறியின் புறம் செலாக்*
*கோசலம் புனை ஆற்று அணி கூறுவாம்:* (கம்பன் – 12)

*என்றான்.*

*அயோத்தியைத் தலைநகரமாகக் கொண்ட கோசல நாட்டுமக்கள், ஆடவர் – மகளிர் நெறிபிறழாத நேர்மையுடையவர்கள். கோசல நாட்டு மக்களின் நெறி, அறத்தாறு. நேர்மை என்பது நாம் அடிக்கடி கேட்கும் ஒரு சொல். இரண்டு புள்ளிகளை இணைக்கும் கோட்டுக்கு நேர்கோடு என்று பெயர். அதுபோல, சொல்லையும் – செயலையும் தனிப்பட்ட வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் இணைப்பதே நேர்மை எனப்படும். மனமும் சொல்லும், சொல்லும் செயலும் ஒன்றுபடுவது நேர்மை. நேர்மை, உலகியலை நடத்தும் ஒழுகலாறு, மென்ஷியஸ் என்ற சிந்தனையாளன் 'எனது உயிர் எனக்கு மிக அருமையானது. நேர்மையைக் கடைப்பிடிப்பதும் அதைப் போலவே எனக்கு அருமையானது. இரண்டில் ஒன்று எனக்குக் கிடைக்கும் என்றால் எனது உயிரை விட்டு விடுவேன்; நேர்மையைத்தான் கடைப்பிடிப்பேன்!' என்றான். கோசல நாட்டு மக்கள் நேர்மை நெறி பிறழாதவர்கள் என்பது கம்பனின் வாக்கு.*

## அறம் – தருமம்

வாழ்வியலின் அடிப்படைப் பண்புகளை அறம் என்று கூறுவர். தருமம் என்ற வட சொல்லுக்கு நேராக அறம் என்று தமிழில் கூறுவதுண்டு. பொருத்தப்பாடு பற்றி ஆய்வு தேவை.

நெறிப்படி செய்யப்படுதல், ஒழுகலாறு என்று திருக்குறள் கூறுகிறது. தருமம் என்பது நூற்றுக்கு நூறு ஒழுகலாறாக வலியுறுத்தப் பெறுகிறது. எவரையும் மனம், வாக்கு, உடல் ஆகியவற்றால் மறந்தும் துன்புறுத்தாமை, வாய்மை (சத்தியம்) பேணுதல், களவு, காமம், வஞ்சம்,

உலோபகத்தனம் ஆகியவற்றிலிருந்து விடுபடுதல், எல்லோருக்கும் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய வாழ்க்கை வாழ்தல், நூல்களைப் படித்தல், பிறருக்கு உதவுதல், ஆணவத்தை அறவே விலக்குதல், பகிர்ந்துண்ணல் எல்லா உயிர்களையும் தம் உயிர் போலவே பாவித்தல் எல்லா உயிர்களிடத்திலும் கடவுள் உள்ளமையை உணர்தல் இவையெல்லாம் தருமம்.

ஔவையார் 'அறம் செய விரும்பு' என்று கூறும்பொழுது கொடுத்தலையே குறிப்பிடுகிறார். பொதுவாக அற நெறி சார்ந்த வாழ்க்கை போற்றப்படுகிறது. சீனத்துத் தத்துவ ஞானி கன்பூஷியஸ், 'அறமே அரச மரியாதையை விடச் சிறந்தது, என்றார். 'அறத்தின் வழிநிலையில் அஞ்ச வேண்டா' என்பது சேக்ஸ்பியர் வாக்கு. 'அறத்தால் வருவதே இன்பம்' என்பது வள்ளுவம். கோசல நாட்டு மக்கள் அறத்தாற்றில் நின்று ஒழுகியவர்கள். அறம் போல், சரயு நதி கால்கள் வழி ஓடி நாடெலாம் வளர்த்துக் கடலில் கலந்தமையை விளக்கும் பாடல்கள் பலப்பல.

மானம் நேர்ந்து, அறம் நோக்கி, மனு நெறி
போன தண்குடை வேந்தன் புகழ் என,
ஞானம் முன்னிய நான்மறை யாளர்கைத்
தானம் என்னத் தழைத்தது நீத்தமே. (கம்பன் – 16)

என்பது அவற்றுள் ஒரு பாடல்.

## மருதநில மக்கள்

கோசலநாடு மருத நில வளமும், முல்லை நில வளமும் கொழித்த நாடு. அந்த நிலப்பகுதிக்கு ஏற்றவாறு மக்களின் ஒழுகலாறு, பொழுதுபோக்கு, மகிழ்ச்சி முதலியன அமைந்திருந்தன என்று கம்பன் விளக்குகின்றான். மருத நிலம் இயலுக்கும் இசைக்கும் களமாகும். விழாவயர்தலும் மருத நில மக்களின் பழக்கம். கோசல நாட்டு மக்கள் சொற் பொழிவுகள் கேட்டு மகிழும் இயல்புடையோராயிருந்தமை

மகிழ்வுக்குரிய செய்தி. நமது உடலுறுப்புக்களில் - பொறிகளில் எல்லாவற்றிற்கும் கதவுகள் உண்டு. அவை நாம் விரும்பி இயக்கினால் மட்டுமே இயங்கும். ஆனால், செவிகள் அப்படியல்ல. செவிகள் எப்போதும் திறந்த நிலையின; கேட்கும் இயல்பின.

## செவிச் செல்வம்

செவியின் இயக்கம் வாழ்க்கையின் வளர்ச்சிக்குத் தேவை. செவிச் செல்வமாகிய கேள்வியின் பெருமையைத் திருக்குறள் நன்றாக உணர்த்துகிறது. உடன்பாட்டாலும் செவிச் செல்வமாகிய கேள்வியின் அவசியத்தை வலியுறுத்துகிறது; எதிர்மறையாகவும் பேசுகிறது.

*செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்*
*செல்வத்துள் எல்லாம் தலை* (திருக்குறள் - 411)

*'செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்*
*அவியினும் வாழினும் என்'* (திருக்குறள் - 420)

என்ற குறட்பாக்களை எண்ணுக. மேலும் 'கற்றிலனாயினும் கேட்க!' என்றும் அறிவுறுத்துகிறது.

முல்லை நிலத்தில் கால்நடை வளம் நிறைந்துள்ளது. கால்நடைகளை - பால் மாடுகளை - மையமாகக் கொண்டு முல்லை நிலத்தில் வாழ்பவர் இடையர் குலத்தினர்.

## மகளிர் நிலை

கம்பன் கோசல நாட்டு மகளிருக்கு, 'விளைவன யாவையே?' என்று ஒரு வினாத் தொடுக்கின்றான், அதாவது, கோசல நாட்டு மகளிருக்கு வைகலும்-விருந்தோம்பல், வருந்தி எதிர்ப்படுவோருக்கு ஈதல் இவை தவிர வேறு வேலை இல்லையாம். ஏன் வேறு வேலை இல்லை? கல்வி அறிவு இன்மையாலா? இல்லை! இல்லை! கோசல நாட்டுப் பெண்கள் பொருந்து செல்வமும் கல்வியும் பூத்து

விளங்கியவர்கள். செல்வம், தலைமகன் உழைப்பினால் வீட்டிலேயே பூத்து விளங்கியதால் வேறு வேலைக்குப் போக வேண்டிய நிலை மகளிருக்கு இல்லை! இன்றைய நிலை தலைகீழ்த் தடுமாற்றம்! பெண் வேலைக்குப் போகாது போனால் வாழ்க்கையை நடத்த இயலாது. இதனால் இன்று வீட்டு வாழ்க்கையில் மகிழ்ச்சி குறைந்துள்ளது. குழந்தைகள் வளர்ப்பில் கவனக்குறைவு ஏற்பட்டுச் சமூக அமைப்புச் சீர்குலைகிறது. கோசல நாட்டில் நல்லொழுக்கம் உடைய குடிகள் சிறந்து விளங்கியதால் வழி வழி ஒழுக்கமும் வளர்ந்தது.

*பெருந் தடங்கண் பிறைநுத லார்க்கு எலாம்*
*பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்,*
*வருந்தி வந்தவர்க்கு ஈதலும், வைகலும்*
*விருந்தும், அன்றி, விளைவன யாவையே?*

(கம்பன் – 67)

என்ற பாடல் மீண்டும் மீண்டும் நினையத்தக்கது.

## கல்வி நலம்

ஒரு நாட்டின் சிறப்புக்கு அந்நாட்டு மக்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும். கல்வி பெறாத மக்கள் ஒன்றுக்கும் பயன்படார். அர்த்தசாத்திரம் 'கல்வி, மக்களுக்கு அணிகலன்' என்று கூறுகிறது. 'கேடில் விழுச் செல்வம் கல்வி' என்றது வள்ளுவம். 'கல்வி கற்காதவன் ஏன் பிறந்தான்?' – இது பிளேட்டோவின் வினா! 'கற்றல் கேட்டல் உடையார் பெரியார்' என்பது திருஞானசம்பந்தர் வாக்கு. மக்களுக்குச் சக்தியைத் தருவது கல்வி. இந்தக் கல்வி மக்களுக்குக் கிடைக்காது போனால் வாழ்க்கையில் தேக்கம் ஏற்படும். கல்வி மக்களுடைய ஆன்மாவிற்கு உணவு.

'கல்வியும், ஞானமும்' என்று கம்பன் குறிப்பிடுவான். கல்வி அறிவாக உருப்பெறுதல் வேண்டும். கவிச்சக்கரவர்த்தி

கம்பன் பம்பையை வருணிக்கிறான். நடுப்பகுதி நீர் தூய்மையாக வெண்மையாக இருந்தது. இதற்கு அறிவுடையோர் உதாரணம். அறிவுடையோர் ஒரு நிலையினராக இருப்பர்; விளங்குவர். கரையோரத்து நீர் நிறம் மாறிமாறிக் காணப்படுகிறது. இது தமக்கென அறிவு இல்லாதவர்களாக இடத்திற்கு ஏற்ப மாறிமாறி ஒழுகுபவர்களைக் குறிக்கும் என்பான்.

"ஈர்ந்த நுண் பளிங்கு எனத் தெளிந்த ஈர்ம்புனல்
பேர்ந்து, ஒளிர் நவமணி படர்ந்த பித்திகை
சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைச் சேர்தலால்,
ஓர்ந்து உணர்வு இல்லவர் உள்ளம் ஒப்பது'

(கம்பன் – 3709)

என்பது கம்பன் பாடல். ஆதலால் சேரிடம் அறிந்து சேர வேண்டும்.

மனிதப் பண்பு நலனைப் பற்றிப் பேசுபவர்கள் 'மனத் தூய்மையைக் குறித்து நிறையக் கூறுவர். மனத்தில் தூய்மையின்மை இயற்கையா, செயற்கையா? ஆய்வு தேவை. மனம் இயல்பாகத் தூய்மையானதுதான். மனத்துக்குத் தூய்மையின்மை எங்கிருந்து வந்தது? அல்லது தூய்மை எங்கிருந்து வருகிறது? வாழ்நாளில் சுற்றுப்புறச் சூழ்நிலைகளில் நட்பாக, உறவாகக் கிடைக்கும் மனிதர்கள்தாம் ஒருவனுடைய மனத் தூய்மைக்கும் கேட்டிற்கும் காரணம்.

'மனத்துளது போலக் காட்டி ஒருவற்கு
இனத்துள தாகும் அறிவு' (திருக்குறள் – 454)

என்றது திருக்குறள். கம்பனும் 'குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிகட் கெல்லாம்' என்றான்.

கோசல நாட்டு மக்கள் நூற்றுக்கு நூறு கல்வி கற்றவர்கள். கோசல நாட்டில் கல்வி கற்காதவர்கள் இல்லை. இன்று நம்முடைய நாட்டில் கல்வி கற்றவர்கள் எண்ணிக்கை

36.2% இவ்வளவுதான்! கல்லாதாரைக் கற்பிக்கும் நோக்கத்துடன் அறிவொளி இயக்கம் நடத்தப்படுகிறது. காலம்தான் விடை சொல்ல வேண்டும்.

## மணம் நிகழ்ந்த முறை

பழந்தமிழ்ச் சமுதாயத்தில் வீரத்தை அடிப்படையாகக் கொண்டே திருமணம் நடந்தது. தொன்மைக் காலத்தில் ஆண்கள் ஏறு தழுவித் திருமணம் செய்து கொண்டனர். மிதிலையில் சனகன், வல்வில் வளைத்து மகள் கொடுக்கும் மரபை அறிமுகப்படுத்தினான். இராமன் வில்லை ஒடித்துச் சீதையை மணக்கின்றான். வீரமும் இல்லாமல், பொருளீட்டும் முயற்சியும் இல்லாமல், மணமகள் வீட்டில் வரதட்சிணை கேட்டுப் பெறும் தீய பழக்கம் அல்லது வழக்கம் அயல் வழக்கு; தமிழ் வழக்கு அன்று. இது முற்றிலும் தீது.

கோசல நாட்டு மக்கள் தங்கள் இளவரசன் இராமனின் திருமணம் காண மிதிலை நோக்கிப் பயணம் செய்கின்றனர். பயணம் அவரவர்களுடைய சக்திக்கு ஏற்றவாறு அமைந்திருப்பதை உணர்த்துகின்றான் கம்பன்.

> 'தேர்மிசை வருவாரும், சிவிகையில் வருவாரும்,
> ஊர்தியில் வருவாரும், ஒளிமணி நிரை ஓடைக்
> கார்மிசை வருவாரும், கரிணியில் வருவாரும்,
> பார்மிசை வருவாரும், பண்டியில் வருவாரும்'

(கம்பன் – 1194)

என்று பாடுகின்றான். மேலும் கால்நடைப் பயணமாக வருபவர்களும் உண்டு. இங்ஙனம் கோசல நாட்டு மக்கள் பல துறைகளில் சிறந்து விளங்கினார்கள். அதனாலேயே தசரதனின் கொற்றம் சிறந்திருந்தது.

## இலங்கைச் சமூகம்

இலங்கை வளம் கொழுமியதாக விளங்கியது என்ற கருத்துக்கு மாறுபாடில்லை. ஆயினும் இலங்கை மக்களிடையிலிருந்த களிப்பு – மகிழ்ச்சி, பொங்கி வழிந்த களிப்பா? மது நெறியில் திளைத்த களிப்பா? உய்த்துணர்தல் அரிது. 'களிக்கின்றார்கள் அல்லால் கவல்கின்றார் இல்லை' என்று கூறிய கம்பன் பிறிதோரிடத்திலும் 'இலங்கையில் அழுகையோ புலம்பலோ இருந்ததில்லை, கேட்டதில்லை' என்று பாடுகின்றான். இலங்கை மக்கள் இசை ஒலிகளைக் கேட்டுப் பழகியிருந்தனர். ஒருபோதும் புலம்பலைக் கேட்டதில்லை என்று சூர்ப்பணகை புலம்பலின் போது குறிப்பிடுகின்றான் கம்பன்.

*முழவினில், வீணையில், முரல் நல் யாழினில்,*
*தழுவிய குழலினில், சங்கில், தாரையில்,*
*எழுகுரல் இன்றியே, என்றும் இல்லதுஓர்*
*அழுகுரல் பிறந்தது, அவ் இலங்கைக்கு அன்று அரோ.*
(கம்பன் – 3102)

இது இலங்கையின் சிறப்பு.

இலங்கையில் மக்கள் தங்களுடைய எண்ணங்களை, உணர்ச்சிகளை வெளிப்படுத்த உரிமை பெற்றிருந்தனரா? அல்லது வன்மை சார்ந்த ஆட்சியின் காரணமாக வாய் மூடி மௌனிகளாகப் போய்விட்டார்களா? இலங்கையில் மக்களின் இயக்கத்தையே காணோம்! இலங்கை அரசன் இராவணன் அனுமனால் அழிக்கப்பெற்ற நகரத்திலும் சிறந்த புதிய நகரம் ஒன்று அமைத்தான். அப்போது மக்கள் மகிழ்ந்ததாகக் கம்பன் பாடவில்லை. இராவணன் செத்த பொழுதும் இலங்கை மக்கள் அழுததாகத் தெரியவில்லை. வன்முறை அரசின் காரணமாக இலங்கை மக்கள் சிரிப்பதற்கும் அழுவதற்கும் தெரியாமல் மறந்துவிட்டனர். ஒரு நாடு சிறந்து விளங்க வேண்டுமாயின் அந்நாட்டு மக்கள்

புவியை நடத்தக்கூடிய வகையில் சிரிக்கவும் அழவும் கற்றுக் கொள்ள வேண்டும். இல்லை, அரசின் நடைமுறையில் பங்கேற்க வேண்டும்.

நமது நாடு விடுதலை பெற்று நாற்பத்தேழு ஆண்டுகள் ஆகியும் குடியாட்சியாக இருந்தும் நமது நாட்டின் அரசியலில் மக்கள் பங்கேற்கவில்லை. நமது நாட்டு மக்கள் வாக்களிப்பது என்று ஒரே ஒரு அரசியல் கடமையை மட்டுமே நிறைவேற்றுகின்றனர். இந்தக் கடமையைக் கூடச் சிலர் செய்வதில்லை, வாக்களிப்பதும்கூட இல்லை. வாக்குகள் வேட்பாளரால் வாங்கப்படுகின்றன. நமது நாட்டு அரசியலில் வர வர பணத்தின் ஆதிக்கமும் வன்முறைகளும் வளர்கின்றன. காலப் போக்கில் இந்த நிலைமை நீடித்தால், இலங்கை அரசைப் போன்ற அரசே உருவாகும். இஃது ஆரோக்கியமான அரசியலுக்கு வழிவகுக்காது என்பதை உணர்ந்து நாம் குடிமக்களுக்குரிய கடமையாற்ற வேண்டும.

தனி உடைமைச் சமுதாய அமைப்பு தோன்றிய வழி, சமுதாய அமைப்பு உருவம் பெறத் தொடங்கியது. ஒருவருக்கொருவர் பாதுகாப்பாக அமைய வேண்டிய நெருக்கடி ஏற்பட்டதன் விளைவாகச் சமுதாய அமைப்பு உருக்கொண்டது. ஆயினும் உள்ளார்ந்த நட்பு - உறவு உணர்வுடன் உருக்கொள்ளவில்லை. பொருளின் ஆதிக்கமே மேலோங்கியது. சமுதாய அமைப்பு உருக்கொள்ளவில்லை. வீட்டுக்கும் வீட்டுக்கும் இடையே சுவர்கள் தோன்றின. குடும்ப அமைப்புக்கள் கூடச் சிதைந்தன. ஒரு குடியில் உடன் பிறந்த அண்ணன் தம்பிகளுக்கு இடையிலும் கூடச் சண்டைகள் தோன்றின. இந்தத் தாக்கத்தை இராமகாதை தெளிவாகக் காட்டுகிறது.

## சகோதரத்துவம்

அயோத்தியிலிருந்த அமைப்பின் வழி உடன் பிறந்தார்களிடையில் சண்டை இல்லை. எனினும் இயற்கை

அமைப்பு தனது வீச்சைக் காட்டுகிறது. பரதன் அதற்கு விதிவிலக்கு. தனக்குக் கிடைத்த அரசை ஏற்க மறுத்து விட்டான். ஆனால் கிட்கிந்தை அரசியலில் சண்டை இருந்தது. இலங்கையில் சமுதாய அமைப்பு இருந்தது. உடன் பிறந்தவர்கள் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். இலங்கை அரசன் இராவணனுக்காகத் தங்கள் உயிரையும் கொடுத்தார்கள். விபீடணன் மட்டும் விதிவிலக்கு. தமக்குரிய அரசையும் துறந்த பரதனின் புகழ் காவியத்தில் சிறந்து விளங்குகிறது. பரதன் புகழ் என்றும் நின்று விளங்கும். இதனை இராமன்,

'எத்தாயர் வயிற்றிலும் பின் பிறந்தார்கள் எல்லாம்
ஒத்தால், பரதன் பெரிது உத்தமன் ஆதலுண்டோ?'
(கம்பன்–3977)

என்று கூறுவதால் அறியலாம்.

குகனும்,

"தாய் உரை கொண்டு தாதை
உதவிய தரணி தன்னைத்
'தீவினை' என்ன நீத்துச்
சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து,
புகழினோய்! தன்மை கண்டால்,
ஆயிரம் இராமர் நின்கேழ்
ஆவரோ, தெரியின் அம்மா!" (கம்பன்–2337)

என வியந்து போற்றுகின்றான்.

## பொருளாதாரம்

ஒரு நல்ல அரசு அமைய நல்ல சமுதாய அமைப்புத் தேவை. நல்ல சமுதாயம் அமையப் பொருளாதார அமைவு சீராக இருக்க வேண்டும். நாம் எவ்வளவுதான் – பொருளை இரண்டாந்தர இடத்திற்குத் தள்ளினாலும் பொருள்

முதலிடத்திற்கு வந்து அமர்ந்து கொள்கிறது. 'பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை' என்று திருக்குறள் கூறுகிறது. 'கடவுள் பக்திக்கு அடுத்தபடியாக முக்கியமான கடமையாக இருப்பது, அறவழியில் செல்வம் ஈட்டுதலேயாம்' என்றார் முகம்மதுநபி.

## கோசல நாட்டுப் பொருளாதாரம்

கோசல நாட்டில் பொருள் வளம் நிறைந்து இருந்தது என்பதைக் கம்பன் பல பாடல்களில் விளக்குகின்றான். கடல் கடந்த நாடுகளில் எல்லாம் வர்த்தகம் செய்ததன் மூலம் நிறைய நிதி வந்து குவிந்தது. ஒரு நாட்டின் ஏற்றுமதிதான் அந்நாட்டின் செல்வத்தை அளந்தறிதற்குரிய அளவுகோல். விளை நிலங்கள் நன்றாக விளைந்தன. நிலத்தடியிலிருந்து வைரக் கற்கள் அகழ்ந்தெடுக்கப் பெற்றன. இங்ஙனம் பலவகையாலும் செல்வம் செழித்த கோசல நாட்டைக் கம்பன்,

*"கலம் சுரக்கும் நிதியம்; கணக்கு இலா*
*நிலம் சுரக்கும், நிறைவளம்; நல்மணி*
*பிலம் சுரக்கும்"* (கம்பன் – 69)

என்று குறிப்பிடுகின்றான்.

கோசல நாட்டில் வறுமை இல்லை. வறுமை கொடியது. சமய நூலாகிய சித்தியார், 'வறுமையாம் சிறுமை தப்பி' என்று கூறும். 'நெருப்பினுள் தூங்கலாம் ஆனால் வறுமையில் தூங்க முடியாது' என்று திருக்குறள் கூறும். வறுமை மனிதனுடைய உணர்ச்சியை மரத்துப் போகச் செய்து விடுகிறது. உயரிய பண்புகளை இழக்குமாறு செய்து விடுகிறது. வறுமை மனிதனுடைய ஊக்கத்தையும் பண்பையும் பறித்து விடுகிறது. ஆதலால்,

*"இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்*
*இன்மையே இன்னா தது"* (திருக்குறள்–153)

என்றது திருக்குறள். மக்களிடத்தில் வறுமை இருக்குமானால், அந்நாட்டில் நல்ல சமுதாய அமைப்பும் இராது, நல்லாட்சியும் இராது என்று கூறுவர். கோசல நாட்டில் வள்ளன்மை இல்லை. ஏன்? வறுமையில்லாமையால்! கோசல நாட்டில் 'எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை' என்பது கம்பனின் பாடல். எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் பெற்றிருந்தார்கள் என்பது நடைமுறைச் சாத்தியமா? அல்லது கம்பனின் இலட்சியமா? 'எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தி வாழ்தல் பொதுவுடைமைச் சமுதாயத்தில் இயலும்' என்பது மாமுனிவர் மார்க்சின் கருத்து. இதுவரையில் பொதுவாக உலக அரங்கில் எந்த நாட்டிலும் பொதுவுடைமைச் சமுதாயம் அமையவில்லை. பொதுவுடைமைச் சமுதாயம் அமைப்பதற்கு முன்னோடியாக அமையக்கூடிய சோஷலிச சமுதாய அமைப்பே - சம வாய்ப்புச் சமுதாயமே இன்னும் உலக அரங்கில் கால் கொள்ளவில்லை. 'சம வாய்ப்புச் சமுதாயத்தில் சக்திக்கேற்ற உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதியம். பொதுவுடைமைச் சமுதாயத்தில் சக்திக்கேற்ற உழைப்பு. தேவைக்கேற்ற ஊதியம்' என்பது கோட்பாடு. இன்னமும் மக்கட் சமுதாயத்தில் பலர் உழைக்க விரும்புவதில்லை; ஆனால் அனுபவிக்க விரும்புகின்றனர்; துய்க்க விரும்புகின்றனர். இத்தகையோர் வாழும் இந்தச் சமுதாயத்தில் எங்ஙனம் சோஷலிசம் உருவாகும்? பொதுவுடைமைச் சமுதாயம் அமைய இயலும்? என்றைக்கு மனிதர்கள் விருப்பார்வத்துடன், ஆவேசத்துடன் உழைப்பதை உயிரின் இயல்பாக (ஜீவசுபாவமாக) ஏற்றுக் கொள்கின்றார்களோ அன்றுதான் சோஷலிச சமுதாயம் மலரும்; பொதுவுடைமைச் சமுதாயம் தோன்றும்.

ஆதலால், கம்பன் பொருளாதாரத்தைப் பொருத்த வரையில் ஓர் இலட்சிய உலகம் பற்றி எண்ணி இருந்தான்

என்பதை உணர முடிகிறது. அந்த இலட்சியம் அவன் படைத்த கோசல நாட்டில் கூட நடைமுறையில் இல்லை. உறுதியான, பண்பார்ந்த சிந்தனையுடன் இராமனுக்கே முடிசூட்ட வேண்டும், பரதனுக்கன்று என்று கூனியுடன் வாதாடிய கைகேயியின் தூய சிந்தையும் திரிந்தது எப்படி? கூனி என்ன மந்திர வித்தையா செய்தாள்? அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. கோசல நாட்டின் பொருளாதாரம் குவியல் முறையில் இருந்தது. எல்லாருக்கும் செல்வம் கிடைக்கவில்லை. ஏன்? கைகேயிக்கே கிடைக்காது. கைகேயியின் மகன் பரதனுக்கும் ஒன்றும் கிடைக்காது. எல்லா உரிமையும் இராமனின் தாய் கோசலைக்கே உண்டு. கோசலை விரும்பிக் கொடுப்பதைத்தான் பெற்று வாழ வேண்டும் என்ற பொருளாதார அடிப்படை, கைகேயியின் தூய சிந்தையையும் திரியும்படி செய்துவிட்டது.

கைகேயி ஒரு சாதாரணப் பெண் அல்லள். கேகய நாட்டு இளவரசி. தசரதனையே மரணப்பிடியிலிருந்து காப்பாற்றிக் கைம்மாறாக வரம் பெற்றவள். அயோத்தியில் பல ஆண்டுகள் அரசியாக வாழ்ந்திருக்கிறாள். இந்த விஷயத்தில் கூனி கூறியது தவறாக இருந்திருக்குமானால், கைகேயி வாதாடி இருப்பாள். கோசல நாட்டின் நடைமுறை, அதிகாரம் உள்ளவர்களுக்கே பொருள்; ஆள்வோர் பக்கமே எல்லாம்; ஆளப்படுவோருக்கு ஒன்றும் இல்லை என்றுகூட எண்ண வேண்டியிருக்கிறது. இந்தக் கருத்துக்கு அரண் செய்யும் வகையில் பிறிதொரு நிகழ்ச்சியும் உள்ளது. இராமன் காட்டுக்குப் பயணம் செய்யும் நிலையில் ஒரு பார்ப்பனன் பசு தானம் கேட்கிறான். எத்தனை பசு என்று இராமன் கேட்கிறான். பார்ப்பனன், ‘ஒரு கம்பை எடுத்துச் சுழற்றி எறி! அந்தக் கம்பு விழும் எல்லைப் பரப்பளவுக்குப் பசுக் கூட்டத்தை நிரப்பிக் கொடு’ என்று கேட்கிறான். இராமன் அப்படியே கம்பைச் சுழற்றி எறிகிறான். கம்பு விழுந்த எல்லை அளவு பசுக்களை நிரப்பித் தருகிறான். ஆனால் அந்தப்

பார்ப்பனன் பேராசை காரணமாக இராமன் சுழற்றி எறிந்த கம்பு, மேலும் தூரம் கடந்து விழவில்லையே என்று கவலைப்பட்டதை இராமன் கண்டு நகைத்தானாம். இது சீதை, அசோகவனத்தில் நினைந்து அழுத செய்தி. இந்த நிகழ்ச்சியின் மூலம் 'கொள்வார் இலாமை, கொடுப்பார்களும் இல்லை' என்பதும்; 'எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்துதல்' என்பதும் கம்பனின் இலட்சியமே என்று தெரிகிறது. அது இந்த மண்ணில் எப்படி நடக்கும்? எப்போது நடக்கும்?

அடுத்து, 'கள்வர் இலாமை, காவலும் இல்லை' என்று கம்பன் கூறுகின்றான். களவு வந்து காவல் வந்ததா? காவல் வந்து களவு வந்ததா? பரிணாம வளர்ச்சியின்படி பார்த்தால் காவலைத் தொடர்ந்துதான் களவு வந்திருக்கும். மற்றவர்களுக்குப் பயன்பட வேண்டிய பொருளைப் பூட்டி வைத்துக் காவல் காக்கின்றனர். தேவைப்படுவோர் எடுத்துக் கொள்கின்றனர். இதனை உலகியலில் களவு என்று கூறுகின்றனர். ஆனால், தமிழக வரலாற்றின் தொன்மைக் காலத்தில் களவு இருந்ததில்லை. சீன யாத்திரிகர்கள் பாஹியான், ஹுவான்சுவாங் போன்றவர்கள் 'தமிழ் நாட்டில் வீடுகள் திறந்து கிடந்தன. நள்ளிரவில் பயமின்றி மக்கள் நடமாடினர்' என்று தங்களுடைய யாத்திரைக் குறிப்புக்களில் எழுதியுள்ளனர். களவும் காவலும் இலாதநாடு கோசலநாடு என்பது பெருமைக்குரிய செய்தி. வறுமையுடையோன் பொருளைப் போற்றி வாழ்வான். வறுமையுடையோன் தனக்குரிய 'நன்செய் நிலம் சிறிதே எனினும் வளமாகப் பேணி வைத்து விளைவு கண்டு வாழ்வான்'. 'வறிஞன் ஓம்புமோர் செய் யெனக் காத்து' என்பான் கம்பன்.

இந்தியா ஏழைகள் நிறைந்த நாடு. வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்பவர்கள் எண்ணிக்கை 58.9% ஆயினும் இந்த நாட்டின் தரிசு நிலம் ஏராளம். வீட்டுப்புறத் தோட்டத்தைப் பயன்படுத்துவோர் மிகமிகக் குறைவு.

நிலத்தின் மண் வளத்தைப் பாதுகாத்தால் நாடு வளம் கொழிக்கும். இன்று கோதுமை, சர்க்கரை, எண்ணெய் முதலியன இறக்குமதி செய்யப்படுகின்றன. ஏன்? நமது நாட்டில் விளைவிக்க இயலாதா? இயலும்! ஆனால் போதிய முயற்சி இல்லை.

கம்பன் 'தவமும் முயற்சியும் வேண்டும்' என்றான், வாழ்க்கை பயனுடையதாதல் முயற்சியினாலேயாம். முயற்சியினாலேயே வாழ்க்கையின் மதிப்பு உயர்கிறது. இரும்பைக் காய்ச்சி உருக்கி அடித்தால் அதன் விலை மதிப்புக் கூடுகிறது. அது மட்டுமல்ல, அந்த இரும்பு துருப்பிடித்து அழிந்து போகாமலும் பாதுகாக்கப்படுகிறது. அதுபோலத்தான் முயற்சியின் விளைவாக, பயனாகத் துன்பங்களையும் துயர்களையும் ஏற்றுக் கொண்டு தொடர்ந்து உழைப்பவர்கள் மாமனிதர்களாகிறார்கள்; சாதனை செய்தவர்களாகிறார்கள். வரலாற்றில் இடம் பெறுகிறார்கள். முயற்சியில் ஈடுபடாதவர்கள் செத்துப் பிழைப்பதற்கே தொழிலாகிச் சாகின்றனர். வாழ்க்கை என்பது போராட்டம்! இந்த போராட்டத்தில் அக்கறையும் முயற்சியும் உடையவன் வீழ்ந்து விட்டாலும் தரையில் மோதிய பந்து போல் மீண்டும் எழுந்து விடுவான். முயற்சியில்லாதவன் கோழை. வீழ்ச்சியடைந்தால் மண் உருண்டை போல உடைந்து மண்ணோடு மண்ணாகி விடுவான்.

## தவத்தின் சின்னம்

தவத்தின் சின்னமாக விளங்குபவன் இராமன். ஆம்! முடியைத் துறந்தபோதும் அப்பொழுதலர்ந்த செந்தாமரை போன்றிருந்தான். 'என் பின்னவன் பெற்ற பெருஞ் செல்வம் அடியேன் பெற்றதன்றோ' என்றும், 'மன்னவன் பணியன்றாகில் நும் பணி மறுப்பனோ?' என்றும் கூறி உவகையுடன் காட்டிற்குள் புகுந்தானே! இது தவம் அல்லவா?

## முயற்சியின் சின்னம்

முயற்சியின் சின்னம் சுக்கிரீவன். ஆம்! இழந்ததைத் தொடர்ந்து முயன்று பெற்றவன் அவன். ஆதலால், சுக்கிரீவனை கம்பன் முயற்சியின் திருவுருவமாகப் பாராட்டுகின்றான். வாழ்க்கையை வலிமையுடையதாக்கிக் கொள்ள, தீமையிலிருந்து பாதுகாத்துக் கொள்ள, நாளும் நல்லன பல செய்ய, முயற்சி தேவை. முயற்சியே மனிதனை முழுமைப்படுத்துகிறது; வளர்க்கிறது; வாழ்விக்கிறது.

## செல்வத்துப் பயன்

பொருள் ஈட்டல், சேர்த்தல், பாதுகாத்தல் மனித வாழ்க்கையில் நடைபெறும் ஒரு பணி - இல்லை - ஒரு போராட்டம்! பொருள் தேடுவது ஒரு பெரிய காரியம். அதைவிடப் பெரிய காரியம் அதைக் காப்பாற்றுவது. அதைவிடப் பெரிய காரியம் அதை முறையாக அனுபவிப்பதும், கொடுத்து மகிழ்தலுமாகும். வறுமையைப் பிணி என்றும் செல்வத்தை மருந்து என்றும் கூறுவது தமிழ் மரபு. பொருள் தேடல் வாழ்க்கையின் இலட்சியமன்று. பொருள் வாழ்க்கையின் கருவியே. நல்லறிவும் பண்பும் உடையவர்களுக்குப் பணம் பணியாள்; ஆனால், இவை இல்லாதவர்க்கோ மோசமான எசமானன், வாழ்க்கையைப் படித்துக் கொள்ளச் செல்வம் மட்டும் துணை செய்யாது. வறுமையும் அதற்குத் துணை செய்ய இயலும். பொருளும் தேவை; அதைத் துய்க்கத் திறனும் தேவை. பொருளும் திறமும் பெற்றவர்கள் புண்ணியம் செய்தவர்கள். பொருளை மற்றவர்களுக்குக் கொடுத்து மகிழ்ச்சி பெறலாம். வேறு உபயோகம்தான் என்ன? செல்வத்தைத் தனியே அனுபவித்தல்-இழத்தலுக்கு சமம்

"செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே"

என்கிறது புறநானூறு.

ஆற்று வெள்ளத்தில் படகு போகிறது. ஆற்றுத் தண்ணீர் படகினுள் புகுந்து விட்டால் படகில் நிறைந்த தண்ணீரை உடன் வெளியேற்ற வேண்டும். அதுபோல வீட்டில் செல்வம் நிறைந்துவிட்டால் அதையும் மற்றவர்களுக்குக் கொடுத்து மகிழ்வதோடு ஆன்மிக அழிவு ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். கம்பன் கிட்கிந்தா காண்டத்தில் கார்கால வருணனையில் செல்வத்தினைத் துய்த்த மாந்தரை வருணிக்கிறான். மேகம் கறுத்துச் சூல்கொள்கிறது. நீர் வளம் சுமந்து திரிகிறது. மேகம் அதனை மழையாகப் பொழிந்து மண்ணக மாந்தரை வாழ வைக்கிறது. அதனால் மேகம், நீர் வளத்தை இழந்து விடுகிறது. நீர்வளத்தை சூல் கொண்டமையால் கறுத்து இருந்த மேகம்-மழைபெய்தவுடன் வெளுத்துப் போகிறது. எப்படி? பொருளுடையோர் தம்மை இரந்து வருவோருக்கு வழங்கி, பின்வரும் இரவலர்களுக்குப் பொருள் தர இயலாமல் நாணுவது போல் என்கிறான் கம்பன். ஈட்டிய பொருளில் வாழ்வின் தேவைக்குப் போக மீதிச்செல்வம் சமூகத்திற்கே சொந்தம்.

*மள்கல் இல் பெருங் கொடை மருவி, மண் உளோர்*
*உள்கிய பொருள் எலாம் உதவி, அற்ற போது*
*எள்கல் இல் இரவலர்க்கு ஈவது இன்மையால்,*
*வெள்கிய மாந்தரின் வெளுத்த–மேகமே* (கம்பன் – 4251)

என்ற கம்பன் பாடல் நினைந்து நினைந்து ஒழுகலாறாக ஏற்கத்தக்கது.

## போர் நெறி

சமூகம், அரசியல் என்றால் அவற்றைத் தொடர்ந்து போர் வரும். இஃது இயற்கை. உலகந் தோன்றிய நாள்தொட்டு மனிதன் போராடி, இந்த மண்ணைச் செங்குருதியால் நனைத்திருக்கிறான். சில நாடுகளில் சில

இனங்கள் அழிக்கப்பட்டே விட்டன. நமது நாட்டில் போர்கள் நிறைய நடந்தன. ஆயினும், நமது அரசர்கள் நடத்திய போர் முறையில் நெறிமுறைகள் பின்பற்றப்பட்டன. இராமகாதையில் பல போர்கள் நிகழ்ந்துள்ளன. எல்லாப் போர்களும் அறநெறிப் போர்களேயாம். போருக்கு முன்பு தூது அனுப்புவது மரபு. தூதில் உடன்பாடு ஏற்படாவிட்டால்தான் போர். போரும் குறித்த காலத்தில், குறித்த களத்தில் நடைபெறும். இரவில் போர் நடக்காது. இந்தப் போர்களினால் பொது மக்களுக்கு எந்தவித ஆபத்தும் இல்லை; துன்பமும் நேராது.

## அனுமன் தூது

தமிழ் இலக்கியங்களில் வரும் தூது பற்றிய பகுதிகள் அறநெறிக் களஞ்சியங்கள். இராமகாதையில் இலங்கைப் பேரரசன் இராவணனுக்கு அனுப்பப் பெற்ற முதல் தூதுவன் அனுமன். காப்பிய அமைப்புப்படி நோக்கினால் அனுமன் சீதையைத் தேடிப் போனவன்தான். இலங்கையில் நடந்த் நிகழ்வுகளே அவனைத் தூதுவனாக்கியது. இராவணன் முன் அனுமன் தூதுவனாக அமர்ந்து பேசுகின்றான். உலக வரலாற்றில் தீமை ஒரு பொழுதும் நன்மையையோ, வெற்றியையோ பெற்றதில்லை. வெற்றி பெற இயலாது. பொருளையும், காமத்தையும் அனுமன் 'இருள்' என்று குறிப்பிடுகின்றான். வாழ்க்கையின் தெரிவு ஈதலும் அருளுமேயாம். அனுமன் கடைசியாக இராவணனை எச்சரிக்கை செய்கிறான்:

"ஆத லால்தான் அரும்பெறல் செல்வமும்
ஓது பல்கிளையும் உயிரும் பெற,
'சீதையைத் தருக' என்று எனச் செப்பினான்
சோதியான மகன் நிற்கு" எனச் சொல்லினான்.

(கம்பன் – 5910)

என்பது கம்பன் பாடல்.

## மனித இயல்பு

மனிதன், மனிதனுமல்லன்; விலங்குமல்லன்; தெய்வமுமல்லன். மனிதன் விலங்குத் தன்மையிலிருந்து விலகி, கடவுள் தன்மையை அடைய வேண்டிய படைப்பு. இந்த உண்மையை உணர்ந்து, அறிந்து, தெளிந்து வாழ்பவர்கள் பலர் இல்லை. மிகமிகச் சிலர்தான் உள்ளனர். இந்த நிலையிலும் எப்போதும் மனிதனிடத்தில் மிருகக் குணம், மனித இயல்பு, தெய்வப் பண்பு ஆகியன உடன் சேர்ந்து கலவையாக இருக்கும். சூழ்நிலைமையின் நிகழ்வுகளுக்கு ஏற்ப அவற்றில் ஒன்று கூடும்; பிறிதொன்று குறையும். மனித இயல்புகளை நுண்ணிதில் கண்டுணர்த்திய சான்றோர் மனிதனைத் தேவாங்கு, பாம்பு, பன்றி, நாய், வேட்டைநாய், கிளிப்பிள்ளை, கழுதை, வான்கோழி, தூண், கழுகு, ஆந்தை என்று கூறினர். ஆந்தைக்கு வெளிச்சம் பிடிக்காது. மனிதனுக்கு உண்மை பிடிக்காது. உழைக்காமல் பிறர் உழைப்பில் வாழ்பவன் கழுகு. கல்வியறிவு இல்லாதவன் விலங்குமல்லன், ஏன்? விலங்குகளுக்குள்ள ஐந்தறிவு இந்த மனிதனுக்கு வேலை செய்யாது. அவன் உணர்ச்சியற்ற தூண், வீண் ஆடம்பரம் செய்பவன் வான்கோழி, அநீதியைத் தட்டிக் கேட்காமல் இருப்பவன் கழுதை, அறிவை வளர்த்துக் கொள்ளாமல் படித்த சாஸ்திரங்களைப் படித்துப் படித்து ஒப்புவிப்பவன் கிளிப்பிள்ளை, அடிக்கடி கோபம் கொள்கிறவன் வேட்டைநாய், சுய நிர்ணயம் இல்லாமல் பிறரை நச்சி வாழ்பவன் நாயாவான். அற்ப சுகத்தில் நாட்டமுள்ளவன் பன்றி, நல்லது என்று பெயர் வாங்கித் தீமை செய்பவன் பாம்பு, ஊக்கமில்லாமல் இருப்பவன் தேவாங்கு. இங்ஙனம் பலபடக் கூறினாலும் மானுட இயல்பில் ஆக்கிரமிப்புக் குணம் - போர்க்குணம் இருப்பதைக் குறிப்பிடவில்லை.

கி.V.19.

## போருக்குக் காரணம்

மனிதன் அழுக்காறு, அவா, வெகுளி ஆகியவற்றால் ஆட்டிப் படைக்கப்படும் பலவீனமுடையவன். அவன் மற்றவர்களுடன் ஒத்துப் போகமாட்டான். ஆனால் மற்றவர்கள் - உலகமே அவனுடன் ஒத்துழைத்துப்போக வேண்டும் என்று விரும்புவான். ஒவ்வொரு மனிதனும் உலகத்திற்குச் சமமானவன். ஒருவன் தானே என்று அலட்சியப் படுத்துவதற்குரியவன் அல்லன். இந்த மனித உலகத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகள் உள்ளன என்பதைச் சற்றும் உன்னான்; ஓரான். ஆனால், இந்த உலகம் அவனுக்குக் கடமைப்பட்டிருப்பதாக எண்ணிக் கொள்வான். அதனாலேயே இந்த உலகம் கெட்ட போரிடும் உலகமாக மாறியது.

மனிதனுக்கு வெறிபிடித்துவிட்டால் அவன் பேய், பிசாசு போல ஆகி விடுகிறான். முன்னேற்றத்துக்கான சாதனங்களைக் கொண்டே மனிதகுலத்திற்குத் தீமை செய்கிறான். மனித குலத்தை நாசம் செய்கிறான். மனிதகுலம் வளர்ச்சி, முன்னேற்றம் என்ற முகடுகளுக்கு ஏறுவதற்கென உதவிய ஏணியைக் கொண்டே இறங்கி விடுகிறான். அணு, அழிவுப் பொருளன்று. ஆனால் அந்த அணு, அழிப் பொருளாக மாறிவிடுமோ என்ற அச்சம் இன்று நிலவுகிறது.

மனிதன் அரசியல், அரசு என்ற அமைப்புக்களின் வழி நெடிய பயணம் செய்து வந்துவிட்டான். இன்று அரசுகள் ஆதிபத்திய அரசுகளாக உள்ளன. ஆதலால், ஆதிபத்திய போட்டியில் ஈடுபடும் பொழுது மனிதன் விலங்காக மாறி விடுகின்றான். போர்கள் மனித மனத்தில் தோன்றி மக்கள் நலனைப் பறிக்கின்றன. ஆதலால் போர் வெறி மனிதனுடன் பிறந்தது. அவனுடைய போர் வெறியை மாற்றப் போராட வேண்டியிருக்கிறது. இந்தப் போராட்டம் இந்த உலக மக்கள் அனைவருடைய மனத்திலும் நடைபெற வேண்டும்.

## போரினால் ஏற்படும் இழப்பு

சண்டை போடுதல் தவறு; தவறு என்று மக்கள் உணர வேண்டும். அதுவும் போர் என்றால் அறவே எதிர்க்க வேண்டும். எந்தப் போரிலும் இருவருக்கு வெற்றி கிடைக்காது. ஒருவர்தான் வெற்றிபெற இயலும். மற்றவர் தோற்பது உறுதி. இதில் பெற்றி பெற்றவரும், மனிதர்தாம்; தோற்றவரும் மனிதர்தாம்! இதில் என்ன வெற்றி தோல்வி வேண்டியிருக்கிறது?

> "இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்;
> கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்;
> நின்ன கண்ணியும் ஆர்மிடைந்தன்றே; நின்னொடு
> பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந்தன்றே;
> ஒருவீர் தோற்பினும், தோற்பதும் குடியே;
> இருவீர் வேறல் இயற்கையும் அன்றே; அதனால்
> குடிப்பொருள் அன்று, நும் செய்தி; கொடித்தேர்
> நும் ஓர் அன்ன வேந்தர்க்கு
> மெய்ம்மலி உவகை செய்யும், இவ்விகலே!" (புறம் – 45)

என்ற புறநானூற்றுப் பாடல் இங்கு எண்ணத்தக்கது.

போரினால் – போருக்கு முன்பும், போர்க்காலத்திலும், போருக்குப் பின்பும், மக்கள் பல நலன்களை இழக்கின்றனர். நல்வாழ்வு வளரவும், பாதுகாப்புப் பெறவும், அரசுகளையும் ஆட்சிகளையும் அமைத்தனர் மக்கள். போரை விரும்பும் நாடுகளும் அரசுகளும் இதனை மறந்தது ஏன்? இரண்டாவது உலகப்போரின் அழிவு பற்றி,

``It has been calculated, for example, that the resources swallowed up, by the second world war, were enough for building a five - room house for each family in the world and also a hospital in each town with a population of over 5,000 people and to maintain all these hospitals for ten years. Thus,

the resources wasted on one world war would be enough for radically solving the housing and health problems that today are so acute for the majority of man kind."

(Fundamentals of Marxism-Leninism P–713.)

என்று கணித்துள்ளனர். அதாவது இரண்டாவது உலகப் போரில் அழிந்த செல்வத்தைக் கணக்கிட்டால், இந்த உலகில் உள்ள அனைவருக்கும் ஐந்து அறைகள் கொண்ட வீடுகளும் ஒவ்வொரு நகரத்திற்கும் ஒவ்வொரு மருத்துவமனையும் கட்டிவிடலாம் என்று கூறப்படுகிறது. இரண்டாவது உலகப்போரின் அழிவு இந்த நிலை என்றால் இன்று சொல்லவும் வேண்டுமோ?

வன்முறையும் ஆக்கிரமிப்பும் கண்டனத்திற்குரியவை. இவற்றை அறவே அகற்றி நிலையான அமைதி காண வேண்டும். நிரந்தரமாக ஆக்கிரமிப்புப் பயம் ஒழிந்து மக்கள் ஒன்று கூடிச் செயலாற்ற வேண்டும். இந்த உலகில் பிறந்து வாழும் அனைவரது சமூகப் பாதுகாப்புக்கும் பொருளாதாரத்துக்கும் உத்தரவாதம் வேண்டும். மக்களுக்கு நல்வாழ்க்கை அமைத்துத் தருவதே அரசின் கடமை.

## போர் அச்சம்

போரைவிடக் கொடுமையானது போரைப் பற்றிய அச்சம். அமைதிக் காலத்திலும் சில நாடுகள் வேற்று நாடுகளை எதிரி நாடுகளாகக் கருதி, எப்போதும் எதிர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கும்; சிறு சிறு தாக்குதல்கள் நடத்திக் கொண்டிருக்கும். இதனைப் பனிப்போர் (Cold War) என்பர். இன்று நமது நாட்டுக்கும் பாகிஸ்தான் நாட்டுக்கும் இடையில் பனிப் போர்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. காஷ்மீரில் நாள்தோறும் சிக்கல்! இதற்குப் பதில் போரே வந்தாலும் வரவேற்கலாம். அன்றாடம் செத்துப் பிழைப்பதைவிட இரண்டில் ஒன்று,

விடை தெரிந்து கொள்வது நல்லது. அதனால் நாம் இந்தியா-பாகிஸ்தான் சண்டையை வரவேற்பதாகப் பொருள் கொள்ளக் கூடாது. நமது விருப்பம் வேறு.

இரண்டாவது உலகப் போரில் வல்லரசுகளால் பிரிக்கப்பட்ட கிழக்கு ஜெர்மனிக்கும், மேற்கு ஜெர்மனிக்கும் இடையில் இருந்த சுவரை இன்று இடித்து விட்டு, ஒரே ஜெர்மனி நாடாக்கியுள்ளனர். அதுபோல, எதிர்காலத்தில் இந்திய இளைஞர்களும் பாகிஸ்தானின் இளைஞர்களும் ஆவேசத்துடன் சேர்ந்து இந்தியாவையும் பாகிஸ்தானையும் ஒரு நாடாக்க வேண்டும். இது எதிர்காலத்தில் நடக்கும். இது வரலாற்றின் தேவை. ஆதலால், பகை மூட்டமும் அச்சமும் இல்லாத, நம்பிக்கையும் நல்லெண்ணமும் உடைய ஒரு சமுதாயமாக மனித குலம் உருப்பெற்று ஆர்த்தெழ வேண்டும். புத்துலகம் படைப்பதை இலட்சியமாகக் கொள்ள வேண்டும்; விண்ணின் ஆட்சியை மண்ணில் காண வேண்டும்.

## இதயம் சுருங்கியது ஏன்?

மனிதனிடத்தில் பண்டங்களைப் பணமாக மாற்றுதல், பணத்தை நிலையான சொத்தாக மாற்றுதல், சொத்துக்களைப் பாதுகாக்க அரசு, - ஆதிபத்தியம் தோன்றல் எனப் படிப்படியாக வளர்ந்த நிலையில், அறிவு வறண்டு இதயம் சுருங்கியது. மனிதன் எதையும் செய்து எப்படியாவது தன்னுடைய நிர்வாணமான சுயநலத்தை நிறைவேற்றிக் கொள்ளத் தலைப்பட்டான். இரக்கம் என்ற ஒன்று இல்லாதவர்களாக மக்கள் வளர்ந்து வந்தார்கள். விலங்கும் கூடக் கூட்டமாகக் கூட்டி வைத்துப் பழக்கினால், பழக்கத்தின் காரணமாக ஒன்று சேர்ந்து வாழும் இயல்பினவாக வளரும். இங்ஙனம் ஒரு குரங்கும், பூனையும் இணைந்து வாழும் பாங்கினை அண்மைக் காலத்தில் நாம் பார்த்தோம்; கேட்டோம். ஆனால், மனிதன் பகையுணர் விலும் போரிடும் மனப்பான்மையிலும் வளர்ந்தே

வந்துள்ளான். படிப்படியாகப் போர்க் கருவிகளை ஆற்றல் மிக்குடையவனாக வளர்த்து, இன்று நீர்வாயுக்குண்டு எல்லையில் வந்து நிற்கின்றான்.

பழைய காலத்துப் போர்களில் உலகம் முற்றாக அழிந்த நிலை இல்லை. ஆனால், இக்காலப் போர்களில் உலகம் அழிந்து விடுவது மட்டுமல்ல - பல தலைமுறைகளுக்கு உறுப்புக் குறைவாகக் குழந்தைகள் பிறக்கின்ற கொடிய நிலை உருவாகி வருகிறது. இரண்டாவது உலகப் போரில் ஜப்பானுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் அளப்பரியன. ஹிரோஷிமா, நாகசாகியின் இடிபாடுகளைக் காணின் கல்நெஞ்சும் கரையும். இந்த உலகில் இதுவரை 50,000 போர்களுக்கு மேலாக நடந்துள்ளன. பல ஆண்டுகள் தொடர்ந்து நடந்த போர்களும் உண்டு.

## போர்மயமான வரலாறு

போர்களை மையமாகக் கொண்டு காவியங்கள் இயற்றியவர்களில் புகழ் பெற்றவர்கள் வால்மீகி, வியாசர், கிரேக்கக் கவிஞர் ஹோமர், மில்டன் முதலியோர். இந்தப் போர்கள் கற்பனைகளல்ல; நடந்தவை. இராம காவியத்தைப் போல, பாரதம் போல, இலியாட்டில் வரும் டிராய் சண்டை அறப்போர் அன்று. சூது நடத்தி வெற்றி பெற்றது ஸ்பார்ட்டா நாடு. சர்வதேச அரங்கில் மராத்தான் ஓட்டம் என்று ஒன்று நடப்பது அனைவருக்கும் தெரியும். மராத்தான் ஓட்டம் 42 கி. மீ. ஓட வேண்டும். இந்த மராத்தான், ஒரு பந்தய வீரன் பெர்ஷிய நாட்டுக்கும் கிரேக்க நாட்டுக்கும் நடந்த சண்டையில் கிரேக்கர்கள் பெற்ற வெற்றியைச் சொல்ல ஓடி வந்தவன். அதனால் மராத்தான் ஓட்டம் என்று பெயர் பெற்றது. இங்ஙனம் வரலாற்றில் இடம் பெற்ற போர்கள் ஆயிரக்கணக்கில் உண்டு. கிரேக்க நாடு நகரப் பேரரசுகள் உடையதாகும். அதிலும் குறிப்பானது ஏதென்சு. அது ஏராளமான போர்களைச் சந்தித்து வெற்றி பெற்றிருக்கிறது.

அலெக்சாண்டர் நடத்திய போரில்தான் முதன்முதலாகத் தோற்றது. உலகத்தில் சரிபாதியை வென்ற பெருமை அலெக்சாண்டருக்கு உண்டு. அடுத்து பிரிட்டன், பெரிய போர்களை நடத்தி, கதிரவனே அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தை ஏற்படுத்திய பெருமை பெற்றது. முதல் உலகப்போர் புகழ்பெற்ற போர். இனிமேல் போர் வேண்டாம் என்ற எண்ணம் வல்லரசுகளிடையே அரும்பிற்று. சர்வதேச சங்கம் தோன்றியது. ஆயினும் சங்கம் வலிமையுடன் இயங்க முடியவில்லை; போரைத் தவிர்க்க இயலவில்லை. இரண்டாவது உலகப்போர் நடந்தது. அலெக்சாண்டர், நெப்போலியன் ஆகியோருக்குப் பிறகு, மாவீரனாக அதே போழ்து ஆதிபத்திய வெறியுடையவனாகத் தோன்றினான் இட்லர். இட்லர் ஐரோப்பிய நாடுகளைச் சடசடவென்று வீழ்த்தினான். சோவியத் மீது படையெடுத்த போது, சோவியத் நாட்டு மக்கள் தியாகத்துடனும் தீரத்துடனும் போராடி, இட்லரின் நாசிசப் படையைத் தோற்கடித்து மகத்தான வெற்றி பெற்றனர். இங்ஙனம் நடந்த போர்கள் பலப்பல. உலக வரலாற்றின் பக்கங்களில் தாமஸ் ஆல்வா எடிசன், சேக்ஸ்பியர், திருவள்ளுவர், ஏசு, நபிகள் முதலியோருக்குக் கிடைத்த பக்கங்கள் சிலவே! ஆனால் கெட்ட போரிட்டவர்களுக்கும் போர்களினாலே ஏற்பட்ட அழிவுகளுக்கும் கிடைத்த பக்கங்கள் பலப்பல.

இந்தியா ஒரு துணைக்கண்டம். இந்தியாவில் ஒரு காலத்தில் நூற்றுக்கணக்கான அரசுகள் இருந்தன. இவர்களுக்கிடையே சண்டைகள் நடந்து கொண்டே யிருந்தன. தமிழ்நாட்டு வரலாற்றிலும் அப்படித்தான்! நாடு சிறியது; ஆனால் போர்கள் அதிகம்; பல அரசர்கள் இந்தியாவை ஒரு குடையின் கீழ்க் கொண்டுவர முயற்சி செய்தனர். சந்திர குப்த மௌரியன் ஒரு பேரரசன். இவனுடைய அரசியல் குரு சாணக்கியர். இவரியற்றிய அரசியல் சாத்திரம் அர்த்த சாத்திரம். இந்த நூலில்

முரண்பட்ட செய்திகள் பல உண்டு. ஆயினும் நல்ல நூல். அடுத்து அசோகர், இவர் இந்தியாவில் பேரரசை நிறுவியவர். சிறந்த வீரர். தொடக்க காலத்தில் போர்க்களங்கள் பல கண்டு வெற்றி பெற்றவர். ஆயினும் பிற்காலத்தில் போரை வெறுத்தார். சமாதானக் காவலராக விளங்கினார். தமிழ் நாட்டின் மாமன்னர் இராஜராஜன், இராஜேந்திர சோழன், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவன், கரிகாற்சோழன் முதலிய பேரரசர்கள் போர்க்களங்களில் வாகை சூடியவர்கள்.

## பண்டைய போர்களும் இன்றைய போர்களும்

இங்ஙனம் உலக வரலாறு, போர்களாலேயே நடத்தப் பெற்றது. இடையிடையே மனித குல முன்னேற்றத்திற்குரிய பணிகள், கலைப் பணிகள் நடந்தன. மிகத் தொன்மைக் காலத்தில் நடந்த போர்கள் அறநெறி சார்ந்த போர்கள். பின் விஞ்ஞான யுகத்தில் நடந்த போர்கள் அழிவுப் போர்கள். அறநெறிச் சார்பே இல்லாத போர்கள். ஏன்? பழங்காலத்தில் போராடிய வீரர்களுக்கு இருந்த வீரத்தில் குறைந்த சதமானம் கூட இக்காலத்தினருக்கு இல்லை. ஒளிந்திருந்தும், மறைந்திருந்தும், இரவிலும் நடத்தும் போர் இன்றைய போர். ஏவுகணைப் போரில் ஏவுகணையைச் செலுத்துபவர் பத்திரமான – பாதுகாப்பான அறைக்குள் தங்கிக் கொள்கிறார். இந்தப் போர்களை வீரப்போர் என்று கூற இயலாது. இந்தப் போர்களில் பெறும் வெற்றிகளை வெற்றி யென்றும் பாராட்ட இயலாது.

தமிழ் நாட்டில் நடந்த போர்கள் வீரப் போர்கள். எதிரியிடம் ஆயுதம் இல்லையென்றால் போர் நடத்த மாட்டான்; எதிரிகளின் முதுகில் குத்தமாட்டான். ஒரு குறிப்பிட்ட இடத்தில், களத்தில் பொருதுவான்; பொருது மேற் செல்வான். இரவில் போர் இல்லை. இவையெல்லாம் பண்டையக் காலப் போரில் நிலவிய அறநெறி. இன்று

போர்க்களத்தில் அறநெறி இல்லை. பண்டையப் போர் முறையில் பொருள்களுக்கு, சொத்துக்களுக்கு இழப்பு ஏற்படுவது இல்லை. இக்காலப் போர்களில் அளவற்ற இழப்பு ஏற்படுகிறது. பண்டு போர் என்றால் பொதுமக்களுக்குத் துன்பம் இல்லை, மரணம் இல்லை, இன்றோ பொதுமக்கள் தான் போரில் சாகிறார்கள். ஏராளமான சொத்துக்கள் அழிகின்றன. மனித குலத்திற்குப் போரற்ற உலகம் தேவை. அது எப்போது கிடைக்கும்? அமைதிக்கும் சமாதானத்திற்கும் போராட வேண்டிய மதங்கள் கூட வேறுபட்ட நிலையில் உள்ளன. எந்த நாட்டில் உள்ள மத நிறுவனங்களும் போர் ஓய்வுக்கும் அமைதிக்கும் பிரார்த்தனை செய்வதில்லை. அந்தந்த நாட்டிற்கு வெற்றி வேண்டியும், எதிரி நாடுகள் தோற்கும் படியுமே பிரார்த்தனை செய்துள்ளன. வெற்றி தோல்வி என்கிற நிலை நீடிக்கும் வரையில் போர்கள் தொடரும்.

## வேறு காப்பியங்கள்

இந்தியாவில் போரை மையமாகக் கொண்டு மூன்று பெரிய காப்பியங்கள் தோன்றின. ஒன்று இராமாயணம், மற்றொன்று மகாபாரதம், பிறிதொன்று கந்தபுராணம். இவற்றுள் இராமாயணமும் மகாபாரதமும் நாடு தழுவியவை. ஏன்? ஆரிய நாடுகள் தழுவிய இதிகாசங்களாகும். **கந்தபுராணம் தமிழகத்திற்கே உரிய தனித்தன்மையுடைய புராணம்.** இராமகாதையில் வரும் போர் பெண் அடிப்படையில் நடந்த போர். பாரதப் போர்; நாடு – அரசு அடிப்படையில் நடந்த போர். கந்தபுராணப் போர் – ஆட்சி – ஆதிக்க அடிப்படையில் நடந்த போர். முடிவுகள் வெற்றி – தோல்வி என்று முடிந்தன. இராமாயணப் போரில் இராமனால் இராவணன் கொல்லப்பட்டான். மகாபாரதப் போரில் துரியோதனாதியர் அழிக்கப்பட்டு விட்டார்கள். இந்திய நாகரிகத்திலும் உயர்ந்தது தமிழ் நாகரிகம். தமிழ் நாகரிகத்தில்

அழிவும் இல்லை; அழிக்கப்படுவதும் இல்லை. அதனால் கந்தபுராணத்தில் சூரபதுமன் அழிக்கப்படவில்லை; திருத்தப்பட்டான்; அங்கீகரிக்கப்பட்டான்.

## அனுமன் தூது

பழங்காலத்தில் போர் நடைபெறுவதற்கு முன் தூது அனுப்புவது வழக்கம். எந்தக் காரணத்தினால் போர் வரும் என்று கருதப்படுகிறதோ அது பற்றி எதிரி அரசுடன் பேச்சு நடத்துவார். தூதர் மூலம் பேசுவார். இராமகாதையில் சீதையைத் தேடிப்போன அனுமன், எதிர்பாராதவிதமாகத் தூதனாகவும் மாறினான்.

அனுமன் இராமனை முதன்முதலின் சந்தித்த போதே, அனுமனின் சொல்லாற்றலை இராமன் வியந்து;

*"இல்லாத உலகத்து எங்கும்*
*இங்கு இவன் இசைகள் கூரக்*
*கல்லாத கலையும் வேதக்*
*கடலுமே என்னும் காட்சி*
*சொல்லாலே தோன்றிற்று அன்றே!*
*யார்கொல் இச்சொல்லின் செல்வன்?*
*வில்ஆர் தோள் இளைய வீர!*
*விரிஞ்சனோ? விடைவ லானோ?"*

(கம்பன் – 3768)

என்று இலக்குவனிடம் பேசுகின்றான்.

இத்தகைய அனுமனின் தூது இலக்கியப் புகழ் மிக்க தூது. தூதர்கள் அடக்கம், அமைதியுடையவர்களாகவும், அதே போழ்து துணிவும் உறுதியுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். எதிரிக்கு எந்தச் சூழ்நிலையிலும் எரிச்சலும், கோபமும் உண்டாகும்படி நடந்து கொள்ளக் கூடாது. எதிரிகள் எரிச்சலுண்டாகும்படிப் பேசினாலும் செயல்பட்டாலும் தூது போனவர் எரிச்சலடையக் கூடாது.

தூதின் முடிவு காரிய சாதகமாகவும் போரைப் தவிர்ப்பதுமாகவும் அமையும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். தவிர்க்க இயலாத நிலையில், எதிர் முனையின் பிடிவாதத்தாலும் அடாவடித்தனத்தாலும் சமாதானம் உருவாகாவிடின் அவசியமாயின், இறுதியில் போரை வரவேற்கவும் தூதன் அஞ்சக் கூடாது.

இலங்கைப் பேரரசன் இராவணன் அவையில் அனுமன் இராமனின் சிறந்த தூதனாகப் பணியாற்றி யமையை உலகம் உள்ளளவும் பாராட்டும். அனுமன் இராவணனைப் பார்த்த நிலையில் அவனைக் கொன்றொழிக்க எண்ணுகிறான். ஆயினும், தலைவன் ஆணை இல்லையே என்று கொலை செய்வதைத் தவிர்த்துக் கொள்கிறான். அனுமன், சீதையைத் தேடிப் போனவன்தான். ஆயினும் அனுமனுக்கும் அரக்கர்களுக்கும் போர் நடக்கின்றது. அனுமன், தன்னந்தனியனாக, அரக்க வீரர்களைப் போர்க்களத்தில் சந்தித்துக் கொன்று குவிக்கிறான். இது தூதனுக்குள்ள கடமையன்று. இலங்கையர்களும் அனுமனைத் தூதன் என்று எண்ணவில்லை. அனுமனைத் தூதன் என்று எண்ணியவன் விபீடணன் மட்டுமே!

அனுமனுக்கு இலட்சியம் இரண்டு. ஒன்று சீதையை மீட்பது, மற்றொன்று இராவணனும் மற்ற அரக்கர்களும் கொடுந் தொழிலிலிருந்து விடுபட வேண்டும் என்பது. இவ்விரண்டும் நடைபெறும் வகையில் அனுமன் முயற்சி செய்தான். இராவணன் மனத்தில் 'ஆற்றலும் நீதியும் மனங்கொள நிறுவ' வேண்டும் என்பது அனுமனின் ஆசை. ஆனால், இராவணன் கேட்க வேண்டுமே! அனுமன் இராவணனிடம் தன்னைத் தூதன் என்று அறிமுகப்படுத்திக் கொள்கின்றான். அனுமன் தனது தலைவன் பரம்பொருள் – மண்ணில் பிறந்து நடமாடும் பரம்பொருள் என்று குறிப்பிடுகின்றான். அறநெறி சார்ந்த முயற்சி பலனளிக்கவில்லை. அனுமன் தன் வாலில் வைக்கப்பட்ட

தீயைக் கொண்டு இலங்கை எழில்களை அழித்துவிட்டு இராமனிடம் மீண்டான். இராமனிடம் மீண்ட அனுமன் இராமன் முன்னிலையில் சீதையிருந்த திசை நோக்கித் தொழுதான்.

*எய்தினன் அனுமனும்; எய்தி, ஏந்தல்தன்*
*மொய்கழல் தொழுகிலன்; முளரி நீங்கிய*
*தையலை நோக்கிய தலையன், கையினன்,*
*வையகம் தழீஇ நெடிதுஇறைஞ்சி வாழ்த்தினான்.*

(கம்பன்–6028)

என்று பேசுவான் கம்பன். மேலும் சீதையின் கற்புநிலையை உறுதிப்படுத்த அனுமன், 'கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்' என்றும்,

*"திண்டிலன் என்னும் வாய்மை*
*திசைமுகன் செய்த முட்டை*
*கீண்டிலது; அனந்தன் உச்சி*
*கிழிந்திலது; எழுந்து வேலை*
*மீண்டில; சுடர்கள் யாவும்*
*விழுந்தில; வேதம் செய்கை*
*மாண்டிலது–என்னும் தன்மை*
*வாய்மையால்; உணர்தி மன்னோ!"* (கம்பன்–6039)

என்றும் கூறுகின்றான். இராமனும் அனுமனின் நடத்தையாலும் வாக்கினாலும் 'இவன் கண்டதும் உண்டு; அவள் கற்பும் நன்று, என்று தெளிந்தனன்.

## தாடகை வதம்

கம்பனின் இராமகாதையில் இரண்டு சிறு போர்களும் ஒரு பெரும் போரும் நடைபெறுகின்றன. முதற்போர் தாடகையுடன் நடத்திய போர். தாடகை உருவத்தால் பெண். ஆனால்–

"....அரும் பாவம் ஈண்டி, ஓர்
பெண் உருக் கொண்டெனத் திரியும் பெற்றியாள்"
(கம்பன்–360)

என்று விசுவாமித்திரர் தாடகை பற்றி இராமனுக்கு விளக்கினார். தாடகை, மருத நிலத்தை அழித்துப் பாலைவனமாக்கி விட்டாள். எதுபோல எனில், உலோபகுணம் என்ற குணம் ஒன்றினாலேயே எல்லாக் குணங்களும் அழிந்து விடுவது போல், தாடகை மருத நிலத்தைப் பாலைவனமாக்கி விட்டாள்! ஆயினும் இராமன், தாடகை பெண்ணாக இருப்பதால் அவளோடு போரிடத் தயங்கினான். மீண்டும் விசுவாமித்திரர் தாடகை தீமையின் வடிவம்; அவள் பெண் உருவமுடையவளே தவிர, பெண் அல்லள் என்று கூறித் தாடகையைக் கொல்லுமாறு இராமனைத் தூண்டுகின்றார். இராமன் தாடகை மீது விட்ட அம்புகள் தாடகையின் நெஞ்சில் பாய்ந்து அப்புறம் கழன்று போயின. அவை, அற்பர்களுக்கு அறிஞர்கள் சொன்ன அறிவுரை போல ஆயின.

சொல் ஒக்கும் கடிய வேகச்
சுடுசரம், கரிய செம்மல்,
அல் ஒக்கும் நிறத்தினாள் மேல்
விடுதலும், வயிரக் குன்றக்
கல் ஒக்கும் நெஞ்சில் தங்காது,
அப்புறம் கழன்று, கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன
பொருள் எனப்போயிற்று அன்றே! (கம்பன்–388)

என்று விளக்குகின்றான் கம்பன்.

## வாலி வதம்

அடுத்த நடந்த போர் வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் நடந்த போர். வாலி வலிமை மிக்கவன். வாலி, சுக்கிரீவ

விரட்டி விரட்டி அடித்தான். இப்போரில் இராமன் தலையிட்டதனால் போர் என்று கூற இயலாது. இராமனுடைய அம்புக்கு வாலி இரையாகிறான்.

*"ஆழிசூழ் உலகம் எல்லாம்*
*பரதனே ஆள, நீ போய்த்*
*தாழ்இரும் சடைகள் தாங்கித்*
*தாங்கரும் தவம் மேற் கொண்டு*
*பூழிவெங் கானம் நண்ணிப்*
*புண்ணியத் துறைகள் ஆடி*
*ஏழிரண்டு ஆண்டின் வா என்(று)*
*இயம்பினன் அரசன்" என்றாள்.* (கம்பன்–1601)

என்ற கைகேயியின் ஒரு சொல்லுக்குக் கட்டுப்பட்டு மகிழ்ச்சியுடன், 'தாயே! தந்தை சொல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை. 'உன்னுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பேன்; மறுக்க மாட்டேன்' என்றதோடன்றி,

*"பின்னவன் பெற்ற செல்வம்*
*அடியனேன் பெற்ற தன்றோ!*
*என் இனி உறுதி அப்பால்"* (கம்பன்–1604)

என்று கூறி கைகேயியிடம் விடை பெற்றுக்கொண்டு நகரினின்று நீங்குகின்றான்; காட்டை நோக்கி நடக்கின்றான். மனித உலகத்தில் இத்தகு பண்பாட்டின் மணிமுடியை வரலாறு கண்டதில்லை. கம்பனின் இராமகாதையைத் தவிர வேறு காப்பியங்களில் இருப்பதாகத் துணிந்து கூற இயலவில்லை. அடுதலும் பொருதலும் அழித்தலும் தான் அரசியல் என்று வரலாறுகள் கூறுகின்றன.

பேரரசு தனக்கு என்ற பொழுதும் இராமன் மகிழ்ந்திலன்; பேரரசு இல்லை – காடுதான் என்ற நிலையிலும் இராமன் கவலைப்படவும் இல்லை. சுக்கிரீவன், வாலியிடம் எல்லாம் உனக்குத்தான் என்று சொல்லிய

பின்பும் ஆத்திரத்தில் சுக்கிரீவனை அடித்து விரட்டுகின்றான். சுக்கிரீவனின் மனைவி உருமையையும் கவர்ந்து கொள் கின்றான். வாலி, சந்தேகப் பிராணியாகவும் ஆத்திரக் காரனாகவும் விளங்கினான். மேலும் தன்னை யாரும் வெல்லாமல் இருக்கும்படிப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் தவம் செய்து வரம் வாங்கிக் கொண்டிருக்கிறான். அது என்ன வரம்? வாலியுடன் பொருதுகின்றவர்களின் பலத்தில் பாதி பலம் வாலியைச் சேர்தல் வேண்டும்; வாலிக்கு உரிமையாதல் வேண்டும். இப்படி ஒரு வரம்! நமது வழிபடும் கடவுள்களுக்கும் இத்தகைய வரங்களைக் கொடுப்பதுதான் வேடிக்கை; முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும். முள்ளை எடுக்கப் பயன்படும் முள்வாங்கி முள்ளைப் போல் கூர்மையாகவே இருப்பதை அறியாதார் யார்? ஆதலால், வாலியிடம் பேசவேண்டிய அவசியமோ சூழலோ இராமனுக்கு எழவில்லை. காரணம் பேச்சுக்களின் எல்லைகளைக் கடந்த நிலையில் வாலியின் செயல்முறைகள் அமைந்து விட்டன ஆதலால்.

வாலியின் பொருந்தாச் செயல்களையும் வரத்தையும் முறியடிக்க வேண்டிய நிலையில் மறைந்து நின்று அம்பெய்கின்றான். வாலியை மறைந்து கொன்றதில் ஒரு குறையும் இல்லை; ஒரு குற்றமும் இல்லை. அதனால் இராமன் மறைந்து நின்று கொன்றான் என்று சொல்லப் படுவது முறையல்ல. ஆனால், காவியப் போக்கில் அப்படித்தான் உணர்த்தப்படுகிறது.

அடுத்து நடந்த பெரிய போர் இலங்கையில் நடந்த இராம-இராவணப் போர். போருக்கு முன்பு மரபுப்படி இராமன், விபீடணன், சுக்கிரீவன் ஆகியோருடன் ஆலோசனை செய்யப் பெறுகிறது. முதலில் போர் முறைப்படி இராவணனுக்குத் தூது அனுப்ப முடிவு செய்யப் பெறுகிறது. தூதனாக அனுப்ப வாலியின் மகன் அங்கதன் தேர்வு செய்யப் பெற்றான். வாலி, இராவணனைத் தனது வாலில்

கட்டிச் சுற்றி வந்த மாவீரன்! அதனால் போலும் அவன் மகன் அங்கதன் தூதனாகத் தேர்வு செய்யப் பெற்றான்! அங்கதன் இலங்கையை அடைகின்றான். தான் தூதனாகத் தேர்வு செய்யப் பெற்றதில் அளவற்ற மகிழ்ச்சி அங்கதனுக்கு! அதனால்,

"மாருதி அல்லன் ஆகின்,
நீ" எனும் மாற்றம் பெற்றேன்;
யார் இனி என்னோடு ஒப்பர்
என்பதோர் இன்பம் உற்றான். (கம்பன்–6986)

தூதன் அங்கதன், தன்னுடைய தலைவன் இராமனைப் பற்றி இராவணனிடம் புகழ்ந்து பேசுகின்றான்; 'இராமன், ஐம்பூதங்களுக்கும் தலைவன்: உலகத்திற்குத் தலைவன்; சீதையின் கணவன்; தேவ தேவன்: வேதநாயகன்! இராவணா! நீ பயின்ற வேதங்கள் தேடும் தலைவன் இராமன்; கல்வி அறிவு ஊழின்முன் நிற்பதில்லை. அந்த ஊழ்வினையை உய்த்துச் செலுத்தி ஊட்டுவிக்கும் தலைவன்; ஊழித் தலைவன். அவனுடைய தூதன் நான்" என்கிறான் அங்கதன்.

இராவணன் அங்கதனை நோக்கி அவனுடைய வரலாற்றைக் கூறும்படிக் கேட்கின்றான். அதற்கு அங்கதன் 'முற்காலத்தில் இராவணன் என்பானைத் தன் வாலில் கட்டிச் சுருட்டிக் கொண்டு, பல மலைகளையும் தாண்டிச் சுற்றி வந்த இந்திரன் மைந்தன் வாலியின் மகன்' என்றனன். உடன் இராவணன் அங்கதனுக்கு வானர ஆட்சியைத் தருவதாக ஆசை வார்த்தை கூறுகின்றான். 'உன் தந்தை வாலியைக் கொன்றவன் பின் திரிதல் – சுற்றுதல் அழகன்று; இராமனிடமிருந்து பிரிந்து விடு. என்னைச் சேர்க; நான் உன்னை என் மைந்தனாக ஏற்றுக் கொள்கிறேன்!' என்று இராவணன் அங்கதனிடம் பேசி, 'வாலியைக் கொன்றவன் இராமன்' என்ற வாயில் வழிப், பகை மூட்ட எடுத்த முயற்சி

அங்கதனிடம் பலிக்கவில்லை! இராவணன் சொல்லைக் கேட்ட அங்கதன் நகைத்தான். 'என்னைப் புரிந்து கொள்ளாமல் வாயில் வந்தபடியெல்லாம் பேசுகின்றாய்! இதனால் எல்லாம் நான் உன் வசப்பட மாட்டேன்! நாயிடம் சிங்கம் ஆட்சி பெறுமோ? ஒரு போதும் பெறாது!' என்றான் அங்கதன். "இராவணனே! அரக்கர் குலத்து அழிவிற்கு மூலகாரணமாக உள்ள இராவணனே! போருக்கு அஞ்சி அரண்மனையில் ஒளிந்து கொண்டிருக்கின்றாய்! 'தேவி சீதையை விட்டு விடு! அல்லது இராமனுடன் போர் புரியப் போர்க்களத்திற்கு வருக!' என்று என் தலைவன் இராமன் அறிவிக்கச் சொன்னான்!" . இராவணனின் பாட்டி தாடகையை வெட்டி வீழ்த்திப் பருந்துக்கு இரையாக்கிய காலத்தில் இராவணன் எங்கே போனான்? இராவணன் மாமன் சுபாகு என்பவன் போராடி அழிந்த காலத்திலும், எங்கிருந்தான் என்ற தெரிந்து கொள்ள முடியாத நிலையில் இருந்தான். ஏன்? இராவணன் தங்கை சூர்ப்பணகை இலக்குவனால் மூக்கறுபட்டு மானபங்கப்படுத்தப்பட்ட போதும் இராவணன் போருக்கு வரவில்லையே! 'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்பதற்கு இலக்கியம் இராவணன். 'இராவணனுக்கு ஆண்மையே இல்லை' என்று இராமன் இராவணனைப் பழித்துரைத்ததையும் அங்கதன் எடுத்துக் கூறினான். தூது பயன் தராததால் அங்கதன் இராமனை வந்தடைந்தான். இராமனிடம் தூதின் முடிவை மிகவும் சுருக்கமாக,

> "முற்றஓதி என்? மூர்க்கன், முடித்தலை
> அற்றபோது அன்றி ஆசை அறான்" (கம்பன் – 7015)

என்று கூறினான். 'சமாதானம் இல்லை; சீதையின்பால் உள்ள ஆசையை அவன் முடியிழக்கும் வரையில் விடமாட்டான். இராவணனின் முடி வீழ்தலுக்குரிய போர் தேவை. இதுவே என் தூதின் முடிவு' என்றான் அங்கதன்.

கி. V. ஐம.

## இராம – இராவணப் போர்

*போர் மூண்டு விட்டது! இராவணன் போர்க்களத்திற்கு வந்து விட்டான். இராவணன் செருகளம் வந்த செய்தி இராமனுக்குப் பூரிப்பைத் தருகிறது. அனுமனின் தோளில் இராமன் ஆரோகணித்துச் செருகளம் புகுந்தான்; வில்லை வளைத்து நாணேற்றினான்; அந்த நாணோசை ஊழிக் காலத்துப் பேரோசை போல் கேட்டது. இராவணன் போர்க்களத்தில் தோற்றான்! ஆயுதங்களை இழந்தான்! வெறுங்கையுடன் நின்றான்.*

*தாயிற் சிறந்த தயாவுடைய இராமன், இராவணனுக்குப் பரிவுரை கூறுகிறான்: 'இராவணா! பெரும் போரில் வெற்றி பெற வீரம் மட்டும் போதாது. அறவழியிலும் ஒழுகுந்திறன் வேண்டும்! அறத்தினைத் துறந்தவர்கள் தேவர்களே யானாலும் போரில் வெற்றி பெற இயலாது. இராவணா, உயிர் பிழைத்துப் போ! ஆயுத மில்லாது வெறுங்கையினனாக நிற்கும் உன்னை நான் கொல்ல மாட்டேன்!" என்றான் இராமன். 'ஆண்மைக் குணமுடைய இராவணனே, கேள்! உனது நால்வகைப் படைகளும் சிதறி ஓடி விட்டன. இன்று போ! நாளை வா!' என்றான்.*

***'ஆள்ஐயா! உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த***
***பூளை ஆயின கண்டனை; இன்று போய்ப் போர்க்கு***
***நாளை வா!' என நல்கினன்–நாகு இளங் கமுகின்***
***வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்!***

**(கம்பன்–7271)**

*மீண்டும் இராவணனுக்கு, படைதிரட்டிக் கொண்டு வர, போராட வாய்ப்பளிக்கின்றான் – அறநெறியண்ணல் இராமன்! காலம் கருத்தை மாற்றும் என்ற அடிப்படையில் 'இன்று போய், நாளை வா' என்று வழங்கப் பெறும் கால இடைவெளியில் இராவணன் சிந்திப்பான்; சீதையை*

அனுப்பி வைப்பான் என்று இராமன் நம்பி இருக்கக் கூடும். இராமனது நம்பிக்கை முற்றிலும் நிறைவேறாது போனாலும் ஓரளவு பயன் தந்தது.

திசை யானைகளை வென்ற வலிமை; சிவம் உறையும் கயிலை மலையைப் பெயர்த்தெடுக்க முயன்றதோள் வலிமை, நாரதர் மகிழ இன்னியன கூறிய நாவாற்றல்; சிவபெருமான் அருளிய வாள்; வாகை மாலைகள் சூடியிருந்த பத்து மணி முடிகள்; இவையெல்லாவற்றுடன் தன் வீரத்தையும் சேர்த்து இராவணன் போர்க்களத்தில் போரிட்டு வெறும் ஆளாக இலங்கையினுள் நுழைந்தான். தோல்வியின் காரணமாக நாணித் தலைகுனிந்தவாறே, தனியே இலங்கையினுள் புகுந்து தனது மாளிகையை அடைந்தான். இராவணனுடைய நாணமும். சீதை நகைப்பாளே என்ற அடிப்படையில் அமைந்த நாணமேயாம் என்று கம்பன் கூறுவது நகைச்சுவை நிறைந்த கருத்து. ஆம்! இந்த உலகில் ஆடவர் பலரும் தமது செயலின்மை கருதி நாணப்படுதல் பெரும்பாலும் இல்லை. பெண்கள் பரிகசிப்பார்களே என்ற அச்சமும் நாணமும் தான் ஆடவர்களுக்கு மிகுதியும் உண்டு. இதற்கு இராவணனும் விதிவிலக்கல்லன்.

## கும்பகருணன் அறிவுரை

இராவணன், போரில் தோல்வியைத் தழுவியதைக் கண்ட அரக்கர்கள், நெடுந்துயில் கொண்டிருந்த கும்பகருணனை எழுப்பினார்கள். கும்பகருணன் துயில்விட்டு எழுந்ததும் இராவணன் அவையை அடைந்து இராவணனுக்கு அறிவுரை கூறினான். சீதையை விடுதலை செய்யும்படி அறிவுறுத்தினான். விபீடணனுடன் கலந்து உறவாடி வாழ்க என்றான். இந்த இடத்தில் கம்பன் விபீடணனுக்குத் தந்துள்ள அடைமொழி அல்லது இலக்கணம், சிந்தனைக்குரியது. 'ஐயறு தம்பியோடு அளவளாவுதல்' என்று கம்பன் குறிப்பிடுகின்றான்.

ஐயத்திற்கிடமில்லாத விபீடணன் இராவணனை விட்டுப் பிரிந்து இராமனைச் சென்றடைந்தமையால் 'விபீடணன் போருக்குப் பயந்து விட்டான்! கோழை! உடன்பிறந்த அண்ணனுக்குத் துரோகம் செய்து விட்டு, இராமனுடன் சேர்ந்து ஆட்சியை, அதிகாரத்தைப் பற்றிக் கொள்ளத் திட்டமிட்டான்' என்றெல்லாம் பழி வரும் என்பதை எண்ணி விபீடணனை ஐயத்திற்கு இடமளிக்காத ஒழுகலாறுடையவன்; அறநெறி ஒன்றே அவன் சார்பு என்பதை நிலைநிறுத்த 'ஐயறு தம்பி' என்று கம்பன் கூறினான். சீதையை விடுதலை செய்து விபீடணனுடன் உறவு கலந்து வாழவில்லையாயின் நம்முடைய பல வலிமைகளையும் ஒன்று சேர்த்துக் கொண்டு போராட வேண்டும் என்று கும்பகருணன் கூறினான்.

*"தையலை விட்டு? அவன் சரணம் தாழ்ந்து, நின்*
*ஐயறு தம்பியோடு அளவளாவுதல்*
*உய்திறம்; அன்று எனின் உளது, வேறும் ஓர்*
*செய்திறம்; அனையது தெரியக் கேட்டியால்"*

(கம்பன் – 7359)

*"பந்தியில் பந்தியில் படையை விட்டு, அவை*
*சிந்துதல் கண்டு, நீ இருந்து தேம்புதல்*
*மந்திரம் அன்று; நம் வலி எலாம் உடன்*
*உந்துதல் கருமம்" என்று உணரக் கூறினான்.*

(கம்பன் – 7360)

என்ற பாடல்கள் பலகாலும் எண்ணத்தக்கன.

கும்பகருணன் கூறிய இந்த அறிவுரைகளால் இராவணனிடத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. அதற்குப் பதிலாக இராவணன் போருக்குப் போகப் புறப்பட்டான். கும்பகருணன் இராவணனை விலக்கி விட்டு, தானே போருக்குப் போகத் தலைப்பட்டான். அப்போது கும்பகருணன், 'அண்ணா! போருக்குச் செல்கிறேன். நான்

வெற்றி பெறுவது உறுதியல்ல. சாவையே தழுவி நிற்பேன். என்னை இராம-இலக்குவர் வெற்றி பெற்றுவிட்டால் உன்னை எளிதில் வெற்றி பெறுவர். ஆதலால், என் மரணத்திற்குப் பிறகாவது சீதையை விட்டுவிடு! அது உனக்கு நன்மை! தவமும் ஆகும்' என்று கூறி இராவணனிடம் விடை பெற்றுக் கொண்டு போருக்குச் செல்கிறான்.

## கும்பகருணன் - விபீடணன் சந்திப்பு

போர்க்களத்தில் விபீடணன் கும்பகருணனைச் சந்திக்க வருகின்றான். கும்பகருணன் விபீடணன் வந்தமையை ஏற்கவில்லை. 'குலத்தில் இழுக்கின் வழி விளைந்த விளைவா?' என்று விமர்சிக்கின்றான் கும்பகருணன். அழிவுக்காலம் வந்தால் அழிவுக்குரிய பலவும் ஒருங்கு கூடி வரும் போலும்!

'ஏந்திய வில்லுடன் இராமன் நிற்கிறான். அவன் அருகில் வெல்லுதற்கரிய இலக்குவன் நிற்கிறான். எமனும் நிற்கிறான்; ஊழ்வினை உருத்து வந்து நிற்கிறது. எங்கள் தோல்வி உறுதி. இந்தச் சூழ்நிலையில் ஏன் வந்தாய்?' என்பது கும்பகருணன் வினா! விபீடணன், கும்பகருணனை அறநிலை கருதி, இராமன்பால் வந்து சேரும்படியும் இலங்கை ஆட்சியை ஏற்கும்படியும் அழைக்கின்றான், நிலந்தோய வணங்கிக் கேட்டுக் கொள்கின்றான். கும்பகருணன் - விபீடணன் உரையாடல் ஒப்பற்ற வாழ்க்கைத் தத்துவம். அறத்திற்கும் பாசத்திற்கும் நடக்கும் போராட்டம் பற்றிக் கம்பன் அழகுற, அமைவுற விளக்குவது பலகாலும் படித்துணரத்தக்கது.

கும்பகருணன், போர்க்களத்தில் தனக்கு நேரிடும் மரணம் இழிவானது என்று கூறுகிறான். அதே போழ்து அந்த மரணம் புகழுடையது என்றும் கூறுகிறான். மரணத்தின் காரணத்தால் மரணம் இழிவாகிறது. மரணத்தின் நோக்கத்தைக் கருத்தில் கொண்டால் புகழாகிறது. ஆம்! நன்றியறிதல் என்ற பண்பு உலகத்தில் உள்ளளவும்

கும்பகருணன் மரணம் புகழுடையதுதானே! ஆன்முலை அறுத்தல் முதலிய தீமைகளைச் செய்யினும் உய்தி உண்டு! செய்ந்நன்றி மறந்தார்க்கு உய்தியில்லை.

> "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
> செய்ந்நன்றி கொன்ற மகற்கு"
> (திருக்குறள் – 110)

என்று திருக்குறள் கூறுவதை அறிக. ஒரு தலைவன் ஆலோசனையின்றித் தீமை செய்தால் திருத்தும் முயற்சியில் ஈடுபடவேண்டும். அங்ஙனம் திருத்த முடியாவிடில் அவருடன் இருந்து சாதலே அறம்; ஒழுக்கம் என்பது கும்பகருணன் கொண்ட அறம்; துணிவு. 'இலங்கை அரசு நிலையில்லாதது. நான் அதை விரும்பவில்லை. நான் என் அண்ணன் இராவணனுக்காகப் போராடி அவனுக்கு முன் சாதலையே விரும்புகின்றேன்! அதுவே எனது கடமை' என்றான் கும்பகருணன்.

## கும்பகருணன் மறைவு

கும்பகருணன், இராமனுடன் போர் செய்கின்றான். இராமனது அம்புகளால் அரக்கர் சேனை அழிந்தது. கும்பகருணன் கை கால்களை இழந்தான். இராவணனுக்கு அழிவு நேரிடப் போவதை நினைத்து வருந்தினான்! உடன் பிறப்புப் பாசத்தில் தோய்ந்த கும்பகருணன் தன்னுடைய அழிவு அண்மித்துக் கொண்டிருக்கும் பொழுதும் இராமனிடம் விபீடணனைக் காப்பாற்றுக! என்று கேட்கும் பாங்கு, கும்பகருணனிடத்தில் நமக்கு இனம் தெரியாத ஒரு மதிப்பை உண்டாக்குகிறது. மூக்கை இழந்து தன்னை மற்றவர்கள் பார்த்து நகைக்காமல் இருக்கத்தக்க வகையில் உடனே தன் தலையைக் கொய்து கடலில் வீசும்படிக் கேட்டுக் கொள்வது வீரத்திற்கு அணி செய்யும் வீரம் என்பது இராமகாதை நிலவும் வரையில் நிலவும்.

## மாயா சனகன்

இராவணன் ஆசை காட்டுதல், கெஞ்சுதல், சினத்தல் ஆகியவற்றால் சீதையை வசப்படுத்த முடியாமல் போன நிலையில், மாயவித்தைகளைக் காட்டிச் சீதையை அச்சுறுத்த நினைக்கின்றான். சீதையின் தந்தை சனகன் போல மாயையால் ஒரு சனகனைத் தோற்றுவித்துச் சிறைப்படுத்தித் தொல்லைப்படுத்துகின்றான். மாயா சனகனைக் கண்ட சீதை அழுது புலம்புகின்றாள். ஆயினும், மாயா சனகன் இராவணனை ஏற்றுக் கொள்ளும்படி சீதையிடம் சொன்ன அறிவுரையைக் கேட்டபின் சீதை உண்மை உணர்கின்றாள். தான் காண்பது உண்மையான சனகன் அன்று என்று தேறுகிறாள். "கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே" என்பது ஆன்றோர் வாக்கு. ஆதலால், இவன் சனகனாக இருந்தால் தருமம் அழியத்தக்கவைகளைக் கூறான்; வழி வழி வரும் முறைமைகளை மீறான்; பழி உண்டாகும்படி நடந்து கொள்ளமாட்டான். ஆதலால் உண்மையான சனகன் அல்லன் என ஐயப்பட்டாள்.

> "நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
> குலத்திற் பிறந்தார் வாய்ச் சொல்" (திருக்குறள் – 959)

என்ற திருக்குறள் நெறியோடு இந்நிகழ்வினை ஒப்பு நோக்குக.

## மாயா சீதை

சீதை எந்தச் சூழ்நிலையிலும் தான் கொண்ட உறுதியில் தளரவில்லை. அதுமட்டுமன்று – இராவணனை எச்சரிக்கை செய்யவும் தவறவில்லை. இராம – இராவணப் போர் தொடர்ந்து நடக்கிறது. அதனைப் பற்றிய முழுச் செய்திகளையும் கூறுவதை நாம் விரும்பவில்லை. அவசியமும் இல்லை. நாகபாசத்தாலும், பிரமன் அம்பாலும் இராமன், இலக்குமணன் துயருறுதல்: இதைக் கண்ட சீதை துயருறுதல் முதலியன நிகழ்கின்றன. கடைசியாக சாம்பவான் சஞ்சீவி

பர்வதத்தின் மூலிகைகளை கொணரச் சொல்கிறான். 'அனுமன் மூலிகைகளைப் பறிக்கக் காலமாகும் என்று கருதி மலையையே பெயர்த்து எடுத்துக் கொண்டு வருகின்றான். அனுமன் தூக்கி வந்த சஞ்சீவி மலையின் காற்றினால் அனைவரும் பிழைத்து எழுந்தனர். மீண்டும் இந்திரசித்து மாயையால் ஒரு மாயா சீதையை தோற்றுவித்துக் கொள்கின்றான். மாயையென்று அறியாமல் சீதையைக் கொல்வதைக் கண்ட அனுமன் அழுதான்: புலம்பினான். தன்னுடைய முயற்சியெல்லாம் பயனற்றுப் போயிற்றே என்று வருந்துகின்றான். விபீடணன் சீதையின் மரணத்தை நம்புகின்றான். இராமன் சோர்கின்றான். ஆனால் இலக்குமணன் மட்டும் உயிர்த் துடிப்புடன் வீர உணர்வுடன் நிற்கின்றான். சோர்ந்து நிற்கும் இராமனையும் தேற்றிப் போர்புரியத் தூண்டுகின்றான். 'கற்புத் தெய்வத்தை, யாதொரு துணையும் அற்று விளங்கியவளை இந்திரசித்து தீண்டிக் கொன்றான் என்ற பிறகும் சோர்ந்து நிற்பதா அழகு? நாம் துன்பத்தைச் சுமப்பது ஏன்? பிழைத்திருப்பதற்காகவா? அல்லது அரக்கர்கள் மேலுள்ள கருணையினாலா? உழன்று என்ன பயன்? போர்புரிய வருக!' என்று இராமனை அழைக்கின்றான். 'யாராக இருந்தாலும், நம்மால் மூவுலகையும் அழிக்க இயலும்' என்கிறான் இலக்குமணன்.

இந்திரசித்து அயோத்தியை அழிக்கச் சென்றுள்ளான் என்ற செய்தி கேட்டு மேலும் இராமன் சோர்ந்தான். தன்னைச் சேர்ந்த எல்லோருக்கும் துன்பம் ஏற்பட்டு உள்ளதே என்று உழன்றான். இப்போதும் இலக்குமணன், 'என்னைப் போன்றவனல்லன் பரதன், இந்திரசித்தின் பிரமபாணத்தால் விழ! பரதன் எமனையும் துணைக்கு அழைத்துப் போராடி இந்திரசித்தை வீழ்த்துவான்! நீ காணலாம்' என்று மனப் புழுக்கத்துடன் இராமனைத் தேற்றினான். இலக்குமணனுக்கு ஏன் மனப்புழுக்கம்? மலையே நிலை குலைந்ததே என்பதுதான் காரணம்.

இராமனின் நிலை கண்ட விபீடணன், அசோகவனம் செல்கின்றான். உயிருள்ள பதுமையோ, உயிரற்ற பதுமையோ என்று ஐயப்படும் நிலையில் இருந்த சீதையைக் கண்ணாலும் கண்டான்; கருத்தாலும் கண்டான். விபீடணன் கண்ணால் கண்டது சீதையின் திருவுருவத்தை, கருத்தால் கண்டது சீதையின் தூய்மையை, கற்பை, தவத்தின் திருவுருவை!

மீண்டும் அரக்கர்கள் வீரத்தை விலை போகவிட்ட மாயம், மந்திரத்தை தொடர்ந்து, இந்திரசித்து நிகும்பலை யாகம் செய்து இராம - இலக்குமணரை அழிக்க முற்பட்டான். இலக்குமணனை இந்திரசித்துடன் போராட அனுப்பி வைத்தான் இராமன். உயிரும் உடலுமாக இருந்த இலக்குமணன் போர் கருதிப் பிரிந்து சென்றான். இராமன் வருந்தினான். அந்த வருத்தம் விசுவாமித்திரருடன் இராமனை அனுப்பியபோது தசரதன் அனுபவித்ததுபோல் இருந்தது என்று கூறி, இராமன் இலக்குமணனிடம் காட்டியதை தந்தையின் பரிவாக விளக்குகின்றான் கம்பன்.

## இந்திரசித்து அறிவுரையும் மறைவும்

இலக்குமணன் - இந்திரசித்துக்கிடையே நடந்த போரில் இந்திரசித்து தோற்றான். தோற்ற இந்திரசித்து இராவணனிடம் சென்று, சீதையை விடுதலை செய்து பிழைத்துக் கொள்ளும்படிக் கூறினான். இராவணன் கேட்ட பாடில்லை. அதற்கு மாறாக, "நான் யாரையும் நம்பவில்லை";

"என்னையே நோக்கி யான் இந் நெடும்பகை
தேடிக் கொண்டேன்" (கம்பன் - 9124)

என்று கூறினான். 'சாதல் உறுதியேயானாலும் இராமன் புகழ் உள்ளளவும் என் புகழும் நிற்கும் என்றனன் இராவணன். இந்த இடத்தில் இராவணன் மனப் போக்குத் திரும்புகிறது. இராமனை 'நல்லதோர் பகை' என்றனன். 'சாவது உறுதி' என்ற முடிவுக்கு வந்துவிட்டான். இராமனுடன்

போரிட்டான் என்ற புகழ் உண்டென விரும்பிப் போரிடுகின்றான் என்பது திருப்பம். கடைசியாக இந்திரசித்து இலக்குமணனால் கொல்லப்படுகின்றான். இந்திரசித்தின் மரணம் இராமனுக்கு அதிக மகிழ்ச்சியைத் தந்தது. விம்மித முற்றான். சீதையை மீட்டுவிட்டதாகவே எண்ணினான். 'தம்பியுடையான் பகை அஞ்சான்' என்று இலக்குமணனைப் பாராட்டினான். இந்திரசித்தன் மரணத்தால் இராவணன் அழுது புலம்புகின்றான். மண்டோதரி புலம்புகின்றாள்.

## மூலபலப் படை

இந்த நிலையில் வன்னி என்னும் ஓர் அரக்கன் வருகின்றான். அவன் 'இனி, சீதையை இராமனிடம் கொண்டுபோய் விட்டாலும் இராம - இலக்குமணர்கள் நம்மைக் கொல்லாமல் விடப்போவதில்லை. ஆதலால், நமது படை முழுதும் - மூலபலப்படை உட்பட அனைத்தையும் கொண்டு போராடி இராம - இலக்குமணர்களையும், வானரப் படைகளையும் அழிப்பதே நம்முன் உள்ள கடமை' என்றனன்.

'இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?' என்று இன்று வழங்கும் பழமொழி கம்பன் தந்ததே! இராவணனின் மூலபலச் சேனையைக் கண்டு வானர வீரர்கள் அஞ்சி ஓடுகின்றனர். அப்போது வானரர்கள் கூறியது.

'மனிதர் ஆளின் என், இராக்கதர் ஆளின் என் வையம்?' என்பது.

இந்த மனப்போக்கு நாடு முழுதும் மக்களிடம் காணப்படுகின்றது. தங்களுடைய நாட்டின் ஆட்சி எப்படி அமையவேண்டும் என்ற சிந்தனை இன்றைய மக்களுக்குக் கிடையாது. குடியரசு நாட்டின் குடிமகன் என்ற அடிப்படையில் ஒவ்வொரு குடிமகனுக்கும் அரசியற் கடமை

உண்டு. ஆனால், இந்தியாவில் பெரும்பாலான குடி மக்கள் அரசியல் பற்றிச் சிந்திப்பதே இல்லை. சிலர் அப்படிச் சிந்திப்பது பாவம் என்றே கருதுகின்றனர். நாட்டில் அற நெறியும் பண்பும் அமைதியும் சமாதானமும் நிலவ நல்லாட்சி தேவை. இதை அன்று வானரர்கள் உணரவில்லை. இன்று மக்களே உணரவில்லை. மூல பலப்படை வானர வீரர்களைக் கலக்கியது.

இராமன் போருக்கு எழுந்தான். அரக்கர்களை அழித்தான். அரக்கர் குலமே அழிந்தது என்று சொல்ல வந்த கம்பன் 'நீதி மன்றத்தில் பொய்ச் சாட்சி சொன்னவர் குலம்போல அழிந்தது' என்கின்றான். 'வறுமையில் துன்பப்பட்டு இறப்போரைப் போல இறந்தனர்' என்கின்றான்.

## இலக்குமணன் வேலேற்றல்

விபீடணன் மீது இராவணன் ஏவிய வேலை ஏற்க, விபீடணன், சுக்கிரீவன், அனுமன், அங்கதன், இலக்குவன் ஆகியோர்களிடையே போட்டி ஏற்பட்டது. இலக்குவனே முந்தினான். வேலை மார்பில் ஏற்றான்; மூர்ச்சை யடைந்தான். அனுமன் கொண்டு வந்த மருந்தால் மறு முறையும் உயிர் பிழைத்தான். இந்தப் போரின் முடிவில், இராம - இலக்குமணர்களுக்கும் வானவர்களுக்கும் ஒரு தெளிவு பிறந்தது. அதுதான் 'அறம் வெல்லும்; பாவம் தோற்கும்' என்பது.

## இறுதிப்போர்

இராவணன் கோபுரத்தின் உச்சியில் ஏறிப் பார்க்கிறான். பின் அரண்மனைக்குச் சென்று, தான தருமம் செய்கிறான். மீண்டும் போருக்குப் போக ஆயத்தமானான். இப்போது மூன்றாம் முறையாக போருக்குச் செல்லும்போது, இராவணன் போக்கில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது. அதாவது,

இராமனின் மனைவி சீதை என்பதை உறுதிப்படுத்து கின்றான். 'இன்று போர் முடிவில் இராமனை இழந்து அவன் மனைவி சீதை அழவேண்டும் அல்லது என் மனைவி என்னை இழந்து அழவேண்டும்; இரண்டில் ஒன்று நடக்கும்' என்று கூறுகின்றான். இராமனும் போர்க்களத்திற்கு வந்து விட்டான். போர் நடந்தது. இராவணன் படிப்படியாக மனம் மாறுகின்றான்; உணர்கின்றான். ஆனால், மாற்றம் தான் ஏற்படவில்லை. இன்றும் மக்களில் பலர், நல்லதை அறிவார்கள்; உணர்வார்கள். ஆனால், துணிவுடன் ஏற்கமாட்டார்கள். செயலாக்கத்திற்குக் கொண்டுவரத் தயங்கித் தயங்கி மற்றவர்களுடைய உறவை இழக்கின்றனர்; வாழ்க்கையை இழக்கின்றனர். இராவணன் இந்த வர்க்கத்தினன் போலும்! இராவணனுடைய சுத்தவீரத் தன்மையைக் கம்பன்,

"ஒல்காப் போர்த் தொழிற்கு அமைவது ஆனான்"

என்று கூறி விளக்குகின்றான்.

செருகளத்தில் நின்ற இராவணனுக்குத் தெளிந்த சிந்தனை அரும்புகிறது; தனக்கு எதிரில் நின்று போரிடுபவன் மனிதன் அல்லன்; பரம்பொருள் என்று உணர்கின்றான்.

> **'சிவனோ? அல்லன்; நான்முகன் அல்லன்; திருமாலாம்**
> **அவனோ? அல்லன்; மெய்வரம் எல்லாம் அடுகின்றான்,**
> **தவனோ என்னின், செய்து முடிக்கும் தரன் அல்லன்**
> **இவனோதான் அவ் வேத முதல் காரணன்' என்றான்.**

(கம்பன் – 9838)

இராமன், இராவணனது தலையில் ஒன்றை அம்பினால் கொய்து வீழ்த்துகின்றான். இந்த அரிய பேறு தவத்தினால் மட்டுமே வாய்க்கும். இராவணன் கைகள் வெட்டப்படுகின்றன. தலைகள் வீழ்த்தப்படுகின்றன. இராவணன் மூர்ச்சித்து விடுகின்றான். இராவணன்,

இராமனுடைய பிரமன் அம்பும், சக்கராயுதமும் சேர்ந்து தாக்க, உயிரிழக்கிறான். இராவணன் மரணம் எய்தினான். கடவுள்கள் அருளிச் செய்யும் வரம், வீரம் எதுவும் நிற்காது போலும்!

இதனைக் கம்பன்,

முக்கோடி வாழ்நாளும், முயன்றுடைய
பெருந் தவமும், முதல்வன் முன்நாள்
'எக்கோடி யாராலும் வெலப்படாய்'
எனக் கொடுத்த வரமும், ஏனைத்
திக்கோடும் உலகு அனைத்தும் செருக்கடந்த
புயவலியும் தின்று, மார்பில்
புக்கு ஓடி உயிர் பருகி, புறம் போயிற்று
இராகவன் தன் புனித வாளி! (கம்பன்–9900)

என்று கூறி விளக்குகின்றான்.

## பொருது வீழ்ந்த சீர்

இராவணன் போர்க்களத்தில் செத்துக் கிடக்கின்றான். இராவணன் கீழ்மையானவன் அல்லன்; கோழையும் அல்லன்; சுத்த வீரன். இராவணன் கடைசிவரையில் வீர வேள்வியே செய்தான். போர்க்களத்தில் மாண்டு கிடக்கும், இராவணனை இராமன் சென்று பார்க்கும் காட்சியைக் கம்பன்,

"போரிடை மீண்டு ஒருவருக்கும் புறங்கொடாப்
போர் வீரன் பொருது வீழ்ந்த
சீரினையே மனம் உவப்ப, உரு முற்றும்
திருவாளன் தெரியக் கண்டான்" (கம்பன்–9905)

என்று கம்பன் வருணிக்கின்றான். இராவணன் போரில் எவருக்கும் புறங்கொடாதவன். இராம – இராவணன் யுத்தத்திலும் கூட அவன் வீரப்போரே செய்தான்; புற முதுகு

காட்டி ஓடவில்லை. இத்தகு சீர்மையுடைய இராவணனை இராமன் கண்டான். 'இராவணனை எவராலும் எளிதில் வெற்றி கொள்ளமுடியாது. இராமனே, நீ வெற்றி பெற்றதற்குக் காரணம் உன் வீரமன்று. இராவணன் சீதையின் பால் வைத்த காதலினாலேயாம். உடன் துணை நின்றது நின் கோபம். இவ்விரண்டினாலன்றி இராவணனை வெல்ல இயலாது' என்று கூறுகிறான் விபீடணன்.

## மும்மடங்கு பொலிந்த முகங்கள்!

போர்க்களத்தில் மாண்டு கிடந்த இராவணனின் முகம் முன்பு இருந்ததை விடப் பொலிவடைந்ததாகக் கம்பன் பாடுகின்றான். பொதுவாகப் பலருக்கு உயிருடன் வாழும் பொழுதே முகத்தில் சவக்களை தட்டும். இராவணனுக்கோ அவன் மாண்டு பிணமான பிறகு, அவனுடைய முகங்கள் மும்மடங்கு பொலிந்தன என்கிறான் கம்பன். மும்மடங்கு பொலிவு எனின் எப்படி? இராவணன் சீதையைத் தன் மனச்சிறையிலிருந்து விடுவித்ததால் ஏற்பட்ட பொலிவு ஒன்று. இராமனை 'நல்ல தோர் பகை' என்று எண்ணியதால் ஏற்பட்ட பொலிவு இரண்டு. இராமன் பரம்பொருள் என்று தெரிந்தும் புகழ் ஒன்றையே விரும்பிச் சாகும்வரை போர் செய்ததால் ஏற்பட்ட பொலிவு மூன்று என எண்ணலாம். அங்ஙனம் எண்ணுவது முறையும் கூட!

## இராமனின் ஏச்சும் சீதையின் துயரும்

சீதை மீட்கப்படுகின்றாள்; விபீடணன் சீதையை இராமனிடம் அழைத்து வருகின்றான். இந்த இடத்தில் இராமகாதை தடம் மாறுகின்றது. எதிர்பாராமல் இராமன் சீதையைத் திட்டத் தொடங்குகின்றான். வில்லிலிருந்து அம்புகள் புறப்படுவது போல் சுடு சொற்களால் சீதையைச் சுடுகின்றான்.

*"ஊண் திறம் உவந்தனை; ஒழுக்கம் பாழ்பட,*
*மாண்டிலை; முறை உறம்பு அரக்கன் மாநகர்*
*ஆண்டு உறைந்து அடங்கினை; அச்சம் தீர்ந்து, இவண்*
*மீண்டது என் நினைவு? 'எனை விரும்பும்' என்பதோ?"*

(கம்பன் - 10014)

*"பெண்மையும் பெருமையும் பிறப்பும் கற்பும் எனும்*
*திண்மையும் ஒழுக்கமும் தெளிவும் சீர்மையும்*
*உண்மையும் நீ எனும் ஒருத்தி தோன்றலால்*
*வண்மை இல் மன்னவன் புகழின் மாய்ந்தவால்"*

(கம்பன் - 10018)

*என்பன அவற்றுள் சில பாடல்கள். தவத்தின் தவமாய சீதாதேவி, காப்பியம் முழுவதிலும் நெடிது பேசாது வந்த சிறையிருந்த செல்வி பேசுகின்றாள். இல்லை! வினாத் தொடுக்கின்றாள். கற்புக்கனலியாகிய சீதை அழுத்தமான குரலில் இராமனை அடக்க நிலைமாறா வகையில் சுடுகின்றாள்! "தலைவனே! அசோகவனத்தில் சோர்ந்து கிடந்த-கற்புத் தவத்தில் இருந்த-என்னை, அனுமன் கண்ட வண்ணம் தங்களிடம் கூறவில்லையா? அனுமன் தங்களுடைய தூதன் அல்லவா? ஒரு தூதன் கண்டதையும் கேட்டதையும் ஒளிக்காமல் சொல்லும் கடமையுடைய வனல்லவா? அல்லது தூதனாகிய அனுமனிடம் தாங்கள் நம்பிக்கை வைக்கவில்லையா? மேன்மையான குணத்தை யுடையவரே! நான் வருந்திச் செய்த தவம், பேணிக்காத்த நற்குணம், கற்புடைமை எல்லாம் பைத்தியக்காரத்தனமாகி அவமாகி விட்டதே! உத்தமரே, உங்கள் மனத்து உணராமையால்" என்று பேசுகிறாள்! இத்துடன் சீதை நிறுத்திக் கொள்ளவில்லை. ஆண் ஆதிக்கத்தின் அற்பச் செயல்களை, கொடுமைகளைச் சாடுகின்றாள்; பொதுவாகப் பெண்களின் மனத்தை உள்ளவாறு அறியும் அல்லது உணரும் தன்மை ஆடவருக்கு இல்லை! இது இன்று வரையில் உள்ள நடைமுறை, இந்தக் குறை மாந்தருக்கு*

மட்டுமா? நான்முகன், திருமால், சிவன் முதலியோரும் இதற்கு விதிவிலக்கல்லர் என்பது சீதாபிராட்டியின் வாதம்! 'என் கணவர் இராமனும் ஓர் ஆண் மகன் தானே! அவர் எப்படி என்னை, என்னுடைய உள்ளத்தை, உணர்வினைப் புரிந்து கொள்வார்? பரம்பொருளே! இனி நான் யாருக்கு என்னுடைய கற்புத் தவத்தைக் காட்ட வேண்டும்? இப்பொழுது நான் இறப்பதே நன்று. உமது கட்டளையும் பொருத்தமானதே! இப்போது சாவதே என் கடமை' என்றாள்.

சீதை, எரியில் மூழ்க ஆயத்தமானாள்; 'அக்கினி தேவனே! நான் என் மனத்தினாலும் உடம்பினாலும் வாக்கினாலும் என் கற்புக்குக் குற்றம் உண்டாகும்படி நடந்திருந்தால் நீ கோபத்தோடு என்னைச் சுடுவாயாக!' என்று கூறி இராமனுக்கு வணக்கம் செய்துவிட்டு எரியில் இறங்கினாள்! ஐயோ, பாவம்! அன்னை சீதா பிராட்டியின் கற்புக்கனலால் அக்கினிதேவன் சுடப்பட்டான்! அதனைக் கம்பன்,

*நீந்த அரும் புனலிடை நிவந்த தாமரை*
*ஏய்ந்த தன் கோயிலே எய்துவாள் எனப்*
*பாய்ந்தனள்; பாய்தலும், பாலின் பஞ்சு எனத்*
*தீய்ந்தது அவ் எரி, அவள் கற்பின் தீயினால்!*

(கம்பன் – 10037)

என்று பாடுவான்.

தீக்கடவுள் தன்னுள் மூழ்கிய சீதையை எடுத்து வருகின்றான்; வந்து ஆற்றாது புலம்புகின்றான்; கற்புக்கனலியாகிய சீதா பிராட்டியார் வெகுண்டால், 'இந்த உலகம் அழிந்து விடுமே! படைப்பாளனாகிய நான்முகனும் அழிந்து விடுவான்! வான் மழை பொய்க்கும்! இப்புவிக்கோள் உடையும்! ஐயனே! சீதா பிராட்டியை ஏற்றருள்க' என்று வேண்டுகின்றான். தீக்கடவுளின் உரை கேட்ட இராமன் மகிழ்ந்தான். உலகில் தீயே அழிக்க முடியாத

சாட்சி! எப்போதும் எந்தச் சூழ்நிலையிலும் தூய்மையாக இருப்பது தீ! ஆதலால், சீதை ஏற்றுக் கொள்ளத்தக்கவளே என்றான்! இந்த இடத்தில் 'இனிக் கழிப்பிலள்' என்று இராம பிரான் கூறியது பூரணமாக மனமாற்றத்தைக் குறித்ததாகத் தெரியவில்லை அல்லது உணர முடியவில்லை.

'கழிப்பிலள்' என்றாரே தவிர, ஏற்றுக்கொண்டதாகக் கூறவில்லை. மீண்டும் நான்முகன் வேண்டுகின்றான். சீதையை இராமன் ஏற்றுக் கொள்கின்றான்.

## நெடிய பயணம் நிறைவேறியது

நந்தியம்பதியில் இராமனது பாதுகையைத் தலைமையாகக் கொண்டு ஆட்சி செய்த பரதனிடம் அனுமனை அனுப்புகிறான் இராமன். ஆனாலும் காலம் நீட்டித்து விட்டது.

இராமன் வருகைக் காலத்தை நீட்டித்ததில், பரதனுக்கு வருத்தம். எரியில் மூழ்கி மாள நினைத்தான். அனுமன் காலத்தில் தோன்றிக் காத்தான். இராமன் வருகிறான். கோசலநாடு இராமனின் ஆட்சியைப்பெறுகிறது! எங்கும் மகிழ்ச்சி! ஒரு நெடிய பயணம் நிறைவேறியது.

# கம்பனின் குறிக்கோள்

## மானுடம் உயர்ந்தது

கம்பன் என்றொரு மானிடன் பிறந்த பெருமைக் குரியது தமிழ்நாடு என்று பெருமைப்பட்டுக் கொள்கின்றான் பாரதி. ஆம்! கம்பன் மானுடத்தைப் பாடிய கவிஞன்! மானுடம் வென்றதம்மா,' என்று பாடுகின்றான்! கடவுள்கள் வெற்றி பெறுவது அதிசயமன்று. அரசர்கள் வெற்றி பெறுவது அதிசயமல்ல. மனிதன் வெற்றி பெற வேண்டும். இது கம்பனின் குறிக்கோள்! கம்பன் தனது பாத்திரங்களைச் சராசரி மனித உணர்வுகளுடைய பாத்திரங்களாகப்

படைத்துள்ளான். போர்க்களத்தில் மாயாஜாலங்கள் பேசப் பட்டாலும் மானுடமே உயர்ந்து விளங்குகின்றது.

## மதப் பிணக்குக் கூடாது

கோசல நாட்டிலிருந்து இலங்கை வரையில் இராமன் நடக்கின்றான். எத்தனை எத்தனை வகையான இயற்கைக் காட்சிகள்! அவன் சந்தித்த மனிதர்கள், விலங்குகள், எண்ணற்றவை! காவியத்தைப் படித்து முடித்த பிறகு நமக்கு ஏற்படும் உணர்வு கம்பன் ஒரு கவிச்சக்கரவர்த்தி என்பதுதான்! கம்பன் தனது கொள்கை, கோட்பாடுகளைத் தமிழ்நாட்டு மக்களுக்கு எடுத்துக்கூற, இராமகாதையைக் கருவியாகக் கொண்டான் என்பதே உண்மை. தமிழக வரலாறு கம்பனை மிகுதியும் பார்த்திருக்கிறது. தமிழ்நாடு சைவ, வைணவச் சண்டைகளில் ஈடுபட்டு வலிமை இழந்ததை உணர்ந்த கம்பன் சமய ஒருமை நலம் கருதி,

> *"உலகம் யாவையும் தாம் உள வாக்கலும்*
> *நிலைபெறுத்தலும்; நீக்கலும், நீங்கலா*
> *அலகு இலா விளையாட்டு உடையார்—அவர்*
> *தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே!"* (பாயிரம்–1)

என்று பொதுமையாகக் கடவுள் வாழ்த்துப் பாடுகின்றான்.

> *"அரன் அதிகன் உலகு அளந்த அரி அதிகன்"*
> *என்று உரைக்கும் அறிவி லோர்க்குப்*
> *பரகதி சென்று அடைவரிய பரிசேபோல்"* (4470)

என்று பேசுவான் கம்பன்.

## நன்றியறிதல்

தமிழ் மக்கள் பல்வேறு பண்புகளில் சிறந்திருந்தாலும் நன்றி பாராட்டும் நற்பண்பில் மேலும் வளரவேண்டும் என்பது கம்பனின் விருப்பம். அந்த உணர்வின் தூண்டுதலிலேயே கும்பகருணப் பாத்திரத்தைப் படைக்

கின்றான். இராமகாதையில் மிக உயர்ந்து விளங்கும் பாத்திரங்களில் கும்பகருணன் ஒருவன். அறநெறியின் பெயரால், உறவை, உடன்பிறப்பை, பரிவை, பாசத்தைத் துறத்தல் கம்பனுக்கு முழு உடன்பாடன்று. காவியம் முழுதும் மனிதம் மேம்பட்டு நிற்கின்றது. ஏன்? கம்பன் தன் புரவலராக விளங்கிய திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளல் பெயரை இடம் தேர்ந்து அமைத்து நன்றி பாராட்டுகின்றான். இராமனுக்கு முடி சூட்டும்போது சடையப்ப வள்ளல் மரபினர் மணிமுடியை எடுத்துக் கொடுக்க வசிட்டர் சூட்டினார் என்பது காவியம். பழங்காலத்தில் முடியெடுத்துக் கொடுக்கும் உரிமை வேளாண் குடியினரிடமே இருந்தது. பின்னர் வணிகர்கள் கைக்கு மாறியது. அடுத்து அடுத்துப் புரோகிதர்கள் கைக்கு மாறியது. கம்பன் காலத்தில் வேளாண்குடி மரபினர் சிறந்து விளங்கியமையை இராமகாதை முழுதும் உய்த்துணர முடிகின்றது.

## சகோதர பாசம்

தமிழ்நாடு சிறிய நிலப்பகுதி உள்ள நாடு. ஆயினும் மூவேந்தர்கள், பல சிற்றரசர்கள் இவர்களுக்குள் ஓயாத போர்! தமிழரசர்களின் ஆட்சி மறைந்ததற்குக் காரணம் அந்நியப் படையெடுப்புகள் அல்ல. தமிழ் நாட்டு அரசர்கள் தம்முள் பொருதியே அழிந்து போயினர். அதனால் கோசல நாட்டரசிலும் சரி, இலங்கையிலும் சரி, ஆதிக்கப் போட்டிகள் இல்லை என்று காட்டுகின்றான் கம்பன். கெட்ட போரிடும் கலகம் இரண்டு அரசுகளிலும் இல்லை. இராமகாதையில் பண்பாட்டின் சிகரமாக விளங்கும் பாத்திரம் பரதன். இராமனுடனேயே இருந்தவன் இலக்குமணன். ஆனால், பரதன் இராமனுடன் இருந்த காலம் குறைவே. அந்த நிலையிலும் பரதனின் அன்பு விஞ்சியது. பரதன் இராமன்பால் கொண்ட அன்பு ஆயிரம் இராமன் அன்பிற்கும் மேம்பட்டது. தாயின் ஆணை, தமையன் இராமன் ஆணைகளுக்குப் பின்னும் ஆட்சியை நஞ்செ்ன நினைத்தான்; முடி சூட்டிக் கொள்ள மறுத்தான்;

இராமனுக்கே முடி சூட்டுவேன் என்று சூளுரைக்கின்றான். பரதன் பாராட்டப்படும் முறையிலிருந்து பரதனின் தூய அன்பு, துறவுள்ளம், அர்ப்பணிப்பு உள்ளம் வெளிப்படுகின்றது. பரதனைக் கண்ட குகன்.

> "ஆயிரம் இராமர் நின் கேழ்
> ஆவரோ தெரியின் அம்மா!"

என்று பாராட்டுகின்றான். பரதனின் தியாகம், புகழ் இராமனையும் விஞ்சியது! ஆம்! இராமனுக்கு முடி மறுக்கப் பெற்றது! அதனால் துறந்தான்! ஆனால் பரதனுக்கு முடி வழங்கப் பெற்றது. பரதன் ஏற்க மறுத்துத் துறந்தான். ஏன்? இராமனே பரதனைச் சிந்தை மகிழ, செவி குளிரப் பாராட்டு கின்றான். உடன் பிறந்து, உடன் பயின்று, உடன் விளை யாடிக் காட்டுக்கும் உடன் வந்திருந்த இலக்குமணனிடம் இராமன் பரதனின் பெருமையைப் பாராட்டிக் கூறு கின்றான்.

> "எத்தாயர் வயிற்றிலும் பின் பிறந் தோர்கள் எல்லாம்
> ஒத்தால் பரதன் பெரிது உத்தமன் ஆதல் உண்டோ?"

என்று பாராட்டுகின்றான்? ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள். அனைவரும் ஒத்து இருப்பதில்லை. பங்காளிச் சண்டை, பங்காளிக் காய்ச்சல் என்றெல்லாம் வழி வழியாக வழக்கில் வந்துள்ளன. உடன்பிறந்தாரைப் பேணார்! தம்பிகளிடத்தில் அன்பு காட்டார்! ஆனால், கடவுளுக்கு ஆயிரம் ஆயிரம் பூசைகள் செய்வர்.

> "பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு
> நக்கு நிற்பன் அவர் தம்மை நாணியே"

என்பது அப்பர் வாக்கு! பரதன் மூலம் கம்பன் நம்மனோர்க்கு உணர்த்துவது ' செல்வம் பெரிதன்று, உடன் பிறப்பு அன்பே பெரிது; பெறுதலுக்குரியது; காட்டுதலுக் குரியது என்பதாகும். பரதனைப் போல் பல உத்தமர்கள்

தோன்றவேண்டும். அப்போதுதான் குடும்பங்கள் அமையும்! சுற்றம் அமையும்.

## வறுமை நீங்க வேண்டும்

கம்பன் தன் நெடிய காவியத்தில் வாழ்க்கை நெறிகளை அமைவாக உணர்த்திச் செல்கின்றான்.

ஏழையாக இருப்பது பாவமன்று! ஏழ்மையைத் துன்பமாக, துயரமாக வளர்த்துக் கொள்வது தீது. ஏழ்மையின் காரணத்தை அறிந்து கொண்டு அறிவார்ந்த நிலையில் மாற்ற முயற்சி செய்தால் ஏழ்மை மாறும்! முயன்றால் ஏழைகளால் எதையும் செய்ய இயலும். ஏழைகளால் செய்ய இயலாதது என்ற ஒன்று இல்லை. பாரதி.

> "கஞ்சி குடிப்பதற் கில்லார்—அதன்
> காரணங்கள் இவை யெனும் அறிவு மில்லார்"

என்று கூறியதுபோல், இன்றைய ஏழைகள் கஞ்சியில்லாமல் இருப்பதற்குரிய காரணத்தை அறிந்து கொள்ளவில்லை. அறிந்து கொள்ளாதது மட்டுமன்று, தங்கள் ஏழ்மைக்குக் கடவுளும் விதியும் காரணம் என்று பிழை படக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இது முற்றிலும் தவறு. அண்ணல் இராமபிரான், இலக்குவன் அமைத்த பர்ணசாலையைக் கண்டு வியந்தபோது,

> "தா இல் எம்பிகை சாலை சமைத்தன
> யாவை, யாதும் இலார்க்கு இயையாதவே,"
>
> (கம்பன்–2096)

என்று கூறுவதை உணர்க!

நமது நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு இந்தத் துணிவு வரவேண்டும்; வரவழைக்கப்பட வேண்டும். அன்றே நமது நாடு வளரும். இந்த நாட்டில்

ஒவ்வொரு மனிதனும் தற்சார்புடைய பொருளாதார வசதி பெறுதல் வேண்டும். சார்ந்து வாழ்தல் தீது. சுரண்டும் பொருளாதாரச் சமுதாயம் அறவே கூடாது. நாடும் நாடா வளத்தனவாக வளர வேண்டும். அந்நிய மூலதனத்தின் சந்தை நாட்டின் வளர்ச்சிக்கு உதவாது; சுதந்திரத்திற்கும் பாதுகாப்பு இல்லை; அந்நிய மூலதனம் ஊளைச் சதை போலத்தான்! ஆதலால், கம்பனின் கருத்துப்படி ஏழ்மை அழிவுக்குரியதல்ல; ஆக்கந்தரும் உந்து சக்தி என்பதை ஓர்க!

## தொண்டலால் ஊதியமில்லை!

மனித்குல வரலாறு இடையறாது வளரத் துணையாய் அமைவது தொண்டு. பேசுதல் எழுதுதல் ஆகியவற்றை விடத் தொண்டு செய்தலே உயர்ந்தது. இதனைக் 'கைத் திருத்தொண்டு' என்பார் சேக்கிழார். சிவமும், கைத்திருத் தொண்டு செய்த அப்பரடிகளுக்கு வாசியில்லாத காசு தந்தருளிய பான்மையை உணர்க! அப்பரடிகள், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்றும் "தொண்டலாது உயிர்க்கு ஊதியம் இல்லை' என்றும் அருளிச் செய்ததையும் உணர்க.

கம்பன், இராமன் வாயிலாகத் தொண்டு பற்றிக் கூறும் கருத்து, பலகாலும் படித்துணரத்தக்கது. செல்வத்திற்கு வரம்பு உண்டு. எண்ணியபடி செல்வம் வருவதில்லை. வந்தாலும் நிற்பதில்லை. தொண்டுக்கு வரம்பில்லை. தொண்டு செய்யச் செய்ய மேலும் மேலும் விருப்பம் தூண்டப்பெறும். ஆர்வம் வளரும். இந்த உலகத்தில் உடலுக்குத் தரப்பெறும் உணவு, தற்காலிகமாகப் பசியைத் தணிக்கும். ஆனால், மீண்டும் பசிக்கும் உணவுக்கும் பயன்படுவது கூலி. ஊதியம்! உண்ட உணவு அன்றாடம் கழிப்பறைகளைத் தூர்க்கும் வாழ்க்கை, முடிவில் இடுகாட்டில் கிடக்கும். ஆனால், தொண்டும்

தொண்டின் பயனும் உயிர்க்கு ஊதியமாவனவாம். ஊதியம் உயிர்க்கு ஊதியம். கம்பனின் பாடல் இதோ;

*பின்னும் தம்பியை நோக்கி, பெரியவன்*
*'மன்னும் செல்வத்திற்கு உண்டு வரம்பு; இதற்கு*
*என்ன கேடுண்டு? இவ் எல்லை இல் இன்பத்தை*
*உன்னு மேல் வரும் ஊதியத் தோடு என்றான்.*

(கம்பன்–2100)

ஆம்! மானுட வரலாற்றில் இடம்பெற விரும்பினால் தொண்டு செய்ய வேண்டும். இது கம்பனின் வாழ்க்கை நெறி.

## யாரொடும் பகை கொள்ளற்க

கம்பன் 'யாரொடும் பகை கொள்ளக்கூடாது!' என்ற வாழ்க்கை நெறியை வலியுறுத்துகின்றான்.

*'யாரொடும் பகை கொள்ளலன் என்ற பின்*
*போர் ஒடுங்கும்; புகழ் ஒடுங் காது; தன்*
*தார் ஒடுங்கல் செல்லாது: அது தந்தபின்*
*வேரொடும் கெடல் வேண்டல் உண்டாகுமோ?"*

(கம்பன்–1420)

ஆம்! கருத்து வேற்றுமைகள் வரலாம். உடன்பாடு இல்லாமற் போகலாம்! இவை பகையாக வளர வேண்டும் என்ற அவசியமில்லை! பகை வளரின் கலகம், போர் முதலிய அழிவுச் செயல்கள் நிகழும். கம்பன் உயிர்க்குல ஒருமைப்பாட்டை ஆன்ம நேய ஒருமைப்பாட்டை உணர்த்துகின்றான். இராமன் காட்டிற்கு வந்த இடத்தில் அவனுடன் உடன் பிறந்தவர்கள் எண்ணிக்கை ஏழு ஆயிற்று.

*'குகனொடும் ஐவர் ஆனேம்*
*முன்பு: பின் குன்று சூழ்வான்*
*மகனொடும் அறுவர் ஆனேம்;*
*எம்முழை அன்பின் வந்த*

அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தான் நுந்தை! (கம்பன்–6508)

என்ற பாடலை ஓர்க, இன்று, பல நாள் பழகினாலும் உடன்பிறப்பாளரை, உறவினரைத் தேர்ந்தெடுக்க இயலாத நிலையில் அன்பு ஊற்று – சுயநலத்தால், ஆணவத்தால் தூர்ந்து கொண்டு வருகிறது. இந்த நிலை, நமது சமுதாயத்திற்கு நல்லதன்று. பகையைத் தவிர்க்கும்படி கம்பன் அறிவுறுத்துகின்றான். பகைமையைத் தவிர்த்தால் 'போர் ஒடுங்கும்' என்பது கம்பன் கருத்து. போர் ஒடுங்குவதால் பாருக்கும் புகழ் குறையாது என்றும் உறுதி கூறுகின்றான். மக்களுக்குள் அடிக்கடி சண்டை! வீடுகளுக்குத் தீ வைப்பு! பேருந்துகளுக்கு நெருப்பு! கொலை, கொள்ளை இவை ஏன்? ஏன்? வலிமையைக் காட்ட விரும்புகின்றார்கள்! வறுமையை, புன்மைச் சாதிகளை எதிர்த்துப் போராடுவதில் வலிமையைக் காட்டலாமே! ஆற்றலை, அடுத்தவனைக் கெடுப்பதற்குப் பதில், அடுத்தவனிடம் காட்டுவதற்குப் பதில், தரிசு நிலங்களைப் பசுமைப் புரட்சி செய்வதில் காட்டலாமே! நல்லதற்காகப் போர் என்று கூறுவது கூடச் சமாதானம் தான்! நல்லதை அமைதி வழியாகவும் சாதிக்கலாம்.

ஆனால் இஃது உண்மையன்று. எந்தப் போரும் சிக்கல்களைத் தவிர்த்ததாக வரலாறு இல்லை! போரின் மூலம் சிக்கல்கள் வளர்ந்துள்ளன. அது மட்டுமா? மனிதர்களிடையில் வஞ்சினமும் கடினசித்தமும் தோன்றி வளர்ந்து வருகின்றன. வரலாறு திரும்புகிறது என்பது அறிவார்ந்த நிலையன்று. வரலாறிலிருந்து படிப்பினைகளைக் கற்றுக் கொண்டு வரலாற்றைப் புதுப்பிப்பதே வாழும் மாந்தர் கடமை. போர் வரலாறு திரும்பத் திரும்ப வருதல் சிந்தனையும் செயலுமற்ற மாந்தர் வாழும் உலகத்தில் தான்

நிகழும். நமது நாட்டைப் பொருத்த வரையில் வரலாற்றில் மாற்றம் இல்லை! பல நூறு ஆண்டுகளாக மாற்றம் இல்லை! கம்பனை, காலத்தை வென்றெடுக்கும் கவிஞனாக்க வேண்டும். அதற்குள்ள ஒரே வழி கம்பன் கண்ட நாட்டை ஆட்சியைக் காண்பதுதான்!

## போரற்ற உலகம்

இன்று போரற்ற உலகம் தேவை. படைக்கலன்கள்- குறிப்பாக அணு ஆயுதங்கள் உற்பத்தி செய்வதை நிறுத்த வேண்டும். தடை செய்ய வேண்டும். உலக நாடுகளவை (ஐ.நா. சபை) உண்மையிலேயே உலக நாடுகளின் அவையாக விளங்க வேண்டும். உலக நாடுகளின் அவையில் உள்ள நாடுகள் சிறியதாயினும் பெரியதாயினும் தைரியத்துடனும் உறுதியுடனும் வல்லரசுகளுக்குப் பயப்படாமல் வாக்களிக்கும் நிலைமையை உருவாக்க வேண்டும். வரலாறு கொடிய போர்களைக் கண்டு, பல கோடி மக்களைப் பலி கொடுத்தாயிற்று. பல நூறு ஆண்டுகள் உழைப்பினால் உருவான உடைமைகளை, சொத்துக்களை இழந்தாயிற்று! இனி போர் வந்தால் மனிதப் பூண்டே இருக்காது. பழைய கற்காலத்திற்குச் செல்ல வேண்டியதுதான்! ஆதலால், போரினைத் தவிர்க்க வேண்டும். பேரரசுகள், சிறிய நாடுகளை பொருளாதார ஆதாயத்தைக் காட்டித் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வர முயற்சி செய்யக்கூடாது. எந்த ஒரு நாட்டிலும் எதற்காகவும் காந்திய நெறியில்- அறவழியில் போராட வேண்டுமே தவிரப் படை அடிப்படையிலும் வன்முறையிலும் போராடுவதை ஊக்குவிக்கக் கூடாது; உதவி செய்யக்கூடாது. சமய அடிப்படையில் கூடப் போரினை நினைவூட்டும் திருவிழாக்களை நிறத்திவிடுவது நல்லது. பள்ளிகளில், கல்லூரிகளில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி முதலியவற்றுடன் பண்பாட்டுப் போட்டி, சண்டை

போடாமைப் போட்டி ஆகிய போட்டிகள் வைத்து மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கலாம்.

சங்க காலத்திலேயே-அதாவது போர் செய்வது அரசனின் ஒழுகலாறு என்று இருந்த காலத்திலேயே ஔவையார், அதியமான்-தொண்டைமானின் போரைத் - தவிர்க்கத் தூது போனார். 'சமாதானம் செய்து வைப்பவர்கள் பாக்கியவான்கள்' என்று சமய நூல்கள் அனைத்தும் ஒருமுகமாகக் கூறும்.

கம்பன் இராமகாதை வாயிலாக இராவணனின் உறவுச் சுற்றம் மூலமாகப் போரைத் தவிர்த்திருக்கும்படிக் கூறுகின்றான். இராமனுக்குப் போர் இலட்சியமன்று. சீதையை மீட்பதுதான் இலட்சியம்! சீதையை இராவணன் விடுதலை செய்திருந்தால் இராவணன், சீதையை நினைத் ததும், எடுத்ததுமாகிய குற்றத்தை இராமன் மன்னித் திருப்பான் என்று மாலியவான் கூறுகின்றான். ஆனால், இராவணன் மறுத்துவிட்டான்.

தமிழில் வழங்கும் ஒப்பற்ற காவியங்களாகிய இராம காதை பெண்ணின் காரணமாகவும், பாரதம் நிலத்தின் காரணமாகவும், கந்தபுராணம் ஆதிக்கத்தின் காரணமாகவும் நடந்த போர்களைக் கூறுகின்றன. இராம-இராவணப் போரில் இராவணன் இராமனால் கொல்லப்பட்டான்! பாரதப் போரில் துரியோதனாதியர் அழிந்து போயினர். கந்தபுராணத்தில் சூரபதுமன் திருத்தப்பட்டு வாழ்விக்கப் படுகின்றான்.

அழித்தல் அறமன்று. திருத்தப்படுதலும் வாழ்விக்கப் படுதலுமே அறம். தமிழ் மரபு. 'ஆழ்க தீயதெல்லாம்' என்பதுதான். இந்த கந்தபுராண மரபு பின்பற்றப்பட்டால் போர் ஒடுங்கும்; புவி வளரும். இரண்டாவது உலகப்

போருக்குப் பிறகு, போர் வராமைக்குக் காரணம் அச்சமேயாம்-அறிநெறி சார்ந்த எண்ணத்தினால் அன்று. வீட்டையும் நாட்டையும் அமைதியில் நடத்துக!

*யாதும் ஊரே! யாவரும் கேளிர்"*

என்பதும்,

*'காக்கை குருவி எங்கள் சாதி—நீள்*
*கடலும் மலையும் எங்கள் கூட்டம்'*

என்பதும் நமது மந்திரங்களாகட்டும்; வாழ்க்கை நெறியாகட்டும்! வளர்க! வாழ்க!

# 16

## இராமனும் சீதையும்

இராமாயணம் ஓர் இந்திய தேசிய காதை. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே நாடு முழுதும் பேசப்பட்ட ஒரு காதை. இக் காதை சாதி, மொழி, இனம் ஆகிய வேறுபாடுகளைக் கடந்து நாடு முழுதும் பரவியது. இக் காதையை இலக்கியமாகப் படைக்க விரும்பியவர்கள் தத்தம் மொழியில் அந்தந்தச் சூழலுக் கேற்பக் கூட்டியும் குறைத்தும் செய்துள்ளார்கள். இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் இராமகாதையுண்டு. இவை எல்லாவற்றிலும் கதை ஒரு மாதிரியாக இல்லை. நிறைய வேறுபாடுகளும் முரண் பாடுகளும் உண்டு. முரண்பாடுகளுக்குக் காரணம், காலத்தின் சூழ்நிலையும் மொழிவழி நாகரிக அமைப்புமாகும். வால்மீகி, வடமொழியில் இராமகாதையைச் செய்தார். தமிழில் கம்பன் செய்தான். வால்மீகிக்கும் கம்பனுக்கும் காவியப்போக்கில் நிறைய வேறுபாடுகள் உண்டு. கம்பராமாயணம் ஒரு மொழி பெயர்ப்பு நூலன்று. முதல் நூலைத் தழுவி எழுந்ததேயாகும். இத்தகைய இராம காதையை ஆராய்கின்றபோது, அந்தக் கவிஞனின் கூற்றுக்களை வைத்தே ஆராய வேண்டும். இங்கொன்றும்

அங்கொன்றுமாக எடுத்து ஆராய்வது-விமரிசனம் செய்வது இலக்கிய மரபுக்கு உகந்ததன்று.

கம்பனின் கருத்துப்படி இராமன் ஒரு சிறந்த தலைமகன். தெய்வத்தன்மை உடையவன். ஆனால், வான்மீகியின் கருத்துப்படி இராமன் ஒரு சாதாரண மனிதனே. வான்மீகி, இராமனைத் தெய்வத் தன்மை யுடையவனாக யாண்டும் குறிப்பிடவில்லை. இராமனைப் பற்றி ஆராய வேண்டுமென்றால், ஒன்று முழுவதாக வான்மீகத்தை வைத்து ஆராய வேண்டும் அல்லது கம்ப ராமாயணத்தை வைத்து ஆராய வேண்டும். ஒன்றோ டொன்றைப் போட்டுக் குழப்புவது-உப்பையும் சீனியையும் கொட்டிக் கலப்பது போலாகும்.

கம்பன் இராமகாதை செய்ததன் நோக்கமே மிகச் சிறந்தது. தமிழகத்தின் முச்சந்திகளில் வான்மீகத்தின் வழி இராமகாதை பயின்றது. கம்பனும் அப்படிப் பயின்ற இடங்களிலிருந்து கேட்டிருக்கின்றான். அக்கருத்துக்கள் தமிழ் நாகரிகத்திற்கு இயைந்தவாறு இல்லாமையையும் தன் மனத்திற்கு இசைவில்லாமையையும் உணர்ந்து வான்மீகத்தின் கருத்துக்கள் தமிழகத்தில் பரவாமல் தடுக்கும் நோக்கத்துடனேயே கம்பன் இராமகாதையைச் செய்தான். இரண்டுக்கும் அச்சு ஒன்றே தவிர செய்தி வெவ்வேறு என்பதை மறந்துவிடக் கூடாது.

'இராமனும் சீதையும்' என்ற தலைப்பில் தலைவர் பெரியார் அவர்கள் எழுதிய கட்டுரை மேற்குறிப்பிட்ட வாறான குழப்பத்தையே விளைவிக்கிறது.

தந்தை பெரியார் அவர்கள் "இராமனுக்கு அவன் தந்தை அவசரமாக நாளைக்கே முடிசூட்ட வேண்டுமென்கிற முடிவுக்கு வந்து, இராமனை அழைத்து, "இராமா! நாளைய

தினம் உனக்கு முடிசூட்ட முடிவு செய்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறேன். பரதன் இங்கு இல்லாத நாளே உன் முடிசூட்டுக்கு ஏற்ற நாள். ஆதலால், இன்று இரவு உன்னுடைய நண்பர்களோடு ஜாக்கிரதையாக இருந்து உன்னைப் பாதுகாத்துக்கொள். ஏன், இப்படிச் சொல்லு கிறேன் என்றால் பரதனுக்கு வேண்டியவர்களால் உனக்கு ஆபத்து நேரலாம். ஒரு சமயம் பரதனாலும் முடிசூட்டு நிகழ்ச்சி தடைப்படலாம். ஆதலால், ஜாக்கிரதையாய் உன்னைப் பாதுகாத்துக்கொள் என்பதாக தசரதன் சொல்லுகின்றான்" என்று எழுதுகிறார். தலைவர் பெரியார் அவர்களின் இக்கருத்து வான்மீகத்தின் வழியது. இத்துறையில் கம்பன் முற்றிலும் மாறுபடுகிறான். தசரதன் இராமனைக் கூப்பிட்டு இரந்து கேட்கிறான். தன்னுடைய பொறுப்பி லிருந்து தன்னை விடுதலை செய்யும்படி, அங்கு முடிசூட்டும் நாள் பற்றித் தசரதன் குறிப்பிடவில்லை.

*"அனைய தாதலின் அருந்துயர்ப்*
*பெரும்பர மரசன்*
*வினையின் என்வயின் வைத்தனன்*
*எனக்கொளல் வேண்ட*
*புனையு மாமுடி புனைந்திந்த*
*நல்லறம் புரக்க*
*நினையல் வேண்டும்யான் இன்வயிற்*
*பெறுவது ஈதென்றான்"*

இதுவே கம்பன் கருத்து. பரதன் இல்லாத நாளாக இருக்க வேண்டும் என்ற செய்தி கம்பனில் இல்லை. மேலும் இராமன், முடிசூட்டிக் கொள்வதற்குக் கடமையுணர்ச்சி யோடு ஏற்றுக் கொண்டானேயொழிய விருப்பத்தோடு ஏற்றுக் கொண்டானில்லை. முடிசூட்டிக் கொள்வதில் இராமனுக்கு விருப்புமில்லை—வெறுப்புமில்லை. தந்தையும்

நாட்டின் அரசனுமாக இருக்கின்ற தசரதன் கடமை என்றேவியதை ஏற்றுச் செய்யும் உணர்வுடனேயே ஒத்துக் கொண்டான் இராமன். இதனைக் கம்பன்,

"தாயைப் பரிசுரை செயத்
தாமரைக் கண்ணன்
காத லூற்றில் விகழ்ந்தினன்
கடனி தென் றுணர்ந்தும்
யாது கொற்றவ னேவிய
ததுசெய லன்றோ
நீதி யெற்கென நினைந்துமப்
பணிதலை நின்றான்.

—அயோ. 72.

என்ற பாடலில் விளக்குகிறான். இக்கருத்துக்களின்படி இராமனிடத்து எந்தக் குற்றமுமில்லை. மாறாக, குணத்திற் சிறந்தவனாகத் திகழ்கின்றான்.

கைகேயிக்குப் பிறக்கும் மைந்தனுக்கு முடிசூட்டி வைப்பதாய்த் தசரதன் உறுதி கூறியதாகக் கம்பனில் செய்தியில்லை.

தமிழர் பின்பற்றக் கூடிய ஆதார நூல் கம்பனே யொழிய வான்மீகம் அல்ல. தமிழகத்தில் வழங்கிய வான்மீக இராமாயணத்தின் வழுக்களை நீக்கித்தான் கம்பன் தமிழ் நாகரிகத்திற்கேற்றவாறு இராமகாதையைச் செய்தான். தமிழ்நாட்டு மக்கள் இன்று விரும்பிப் படிப்பது கம்ப இராமா யணமே தவிர வான்மீக இராமாயணமன்று. ஆதலால், இத்துறையில் இராமன் தவறு செய்ததாகக் கம்பனும் நினைக்கவில்லை. கம்பனைப் பயில்கின்ற தமிழரும் நினைக்கவேண்டிய அவசியமில்லை.

கைகேயி, இராமனுக்கு முடிசூட்டும் செய்தியை எடுத்த எடுப்பில் மறுக்கவில்லை. மாறாக, மகிழ்ச்சியடைகிறாள்.

இராமனுக்கு முடிசூட்டும் செய்தியைக் கொண்டுவந்த மந்தரைக்குத் தான் அணிந்திருந்த முத்துமாலையைக் கழற்றிப் பரிசாகத் தருகிறாள். கைகேயிக்கும் இராமனுக்கு முடிசூட்டுவதில் உடன் பாடேயாம். பின்னர்தான் மந்தரையினுடைய-ஆசையூட்டுகின்ற-சூது நிறைந்த சொற்களால் மனம் திரிந்தாள். இதனைக் கம்பன்,

*"தீய மந்தரை யிவ்வுரை,*
*செப்பலுந் தேவி*
*தூய சிந்தையுந் திரிந்தது*
*சூழச்சியி னிமையோர்*
*மாயை யும்மவர் பெற்றுள்ள*
*வரமுண்மை யாலும்*
*ஆய வந்தண ரியற்றிய*
*அருந்தவத் தாலும்"*

அயோ. மந்தரை. 77.

என்று பேசுகின்றார்.

'தூய சிந்தையும் திரிந்தது' என்ற சொற்றொடர் நினைந்தின்புறத்தக்கது. இக்கருத்தினையே, பின்னர் இராமன் கூற்றாக வைத்துக் கவிஞன் கூறுவது சிந்தனைக்குரியது.

*"நதியின் பிழையன்று*
*நறும்புனலின்மை யற்றே*
*பதியின் பிழையன்றே*
*பயந்து நமைப் புரந்தான்*
*மதியின் பிழையன்று*
*மகன்பிழை யன்று மைந்த*
*விதியின் பிழைநீ*
*இதற்கென்னை வெகுண்ட தென்றான்"*

அயோ. நகர்நீங். 134

என்பது பாடல்.

'ஆற்றில் நீர் இல்லாதது ஆற்றின் பிழையன்று அதுபோல, இந்நிகழ்ச்சிக்கு தசரதனும் பொறுப்பல்லன். தசரதன் பிழையன்று-தம்மை வளர்த்த தாயாகிய கைகேயி யின் மதியிலும் பிழையில்லை-பரதனின் பிழையுமன்று. விதியின் பிழையே' என்று வெகுண்ட இலக்குவனுக்கு இராமன் ஆறுதல் கூறுகின்றான். இங்ஙனமிருக்கக் கைகேயிக்குத் தெரியுமென்றும் இராமனுக்குத் தெரியு மென்றும் கம்பராமாயணத்தில் இல்லாத ஒன்றை எடுத்துக் காட்டிக் கூறி விவாதிப்பதில் பயனென்ன? இக் குற்றச் சாட்டுக்குக் கம்பனின் பாடல் ஒன்றையே சான்றாகக் காட்டியிருப்பது வியப்பைத் தருகிறது. பாட்டுடைப் பொருள், குற்றச் சாட்டுக்கு உடன்பாடாக இல்லை. இராமன் கூறுவதாகக் கவிஞன் கூறும் பாடல்;

"வரனில் உந்தைசொன்
மரபி னாலுடைத்
தரணி நின்னதென்
றியைந்த தன்மையால்
உரனில் நீபிறந்
துரிமை யாதலால்
அரசு நின்னதே
ஆள்க வென்னவே!

அயோ. திருவடி. 111

இப்பாட்டுக்குப் பெரியார் பொருள் கொள்ளும்முறை தாம் கொண்ட முடிவுக்கு ஏற்றவாறு பொருள் காண்பதாக இருக்கிறதே தவிர பாட்டுக்குப் பொருள் காணும் முறையில் இல்லை. இந்தப் பாடல், இராமன் பரதனை நோக்கிக் கூறியது. சொல்லுமிடம் திருவடி சூட்டும் படலம். இந்த பாடலில் 'வரனில்' என்று குறிப்பிடுவது கைகேயி தசரதனிடத்தில் வாங்கிய இரண்டு வரத்தைக் குறிக்குமே தவிர, 'சுல்கம்' தொடர்புடைய தன்று. தந்தை சொன்னதன் காரணமாகவும் தரணி உன்னது என்றும் குறிப்பிடுகின்றான்.

இப்பாடலுக்கு இங்ஙனம் பொருள் காண்பதே முறை. ஆதலால், இராமன் முடிசூட்டிக் கொள்ள விருப்பமுடையவனாகவும் இல்லை. தனது தந்தையும், நாட்டின் அரசனுமாகிய தசரதனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடத்தல் கடமை என்ற உணர்விலேயே முடிசூட்டிக் கொள்ள ஒப்புக் கொள்ளுகிறான். தசரதன், கைகேயிக்கு அவளிடத்தில் உண்டாகும் புத்திரனுக்கு முடிசூட்டி வைப்பதாகச் சொன்ன செய்தி கம்பனில் இல்லை. கைகேயி பெற்ற வரம், அவள் தசரதனுக்கு மனைவியான பிறகு சம்பராசுரனுக்கும் தசரதனுக்கும் நடந்த போரில் தசரதனுக்குத் திறமையாகத் தேரோட்டி, போரில் அவன் வெற்றிப் பெறக் காரணமாக இருந்தமைக்காவே வழங்கப்பெற்றது. வரம் பொதுப்படையாக வழங்கப்பெற்று, வேண்டிய பொழுது வேண்டியதை அளிப்பதாக அளிக்கப் பெற்றதே தவிர வரம் இன்னது என்று கைகேயியும் கேட்டுக் கொள்ளவில்லை. தசரதனும் குறிப்பிடவில்லை. அயோத்தியா காண்டம் மந்தரைச் சூழ்ச்சிப் படலத்தில் வரும் 81, 82-ஆம் பாடல்கள் இதனையுணர்த்தும்.

கைகேயி, பரதன் நாடாள வேண்டும்: இராமன் காட்டுக்குச் செல்ல வேண்டும் என்று சொன்ன பொழுது இராமன், துறந்தாரில் தூய்மையுடையோனாக-சற்றும் சலனமின்றி மனம் நிறைந்த மலர்ந்த முகத்துடன்,

"மன்னவன் பணியன் றாகின்
நும்பணி மறுப்ப னோவென்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்றதன்றோ
என்னிதின் உறுதி யப்பால்
இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கான மின்றே
போகின்றேன் விடையுங் கொண்டேன்"

அயோத். சூழ். 110

என்கிறான்.

இந்தப் பாடல் இராமனின் பற்றற்ற உணர்வுக்கும் ஒழுக்கத்திற்கும் சீலச் சிறப்பிற்கும் எடுத்துக்காட்டு. கவிஞன் கம்பன் இந்த இடத்தில் இராமனுடைய பண்பாட்டை வியந்து தன் கூற்றாகக் கூறும் பாடல் பெரியார் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது.

*"இப்பொழுது எம்ம னோரால்*
*இயம்புதற் கெளிதோ யாரும்*
*செப்பருங் குணத்து இராமன்*
*திருமுகச் செவ்வி நோக்கின்*
*ஒப்பதே முன்பு பின்பு அவ்*
*வாசக முணரக் கேட்ட*
*அப்பொழு தலர்ந்த செந்தா*
*மறையினை வென்ற தம்மா.*

அயோத். கைகேயி. சூழ். 108.

மேலும், இராமன் பற்றற்றவனாக இருந்ததோடு மட்டுமின்றி, அரசுப் பொறுப்பினின்றும் தான் விலக்கப் பெறுவது கருதிக் கவலை கொள்ளவுமில்லை. மாறாக மகிழ்ச்சி அடைகின்றான். பெரும் பாரத்தைச் சுமக்கும் வண்டியில் பூட்டப் பெற்ற எருது அவிழ்த்து விடப் பெறும் பொழுது மகிழ்தல் போல் மகிழ்ந்ததாகக் கவிஞன் கூறுகின்றான். இங்ஙனம் குணத்தின் குன்றாகத் திகழும் இராமனை வடபுலக் கருத்தை மையமாக வைத்துக் களங்கப்படுத்துவது நியாயமில்லை. வான்மீகி காட்டும் இராமன் வேறு; கம்பன் காட்டும் இராமன் வேறு. தமிழர் போற்றும் தலைவன் கம்பன் காட்டும் இராமனே யாம்.

கம்பனின் காவியப்படி சீதை பெண்ணிற் பெருந்தக்காள். கற்பின் செல்வி. சீதையைப் பற்றிய விமரிசனத்திலும் கட்டுரையாசிரியர், ஒரு நூலை மையமாக வைத்துக் கொண்டு ஆராயவில்லை. இங்கேயும் நமக்குக்

கம்பனே ஆசிரியன். கம்பனை மையமாக வைத்துப் பார்ப்பதே தமிழர் கடமை. வான்மீகத்தின் வழியை அடைப்பதற்காகத்தானே கம்பன் இராமகாதை செய்தான். 'இராவணன் பிறிதொரு பெண்ணின் உடன்பாடின்றி அவளைத் தீண்டினால் இராவணனின் தலை வெடித்துப்போம்' என்ற சாபம் வான்மீகி இராமாயணத்தில் இல்லை. கம்ப இராமாயணத்திலேயே இந்தச் செய்தி பேசப் பெறுகிறது. அதனாலேயே கம்பன் சீதையின் திருமேனியைத் தொட்டுத் தூக்காமல் அவளிருந்த நிலத்தொடு பெயர்த்து எடுத்துக் கொண்டு போனான் என்று கம்பன் கூறுகின்றான். வான்மீகியோ, 'திருமேனியைத் தீண்டித் தூக்கிக் கொண்டு போனான்' கைகளைப் பற்றித் தூக்கிக் கொண்டு போனான் என்றே பேசுகின்றான். வான்மீகியிலும் சாபத்தைப் பற்றிய குறிப்பு இருக்கிறது. ஆனால், கற்பழித்தாலேயே தலை வெடிக்கும் என்றிருக்கிறதே தவிர தீண்டினால் தலை வெடிக்கும் என்றில்லை. கம்பனோ இதில் வான்மீகியோடு முற்றிலும் மாறுபட்டு மெய்தீண்டினாலேயே தலை வெடிக்கும் என்று மாற்றினான். தன்னுடைய மாற்றத்திற் கேற்ப நிலத்தோடு பெயர்த்தெடுத்துக் கொண்டு போனான் என்றே காப்பியம் செய்தான்.

'மண்ணொடும் கொண்டு போனான்
வானுயர் கற்பினாள் தன்
புண்ணிய மேனி தீண்ட
வஞ்சுவா னுலகம் பூத்த
கண்ணகன் கமலத் தண்ணல்
கருத்திலான் தொடுதல் கண்ணின்
எண்ணருங் கூறாய் மாய்தி
என்றதோர் மொழியுண் டென்பான்"

சுந்தர, திருவடி.

என்ற பாடலைப் பெரியாரே எடுத்துக் காட்டுகிறார். அவரெடுத்துக் காட்டும் மேற்கோள் பாடல் அவர் கூற்றுக்கே

மாறாக இருப்பதை அவருடைய நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

பிறிதொரு பெண் விரும்பாமல் அவளை இச்சித்தால் தலை வெடிக்கும் என்ற செய்தி வான்மீகத்திலோ, கம்பனிலோ இல்லை. ஆதலால் இவ்வழியிலும் பெரியார் வலிந்து, மரபு மீறி பாத்திரங்களைக் களங்கப்படுத்துகிறாரே தவிர, காவியத்தின் போக்கிலும் தமிழர் தம் கருத்திலும் இராமனும் சீதையும் பொற்புடையோர்! போற்றுதலுக் குரியவர்கள்!

# 17

# மெய்யறிவு

"மெய்" என்ற சொல்லை, உண்மை என்று வழங்குவது மரபு. இல்லை, உண்மை என்ற வழக்கே பெருவழக்கு. உண்மை என்ற சொல்லுக்கு சமஸ்கிருதத்தில் "சத்" என்ற சொல் வழங்குகிறது. உண்மை என்ற சொல், இன்றைய உலக வழக்கில் 'நடந்தது' என்ற கருத்தில் வழங்கப் பெறுகிறது. இஃது ஒரு திரிபேயாம் அல்லது உபசரணை வழக்காக ஏற்றுக் கொள்ளலாம். உண்மை என்றால் எது உள்ளதோ அதுவே உண்மை. அதாவது கால தத்துவத்திற்கு உட்படாது அப்பாற்பட்டு நின்று விளங்கும் பொருள் எதுவோ, அதுவே உண்மை. இந்த உண்மையைத் தேர்ந்து தெளிதல் எளிதன்று.

அப்பரடிகள் "சிந்தையுள் தெளிவுமாகித் தெளிவினுள் சிவமுமாகி" என்றார். ஏன்? நமது பொறிகளும் புலன்களும் வரையறுக்கப் பெற்ற ஆற்றலுடையவை. இவை எல்லைகளைக் கடந்த ஒன்றை எங்ஙனம் தேர்ந்து தெளியும்? உண்மை-மெய் என்று போற்றப் பெறுவது கடவுளேயாம். தெளிதல் எளிதன்று. அறியாமையும் மயக்கமுமே உயிர்களிடம் இயல்பாய் அமைந்தவை. அறியாமை என்றால் ஒன்றும் தெரியாமை என்பது பொருளன்று. ஒன்றைப் பிறிதொன்றாக முறை பிறழ அறிதலே அறியாமை.

பழுதையைப் பாம்பென்றும், பாம்பைப் பழுதை என்றும் முறை பிறழ்ந்து உணர்தல்! அதுபோலவே நன்மையைத் தீமையென்றும் தீமையை நன்மையென்றும் உணர்தல்! ஒன்றும் தெரியாமையைவிட அறியாமை கொடிது; பெரிதும் துன்பம் தரும்.

மாலை நேரம்! பகலும் இரவும் தம்முள் மயங்கும் நேரம்! ஒளியை விழுங்கி இருள் மேவும் நேரம்! ஒரு நெடிய மலர்மாலை நெளிந்த தோற்றத்தில் கிடக்கிறது. உள் பொருளை உள்ளவாறு அறிய இயலாத நிலை. இருட்டு காரணமாகக் கட்புலனில் அந்த மாலையின் நீளமும் தெளிவும் பாம்பின் தோற்றத்தைக் காட்டுகின்றன. தேர்தல் இல்லை; தெளிவும் இல்லை! பயம்! பாம்பு என்ற அடிப்படையில் பயம் வந்துவிட்டது: மானுடத்தின் கொடிய பகை அச்சமே! அச்சமும் பயமும் ஒரு பொருட் கிளவிகள். அஞ்சி அஞ்சிச் சாவார் வாழ்விற்குரியரல்லர். இதுபோல நிலம், நீர், தீ, வளி, வெளி எனும் ஐம்பூதங்களால் ஆய சடவுலகம் மாறுதலுக்கு இசைந்த உலகம்; அழியும் தன்மை யுடைய உலகம். இந்த உலகத்தின் தன்மை, பரம்பொருளை- கடவுளைக் காண இயலாவண்ணம் மறைத்துவிடுகிறது. ஆம்! கண்டதே காட்சி! கொண்டதே கோலம்! இதுவே மயக்க நிலை; அறியாமையின் வெளிப்பாடு. இந்தச் சூழலிலிருந்து தப்பி, உண்மையைத் தேறுதல் வேண்டும்; தெளிதல் வேண்டும். இஃது எங்ஙனம் சாலும்? அறிவுதான் அறிவைத் தூண்ட இயலும். உண்மைதான் உண்மையைக் காணத் துணை செய்ய இயலும், "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்றும், "காண்பார் யார் காட்டாக்கால்" என்றும் வரும் அருள் மொழிகளை உணர்க.

மெய்யுணர்தல் வாழ்க்கையின் குறிக்கோள்; ஆக்கம்; பயன். உண்மையும் இன்மையும் கலந்து கிடக்கும் இந்த உலகில் உண்மையை உணர்தல் வேண்டும். உண்மையை உணர்தலுக்கு, உண்மையைத் தேடும் பசி வேண்டும். அந்த

உண்மையைத் தேடும் உணர்வு தலைகாட்டிய உடனேயே அந்த உண்மையும் நம்மை நோக்கி நகர்ந்து வரும்; நம் முன் வந்து நிற்கும். அப்போது உண்மையைக் காணமுடியும்; அனுபவிக்க முடியும் 'நான்' 'எனது' என்ற கொடுமையி லிருந்து விடுதலைப் பெற்றவர்கள் உண்மையை உணர முடியும்; காண முடியும்; அனுபவிக்க முடியும். அந்த உண்மையே நாம் தேறுதற் பொருட்டு அயோத்தியிலும் வந்து நின்றது.

*அலங்கலில் தோன்றும் பொய்ம்மை*
*அரவு என, பூதம் ஐந்தும்*
*விலங்கிய விகாரப் பாட்டின்*
*வேறுபாடு உற்ற வீக்கம்*
*கலங்குவது எவரைக் கண்டால்*
*அவர் என்பர் கைவில் ஏந்தி*
*இலங்கையில் பொருதார் அன்றே*
*மறைகளுக்கு இறுதி ஆவார்!* - கம்பன்

**18**

# கம்பன் கண்ட பொதுமைச் சமுதாயம்

கம்பன், காப்பியம் செய்ய எடுத்துக் கொண்டது பழைய வரலாறு. ஆனால் கம்பன் புதுமையும், பொதுமையும் விரும்பிய கவிஞன், கம்பனுக்கு முன் தோன்றிய இலக்கியமெல்லாம் உடைமைச் சமுதாயத்திற்கு அரண் செய்தவைகளேயாம். மனித உலகத்தில் முதன் முதலாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் உடைமைச் சமுதாயத்திற்கு எதிரான கருத்தை மாமுனிவர் மார்க்சு காண்கிறார். ஆனால் கம்பன் மார்க்சுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சிந்திக்கத் தொடங்கிவிட்டான். முடியுடைய அரசைப் பற்றிக் காப்பியம் செய்யும் கம்பன், உடைமைச் சமுதாயத்திற்கு எதிராகவும் சிந்தித்திருக்கிறான். இது கம்பனிடத்திலிருந்த துணிவைக் காட்டுகிறது. காப்பியம் முழுவதிலும் கம்பன் பல சமுதாய மாற்றங்களைக் கோடிட்டுக் காட்டுகிறான். கண்ணை மூடிக்கொண்டு அவன் அயோத்தியைப் போற்றிடவுமில்லை; இலங்கையை இகழ்ந்து விடவுமில்லை. இன்று எல்லாத் துறையிலும் சமூகம் வளர்ந்திருக்கிறது. ஆனாலும் தகுதிகளுக்கு ஏற்பப் பாராட்டு-ஆய்வு என்ற மனப்போக்கு இன்னமும் வளர்ந்த பாடில்லை. ஆட்டு மந்தைகளைப் போலக் குருட்டுத்தனமாக,

வாழ்த்துதல்-வசைபாடுதல் இன்று நடைபெறுகிறது. ஆனால் கம்பன், நிறுத்துப் பேசுகிறான். இராமனின் சிறப்பைப் பாடுவதற்காகக் காவியம் செய்தானாயினும் இராவணனின் ஆட்சிச் சிறப்பைப் புகழ மறந்தானில்லை, அதுபோலத் தான் முடியுடைய அரசுகளைப் பாடிய அவன், அரசேயில்லாத-தனி உடைமையே இல்லாத ஒரு பொதுவுடைமைச் சமுதாயத்தைப் பற்றியும் என்ணுகிறான்.

கம்பனின் பொதுவுடைமைக் கருத்து வெறும் "உடோப்பியா" அல்லது கற்பனை என்பர் சிலர். இது. மார்க்சீய பக்தியில் விளையும் கருத்து. கம்பனை விட மார்க்ஸ் பொதுவுடைமைச் சமுதாயத்தை எப்படி அமைப்பது என்ற வகையில் தெளிவு கண்டுள்ளார் என்பது உண்மை. ஆனால் கம்பனுக்குப் பின் இருந்த காலம் மார்க்சுக்குத் துணையாக இருந்தது. கம்பன் விரிவாக வழிமுறைகள் சொல்லாமையின் காரணமாக கம்பனின் கருத்து கற்பனையாகி விடாது. கம்பனின் கருத்து முற்றாக உண்மை. கம்பன், தனியுடைமைச் சமுதாயத்தின் தீமைகளையும் சொல்கிறான். தனி உடைமைச் சமுதாயத்தில் வள்ளல்களிருப்பார்கள். எங்கு வள்ளல்கள் இருக்கிறார்களோ அங்கு வறுமையாளர்களும் இருப்பார்கள். ஒருவர் உழைப்பின் செல்வத்தை முறைகேடாக உரிமைப்படுத்திக் கொண்டு வறுமையைப் படைத்துப் பின் வறுமையை மாற்றும் வள்ளல்களாகவும் காட்சியளிப்பர். இந்தத் தந்திரத்தைக் கம்பன் தோலுரித்துக் காட்டுகிறான்.

**"வண்மை இல்லை ஓர் வறுமையின்மையால்"**

என்பது கம்பன் வாக்கு.

அடுத்து இன்று நாட்டை அலைக்கழிப்பன களவு, காவல் என்பன. இன்று காவல்துறை வளர்ந்து கொண்டே வருகிறது. காவலுக்குரிய கருவிகளும் பல்கிப் பெருகி வளர்ந்து கொண்டிருக்கின்றன. இன்று செல்வத்தை ஈட்டும்

முயற்சியை விட, அதைக் காக்கும் முயற்சி அருமைப் பாடுடையதாகி விட்டது. ஏன் இந்த அவலம்? களவு முதலில் தோன்றியதா? காவல் முதலில் தோன்றியதா? கள்வர் யார்? பாரதி "பிறர் பங்கைத் திருடுதல் வேண்டாம்" என்று சொன்னபடி பிறர் பங்கைத் திருடுகிறவர்கள் கள்வர்கள். இத்தகைய திருடர்கள் இல்லாத நாட்டில் காவல்காரர்கள் ஏன்? இதனைக்

"கள்வர் இல்லாமைப் பொருள் காவலும் இல்லை"

என்று கம்பன் பாடுகின்றான். கம்பன் பார்வையில் கள்வர் என்பவர் திருடுபவர் மட்டுமல்லர்; பிறர் பங்கைச் சுரண்டுபவர்களும் சேர்ந்தவரேயாம்.

கம்பன் கண்ட நாட்டில் தனியுடைமையர்கள் இல்லை. எங்குத் தனி உடைமைச் சமுதாயம் இல்லையோ அங்கு இல்லாமையும் இல்லை. இதுவே பொதுவுடைமைச் சமுதாயத்தின் அமைப்பு, கம்பன்.

"இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை"

என்று ஐயத்திற்கிடமின்றிக் கூறுகின்றான்.

இன்றும் நம்முடைய நாட்டில் சிலர், பொது வுடைமைச் சமுதாயம் என்றால் ஏழ்மையைப் பங்குபோட்டுக் கொள்ளுதல் என்று கேலியாகக் கூறுவர். இதற்கும் கம்பன் அன்றே விடை சொல்கிறான். கம்பனின் பொதுவுடைமைச் சமுதாயத்தில் செல்வம் பெருகும். அச் செல்வம் சமநிலையில் எல்லாருக்கும் கிடைக்கும் என்பதை,

"எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை"

என்று பாடுகின்றான்.

கம்பன் ஒரு சிறந்த மானுடக் கவிஞன். மானுடத்தைப் பற்றிப் பாடிய கவிஞன். பாரதி, "கம்பன் என்றொரு

*மானுடன் வாழ்ந்ததும்" என்று போற்றுவான். மானுடச் சாதியினைத் தொடர்ந்து வருத்திவரும் வறுமையை மாற்றப் பொதுவுடைமைச் சமுதாயத்தைக் காண்பதே தீர்வு என்ற முடிவுக்கு வந்துவிட்டான். ஆதலால் சோழப் பேரரசு இருந்த காலத்தில் வாழ்ந்த கம்பன், நிலவுடைமைச் சமுதாயம் கொழுத்து வாழ்ந்திருந்த காலத்தில் தனியுடைமைச் சமுதாய நீக்கத்திற்கும், பொதுவுடைமைச் சமுதாயக் கால்கோளுக்கும் காப்பியம் இயற்றினான். கம்பனின் பொதுவுடைமைச் சமுதாயம் மலர்க!*

*"வண்ணம் இல்லை ஓர் வறுமை இன்மையால்;*
*திண்மை இல்லை ஓர் செறுநர் இன்மையால்;*
*உண்மை இல்லை பொய் உரை இலாமையால்;*
*வெண்மை இல்லை பல்கேள்வி மேவலால்'* (நாட்டுப்....53)

*"தெள்வார் மழையும் திரை ஆழியும் உட்க நாளும்*
*வள்வார் முரசம் அதிர்மா நகர் வாழும் மக்கள்*
*கள்வார் இலாமைப் பொருள் காவலும் இல்லை; யாதும்*
*கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லை மாதோ"*
(நகரப்.....73)

*'கல்லாது நிற்பார் பிறர் இன்மையின் கல்விமுற்ற*
*வல்லாரும் இல்லை; அவை வல்லார் அல்லாரும் இல்லை;*
*எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே*
*இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை மாதோ"*
(நகரப்...74)

# 19

# புதுச்சேரி கம்பன் விழாத் தலைமை உரை

கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்க்கின்ற நண்பர்களே! பெரியோர்களே! சான்றோர்களே! சகோதரர் களே! சகோதரிகளே! கம்பனின் புகழ் பாடிப் பரவுகின்ற இந்த விழாவில் இந்த ஆண்டு கம்பனைப் புரட்சிப் பார்வையில் பார்க்க வாய்ப்பளித்த கம்பன் கழகத்து நண்பர்களுக்கு என்னுடைய பாராட்டு! வாழ்த்துக்கள்! நன்றி.

புதுவைக் கம்பன் கழகத்திற்கு 25 ஆண்டுகளாயிற்று. புதுவைக் கம்பன் கழகத்திற்கு நல்ல முறுகிய இளமை போலத் தெரிகிறது. எனவே புரட்சியைப் பற்றி அது சிந்திக்கத் தொடங்கியிருக்கிறது. நான் நினைக்கிறேன் கடந்த காலம் வரையில் – கடந்த 24 ஆண்டுகளில் புரட்சி என்ற தலைப்பில் இந்தக் கழகம் சிந்தித்ததுமில்லை தலைப்புக் கொடுத்துப் பேசச் செய்ததுமில்லை; யாராவது எதிர்பாராமல் பேசினார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் இருபத்தைந்து ஆண்டுகள் கழித்துக் கம்பன் கழகம் இப்படி ஒரு சிந்தனையை ஏன் சிந்திக்கிறது என்பதை நான் எண்ணிப்

பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எல்லாத் துறையிலும் புரட்சி! புரட்சி! புரட்சி! என்ற தலைப்பைச் சேர்த்திருக் கிறார்கள். கம்பன் காலத்தில் புரட்சி என்ற சொல்லே தமிழில் இல்லை. அந்தச் சொல்லை முதன்முதலில் தமிழுக்குத் தந்த கொடையாளன் நம்முடைய பாரதி என்பதை மறந்துவிடக்கூடாது. அவன்தான் முதன் முதலில் தமிழுக்குப் புரட்சி என்ற சொல்லை உருவாக்கிச் சேர்க்கின்றான்.

"ஆகா என்றெழுந்தது பார் யுகப்புரட்சி" என்று சோவியத் நாட்டில் எழுந்த புரட்சியை வரவேற்று எக்களிப்பிலே பாடுகின்றான் பாரதி. ஆக "புரட்சி" என்ற சொல் தமிழுக்கு வராமல் இருந்த பொழுதே கம்பன் எப்படி புரட்சிக் கவிஞனாக இருக்க முடியும் என்பது முதல் வினா.

புரட்சி என்ற சொல்லினால் மட்டுமே புரட்சி பற்றிச் சொல்லவேண்டும் என்ற அவசியமில்லை. சில கொள்கைகள், சில கோட்பாடுகள் நீண்ட நெடுங்காலம் சமுதாயத்தில் உலா வந்திருக்கும். அதைப் பற்றி நாம் அக்கறை காட்டிக் கொள்ளாமலும் இருந்திருப்போம். ஆனால், பாரதி அப்படி ஒரு புதிய எண்ணத்தை நமக்குக் கொடுக்கிறான். ஆனால் கம்பன் தன்னுடைய காவியத்தின் மூலம் பல்வேறு செய்திகளை நினைவூட்டுகிறான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இன்னொன்று கம்பன் கழக நண்பர்கள், புரவலர்கள் அன்புகூர்ந்து நினைவில் கொள்ளவேண்டிய செய்தி. கம்பனைக் "கவிச்சக்கரவர்த்தி" என்று சொல்கிறீர்கள். ஆம்! கவி உலகத்திலே ஒரு முடிசூடா மன்னன் கம்பன்! அதனோடு உங்கள் மனம் அமைதி கொள்ளவில்லை. அவன் ஒரு தெய்வமாக்கவி என்றும் சொல்கிறீர்கள். கம்பனைக் கவிச்சக்கரவர்த்தி என்று நீங்கள் சொல்லுவதைவிட கம்பனை ஒரு தெய்வமாக்கவி என்று சொல்கிறபொழுது ஏதோ என்னிடத்தில் வலிமையாக நீங்கள் சிக்கிக்

கொள்கிறீர்கள் என்று தோன்றுகிறது. தெய்வமாக்கவி என்றால் என்ன? தெய்வம் உண்மைதான் சொல்லும். உண்மை சொல்வதற்குத்தான் தெய்வம் என்று பெயர். தெய்வத்தின் வார்த்தைக்கு மறு வார்த்தை இருக்கக்கூடாது. இது நாம் அனைவரும் நம்புகிற செய்தி. ஆனால் நடப்பில் நம்முடைய நாட்டு மக்கள் தெய்வத்தையும் ஏமாற்றத் தொடங்கிவிட்டார்கள். தெய்வத்தின் முன்னே போனாலும் தெய்வம் விரும்புவதைக் கொடுக்காமல் தன்னிடத்தில் இருப்பது எதையாவது கொடுத்துவிட்டு கொடுத்ததை விடக் கூடுதலாகத் தெய்வத்திடத்தில் பிச்சை கேட்கிறவர்கள் நாட்டில் ஏராளம். கம்பன் என்ற தெய்வமாக்கவியின் சன்னிதியில் நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள் என்பது என்னுடைய கேள்வி.

பொதுவாகச் சென்ற காலம் நம்முடைய வரலாற்றுக்கு மிகச் சிறந்த காலம் என்பதில் இரண்டு விதக் கருத்து இருக்கமுடியாது. ஆனாலும் கடந்த காலம் கடந்த காலந்தான். எப்படி கறந்த பாலை பால் மாட்டு மடிக்குள் திரும்ப நுழைக்க முடியாதோ அதேபோலச் சென்றகால வரலாற்றை திருப்பி நாம் கொண்டு வரமுடியாது. ஆனால் வரலாற்றாசிரியர்கள் சில சமயத்தில் சொல்லுகிறார்கள் "History Repeats itself" என்று.

நான் இந்த 'புரட்சித்' தலைப்பைப் பற்றி சிந்திக்கத் தொடங்கிய பொழுது இந்தப் பழமொழியைப் பற்றியும் கொஞ்சம் சிந்திக்கத் தொடங்கினேன். "சரித்திரம் திரும்பி வருகிறது" என்று சிலர் சொல்கின்றனர். அப்படித் திரும்பி வந்தால் அதில் என்ன பயன்? எந்த ஒன்றும் அது இருந்தபடியே இருக்குமானால் அது பயனுடையது அல்லவே. மாற்றமும் வளர்ச்சியும் வேண்டுமே. சரித்திரம் திரும்பி வருகிறது என்று சொன்னால் அதில் என்ன பொருள் என்று நீண்ட நேரம் யோசித்தேன்! பின் நான் இப்படிச் சொல்லலாமா என்று கருதினேன். புதுவையில் தான் முதன்

முதலில் மக்கள் மன்றத்தில் சொல்கிறேன். ஆய்வு செய்து பாருங்கள். நல்ல அறிஞர்கள், நல்ல புலவர்கள், நூல் எழுதுகிறவர்கள் எல்லோரும் வந்திருக்கிறீர்கள். என்னைப் பொருத்தவரையில் இந்த முன்னுரை ஒரு கலக முன்னுரைதான். அவ்வளவுதான்! ஆனால் ஓர் அறிவியல் கலகம் இது! "History repeats itself" என்பதற்குப் பதிலாக "History returns itself" என்று சொல்லலாமா? நாம் ஒரு செயல் செய்தால் எவ்வளவு திரும்பவரும் என்று கேட்பதைப்போல், வரலாற்றுக்கு நீ என்ன கொடுத்தாயோ, வரலாற்றின் வளர்ச்சிக்கு நீ எவ்வளவு கொடுத்தாயோ? வரலாற்றின் வளர்ச்சிக்கும், பாதுகாப்பிற்கும் நீ எவ்வளவு பணிகளைச் செய்தாயோ அந்த அளவுக்கு உனக்கு வரலாறு திரும்பத்தரும். நீ வரலாற்றை வறிதே செல்வதற்கு அனுமதித்து விட்டாயானால் நீ பிறந்து வளர்கின்ற காலந் தொட்டு இந்த நாட்டுக்கு எந்தப் புதுமையும் எந்தப் பொலிவும் சேர்க்காமல் வறிதே பாலைவனத்தில் செல்வதைப் போல் நாட்டு வரலாறு செல்லுமானால் உனக்கு அந்த வரலாறு திருப்பிக் கொடுப்பதும் மிகவும் குறைவாக இருக்கும். சென்ற காலம் நிகழ்காலத்தின் முன்னாலே வீழ்ந்து வணங்கி புன்சிரிப்போடு விடைபெற்றுக் கொள்கிறது. இப்பொழுது நம் நாட்டுத் தினத்தாள்களில் எல்லாம் ஜனவரி முதல் தேதி பிறக்கிறபொழுது அப்படி ஒரு படம் போடுவார்கள்; ஒரு கிழவன் மூட்டை முடிச்சோடு வெளியே போவதுபோலவும் ஒரு புதிய குழந்தை உள்ளே வருவது போலவும் படம் போடுவார்கள். ஆக சென்ற காலத்தலைமுறை நம்மிடத்திலிருந்து விடைபெற்றுக் கொள்ளத் துடித்துக் கொண்டிருக்கிறது. புன்சிரிப்போடு புதிய தலைமுறை வருவதற்குத் துடித்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறு அமையும் புதிய தலைமுறைக்கு புதிய வரலாற்றுக்கு நாம் என்ன செய்யப்போகிறோம்?

ஒரு மேடையிலே சொன்னதையே திரும்பச் சொன்னால் நீங்கள் கேட்டு மகிழ்வதில்லை. கம்பனையே

நான் படித்தாலும் சென்ற தடவை படித்ததைவிட புதிய பார்வையில் புதிய கோணத்தில் கம்பனைப் படிக்காது போனால் நான் வறட்சித் தன்மையுடன் கம்பனைப் படிக்கிறேன் என்பது பொருள். இந்தப் பரந்த உலகம் இயங்கிக் கொண்டேயிருக்கிறது, வளர்ந்துகொண்டேயிருக் கிறது. ஒன்று இந்த உலகத்தில் நீங்கள் பார்க்கிற கொள்கைகள் கோட்பாடுகள் நிகழ்ச்சிகள் இவற்றைக் கம்பனில் தேடிப் பாருங்கள் கிடைக்கின்றனவா என்று. இந்த நாட்டினுடைய நிகழ்வுகளுக்கு கொள்கைகளுக்கு கோட்பாடுகளுக்கு கம்பன் ஏதாவது காரணம் சொல்லுகின்றானா என்று கம்பனில் தேடுங்கள். இஃது ஒரு பார்வை. இதில் உங்களுக்கு விருப்பமில்லை என்றால் கம்பனையாவது இந்த நாட்டின் வீதிகளிலே தேடிப்பாருங்கள். இது கம்பன் சொல்வதுபோல இருக்கிறது என்றாவது சொல்லுங்கள்.

உயிர்ப்புள்ள மானுட சமூகத்தின் வாழ்வியலோடு ஒட்டிவராத இலக்கியங்கள் இந்த உயிர்ப்புள்ள மானுட சமூகத்தை உந்திச் செலுத்துகின்ற ஆற்றல் மிக்கதாக இல்லாத இலக்கியங்கள் காலப்போக்கில் தேவலோகத்து அனுபவம் போல அனுபவத்தோடு நின்றுவிடும். நம் நாட்டுப் புராணங்களில் எல்லாம் தேவலோகத்தில் எல்லா அனுபவங்களும் உண்டு என்று சொல்லுவார்கள். காமதேனு உண்டு, கற்பகத்தரு உண்டு என்று சொல்லுவார்கள். ஆனாலும் அவற்றை அறிந்த ஆள்தான் இல்லை.

இந்தப் பார்வையில் கம்பனைப் பார்க்கிறபொழுது புரட்சி என்றால் என்ன? கொஞ்சம் பழைய சமயவாதிகள் புரட்சியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் புரட்சி என்ற பெயரில் சொல்லவில்லை. பிரளயம், யுகப் பிரளயம் என்று சொல்வார்கள். எல்லாமே அடியோடு மாறி ஒரு புது யுகம் தோன்றுவதை யுகப்பிரளயம் என்று சொல்வார்கள். பாரதி கலியுகத்தைக் கொன்றுவிட்டு கிருதயுகத்தைக் கொண்டுவருவேன் என்று சபதம் செய்கிறான். அப்படி

இ.V.23.

யானால் என்ன பொருள்? கலியுகம் அவன் வாழ்கிற யுகம். அவன் வாழ்கிற காலம் வாழ்க்கைக்கு ஏற்றதாக இல்லை. எனவே கலியுகத்தைக் கொன்றுவிட்டு கிருத யுகத்தைக் கொண்டுவரவேண்டும் என்கிறான். இந்த யுகப்பிரளயத்தை முன்னே இருந்தவர்கள் எல்லாம் கடவுள் செய்வார் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் பாரதி முதன் முதலில் தன்னந்தனியனாய் நான் கொணர்வேன் என்று சொன்னான். ஒரு தன்னம்பிக்கை உடைய ஆளுமை உடைய ஒரு ஆவேசக் குரல் கேட்கிறது, கலியுகத்தைக் கொன்று கிருதயுகத்தைக் கொண்டுவரவேண்டுமென்று!

கலியுகத்தினுடைய தன்மை என்ன? புரட்சி என்றால் என்ன? நாம் வாழ்கிற உலகம் நாம் வாழ்கிற சமூக அமைப்பு, நான் இப்படிச் சொல்லும்போது எனக்குக் கொஞ்சம் சங்கடம் தோன்றுகிறது. ஏனென்றால் நம் நாட்டில் தற்போது சமூகம் இல்லை. இன்னமும் நம் நாட்டில் சமூகம் - சமூக அமைப்பு தோன்றவில்லை. நம் நாட்டில் நாமெல்லாம் மக்கள் கூட்டம். அவ்வளவுதான். நீங்கள் காடுகளைப் பார்த்திருப்பீர்கள். காடுகளில் ஓங்கி உயர்ந்து அடர்ந்த மரங்கள் இருக்கும். காடுகள் சமுதாயத்திற்குத் தேவைதான். ஆனாலும் காடுகளைப் பற்றிக் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்; அந்தக் காடுகளிலே மரங்கள் ஒழுங்காக இருக்காது. நெறிமுறை இருக்காது. அழகுபட அமைந்து மரங்கள் வரிசையாக இருக்காது. காட்டில் மரங்கள் தன்னிச்சையாகத் தோன்றும். தன்னிச்சையாக வளரும். அந்தக் காட்டிலுள்ள மரங்களுக்கிடையே அருவெறுக்கத்தக்க ஆபாசமான போட்டிகள் இருக்கும். தெளிவாக உண்மையைச் சொன்னால் வல்லாண்மை மிக்க தாவரங்கள் வல்லாண்மை இல்லாத தாவரங்களை ஆக்கிரமித்து அழித்துவிடும். இது காட்டின் இலக்கணம்.

ஒரு பழத்தோட்டம்! ஒரு தென்னந்தோப்பு! இவற்றைக் கூர்ந்து பாருங்கள். அவற்றில் ஒழுங்கு இருக்கிறது; வரிசை

இருக்கிறது; நெறிமுறை இருக்கிறது. ஒவ்வொரு மரத்திற்கும் உத்திரவாதம் அளிக்கப்பட்ட உரமும் தண்ணீரும் கிடைக்கும். நம்முடைய மானுட சமுதாயம் சமுதாயமாக உருவெடுத்துவிட்டதென்றால் ஒரு பழத்தோட்டத்தைப் போல இருக்க வேண்டும். இன்றைக்கு நாம் இருப்பது மக்கள் கூட்டம்! அது காடு போல இருக்கிறது. எனக்குள்ளதுதான் எனக்குத் தெரிகிறதே தவிர மற்றவர்க்கு என்ன தேவை என்பது எனக்குத் தெரிவதில்லை.

மனம் போன போக்காக இருக்கின்ற சமுதாய அமைப்பு, வாழ்வதற்கு தகுதியுடையதாக இல்லை என்றால் அதனை மாற்றியமைக்க வேண்டும். மாற்றியமைப்பதற்குப் பதில் சில சமயங்களில் சமாதானமாகப் போகலாமா? என்று சிலர் சொல்வார்கள். இவர்கள் வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் கூடச் சமாதானம் செய்வார்கள். அந்தச் சமாதானத்திற்குப் பெயர்தான் பழைமையைச் சீர்திருத்தம் செய்வது என்பது. ஆனால் கூர்ந்து கவனித்துப் பார்த்தால் மிகவும் பாழாய்ப்போன வீட்டை பழுதுபார்ப்பதைவிட இடித்துக் கட்டிவிட்டால் நல்லது போலத் தெரிகிறது. ஏனெனில் அதைப் பழுது பார்ப்பதற்கு ஏராளமான செலவு செய்யவேண்டும். ஏராளமான ஆற்றல் வேண்டும். ஒருவன் ஒரு கைமரத்தைக் காப்பாற்றவேண்டும் என்று சொன்னால் இன்னொருவன் போட்டிபோட்டுக் கொண்டு எனக்கு இந்தக் கைமரத்தைக் காப்பாற்றவேண்டும் என்று சொல்வான். புரட்சி என்பது ஒட்டுறவே இல்லாமல் மாற்றி யமைப்பது; காய்தல் உவத்தல் இல்லாமல் மாற்றியமைப்பது. அந்தப் புரட்சி நமது நாட்டில் எளிதாகத் தோன்றாது. தயவுசெய்து மன்னித்துக் கொள்ளுங்கள். நமது நாட்டில் புரட்சி தோன்றாது. காரணம் நாம் துன்பங்களையெல்லாம் சகித்துக் கொள்ளப் பழக்கமாகிவிட்டோம். மலங்களில் கிடந்து புரளுகின்ற பன்றிகளைப்போல, நமது துன்பங்களை யெல்லாம் சகித்துக் கொண்டு சுரணையில்லாமல், சூடு

இல்லாமல் வெட்கமில்லாமல் வாழ்கிற சௌஜன்யமான பழக்கத்திற்கு நாம் ஆளாகிவிட்டோம். அவமானம், இழிவு, வறுமை, ஏழ்மை இவற்றையெல்லாம் சகித்துக்கொண்டு "இப்படித்தான் இருக்கும்" என்று ஒரு சமாதானம். "திடும் என்று ஒரு நாளிலே உலகம் மாறிவிடுமா?" - நாய் வாலை நிமிர்த்திட முடியுமா? என்ன?" என்று சமாதானம். இப்படி என்னென்ன சமாதானம்? இந்த நாட்டிலே புரட்சியாவது? அது வருவதாவது?

புரட்சி என்பதற்கு ஒரு சிறிய சான்று சொல்லி விளக்க நான் ஆசைப்படுகிறேன். கோழி முட்டை பலருக்குத் தெரிந்த ஒரு பொருள். அந்த முட்டைக்குள்ளே குஞ்சு உருவாகி இருக்கிறது. அந்தக் குஞ்சால் அந்த முட்டையினுள் உள்ள அந்த பரிணாம எல்லை இருக்கிறதே அந்தக் குறுகலான எல்லைக்குள் வாழமுடியவில்லை; குஞ்சுக்கு வாழப் பிடிக்க வில்லை; விருப்பமில்லை. பரந்த உலகத்திற்கு வந்து சுதந்திரத்தை அனுபவிக்க வேண்டும் என்று விரும்புகிறது. அந்த ஆவேசத்தால் உள்ளிருந்தபடியே முட்டையின் ஓட்டை உடைக்கிறது. அப்படியே ஓட்டை உடைத்து வெளியே வருகிறதே அதுபோன்றது புரட்சி.

நாமெல்லாம் இப்படி உடைப்போமா? "என்னவோ நம் தலையிலே எழுதினபடி நடக்கிறது" என்று சமாதானம் கூறிவிடுவோம். நான் கடவுள் நம்பிக்கையும் மதநம்பிக்கையும் உடையவன்தான். ஆனால் இடைக்காலத்தில் மதப் புரோகிதர்கள் மதத் தலைவர்கள் இந்தச் சமூகம் எழுந்து நிற்பதற்குரிய தெம்பும் திராணியும் இல்லாமல் போகும்படி குப்பைக் கூளங்களை மூளையிலே ஏற்றி விட்டார்கள். ஆதலால் எழுந்திருக்கவே மனமில்லாமற் போய்விட்டது. "ஆகா என்றெழுந்ததுபார் யுகப்புரட்சி" என்று சொல்கிறான் பாரதி! நாமாவது புரட்சியாவது செய்கிறதாவது? பக்கத்தில் இருக்கிற வீட்டிலே இருப்பவருடன் சண்டைபோடாமல் இருந்தாலே பெரிய காரியம். இந்த அளவுக்கு நாம்

கொச்சைப்படுத்தப்பட்டு விட்டோம் என்பதை மறந்து விடாதீர்கள்!

கம்பன் அப்படி ஓர் சிந்தனை செய்கிறான்! மீண்டும் நான் பணிவோடு சொல்ல ஆசைப்படுகிறேன், கம்பன் கழகத்தாருக்கு! கம்பனின் நாட்டுப் படலப் பாடல்களை - கம்பனின் கனவுகளை, உடோப்பியா - கற்பனை கனவு என்று கருதுகிறீர்களா அல்லது கம்பன் அப்படி ஒரு நாட்டைக் காணவேண்டும் என்று ஆசைப்பட்டான் என்று நினைக்கிறீர்களா? யோசனை செய்யுங்கள்! அவனுடைய நாட்டுப்படலம் பாடல்களுக்கும் காப்பியத்திற்கும் கிட்டத் தட்ட உறவில்லாமல் இருக்கிறது. நாட்டுப்படலப் பாடலிலே படைக்கப்பட்ட இலக்கணங்களுக்கேற்றவாறு பாத்திரங்கள் காப்பியத்தில் இருக்கின்றனவா என்று கூடத் தேடித்தான் பார்க்க வேண்டும். ஆனால் நாட்டுப்படலத்திலே,

"கள்வருமில்லை காவல் செய்வாருமில்லை
கொள்வாரு மில்லை கொடுப்பார்களு மில்லை"

என்கிறான்.

ஆனால் இராமன் நாட்டை விட்டுக் காட்டுக்குப் போகிறபோது பார்ப்பனர் ஒருவர் பசு கேட்கிறார். கம்பனோ ஒரு இலட்சிய நாடு அமைக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறான்.

கம்பன் பாடி எத்தனை ஆண்டுகளாயிற்று?

நம் நாட்டில் கள்வர் இருக்கின்றனரா? இல்லையா? இன்றைக்கு இந்த நாட்டில் தீவிரமாக வளர்கிற தொழில் பூட்டுத் தொழில். புதுப்புதுப் பூட்டுகளாகச் செய்கிற "லாக் டெக்னாலஜி" வளர்கிறது. புதிய தொழில்நுட்பம் தடுக்க முடியாதது. புதிய புதிய தொழில் நுட்பம் சார்ந்த பூட்டுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதை மறந்துவிடாதீர்கள்! பூட்டுகளை உடைப்பவர்களும் சும்மா இருக்கவில்லை. அதை

உடைப்பதற்குரிய தொழில் நுட்பத்தையும் தொடர்ந்து கண்டு பிடித்துக் கொண்டிருக்கின்றனர். நமக்குக் 'கள்வருமிலாத காவல் செய்வாருமிலாத ஒரு நாடு வேண்டும்! இன்று அதுதான் புரட்சி! ஆனால் கம்பன் எந்தக் கள்வனைச் சொன்னான்; எந்தக் காவலைச் சொன்னான்? 'கள்வனை' என்று சொன்னால் மட்டும் போதாது. எந்தக் கள்வனைச் சொன்னான்? எப்படி முதன்முதலில் புதுமையாக 'புரட்சி' என்ற சொல்லைத் தமிழுக்குக் கொண்டுவந்து சேர்த்தானோ அதுபோல கள்வர் என்ற சொல்லுக்கு புதுப்புனைவு புதுப்பொருளை முதலில் தந்தவன் பாரதி.

இப்போது களவு என்றால் என்னுடைய பையில் இருக்கிற பேனாவைத் திருடிப்போதல் களவு. இந்த மேசையில் உள்ள புத்தகத்தை எடுத்துக்கொண்டு போதல் திருடு. இதுவும் இடம் நோக்கி பொருள் கொள்ளப்படும். என்னுடைய பேனாவை யாராவது எடுத்துக்கொண்டு போனார்களானால் அதற்கு ஏராளமான அடாவடித் தனங்கள் நடக்கும். நான் இன்னொருவர் பேனாவை - புலவர் அருணகிரி பையிலிருக்கும் பேனாவை எடுத்துக் கொண்டுவிட்டேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். நான் திருடிவிட்டேன் என்று அருணகிரி சொன்னால் காவல்துறை அலுவலகம் "அடிகளாராவது அருணகிரி பேனாவை எடுக்கிறதாவது" என்று என்னை வைத்துத்தான் வழக்கைப் பார்க்குமே தவிர அருணகிரியை வைத்து வழக்கைப் பார்க்காது.

பாரதி முதன்முதலில் களவுக்கு ஒரு பொருள் சொல்லுகிறான். "பிறர் பங்கைத் திருடுதல் வேண்டாம்" என்றான். "திருடு" என்ற சொல்லுக்கு முதல் தடவையாகப் புதிய பொருள் சொல்லுகிறான். ஓர் உழைப்பாளி உழைக்கிறான். உழைப்புக்கு என்ன அளவுகோல்? ஒரு பொருளை பயன்படு பொருளாக மாற்றுவது உழைப்பு. சான்றாக ஐம்பது வெண் பொற்காசுகள் மதிப்புடைய ஒரு

இரும்புத் துண்டு இருக்கிறது. அது ஒரு சாதாரணக் கொல்லனிடத்தில் இரும்புக் கொல்லனிடத்தில் கிடைக்கிறது. அவன் அதை இலாடமாக அடிக்கிறான். அந்த ஐம்பது வெண்பொற்காசுகள் விலை மதிப்புடைய இரும்பு நூறு இலாடமாக அடிக்கப்பட்ட பிறகு நூறு ரூபாய் விலை மதிப்புடையதாக மாறுகிறது. இந்த நூறுக்கும் ஐம்பதுக்கும் இடையில் இருக்கிற ஐம்பதை யார் எடுத்துக் கொள்கிறார்கள் என்பதை வைத்துத்தான் களவு நிர்ணயிக்கப்படவேண்டும். இந்த இரும்புத் துண்டை யாரோ ஒருத்தர் வீட்டுத் தோட்டத்திலே பொறுக்கிவைத்திருந்தாரே அவர் அந்த இரும்புக்கொல்லருக்குப் பத்தோப் பதினைந்தோ கொடுத்து விட்டு மீதியை அவர் எடுத்துக் கொள்ளுகிறார். அதற்குத் "திருடு" என்று பெயர் வைக்கிறான் பாரதி. அதே இரும்பை இன்னும் நுண்ணிய செயற்பாட்டுடன் காலம் காட்டும் கருவியாக கடிகாரமாக உருமாற்றம் செய்தால் அதற்கு ஐந்நூறு ரூபாய் விலை. இந்த ஐம்பது ரூபாய் விலை மதிப்புள்ள பொருளுக்கும் ஐந்நூறு ரூபாய் விலை மதிப்புள்ள பொருளுக்கும் இடைவெளியில் இருக்கிற பணம் எங்கு செல்கிறது? அங்கே களவு தோன்றுகிறது. உழைப்பைச் சுரண்டுகிறவரைக் கள்வர் என்று சொல்கிற பழக்கம் நம் நாட்டில் வரவேயில்லை. புரட்சி அங்கேதான் தோன்ற வேண்டும்! இப்படிப் பொருள் ஒரு இடத்திலே குவிகிறது; ஓரிடத்திலே வறுமை வளர்கிறது. "வண்மை இல்லை. ஓர் வறுமை இன்மையால்" என்றான் கம்பன். கம்பன் காலத்தி லேயே வறுமை இருந்திருக்கிறது. அதை மாற்றியமைக்க நினைத்துப் பாடியிருப்பான் போலத் தெரிகிறது. ஏனென்றால் தமிழ்நாட்டு மக்களுக்கு வறுமை என்பது பரம்பரைச் சொத்து. பாட்டன், முப்பாட்டன், அவன் பாட்டன் காலத்திலேயே பெருந்தலைச் சாத்தனார் காலத்திலேயே வறுமைதான்! மடியில் கிடக்கிற பச்சிளங்

குழந்தை தனக்குப் பால் கிடைக்காமல் தாய் முகத்தைப் பார்த்து அழுகிறது. அக்குழந்தைக்கு பாலூட்ட முடிய வில்லையே என்று தாய் கணவன் முகத்தைப் பார்த்து அழுகிறாள். அவன் அரசின் முகத்தைப் பார்த்து அழுகிறான். இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த வாழ்க்கைச் சித்திரம். மறந்துவிடாதீர்கள். அதே இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன்பு இருந்த தமிழ்நாட்டின் நிலையைத் தமிழ்ப் பெருமக்கள் தமிழாசிரியன்மார்கள், சங்ககாலம், பொற்காலம், கடையெழு வள்ளல்கள் இருந்த காலம் என்றெல்லாம் கூறுகிறார்கள். அந்தக் காலத்திலேயே நண்பகல் உச்சிவேளை பசிக்கிற நேரம் கட்டிளங் காளை களுக்கு வீட்டிலே அள்ளிச் சாப்பிட சோறில்லை. எங்கே சோறு கிடைக்கும் என்று அலைந்து திரிகிறார்கள். யாரோ ஒரு மனிதன் ஒரு குண்டான் சோறு வடித்துப் பிசைந்துக் கையுருண்டைச் சோறாக உருட்டி உருட்டிக் கொடுக்கிறான். அப்படி கையுருண்டைச் சோறு உருட்டிக் கொடுத்தவனுக்கு பசிப்பிணி மருத்துவன் பண்ணன் என்று புகழ்பாடிய நாடு இந்த நாடு. கையுருண்டைச் சோற்றை வாங்கிச் சாப்பிட்டு விட்டு எறும்புகளைப்போல வரிசை வரிசையாகப் போகிறார்கள் என்று 2000 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டினுடைய நிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறது, நமது இலக்கியம். 2000 ஆண்டுகள் கழித்து நாம் என்ன முன்னேறியிருக்கிறோம்? சிறிய முன்னேற்றம் கையிலே உணவு வாங்குவதற்குப் பதில் தட்டிலே வாங்குகிற முயற்சி இங்கே நடந்திருக்கிறது. நமக்கு வெட்கம் இருக்க வேண்டாமா? எங்கேயிருந்து புரட்சி தோன்றும்? வறுமைக்கு என்ன காரணம்? புரட்சியைப் பற்றி சிந்திப்பது மட்டும் போதாது. காரணங்களையும் கண்டுபிடிக்க வேண்டும். கம்பனின் பாடல்கள் என்ன வறட்சி நிறைந்த பாடல்களா? அவைகளுக்கு உயிர்ப்பில்லையா? அவைகள் நமக்கு

நடைமுறைகளைக் காட்டக் கூடிய வழிகாட்டி இல்லையா? ஏன் கம்பன் நினைத்தது நடைபெறவில்லை!

கடைசியாக ஒன்றைச் சொல்லி முடிக்கின்றேன். கம்பனுடைய இராமகாதையே நீண்டதற்குக் காரணம் என்ன? இராமனுக்கு நாடு கிடைக்காததாலா? பரதன் நாடாள முடியாது என்று சொன்னதாலா? இவ்வளவு பெரிய காவியமாக இராமகாதை உருக்கொள்வதற்குக் கருவாக அமைந்தது எது? கைகேயி, நல்ல பெண்; நல்ல தாய்; நல்ல தலைவி; இரக்கமுடையவள்; இராமனிடத்தில் அளவற்ற அன்புடையவள். இராமனுக்கு முடிசூட்டு விழா என்றவுடன் அவள் மகிழ்ந்ததைப்போல கோசலை கூட மகிழவில்லை. இராமனுக்கு முடி சூட்டுவிழா என்ற செய்தியைக் கொண்டு வந்தவளுக்கு மணிமாலையைக் கழற்றிக் கொடுக்கிறாள்! எவ்வளவு உயர்ந்த தாய்! "நதியின் பிழையன்று நறும்புனலின்மை' என்று கம்பன் அற்புதமாகப் பாடிக் காட்டுகிறான். அந்தக் கைகேயி எவ்வளவு பெரியவளாக உயர்ந்து விளங்கிய கைகேயி கூனியினுடைய தொடக்க காலப் பேச்சில் மயங்கி விழாத கைகேயி ஏன் வீழ்ந்தாள்? எப்பொழுது வீழ்ந்தாள்? கண்டுபிடிக்க வேண்டாமா? அங்குதான் இருக்கிறது - புரட்சிக்குரிய கருத்து.

புரட்சிக்குரிய கருவாக இருந்தது, இராமகாதைக்கும் கருவாயிற்று. பல்வேறு செய்திகள் சொல்லிப் பார்க்கிறாள் கூனி, கேட்கவில்லை. கடைசியில் ஒன்றே ஒன்று சொல்கிறாள் 'இராமன் முடிசூடினால் உடைமையெல்லாம் கோசலைக்காம் நினக்கு ஒன்று வேண்டின் கோசலை உதவி செய்தால்தான்" என்கிறாள் கூனி! முடிந்தது! விழுந்து விட்டாள் கைகேயி! அப்படியானால் என்ன நினைக்கிறீர்கள் நீங்கள்? ஆட்சியில் யார் அமர்கிறார்களோ அவர்களுக்கே உடைமை ஏகபோகமாகி மற்றவர்களுக்கு மற்றவர்கள் வாழ்க்கைக்கு உத்தரவாதமில்லை; பாதுகாப்பில்லை என்ற

பயம் ஏற்பட்டுவிடுகிறது. அந்தப் பயத்தினால் கைகேயி விழுகிறாள். இன்றைக்கு என்ன மாற்றம் ஏற்பட்டிருக்கிறது? அதேதான்! அதேதான்! அதேதான்! ஆள்கிறவர்கள் தயவு இல்லாமல் நம்மால் ஒரு நாள் மூச்சுவிடக்கூட முடியாது போலிருக்கிறதே! உடைமை என்பது ஓர் இரும்புப்பிடி. எந்த நாட்டில் மனிதனுக்கு உத்தரவாதமும் பாதுகாப்பும் இல்லையோ அந்த நாட்டில் ஒழுக்கத்தைக் காப்பாற்ற முடியாது.

கைகேயி சிறந்த சீலமுடையவளாக இருந்தாலும் சிறந்த தியாக புத்தி உடையவளாக இருந்தாலும் உத்தரவாதமும் பாதுகாப்பும் அவளுக்கும் அவள் மகனுக்கும் இல்லையென்று சொன்னவுடன் சடசடவென்று விழுந்துவிட்டாள். அதைப் போல இந்த நாட்டில் சடசடவென்று ஒழுக்கத்தை மறந்து அதை மறந்து இதை மறந்து நாலு காசு தேடி வைத்துக்கொள்ள வேண்டாமா என்று அலைகிறார்கள். அது அவர்கள் குற்றமல்ல. நாட்டு மக்களிடத்தில் பணத்திற்குத் தரும் மதிப்பு குறைய வேண்டும். மானுடத்தின் மதிப்பு உயர்ந்து விளங்க வேண்டும். மானுடம் சிறந்து விளங்க வேண்டும். எனவேதான் 'மானுடம் வென்றதம்மா' என்று பின்னே முடிக்கிறான் கம்பன்.

கம்பன் புரட்சிக்கரு தாங்கிய பாடல்களை நாட்டுப் படலத்தில் - நகரப்படலத்தில் பாடியிருக்கிறான். ஆனால் அது புரட்சியாக உருப்பெறவில்லை. பாடலில் குறையில்லை. நாம் மரத்துப்போனவர்கள். மின்சாரம் கூட நம்மைத் தாக்காதுபோலத் தெரிகிறதே! ஆதலாலே கம்பன் வெள்ளி விழா கொண்டாடுகிற இந்தத் தருணத்தில் கம்பனுடைய பாடல்களில் நடைமுறைச் செயற்பாட்டுக்குரியவைகளைத் தேர்ந்தெடுப்பது; அவைகளைப் பற்றியும் மக்களுக்குச் சொல்வது, நடைமுறைச் செயற்பாட்டில் கம்பனைப் புகுத்தி வழிகாட்டி நன்னெறிப்படுத்துவது, ஆகிய நிகழ்ச்சிகளையும் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இனி எதிர்வரும் காலத்தில் என்னுடைய வாழ்வியலோடு கம்பன் ஒட்டிக் கொண்டு வரவேண்டும். நான் கம்பனைப் புதுப்பார்வையில் படிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நான் மிக இளமைக் காலத்தில் திருக்குறளைப் படிக்கத் தொடங்கினேன். மிகத் தெளிவாகச் சொன்னால் கம்பன் கழகத்து நண்பர்கள் எனக்கு நண்பர்களாக ஆன பிறகுதான் நான் கம்பனைப் படிக்கத் தொடங்கினேன். நண்பர்களுக்கு அனுசரணையாக இருக்கவேண்டும் என்பதால். என்னைக் கவர்ந்தது முதலில் திருக்குறள் தான். பலகாலும் திருக்குறளைப் படித்திருக் கிறேன். நேற்றைக்கு முன்தினம் நான் படித்த திருக்குறள், இன்றைக்கு ஒரு புதுப் பொருளோடு என் முன்னால் நிற்கிறது. "நீ என்னைப் படித்தாயா? உண்மையாகப் படித்தாயா?" என்று என்னைத் திருவள்ளுவர் கேட்பது போலத் தெரிகிறது. நாள்தோறும் அவர் சொல்கிற குறளில் புதுமை தெரிகிறது. அதுபோல் கம்பன் உங்களிடத்திலே பேசவேண்டும்; உயிர்ப்புடன் பேசவேண்டும்.

ஒரு சிறந்த மாக்கவி, தெய்வமாக்கவிஞன், ஒரு புதிய நாட்டைப்பற்றி எண்ணுகிறான் "கள்வரும் காவல் செய்வாரு மில்லாத நாடு" என்று அவனுக்கு முன் யாரும் பாடவில்லை. அவன்தான் முதன்முதலில் அப்படிப் பாடுகிறான். 'திருடாதே' என்று சொன்னவர்கள் உண்டு; திருடுவது பாவம் என்று சொன்னவர்கள் உண்டு. அவையெல்லாம் மிகப் பெரிய வசதி படைத்தவர்களுடைய ஒலி பெருக்கிகள்! கம்பன் தான் முதன்முதலில் – கம்பனும் பாரதியும் தான் ஒருவர் உழைப்பை எடுத்துக் கொள்கிறானே அவன்தான் முதல் திருடன் என்று சொல்லுகின்றனர். உழைப்பைச் சுரண்டுகிற முதல் திருடன் தோன்றிய பிறகு அடுத்தத் திருடன் தோன்றுகிறான். ஒரு திருடன் அடுத்தத் திருடனைத் தோற்றுவிக்கிறான். அதைத் தான் பாவேந்தனும் "பொருளாளி திருடர்களை விளைவிக்கின்றான்" என்றான்.

இவ்வகையில் புரட்சியைப் பற்றிச் சிந்தனை செய்து பாருங்கள்! ஆனால் இந்த நேரத்தில் நான் இப்படிப் பேசியபிறகு, புரட்சி, சோஷலிஸம் சமவாய்ப்புச் சமுதாய அமைப்பு இவைகளையெல்லாம் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலே நிலைகுலைந்து கிடக்கின்றனவே என்று நீங்கள் கேட்கலாம்! அவையெல்லாம் வாழ்க்கைப் பயணத்தில் ஏற்படுகின்ற சோதனைகள். அந்தச் சோதனைகள் காரண மாகவே அவைகளெல்லாம் பொய்த்துப் போய்விட்டன என்று சொல்லமுடியாது. நம்முடைய வள்ளலார்கூட முதன்முதலில் சோஷலிஸத்தைப் பற்றிச் சொல்லுகிறார்.

"வல்லார்க்கும் மாட்டார்க்கும் வாய்ப்பளிக்கும் வாய்ப்பே!"

என்று பாடுகின்றார்.

வாய்ப்பு என்பது Oppurtunity. சோஷலிஸ சமுதாயம் என்பது வீடும் துணியும் கொடுப்பது அல்ல. ஒருவனுக்கு பொருள் ஈட்டிக். கொள்வதற்குரிய உரிமைகளை வாய்ப்பு களை உண்டாக்குவது. ஒருவன் கைகளுக்கு வேலை செய்ய உரிமையைக் கொடுப்பது. அவனுடைய படைப்பில் உண்டான பொருள்களை அவனே அனுபவிப்பதற்கு உரிய உரிமையைக் கொடுப்பது அல்லது நாட்டுக்கு அர்ப்பணிக் கின்ற உரிமையைக் கொடுப்பது. சுதந்திரம் என்பதே எப்பொழுது சுதந்திரமாக இருக்கும்? கம்பன் அதைத்தான் எடுத்துச் சொல்கிறான். சுதந்திரம் என்பது என்ன? இன்னொருவனுடைய சுதந்திரத்திற்கு நீ ஒப்புரிமை கொடுத்தால்தான் உன்னுடைய சுதந்திரம் பாதுகாக்கப்படும். அதுதான் புரட்சியின் தடம். அந்தத் தடத்தை இனம் கண்டு கொள்ளுங்கள்.

கம்பன் புகழ் பற்றியும் புரட்சி பற்றியும் சிந்திப்பதற்கு வாய்ப்பளித்த கம்பன் கழகத்தார்க்கு மிக மிக நன்றி!

கம்பனுடைய நாட்டுப்படலப் பாடல்களை நகரப்படலப் பாடல்களை நான் எப்பொழுதும் 'உடோப்பியா' என்று எண்ணியதில்லை. அவை உயிர்ப்புள்ள பாடல்கள். கம்பன் ஒரு புதிய சமுதாயத்தைப் பற்றி எண்ணியிருக்கிறான். ஆனால் வழக்கம்போல நாம் பதவுரை, பொழிப்புரையிலேயே நீண்டகாலம் சென்று விட்டதால் கம்பனுடைய ஆன்மாவை கண்டுபிடிக்காமலேயே விட்டு விட்டோம். இன்றுதான் கம்பனுடைய ஆன்ம தரிசனத்தை நானும் பார்க்கிறேன்! அனுபவிக்கிறேன்! உங்களுக்கும் காட்டியிருக்கிறேன்!

நன்றி! பாராட்டு! வாழ்த்துக்கள்!

# 20

# தங்கத் தலைவி தருவார்!

கழகம் கதிரொளி பரப்புவதற்குச் சாதனம் "கழகக் கதிர்". கதிர் கழகத்தை இனம் காண உதவுவது. பழங்காலம் தொட்டே தமிழர்கள் தமிழ்க் கழகம் வைத்துத் தமிழைப் பாதுகாத்தனர்; வளர்த்தனர். கடல்கொண்ட தென்குமரி நாட்டிலேயே தமிழ்க் கழகம் இருந்ததாக வரலாறு. சங்க காலத்தில் கடைசித் தமிழ்க் கழகம் இருந்தது. கடல்கொண்ட தென்குமரிக் கண்டம் தொடங்கித் தமிழ் நாட்டு வரலாற்றில் இருபதுக்கும் மேற்பட்ட தமிழ்க் கழகங்கள் இலக்கிய உலகத்திற்குச் செய்துள்ள பணிகள் நிலனும் வானும் உள்ளவரை நிலைத்து நிற்கும். இன்று சங்க இலக்கியங்கள் என்று போற்றப்படுபவை தோன்றிய பொற்காலம் முத்தமிழ்ச் சங்க காலமேயாகும்.

மொழி வரலாற்று அடிப்படையில் இலக்கியங்கள் தோன்றிய பிறகே இலக்கணம் தோன்றும். இன்று நம்மிடத்தில் உள்ள பழைமையான இலக்கணநூல் தொல்காப்பியம். தொல்காப்பியம் மூவாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியது. ஆனால், தொல்காப்பியத்திலேயே சமஸ்கிருதச் சொற்களின் கலப்பு – நாகரிகக் கலப்புத் தொடங்கிவிட்டது.

*"நிறை மொழி மாந்தர் முறைமையிற் கிளந்த*
*மறை மொழி தானே மந்திரம் என்ப."*

என்ற நூற்பாவுக்கு, பேராசிரியர் உரையெழுதும்போது "தானே என்று பிரித்துக் காட்டியது தமிழ் மந்திரம் என்பது அறிவித்தற்கு" என்று கூறுகிறார். ஆதலால் தமிழில் பிற மொழிக் கலப்புக்கள், பிற நாகரிகக் கலப்புக்கள் ஏற்பட்டுப் பல நூற்றாண்டுகளாகி விட்டன! ஆனாலும் தமிழ், தனது தனித்தன்மையை இழந்து விடாமல் இருப்பது சிறப்பு. உலக மொழிகளிலேயே தனித்தியங்கும் ஆற்றலுடைய மொழி, தமிழ். அதுமட்டுமல்ல. இனிமையும் எளிமையும் பொருந்திய மொழி. பழந்தமிழ் இலக்கியங்கள் - அகத்திணை நூல்கள், புறத்திணை நூல்கள் அனைத்தும் தமிழருடைய வாழ்க்கையில் தோன்றியவை. பழந்தமிழ் இலக்கியங்களில் புனைந்துரைகளும் கற்பனைகளும் குறைவு. தமிழ் இலக்கியங்கள் கவிதை வடிவின. தமிழ், முத்தமிழாக வளர்ந்து வந்துள்ளது. கூத்து, இசை, இயல் என்ற வரிசையில் அவ்வத்துறையில் தமிழ் பெற்றுள்ள வளர்ச்சி பெருமைக்குரியது.

பழந்தமிழ் இலக்கியங்கள் பண்பாட்டுக் கருவூலங்களாகத் திகழ்கின்றன. பழந்தமிழரின் பண்புகள் காதல், கொடை, வீரம் ஆகியனவாம். அகத்திணை முழுதும் காதற் கவிதைகளேயாம். காதற் கவிதைகளேயானாலும் பண்பாட்டுத் திறன்களை எடுத்துக்கூறத் தவறவில்லை. தமிழர் ஈத்துவந்து இன்பமார்வதில் விருப்பத்துடன் ஈடுபடுவர். பழந்தமிழர்கள் என்றும் படைமடம் பட்டாரில்லை. ஆனால் கொடைமடம் பட்டதுண்டு.

"பாத்திரம் அறிந்துபிச்சை யிடு" என்பது அயல்வழக்கு. தமிழர் வழக்கோ

*'மடவர் மெல்லியர் செலினும்*
*கடவன் பாரி கை வண் மையே!"*

என்பது. விண்ணுலகு கருதி ஈதல் அயல் வழக்கு. விண்ணுலகு இல்லெனினும் ஈதல் தமிழ் வழக்கு.

தலைவன் பொருள் தேடப் பிரிந்து சென்றுள்ளான். ஆனால் சொன்னபடி கார் காலத்தில் திரும்பி வரவில்லை. தலைவி கவலைப்படுகின்றாள். தோழி தேற்றுகின்றாள். "தலைவன் சீக்கிரம் வந்துவிடுவான்; கவலற்க!" என்று தோழி தேற்றுகின்றாள். ஆயினும் தலைவி, ஆறுதல் பெறவில்லை! ஏன்? தலைவனுடன் பழகிய தலைவிக்குத் தெரியும் தலைவனின் இயல்பு. தலைவனுக்குத் தலைவி மீதுள்ள விருப்பத்தைவிட, பொருள் மீது தான் விருப்பம் அதிகமாம்! ஏன்? பொருட் பேராசையா? இல்லை, இல்லை! தம்மிடம் வந்து இல்லை என்று கேட்பவர்களுக்கு 'இல்லை' என்று சொல்லும் பழக்கம் தலைவனுக்கு இல்லை. அதனால் தம்மை நோக்கி இரந்து வருபவர்கள் துன்பம் நீங்கி மகிழ்ச்சி பெற வழங்க வேண்டுமே! அதனால் தலைவனுக்குப் பொருள் மீதே விருப்பம் அதிகம். பொருள் தேடும் முயற்சியிலேயே ஆர்வம் மிகுதி என்று தலைவி தோழிக்கு எடுத்துச் சொல்கிறாள்.

"இல்லென் றிரப்போர்க்கு இயைவது சுரத்தல்
வல்லா நெஞ்சம் வலிப்ப
நம்மினும் பொருளே காதலர் காதல்"

என்பது அகநானூறு.

தமிழ்மாமுனிவர்
தவத்திரு
# குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை

திருக்குறள்
இலக்கியம்
சமயம்
சமுதாயம்
பொது